# தாவீதின் வாழ்க்கை



# தாவீதின் வாழ்க்கை

[தமிழாக்கம்]

பாஸ்டர் சார்லஸ் டேஸ் ரசல் அவர்களினால்,
தாவீதைப் பற்றி எழுதப்பட்ட கட்டுரைகள் அடங்கின தொகுதி.

Front cover: *King David playing the Harp by Gerard van Honthrost*
Back cover: *The shepherd Boy by Harold Copping*

**உள்ளடக்க அட்டவணை** **பக்கம்**


**தாவீதின் வாழ்க்கையோடு அவரது சங்கீதங்களைத் தொடர்புபடுத்துதல்** ............................ VI

**1 சாமுயேல் & 2 சாமுயேல் பற்றின மேலோட்டப்பார்வை மற்றும் கால அட்டவணை** ........ VII

**1 சாமுயேல் 16** ........................................................ 1
தாவீது, அபிஷேகிக்கப்பட்ட இராஜா
தாவீது சவுலுக்குப் பணிவிடை செய்தல்

**1 சாமுயேல் 17** ........................................................ 11
யுத்தத்திற்காக ஒன்றுசேர்தல்
கோலியாத்
தாவீது சவுலுக்கு முன் கொண்டுவரப்படுதல்

**1 சாமுயேல் 18** ........................................................ 33
தாவீது மற்றும் யோனத்தான்
சவுல் தாவீதின் மீது பொறாமை கொள்ளுதல்
தாவீதிற்கு மீகாள் மனைவியாகக் கொடுக்கப்படுதல்

**1 சாமுயேல் 19** ........................................................ 50
யோனத்தான் தாவீதிற்காக மன்றாடுதல்
மீகாள், தாவீது தப்பிச்செல்வதற்கு உதவிசெய்தல்
தாவீது தப்பி ராமாவிலிருந்த சாமுயேலினிடத்திற்கு ஓடிப்போதல்

**1 சாமுயேல் 20** ........................................................ 56
யோனத்தான் தாவீதை எச்சரித்தல்
சவுல் யோனத்தான்மீது கோபித்தல்.

**1 சாமுயேல் 21** ........................................ (ரீப்பிரிண்ட்) இல்லை
தாவீது நோபிலிருந்த ஆசாரியர்களிடத்திற்கு வருதல்
தாவீது காத்தில் (இராஜாவாகிய ஆகீசிடத்தில்) தங்கியிருத்தல்

**1 சாமுயேல் 22** ........................................................ 77
தாவீது அதுல்லாம் கெபியில் தஞ்சமடைதல்
சவுல் நோபிலுள்ள ஆசாரியர்களையும், அகிமெலேக்கையும் சங்கரித்தல்

**1 சாமுயேல் 23** ........................................ (ரீப்பிரிண்ட்) இல்லை
தாவீது கேகிலாவின் குடிகளை இரட்சித்தல்
சவுல் தாவீதைத் தேடித் திரிதல்
தாவீது மற்றும் யோனத்தான்

**1 சாமுயேல் 24** ........................................ (ரீப்பிரிண்ட்) இல்லை
தாவீது சவுலின் ஜீவனைத் தப்பவிடுதல்
தாவீது சவுலிடம் முறையிடுதல்; இதற்குச் சவுல் தாவீதிற்குக் கொடுத்த பதில்

**1 சாமுயேல் 25** ........................................ (ரீப்பிரிண்ட்) இல்லை
தாவீது மற்றும் நாபால் மற்றும் அபிகாயில்

**1 சாமுயேல் 26** ........................................................ 83
தாவீது மீண்டும் சவுலின் ஜீவனைத் தப்பவிடுதல்

**1 சாமுயேல் 27** (1 நாளா. 12:1-7) ........................................ (ரீப்பிரிண்ட்) இல்லை
தாவீது காத் பட்டணத்திற்குத் தப்பி ஓடுதல்; சிக்லாக்கில் தங்கியிருத்தல்

**1 சாமுயேல் 28** ........................................................ 102
எந்தோரின் அஞ்சனக்காரி

**1 சாமுயேல் 29** (1 நாளா. 12:19-22) ........................................ (ரீப்பிரிண்ட்) இல்லை
பெலிஸ்தர்கள் தாவீதைப் புறக்கணித்தல்.

**1 சாமுயேல் 30** ........................................................ 127
தாவீதின் மனைவிகள் சிறைபிடிக்கப்படுதல்
தாவீது அமலேக்கியர்களை முறியடித்தல்

1 சாமுயேல் 31 (1 நாளா. 10) ........ 129
சவுலின் மரணம்

2 சாமுயேல் 1 ........ 141
தாவீது சவுலின் மரணத்தை அறியவருதல்
தாவீது சவுலுக்காகவும், யோனத்தானுக்காகவும் புலம்பி அழுதல்

2 சாமுயேல் 2 ........ 146
தாவீது, யூதாவின் அபிஷேகிக்கப்பட்ட இராஜா
இஸ்போசேத் இஸ்ரயேலின் இராஜாவாக்கப்படுதல்
கிபியோனின் யுத்தம்

2 சாமுயேல் 3 (1 நாளா. 3:1-4) ........ (ரீப்பிரிண்ட்) இல்லை
அப்னேர் தாவீதோடு இணைதல்
யோவாப் அப்னேரைக் கொன்றுபோடுதல்
தாவீது அப்னேருக்காக துக்கித்தல்

2 சாமுயேல் 4 ........ (ரீப்பிரிண்ட்) இல்லை
இஸ்போசேத் கொன்றுபோடப்படுதல்

2 சாமுயேல் 5 (1 நாளா. 11:1-9, 14) ........ 159
தாவீது, இஸ்ரயேலின் அபிஷேகிக்கப்பட்ட இராஜா
தாவீது பெலிஸ்தர்களை முறியடித்தல்

2 சாமுயேல் 6 (1 நாளா. 13, 15 & 16) ........ 169
பெட்டி எருசலேமுக்குக் கொண்டுவரப்படுதல்
ஊசா மற்றும் பெட்டி
தாவீது மற்றும் மீகாள்

2 சாமுயேல் 7 (1 நாளா. 17) ........ 196
தாவீதின் உடன்படிக்கை
தாவீதின் நன்றியறிதலான ஜெபம்

2 சாமுயேல் 8 (1 நாளா. 18 & 1 இராஜா. 11:15-18) ........ (ரீப்பிரிண்ட்) இல்லை
தாவீதின் வெற்றிகள்
தாவீதின்கீழ்க் காணப்பட்ட அதிகாரிகள்

2 சாமுயேல் 9 ........ 206
மேவிபோசேத்திற்கு இரக்கம் பாராட்டப்படுதல்

2 சாமுயேல் 10 (1 நாளா. 19) ........ 209
தாவீது அம்மோனியர்களையும், சீரியர்களையும் தோற்கடித்தல்.

2 சாமுயேல் 11 (1 நாளா. 20:1) ........ 213
தாவீது மற்றும் பத்சேபாள்

2 சாமுயேல் 12 (1 நாளா. 20:1-3) ........ 227
நாத்தான் தாவீதைக் கண்டித்தல்
தாவீதின் பிள்ளை மரித்துப்போதல்
சாலொமோனின் பிறப்பு
ரப்பா கைப்பற்றப்படுதல்

2 சாமுயேல் 13 ........ (ரீப்பிரிண்ட்) இல்லை
அம்னோன் மற்றும் தாமார்
அப்சலோம் அம்னோனைக் கொலைசெய்தல்
அப்சலோம் கேசூருக்குத் தப்பி ஓடுதல்

2 சாமுயேல் 14 ........ (ரீப்பிரிண்ட்) இல்லை
அப்சலோம் எருசலேமுக்குத் திரும்பிவருதல்

2 சாமுயேல் 15 ........ 249
அப்சலோமின் சதித்திட்டம்
தாவீது எருசலேமை விட்டுத் தப்பி ஓடுதல்

தாவீதின் உண்மையுள்ள நண்பர்கள்

**2 சாமுயேல் 16** .................... (ரீப்பிரிண்ட்) இல்லை

தாவீது மற்றும் சீபா
சீமேயி தாவீதைச் சபித்தல்
அப்சலோம் எருசலேமிற்குள் வருதல்

**2 சாமுயேல் 17** .................... (ரீப்பிரிண்ட்) இல்லை

ஊசாய் தாவீதைக் காப்பாற்றுதல்

**2 சாமுயேல் 18** .................... 270

அப்சலோம் கொல்லப்படுதல்
தாவீது அப்சலோமின் மரணத்தை அறிந்துகொள்ளுதல்
தாவீதின் துயரம்

**2 சாமுயேல் 19** .................... 283

யோவாப் தாவீதைக் கடிந்துகொள்ளுதல்
தாவீது எருசலேமுக்குத் திரும்பிவருதல்
தாவீது தன் சத்துருக்களை மன்னித்தல்

**2 சாமுயேல் 20** .................... (ரீப்பிரிண்ட்) இல்லை

சேபாவின் கலகம்

**2 சாமுயேல் 21** (1 நாளா. 20:4-8) .................... (ரீப்பிரிண்ட்) இல்லை

தாவீது கிபியோனியர்களுக்காகப் பழிதீர்த்தல்
பெலிஸ்தர்களுடன் யுத்தம்

**2 சாமுயேல் 22** .................... 286

தாவீது பாடின விடுதலையின் பாடல்

**2 சாமுயேல் 23** (1 நாளா. 11:10-47) .................... (ரீப்பிரிண்ட்) இல்லை

தாவீதின் இறுதி வார்த்தைகள்
தாவீதின் பராக்கிரமசாலிகள்

**2 சாமுயேல் 24** (1 நாளா. 21, 22:1; 27:23, 24) .................... 290

தாவீது இலக்கம் பார்த்தல்
தாவீதின் பாவத்திற்கு எதிரான கர்த்தருடைய தீர்ப்பு
தாவீது பலிபீடத்தைக் கட்டுதல்

**1 இராஜாக்கள் 1** .................... 293

தாவீது தனது வயோதிகக் காலத்தில்
அதோனியா தன்னைத்தானே இராஜாவாக அறிவித்தல்
தாவீதின் முன்னிலையில் நாத்தான் மற்றும் பத்சேபாள்
சாலொமோன், அபிஷேகிக்கப்பட்ட இராஜா

**1 இராஜாக்கள் 2** (1 நாளா. 23:1; 28:20, 21; 29:23-30) .................... 309

தாவீது சாலொமோனுக்குக் கூறின அறிவுரைகள்
தாவீதின் மரணம்
சாலொமோனின் ஆளுகை ஸ்தாபிக்கப்படுதல்

**தாவீது மற்றும் கோலியாத் பற்றின கவிதை** .................... 314

**பின்னிணைப்பு**


சவுல் சாம்ராஜ்யத்தின் வரைபடம் .................... 318
தாவீது சாம்ராஜ்யத்தின் வரைபடம் .................... 319
சவுலின் வீட்டார் .................... 320
தாவீதின் வீட்டார் .................... 321
ஆசாரியத்துவத்தின் வம்ச வரலாறு .................... 322
தாவீது பற்றின சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் .................... 323
தாவீது பற்றின தேவசெய்தி பட்டியல் .................... 324
கூடுதல் தகவல்கள் .................... 325

## தாவீதின் வாழ்க்கையோடு அவரது சங்கீதங்களைத் தொடர்புபடுத்துதல்

| நிகழ்வு | சங்கீதங்கள் | சங்கீதம் இயற்றப்பட்டிருக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் |
|---|---|---|
| 1 சாமு. 16:11-19 | 8, 19, 23, 29 | தாவீதின் ஆரம்பகால மேய்ப்பனுக்குரிய வாழ்க்கையின்போது, சிருஷ்டிப்பு மற்றும் இயற்கை குறித்து இயற்றின சங்கீதம் |
| 1 சாமு. 17:4-51 | 9 | கோலியாத் மீதான வெற்றியின் சந்தர்ப்பம் |
| 1 சாமு. 19:11-17 | 59 | தாவீதை, அவரது வீட்டில் கொல்வதற்குச் சவுல் முயன்ற சந்தர்ப்பம் |
| 1 சாமு. 20 | 11 | சவுலிடமிருந்து தப்பி ஓடும்படிக்குத் தாவீது அறிவுரை பெற்றுக்கொண்ட சந்தர்ப்பம் |
| 1 சாமு. 21:10-15 | 34, 56 | காத்தின் இராஜாவாகிய ஆகீசினிடத்தில், தாவீது போன சந்தர்ப்பம் |
| 1 சாமு. 21:1-7; 22:9-23 | 52 | தாவீது அகிமெலேக்கிடம் சென்றதை, சவுலிடம் தோவேக்கு கூறின சந்தர்ப்பம் |
| 1 சாமு. 22:1 | 142 | அதுல்லாம் அல்லது எங்கேதி கெபியில், தாவீது ஏறெடுத்த ஜெபம் |
| 1 சாமு. 22:5, 23 | 63 | யூதேயா மற்றும் சீப் வனாந்தரத்தில் தப்பி ஓடி காணப்பட்ட சந்தர்ப்பம் |
| 1 சாமு. 23:7-13; 23 | 7, 31, 64, 109 | சவுலினால் தாவீதுக்கு வந்த துன்புறுத்தலின் சந்தர்ப்பம் |
| 1 சாமு. 23:19-28 | 54 | தாவீதுக்குச் சீப்பூரார் துரோகம் புரிந்த சந்தர்ப்பம் |
| 1 சாமு. 24:3-22 | 35, 57, 58 | கெபியில் சவுலைத் தாவீது கொல்ல மறுத்த சந்தர்ப்பம் |
| 1 சாமு. 27:1-2 | 16, 17 | சவுலினால் தாவீது துன்புறுத்தப்பட்ட சந்தர்ப்பம் |
| 2 சாமு. 5:3-5 | 118 | சமஸ்த இஸ்ரயேலின்மீது இராஜாவான சந்தர்ப்பம் |
| 2 சாமு. 5:7-10 | 2 | எருசலேமைக் கைப்பற்றி, பின்னர் பெலிஸ்தரோடு அடுத்தடுத்து யுத்தங்கள் மேற்கொண்ட சந்தர்ப்பம் |
| 2 சாமு. 6:5-19 | 15, 68, 132 | பெட்டியை எருசலேமிற்குக் கொண்டுவர முயற்சித்த சந்தர்ப்பம் |
| 1 நாளா. 16:7-38 | 24, 96, 105, 106 | ஓபேத் ஏதோமின் வீட்டிலிருந்து பெட்டியைக் கொண்டுவரும் சந்தர்ப்பம் |
| 2 சாமு. 8:3, 13; 10:6, 16 | 60 | ஏதோம் மற்றும் சீரியா மீது வெற்றி அடைந்த சந்தர்ப்பம் |
| 2 சாமு. 10:6-8, 19 | 20, 21 | அம்மோனியர்கள் மற்றும் சீரியர்களோடுள்ள யுத்தங்கள் பற்றின ஜெபங்கள் |
| 2 சாமு. 12:1-14 | 51 | தன் விபச்சாரத்தினிமித்தம், தாவீது அறிக்கையிட்டு, மனம்வருந்துதல் |
| 2 சாமு. 12:1-14 | 32, 33, 103 | தாவீதின் விபச்சாரம் மன்னிக்கப்பட்ட சந்தர்ப்பம் |
| 2 சாமு. 15:13-17, 23-31 | 3, 4, 5, 42, 43 | அப்சலோமிடமிருந்து தாவீது தப்பி ஓடும் சந்தர்ப்பம் |
| 2 சாமு. 15:13-17, 23-31 | 55, 62 | அப்சலோமிடமிருந்து தப்பி ஓடும் சந்தர்ப்பம் |
| 2 சாமு. 22 | 18, 144 | தன் சத்துருக்களுடைய ஒடுக்குதலிலிருந்து விடுதலையடைந்த சந்தர்ப்பம் |
| 2 சாமு. 24:15-17 | 91 | தூதன் மூலமான கொள்ளைநோய் நிறுத்தப்பட்ட சந்தர்ப்பம் |
| 2 சாமு. 24:18-25 | 30 | அர்வனாவின் களத்தை அர்ப்பணிக்கும் சந்தர்ப்பம் |
| 1 இரா. 1:30; 2:1-4 | 72 | சாலொமோன் இராஜாவாகுதல் மற்றும் தாவீது தன் இறுதி பொறுப்பைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் |

| 1 சாமுயேல் பற்றின ஒரு பார்வை | | | | | |
|---|---|---|---|---|---|
| கவனம் | சாமுயேல் | | சவுல் | | |
| வசனம் | 1:1 — 4:1 | 4:1 — 8:1 | 8:1 — 13:1 | 13:1 — 15:10 | 15:10 — 31:13 |
| பிரிவு | ஏலியிடமிருந்து சாமுயேலுக்கு, தலைமைத்துவம் முதலாவதாக மாற்றப்படுதல் | சாமுயேலின் நியாயாதிபதி பணி | சாமுயேலிடமிருந்து சவுலுக்கு, தலைமைத்துவம் இரண்டாவதாக மாற்றப்படுதல். | சவுலின் ஆளுகை | சவுலிடமிருந்து தாவீதுக்கு, தலைமைத்துவம் மூன்றாவதாக மாற்றப்படுதல். |
| தலைப்பு | நியாயாதிபதிகளின் முடிவு | | இராஜாக்களின் துவக்கம் | | |
| | ஏலி | சாமுயேல் | சவுல் | | தாவீது |
| இடம் | கானான் | | | | |
| காலம் | 99 வருடங்கள் | | | | |

| 2 சாமுயேல் பற்றின ஒரு பார்வை | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கவனம் | தாவீதின் வெற்றிகள் | | | தாவீதின் மீறுதல்கள் | தாவீதின் பிரச்சனைகள் | |
| வசனம் | 1:1 — 6:1 | 6:1 — 8:1 | 8:1 — 11:1 | 11:1 — 12:1 | 12:1 — 13:37 | 13:37 — 24:25 |
| பிரிவு | அரசியல் வெற்றிகள் | ஆவிக்குரிய வெற்றிகள் | இராணுவ வெற்றிகள் | விபச்சாரம் மற்றும் கொலை பாவங்கள் | தாவீதின் வீட்டில் பிரச்சனைகள் | சாம்ராஜ்யத்தில் பிரச்சனைகள் |
| தலைப்பு | வெற்றி | | | பாவம் | தோல்வி | |
| | கீழ்ப்படிதல் | | | கீழ்ப்படியாமை | நியாயத்தீர்ப்பு | |
| இடம் | எபிரோனில் தாவீது | எருசலேமில் தாவீது | | | | |
| காலம் | $7\frac{1}{2}$ வருடங்கள் | 33 வருடங்கள் | | | | |



“பரிசுத்த வேதாகமத்தில் இடம்பெறும் மோசே, எலியா மற்றும் பவுல் அடிகளாரைவிட தாவீது அதிகமாய்த் தனித்துவமான மற்றும் கவரும் விதமான தன்மைகளை உடையவராய் இருக்கின்றார்; அவர் பதிவுகளில் பன்முகக் குணச்சித்திரமாகக் காணப்படுகின்றார் - அவர் ஒரு மேய்ப்பனாக, ஒரு போர்ச்சேவகனாக, ஓர் அரசவை அதிகாரியாக, ஒரு பிரபலமான நண்பனாக, தலைமறைவாக வாழ்ந்த ஒருவராக, ஒரு காவலாளியாக, ஒரு கொள்ளைக்காரனாக, ஒரு தளபதியாக, ஓர் இராஜாவாக, ஓர் அரசியல் மேதையாக, ஒரு நாடோடியாக, ஓர் ஆசாரியனாக, ஒரு தீர்க்கத்தரிசியாக, ஒரு பரிசுத்தவானாக, ஒரு குற்றவாளியாக, பாவத்திற்கு மனம்வருந்தும் ஒருவராக, எதிலும் அரைகுறையாகச் செயல்படாத ஒருவராகச் சித்தரிக்கப்பட்டுள்ளார். அவரது குணங்கள் என்பது அநேகம் நரம்புகள் உள்ள சுரமண்டலம்போன்று இருக்கின்றது.” *C. Reade R4223*

தாவீது என்ற பெயருடைய அர்த்தம் பிரியமானவன் ஆகும்; மேலும் இது விசேஷமாய் நமது கர்த்தரும், ஆண்டவருமானவருக்குப் பொருந்துவதுபோல, இன்னுமாக யேகோவா தேவனால், “இவர் என்னுடைய நேசகுமாரன்” என்று கூறப்பட்டதுபோல, இது அவரது சரீரத்தினுடைய அங்கத்தினர்கள் அனைவருக்கும்கூடப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது; இவர்களில் ஒவ்வொருவனும் பிரியத்திற்குரியவனாகக் காணப்பட வேண்டும், இல்லையேல் அங்கத்தினனாக ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. அப்படியானவர்களைக்குறித்துத் தலையாயிருக்கிறவர் கூறுவதாவது: “பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்;” இன்னுமாக அவர் நம்மை அன்புகூர்ந்ததுபோன்று, நாமும் ஒருவரையொருவர் அன்புகூர்ந்திட வேண்டும் என்றும் கூறியுள்ளார். கர்த்தருடைய இந்த அபிஷேகித்தலைப் பெற்றுக்கொள்பவர்கள் அனைவரும் இறுதியில் இந்தத் தாவீதைப் போலாக வேண்டும் அல்லது பிரியத்திற்குரியவர்களாக வேண்டும் என்று கூறுவது நியாயமான காரியமேயாகும். அவர்களுக்குள் அன்பின் ஆவி காணப்பட வேண்டும் - கர்த்தருக்கான அன்பும், ஒருவர் இன்னொருவருக்காய்க் கொண்டிருக்கும் அன்பும் காணப்படவேண்டும்; இல்லையேல் அவர்கள் அவருடையவர்களாய் இருப்பதில்லை. *R3225*

கர்த்தர்தாமே இஸ்ரயேலின்மீது தன்னை இராஜாவாகத் திடப்படுத்தியுள்ளார் என்றும், தம் ஜனங்களாகிய இஸ்ரயேலின் நிமித்தமாகவே தன்னை இராஜாவாக உயர்த்தியுள்ளார் என்றும் தாவீது உணர்ந்திருந்தார். இதுபோலவே சபையினுடைய தெரிந்துகொள்ளுதலின் விஷயத்திலும்கூட, தேவன் நோக்கம் ஒன்றினைப் பெற்றிருக்கின்றார் என்று நாம் நினைவில்கொள்ள வேண்டும். அப்போஸ்தலன் கூறுவதுபோன்று “நாம் ஒரு நோக்கத்திற்காகத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கின்றோம்.” இக்கருத்தானது நாம் மிகுந்த தாழ்மையில் காணப்படுவதற்கும், கர்த்தருக்கு நெருக்கமாய்க் காணப்படுவதற்கும் உதவுவதாக. “பூமியின் குடிகள் யாவரையும்” ஆளுகைசெய்வதற்கும், நியாயந்தீர்ப்பதற்கும், சீர்தூக்கிவிடுவதற்கும் நம்மைத் தகுதிப்படுத்தி, ஆயத்தப்படுத்துவதற்கு அவசியமான பாடங்களைக் கற்றுக்கொள்வதற்கு நாடுவோமாக. *R4255*

**இந்த ஆராய்ச்சி ஆசீர்வாதத்தைக் கொண்டுவருவதாக!**

R1901

# அபிஷேகிக்கப்பட்ட இராஜாவாகிய தாவீது

## 1 சாமுயேல் 16:1-13

மனுஷன் முகத்தைப் பார்ப்பான் கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார். - 1 சாமுயேல் 16:7

இஸ்ரயேல்மீது ஆளுகைசெய்யும்படிக்குத் தாவீதைத் தெரிந்துகொண்ட விஷயத்தில், தேவன் அந்த ஜனங்களுக்கும், அந்தக் காலத்திற்குமுரிய தேவைகளுக்குப் பொருத்தமான ஒருவரைத் தெரிந்தெடுத்துள்ளார்; இது மாத்திரமல்லாமல், தாவீதைத் தெரிந்துகொண்ட விஷயத்தில், தேவன் கிறிஸ்துவாகிய தலைக்கும், சுவிசேஷயுகத்தில் தெரிந்தெடுக்கப்பட்டு, கர்த்தருடைய இராஜ்யத்தின் சிங்காசனத்தில் உட்காரத்தக்கதாக அபிஷேகிக்கப்படும் சரீரத்திற்கும் பொருத்தமான நிழலாய்க் காணப்படும் ஒருவரைத் தெரிந்தெடுத்துள்ளார். இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, ஆதார வசனமானது, நமக்கு அப்போஸ்தலனாகிய பவுலின் பின்வரும் வார்த்தைகளை அழுத்தம்கொடுத்து நினைப்பூட்டுகின்றது: சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார். (1 கொரிந்தியர் 1:26-29)

இராஜ்யத்திற்குரிய அபிஷேகிக்கப்பட்டவர்களாய் இருக்கும்படிக்குத் தேவன் இந்த யுகத்தில் அழைத்துக்கொண்டிருப்பவர்களில், அவர் இப்பொழுது எதிர்ப்பார்க்கின்ற அதே குணாதிசயங்களை, அவர் தாவீதினிடத்திலும் எதிர்ப்பார்த்தார். அவர் தாவீதினிடத்தில் விசுவாசத்தையும், சாந்தத்தையும், தைரியத்தையும், உத்வேகத்தையும், அன்புடன்கூடிய கீழ்ப்படிதலையும் கண்டார். எனினும் தாவீதோ, அவர் அழைக்கப்பட்டுள்ளதான உயர் ஸ்தானத்திற்குரிய கடமைகள் விஷயத்தில் பார்க்கையில் . . . இளைஞனாகவும், அனுபவமற்றவராகவும், பயிற்சியற்றவராகவும், தேர்ச்சியற்றவராகவும் காணப்பட்டார். தாவீதினுடைய இந்த அனுபவமற்ற நிலைமையானது, அதாவது இது கடந்துவர முடியாத இடையூறாக மனுஷருடைய கணிப்பில் காணப்பட்டாலும், இது தேவனுடைய பார்வையில் ஓர் இடையூறாகவே இருக்கவில்லை; ஏனெனில் தேவன் தம்மால் அழைக்கப்பட்டவர்களைத் தம்முடைய ஆவியினால் ஊக்குவிக்கவும், தம்முடைய வல்லமையினால் அவர்களைப் பெலப்படுத்தவும் முடிந்தவராக இருக்கின்றார். இப்படியாகவே அவர் தாவீதுக்கும் செய்தார். மேலும் இப்படியாகவே அவர் கிறிஸ்துவுக்கும் செய்துள்ளார்; அதாவது நமது கர்த்தராம் இயேசுவுக்கும், அவரது சரீரமாகிய சபைக்கும் செய்துள்ளார். தாவீதினுடைய சங்கீதங்களில், தாவீது எனும் நிழலான கதாபாத்திரம், சில சமயங்களில் நமது தலையாகிய இயேசுவுக்கும், சில சமயங்களில் கிறிஸ்துவின் ஒட்டுமொத்த சரீரத்திற்கும் நிழலாய்க் காணப்படுகின்றார் என்பது மிகத் தெளிவாய்ச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு, என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்பேரில் சீட்டுப்போடுகிறார்கள் என்று தாவீது கூறுகையில், இங்கு நமது தலையானவரைப் பற்றி மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது (சங்கீதம் 22:18); இன்னுமாக 23-ஆம் சங்கீதம், யேகோவா தேவனைத் தங்கள் மேய்ப்பனாய்ப் பெற்றிருக்கும் ஒட்டுமொத்த சரீரத்திற்கும் பொருந்துகின்றது.

கர்த்தருடைய அபிஷேகிக்கப்பட்டவர்களின் மகா வேலையினைச் சுட்டிக்காட்டுவதற்குத் தாவீது மற்றும் சாலொமோனின் இரண்டு இராஜ்யபாரங்கள் அவசியப்படுகின்றது. தாவீதினுடைய இராஜ்யபாரமானது, மாம்சத்திலுள்ள சபையினுடைய வேலையினையும், சாலொமோனுடைய இராஜ்யபாரமானது, மகிமையடைந்து, தனது சத்துருக்கள் அனைவரிடமிருந்து ஓய்ந்துக் காணப்படும் சபையின் வேலையினையும் சுட்டிக்காட்டுகின்றது.

தாவீது அபிஷேகம் பண்ணப்பட்டபோது, அவர் வாலிபனாக இருந்தார். ஜீவியத்தினுடைய விலையேறப்பெற்ற வசந்தகாலத்தினை, வீணான களியாட்டுகளில் தாவீது வீணடித்தவரல்ல. தாவீது நம்பிக்கையின் நாயகனாய் இருந்தார், நற்குணசாலியான வாலிபனாக இருந்தார் - சாந்தமானவராகவும், தன்னடக்கமுள்ளவராகவும், கனிவானவராகவும், உண்மையுள்ளவராகவும், கடமையாற்றும் விஷயத்தில் திடமனதுள்ளவராகவும், ஆபத்தைச் சந்திக்க தைரியமானவராகவும் இருந்தார்; இன்னுமாக எந்த ஒரு நற்கிரியையை ஆற்றிடும் விஷயத்திலும், அதிலும் விசேஷமாக தேவனுடைய நோக்கங்களுக்காக அல்லது தேவனுடைய ஜனங்களுக்காக போராடும் விஷயத்திலும் செயல்பாட்டில் இறங்குகையில் வரும் தீங்கினை அனுபவிக்க விருப்பமுள்ளவராகவும் தாவீது காணப்பட்டார். தாவீதினிடத்தில் இத்தகைய உயர்குணங்களைக் கண்டே தவன்,அ வரைஉ யர்வானதொருஊ ழியத்திற்குஅ ழைத்தார்.இ துபோன்றஒ ருவ குப்பாரைச் சுவிசேஷயுகம் முழுவதும் தேவன் அழைத்துக்கொண்டும், தம்முடைய பரிசுத்த ஆவியினால் அபிஷேகித்துக்கொண்டும் இருக்கின்றார். இவர்கள் கர்த்தருடைய அபிஷேகிக்கப்பட்ட இராஜாக்கள் ஆவார்கள்; ஆனால் இவர்களுடைய இராஜ்யமோ, தாவீதுக்கு இருந்ததுபோன்றே ஸ்திரமடையவில்லை; எப்பக்கத்திலும் சத்துருக்களினால் இவர்கள் சூழப்பட்டுக் காணப்படுகின்றனர்; மேலும், மாம்சத்திலுள்ள இவர்களது முழு ஜீவியமும் தாவீதுக்கு இருந்ததுபோன்று, தொடர்ச்சியான யுத்தத்துடன்தான் காணப்படுகின்றது. தாவீதுக்கு இருந்ததுபோன்று இவர்களும்கூட - சகல ஜனங்களும் வந்து, தொழுதுகொள்ளும் தேவனுடைய ஆலயத்தினை இந்த யுகத்திலேயே கட்டியெழுப்ப வேண்டும் என்ற வாஞ்சையினைத் தங்களுடைய இருதயத்தில் பெற்றிருந்தனர். ஆனால் எப்படி நிழலான ஆலயம் கட்டும் காரியமானது தாவீதுக்கு மறுக்கப்பட்டு, சாலொமோனுக்கென்று ஒதுக்கப்பட்டதோ; அப்படியே மாம்சத்திலுள்ள சபைக்கும் இந்தச் சிலாக்கியமானது அருளப்படவில்லை; சாலொமோனுக்குத் தேவன் இளைப்பாறுதலையும், சமாதானத்தையும், ஐசுவரியத்தையும் அருளினபடியால், இவை மகிமையடையும் சபையின் இராஜ்யபாரத்திற்குப் பொருத்தமான அடையாளமாகுகின்றன (1 நாளாகமம் 22:7-9). தேவனுடைய ஆலயத்தைக் கட்டுவதற்குத் தாவீது அனுமதிக்கப்படாதிருந்தபோதிலும், அவர் கட்டுமானத்திற்குரிய பொருட்களைச் சேகரிப்பதற்கும், ஆயத்தமாக்குவதற்கும் அனுமதிக்கப்பட்டிருந்தார். இதுபோலவே மாம்சத்திலுள்ள சபையும், தேவனுடைய ஆலயத்தின் கட்டுமான விஷயங்களை ஆயத்தம்பண்ணிடுவார்கள். மேலும், சாலொமோனின் ஆலயத்தில், சுத்தியலின் சத்தமில்லாமல் இருந்ததுபோன்று, இவர்களும் ஆயிர வருட அரசாட்சியினுடைய விடியலின்போது, சத்தமில்லாமல் ஒன்றுகூடுவார்கள். ஆகையால் தாவீதினுடைய யுத்தமானது, மாம்சத்தில் காணப்படும் முழுச்சபையின் - தலை மற்றும் சரீரத்தின் யுத்த வாழ்க்கைக்கு நிழலாயிருக்கின்றது; அதாவது சபையினுடைய பூமிக்குரிய ஓட்டத்தின் முடிவுவரையிலும், அனைத்துத் திசைகளிலிருந்தும் அவளை எதிர்த்திடும் இருளின் அதிகாரங்கள் மற்றும் வல்லமைகளுக்கு எதிரான யுத்தம் நிறைந்த வாழ்க்கைக்கு நிழலாயிருக்கின்றது; ஆகையால் அவள் இராஜரிக ஊழிய ஸ்தானத்திற்கென்று அபிஷேகிக்கப்பட்டிருந்தபோதிலும், அவளது மரணநாள் வரையிலும் அவள் வல்லமை மற்றும் சமாதானம் மற்றும் பாதுகாப்பின் விஷயத்தில் ஒருபோதும் நிரந்தரமான நிலைமையினை அடைவதில்லை; திரைக்கு இப்பக்கத்தில் நல்லதொரு போராட்டத்தைப் போராடுவதும், தேவையானவற்றைச் சேகரித்துக்கொள்வதும்,

ஜனங்கள் அனைவரும் தொழுதுகொள்ள வரும்படிக்கு எதிர்க்காலத்தில் அழைப்புவிடுக்கப்போகின்ற மகிமையான ஆலயத்திற்குரிய ஜீவனுள்ள கற்களை ஆயத்தம்பண்ணுவதும்தான் அவளின் வேலையாயிருக்கும்.

அபிஷேகிக்கப்பட்ட இதே வகுப்பார் (இந்த யுகத்தினுடைய உண்மையுள்ள ஜெயங்கொள்ளும் வகுப்பார் அனைவரும்) மாம்சத்தினுடைய திரைக்கு அப்பால், சாலொமோனின் இராஜ்யபாரத்தினால் அடையாளப்படுத்தப்படும் மகிமையான ஆளுகைக்குள் பிரவேசிப்பார்கள். அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம் (வெளிப்படுத்தல் 14:13). அப்போது தேவனுடைய ஆலயம் அதன் கம்பீரத்துடன் எழுந்தருளி, பிரகாசித்திடும் மற்றும் அதன் மூலம் பூமியின் குடிகள் யாவும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்; இந்த ஆசீர்வாதத்திற்கு, சாலொமோனுடைய ஆளுகையின்போது இஸ்ரயேலுக்குக் காணப்பட்ட திரளான ஆசீர்வாதங்களும், சமாதானமும், ஐசுவரியமும் நிழலாயிருக்கின்றது.

இந்த மகிமையான நம்பிக்கையினைத் தங்களில் பெற்றிருப்பவர்கள் யாவரும், நமது பாடத்தினுடைய ஆதார வசனத்தின் பின்வரும் வார்த்தைகளை நினைவுகூருவார்களாக: மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் (1 சாமுயேல் 16:7). தம்முடைய இராஜ்யத்திற்கான சிங்காசனத்தில் உட்காருவதற்கு யார் பாத்திரவான் என்று அவர் பார்த்துக்கொண்டிருக்கின்றார்; மேலும், அவர் எதிர்பார்க்கும் குணலட்சணங்களைக்குறித்தும் அவர் நமக்கு மிகத் தெளிவாய்க் காண்பித்திருக்கின்றார். ஆகையால் நம்முடைய இருதயங்களானது (நமது சித்தம், நோக்கம், எண்ணம் மற்றும் பிரயாசமானது) சகலத்தையும் ஆராய்ந்து அறியும் கண்களின் சோதனைக்கு நிற்கத்தக்க நேர்மையுள்ள, உண்மையுள்ள மற்றும் கீழ்ப்படிதலுள்ள நிலைமையில் காணப்படுகின்றதாவெனப் பார்த்துக்கொள்ளும்படிக்கு நாம் அறிவுறுத்தப்படுகின்றோம்; அதே வேளையில் நிழலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுபோன்று, தேவன் நம்மை ஏற்றுக்கொள்ளும் காரியத்திற்கும், ஒருவேளை நாம் உண்மையுள்ளவர்களாய்க் காணப்படும் பட்சத்தில், எதிர்க்காலத்தில் நாம் உயர்த்தப்படும் காரியத்திற்கும், ***நமது பிறப்பின் நிலைமைகளோ அல்லது ஸ்தானங்களோ அல்லது சூழ்நிலைமைகளோ தடையாய் இராது*** என்றும் நினைவுகூர்ந்து ஊக்கங்கொள்வோமாக.

R5656 (R3225)

## அபிஷேகிக்கப்பட்ட இராஜாவாகிய தாவீது
### 1 சாமுயேல் 16:4-13

"மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார். - 1 சாமுயேல் 16:7

இராஜாவாகிய சவுலின் கீழ்ப்படியாமை காரணமாய், அவர் தேவனால் நிராகரிக்கப்பட்ட காரியமானது, அவர் சிங்காசனத்தினின்று அப்புறப்படுத்தப்பட்டதை மாத்திரம் குறிக்காமல், அவருக்குப்பின் அவரது குமாரர்களும் சிங்காசனத்தை அடையமுடியாததையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது; இன்னுமாக இது இஸ்ரயேலை ஆளும் இராஜாவின் ஸ்தானத்திற்கும் மற்றும் சிங்காசனத்தில் தேவனுடைய பிரதிநிதியாகக் காணப்படுவதற்கும் தேவன் வேறொரு மனுஷனை, வேறொரு குடும்பத்தைத் தெரிந்தெடுத்துள்ளதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. தாவீதே தேவனுடைய தெரிந்துகொள்ளுதலாய்க் காணப்பட்டார்; இவரைக் குறித்தே தீர்க்கதரிசியாகிய சாமுயேல் மறைமுகமாக, "இப்போதோ உம்முடைய இராஜ்யபாரம் நிலைநிற்காது; கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தமக்குத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய

ஜனங்கள்மேல் தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார்; கர்த்தர் (சவுலாகிய) உமக்கு விதித்த கட்டளையை நீர் கைக்கொள்ளவில்லையே என்று கூறினார். (1 சாமுயேல் 13:14)

இப்பாடத்தின் சம்பவம் நிகழ்ந்தபோது, தாவீதுக்குச் சுமார் இருபது வயது இருந்திருக்கும்; ஆகையால் தீர்க்கத்தரிசி, 1 சாமுயேல் 13:14-ஆம் வசனத்தினுடைய வார்த்தைகளைத் தாவீதினுடைய பிறப்பின் காலத்தின்போது சவுலிடம் சொல்லியிருந்திருக்க வேண்டும். இங்கு, தேவன் தம் ஊழியத்திற்கென்று விசேஷமாய்த் தம்மால் பயன்படுத்தப்படப்போகின்றவர்கள் குறித்து அவர் பெற்றிருக்கும் முன்னறிவிற்கும், திட்டத்திற்கும்/ஞானத்திற்குமான மற்றுமொரு உதாரணத்தை நாம் பெற்றிருக்கின்றோம். இதுபோலவே யாக்கோபை தேவன் தெரிந்தெடுத்த காரியமும், அவரது பிறப்பிற்கு முன்னதாக அறிவிக்கப்பட்டது; இதுபோலவே அப்போஸ்தலனாகிய பவுலும், அவரது பிறப்பிற்கு முன்னதாகவே தெரிந்தெடுக்கப்பட்டார். இதினிமித்தம் தேவனுடைய தெரிந்தெடுத்தல் குறித்த எந்த ஒரு தவறான கருத்தினையும் நாம் பெற்றுக்கொள்ளக்கூடாது; இன்னுமாக இவர்களில் எவருமே ***நித்திய ஜீவன் பெறுவதற்கென்று தேர்ந்தெடுக்கப்படாமல்***, மாறாக இவர்கள் ஒவ்வொருவரும், இன்னுமாக இவர்கள் அனைவருமே ***சில விசேஷ ஊழியத்திற்கென்று தெரிந்தெடுக்கப்பட்டு, ஆயத்தப்படுத்தப்பட்டனர்*** என்றும் கவனிப்போமாக.

இது ஒரு மனுஷன் பிறப்பதற்கு முன்னதாக, அவனது இயல்பான பண்புகள் விஷயத்தில் ஏற்பட வாய்ப்புள்ள தந்தைவழியான மற்றும் தாய்வழியான செல்வாக்கினுடைய தாக்கத்தின் சாத்தியக்கூறுகள் குறித்து நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. இந்தச் சாத்தியக்கூறுகள் இருப்பினும், மனுஷனுக்குச் "சித்தம் என்ற ஒன்று தொடர்ந்து காணப்படவேசெய்யும்; மேலும் ஒரு மனுஷன் பிறப்பின்போது அநுகூலமான நிலைமைகளைப் பெற்றிருப்பினும், தான் கர்த்தருடைய வழிகளில் நடக்க வேண்டுமா அல்லது இல்லையா என்றும், எந்தமட்டும் தான் கீழ்ப்படிய வேண்டும் என்றும் முடிவெடுப்பது, சித்தங்கொண்டிருப்பது என்பது அவனது தீர்மானத்தைப் பொறுத்தேயாகும். சித்தம் கட்டாயப்படுத்தப்படுகிறதில்லை; ஏனெனில் மனப்பூர்வமாகவும், இருதயப்பூர்வமாகவும் - ஆவியோடும், உண்மையோடும் தம்மைத் தொழுதுகொள்ளு கிறவர்களையே தேவன் தேடுகின்றார்.

தாவீதின் கொள்ளுப்பாட்டி, அன்புள்ள ரூத் ஆவார்; தாவீதுக்கு மிகவும் பரிச்சயமான வயலில்தான் அநேகமாக ரூத் கதிர்களைச் சேகரித்தாள். தாவீதின் கொள்ளுத்தாத்தா போவாஸ் ஆவார்; இவரைப் பற்றின சரித்திரம் ரூத்தின் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. போவாசைப்போன்று தாவீதின் தகப்பனாகிய ஈசாயும் சந்தேகத்திற்கிடமின்றி பெத்லெகேம் பட்டணத்தினுடைய மூப்பர்களில் ஒருவராகவும், கனம்பொருந்திய மனுஷனாகவும் மதிக்கப்பட்டார் மற்றும் கனப்படுத்தப்பட்டார். தாவீதின் தாயாரைக்குறித்து, தேவனுடைய அடியாள் என்று தாவீது இருமுறை குறிப்பிட்டுள்ளது தவிர, மற்றப்படி நாம் தகவல் அதிகம் பெற்றிருக்கவில்லை.

## சாமுயேலின் விசுவாசம் பரீட்சிக்கப்பட்டது

இராஜாவாகிய சவுலுக்காய்த் தீர்க்கத்தரிசி சாமுயேல் துக்கப்பட்டார் மற்றும் ஜெபம்பண்ணினார்; மகாபெரிய காரியங்களைச் சவுலிடத்தில் சாமுயேல் எதிர்பார்த்ததினாலும், சவுலுடைய வழிகாட்டுதலின்கீழ் இஸ்ரயேலுக்கு மகா செழிப்புண்டாகும் என்று அவர் எதிர்பார்த்ததினாலும், சவுல் நிராகரிக்கப்படும் காரியத்தின் நிமித்தம் சாமுயேல் ஏமாற்றமடைந்ததாகத் தெரிகின்றது. புதிய ஓர் இராஜாவைக் கொண்டுவருவதன் விளைவாக, உள்நாட்டுக் கலகம் ஏற்படுமோ என்ற பயம்கலந்த உணர்வுகள் அநேகமாகத்

தீர்க்கத்தரிசியினுடைய மனதைக் கவலைக்குள்ளாக்கியது. ஒருகாலத்தில் மிகுந்த தன்னடக்கத்துடனும், திவ்விய ஏற்பாட்டிற்குக் கீழ்ப்படிதலுடனும் செங்கோலினை ஏற்றுக்கொண்டிருந்த சவுல், இப்பொழுது அமைதியாய்ச் செங்கோலினை ஒப்படைக்கமாட்டார் என்று தீர்க்கத்தரிசி அறிந்திருந்தார். தேசத்தைக் குலைத்துப்போட வாய்ப்புள்ளதும், மகாபெரிய பிரச்சனையை விளைவிக்க வாய்ப்புள்ளதுமான உள்நாட்டுக் கலகத்திற்கான வாய்ப்பினைத் தீர்க்கத்தரிசியின் மனக்கண்களினால் காணமுடிந்தது. தீர்க்கத்தரிசி சர்வவல்லமையுள்ளவரின் ஞானத்தின்மீதும், வல்லமையின்மீதும் அதிகம் விசுவாசம் வைத்திருக்க வேண்டும்; ஆனால் இன்றுள்ள கர்த்தருடைய ஜனங்களை அலைக்கழிக்கும் பிரச்சனைபோன்றதொரு பிரச்சனையே, அன்று சாமுயேலுக்கும் காணப்பட்டது.

தேவன் தம் காரியங்களை நிர்வகிக்க வல்லவராக இருக்கின்றார் என்று நாம் முழுமையாக நம்பிக்கைகொள்ள வேண்டும் என்பதும், அவர் என்ன செய்துகொண்டிருக்கின்றார் என்பதற்கான சுவடுகளை நாம் கண்டு அறியமுடியாமல் இருக்கும் தருணங்களிலும் நாம் அவரில் நம்பிக்கைகொண்டு, அவரது வழிகாட்டுதல்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதும் நம் இருதயங்களுக்கான படிப்பினைகளாகும்; இன்னுமாக அவரது திட்டங்கள் நிறைவேறுவதன் நிமித்தம் நாம் துக்கமடைந்து திரியாமல், மாறாக தேவனை அன்புகூருபவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடக்கும், அதாவது தேவனுக்கு இசைவாக நடப்பவர்களுக்குச் சகல காரியங்களும் இறுதியில் ஆசீர்வாதங்களாய் முடியும், அதுவும் அது தற்காலத்திற்குரிய ஆசீர்வாதமாக இராமல், எதிர்க்காலத்திற்குரிய ஆசீர்வாதங்களாய் நடந்தேறும் என்பதும் நம் இருதயங்களுக்கான படிப்பினைகளாகும்.

தாவீதை அபிஷேகிக்கும்படிக்குத் தீர்க்கத்தரிசியாகிய சாமுயேல் அனுப்பப்பட்டபோது, சாமுயேலிடம் அவரிடத்தில் முன்பு ஒருபோதும் தென்படாத ஒரு பயம் வெளிப்பட்டது. தேவனுடைய கட்டளையை நிறைவேற்றுவதற்கு அவர் தயங்கவில்லை; மாறாக தன் ஜீவனுக்கு அபாயம் இருப்பதாக, அதாவது இராஜ்யபாரத்திற்குஒ ருவரைத ான்இ ராஜாவாகஅ பிஷேகம்பண்ணினால்,த ான்து ரோகியைப்போன்று இராஜாவாகிய சவுலினால் கொல்லப்பட நேரிடும் எனும் காரியத்தினைத் தெளிவாய்ப் புரிந்துள்ளதாகச் சாமுயேல் வெளிப்படுத்தினார். காரியத்தினை உடனடியாக அனைவருக்கும் சாமுயேல் அறியப்படுத்துவது தமது நோக்கமல்ல என்பதை தேவன் தெளிவாய் சாமுயேலுக்குப் புரியவைத்து, அவர் பெத்லெகேமுக்குப் போகும்படிக்கும், அங்குப் பலிசெலுத்தும்படிக்கும் கூறினார்; இன்னுமாக அங்கிருக்கையில் வாய்ப்பினைப் பயன்படுத்தி, பிற்காலங்களில் ஏற்றவேளை வரும்போது பலர் அறிய தெரியப்படுத்தப்பட்டு, சிங்காசனத்திற்கு உயர்த்தப்படப்போகிற மனுஷனைக் கண்டுபிடித்து, அபிஷேகிக்கும்படிக்குத் தேவன் கூறினார். அப்போது சாமுயேல் ஆரம்பக்கட்ட வேலையை மாத்திரம் நிறைவேற்ற வேண்டியவராய் இருந்தார்; அதுவும் அந்த அபிஷேகித்தலைத் தாவீதின் தகப்பனும், சகோதரரும்கூடப் புரிந்துகொள்ளவும் மாட்டார்கள்; இன்னுமாக இவர்கள் தாவீது அபிஷேகிக்கப்பட்ட காரியத்தினை, இவர் தீர்க்கத்தரிசிகளின் பள்ளிக்கூடத்திலோ அல்லது இதுபோன்றதொரு பள்ளிக்கூடத்திலோ அங்கத்தினனாகுவதற்கு என்று தேவனிடமிருந்து வந்த கட்டளையாக அல்லது விசேஷித்த ஆசீர்வாதமாக அநேகமாய் எண்ணியிருந்திருக்க வேண்டும். எனினும் தீர்க்கத்தரிசியானவர் சவுலை இஸ்ரயேலின் இராஜாவாக அபிஷேகம்பண்ணினபோது, இதன் அர்த்தத்தினைச் சவுலுக்குத் தனிப்பட்ட விதத்தில் தெரியப்படுத்தினதுபோல, தாவீதிடமும் அவர் அபிஷேகம்பண்ணப்பட்டதன் அர்த்தமென்ன என்று தனிப்பட்ட விதத்தில் தீர்க்கத்தரிசியானவர் தெரியப்படுத்தியிருக்க வேண்டும்.

## யார் இராஜா என்ற தேவனின் தெரிவு

தீர்க்கத்தரிசியாகிய சாமுயேல் பெத்லெகேமிற்கு வந்தார். தங்கள் சார்பிலுள்ள ஏதோ பாவங்களின் காரணமாக அல்லது தங்கள் சக குடிமக்களின் சார்பிலுள்ள ஏதோ பாவங்களின் காரணமாக, தங்களைக் கண்டிக்கவும், தண்டிக்கவுமே தேவன் தீர்க்கத்தரிசியினை அனுப்பிவைத்துள்ளபடியால், தீர்க்கத்தரிசி வந்திருப்பதாக எண்ணி மூப்பர்கள் அஞ்சி நடுங்கினர். ஆகையாலே அவரை நோக்கி, நீர் வருகிறது சமாதானமா - நீர் வந்திருப்பது ஆசீர்வதிப்பதற்காகவா அல்லது தண்டனை அளிப்பதற்காகவா என்று விசாரித்தார்கள். சமாதானமாகத்தான் வந்திருக்கின்றார் என்றும், கர்த்தருக்குப் பலியிட வந்திருக்கின்றார் என்றும் அவர் தெரிவித்ததை அவர்கள் கேட்டபோது, அவர்களது பயங்கள் தணிந்தன.

இச்சம்பவம் சம்பவிப்பதற்குச் சில காலங்கள் முன்னதாக, உடன்படிக்கைப் பெட்டியானது பெலிஸ்தர்களினால் பிடிக்கப்பட்டது. ஆசரிப்புக்கூடாரத்தின் பணிகள் முடங்கிப்போயின மற்றும் அவை மீண்டுமாக துவங்கப்படவில்லை; இதன் காரணமாகவே இந்தப் பலியிடும் காரியமானது கர்த்தரினால் விசேஷமாய் நியமிக்கப்பட்ட ஊழியக்காரனினால் நிறைவேற்றப்பட்டது. பலியின் ஆசீர்வாதங்களில் பெத்லெகேமின் ஜனங்கள் பங்கடைய வேண்டுமானால், அவர்கள் தங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொள்ள வேண்டும் என்ற கட்டளையின் அர்த்தம், அவர்கள் தங்கள் சரீரங்களைச் சுத்தம் பண்ணிக்கொண்டு, சுத்தமான வஸ்திரங்களை அணிந்துகொண்டு, தங்கள் இருதயங்களைக் கர்த்தருக்குச் சமீபமாக்கிட வேண்டும் என்பதேயாகும். இப்படியாக இவர்கள், தற்கால யுகத்தில் சபையானது அனுபவிக்கின்ற நீதிமானாக்கப்படுதலுக்கும், பரிசுத்தமாக்கப்படுதலுக்கும் நிழலான விதத்தில் அடையாளமானார்கள்.

யாரும் அறியாத வண்ணம், கர்த்தர் தெரிந்துகொண்டுள்ள மனுஷனைக் கண்டுபிடிக்கவும், இராஜாவாக அம்மனுஷனை அபிஷேகம்பண்ணவும், அதற்கு ஆயத்தமாகத்தக்கதாகத் திவ்விய ஆசீர்வாதத்தினை அம்மனுஷனுக்குக் கொடுக்கவும்வேண்டும் என்றுள்ள நோக்கத்தில், தீர்க்கத்தரிசியானவர் ஈசாயின் குடும்பத்தையும் அழைத்ததாகத் தெரிகின்றது. ஈசாய் அவரது குமாரர்களை முறையாய் அவர்களது பிறப்பினுடைய வரிசையின்படி தீர்க்கத்தரிசிக்கு அறிமுகப்படுத்தினார்; தனது மூத்த குமாரனாகிய எலியாபை முதலாவதாக அறிமுகப்படுத்தினார். எலியாப் வலுவான தோற்றத்தில் காணப்பட்டபடியால், இவரே கர்த்தருடைய தெரிந்துகொள்ளுதலாய் இருப்பார் என்று தீர்க்கத்தரிசியானவர் இயல்பாகவே அனுமானித்தார்; ஆனால் இக்காரியத்தில், வழிகாட்டுதலுக்காய் அவர் கர்த்தரை நோக்கிப் பார்த்தபோது, அவருக்கு எவ்விதத்தில் பதிலளிக்கப்பட்டது என்று நமக்குத் தெரியவில்லை என்றாலும், ஏதோ ஒரு விதத்தில் சாமுயேல், நம்முடைய இப்பாடத்தின் ஆதார வசன வார்த்தைகளைப் பதிலாய்ப் பெற்றுக்கொண்டார்.

தோற்றம், வயது, திறமை முதலியவைகளின் அடிப்படையிலுள்ள மனுஷகண்ணோட்டத்தினுடைய கணிப்பின்படி, ஈசாயின் குடும்பத்திலுள்ள எலியாப், தேசத்திற்கு இராஜாவாய் இருப்பதற்கு மிகவும் பொருத்தமான நபராய் இருந்தார்; எனினும் கர்த்தருடைய பார்வையில் அப்படியாக இருக்கவில்லை. கர்த்தர் இருதயத்தைப் பார்க்கின்றார்; இன்னுமாகத் தாவீதை அவர் தம் இருதயத்திற்கு ஏற்ற மனுஷனாக ஏற்கெனவே தெரிந்தெடுத்துவிட்டார்; அத்தருணத்தின்போது தாவீது வயதில் இளையவராக இருந்தார்; இன்னுமாக விருந்தில் பங்கெடுக்க வரும்படிக்கு ஆள் அனுப்பி அழைப்பதற்கு, அவரது தகப்பனால் அவர் பொருட்படுத்தப்படவில்லை. ஈசாயின் குமாரர்கள், ஒருவர் பின் ஒருவராக முன்கொண்டுவந்து

நிறுத்தப்பட்டபோதிலும், அபிஷேகிக்கப்பட வேண்டியவராகக் கர்த்தருடைய ஆவியினால் சுட்டிக்காண்பிக்கப் படும் நபரைத் தீர்க்கத்தரிசியானவர் கண்டுபிடிக்கவில்லை. பின்னர் அவர், "உன் பிள்ளைகள் இவ்வளவுதானா? என்று கேட்டார். ஈசாய் உடனடியாகத் தனக்கு மற்றுமொரு குமாரன், அதாவது இளைய குமாரன் இருக்கின்றார் என்றும், அக்குமாரன் தன் ஆடுகளோடுகூட வெளியில் காணப்படுகின்றார் என்றும் நினைவுகூர்ந்து, அவரை அழைத்தனுப்பினார்.

## நிஜமான, கர்த்தருடைய அபிஷேகிக்கப்பட்டவர்கள்

நம்முடையஆ தாரவ சனமானது,சு விசேஷயுகத்தினுடையப ரமஅ ழைப்பினைக்க ிறிஸ்தவர்கள் அனைவருடனும் தொடர்புபடுத்துகின்றது; மேலும், வருடா வருடம் கடந்துவரும் அனுபவங்களும் இதை நமக்குத் தொடர்புபடுத்திக்காட்டுகின்றது. தேவன் ஸ்தாபிக்கப்போகின்றதும், தற்காலத்தின் இராஜ்யங்களை ஒதுக்கித்தள்ளப்போகின்றதுமான இராஜ்யத்தில், அவருக்கு இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் இருக்கத்தக்கதாக, யாரை மகிழ்ச்சியின் தைலத்தினாலும், பரிசுத்த ஆவியினாலும் அபிஷேகிக்கலாமென்று, கர்த்தருடைய சுவிசேஷகர்களாகிய நாம் நாடித் தேடிக்கொண்டிருக்கின்றோம். தற்கால அமைப்புகளை ஒதுக்கித் தள்ளிப்போடுபவர்களை அபிஷேகிக்கும் இந்த வேலையினை நடந்தேற்றுவதில், நாமும் தீர்க்கத்தரிசியாகிய சாமுயேல்போன்று அச்சத்தை உணர்கின்றோமல்லவா? கர்த்தருடைய தெரிந்தெடுக்கப்பட்டவர்களை முத்திரையிடும் வேலையானது, ஓர் இரகசியமான வேலை என்றும், இதனை உலகம் புரிந்துகொள்ள முடியாது என்றும் நாம் உணர்ந்திருக்கின்றோமல்லவா? உண்மைதான் பரிசுத்த ஆவியினுடைய இந்த முத்திரையிடுதலை, அபிஷேகித்தலை யாரும் புரிந்துகொள்வதில்லை; இதைப் பெற்றுக்கொண்டுள்ளவர்களாலேயே புரிந்துகொள்ள முடியும்; அத்தகையவர்கள் யாவரும் தாவீது வகுப்பாராய் இருக்கின்றனர்.

தாவீது என்ற பெயருடைய அர்த்தம் பிரியமானவன் ஆகும்; மேலும் இது விசேஷமாய் நமது கர்த்தரும், ஆண்டவருமானவருக்குப் பொருந்துவதுபோல, இன்னுமாக யேகோவா தேவனால், "இவர் என்னுடைய நேசகுமாரன் என்று கூறப்பட்டதுபோல, இது அவரது சரீரத்தினுடைய அங்கத்தினர்கள் அனைவருக்கும்கூடப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது; இவர்களில் ஒவ்வொருவனும் பிரியத்திற் குரியவனாகக் காணப்பட வேண்டும், இல்லையேல் அங்கத்தினனாக ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. அப்படியானவர்களைக்குறித்துத் தலையாயிருக்கிறவர் கூறுவதாவது: "பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்; இன்னுமாக அவர் நம்மை அன்புகூர்ந்ததுபோன்று, நாமும் ஒருவரையொருவர் அன்புகூர்ந்திட வேண்டும் என்றும் கூறியுள்ளார். கர்த்தருடைய இந்த அபிஷேகித்தலைப் பெற்றுக்கொள்பவர்கள் அனைவரும் இறுதியில் இந்தத் தாவீதைப் போலாக வேண்டும் அல்லது பிரியத்திற்குரியவர்களாக வேண்டும் என்று கூறுவது நியாயமான காரியமேயாகும். அவர்களுக்குள் அன்பின் ஆவி காணப்பட வேண்டும் - கர்த்தருக்கான அன்பும், ஒருவர் இன்னொருவருக்காய்க் கொண்டிருக்கும் அன்பும் காணப்படவேண்டும்; இல்லையேல் அவர்கள் அவருடையவர்களாய் இருப்பதில்லை.

தாவீதுக்கு நிஜமானவர்களென, உலகத்தை ஆசீர்வதிப்பதற்கென்று ஆயிர வருட இராஜ்யத்தின் மகிமையில் ஆளுகை செய்யப்போகிறவர்களாகிய "கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவர்களை நாம் நாடித் தேடுகையில், இந்த விஷயத்தில் தாவீது எப்படி அவரது சகோதரர்களினால் மிகவும் முக்கியத்துவ மில்லாதவராகப் பார்க்கப்பட்டாரோ, அதுபோன்று கர்த்தர் தம் பரலோக இராஜ்யத்திற்கென்று தெரிந்தெடுத்து, அபிஷேகிக்கப்படுபவர்களும்கூடப் பார்க்கப்படுவதை நாம் கவனிக்கின்றோம். நமது கர்த்தர் இயேசுவும்

அவரது சகோதரர்களினால் அசட்டைபண்ணப்பட்டார்; மேலும் அவர் தேவனுடைய அபிஷேகிக்கப்பட்டவர் என்று கூறப்பட்டபோது, அவரது ஜனங்கள் அவரிடமிருந்து தங்கள் முகங்களைத் திருப்பி மறைத்துக்கொண்டார்கள் - அவரை அவமதித்தார்கள், அவரை அசட்டைபண்ணினார்கள் மற்றும் மகத்துவம் அல்லது மகிமைசார்ந்த விஷயங்களில், அவரைப் பிரயோஜனமற்றவராய்க் கருதினார்கள் - "வறண்ட நிலத்தின் வேரைப்போன்று அவரைக் கருதினார்கள். இப்படியாகவே அவரது சரீரத்தின் அங்கத்தினர்களாகிய, தெரிந்தெடுக்கப்பட்ட சபையின் விஷயத்திலும் காணப்படுகின்றது. இவர்களும் மனுஷரால் அசட்டைபண்ணப்பட்டு, புறக்கணிக்கப்படுகின்றனர்; மேலும் இவர்களைக்குறித்து அப்போஸ்தலர் கூறுவதுபோன்று, இவர்கள் கிறிஸ்துவின் நிமித்தமாக, சத்தியத்தின் நிமித்தமாக, "உலகத்தின் குப்பையைப்போலவும், எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போலவுமானார்கள். (1 கொரிந்தியர் 4:13)

## இருதயத்தை ஆராய்ந்து அறிகிறவர் யார்?

இன்னுமாகப் பவுல் அடிகளார், "சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை என்று கூறுகின்றார் (1 கொரிந்தியர் 1:26). பரிசுத்த யாக்கோபு அடிகளாரும், "என் பிரியமான சகோதரரே, கேளுங்கள்; தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின இராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொள்ளவில்லையா? என்று கேட்கின்றார் (யாக்கோபு 2:5). மனுஷர்கள் மத்தியில் ஒரு பொருட்டாய்க் காணப்படாதவர்களைத் தெரிந்தெடுக்கும் மற்றும் மனுஷர்கள் மத்தியில் கனமுள்ளவர்களாய் இருப்பவர்களை ஒதுக்கித்தள்ளும் தெய்வீகத் தெரிந்தெடுத்தலின் இக்கொள்கையானது, இந்தச் சுவிசேஷயுகம் முழுவதிலும் கவனிக்கப்படலாம். அடிக்கடி தீர்க்கத்தரிசியாகிய சாமுயேல்போன்று நாமும், மனுஷர்கள் மத்தியில் இராஜ்யத்திற்குப் பொருத்தமானவர்கள் போன்று தோற்றத்தில் காணப்படுபவர்களை, அதாவது சமுதாயத்திலும், அறிவிலும், ஒழுக்கத்திலும், கல்வியறிவிலும், மனுஷர் மத்தியிலுள்ள கனத்திலும் மேன்மையானவர்களாய்க் காணப்படுபவர்களைத் தேடுகின்றோம்; இன்னுமாக இப்படிப்பட்டவர்களைத் தேவன் நிச்சயமாய் அங்கீகரித்து, மகிழ்ச்சியின் தைலத்தினால் அபிஷேகிப்பார் என்றும், இப்படிப்பட்டவர்களுக்கு இராஜ்யம் தொடர்பான சத்திய அறிவை வழங்குவார் என்றும் நாம் எதிர்ப்பார்ப்பு வைக்க, பின்னர் நாம் தவறாய் எண்ணியிருக்கின்றோம் என்று அறிந்துகொள்வோம்; மேலும் தேவன் வெளித்தோற்றத்தைப் பார்க்காமல், இருதயத்தையே பார்ப்பார் என்ற படிப்பினையை மறுபடியுமாகப் பெற்றுக்கொண்டவர்களாய் இருப்போம்.

நம்மால் இருதயத்தினை ஆராய்ந்து அறிய முடியாது என்று ஒப்புக்கொள்கின்றோம்; ஆனாலும், இம்மாதிரியான காரியங்களிலுள்ள தெய்வீகத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதில் நாம் முழுமையாய்த் திருப்திகொள்கின்றோம்; மேலும் கர்த்தருடைய தெரிந்துகொள்ளுதல்களின் அர்த்தத்தினைக்குறித்து இப்போது நாம் புரிந்துகொள்கிறதைக்காட்டிலும், தற்காலத்தினுடைய இந்த ஜீவியத்தின் இரகசியங்கள் யாவும் வெளிப்படுவதற்குரிய ஏற்றகாலத்தில், அவைகளை மிகவும் முழுமையாகப் புரிந்துகொள்ள முடிகிறவர்களாக நாம் இருப்போம் என்ற நம்பிக்கையிலும் நாம் முழுமையாய்த் திருப்திகொள்கின்றோம். அக்காலங்களில் ***நம் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களின் இருதயங்களுக்கும்***, வெளிப்புறத்தில் தாழ்மையான தோற்றத்தில் இருந்தும், இராஜ்யத்தினுடைய அழைப்பு தொடர்புடைய விஷயத்தில் அவரால் ***மகா தயவு***

***பாராட்டப்படாதவர்களின் இருதயங்களுக்கும்*** இடையிலுள்ள வித்தியாசம் என்னவாக இருந்தது என்பதை நாம் காணமுடிகின்றவர்களாய் இருப்போம். இதற்கிடையில் நாம் காத்திருப்போமாக; இன்னுமாகப் "பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன் என்று நமது அருமை மீட்பர் கூறினதுபோன்று, தேவனை விசுவாசித்து, அவர் தீர்மானங்களை ஏற்றுக்கொள்வோமாக. (மத்தேயு 11:25)

நாம் தெய்வீக வழிமுறைகள் குறித்துப் போதிக்கப்பட்டிருப்பதினால், தூய்மைக்கான மற்றும் தேவன்பால் உத்தம இருதயம் கொண்டிருப்பதற்கான சான்றினைப் பகருகின்றவர்களாகவும், கர்த்தரிடமிருந்து அவருடைய ஆவியின் அபிஷேகித்தலையும், "கேட்கும் செவிகளையும் பெற்றுக்கொண்டவர்களாகவும் காணப்படும் எளியவர்களை . . . மிகவும் கனம் குறைந்தவர்களை . . . கல்வியறிவில்லாதவர்களை நாம் அசட்டைபண்ணிடக்கூடாது. நமக்குக் கிடைக்கும் வாய்ப்புகளுக்கேற்ப சுவிசேஷத்தை அனைவருக்கும் நாம் அறிவித்திடும் அதேவேளையில், பூலோக நிலைமைகள் முதலானவைகளைப் பொருட்படுத்தாமல் கர்த்தருடைய தயவு யார்மீது வெளிப்படுத்தப்பட்டுள்ளதோ, அவர்களோடுகூட நாம் விசேஷமாய் மகிழ்ச்சிக்கொள்ள வேண்டும் (கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்). மேலும் இத்தகையவர்கள் அனைவரையும், நமது ஆண்டவரும், கர்த்தருமானவரின் ஸ்தானாபதிகளாகவும், பிரதிநிதிகளாகவும் அடையாளம் கண்டுகொள்வதும், கனப்படுத்துவதும், இத்தகையவர்கள் அனைவருடன் ஒத்துழைப்பதும் நமக்கடுத்தக் காரியமாகும்.

கர்த்தருடைய ஜனங்களுள்ள சபையாரை நாம் ஏறெடுத்துப் பார்க்கையில், சிலர் தனிப்பட்ட தோற்றத்தில் கவருகிறவர்களாக இராத நிலையிலும், சிலர் அதிகம் கல்லாதவர்களாகவும், சிலர் நாகரிகமானவர்களாக இராத நிலையிலும், சிலர் கனமில்லாதவர்களாய் இருக்கும் நிலையிலும் காணப்பட்டாலும், கர்த்தருடைய அபிஷேகித்தலைப் பெற்றுள்ளதற்கான சான்றுகளை உடையவர்களாகவும், சத்தியத்தின் ஒளிதனைத் தங்கள் முகங்களில் பிரகாசிக்கப் பெற்றவர்களாகவும், சத்தியத்தின் நம்பிக்கை மற்றும் விசுவாசத்தினால் ஊக்குவிக்கப்பட்டு நடத்தப்படுகின்றவர்களாகவும், இருளின் இராஜ்யத்தினின்று, தேவனுடைய நேச குமாரனின் இராஜ்யத்திற்குள்ளாக மறுரூபமாக்கப்பட்டு வருவதைச் சுட்டிக்காண்பித்திடும் ஜீவியங்களை உடையவர்களாகவும் இருப்பதை நாம் அடிக்கடி கண்டிருக்கின்றோம்; இன்னுமாகக் கர்த்தருக்கான மணவாட்டியினைத் தேடும்படிக்கு ஒருவேளை அவர் நம்மை அனுப்பிவைத்திருந் திருப்பாரானால், அவரது விலையேறப்பெற்ற சம்பத்தானவர்களில் சிலரைவிட்டு நாம் அறியாமையில் கடந்துபோய்விடுபவர்களாகவும், அபாத்திரர்களென்று அவரால் நிராகரிக்கப்படும் சிலரைக் கூட்டிச்சேர்ப்பவர்களாகவும் இருந்துவிடுவோம் என்றுகூட நாம் அடிக்கடி எண்ணிப்பார்த்ததுண்டு; காரணம் நம்மால் இருதயத்தினை ஆராய்ந்து அறிய முடியாது. இந்தக் கருத்தானது - நம்மை மிகுந்த தாழ்மை கொண்டிருக்கச் செய்யவேண்டும்; நாம் அனைவரிடத்திலும் இரக்கம் மற்றும் சாந்தமாய் இருக்கச் செய்திடவேண்டும் மற்றும் கர்த்தருடைய நம்பிக்கைக்கு மிகவும் பாத்திரவான்களாக இருக்கச் செய்திடவேண்டும்; இன்னுமாகத் தாவீதை அபிஷேகித்தல் தொடர்புடைய விஷயத்தில் தீர்க்கத்தரிசியாகிய சாமுயேல் கர்த்தரையே நோக்கிப்பார்த்ததுபோன்று, நாமும் அவரது ஊழியக்காரர்களென ஏறெடுக்கும் நமது பிரயாசங்கள் தொடர்புடைய விஷயத்திலும் அவரது வழிநடத்துதல்களுக்காக நோக்கிப்பார்க்க மிகவும் ஆவலுள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

## இராஜ்யத்திற்கான ஓர் அடையாளக் காட்சி

"அவன் இங்கே வருமட்டும் நான் பந்தியிருக்க மாட்டேன் என்ற சாமுயேலின் வார்த்தைகளானது, அவர்கள் புசிக்கவிருக்கும் பந்தியைப் பற்றினதாகும். பலிசெலுத்தின பிற்பாடு, பரிசுத்தம்பண்ணப்பட்டு அங்கே காணப்படுபவர்களும், பலிசெலுத்துவதில் மனதளவில் பங்கெடுத்தவர்களும் பந்தியமர்ந்து, மாம்சம் புசித்து, இப்படியாக கர்த்தருடனான ஐக்கியத்தினைக் கொண்டாடுவது வழக்கமாயிருந்தது. இந்தப் பந்தி, தாவீது வரும்வரையிலும் துவங்க கூடாதெனத் தீர்க்கத்தரிசி முடிவுபண்ணினார். கர்த்தரால் அபிஷேகிக்கப்பட்டவராய்த் தாவீது இருக்கப்போவதன் காரணமாகவே, அப்பந்தியில் மிகவும் முக்கியமான நபராய் அவர் இருப்பார் என்பது தெரியவருகின்றது.

அநேகமாக இதிலும் நாம் தெய்வீகத் திட்டத்திலுள்ள கர்த்தருடைய ஆசீர்வாதத்திற்கான நிழலைப் பார்க்கலாம். கொழுமையான பதார்த்தங்கள் உள்ள ஒரு பந்தியானது ஒட்டுமொத்த மனுக்குலத்தின் உலகத்திற்காக ஆயத்தம்பண்ணப்பட்டுள்ளது. ஆனால் நீதிமானாக்கிடும் மற்றும் பரிசுத்தமாக்கிடும் பலியானது அடிக்கப்படாததுவரையிலும், அந்தப் பந்தியில் பங்கெடுக்க முடியாது. இன்னுமாக அபிஷேகிக்கப்பட்டவர் முதலாவதாக வந்து, அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்வது வரையிலும், இந்தப் பந்தியானது துவங்க முடியாது. அபிஷேகித்தலானது சபையின் தலையாகிய நமது கர்த்தரிடத்தில் ஆரம்பித்தது; சுவிசேஷ யுகம் முழுவதிலும் அவரது சரீரமாகிய சபையின் அங்கத்தினர்கள்மீது வடிந்துகொண்டிருக்கின்றது. பலிக்கான ஆடு அடிக்கப்பட்டாயிற்று; மேலும், கிறிஸ்துவின் அங்கத்தினர்களென நாம் பலியில் பங்கை அனுபவிக்கின்றோம். சீக்கிரத்தில் முழுக்காரியமும் நிறைவேறி முடியும்; பின்னர் பந்தியின் கொழுமையான பதார்த்தங்களானது பரிமாறப்படும் - அபிஷேகிக்கப்பட்டவர், அதாவது தலை மற்றும் சரீரமானவர்கள் அந்த மாபெரும் நிஜமான விருந்தில் பிரதானமானவர்களாய்க் காணப்படுவார்கள்.

கர்த்தருடைய வல்லமையும், ஆசீர்வாதங்களும் ஏதோ ஒரு விதத்தில் தாவீதினுடைய அபிஷேகத்துடன் கூடவே வந்தது - அது எவ்வாறு என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியாது; ஏனெனில், சபைக்குப் பெந்தெகொஸ்தே நாள் முதற்கொண்டு காணப்படும் பரிசுத்த ஆவியினுடைய வெளிப்படுத்துதல் போன்ற வெளிப்படுத்துதல்கள் அக்காலங்களில் இருக்கவில்லை (யோவான் 7:39). எனினும் ஏதோ ஒரு விதத்தில் தேவனுடைய ஆசீர்வாதமும், வல்லமையும் தாவீதோடுகூடக் காணப்பட்டு, அறிவு முதலான விஷயங்களில் அவரை விருத்தியடைந்து முன்னேறச்செய்தது; இன்னுமாக அவர் எந்த ஸ்தானத்திற்கென்று அபிஷேகிக்கப்பட்டாரோ, அந்த ஸ்தானத்தினுடைய கடமைகளை நிறைவேற்றத்தக்கதாக ஆயத்தப்படுத்தினது. இக்காரியம் சபை கர்த்தரினால் ஏற்றுக்கொள்ளப்படும் காலம் முதற்கொண்டு, அவள்மீது கடந்துவரும் அபிஷேகத்தினைச் சுட்டிக்காட்டுவதாகக் கருதலாமல்லவா? நமக்கானது சரீரப்பிரகாரமான அபிஷேகம் அல்ல; அருளப்படும் ஆசீர்வாதங்களும் பூமிக்கடுத்தவைகளல்ல. நாம் புதுச்சிருஷ்டிகளென அபிஷேகிக்கப்பட்டிருக்கின்றோம்; இதனால் நாம் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளருகின்றோம்; பிற்பாடு புதுச்சிருஷ்டிகளென நாம் முதலாம் உயிர்த்தெழுதலில் பூரணப்படுத்தப்பட்டு, நமது தலையாகிய ஆண்டவரும், கர்த்தருமானவருடன் சிங்காசனத்திற்கு வந்திடுவோம்.

R5662

# நாகரிக இராட்சதர்கள் மீது வெற்றிகள்
## 1 சாமுயேல் 17:1-54

வேதாகமத்தில் முதலாவதாக இராட்சதர்கள் என்று குறிப்பிடப்பட்டவர்கள், ஆதியாகமம் 6-ஆம் அதிகாரத்தினுடைய பதிவின்படி, மனித தாய்மார்களை உடையவர்களாகவும், மனித உருவமெடுத்து வந்த விழுந்துபோன தூதர்களைத் தகப்பன்மார்களாகவும் பெற்றிருந்தவர்கள் ஆவார்கள். இந்த இராட்சதர்கள் அனைவரும் நோவாவின் நாட்களில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் மாய்ந்துபோனார்கள். அதுமுதற்கொண்டு அவ்வப்போது மனித இராட்சதர்கள் ஆசியாவில் காணப்பட்டு வந்தனர். பாசானின் இராஜாவாகிய ஓக் என்பவருக்கு, 13-அடி நீளமுள்ள இரும்பினாலான கட்டில் இருந்ததாம். கானானை வேவுபார்த்துவந்த வேவுகாரர்கள், அங்கு இராட்சதர்களை, அதாவது ஏனாக்கின் குமாரர்களைக் கண்டதாகத் தெரிவித்தனர். அநேகமாக தாவீதினால் கொல்லப்பட்ட காத் பட்டணத்தின் இராட்சதனாகிய கோலியாத் என்பவரும், அந்தக் குடும்பத்தின் வம்சத்தானாகவே இருக்க வேண்டும்.

சமீபகாலங்களிலும் நாம் இராட்சதர்களைப் பெற்றிருக்கின்றோம்; அயர்லாந்து நாட்டானாகிய Byrne-என்பவர், எட்டு அடி நான்கு அங்குலமானவர் ஆவார்; ஆங்கிலேயனாகிய Middleton-என்பவர், ஒன்பது அடி மூன்று அங்குலமானவர் ஆவார்; ரஷ்ய நாட்டானாகிய Lushkin-என்பவர், எட்டு அடி ஐந்து அங்குலமானவர் ஆவார்; சீன நாட்டானாகிய Chang-என்பவர், ஏழு அடி எட்டு அங்குலமானவர் ஆவார். Gabbaras-என்பவர், ஒன்பது அடி ஒன்பது அங்குலம் உயரம்கொண்டவர் ஆவார் என்று Pliny-அவர்கள் தெரிவித்துள்ளார். ஆகையால் தாவீது மற்றும் கோலியாத்தின் சம்பவத்தை நம்ப மறுப்பதற்கு எந்தக் காரணங்களும் இல்லை.

அநேகமாக இருபது வயது வாலிபனாகக் காணப்பட்ட தாவீது, போர்ச்சேவகர்களாகக் காணப்பட்ட தன் சகோதரர்களுக்காக உணவுகளையும், பண்டங்களையும் எடுத்துக்கொண்டு, அவர்கள் காணப்பட்ட இஸ்ரயேலின் இராணுவத்திற்குப் போனார். அங்கு அவர் தெற்கிலிருந்து படையெடுத்து வந்துள்ளதான பெலிஸ்தரின் சேனையும், இஸ்ரயேலின் சேனையும் எதிர் எதிரே நின்று பார்த்துக்கொண்டிருப்பதைப் பார்த்து ஆச்சரியமடைந்தார். இரு சேனையும் போர் புரியவில்லை; மாறி மாறி ஒருவரையொருவர் கண்டு பயந்து காணப்பட்டதாகத் தெரிந்தது. பெலிஸ்தரின் வீரன் ஒருவன் தினமும் அங்கு வந்தான்; அவன் தோற்றத்திலும், பெலத்திலும் இராட்சதனாக இருந்தான்; அவன் இருநூற்று இருபது பவுண்ட் எடையுள்ள வெண்கலத்தினாலான போர்க்கவசத்தினை அணிந்திருந்தான்; இருபத்தைந்து பவுண்ட் எடையுள்ள தலைப்பாகத்தையும், மூன்று அங்குலம் திண்ணமுள்ள தண்டு பாகத்தையும் உடைய ஈட்டியினை அவன் கொண்டுவந்து, சுழற்றி பயமுறுத்திக்கொண்டிருந்தான். ஒருவரோடு ஒருவர் யுத்தம்பண்ண ஒருவனை அனுப்புங்கள், காரியத்தினை முடித்துவிடலாம் என்று கூறி, இஸ்ரயேலர்களை நிந்தித்தான். அவன் இஸ்ரயேல் ஜனங்களை மாத்திரமல்லாமல், அவர்கள் தேவனையும் நிந்தித்துக்கொண்டிருந்தான்.

இப்படி அவன் சவால் விட்டுச் செல்வது, இத்தனை நாட்களாக நீடித்திருப்பதையும், யாருமே அவன் சவாலை ஏற்றுக்கொள்ளாததையும் கண்டு வாலிபனான தாவீது வியப்படைந்தார். உண்மை தேவனின் ஒரு விசுவாசியாக, அவர் தேவனுக்கும், தன் ஜனத்திற்கும் இடையிலுள்ள உடன்படிக்கையினைக்குறித்து உணர்ந்தவராயிருந்தார். சர்வவல்லவரின் மீது அவருக்கிருந்த விசுவாசம் அதிகமாய் இருந்தபடியினால், அவர் முழுமையாகத் தெய்வீக வாக்குத்தத்தத்தினை ஏற்றுக்கொண்டவராய்க் காணப்பட்டார். தன் சகோதரர்களாலும், தன் தேசத்து மனுஷர்களாலும் வெளிப்படுத்தப்பட்ட விசுவாசக்குறைச்சலைக்குறித்துத்

தாவீது வியப்படைந்தார். இந்தக் கோலியாத்தினை, தேவனுடைய வாக்குத்தத்தங்களின் பெலத்தினால் எதிர்கொள்ள, தான் துணிவுகொள்வதாகத் தெரிவித்தார்.

எதிரியின் அறைகூவலை எதிர்கொள்பவனுக்கு மகா கனம் கொடுக்கப்படும் என்று இஸ்ரயேலின் இராஜாவாகிய சவுல் தெரிவித்திருந்தார். இவர் முன்னிலையில் இளைஞனாகிய தாவீது கொண்டுவரப்பட்டார்; போர்வீரனுக்காய் இராஜா காத்திருந்தபோதிலும், தனக்கு முன் நின்றுகொண்டிருக்கும் இந்தத் திடகாத்திரமான வாலிபன், அரக்கபலம் கொண்டிருந்த கோலியாத்திற்கு நிகரற்றவன் என்றும், கோலியாத்தின் ஈட்டி ஒருமுறை பாய்ச்சப்பட்டாலே, இளைஞன் மரித்துப்போவான் என்றும் இராஜா உணர்ந்துகொண்டார். பின்னர் அந்த வாலிபன் பேசத் துவங்கினான். தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தபோது, ஆடுகளைச் சிங்கம் மற்றும் கரடியின் வாயினின்றும், நகங்களினின்றும் தான் தப்புவித்ததைக்குறித்துத் தாவீது தெரியப்படுத்தினார். தனக்குத் தைரியம் உண்டு என்றும், எல்லாவற்றிற்கும் மேலாக தேவனிடத்தில் விசுவாசம் உண்டென்றும் தெரியப்படுத்தினார். கடந்த காலங்களில் தேவன் தன்னுடைய அன்றாட கடமைகளின் விஷயத்தில் தன்னை ஆசீர்வதித்து வந்ததுபோல, தற்போது தான் செய்ய வேண்டிய கடமையின் விஷயத்திலும், அரக்கனுடைய சவால்களையும், தேவனைப் பற்றின அவனது நிந்தனைகளையும் எதிர்கொள்ளும் விஷயத்திலும் வெற்றி அடைவதற்கேதுவான பலத்தினை தேவன் தருவார் என்றும் தெரியப்படுத்தினார்.

இராஜாவிற்குத் திருப்தி உண்டாயிற்று. இஸ்ரயேலிலேயே சிறந்ததாய்க் காணப்பட்ட தன் ஆயுதவர்க்கங்களைத் தாவீதுக்குக் கொடுத்து உதவினார். அதைத் தாவீது அணிவித்துப் பார்த்தப் பின்னர், நன்றிகள் தெரிவித்தவாறு திருப்பிக்கொடுத்துவிட்டார். இத்தகைய ஆயுதவர்க்கங்களை அணிந்த பழக்கம் தாவீதிற்கில்லை; மேலும், அவை இல்லாதிருந்தால் நலமாயிருக்கும் என்று எண்ணினார். அவருக்குப் பயன்படுத்திப் பழக்கமாய் இருந்த மேய்ப்பனுக்குரிய தனது தடியையும், தனது கவணையும் மாத்திரம் எடுத்துக்கொண்டார். பெலிஸ்தருடன் யுத்தம் பண்ணத்தக்கதாக, அவர்கள் பக்கமாகப் போகையில், நதியண்டையிலிருந்து ஐந்து கூழாங்கற்களைத் தெரிந்தெடுத்துக்கொண்டார். இந்தச் சிறு கருவிகள், தேவனுடைய ஆசீர்வாதத்தோடு போதுமானவையாகக் காணப்பட்டது; ஏனெனில், அவர் அக்கூழாங்கற்களில் ஒன்றினை மாத்திரம் பயன்படுத்த வேண்டியிருந்தது.

இராட்சதன் கோபமடைந்தவனாக: நீ தடிகளோடே என்னிடத்தில் வர நான் நாயா? என்றான் (1 சாமுயேல் 17:43). பாரம்பரிய பதிவின்படி: இளைஞன் வருகையில், இராட்சதன் தன் தலையைப் பின்பாக சாய்ந்து சிரித்தான். அவன் தலைக்கவசம் கீழே விழுந்தது; தன்னால் இழிவாகப் பார்க்கப்பட்ட தனது எதிராளியானவனுடைய குறிப்பார்த்து கல்லெறியும் ஆற்றலுக்கு இராட்சதன் வெளிப்பட்டான். அக்காலங்களில் செய்தித்தாள்களோ, பொது நூலகங்களோ கிடையாது; யுத்தத்தில் கூழாங்கற்களுடைய நிலை எவ்வளவு ஆற்றல்மிக்கது என்றோ, அதுவும் கைத்தேர்ந்த கரங்களில் அது எவ்வளவு ஆற்றல்மிக்கது என்றோ, அவைகள் இன்றைய காலங்களிலுள்ள rifle\சுழல் துப்பாக்கியின் அளவுக்குக் கிட்டத்தட்ட ஆற்றலுள்ளவை என்றோ இராட்சதன் அறிந்திருக்கவில்லை. இராட்சதன் திகைத்துப்போனான், அவனது ஆயுததாரி ஓடிப்போனான்; இளைஞனான தாவீது உடனடியாக அவனைக்கொன்று, அவனது பட்டயத்தை வெற்றியின் சின்னமாக எடுத்துக்கொண்டார். பெலிஸ்தர்கள் ஆச்சரியமடைந்து, கலக்கமடைந்து ஓடினார்கள்; இஸ்ரயேலர்கள் அவர்களது அரணான பட்டணம்வரை தொடர்ந்து விரட்டிப்பிடித்தார்கள்.

## நாகரிக இராட்சதர்களை எவ்வாறு எதிர்கொள்வது?

இயேசுவினுடைய மரணத்தினைத் தொடர்ந்து ஒரு புதிய தெய்வீக ஒழுங்கின்படியான காரியங்கள் வந்தன. தேவனிடத்தில் விசுவாசம் வைத்திருந்தவர்கள், இன்னமும் மேற்கொள்ள வேண்டிய யுத்தங்கள் இருந்தன; ஆனாலும் அவை மாம்சத்துக்கேதுவான போராயுதங்களினால் போராட வேண்டியவையல்ல. இந்த வெற்றிகளானது, தாவீதின் விஷயத்தில் செயல்படுத்தப்பட்ட அதே கொள்கைகளின் அடிப்படையிலேயே காணப்படுகின்றது. தேவனிடத்தில் விசுவாசம் என்பதே - அதாவது எந்தக் காரணத்திற்காக தாங்கள் போராடுகின்றார்களோ, அது தேவனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்ற உணர்ந்துகொள்ளுதலே அடிப்படையாய் இருக்கின்றது. விசுவாசம் தைரியத்தைக் கொடுக்கின்றது - அதாவது சிறுசிறு சத்துருக்கள் விஷயத்திலுள்ள கடந்தகால வெற்றிகளில் படிப்படியாக வளர்ந்துள்ள விசுவாசம், நாம் சந்திக்க வாய்ப்புள்ள மிகவும் பயங்கரமான இராட்சதர்களுடனான யுத்தத்தில் போராட பெலனையும், தைரியத்தையும் கொடுக்கின்றதாய் இருக்கின்றது.

இதை நினைவில்கொண்டவனாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் சிறு பெலவீனங்களை, சிறு குறைபாடுகளை ஜெயங்கொள்வதற்கும் - சுயநலம், கோபம், துர்க்குணம், பொறாமை, தீமைபேசுதல் ஆகியவற்றுடனான சிறுசிறு யுத்தங்களில் ஜெயங்கொள்பவர்கள் ஆவதற்கும் தினந்தோறும் விழிப்புள்ளவனாய் இருக்க வேண்டும். இவைகளில் அடையும் வெற்றிகளும், இவைகளைத் தேவனுடைய உதவியினால் ஜெயங்கொள்வதில் அடையும் அனுபவங்களும், மாபெரும் சோதனைகளைச் சந்திப்பதற்கும், பிரம்மாண்டமான வெற்றிகளை அடைவதற்கும் படிப்படியாக நம்மை ஆயத்தப்படுத்துகின்றது.

ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன் என்ற தெய்வீக வாக்குத்தத்தத்தை நாம் அறியவருகையில், இது தேவன் தம் சபையை அழைத்துள்ள மகா கனத்திற்கு, நம்மை நாம் பாத்திரவான்களாய் நிரூபித்துக்காட்டுவதற்கு, மாபெரும் வெற்றியினை நாம் அடைய வேண்டியிருக்கும் எனும் கருத்தினை நமக்குக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. மேலும் இவ்வெற்றியானது எப்போதும் பலவான்களுக்குரியதாய் இராமல், மாறாக தேவனால் ஆசீர்வதிக்கப்படுபவர்களுக்குரியதாக இருக்கின்றது என்பதை அறிய வருகையில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். நண்பர்களும், அயலார்களும் எவ்வளவுதான் அநியாயமாக நடந்துகொண்டாலும், அந்த நண்பர்களுடனோ அல்லது அயலார்களுடனோ சண்டையிடுதல் என்பது, தேவனால் அங்கீகரிக்கப்படுகிறதும், அவரால் பலன் அளிக்கப்படுகிறதுமான போர் ஆகாது; மாறாக அவர் அங்கீகரிக்கும் போர், அநீதிக்கு எதிரான, பாவத்திற்கு எதிரான, திவ்விய பிரமாணம் எதிர்க்கும் அனைத்திற்கும் எதிரான போரேயாகும். இந்த யுத்தமும், வெற்றியும் முதலாவதாக நம் சொந்த இருதயங்களிலும், மனங்களிலும் சம்பவித்தாக வேண்டும்; பிற்பாடு கர்த்தருடைய வழிநடத்துதல் ஒருவேளை சுட்டிக்காட்டுமானால், பொதுப்படையான தீமைகளுக்கு எதிராகவும், பொதுப்படையான மற்றும் சமுதாயம் சார்ந்த நீதிக்கு ஆதரவாகவும் காணப்படலாம்.

எனினும், பல நூற்றாண்டுகளாகத் தேவனுடைய ஜனங்களை எதிர்த்துக்கொண்டிருக்கும் பாவம் மற்றும் அக்கிரமம் எனும் மகா இராட்சதர்கள், தேவனுடைய நியமிக்கப்பட்ட காலங்களில்தான், நிஜமான தாவீதினால் வீழ்த்தப்படுவார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. தாவீது எனும் பெயரின் அர்த்தம் பிரியமானவன் ஆகும். நிஜமான பிரியமானவர் கிறிஸ்து ஆவார் - தலையாகிய இயேசு மற்றும் அவரது சரீரமாகிய சபை ஆவார்கள். சீக்கிரத்தில் சத்தியம் எனும் கூழாங்கல் மகா எதிராளியைத் தாக்கும்;

உலகத்தினைச் சீர்த்தூக்கி, அதை ஆசீர்வதித்திடும் ஆயிரவருட ஆளுகையினை நிஜமான தாவீது துவங்குவார். இந்தத் தாவீது வகுப்பாரின் அங்கத்தினர்களென, நாம் ஜெயங்கொள்ளும் ஆவியினை உடையவர்களாய் இருக்க வேண்டும்; அதோடுகூடத் தேவனுடைய வாக்குத்தத்தம் மற்றும் வல்லமையில் நம்பிக்கை மற்றும் விசுவாசம் கொண்டிருத்தல் வேண்டும்.

R1902

# தாவீது மற்றும் கோலியாத்
## 1 சாமுயேல் 17:38-51

யுத்தம் கர்த்தருடையது. - 1 சாமுயேல் 17:47

இந்தப் பதிவிலிருந்து கிறிஸ்தவன் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமானது, யுத்தம் கர்த்தருடையது எனும் ஆதார வசனத்தின் வார்த்தைகளில் சுருக்கமாய்த் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவன் எப்போதும் இதை மனதில் நிறுத்திக்கொண்டவனாக, தேவன் அருளும் பெலத்தினால் பெலப்பட்டவனாக, தாவீதை வேறுபடுத்திக்காட்டின விசுவாசம், தைரியம் மற்றும் வீரத்தோடுகூட, இருளின் மகா அதிகாரங்களுக்கு எதிராக யுத்தத்திற்குத் தினந்தோறும் கடந்துபோவானாக; மேலும் அவன்முன் எந்தச் சத்துருக்களும் நிற்க இயலாது. வெற்றிக்கு மகா இன்றியமையாத ஒன்று, விசுவாசமாகும். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம் அல்லது விசுவாசமில்லாமல் நமக்கான அவரது பரிந்துபேசுதலைப் பெற்றுக்கொள்வது என்பது கூடாதகாரியம்.

விசுவாசத்தினை உடையவர்களாய் இருப்பதினால், நமக்கு மாம்சத்துக்கேதுவான போராயுதங்கள் தேவைப்படுவதில்லை; மனுஷனால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள எந்தப் போராயுதமும் நமக்கு எவ்விதத்திலும் உதவிசெய்கிறதில்லை; ஆனால் தாவீதினுடைய கவணும், கூழாங்கல்லும் செய்த பிரம்மாண்டங்கள்போன்ற மகா பிரம்மாண்டங்களை, பயிற்றுவிக்கப்பட்ட மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்ட விசுவாசத்தினால் நிகழ்த்த முடியும். கவணும், கூழாங்கல்லும் தாவீதினால், பயன்படுத்திப் பார்க்கப்படாத போராயுதமல்ல. அவர் எப்போதும் அவைகளை வைத்துப் பயிற்சி செய்துகொண்டு வந்தவராய் இருந்தார்; இப்படியாக அதைப் பயன்படுத்தும் விஷயத்தில் கைத்தேர்ந்தவராகவும், தைரியமானவராகவும் காணப்பட்டார். ஆகையால் கிறிஸ்தவனும் ஜீவியத்தின் சிறுசிறு காரியங்கள் அனைத்திலும், தொடர்ச்சியாகத் தேவனைச் சார்ந்திருப்பதில் பயிற்சி பண்ணிக்கொண்டு வரவேண்டும்; பின்னர் இராட்சத சோதனைகள் வருகையில், அவன் பயிற்சிபண்ணி வந்த விசுவாசமானது, சோதனைகளைச் சந்திப்பதற்கும், அதை ஜெயங்கொள்வதற்கும் மிகவும் உதவி செய்கின்றதாயிருக்கும். சோதனையானது மிகக் கடினமானதாய் இருக்குமானால், விசுவாசத்தினுடைய வெற்றியும் மிக மகிமையானதாய் இருக்கும்; இந்த அனுபவத்தினால் அடையப்பெரும் குணலட்சணத்தினுடைய பெலப்படுதலும் அதிகமாய் இருக்கும். சந்தேகத்திற்கிடமின்றி சிங்கத்துடனும் கரடியுடனும் ஏற்பட்ட முந்தைய போராட்டமும், அதில் தேவன் தாவீதுக்குக் கொடுத்த வெற்றியும்தான், பிற்பாடு கோலியாத்தின் வல்லமையைச் சவால் விடுவதில், அவருக்கு அத்தகைய தைரியத்தைக் கொடுத்ததாய் இருந்தது. ஆகையால் தேவனிடத்திலுள்ள விசுவாசத்தின் மூலமாய், நாம் போராடும் ஒவ்வொரு யுத்தமும், நாம் ஜெயிக்கும் ஒவ்வொரு வெற்றியும், எதிர்க்கால போராட்டங்களைச் சந்திப்பதற்குரிய பலத்தை வளர்த்துகின்றது; இன்னுமாக நம்முடைய இறுதி ஜெயங்கொள்ளுதலையும் மிகவும் உறுதிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

R3230

# எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது
## 1 சாமுயேல் 17:38 -49

தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? - உரோமர் 8:31

இஸ்ரயேலர்கள் கானானைக் கைப்பற்றின காலத்தில், கானான் தேசத்தினுடைய முகப்புப் பக்கத்திலுள்ள கடலோரப் பகுதிகளில் பெரும் பகுதி பெலிஸ்தர்களின் பகுதியாகக் காணப்பட்டது; மேலும் இவர்களுக்குஅ ப்பகுதியில்இ ருந்தஉ ரிமைகளானது,இ ஸ்ரயேலர்களால்ம திக்கப்பட்டது;ஏ னெனில் தேசமானது கைப்பற்றப்படுவதற்கு முன்னதாக, தேசம் சீட்டுப்போட்டுப் பகுக்கப்படும்போதுகூட, பெலிஸ்தர்கள் காணப்பட்ட பகுதியானது, இஸ்ரயேலர்களுக்குத் தேவனால் கொடுக்கப்பட்ட பகுதிகளில் உள்ளடங்கவில்லை. கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள் அடிக்கடி உண்மையற்று போகையில், அவர்களைச் சிட்சிப்பதற்கான தம்முடைய கோலென, இந்த வல்லமையுள்ள தேசத்தினை (பெலிஸ்தரை) அவர் பயன்படுத்தினார் என்பதை நாம் நினைவுகூருகின்றோம். ஆகையாலே சிம்சோனின் நாட்களில் பெலிஸ்தர்கள் இஸ்ரயேலை ஆண்டுகொண்டிருந்தனர்; சிம்சோன் இஸ்ரயேலின் நுகத்தடியினை மாற்றிப்போடும் கர்த்தருடைய பிரதிநிதிகளில் ஒருவராக, அவரால் பயன்படுத்தப்பட்டார்; எனினும் சிம்சோனால் துவங்கப்பட்ட இவ்வேலையானது, தீர்க்கத்தரிசியாகிய சாமுயேலின் நாட்கள்வரையிலும் நிறைவடையவில்லை. (1 சாமுயேல் 14)

நம்முடைய இப்பாடமானது, இஸ்ரயேலரின் எல்லைகள் மீதுள்ள பெலிஸ்தரின் மற்றுமொரு படையெடுப்பைக் காட்டுகின்றது; அப்போது சவுல் இராஜாவாய் இருந்தார்; சவுலுக்கு அடுத்த இராஜா தாவீது என்பது வெளியரங்கமாய் அறிக்கைப்பண்ணப்படவில்லை என்றாலும், தாவீது ஏற்கெனவே அப்பொழுது அந்தரங்கத்தில் அபிஷேகிக்கப்பட்டிருந்தார். இஸ்ரயேலரின் நிலப்பரப்பிற்குள்ளாக ஒரு குறிப்பிட்ட தூரம் அளவிற்குப் பெலிஸ்தரின் சேனைகள் படையெடுத்து வந்திருந்தன; இவர்களைச் சந்திக்கத்தக்கதாக, இஸ்ரயேலரின்சே னையினைச்ச வுல்கூ டிவரப்பண்ணியிருந்தம லைப்பகுதிக்குப்பெ லிஸ்தியசே னை வந்தடைந்திருந்தன. இரண்டு சேனைகளுக்கும் இடையில் பள்ளத்தாக்கு ஒன்று காணப்பட்டது; இந்தப் பள்ளத்தாக்கினுடைய நடுவில், பத்து அடி ஆழமுள்ள பள்ளம் ஒன்று, மலை அருவியினால் பாறைகளின் ஊடே உருவாகியிருந்தது. அக்காலங்களில் வழக்கமாய்ச் செய்யப்பட்ட யுத்தங்களுக்கு அவ்விடம் சாதகமான ஓர் இடமாயிருந்தது. தனது எதிரி சேனையினுடைய முன்னிலையில், இரு சேனைகளில் எந்தச் சேனையும் நதியினுடைய செங்குத்தான கரையினைக் கடக்க விருப்பம் காண்பிக்கவில்லை; ஏனெனில் நதியைக் கடந்துவரும் சேனையானது, மிகவும் சாதகமற்ற நிலைக்குள்ளாகும் நிலை காணப்பட்டது. இஸ்ரயேலின் இராஜா, அவரது சக இஸ்ரயேலர்களைக்காட்டிலும் உயரமானவர் என்பதை அறிந்த பெலிஸ்தர்கள், சவுலுக்கு எதிராக ஓர் இராட்சத பெலிஸ்தனாகிய கோலியாத்தினை நிறுத்தினார்கள்; இவர் இன்னும் உயரமானவராகவும் - சுமார் பத்து அடி உயரம் உள்ளவராகவும், இவரது கவசம், ஈட்டி மற்றும் பட்டயத்தினுடைய எடையை வைத்துப்பார்க்கையில், பருத்த உடலமைப்பு உள்ளவராகவும் இருந்தார். இரண்டு தேசத்திற்கும் இடையில் அநேக வருட காலங்களாகக் காணப்பட்ட பிரச்சனைகளானது, சாதாரணமான ஒரு யுத்தத்தினைக்கொண்டு முடிக்கப்படாமல், மாறாக பெலிஸ்திய இராட்சதனுக்கும், இவனுக்கு எதிராய்ப் பொருத்தமானவனாகக் கண்டுபிடிக்கப்படும் இஸ்ரயேலனுக்கும் இடையில் நடக்கும்

போரின் மூலமாய் முடித்துவைக்கப்பட வேண்டும் என்பதே விடுக்கப்பட்ட சவாலாய்க் காணப்பட்டது; சந்தேகத்திற்கிடமின்றி அந்தப் பொருத்தமான இஸ்ரயேலன், இராஜாவாகிய சவுலாகவே இருப்பார்.

நாற்பது நாட்களாக, ஒவ்வொரு நாளின் காலைவேளையிலும் இச்சவாலானது விடப்பட்டது; இஸ்ரயேலின் இராஜாவும் சரி, அவரது பிரதான பராக்கிரமசாலிகளும் சரி, தாங்கள் அந்த இராட்சதனைக்குறித்து அஞ்சுவதாகவும், அவனது சவாலுக்குப் பதில்கொடுக்கமாட்டார்கள் என்பதாகவும் வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டார்கள். இந்த ஒரு கட்டத்தில்தான் சுமார் இருபத்தொரு வயது இளைஞனான தாவீது, அவரது தகப்பனால், இஸ்ரயேலின் சேனையிலுள்ள அவரது சகோதரர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கவும், வீட்டிலிருந்து அவர்களுக்குத் தின்பண்டங்களை எடுத்துச்செல்லவும், அங்கிருந்து கர்த்தருடைய சேனையினுடைய நிலைமை குறித்துத் தகவல் கொண்டுவரவும் வேண்டி, அவரது சகோதரர்களிடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார். தாவீது, தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷன் எனும் வேதவாக்கிய அறிக்கையின் விஷயத்தில், அவரது பெலவீனங்கள் மற்றும் குறைவுகள் சிலவற்றை நாத்திகர்கள் சுட்டிக்காட்டுவதன் மூலம், கர்த்தருடைய ஜனங்களை ஏளனம் செய்ய வாய்ப்புண்டு; எனினும், இப்பாடத்தில் தேவனால் உயர்வாய்ப் பார்க்கப்பட்ட தாவீதினுடைய குணலட்சணத்தின் அம்சத்தினையும், இன்னுமாக இவ்வம்சத்தினை உடைய யாவரையும், அவர்களிடத்தில் இக்குணம் காணப்படும் மற்றும் வெளிப்படும் அளவுக்குத்தக்கதாக, எப்போதுமே தேவன் உயர்வாய்ப் பார்ப்பார் என்பதையும் நாம் தெளிவாய்க் காணலாம். தாவீதினிடத்தில் உயர்வாய் மதிக்கப்பட்ட இப்பண்பு அவரது விசுவாசமாகும் - அதே பண்பினை அவர் ஆபிரகாமினிடத்திலும், கடந்த காலங்களில் உண்மையுள்ளவர்களாய்க் காணப்பட்ட அனைவரிடத்திலும் உயர்வாய் மதித்தார். தேவனைப் பிரியப்படுத்தினார்கள் எனும் சாட்சியினைப் பெற்றுக்கொண்ட அனைவரையும்குறித்து, விசுவாசத்தினால் அவர்கள் இப்படியாகச் செய்தார்கள் என்றும், அது அவர்களுக்கு நீதியாய் எண்ணப்பட்டது என்றும் எழுதப்பட்டுள்ளது. (கலாத்தியர் 3:6)

தேவனிடத்தில் தாவீதிற்குப் பெரும் விசுவாசம் காணப்பட்டது; சேனைகள் காணப்பட்ட இடத்திற்கு அவர் வந்தபோது, இஸ்ரயேலுக்கும், இஸ்ரயேலின் தேவனுக்கும் எதிராகப் பெலிஸ்தன் நாற்பது நாட்களாக தன்னைக்குறித்துப் பெருமையாகப் பேசிக்கொண்டிருப்பதையும், சவாலை ஏற்குமளவுக்குத் தேசத்தில் ஒருவர்கூடத் தேவனிடத்தில் போதுமான விசுவாசத்தினைப் பெற்றிருக்கவில்லை என்பதையும் தாவீது அறிந்து ஆச்சரியத்திற்குள்ளானார். தான் அச்சவாலை ஏற்பதாகவும், தான் அனுப்பிவைக்கப்படத்தக்க தாகத் தன்னை இராஜாவினிடத்திற்கு அழைத்துக்கொண்டு போவதற்கும் உடனே கேட்டுக்கொண்டார். தாவீதைக்குறித்து இராஜாவினிடத்தில் தகவல் தெரிவிக்கப்படுகையில், அவர்கள் அவரைப் பராக்கிரமசாலி என்று தெரிவித்தனர்; எனினும் சவுல் அவரைக் கண்டபோதோ, அவர் ஓர் இளைஞன் என்றும்,இ ராட்சதனுக்குச ரீரே தாற்றத்தில்பொருத்தமானவர்அ ல்லஎ ன்றும்உ ணர்ந்துகொண்டார். எனினும் முன்வந்த ஒரே வீரன் தாவீதாகவே இருந்தார்; மேலும் பெருமை பாராட்டிக்கொண்டிருக்கும் அந்நியனிடமிருந்து இஸ்ரயேலை விடுவிப்பதற்காக, கர்த்தருடைய கரங்களில் கருவியாகக் காணப்பட்டு, தான் வெற்றி அடைவார் என்பதிலும் தாவீது முழுமையாக நம்பிக்கையுள்ளவராக இருந்தார். சவுல் இறுதியில் சம்மதம் தெரிவித்தார்; இஸ்ரயேலின் வீரனுக்காய்த் தன் சொந்தச் சர்வாயுதங்களைக் கொடுத்து உதவுவதாகத் தெரிவித்தார்; ஆனால் இத்தகைய போர் ஆடைகளுக்குத் தாவீது பரிச்சயமற்றிருந்தபடியால்,

அவைகளைத் தரித்துக்கொண்டபோது, அவரால் அவற்றுடன் இயல்பாய் இருக்க முடியவில்லை. நன்மைக்கேதுவாயும், அதேசமயம் அசௌகரியம் உணராத நிலைமையிலும் அத்தகைய போராயுதங்களையும், ஆடைகளையும் எப்படிப் பயன்படுத்துவது என்பதைக் கற்றுக்கொள்வதற்குக் கொஞ்சக்காலம் எடுத்துக்கொள்ளும்; மேய்ப்பனுக்குரிய தனது வழக்கமான ஆடையில், மேய்ப்பனின் தடியுடனும், கவணுடனும், தான் கடந்துவந்த நதிக்கரையில் தான் தெரிந்தெடுத்த கூழாங்கற்களை வைத்திருந்த அடைப்பப்பையுடனும் அல்லது தோல் பையுடனும் மாத்திரம் போகத் தாவீது முடிவெடுத்தார்.



***தாவீது மற்றும் கோலியாத்***
***- Osmar Schindler***

தடியுடன் தன்னோடு யுத்தம்பண்ணத்தக்கதாக, சிவந்த மேனியுள்ள இளைஞன் தன்னிடத்திற்கு வருவதை கோலியாத் பார்த்தபோது, அவரால் அவரது கண்களையே நம்பமுடியவில்லை; அநேகமாகக் கோலியாத் கவணைக் கவனிக்கவில்லை போலும். கோலியாத் கோபமடைந்தார்; பராக்கிரமசாலியான, வல்லவனான, பெலசாலியான, நன்கு ஆயுதம் தரித்துள்ளதான கோலியாத், தடியினால் அடிக்கப்படும் நாயாக எண்ணப்பட்டுள்ளாரா என்று கோலியாத் வினவினார்; தனது தேவர்களைக்கொண்டு தாவீதைச் சபித்துவிட்டு, சீக்கிரமாய்த் தாவீதைத் தீர்த்துக்கட்டி, அவரது மாம்சத்தை ஆகாயத்துப் பறவைகளுக்குக் கொடுக்கப்போவதாகக் கூறினார்.

தாவீதின் பதிலானது, அவர் சூழ்நிலையினை முழுமையாய்ப் புரிந்திருந்தார் என்பதைத் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றது. தனது எதிராளி பட்டயத்தோடும், ஈட்டியோடும், காணப்படுகின்றார் என்பதைத் தாவீது அறிந்திருந்தார், ஆனாலும் தேவன் அருளும் பெலத்தின் வலிமையினால் அவர் போரை அணுகினார்;

அதாவது யுத்தங்களின் முடிவுகளை முடிவுசெய்கின்றவரும், தனக்கு வெற்றியினைக் கொடுக்கமுடிபவரும், தம் ஜனங்களை அவர்களது சத்துருக்கள் அனைவரிடமிருந்தும் விடுவிப்பவருமான கர்த்தரிடத்தில் உள்ள தனது விசுவாசத்தினுடைய பெலத்தால், அவர் போரை அணுகினார். பிரச்சனை இரண்டு சேனைகளுக்கிடையில் இல்லை என்றும், இரண்டு மனுஷர்களுக்கிடையில் இல்லை என்றும், இஸ்ரயேலின் தேவன் மற்றும் பெலிஸ்தரின் பொய்த் தேவர்கள் இடையிலேயே யுத்தம் உள்ளது என்றுமுள்ள உண்மையினைத் தாவீது கவனித்தார் மற்றும் இதை நன்கு புரிந்தும்கொண்டார். இந்தச் சம்பவத்திற்கு முன்புள்ள இருபது வருடக்காலங்களாக, சந்தேகத்திற்கிடமின்றி தேவனிடத்திலுள்ள விசுவாசமானது இஸ்ரயேலர்கள் மத்தியில் அதிகரித்துக்கொண்டுவந்தது. தங்களது பாவங்கள் நிமித்தமாகவும், விக்கிரக ஆராதனை நிமித்தமாகவும் தாங்கள் தண்டிக்கப்பட்டிருந்தனர் என்பதையும், இப்பொழுது கர்த்தரிடத்திற்குத் திரும்பியுள்ளபடியினால், அவரது ஜனங்களாய் அவர்கள் இருப்பதின் நிமித்தம், அவரது தயவு அவர்களோடு இப்பொழுது இருக்கின்றது என்பதையும் அவர்கள் படிப்படியாக அறிந்து கொண்டிருந்தனர்; ஆனாலும் சாதாரணமான அளவைக்காட்டிலும் மிக அதிகமாகவே தாவீது தேவனிடத்தில் நம்பிக்கைகொண்டிருந்தார். சந்தேகத்திற்கிடமின்றி இராஜ்யபாரத்தில் சவுலுக்கு அடுத்து வரும்படியாக தான் அபிஷேகிக்கப்பட்டுள்ள காரியம் - இஸ்ரயேலின் இராஜ்யபாரம் தொடர வேண்டும் என்பதும், தெய்வீகக் கட்டளைகளைச் சவுல் மீறியிருந்தபோதிலும், இன்னமும் தேவ தயவானது ஒரு தேசமாக அவர்களிடத்தில் தொடர்ந்து காணப்படும் என்பதும் தேவசித்தமாக இருக்கின்றது என்பதைத் தாவீதுக்கு உறுதிப்படுத்தினது.

இளைஞனாகிய தனது எதிராளியைப் பார்த்ததில், கோலியாத் தனது தலையைப் பின்னாகச் சாய்த்து சிரித்தபோது, தாவீதினுடைய கவண்-கல் அவனது நெற்றியில் பாய்ந்தது என்ற ஒரு பாரம்பரிய கருத்து யூதர்கள் மத்தியில் காணப்படுகின்றது. அக்காலங்களில் காணப்பட்ட தலைக் கவசமானது, இடைக்காலங்களில் பயன்படுத்தப்பட்டு வந்தவைகள் போன்று, முழுமையாக மூடிக்கொள்ளும் அம்சம் அற்றவைகளாகும்; மேலும் கழுத்துப் பகுதியும், தலையில் சில பகுதிகளும் மூடப்படாமல் இருந்தது; ஆகையால், கோலியாத் சிரிக்கையில் தனது தலையினைப் பின்னாகச் சாய்த்ததுபோன்று, ஒருவேளை சாய்க்காமல் இருந்தாலும்கூட, தாவீதினுடைய கல்லானது, அவனது நெற்றியின் முக்கிய பகுதியின்மேல் பாய்ந்திருக்க முடியும். முற்றிலும் அற்புதகரமானது என்று சொல்லும் அளவுக்குத் தாவீதினுடைய குறிபார்த்து எறியும் ஆற்றலானது, இயல்புக்கு அப்பாற்பட்ட ஒன்றாகவும் இருக்கவில்லை. தாவீதினுடைய கோத்திரத்தில், மயிரிழையும் தப்பாதபடிக்குக் கவண்கல் எறியக்கூடிய அநேகர் இருந்தார்களென்ற வேதவாக்கிய பதிவினை நாம் பெற்றிருக்கின்றோம் (நியாயாதிபதிகள் 20:16). Xenophon-அவர்கள் கவண்கல் எறியும் சில குறிப்பிட்ட பெர்சியர்களின் சாமார்த்தியத்தைக்குறித்துக் குறிப்பிடுகின்றார்; சாதாரணமான கயிறுகள் அல்லது மாலைகள் கொண்டு, தொலைவிலிருந்து கல்லெறிய முடிபவர்களாகவும், தங்களது சத்துருக்களினுடைய முகத்தில் மாத்திரமல்லாமல், முகத்தில் தாங்கள் விரும்பும் எப்பகுதியினை நோக்கியும் கல்லெறிய முடிபவர்களாகவும் காணப்படும் மிகவும் கைத்தேர்ந்த கவண்கல் எறிபவர்களைக்குறித்து Livy-அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்தச் சிறு சம்பவத்தினை நாம் நிழல் என்று சொல்லமுடியாது; ஆனாலும் இதில் நிஜமான தாவீதாகிய பிரியமானவருக்குள்ளான யாவருக்கும், அதாவது கிறிஸ்துவுக்குள்ளான யாவருக்கும் பொருந்தும் ஆவிக்குரிய காரியங்கள் பற்றின பாடம் ஒன்றையும், அடையாளம் ஒன்றையும் நம்மால்

காணமுடிகின்றது. கோலியாத், *மாபெரும் எதிராளியாகிய பிசாசுக்கும்* மற்றும் அசத்தியங்களின் விஷயத்தில் அல்லது பாவங்களின் விஷயத்தில் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களை அடிமைத்தனத்திற்குள்ளாகக் கொண்டுவருவதற்கு நாடிடும் ***அவனைச் சார்ந்தவர்கள் அனைவருக்கும்*** பொருத்தமான அடையாளமாய்க் காணப்படுகின்றார். தேவனுக்கும், சத்தியத்திற்கும் மற்றும் நீதியை விரும்புகிறவர்களுக்கும் நமது கர்த்தராம் இயேசுவாகிய நிஜமான (பிரியமானவர்) தாவீது வீரனாகுவதற்கு முன்புவரையிலும், இவ்வுலகத்தின் அதிபதியாகிய சாத்தான், தனது ஆதிக்கத்தை எதிர்க்க விரும்பின அல்லது எதிர்க்க முடிந்த நிலைமையில் யாரையும் கண்டதில்லை. தனது ஜனங்களாகிய இஸ்ரயேலரை இரட்சிக்கத்தக்கதாக தாவீது தன் ஜீவனைப் பணயம் வைத்ததுபோன்று, நமது கர்த்தர் இயேசு நிஜமான இஸ்ரயேலரின் இரட்சிப்பிற்காய்த் தமது ஜீவனைப் பணயம் வைத்தது மாத்திரமல்லாமல், அதைப் பலியும் செலுத்தினார்; அபிஷேகிக்கப்பட்ட பிற்பாடு தாவீது சிங்கத்தை எதிர்கொண்டதுபோன்று, இயேசுவும் யோர்தானில் பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்ட பிற்பாடு, ஆவியினால் வனாந்தரத்திற்குள்ளாக வழிநடத்தப்பட்டு, எதிராளியானவனுடன் மாபெரும் போராட்டத்தினை எதிர்கொண்டவரானார். எழுதப்பட்டிருக்கிறது எனும் வார்த்தைகளைப் பயன்படுத்தி, சாத்தானுடைய ஒவ்வொரு யோசனைகளை வீழ்த்தும் விதமாய்ப் பதிலளித்து, தேவவசனத்தைக்கொண்டு கர்த்தர் சாத்தானை ஜெயங்கொண்டார். மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், மரண அடிமைத்தனத்தை அழிக்கும்படிக்கும், இறுதியில் தேவனுடைய ஜனங்கள் யாவரையும் விடுவிக்கும்படிக்கும், கிறிஸ்து வெளிப்பட்டார் என்று அப்போஸ்தலன் விவரிக்கின்றார். (எபிரெயர் 2:14)

தாவீதினுடைய வெற்றியானது, சில விதங்களில் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் ஈடுபட வேண்டியயு த்தங்களைச்ச ித்தரிக்கின்றதாய்இ ருக்கின்றது.ே காலியாத்ம ற்றும்இ வரைஆ தரிக்கும் சேனைகள் - நம்மையும், கர்த்தருடைய ஜனங்கள் அனைவரையும் எதிர்த்து அறைகூவலிட்டுக் கொண்டிருக்கும் தேவனுக்கு எதிரான சத்துருக்களை, சத்தியம் மற்றும் நீதிக்கு எதிரான பல்வேறு சத்துருக்களை நம் மனங்களுக்கு நன்கு படம்பிடித்துக் காட்டுகின்றனர்.

(1) அவநம்பிக்கை எனும் மாபெரும் இராட்சதனால், இன்று சந்தேகம் மற்றும் நாத்திகம் ஆகிய சேனைகளானது வழிநடத்தப்படுகின்றது; இந்த இராட்சதனின் பருமன், போராயுதங்கள், பட்டயம் மற்றும் ஈட்டியானது, கிறிஸ்துவின் சரீரமாகிய தாவீது வகுப்பாரைத் தவிர்த்து உள்ள, பெயரளவிலான கிறிஸ்தவ மண்டலத்தின் சேனையாகக் காணப்படுகின்றது. இந்த இராட்சதன் பரிணாமக் கொள்கை ஆவான் மற்றும் இவனது ஆயுததாரி வேதாகமத்தின் உயர் விமர்சகர்கள் ஆவார்கள். இஸ்ரயேலின் தேவனுடைய வாக்குத்தத்தங்களும், இவர்களைப்பற்றின பதிவுகளும் இகழப்படுகின்றது; மேலும் இவ்வாக்குத் தத்தங்களுக்கு ஆதரவாய் நிற்கும் தாவீது வகுப்பார் அவமதிப்போடு நடத்தப்படுகின்றனர்; மேலும், சத்தியம் எனும்ந தியினின்றுஎ டுக்கப்பட்டுள்ளஇ வர்களதுகூ ழாங்கற்களானது,அ சட்டைபண்ணப்படுகின்றது. ஆனால் தவறான பெயரில் அழைக்கப்படுகின்ற *அறிவியலானது*, இன்று தற்பெருமையடித்துக்கொண்டு இருக்கின்றபோதிலும், அதனை எதிர்க்க வேண்டும் என்ற எண்ணத்தினை எவருமே பெற்றிராத அளவுக்கு, அது மாபெரும் தாக்கத்தினை அதனைச் சுற்றி ஏற்படுத்தியிருக்கின்றபோதிலும், அதற்கும் இறுதி முடிவு

உண்டு. அது கர்த்தருடைய அபிஷேகிக்கப்பட்டவராகிய - தாவீதிற்கு முன்பு, பிரியமானவருக்கு முன்பு வீழ்ந்துபோம்; இறுதியில் ***அறிவியல், அதன் உண்மைகள் எனும் பட்டயத்தின் மூலம்***, புதிய யுகத்தினுடைய விடியலில், அதன் அழிவினை நிறைவேற்றிடும்; அதேவேளையில் அசத்தியத்தின் சேனைகள் அனைத்தும் ஓடிப்போம்; மேலும் கிறிஸ்துவினுடைய தெரிந்தெடுக்கப்பட்ட சபையினைத் தவிர்த்துள்ள தேவனுடைய ஜனங்களிலுள்ள அநேகர், இந்த இரட்சணியத்தினால் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

(2) கோலியாத், உலகப்பற்று எனும் சேனையினால் ஆதரிக்கப்படும் பெருமையினையும் அடையாளப்படுத்தலாம். புதுச்சிருஷ்டிகளுக்குரிய கடுமையான சோதனைகளில் ஒன்று - பெருமையினுடைய தலைமையின் கீழுள்ள உலகப்பற்றினுடைய ஆவியினை மேற்கொள்வதாகும். உலகப்பிரகாரமான பெருமையானது, தேவனிடத்திலுள்ள விசுவாசத்திற்கும், அவருக்குக் கீழ்ப்படியும் காரியத்திற்கும் எதிர்த்து அறைகூவலிடுகின்றது; மேலும் தைரியமுள்ளவர்களாகவும், கர்த்தரிடத்தில் முழு நம்பிக்கை உள்ளவர்களாகவும் காணப்படுபவர்களால் மாத்திரமே, இந்த இராட்சதனை ஜெயம் கொள்ள முடியும். அதுவும் வெற்றி முழுமையானதாகக் காணப்பட வேண்டும் என்பதும், நம்மை அழித்துப்போடத் தக்கதாக பெருமையானது மறுபடியும் எழும்ப முடியாதளவுக்கு, அது முழுமையாக அசட்டைபண்ணப்பட்டு, கொல்லப்பட வேண்டும் என்பதும்கூட அவசியமானதாகக் காணப்படுகின்றது. இது ஒரு தனிப்பட்ட யுத்தமாகும்; மேலும் இந்த இராட்சதனுக்கு எதிரான ஒரே சரியான போர்க்கருவி நதியிலிருந்து எடுக்கப்பட்ட கூழாங்கல்லேயாகும்; அது தேவனுடைய பார்வையில் எது பிரியமானதாகவும், அங்கீகரிக்கத்தக்கதாகவும் காணப்படுகின்றது என்பதை நமக்குக் காண்பித்துத் தருகின்றதும், இன்னுமாகத் தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் மற்றும் தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்று நமக்கு உறுதியளிக்கின்றதுமான கர்த்தருடைய செய்தியாய் இருக்கின்றது. கவிஞன் விவரித்துள்ளது போன்று:

எங்குத் தற்பெருமை முற்றுபெறுகின்றதோ,<br>அங்கேதானே பெருந்தன்மை உதயமாகின்றது.

(3) தேவனுடைய ஜனங்களுக்கு அறைகூவலிடும் இன்னொரு இராட்சதன், பயம் மற்றும் அவநம்பிக்கையாகும். கடந்த கால அனுபவங்கள் மூலமாகக் கர்த்தரை அறிந்துகொள்வதற்குக் கற்றுக்கொண்டவர்களும், இன்னுமாக அவருடைய தடயங்களைப் பார்க்க முடியாமல் இருக்கையிலும், அவரை விசுவாசிப்பதற்குக் கற்றுக்கொண்டவர்களுமானவர்கள் தவிர்த்து, மற்றவர்கள் மீது ***பயத்தினுடைய தாக்கமானது*** பலமாயும், பயங்கரமாயும், திணிக்கப்பட்ட சுமையாகவும் காணப்படுகின்றது. பயம் மற்றும் அவநம்பிக்கை எனும் இராட்சதன், எழுதப்பட்டிருக்கிறது என்ற நதியின் கூழாங்கல்லினால் எதிர்கொள்ளப்பட வேண்டும். எதிராளியானவனைக் கொன்றுபோடுவதற்கும், அவன் ஆளுகையினின்று நம்மை விடுதலைபண்ணுவதற்கும் ஏதுவான அத்தகையதொரு ஆற்றலுடன், ***வாக்குத்தத்தத்தின் வார்த்தைகளை*** விசுவாசம் எனும் கவணானது எறிய வேண்டும்.

(4) கர்த்தருடைய ஜனங்களைத் தாக்கிடும் மற்றுமொரு இராட்சதன், அதுவும் தற்காலத்தில் தாவீது வகுப்பாராகிய, கிறிஸ்துவினுடைய சரீரத்தினால் மாத்திரமே ஜெயங்கொள்ள முடிகிறதுமான இராட்சதன்,

***சபை பிரிவுணர்ச்சியின் செல்வாக்காகிய இராட்சதன்*** ஆவான்: இந்த மகா இராட்சதன் எவ்வளவு பலமுள்ளவனாய் இருக்கின்றான், எவ்வளவு பிரம்மாண்டமாய் இருக்கின்றான், எந்தளவுக்கு நன்கு ஆயுதம் தரித்தவனாய் இருக்கின்றான், எவ்வளவு செல்வாக்கு உடையவனாய் இருக்கின்றான்; கர்த்தருடைய உண்மையான ஜனங்கள், தங்கள் வாழ்நாட்கள் முழுவதும் அடிமைத்தனத்திற்குள்ளாக அடிமைப்பட்டுக் காணப்படத்தக்கதாகவும், கிறிஸ்து உண்டாக்கிய சுயாதீன நிலைமையினை அடைய தவறிப் போகத்தக்கதாகவும், அவர்களை மிரட்டும் விதத்தில் இந்த இராட்சதனின் வல்லமைகளானது பெருமளவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது! அகந்தையான சத்தத்தோடும், முழுமையாய் ஆயுதம் தரித்தவனாகவும், உலக வல்லமை மற்றும் செல்வாக்குகள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைச் செய்வதற்குரிய வாய்ப்புகள் ஆகியவைகளைப் பெற்றவனாகவும், பெரிய அளவிலும் பலமான விதத்திலும், அமைப்பினைப் பெற்றவனாகவும் காணப்படும் இந்த இராட்சதனை எதிர்கொள்வதற்கும், நன்றாய் எதிர்ப்பதற்கும் மற்றும் இவனை ஜெயங்கொள்வதற்கும், *மகா கிருபை* வேண்டியதாயிருக்கும்; அதாவது சிறுமந்தையில், ஜெயங்கொள்பவர்களில், கிறிஸ்துவின் சரீரத்தில் - தாவீது வகுப்பாரில், பிரியமானவரில் மாத்திரமே காணப்படும் ***அத்தகையதொரு கிருபை*** வேண்டியதாய் இருக்கும். இப்படியாக தேவவசனத்தினால் மாத்திரம் ஆயுதம் தரிப்பிக்கப்பட்டு, அவரது கோலின்மீதும், தடியின்மீதும் விசுவாசம் வைத்துக் காணப்பட்டாலே, நாம் தைரியமுள்ளவர்களாகிட முடியும்; இன்னுமாகத் தாவீது பெலிஸ்தனை நோக்கி: நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரயேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன் என்று பதிலளித்ததுபோலவே, நாமும் சபை பிரிவுணர்ச்சியினுடைய மிரட்டுதலுக்குப் பதிலளிக்க முடிபவர்களாய் இருப்போம். (1 சாமுயேல் 17:45)

தாவீதினுடைய சாந்தம் மற்றும் தாழ்மையினை நாம் அனைவரும் நினைவில்கொள்வோமாக; இவரின் நடத்தையில் தற்பெருமையடித்துக்கொள்ளுதல் எதுவுமில்லை என்பதைக் கவனித்தவர்களாக, இதை நாமும் பின்பற்றிடுவோமாக. இவரைப்போன்று நமது நம்பிக்கையும் நம்மிடத்தில் இல்லாமல், கர்த்தரிடத்தில் காணப்படுவதாக.

கோலியாத்தோடே யுத்தம்பண்ணி, அந்தக் கித்தியனை விழப்பண்ணினாரே;
இப்படிப் பயங்கரமானதொரு தாக்குதலைப்பண்ண, தாவீதிற்கு யார் கற்றுக்கொடுத்தார்கள்?
அவ்விளைஞன் பட்டயத்தையும் எடுக்கவில்லை, ஈட்டியையும் எடுக்கவில்லை,
நதியண்டையிலிருந்தே கூழாங்கல் ஒன்றையே எடுத்துக்கொண்டாரே.
இஸ்ரயேலின் தேவனும், இராஜாவுமானவரே இவரை யுத்தத்திற்கு அனுப்பிவைத்தாரே;
தேவனே இவர் கவண் எறிய பெலப்படுத்தினாரே;
தேவனே, சரியாய்க் குறிபார்த்திடும் திறமையைக் கொடுத்தாரே.
வலுக்குறைந்த பரிசுத்தவான்களே, உங்கள் பலமும் இப்படி இருக்குமே,
ஏனெனில் இளைஞனான தாவீதின் தேவனே, உங்கள் தேவனாயும் இருக்கின்றாரே.

*- Cowper*

R4216

# வெற்றி, பலவானுக்குரியதல்ல

## 1 சாமுயேல் 17:38-49

நான் கர்த்தரை நம்பியிருக்கிறேன். - சங்கீதம் 11:1

தாவீது அபிஷேகிக்கப்பட்ட கொஞ்சம் காலத்திற்குள்ளாக, அவர் மிகவும் குறிப்பிடத்தக்க யுத்தம் ஒன்றின் நாயகன் ஆனார். பாலஸ்தீன கடலோரங்களில் குடியிருந்த பெலிஸ்தர்கள், ஆரம்ப காலங்கள் துவங்கி இஸ்ரயேலரின் சத்துருக்களாகக் காணப்பட்டனர்; நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறபடி, சவுல் முடிசூட்டப்பட்ட காலங்களிலேயே, பெலிஸ்தர்கள் இஸ்ரயேலர்கள்மீது ஆதிக்கம்பண்ணி வந்தார்கள். இவர்கள்மீது சவுல் அடைந்த வெற்றி முழுமையானதாக இருக்கவில்லை; இவர்கள் தொடர்ந்து காத் பட்டணத்திலும், இஸ்ரயேலுக்குக் கொடுக்கப்பட்ட தேசத்திலுள்ள ஒரு சில பகுதிகளிலும் காணப்பட்டு வந்தனர். காத்தில் கோலியாத் வாழ்ந்து வந்தார்; ஏனாக்கின் அல்லது இராட்சதரின் புத்திரர்களைப் பார்த்த மாத்திரத்திலேயே, வாக்களிக்கப்பட்ட தேசத்தை வேவுபார்க்க சென்ற இஸ்ரயேலின் ஒற்றர்கள் பயமுற்றார்கள். பிறப்பின் காரணமாய் இல்லாமல், குடியுரிமையின் காரணமாய்க் கோலியாத் பெலிஸ்தனாய்க் காணப்பட்டார்; அதாவது பல்வேறு தேசத்தார் குடியுரிமை பெற்று, அமெரிக்கர்கள் ஆவது போன்றதாகும். கோலியாத் புருஷனுக்குரிய வயதில் இருந்தார் மற்றும் தனது பருமன் மற்றும் பலத்தின் நிமித்தம் பெருமைகொண்டவராகக் காணப்பட்டார். பெலிஸ்தர்கள்கூட உற்சாகமாய்க் காணப்பட்டனர்; இத்தகைய ஒரு வீரன் மற்றும் தலைவன் இருப்பதால், தங்களால் இஸ்ரயேலர்கள்மீது இன்னொருமுறை வெற்றியினை அடையமுடியும் என்று எண்ணினார்கள். இதன்விளைவாக இவர்கள் சேனையினை ஒழுங்குப்படுத்திக் கொண்டு, எருசலேமை நோக்கி வடமேற்குத் திசைவழியாய்ப் படையெடுத்துப் போனார்கள். இதை அறிந்த இராஜாவாகிய சவுல், இவர்களை எதிர்க்கும் வண்ணமாய்ச் சேனைக்கு ஆள் சேர்த்தார். ஏலா பள்ளத்தாக்கினுடைய எதிரெதிர் சரிவுகளில், இரண்டு சேனைகளும் எதிரெதிராகப் பாளயமிறங்கினார்கள். இரண்டு சேனைகளுமே சரிக்குச் சரியாக நின்றனர்; இருவருமே தாக்குதல் பண்ணாமல் நின்றனர். சரித்திரத்தில் அறியப்பட்டிருந்த ஒரு குறிப்பிட்ட முறையினைப் பெலிஸ்தர்கள் அணுகினார்கள்; அதாவது யுத்தத்தைத் தவிர்த்துக்கொள்ளும் விதத்தையும், இரண்டு சேனைகளுக்கிடையே உள்ள பிரச்சனைகளானது, தனிநபர் யுத்தத்தின் மூலம் தீர்மானிக்கப்படும் விதத்தையும் அணுகினார்கள். இவர்கள் கோலியாத்தைத் தங்களது வீரனாக அனுப்பிவைத்து, இவரை இஸ்ரயேலர்கள் சண்டையிட சவால்விட்டனர். இதுபோலவே கி. மு. 667-ஆம் வருடத்திலும், உரோமர்கள் மற்றும் அல்பேனியர்களும், மூன்று உரோமானிய வீரர்களையும், மூன்று அல்பேனிய வீரர்களையும் மரண போர் புரியச்செய்து, யுத்தத்தினை முடிவுசெய்தார்கள். இவர்களில், உரோமானிய வீரர்கள் மூன்றுபேரில் ஒருவர் உயிரோடு காணப்பட்டதால், வெற்றி உரோமானியர்களுக்கு வந்தது. இதுபோலவே பிற்காலங்களில், ஸ்காட்லாந்தின் இரண்டு யுத்த சேனைகளுக்கு இடையே, திரு. Henry d' Bonham-அவர்கள், திரு Robert Bruce-அவர்களுடன் யுத்தம்பண்ணினார்.

கோலியாத் உண்மையிலேயே ஓர் இராட்சதனாய் இருந்தார். இவரது உயரம் ஆறு முழமாகும்; ஒரு ஜாண் என்பது ஒருவேளை பதினாறு அங்குல முழத்தில் கணக்கிடப்பட்டால், எட்டு அடி எட்டு அங்குலமாக இருக்கும் அல்லது பதினெட்டு-அங்குல முழத்தில் கணக்கிடப்பட்டால், ஒன்பது அடி ஒன்பது அங்குலமாக இருக்கும். முழம் என்பது முழங்கையிலிருந்து, சிறுவிரலின் நுனிவரைக்கும் உள்ள மனித கையின் நீளமாகும்.

ஒரு ஜாண் என்பது அரை முழமாகும். Encyclopedia Britanica, பல்வேறு இராட்சதர்களைக்குறித்துக் குறிப்பிடுகின்றது: ஒருவர் ஸ்காட்லாந்தைச் சேர்ந்தவர் - இவரது உயரம் எட்டு அடி, மூன்று அங்குலம் ஆகும்; இன்னொருவர் அரேபிய தேசத்தைச் சேர்ந்தவர் - இவரது உயரம் ஒன்பது அடி ஆகும்; அயர்லாந்தைச் சேர்ந்த Charles Birne-என்பவர் எட்டு அடி நான்கு அங்குலமாவார்; Patrick Coffer-என்பவர் எட்டு அடி 7¾ அங்குலமாவார். ரஷ்ய நாட்டு இராட்சதன் ஒன்பது அடி எட்டு அங்குலமாவார். ஆகையால் கோலியாத்தின் சம்பவத்தில் இப்படி ஓர் இராட்சதன் காணப்பட்டதற்கான சாத்தியம் இல்லை என்று சொல்வதற்கு ஏதுமில்லை. கோலியாத் நன்கு கவசம் தரித்திருந்தார். உண்மையில் அவர் எளிதில் அழிக்கப்பட முடியாதவராய்க் காணப்பட்டார்.

## இஸ்ரயேலுக்கும், இஸ்ரயேலின் தேவனுக்கும் சவால்விடப்பட்டது

அக்காலங்களில் ஒவ்வொரு தேசமும் ஒரு மத அமைப்பை உடையதாய் இருந்தது. அவர்களது செழுமையும், சத்துவமும் அவரவர்களின் தெய்வத்தினால் அல்லது தெய்வங்களினால் உண்டானது என்று எண்ணப்பட்டுவந்தது. ஒளிரும் மற்றும் மினுங்கும் தனது கவசத்தினை அணிந்திருந்த கோலியாத், நாற்பது நாட்களாக உரத்தக் குரலில் இஸ்ரயேலின் புருஷர்களுக்கு அறைகூவல் விட்டுக்கொண்டிருந்தார்; இன்னுமாக அவர்கள் வணங்கும் தேவனுக்கு அறைகூவலிட்டுக்கொண்டிருந்து, இப்படியாக அவர்களை அவமானப்படுத்தவும், சமமற்ற யுத்த போட்டிக்கு வரத்தக்கதாகத் தூண்டவும் முயன்றுகொண்டிருந்தார்; இந்தச் சமமற்ற யுத்த போட்டியில் தான்தான் வெற்றிப்பெறப் போவதாக கோலியாத் நிச்சயமுடையவராகவும் காணப்பட்டார். அங்கு நிலவின நிபந்தனைகளின்படி, அதாவது பட்டயம் மற்றும் ஈட்டியினைக்கொண்டு அந்த இராட்சதனுடன் யுத்தம்பண்ண, இஸ்ரயேலரில் எவரும் துணிவுடன் இருக்கவில்லை என்பதில் நாம் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை; யாருமே அவனுக்கு நிகராகக் காணப்படவில்லை.

பெத்லெகேமிலுள்ள ஈசாய், சேனைகளினுடைய பாளயத்திநின்று சுமார் இருபது மைல் தொலைவில் காணப்பட்டார்; மேலும் நாற்பதாவது நாளன்று, இவர் சவுலின் சேனையில் காணப்பட்ட தனது மூன்று மூத்த குமாரர்களிடத்திற்குச் சுகசெய்தியினையும், தின்பண்டங்களையும் கொடுத்தனுப்புவதற்கும் மற்றும் அங்கிருந்து சூழ்நிலையினைக்குறித்த தகவலைக் கொண்டுவருவதற்கும் வேண்டி தாவீதை அனுப்பிவைத்தார். சிவந்தமேனியுள்ள இளைஞனாகவும், மேய்ப்பனாகவும், யுத்தம்குறித்துக் குறைந்த அறிவுள்ளவனாகவும் காணப்பட்ட தாவீது அங்கு வந்தபோது, அறைகூவல் விடுபவனையும், இப்படியாக அந்நிய மனுஷனால் இஸ்ரயேலின் தேவனுக்குச் சவால் விடப்பட்டதையும் பார்த்து ஆச்சரியமடைந்தார். தனது ஆடுகளைக் காத்துக்கொள்பவராகவும், அவைகளைக் காட்டுமிருகங்களிடமிருந்து காத்துக்கொள்பவராகவும் உள்ள தனது அனுபவம் மற்றும் சுபாவம் காரணமாக, தாவீது தைரியமுள்ளவராகவும், பயமற்றவராகவும் காணப்பட்டார். இதுதவிர தேவனுக்குப் பயபக்தி கொண்டிருக்கும் விஷயத்திலும், அவரில் விசுவாசம் கொண்டிருக்கும் விஷயத்திலும், சந்தேகத்திற்கிடமின்றி அவர் நன்கு வளர்க்கப்பட்டவராகவும் காணப்பட்டார். கோலியாத் இஸ்ரயேலின் தேவனுக்கு விடுத்த அறைகூவலே, தாவீதை வெகுவாய்த் தாக்கத்திற்கு உள்ளாக்கியதாகத் தெரிகின்றது. ஏன் இஸ்ரயேலர்களில் ஒருவர்கூடக் கர்த்தருடைய நாமத்தில் போருக்குச் செல்லவில்லை என்று கேள்வி கேட்டார்; இன்னுமாகப் போருக்குப் போவதற்குரிய தனது விருப்பத்தினையும் தெரியப்படுத்தினார். இது விஷயமாக அவர் யாரிடமெல்லாம் பேசினாரோ, அவர்களில் அநேகர் அவரது விசுவாசம் மற்றும் உத்வேகத்தில் கவரப்பட்டனர். ஆனால் அவரது சொந்தச் சகோதரர்களோ அவரை மதியாமல், இகழ்ந்தனர். எனினும் சங்கதி வாய்வழியாகப் பரவிப் பரவி, செய்தி இராஜாவாகிய சவுலின் செவிகளுக்கு எட்டினது மற்றும் அவர் தாவீதை அழைத்தனுப்பினார்.

இராஜா சில வருடங்களாகத் தேவனுடைய தயவிற்குப் புறம்பே காணப்பட்டாலும், அவர் தெய்வீக வல்லமையின்மீது நம்பிக்கை உடையவராகவே காணப்பட்டார்; ஏனெனில் அவ்வல்லமையானது ஏற்கெனவே அவரது சொந்த அனுபவங்களிலும் வெளிப்பட்டிருக்கின்றது. தனது ஒரே நம்பிக்கையாகக் காணப்படும் தாவீதினுடைய இந்தக் கூற்று, கர்த்தரிடமிருந்து வந்ததாக ஒருவேளை இருக்குமோ என்று சவுல் நிச்சயமாகவே விசாரித்திருந்திருப்பார். சிங்கத்தைக் கொன்றுபோட்டது தொடர்பாகவும், இன்னொரு தருணத்தில் தனது மந்தைகளைக் காப்பாற்றுவதில் கரடி ஒன்றைக் கொன்றுபோட்டது தொடர்பாகவும் உள்ள தனது வீரத்தைக்குறித்துத் தாவீது சுருக்கமாய் விவரித்தார். அந்த இளைஞனையும், அவரது தைரியத்தையும், அவரது விசுவாசத்தையும் கண்டு இராஜா வியந்தார்; மேலும் சமமற்ற இத்தகைய சரீர பெலத்திற்கு எதிராய்த் தேவன் தமது ஜனங்களுக்கு வெற்றியை நல்குவார் என்று சந்தேகத்திற்கிடமின்றி நம்பிக்கைகொண்டவராக இராஜா, இராட்சதனுக்கு எதிரான இந்த யுத்தத்திற்குத் தாவீது செல்ல ஒப்புதல் வழங்கினார். இஸ்ரயேலர்கள் அனைவரிலுமே சிறந்த போர்க்கவசத்தினை, இராஜாவாகிய சவுல் உடையவராக இருந்தார்; அதைத் தாவீது பயன்படுத்தும்படிக்குச் சவுல் கேட்டுக்கொண்டார். ஆனால் அதை அணிந்தபோதோ, தாவீது இறுக்கமாக உணர்ந்தார். அதை அணியாமல் இருப்பதைக்காட்டிலும், அதை அணிந்திருக்கும்போதே அதிக உறுதியின்மையை உணர்வதாகத் தெரிவித்தார். அவர் தனது விதத்தில், மேய்ப்பனுடைய தடியினையும், கவணையும், மேய்ப்பனுக்குரிய பையையும் மட்டும் தரித்துக்கொண்டு, கோலியாத்தைச் சந்திக்கப் புறப்பட்டுப் போனார். தனது கவணைக்கொண்டு பயன்படுத்துவதற்கென்று அவர் ஐந்து கூழாங்கற்களைத் தெரிந்துகொண்டவராக, இராட்சதனை அணுகினார்; வழக்கம்போல் இஸ்ரயேலர்களை மேற்கொள்ள இராட்சதன், முன்னே கடந்துவந்தான்.

போர் குறித்த பதிவு சொல்லப்பட்டுள்ளது. போர்க்கவசம் அணிந்திராத இளைஞனோடு, தான் போர்ப்புரியும்படிக்குக் கேட்டுக்கொள்ளப்பட்டதின் நிமித்தம் பெலிஸ்தன் கடுங்கோபம் அடைந்தான்; மேலும், தனது தேவர்களுடைய நாமத்தினால் தாவீதைச் சபித்தவனாக: என்னிடத்தில் வா; நான் உன் மாம்சத்தை ஆகாயத்துப் பறவைகளுக்கும் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன் என்றான் (1 சாமுயேல் 17:44). தாவீதினுடைய பதிலானது சிறப்பாய்க் காணப்பட்டது - விசுவாசம் நிறைந்ததாய்க் காணப்பட்டது; துவக்கம் முதல் முடிவுவரை இவரது முழு வரலாற்றிலும், தேவனிடத்தில் அத்தகையதொரு முழு விசுவாசம் காணப்பட்டது. இதன் காரணமாகவே, இவரைக்குறித்துக் கர்த்தர் கூறுகையில், தமது இருதயத்திற்கு ஏற்ற மனுஷன் என்று தெரிவிக்கின்றார். தாவீது கோலியாத்தை நோக்கி: நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரயேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன். இன்றையதினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார்; நான் உன்னைக் கொன்று, உன் தலையை உன்னை விட்டு வாங்கி, பெலிஸ்தருடைய பாளயத்தின் பிணங்களை இன்றையதினம் ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன்; அதனால் இஸ்ரயேலில் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லாரும் அறிந்துகொள்ளுவார்கள். கர்த்தர் பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் இரட்சிக்கிறவர் அல்ல என்று இந்த ஜனக்கூட்டமெல்லாம் அறிந்துகொள்ளும்; யுத்தம் கர்த்தருடையது; அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றான் (1 சாமுயேல் 17:45-47). இப்படியாகப் பெலிஸ்தர்களும் சரி, இஸ்ரயேலர்களும் சரி, யுத்தமானது கர்த்தருக்கும், அவருடைய ஜனங்களுக்கும் மற்றும் அவர்களது சத்துருக்களுக்கும் இடையில் நடைபெறுவதாகப் பார்த்தார்கள். தாவீது முன்னேறி நடந்து, தனது முதலாம் கல்லினை எறிந்தார்; அது இராட்சதனின் நெற்றியில் பட்டு, அவன் உணர்விழந்து,

கீழே விழுந்தான். கோலியாத்தின் பட்டயத்தைக்கொண்டே அவனுடைய தலையைத் தாவீது வெட்டிப்போட்டு, யுத்தத்தினை நேரடியாக முடிவுக்குக் கொண்டுவந்தார்; இஸ்ரயேலர்களோ தங்களது விசுவாசத்தினை உயிர்ப்பிக்கப் பெற்றவர்களாக, தைரியம் இழந்துபோன பெலிஸ்தர்களைத் தாக்கினார்கள்.

அந்நாட்களில், வழக்கத்தில் காணப்பட்ட நகரும் முன்பாகம் உள்ள தலைச்சீராவைக் கோலியாத் அணிந்திருந்ததாகவும், தனக்கு எதிராக வந்த இளைஞனைப் பார்த்து கோலியாத் சிரித்ததாகவும், இப்படிச் சிரிக்கையில் தனது தலையினை இவர் பின்னாகச் சாய்த்தபோது, இன்னுமாக இவரது தலைச்சீராவின் மூடி திறக்கவே, இவரது நெற்றி வெளியே தெரிந்ததாகவும் கருதப்படுகின்றது. தனது தோள்களுக்கிடையே ஆயுத உறையில் சுமந்துவரப்பட்ட தனது ஈட்டியினை எடுக்கத்தக்கதாகக் கோலியாத் முயன்றபோது, அத்தருணத்தில் இவரது தலைச்சீரா திறக்கவே, தாவீதின் கல் நெற்றியில் பட்டதென வேறு சிலர் கருதுகின்றனர். எப்படியாகச் சம்பவித்திருந்தாலும், தாவீது காரியத்தைக் குறித்த தனது புரிந்துகொள்ளுதலில் சரியாகவே காணப்பட்டிருந்திருக்கின்றார் என்பதிலும், காரியம் முழுவதையுமே, தேவன் மேற்பார்வையிட்டு நடத்தி, வெற்றியினைக் கொண்டுவந்திருக்கின்றார் என்பதிலும் நமக்கு ஐயமில்லை. அதுவுமல்லாமல் அக்காலங்களில் கவண்கல் எறியும் திறமை என்பது அரிதானக் காரியமாகவும் காணப்படவில்லை; ஏனெனில் வேறொரு தருணத்தில் பென்யமீன் கோத்திரத்திலிருந்து எழுநூறு புருஷர்கள், ஒரு மயிரிழையும் தப்பாதபடிக்குக் கவண்கல் எறிபவர்களாகக் காணப்பட்டார்கள் என்று நாம் வாசிக்கின்றோம். (நியாயாதிபதிகள் 20:16)

## கிறிஸ்தவனின் எதிராளியும், யுத்தமும்

முற்காலத்தில் நிகழ்ந்த இச்சம்பவத்திலிருந்து, தற்காலத்திலுள்ள புதுச்சிருஷ்டிகளினால் என்ன படிப்பினையை பெற்றுக்கொள்ள முடியும்? பிரியமானவன் என்ற பெயர் அர்த்தம் கொண்டுள்ள தாவீது அநேகம் விதங்களில் தலை மற்றும் சரீரமாகிய கிறிஸ்துவுக்கு நிழலாய்க் காணப்படுகின்றார். கோலியாத்துடன் இவருக்கு ஏற்பட்ட அனுபவங்களானது, வனாந்தரத்தில் எதிராளியானவனுடன் நமது கர்த்தருக்கு ஏற்பட்ட முதலாம் போராட்டமாகிய நாற்பது நாள் சோதனையினுடைய யுத்தத்தினை சித்தரித்துக்காட்டுகின்றது. அத்தருணத்தில் சாத்தான்மீது நமது கர்த்தர் அடைந்த வெற்றியும், இன்னுமாகப் பிதாவுக்கும், தம்மிடம் ஒப்புக்கொடுக்கப்பட்ட வேலைக்கும் அவர் காண்பித்த நேர்மையும், அவர் தம்மையே பலிசெலுத்தினதுமான காரியங்களும் - தேவனுடனும், அவரது ஏற்பாடுகளுடனும் இசைவாயிருக்க விரும்பிடும் மனுக்குலத்தின் உலகத்தார் யாவருக்குமான திட்டத்தின் வெற்றியினைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. பயப்படாதிருங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன் என்று அவர் நம்மிடம் சொல்லியிருக்கின்றார் அல்லவா? இவ்வுலகத்தின் அதிபதியாகிய சாத்தானை ஜெயங்கொள்ளும் அதேவேளையில், அவர் தீமையின் சேனைகள் மற்றும் பாவத்தின் ஊழியக்காரர்கள் அனைவர்மீதும் ஜெயங்கொள்கின்றவராய்இ ருக்கின்றார்.அ வர்ே தவனுக்கும்,த மதுஉ டன்படிக்கையின்உ றவிற்கும், பொறுப்பிற்கும் உண்மையுள்ளவராக நின்று, எழுதியிருக்கிறது எனும் சத்தியமாகிய கூழாங்கல்லினை எதிராளியானவன்மீது வீசினார். தாவீதிற்கு முன்பு கோலியாத் விழுந்ததுபோன்று, நமது கர்த்தரும் சாத்தானை மறைந்துபோகப் பண்ணினார்; இவரைக்குறித்துக் கர்த்தர்: சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன் என்று கூறுகின்றார்; தமது வெற்றியின் பலனாக, பரலோகத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்றும் தெரிவிக்கின்றார். தம்முடைய சீஷர்களும் தமது பலத்தினால், அதே மாதிரியான யுத்தம்பண்ணவும்,

ஜெயங்கொண்டவர்களாகக் கடந்துவரவும், பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிக்கப்போகும் தம்முடைய இராஜ்யத்தில் தம்மோடுகூட இறுதில் பங்கடையவும் வேண்டி, தமது சீஷர்களைத் தம்முடைய நாமத்தில் அனுப்பி வைத்தார்.

மகிமையின் சபையில், அங்கம் வகிக்கப்போகும் கர்த்தருடைய உண்மையுள்ள சீஷர்கள்குறித்து, அவர் முன்வைத்த அடிச்சுவட்டில் அவர்கள் நடக்க வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது. இது அவர்போலவே அவர்களும் பாவத்திற்கு எதிராக மற்றும் அதன் மாபெரும் பிரதிநிதியும், தலைவனுமான சாத்தானுக்கும், மனுக்குலத்தை வஞ்சித்துள்ள அவன் சார்பிலுள்ள சேனைகள் அனைத்துக்கும் எதிராக யுத்தம் புரிய வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இதைத்தானே அப்போஸ்தலன், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு என்று கூறுகையில் தெரியப்படுத்துகின்றார் (எபேசியர் 6:12). நம்முடைய சத்துரு ஓர் இராட்சதன் ஆவான்; அவன் முன்னிலையில் நாம் உண்மையில் வலுவற்றவர்களே. சாத்தானை அப்போஸ்தலன் தந்திரமுள்ள சத்துரு என்று குறிப்பிடுகின்றார்; சோதனையிலே எங்களை விட்டுவிடாமல், பொல்லாங்கனிடமிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும் என்று பிதாவினிடத்தில் ஜெபம்பண்ணும்படிக்கு நமது கர்த்தர் நமக்குக் கற்றுக்கொடுத்திருக்கின்றார். ஆகையால் தாவீதிற்குத் தேவைப்பட்டதுபோலவே, சமமற்ற நம்முடைய யுத்தத்திலும் நமக்குத் தெய்வீக உதவி அவசியமாய் இருக்கின்றது.

## பலத்தினாலுமல்ல, பராக்கிரமத்தினாலுமல்ல,<br>என்னுடைய ஆவியினாலேயே ஆகும்

கிறிஸ்துவினுடைய சரீரத்தில், சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள அங்கத்தினர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அனைவரும் முன்னமே அபிஷேகிக்கப்பட்டு, தெய்வீக வல்லமை மற்றும் வழிகாட்டுதலின் கீழாக வருகின்றனர். இவர்களும், தாவீதிற்குச் சிங்கம் மற்றும் கரடியுடன் அனுபவம் காணப்பட்டதுபோலவே, பொதுவான தீமைக்கு எதிரான போராட்டத்தில் அனுபவங்களைப் பெற்றுக்கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்; மேலும் இந்த அனுபவங்களானது கர்த்தருடைய வழிநடத்துதலின்படி மாபெரும் பரீட்சைகளுக்கான ஆயத்தப்படுத்துதல்களாகவே காணப்படுகின்றது; இந்த அனுபவங்களானது எதிராளியோடும் மற்றும் நமக்குத் தீங்கு உண்டாக்கத்தக்கதாக செயல்படும் அவனது பல்வேறு கருவிகளோடும் உள்ள மாபெரும் யுத்தத்திற்கான ஆயத்தப்படுத்துதல்களாகவே காணப்படுகின்றது. இந்த ஒரு யுத்தம் தொடர்புடைய விஷயத்தில், சவுல் தாவீதிற்குக் கொடுத்த போர்க்கவசம் போன்றதொரு, அதாவது நமது எதிராளியானவனுடைய போர்க்கவசம் போன்றதொரு போர்க்கவசத்தினை அணிய வேண்டும் என்ற இயல்பான எண்ணங்கள் தோன்றலாம். எனினும் உலகப்பிரகாரமான வழிகளில் வெற்றி அடைய முடியாது என்பதைக் கர்த்தருடைய ஜனங்கள் ஒவ்வொருவரும் கற்றுக்கொள்வது அவசியமாகும். நாம் தீமையினை, தீமைகொண்டு போராட முடியாது; தவற்றினை இன்னொரு தவறுகொண்டு போராட முடியாது; தற்பெருமையினை இன்னொரு தற்பெருமை கொண்டு போராட முடியாது; புறங்கூறுதலை இன்னொரு புறங்கூறுதல் கொண்டு போராட முடியாது; பகைமையினை இன்னொரு பகைமை கொண்டு போராட முடியாது. இப்படி ஒருவேளை யுத்தம்பண்ணுவோமானால், நாம் நிச்சயமாகவே யுத்தத்தில் தோற்றுப்போவோம். தாவீதைப்போன்றே நாமும் கர்த்தரை முழுமையாகச் சார்ந்து, கவண் மற்றும் சத்தியம் எனும் கூழாங்கல்லைப் பயன்படுத்த வேண்டும். இவைகளின் அடிப்படையில் நம்மால் ஜெயங்கொள்ள முடியவில்லையெனில், நம்மால் ஜெயங்கொள்ளவே

முடியாது. அந்தகாரத்தின் அதிபதியுடனும், பாவத்தின் சேனைகள் அனைத்துடனும் உள்ள இத்தகைய ஒரு சமமற்ற யுத்தத்திற்கு யார்தான் தகுதியானவர்கள்? நிச்சயமாகவே தன்னில் நம்பிக்கைக் கொண்டிருப்பவனாகக் காணப்படும் ஒருவன் ஞானமற்றவனே ஆவான்; ஆகையால் அப்போஸ்தலன் கூறுவதுபோன்று, நமது நம்பிக்கையினை தேவனிடத்தில் நாம் வைக்கவேண்டும்: நாம் ஒருவேளை அவருக்கு உண்மை உள்ளவர்களாகக் காணப்படுவோமானால், வெற்றி நம்முடையதாய் இருக்கும்; ஒருவேளை நாம் உண்மையற்றவர்களாகவோ அல்லது அலட்சியமானவர்களாகவோ இருப்போமானால், நாம் தாவீது வகுப்பாராய்க் காணப்படமாட்டோம் - கிறிஸ்துவினுடைய மகிமையான சரீரத்தில் அங்கத்தினர்களாகமாட்டோம் - இப்படியாக இருக்கும்பட்சத்தில் நாம் அவரோடு ஆளுகை செய்கிறவர்களாகக் காணப்படமாட்டோம்; அதாவது, தாவீது அபிஷேகிக்கப்பட்டிருப்பினும், அவர் ஒருவேளை சவுலின் போர்க்கவசத்தினை அணிந்துகொண்டு இராட்சதனுடன் சண்டையிட்டிருப்பாரானால், அவர் அரியணைக்கே சென்றிருக்கமாட்டார் என்பதுபோலவே, நம் நிலைமையும் காணப்பட்டிருந்திருக்கும்.

## மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகள்

நாம் அனைவருமே போராட வேண்டியதாயுள்ள மாம்சத்தின் அபூரணங்கள் என்பது, உண்மையில் பிசாசினுடைய கிரியையின் ஒரு பாகமாகவே காணப்படுகின்றது; ஏனெனில் அவர்தான் ஏதேனில் நமது முதலாம் பெற்றோர்கள் விழுந்துபோவதற்கான காரணமாய் இருந்தார். இதன் காரணமாய் நமது ஒட்டுமொத்த சந்ததியும் பாவம் மற்றும் மரண நிலைக்குள் விழுந்தவர்களானார்கள்; மேலும் நம்மை அன்புகூர்ந்து, தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை வாங்கினவரால் நாம் மீட்கப்படுவதற்கு முன்புவரையிலும், நாம் பாவம் மற்றும் மரணத்திற்கு எதிராக விருதாவாகவே போராடிக் கொண்டிருந்தவர்களாகக் காணப்பட்டோம். மாம்சத்தினுடைய இந்தச் சுதந்தரிக்கப்பட்ட பெலவீனங்களோடு கூட, நாம் எதிராளியானவனுடைய செயல்பாடுகளுக்கு/கிரியைகளுக்கு எதிராகவும் போராட வேண்டும் - எதிராளியானவனுடைய கிரியைகள் என்று சொல்கையில், இது நமக்கான அவனது சோதனைகள் மாத்திரமல்லாமல், பொதுவான மனுக்குலத்தின் வாயிலான அவனது சூழ்ச்சிகளையும்கூட உள்ளடக்குகின்றது; ஏனெனில் உண்மையில் அவரே கீழ்ப்படியாமையின் பிள்ளைகளின் இருதயங்களில் இப்பொழுது கிரியை செய்துகொண்டிருக்கின்றார்; கீழ்ப்படியாமையின் பிள்ளைகள், கீழ்ப்படிதலின் பிள்ளைகளைக்காட்டிலும் மிக அதிகமான எண்ணிக்கையில் காணப்படுகின்றனர். ஆகையால் நம்மைத் தாக்குபவர்கள் திரளாய் இருக்கின்றனர்; கிறிஸ்துவுக்குள் புதுச்சிருஷ்டிகளென நமது மனங்களும், நமது இருதயங்களும் (மாம்சம் மற்றும் பிசாசுகளின் கிரியைகளுக்கு) எவ்வளவு எதிர்ப்பு தெரிவிப்பினும், நம்மீதான தாக்குதல்கள் அநேகவற்றில், நமது விழுந்துபோன மாம்சம் அதன் ஆதரவைக் (அக்கிரியைகளுக்குக்) கொடுக்கின்றது.

மாபெரும் எதிராளியானவன் குறித்தும், எல்லாத் திசைகளிலிருந்தும் மற்றும் ஒவ்வொரு நாளும் நமக்கு எதிராய் அவனால் கொண்டுவரப்படும் செல்வாக்குகள் குறித்தும் உள்ள கண்ணோட்டத்தினை நாம் பெற்றுக்கொள்ளத்தக்கதாக அப்போஸ்தலன் நமக்கு உதவுகின்றார். அவைகளைப் பின்வருமாறு பட்டியலிடுகின்றார்: மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள் (தன் சகோதரனைப் பகைக்கிறவன் கொலைபாதகனாயிருக்கின்றான்), வெறிகள் (சொல்லர்த்தமாக அல்லது அடையாளமாக உலகம் மற்றும் பாபிலோனின் ஆவிகளினால் போதையேற்றப்படுதல்),

களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரித்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன். (கலாத்தியர் 5:19-21)

## மாம்சத்தோடும், இரத்தத்தோடும் நமக்குப் போராட்டமில்லை

இந்தப் பட்டியலில், நாம் எந்தக் கோலியாத்துடன் போராட வேண்டும் என்று பார்த்துக்கொள்ளுங்கள்! ஒருவருடைய விசேஷித்த பெலவீனம் என்பது, இன்னொருவருடைய விசேஷித்த பெலவீனமாய்க் காணப்படுவதில்லை; ஆனால் அப்போஸ்தலனால் கொடுக்கப்பட்டுள்ள பட்டியலானது, கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் ஒவ்வொருவருடைய, அதாவது தாவீது வகுப்பாரில் - பிரியமானவரில் - கிறிஸ்துவில் அங்கத்தினனாய்க் காணப்படும் ஒவ்வொருவருடைய மாம்சத்தின், பெலவீனமான காரியங்கள் அனைத்தையும் நிச்சயமாகவே உள்ளடக்கியுள்ளது. இராஜாக்களென, ஆசாரியர்களென, புதுச்சிருஷ்டிகளென வரவிருக்கும் மகிமைக்கென்று அபிஷேகிக்கப்பட்டுள்ள அனைவரும், போராடுவதற்கென்றும், போராடி முடிப்பதற்கென்றும் தங்கள் சொந்த மாம்சத்தில் ஒரு கோலியாத்தைப் பெற்றிருக்கவே செய்வார்கள்! ஒன்றில் பழைய சுபாவம் மரித்தாக வேண்டும் அல்லது புதிய சுபாவம் மரித்தாக வேண்டும். இதன் அடிப்படையில் அப்போஸ்தலன் புத்திமதி கூறுகையில்: பூமியிலுள்ள உங்கள் அவயவங்களை - உங்களது மாம்சத்தின் கீழான மனப்போக்குகளை அழித்துப்போடுங்கள் என்று கூறுகின்றார். அது கோலியாத்தைப்போலவே கொல்லப்பட வேண்டும், சிரைச்சேதம் பண்ணப்படவேண்டும்; எனினும் சத்தியம் எனும் கூழாங்கல்லினைக்கொண்டு மாம்சத்தைத் தாக்குவதன் மூலம், கர்த்தருடைய நாமத்தினால் அதை முதலாவது நாம் ஜெயங்கொள்ளாததுவரையிலும், பூமிக்குரிய மனதினை, மாம்சீக மனதினை மற்றும் அதன் செல்வாக்குகளை நம்மால் முற்றிலுமாக ஒழித்துவிட முடியாது.

மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகளை உள்ளடக்கின மேல்இடம்பெறும் பட்டியலை நாம் பார்க்கையில், அவைகள் அனைத்தின் வேரும் சுயநலத்தில் காணப்படுவதை நாம் கண்டுகொள்கின்றோம்; மேலும் கர்த்தரை நமது முன்மாதிரியாகப் பார்க்கையில், ஆவியின் கனிகள் மற்றும் வரங்கள் அனைத்தும் அன்பில் மையம்கொண்டிருப்பதைப் புதுச்சிருஷ்டிகளென நாம் பார்க்கின்றோம். ஆகையால் எவ்வளவுக்கு அதிகமாகப் புதுச்சிருஷ்டியானது அன்பில் ஜீவித்து, வளர்ந்து, விருத்தியாகுகின்றதோ, அந்தளவுக்குப் பழைய சிருஷ்டியானது, மாம்சத்தின் கிரியைகளானது, அதன் சுயநலத்தோடுகூட அழிந்துபோகின்றதாய்க் காணப்படும்.

இவ்விஷயத்தில் நாம் தவறாய்ச் சிந்திப்பவர்களாய்க் காணப்பட்டு, ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தில் பூரணமடைய நாடுகின்றீர்களா? என்று கேட்கலாம். இன்னுமாகப் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, மாம்சத்திற்கும், அதன் ஆசை இச்சைகளுக்கும் தங்களை மரித்துப்போனவர்களாக எண்ணிக்கொள்பவர்கள் அனைவருமே - இவர்களில் யாருமே, மறுபடியுமாக எதிராளியானவனின் வல்லமையின்கீழ் வரவோ, அவரது ஆவியில் பங்காளிகளாகவோ மற்றும் அவரது கிரியைகளில் பங்கெடுப்பவர்களாகவோ ஒருபோதும் இருக்கமாட்டார்கள் என்று நாம் ஒருவேளை சொல்லிக்கொண்டிருக்கலாம்!

இது தவறான கருத்தாகும்! கர்த்தருடைய உண்மையான பிள்ளைகளில் சிலர் இப்படியாக மேற்கொள்ளப்படுவதற்கு வாய்ப்புள்ளது. உண்மைதான், ஒருவேளை சுயநலத்தின் ஆவியினால் முற்றிலுமாக மேற்கொள்ளப்பட்டுவிட்டால், அது புதுச்சிருஷ்டியினுடைய மரணத்தினைக் குறிக்கின்றதாய்

இருக்கும் மற்றும் அது இரண்டாம் மரணமாயிருக்கும். புதிய சுபாவத்திலிருந்து இரண்டாம் மரணத்திற்குள்ளாகக் கடந்துபோகும் பாதை என்பது தொலைத்தூர பாதையல்ல, எனினும் ஓர் அடியிலேயே/ஒரு நடவடிக்கையிலேயே இரண்டாம் மரணத்திற்குள்ளாக யாரேனும் போய்விடுவார்கள் என்று நம்புவதற்கு நமக்குக் காரணகாரியங்கள் ஏதுமில்லை. தற்காலம்வரையிலும், நம்முடைய உயிர்த்தெழுதலின் மாறுதல்வரையிலும் புதிய சுபாவம் என்பது, கர்த்தருக்கும், அவரது நீதிக்கும், அவரது அன்புக்கும் இசைவாய்க் காணப்படும் ஒரு புதிய மனமாக, புதிய சித்தமாக, புதிய இயல்பாகக் காணப்படுகின்றது என்பதை நாம் நினைவுகூருகின்றோம். அப்போஸ்தலன் கூறியுள்ளதுபோலவே நாம் இந்தப் புதிய சுபாவத்தினைப் பூமிக்குரிய மண்பாண்டங்களில் பெற்றிருக்கின்றோம் என்பதையும், புதிய மனமானது அதன் கட்டுப்பாடு மற்றும் ஆளுகையின்கீழ்ப் பழைய மண்பாண்டத்தைப் பெற்றிருக்கிறதைத் தவிர மற்றப்படி, அந்தப் பழைய மண்பாண்டமானது நடைமுறையில் அதன் உண்மையான குறைவுகள் அனைத்தையும், விழுந்துபோன இயல்புகள் அனைத்தையும் இன்னமும் ஆற்றல்மிக்க விதத்திலேயே பெற்றிருக்கின்றது என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்; ஒருகணம் புதிய சுபாவம் அதன் கட்டுப்பாட்டினையும், ஆளுகையினையும் விட்டுவிடுமானால், உடனே பழைய சுபாவம் விழித்துக்கொள்ளும், மீண்டும் உயிர்பெற்றுக்கொண்டுவிடும் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். மேலும் எதிராளியானவன் விழிப்பாய் இருக்கின்றார் என்பதும், சூழ்நிலைமையினை முழுமையாய்க் கிரகித்துக்கொள்கின்றார் என்பதும், நாம் விழிப்பில்லாமல் போகும்படிக்குத் தன் வல்லமையினால் செய்யமுடிகிற எதையும் செய்வார் என்பதும் நிச்சயமே. அதுவும் நமது கணிப்பில் வெள்ளை கருப்பாகவும், கருப்பு வெள்ளையாகவும் காணப்படும் அளவுக்குக்கூடப் பிரயாசங்கள் ஏறெடுப்பார் என்பதில் நமக்கு நிச்சயமே. நம்முடைய திராணிக்கு மிஞ்சின சோதனைகளிலிருந்து கர்த்தர் மிகவும் கிருபையாக நம்மைப் பாதுகாக்கின்றார். ஆகையால் நமது புதிய சுபாவத்தினுடைய குழந்தைப் பருவத்தில் மாத்திரமல்லாமல், புதிய சுபாவம் வளர்ந்து காணப்படும் பருவங்களிலும், எல்லாத் தருணங்களிலும் நாம் மேற்கொள்ளப்படுவது (வீழ்ச்சிக்குள்ளாக் கப்படுவது) சாத்தியமான காரியமேயாகும்; நாம் நமது ஆவிக்குரிய தேர்ச்சியின் பருவத்தினை எட்டும்போது, அனுமதிக்கப்படும் சோதனைகளும் மிகவும் கடுமையானதாகவும், மிகவும் நெருக்கடியானதாகவும் மாறிக்கொண்டுவரும். இதற்கு நாம் மறுப்புத் தெரிவிக்க முடியாது; இப்படியே நாம் எதிர்பார்த்திட வேண்டும்.

இதை மனதில்கொண்டவராகவே அப்போஸ்தலன்: என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் என்று கூறியுள்ளார்; மீண்டுமாக உங்களது பூமிக்குரிய இலட்சியங்கள், சித்தங்கள் முதலானவைகளை - அதாவது பொறாமை, பகைமை, கோபம் மற்றும் சண்டைச்சச்சரவிற்கு வழிநடத்தும் விதத்தில் உங்களுக்குள் காணப்படுபவைகளை - பூமியில் உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள் - இவைகளைக் கொன்றுபோடுங்கள் என்கின்றார். ஒவ்வொரு சிந்தையினுடைய விஷயத்திலும், ஒவ்வொரு வார்த்தையினுடைய விஷயத்திலும், ஒவ்வொரு கிரியையினுடைய விஷயத்திலும் புதிய சுபாவமானது முழு அதிகாரத்தையும், கட்டுப்பாட்டினையும் கொண்டிருக்க அனுமதியுங்கள். இப்படியாகக் காணப்படத் தக்கதாகப் பார்த்துக்கொள்ளுங்கள்; உங்களது சிந்தைகளைக் கவனித்துக்கொள்ளுங்கள், உங்களது வார்த்தைகளைக் கவனித்துக்கொள்ளுங்கள், உங்களது நடத்தைகளைக் கவனித்துக் கொள்ளுங்கள். தங்களது நடத்தைகளைக் கவனித்துக்கொள்ள முடிகிற அநேகர், தங்களது சிந்தனைகள் மற்றும் வார்த்தைகளைச் சோதித்து அறிந்துகொள்வதிலும், சரியாய் நிதானித்தறிவதிலும் சிரமப்படுகின்றார்கள். இருதயத்திலிருந்தே பொறாமை, கசப்பு, புறங்கூறுதல், தூஷணம், சண்டைச்சச்சரவுகள் புறப்படுகின்றது என்று அப்போஸ்தலன் உண்மையையே சொல்லியிருக்கின்றார்; இவைகள் இருதயத்தில்

காணப்படவில்லையெனில், இவைகளை வாயானது வெளிக்கொணருவதில்லை; ஏனெனில் இருதயத்தினுடைய நிறைவினாலேயே வாய் பேசிடும்.

## நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்

அந்தோ, ஆம்! நம்முடைய வார்த்தைகள் நம்மை நியாயந்தீர்த்திடும்; ஆண்டவர் கூறியுள்ளது போலவே: உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் (மத்தேயு 12:37). என் நாவினால் பாவஞ்செய்யாதபடிக்கு நான் என் வாயை அடக்கிவைப்பேன் என்று தீர்க்கத்தரிசி உரைத்துள்ளதிலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. வாய்க்குக் காவல் வைப்பது என்பது, நாம் பேசும் எல்லா விஷயத்திலும் மிகவும் கவனித்து, மிகவும் ஆலோசித்துப் பார்த்துப் பேசுவதற்குப் பயிற்சியில் ஈடுபடுவதையும், யாருக்கு எதிராகவும் தீமை பேசாதபடிக்குப் பார்த்துக்கொள்ள பிரயாசம் எடுப்பதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. நம்முடைய புறங்கூறுதல் என்பது கர்த்தருக்கும், அவரது நோக்கங்களுக்கும் அவசியமே இல்லை; அவர் தம்முடைய நோக்கங்கள் அனைத்தையும் பூரணமாய் நிறைவேற்ற முடிகின்றவராய்க் காணப்படுகின்றார்; இதற்காக அவரது ஞானமுள்ள ஏற்பாடுகள் எதையேனும் மீறி, அவருக்கு நாம் உதவிபுரிய வேண்டிய அவசியமில்லை. குழப்பத்தினின்று ஒழுங்கினைக் கொண்டுவருவதற்கு ஒருவேளை அவரிடத்தில் போதுமான அளவுக்கு ஞானம் இல்லாதிருக்குமானால், நிச்சயமாகவே நம்மிடத்திலும் ஞானம் இராது. மேலும் அவரது வார்த்தைகளினுடைய அறிவுரையின்படி செய்யாமல், நாம் கர்த்தரையும், அவரது காரியங்களையும் குறுக்கிடுவோமானால், அது மிகவும் துணிகரமாய்க் காணப்படும். அவருடைய வார்த்தைகளே நம்முடைய அதிகாரமாய் இருக்கக்கடவது; நாம் பேசும்படிக்கு அவர் அறிவுறுத்துவாரானால், பேசுவோமாக; நாம் அமைதலாய் இருக்கும்படிக்கு அவர் அறிவுறுத்துவாரானால், அமைதலாய் இருப்போமாக. வேறு எந்த வழிமுறையும் பாதுகாப்பாய் இராது.

நாவு ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படு கிறதாயும் இருக்கிறது என்று அப்போஸ்தலன் தெரிவித்துள்ளார் (யாக்கோபு 3:6). வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், நாவினைத் தீமை பேசத்தக்கதாகக் கொளுத்திவிடும் தீப்பொறியானது, இரண்டாம் மரணத்திற்குரியதாகும்; ஏனெனில் கோபம், துர்க்குணம், பொறாமை, சண்டை, புறங்கூறுதல், தூஷணம் யாவும் இரண்டாம் மரணத்திற்கு நேராய் வழிநடத்திச் செல்லக்கூடிய மாம்சம் மற்றும் பிசாசானவனின் கிரியைகளாய் இருக்கின்றன. அப்போஸ்தலன் கூறுவதுபோன்று, இப்படிப்பட்டவை களைச் செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை (கலாத்தியர் 5:21). இவைகளைச் செய்கிறவர்கள், ஒருவேளை இத்தீமையான போக்கில் தொடர்ந்துகொண்டிருந்தார்களானால், இவர்கள் இராஜ்யத்தில் பங்கடையத் தவறுகிறது மாத்திரமல்லாமல், இவர்கள் திரள்கூட்டத்தாரில் பங்கடைவதற்கும் தவறுகின்றவர்களாய் இருந்து, தங்கள் பங்கினை கெ" ன்னாவில் - இரண்டாம் மரணத்தில் அடைவார்கள். இது எங்கள் சார்பிலுள்ள மிகைப்படுத்தின போதனையல்ல; இது பரிசுத்த பேதுரு மற்றும் பரிசுத்த யாக்கோபு அடிகளாரின் தெளிவான சாட்சியாகவும் காணப்படுகின்றது. இது இந்தச் சுவிசேஷயுகத்தின், அதாவது விசேஷித்த பரீட்சையில் சபை காணப்படும் சுவிசேஷயுகத்தின் நியமமாக மாத்திரம் இராமல், இதே நியமமே ஆயிரவருட யுகத்தின்போதும் காணப்படும்; பிசாசின் இந்தக் கிரியைகள் அனைத்திற்கும் எதிராக அங்குக் காணப்படும் அன்பின் பிரமாணத்திற்கு இசைவான நிலைக்கு வராதவர்கள், பாவம் மற்றும் சாத்தானின் ஊழியக்காரர்களாகக் கருதப்படுவார்கள்; இரண்டாம் மரணமாகிய அக்கினிக்கடலிலே தங்களது பங்கினை அடைவார்கள். (வெளிப்படுத்தல் 20:14)

நாவானது ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாய் இருக்கும் என்று அப்போஸ்தலன் பேசுகையில் அவர், அடையாளமான வானங்களும், அடையாளமான பூமியும் நெருப்பில் எரிக்கப்படும் என்று அப்போஸ்தலனாகிய பேதுரு முன்வைத்தவைகளுக்கு முழுக்க இசைவாகவே, சத்தியத்தினை முன்வைக்கின்றார் என்று நாம் நம்புகின்றோம். நாவாகிய, இச்சிறிய அவயவம், ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிட்டு, தற்கால அமைப்புகளைக் கீழே தள்ளுகிறதும், வானங்களின்கீழ்க் கர்த்தருடைய இராஜ்யத்திற்கு வழியினை ஆயத்தம்பண்ணுகிறதுமான பயங்கர ஒழுங்கின்மை காணப்படும் மாபெரும் காலத்தினை இறுதியில் கொண்டுவந்துவிடும். அப்போஸ்தலனால் எழுதப்பட்டுள்ள மாபெரும் அக்கினியைக் கொளுத்திவிடத்தக்கதாக, கசப்பான நாவுகள் துரிதமாய்ச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைக் கேட்க செவியுடையவர்கள், ஏற்கெனவே உணர்ந்திருப்பார்கள். சபையிலும், சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும், அரசியல் வட்டாரங்களிலும் எரிச்சல்கள்/கிளர்ச்சிகள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. சுயநலம் அதிகமதிகமாய்ப் பெருகிக்கொண்டிருக்கின்றது; போகிறவனுக்கும், வருகிறவனுக்கும் சமாதானமிருக்காது என்றும், எல்லா மனுஷரும் ஒருவரையொருவர் விரோதிப்பார்கள் என்றும் வேதவாக்கியங்கள் சொல்லும் நிலைமை வருமளவுக்குச் சுயநலம் அதிகரித்துக்கொண்டு போகும்.

பெயர்ச்சபை மற்றும் உலகத்தினுடைய ஆயுள் சக்கரத்தை, நாவானது இப்படிக் கொளுத்திவிடுகிறதாகக் காணப்படுமானால், பரலோகத்தில் பெயரெழுதப்பட்டுள்ள ஜீவனுள்ள தேவனுடைய சபையானது இத்தகைய சோதனைகளுக்கு நீங்கலாய் இருப்பார்கள் என்று நாம் எண்ண முடியுமோ? உலகத்தாரைக்காட்டிலும் சபைக்குச் சோதனைகளானது கடுமையாய் இராது என்று நாம் எண்ண முடியுமோ? இல்லை! நிச்சயமாக இல்லை! நியாயத்தீர்ப்பானது தேவனுடைய வீட்டில் துவங்கி, பெயர்ச்சபை வீட்டாருக்கும், உலகத்திற்கும் தொடரும் என்றே நாம் எதிர்பார்த்திட வேண்டும். இது (நாவு) அடங்காத அவயவம் தொடர்புடைய இப்பாடத்திற்கு நம் ஒவ்வொருவரையும் விழித்தெழப்பண்ணி, கர்த்தருடைய சித்தத்திற்கு நமது இந்த அவயவத்தை, நாம் முற்றிலும் கீழ்ப்படிதலுக்குள்ளாகக் கொண்டுவருவதற்கு ஏவுகின்றது; பக்திவிருத்திக்கேதுவானவைகளை மட்டுமே நாம் பேசுவதற்கு ஏவுகின்றது; இன்னுமாகத் தேவனைத் துதிப்பதற்கும், ஸ்தோத்திரிப்பதற்கும் பயன்படும் நமது நாவுகளானது, ஆசீர்வதிப்பதற்கும், உதவுவதற்கும், தூக்கிவிடுவதற்கும், கர்த்தருடைய நோக்கங்களை ஆதரிப்பதற்கும் மட்டுமே பயன்படுத்தப்படுவதற்கு ஏவுகின்றது.

இருதயத்தினுடைய நிறைவினாலே வாய் பேசுகின்றபடியினால், நாம் நமது இருதயங்களை எல்லாக் காவலோடும் காத்துக்கொள்ள வேண்டும்; இருதயத்தினுடைய இயல்பான கபட்டுத்தனத்தை நாம் நினைவில்கொண்டிருக்க வேண்டும்; தீமையை நன்மை என்று எண்ணத்தக்கதாக நாம் வஞ்சிக்கப்பட்டுப்போகாதபடிக்கு, நாம் விழிப்போடு காணப்பட வேண்டும்; தீமைபேசுவதினாலும், புறங்கூறுவதினாலும் நாம் நன்மையை ஆதரிக்கின்றோம் என்று எண்ணத்தக்கதாக நாம் வஞ்சிக்கப்பட்டுப்போகாதபடிக்கு, நாம் விழிப்போடு காணப்பட வேண்டும்; இது எதிராளியானவனுடைய சூழ்ச்சியில் ஒன்றாகும்; மேலும் அப்போஸ்தலன் கூறியுள்ளதுபோன்று அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே. ஆகவே நமது நோக்கங்களைச் சோதித்தறிந்துகொள்வதில் நாம் அதிகமதிகமாய் விழிப்புடன் காணப்படுவோமாக; இது மாத்திரமல்ல, அவை நல்நோக்கங்களாக இருக்கின்றது என்று கண்டுபிடித்தப் பிற்பாடு, நமது வழிமுறைகளைச் சோதித்தறிந்து, அவை கர்த்தருடைய வார்த்தைகளுக்கு இசைவாக இருக்கின்றனவா என்று உறுதிப்படுத்திக்கொள்வோமாக; அதிலும்

விசேஷமாக அவர் நம்மை அன்புகூர்ந்ததுபோன்று, நாமும் ஒருவரையொருவர் அன்புகூர வேண்டும் - ஒருவருக்கொருவர் நம்முடைய ஜீவியங்களை ஒப்புக்கொடுத்துவிடும் அளவுக்கு அன்புகூர வேண்டும் என்ற அவரது அறிவுரைகளை நாம் நினைவில்கொள்ள வேண்டும்; மத்தேயு 18:15-17 வரையிலான வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ள அவரது வழிமுறைகளை நாம் மறவாமல் இருப்போமாக; அவரது வார்த்தைகளுக்குச் செவிகொடுக்குமளவுக்கு, நாம் அவருக்குக் கீழ்ப்படிதல் உள்ளவர்களாகக் காணப்பட வேண்டும் என்ற அவரது அறிவுரைகளை நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

## சுயபரிசோதனை

*நான் சிலுவையின் போர்ச்சேவகனா?*
*ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்றுகிறவனா?*
*அவர் நோக்கங்களைச் செயல்படுத்த நான் அஞ்சலாமா?*
*அவர் நாமத்தைப் பற்றி பேச வெட்கப்படலாமா?*

*பரிசை பெறுவதற்கு மற்றவர்கள் போராடிக்கொண்டும்,*
*இரத்த வெள்ளமான கடல்தனில் பிரயாணித்துக்கொண்டும் இருக்கையில்,*
*நான் மட்டும் சொகுசான பூ மெத்தைகளில்,*
*பரதீசுக்குத் தூக்கிச் செல்லப்பட வேண்டுமா?*

*எதிர்கொள்வதற்கு எனக்கும் சத்துருக்கள் இருக்கின்றார்களல்லவா?*
*நானும் பெருவெள்ளத்தை எதிர்த்து முன்னேற வேண்டாமா?*
*தேவனிடத்திற்குக் கிட்டிச்சேர,*
*இந்தப் பெருமையான உலகம் எந்தனுக்கு உதவுமா?*

*நான் ஆளவேண்டுமெனில், நிச்சயமாய்ப் போராட வேண்டுமே;*
*எந்தன் தைரியத்தை அதிகரித்திடும் கர்த்தாவே!*
*கஷ்டத்தைச் சகித்து, வலியைத் தாங்கிடுவேன்,*
*நான் உம் வார்த்தைகளின் ஆதரவுதனில்!*

*உம் மகிமையான நாள் உதயமாகுகையில்,*
*உம் பரிசுத்தவான்கள் யாவரும் பிரகாசிப்பார்களே!*
*கர்த்தாவே மகிமை உம்முடையதே என்று*
*வானங்களில் வெற்றியின் ஆரவாரங்கள் தொனிக்கப்படுமே!”*

R4223

# ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன்

## 1 சாமுயேல் 18

சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்; இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான்.
- நீதிமொழிகள் 17:17

யோனத்தான் மற்றும் தாவீதிற்கு இடையில் நிலவின அன்பைப்போன்றுள்ள, வேறு எந்த ஒரு நெஞ்சைத் தொடும் பதிவினையும் வரலாறு பதிவுசெய்யவில்லை. இந்த இரண்டு புருஷர்களும் அநேகம் விதங்களில் முற்றிலும் வேறுபட்ட குணஇயல்புகளை உடையவர்களாக இருப்பினும், இவர்கள் உயர்பண்புள்ளவர்களாகவும், ஆழமாயும், தீவிரமாயும் அன்புகூர முடிகிறவர்களாகவும் காணப்பட்டனர். தாவீதைப்பற்றின பதிவு பல்வகைப்பட்டதாகவும், விரிவான பதிவாகவும் இருக்கின்றது என்கிறார் Charles Reade அவர்கள்:

பரிசுத்த வேதாகமத்தில் இடம்பெறும் மோசே, எலியா மற்றும் பவுல் அடிகளாரும், மத சார்பற்ற சரித்திரத்தில் இடம்பெறும் Solon, Alexander, Caesar, Charlemagne, Napoleon, இன்னும் பலரும் தாவீதைப் பார்க்கிலும் ஏதோ ஓர் இயல்பில் அதிகமாகவே காணப்பட்டனர். ஆனால் இந்த மாபெரும் மனிதர்கள் யார் ஒருவரைக்காட்டிலும், தாவீது அதிகமாய்த் தனித்துவமான மற்றும் கவரும் விதமான தன்மைகளை உடையவராய் இருக்கின்றார்; இதன் காரணமாகவே நான் அவரைப் பதிவுகளில் பன்முகக் குணச்சித்திரமாக சித்தரிக்கின்றேன் - அவரை ஒரு மேய்ப்பனாக, ஒரு போர்ச்சேவகனாக, ஓர் அரசவை அதிகாரியாக, ஒரு பிரபலமான நண்பனாக, தலைமறைவாக வாழ்ந்த ஒருவராக, ஒரு காவலாளியாக, ஒரு கொள்ளைக்காரனாக, ஒரு தளபதியாக, ஓர் இராஜாவாக, ஓர் அரசியல் மேதையாக, ஒரு நாடோடியாக, ஓர் ஆசாரியனாக, ஒரு தீர்க்கத்தரிசியாக, ஒரு பரிசுத்தவானாக, ஒரு குற்றவாளியாக, பாவத்திற்கு மனம்வருந்தும் ஒருவராக, எதிலும் அரைகுறையாகச் செயல்படாத ஒருவராகப் பார்க்கின்றேன். அவரது குணங்கள் என்பது அநேகம் நரம்புகள் உள்ள சுரமண்டலம்போன்று இருக்கின்றது.

இராஜாவாகிய சவுலின் குமாரனும், இஸ்ரயேலின் அரியணைக்குச் சுதந்தரவாளியுமான யோனத்தான் உயர்பண்புகளை உடையவர் ஆவார். இவர் ஓர் உண்மையுள்ள குமாரன் ஆவார்; இவரது தந்தையினுடைய நெருக்கடியான வேளைகளில், தந்தையை இவர் மட்டுமே ஆறுதல்படுத்த முடிபவராகவும் காணப்பட்டார். இவர் கைத்தேர்ந்த போர்வீரனாக விளங்கினார் மற்றும் தேவனிடத்திலும் மிகுந்த விசுவாசத்தினை வெளிப்படுத்தினார்; மதரீதியிலான இவரது இயல்புகளும் தாவீதைப்போன்றே முழுமையாய் வளர்ச்சியடைந்து காணப்பட்டன. இந்த இரண்டு புருஷர்களும் ஒருவரில் ஒருவர் கண்டுணர்ந்த தேவனுக்கான பயபக்தி, அர்ப்பணிப்பு மற்றும் நேர்மையின் அம்சங்களே, இவர்கள் இருவருக்கிடையில் காணப்பட்ட நலமிகு மாபெரும் நட்புறவிற்கு அடித்தளமாயிற்று; மேலும் இது இவர்களது இருதயங்களை வியத்தகு தோழமையில் பின்னி பிணையச் செய்தது. இவர்களில் யோனத்தான் மகா பெரியவராகவும், இவரது அன்பும் மகா பெரியதாகவும் காணப்பட்டதாகத் தெரிகின்றது. அன்பு உலகத்தில் பிரதானமான ஒன்றாய் இருக்கின்றபடியால், இந்தக் கண்ணோட்டத்தில், யோனத்தான் உலகத்திலுள்ள மகத்துவமான பாத்திரங்களில் ஒருவராகக் கருதப்படலாம்; ஏனெனில் இவர் அதிகமாய் அன்புகூர்ந்தார்; அதுவும் தன் சொந்த நலனைப் புறக்கணித்து அன்புகூர்ந்தார்.

## தன் போட்டியாளன்மீது ஆழ்ந்த சிநேகம்

பொதுவாகவே, ஒருவருக்கொருவர் பரஸ்பரமாய்க் கொண்டிருக்கும் மதிப்பின் அடிப்படையிலும், கொஞ்சம் சுயநலத்துடனும்தான் தோழமை மலர்கின்றது. நாம் பார்த்துக்கொண்டிருக்கும் (யோனத்தான் மற்றும் தாவீது) சம்பவத்திலும், சுயநலம் (ஒரு கட்டத்தில்) நட்பைத் தொடருவதற்கு எதிர்ப்பைத் தெரிவித்திருக்க வேண்டும்; ஆனால் இப்படி இராததால், இவர்களது காரியம் தன்னலமற்ற அன்பிற்கான உதாரணமாய்த் திகழ்கின்றது. தாவீதிற்கு வந்த ஒவ்வொரு வெற்றியும், கனமும், யோனத்தான் காணப்பட்ட ஸ்தானத்திற்குத் தாவீதை ஒரு பிரபலமான நட்சத்திரமாக உயர்த்தியது. சவுலின் வாரிசாக யோனத்தானை ஜனங்கள் ஏற்றுக்கொள்வதற்குப்பதிலாக, தாவீதினுடைய ஒவ்வொரு முன்னேற்றமும், இவரை ஜனங்கள் ஏற்றுக்கொள்வதற்கு ஏதுவான ஆயத்தங்களைப் பண்ணினது. இதை இராஜா கண்டார்; யோனத்தானும் பார்த்தார்; ஆனாலும் இக்காரியத்தினால் இருவருமே எதிர்மாறான தாக்கமடைந்தவர்களானார்கள். இராஜா பொறாமை அடைந்து, கோபமடைந்தவரானார்; மாறாக யோனத்தானோ, தனக்குப் போட்டியாய்க் காணப்படுபவரைச் சிநேகித்தார்; அதுவும் தனது சால்வையையும், போராயுதங்களையும் தாவீதிற்குக் கொடுத்தத் தருணமாகிய தங்களது முதலாம் சந்திப்பிலேயே, யோனத்தான் தாவீதைச் சிநேகித்தார் (1சாமுயேல் 18:4). யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருந்தது என்று நாம் வாசிக்கின்றோம்; இவர்களது சுபாவங்கள் பின்னிப்பிணைந்து, ஒன்றிசைந்து காணப்பட்டது; இவ்வார்த்தைகள் தூய்மையான மற்றும் உண்மையான அன்பிற்கான அழகான வருணனையாகக் காணப்படுகின்றது. Alexander White -அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்:

ஒருவேளை, யோனத்தான் தாவீதைத் தன் உயிரைப்போலச் சிநேகித்தான் எனும் வார்த்தைகளை நான் ஒருமுறை மாத்திரம் வாசித்திருந்திருப்பேனாகில், நான் அதை மிகைப்படுத்திக் கூறப்பட்ட வார்த்தைகளென்று எண்ணி கடந்துபோயிருந்திருப்பேன் . . . . ஆனால் நான் மீதமுள்ள சம்பவத்தை வாசித்தப்போதோ, அச்சம்பவத்தைப் பதிவுசெய்துள்ள புனிதமான எழுத்தாளரை நோக்கி நான் எனக்குள்ளாக: ‘இதோ, நீர் இவ்வார்த்தைகளை எளிமையாகவே பேசியுள்ளீர்; மிகைப்படுத்தி எதுவும் பேசவில்லை’ என்று கூறினதுபோன்று உணர்ந்தவனானேன்.

## அன்புள்ள நட்புறவிற்கான அடிப்படை

நண்பர்களுக்கிடையே உள்ள கனிவான அன்பு என்பது அற்புதத்தின் காரணமாய் உருவாகுவதில்லை, மாறாக சில குறிப்பிட்ட இணைதலின் விளைவேயாகும். நாம் யாரை அன்புகூருகின்றோமோ, அவர் நம்மைப்போன்றே இருக்க வேண்டும் என்ற எந்தக் கட்டாயமும் இல்லை; மாறாக அவர் நம்மால் மெச்சிக்கொள்ளப்படும் பண்புகளை உடையவரும், ஆனால் நம்மிடம் அவ்வளவுக்கு அதிகமாய் இராத பண்புகளை உடையவரும், நமக்கு நேர்மாறானவருமாய் இருந்து, நம் கவனத்தைக் கவர்ந்தவருமாய் இருப்பார். எனினும் இருள் ஒருபோதும் வெளிச்சத்தை விரும்புகிறதில்லை; வெளிச்சமானது ஒருபோதும் இருளை விரும்புகிறதில்லை. ஆகையால் உயர்பண்புடையவர்களின் தளத்தில், நண்பர்களுக்கிடையே உள்ள கனிவான அன்பிற்கு, நண்பர்கள் இருவருமே உயர்வான குறிக்கோள்களையும், சிறந்த நாட்டங்களையும் உடையவர்களாய் இருக்க வேண்டும், அதுவும் வெவ்வேறு அளவுகளில் பெற்றிருப்பினும், இவைகளைப் பெற்றிருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் மதிப்பதற்கு ஏதுவான எதையேனும் பார்க்க வேண்டும் மற்றும் அதை மதிக்க வேண்டும்; ஆனால் சர்வவல்லவரின் விஷயத்தில் இப்படியாக இருப்பதில்லை; நம்மீதான அனுதாபத்தின் அடிப்படையிலும், அவரது குணலட்சண

தரநிலையினை எட்டுவதற்கான நமது பிரயாசங்களை அவர் அங்கீகரிப்பதின் அடிப்படையிலும்தான், பிரதானமாய் அவரது அன்பு காணப்படுகின்றது. யோனத்தானின் விஷயத்தில், தேவனுக்காய் இவர் கொண்டிருந்த பயபக்தியானது, இவரிடம் போட்டி, விரோதமாகிய எண்ணங்களுக்குத் தடைவிதிப்பதிலும், தனக்குப் போட்டியாய் வருபவரை மதிக்க இவரை ஊக்குவிப்பதிலும் பெரும் பங்கு வகித்ததாய் இருந்தது என்பதிலும் எங்களுக்கு நிச்சயமே. இப்படியாகத் தெய்வீகச் சித்தத்தையும், வழிநடத்துதலையும் மதிப்பது என்பது நட்புறவு அனைத்திற்கும் உதவியாக இருக்கும் என்பதையும், இது போட்டி மனப்பான்மையின் ஆவி அனைத்திற்கும் தடையாக இருக்கும் என்பதையும், இது ஒவ்வொரு கிறிஸ்தவ குணலட்சணத்தினுடைய விஷயத்திலும் எவ்வளவு விலையேறப்பெற்ற அபிவிருத்தியினைச் செய்கிறதாக இருக்கும் என்பதையும் யார்தான் ஒப்புக்கொள்ளாமல் இருப்பார்கள்? தமது ஜனங்களின் விஷயங்கள் அனைத்திலும் நமது பரம பிதா தலைமை வகிக்கின்றார் என்பதை அறிவது நமக்கு எவ்வளவு மனநிறைவைத் தருகின்றது! இது நம்முடைய இருதயங்களுக்கு எவ்வளவு இளைப்பாறுதலைத் தருகின்றது! இது மற்றவர்களிடம் எவ்வளவு சாந்தத்தையும், கனிவையும், இரக்கத்தையும் மற்றும் அன்பையும் காண்பிக்க வழிநடத்துகின்றது! இது மற்றவர்களும் நம்மைப்போலவே தெய்வீகப் பராமரிப்பின்கீழ்க் காணப்படுகின்றனர் என்பதை உணர்ந்துகொள்வதற்கும், இன்னுமாக நம்முடைய சொந்த தற்கால நலன்களை அல்லது மற்றவர்களுடைய பூமிக்குரிய நலன்களைப் பொருட்படுத்தாமல், கர்த்தருடைய சித்தம் நிறைவேறுவதாக என்று வாஞ்சிக்கும் அளவுக்கு முழுமையாய்க் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கும் இருதயத்தினைப் பெற்றுக்கொள்வதற்கும் உதவுகின்றது.

சந்தேகத்திற்கிடமின்றி இதுவே யோனத்தானுடைய அன்பிற்கான நல் அடிப்படையாகக் காணப்பட்டது; மேலும் சந்தேகத்திற்கிடமின்றி இந்தச் செழிப்பான மண்ணிலிருந்தே கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலுள்ள தகுதியான அன்பு அனைத்துமே வளரும். நாம் நம்மைப்போலவே நமது அயலானை அன்புகூருவதற்கும், மேலும் கர்த்தருடைய ஏற்பாட்டின்கீழ் நாம் அடைய வாஞ்சிக்கும் அதே கிருபையின் ஐசுவரியங்களை, நம் அயலானும் பெற்றுக்கொள்ள, நாம் விரும்புவதற்கு முன்னதாக, நாம் நம் முழு இருதயத்தோடும், ஆன்மாவோடும், மனதோடும், பலத்தோடும் கர்த்தரை அன்புகூர வேண்டும். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன் (யோவான் 13:34) என்ற வார்த்தைகளைக்கூறி, கர்த்தர் தம்முடைய பின்னடியார்கள் முன்வைத்த அன்பினை எவ்வளவேனும் நாம் அடைய முயல்வதற்கு முன்னதாக, தேவனிடத்தில் இந்த முதன்மையான அன்பினை நாம் பெற்றிருப்பது மிக அவசியமானதாக இருக்கின்றது. யோனத்தானுடைய அன்பு, இந்தக் கிறிஸ்தவ அன்பை, இந்தச் சுயத்தைப் பலிசெலுத்தும் அன்பை ஒத்திருக்கின்றது; அதாவது இவரது அன்பானது, அயலான்மீது தேவனுடைய ஆசீர்வாதம் காணப்படுவதைப் பார்ப்பதில் மகிழ்ச்சியடையும் அளவுக்குத் தனது அயலானை மிகவும் அன்புகூர்ந்தது; அதுவும் தனக்குக் கனத்தின், மேன்மையின், இராஜ அதிகாரத்தின் இழப்பு வரும் என்று அறிந்தபோதிலும், அயலானை இப்படி அன்புகூர்ந்தார். ஓ! இதுபோன்ற அன்பானது, புதுச்சிருஷ்டிகளுடைய இருதயங்களில் அதிகமதிகமாக மேலோங்கிக் காணப்படுவதாக! இந்தப் புதுச்சிருஷ்டிகளிடமே அப்போஸ்தலன்: தெய்வீக வழிநடத்துதலின்கீழ் உயர்ந்த சகோதரன், தான் தாழ்த்தப்பட்டதைக்குறித்து மேன்மைப்பாராட்டக்கடவன்; தாழ்ந்த சகோதரன், தான் உயர்த்தப்பட்டதைக்குறித்து மேன்மைப்பாராட்டக்கடவன் என்று கூறுகின்றார். (யாக்கோபு 1:9-10)

## தாவீது மற்றும் யோனத்தானின் பந்தம்

கர்த்தருடைய ஜனங்களாகிய நம்மிடையே, யோனத்தான் மற்றும் தாவீதின் அன்பினை உருவாக்குவதற்குச் சங்கங்கள்/சமுதாயங்கள் உருவாக்கிடுவதற்குரிய அவசியங்கள் இல்லை. இதைவிட மேலான ஓர் அன்பினை நம் மத்தியில் உருவாக்கிடும் ஓர் அமைப்பை நாம் பெற்றிருக்கின்றோம். இந்த அமைப்பினுடைய தலை, முதல்வர், மையமானவர், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஆவார்; இவர் அன்பு பற்றின உயர்வான கருத்துகளையும், செயல்முறைகளையும் அறிவுரையாக வழங்கினது மாத்திரமல்லாமல், இவர் தம்முடைய நண்பர்களுக்காக மட்டுமல்லாமல், தம்முடைய சத்துருக்களுக்காகவும் தமது ஜீவனைக் கொடுத்துவைத்தபோது, அந்த அன்பை தம்மில் உதாரணப்படுத்தியும் காண்பித்தார். ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை (யோவான் 15:13). அன்புகூருபவர்களிலேயே மகா பெரியவரான நமது கர்த்தராம் இயேசு கிறிஸ்து, அன்புகூருபவர்களை உள்ளடக்கின ஒரு சங்கத்தினை ஒழுங்குபடுத்தியுள்ளார்; மேலும் இதில் அங்கத்துவம் அடையும் காரியத்தினை, தமது பின்னடியார்கள் சிலுவையினை எடுத்துக்கொண்டு, தம்மைப் பின்பற்றுவதற்கும், சகோதர சகோதரிகளுக்காகத் தங்களுடைய ஜீவன்களைக் கொடுப்பதற்கும் காண்பிக்கும் ***விருப்பத்தின்மீது*** சார்ந்திருக்க ஏற்பாடுபண்ணியிருக்கின்றார்.

தளபதிக்கு உண்மையாய் இருப்பதற்கு என்றும், அன்பின் ஆவிக்கு உண்மையாய் இருப்பதற்கு என்றும், அபிஷேகிக்கப்பட்டவரின் சரீரத்தினுடைய அங்கத்தினர்களென ஒருவருக்கொருவர் உண்மையாய் இருப்பதற்கு என்றும் அர்ப்பணம்பண்ணியுள்ளவர்கள் மாத்திரமே - இவர்கள் மாத்திரமே, பரலோகத்தில் பெயரெழுதப்பட்டவர்களாகிய ஜீவனுள்ள தேவனுடைய சபையாகிய இந்தப் பிரத்தியேக சமுதாயத்தில்/சங்கத்தில் அங்கத்தினர்களாகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். இன்னுமாக நம்முடைய இச்சமுதாயத்தினை நிறுவினவர், அவர் திராட்சச்செடி என்றும், நாம் கொடிகள் என்றும், இந்த அன்பெனும் கனியினைப் பெற்றிராத (தம்மில் உள்ள) கொடிகள் அனைத்தும் புறம்பாக்கிப்போடப்படும் என்றும், திராட்சச்செடியினின்று வெட்டிவிடப்படும் என்றும், இந்தப் பாக்கியமான சபையின் அங்கத்துவத்திலிருந்து தொடர்பறுக்கப்படுவார்கள் என்றும் கூறியுள்ளார். இன்னுமாக இந்த மெய்யான திராட்சச்செடியுடன் நாம் பண்ணியுள்ள உடன்படிக்கைக்கு நாம் உண்மையாய் இருக்கும் காரியமானது, நம்மீது சுத்திகரிப்புகளையும், கிள்ளிவிடுதல்களையும் வரப்பண்ணும் என்றும் அவர் நமக்கு உறுதியளித்துள்ளார்; இவைகளினாலே மாபெரும் தோட்டக்காரர் நம்மில் ஆவியின் கனிகளை, திராட்சச்செடியின் கனிகளை, அதாவது சாந்தம், தயவு, சகோதர சிநேகம், அன்பு ஆகியவைகளை அதிகமதிகமாய் வளரப்பண்ணுகின்றார்; இந்தக் கனிகள் நம்மில் பெருகத்தக்கதாகவும், இதனால் பிதா மகிமையடைந்து, துதிக்கப்படத்தக்கதாகவும், நாம் ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைய ஆயத்தம்பண்ணப்படத்தக்கதாகவும் பண்ணுகின்றார்.

ஆகையால் எந்த ஒரு விசேஷித்த சங்கமும் உருவாக்கப்படுவதற்கு அவசியமில்லை என்பதை நாம் காண்கின்றோம். மாறாக நாம் ஏற்கெனவே ஒரு கூட்டத்தாரில் அங்கத்தினர்களாகக் காணப்படுகின்றோம் என்று பார்க்கின்றோம்; அப்படியானால் நாம் கிறிஸ்துவின் சீஷர்களாகவும், அவரோடுகூடப் புதுச்சிருஷ்டியின் அங்கத்தினர்களென ஒன்றிணைந்தவர்களாகவும் காணப்படுகின்றோம்.

(இக்கட்டுரையின் தொடர்ச்சி, பக்கம்:71)

R3231

# வேறுபட்ட வலிமைமிக்க கதாபாத்திரங்கள்
## 1 சாமுயேல் 18:5-16

தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.
- சங்கீதம் 46:1

சவுல் மற்றும் தாவீதாகிய இருமனுஷருமே பலமான கதாபாத்திரங்களாவார்கள்; ஆனால் இவர்களில் சவுல் தெய்வீக வார்த்தைகளையும், ஆலோசனைகளையும் அலட்சியம்பண்ணி, தன் சொந்தக் காரியங்களைத் தானாகவே நிர்வகிக்க முற்பட்டார்; ஆனால் தாவீதோ கர்த்தரையும், அவரது வழிநடத்துதல்களையும் ஏற்றுக்கொண்டவராகவும், விசுவாசத்தினால் கர்த்தரைப் பின்பற்ற நாடினவராகவும் காணப்பட்டார். இப்படியாக நடந்துகொண்டதன் விளைவினை இருவர் விஷயத்திலும் காணலாம்: சவுல் அவமானத்திற்குரிய முடிவிற்கு வந்தார். தாவீது செழித்தோங்கினார்; மேலும் அவர் வாழ்ந்த காலங்களில் மிகவும் அப்பாற்பட்ட உறுதியான குணலட்சணத்தையும், ஞானத்தையும் வெளிப்படுத்தினார். இது விஷயத்தில் தாவீதினுடைய விவேகமும், கர்த்தருக்கு அவர் கொண்டிருந்த கீழ்ப்படிதலும், இவரை வருடக்கணக்காக இஸ்ரயேலின் சிங்காசனத்திலிருந்து விலக்கிவைத்தது என்பதையும், வருடக்கணக்கான பிரச்சனைகளையும், இழப்புகளையும், அலைச்சல்களையும் கொண்டுவந்தது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது; ஒருவேளை உலக வழிமுறைகளைப் பின்பற்றியிருந்திருப்பாரானால், வெளிப்புறத்திலாகிலும் மாபெரும் செல்வ செழிப்பிற்கு நேராய் வழிநடத்தப்பட்டிருப்பார் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. இஸ்ரயேல் தேசம் என்பது, தம்முடைய தெரிந்துகொள்ளப்பட்ட விசேஷித்த ஜனங்களாக தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் ஆவார்கள் என்பதையும், அவர்களை அவரே கையாளுவார் என்பதையும், அவர்கள் காரியங்களை அவரே மேற்பார்வையிடுவார் என்பதையும், அவர்களை ஆளுபவர்கள் யாராக இருக்க வேண்டும் என்பதை அவரே தீர்மானிப்பார் என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். அதேசமயம் யூத யுகத்திற்கும், இதன் தெய்வீக ஏற்பாடுகள், ஒழுங்குமுறைகளுக்கும் மற்றும் இந்தக் கிறிஸ்தவ அல்லது சுவிசேஷயுகத்திற்கும், இதன் வேறுபட்ட ஒழுங்குமுறைகளுக்கும், இதன் அன்பின் பிரமாணத்திற்கும், மாம்ச போராயுதங்களுக்குப் பதிலாக உள்ள இதன் ஆவிக்குரிய போராயுதங்களுக்கும், பொறுமையுடன்கூடிய சகிப்புத்தன்மைக்கும் இடையில் மாபெரும் வித்தியாசம் இருப்பதை நாம் மறந்துவிடக்கூடாது. தாவீது மற்றும் யூத யுகத்தின்போதான உண்மையுள்ளவர்களின் வழிமுறைகளை, கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபைக்கு மாதிரியாகக் கருதுபவர்கள், இது விஷயத்தில் தெய்வீக வார்த்தைகளை முற்றிலுமாகத் தவறாய்ப் புரிந்துகொண்டிருக்கின்றனர். தாவீதினுடைய யுத்தங்களும், வெற்றிகளும், சங்காரங்களும், கிறிஸ்துவாகிய - தலை மற்றும் சரீரமாகிய - பிரியமான - நிஜமான தாவீதின் ஆவிக்குரிய யுத்தங்களையும், வெற்றிகளையும் சித்தரிக்கும் நிழல்களாய்க் காணப்படுகின்றன.


சவுல் வீட்டாரிடமிருந்து இராஜ்யபாரமானது எடுத்துக்கொள்ளப்பட்டு, இவரைவிட நம்பிக்கைக்குப் பாத்திரமான, இன்னுமாகக் கர்த்தருக்கு அதிகம் உண்மையுள்ள அயலானுக்குக் கொடுக்கப்படும் என்று கர்த்தர் சாமுயேல் தீர்க்கத்தரிசி மூலம் ஏற்கெனவே சவுலுக்குத் தெரிவித்திருந்தபோதிலும், ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிவரையிலும், இராஜ்யம் சவுலின் கரங்களில் காணப்படும் என்ற புரிந்துகொள்ளுதல் சவுலுக்குக்

கொடுக்கப்பட்டிருந்தது. ஆகையால் முதன்மை நிலைக்கு யார் வரப்போகின்றார் என்றும், இறுதியில் தனக்குப் பின் அரியணைக்கு யார் வரப்போகின்றார் என்றும் சவுல் கண்காணித்துக்கொண்டிருந்தார் என நாம் அனுமானிக்கலாம்; இந்த ஸ்தானத்திற்குத் தாவீது ஏற்கெனவே அபிஷேகிக்கப்பட்டிருக்கின்றார் என்பதை சவுல் அறிந்திருப்பார் என்று நாம் எண்ணமுடியாது; ஏனெனில் தாவீது அபிஷேகிக்கப்பட்ட காரியமானது இரகசியமாய் வைக்கப்பட்டிருந்தது.

தாவீதின் வீரத்தினைச் சவுல் மதித்தாலும், தாவீதின் வீரமான நடத்தையானது ஜனங்களின் பார்வையில் இவருக்குப் பெற்றுத்தந்த முதன்மை நிலையின் நிமித்தம், சவுல் பொறாமைகொண்டவரானார். தன்னைக்குறித்துப் பெருமையாய்ப் பேசப்படுவதைக்காட்டிலும், தாவீது மகிமையான வார்த்தைகளினால் பாராட்டி பாடப்பட்டதைச் சவுல் கேட்டபோது, அந்தப் பொறாமை உதித்தது. பொறாமை எப்போதுமே பொல்லாத ஒரு பண்பாகும் - இது கர்த்தருடைய ஆவியின், பரிசுத்த ஆவியின் பாகமாய் இராமல், மாறாக தீய ஆவியின் பலமான ஒரு பகுதியாக இருக்கின்றது. பகைமை, மனஎரிச்சல், துர்க்குணம், சண்டைகள், மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகள் அனைத்தும் பொறாமையுடன் மிகவும் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது மற்றும் பெரும்பாலும் இதினின்றே உதிக்கின்றதாகவும் காணப்படுகின்றது. சவுல் தனது மனதில் எழும்பின மனஎரிச்சலான எண்ணங்களை எதிர்த்திருக்க வேண்டும்; சவுல் தனது இயல்புகளுக்கு மேலாக தனது மனம் எழவும், தனது இளைய தளபதி பாராட்டப்படுகிறதின் நிமித்தம் மிக இருதயப்பூர்வமாகவும், மிக உண்மையாகவும் களிகூரவும் தனது மனதினை அனுமதித்திருக்க வேண்டும். இராஜ்யபாரத்தினை தான் இழந்துபோவது குறித்த கர்த்தருடைய வார்த்தைகளைச் சவுல் ஞாபகம்கொண்டிருந்த காரியம்தான், அதுமுதல் சவுல் தாவீதைப் பொறாமையோடு பார்க்கப்பண்ணினது என்பதில் ஐயமில்லை.

ஒவ்வொரு கிறிஸ்தவனையும் தாக்கும் மாபெரும் சத்துருக்களில் ஒன்று பொறாமையாகும். அதைக் கண்டமாத்திரத்திலேயே, அது தேவனுடைய மற்றும் மனுஷனுடைய மற்றும் ஒவ்வொரு நல்ல கொள்கையினுடைய சத்துருவென வெட்டிவீழ்த்தப்பட வேண்டும்; மேலும் பொறாமையினுடைய குடிபுகுதலானது ஒரு கணப்பொழுதிற்காகிலும் இருதயத்தினை அசுசிப்படுத்தியிருக்குமாயின், பரிசுத்தத்தின் ஆவியும், அன்பும் சுத்திகரிப்பைப் பண்ணத்தக்கதாக உதவிக்கு அழைக்கப்பட வேண்டும். பொறாமை என்பது கொடிதான அரக்கன் மாத்திரமல்லாமல், அதன் விஷப்பற்கள் மற்றவர்களுக்கு வலியையும், பிரச்சனையையும் நிச்சயமாய்க் கொண்டுவருவதோடு மாத்திரமல்லாமல், பொறாமையினைத் தங்களில் குடியமர்த்தியுள்ளவர்கள்மீது இடுக்கண்ணையும், இறுதியில் அழிவையும் கொண்டுவந்துவிடும். பொறாமையானது . . . சிந்தனை வடிவிலுள்ள பாவமாகும்; சிந்தனை வடிவில் பொல்லாப்பானதாகும்; மேலும் கிரியை வடிவில் பாவத்திற்கும், பொல்லாப்பிற்கும் நேராக விரைவாய் வழிநடத்திடுவதற்கு மிகவும் ஏதுவான ஒன்றாகும்; இதன் விளைவு மனுஷர் தீட்டுப்படுவதாகும். ஒருமுறை மனமானது பொறாமையினால் விஷமாக்கப்படுமானால், அதினின்று முற்றிலுமாக சுத்திகரிக்கப்படுவதற்கு மிகுந்த சிரமமுண்டு; அது மிகவும் விரைவாக அதைச் சுற்றியுள்ள அனைத்தையும், அதன் நிறத்திற்கும், இயல்பிற்கும் மாற்றிக்கொண்டு வந்துவிடும். இந்தப் பாவம் முழுமையடையுமானால், வளருவதற்கு அனுமதிக்கப்படுமானால், வீழ்த்தப்படவில்லையானால், ஜெயங்கொள்ளப்படவில்லையானால், இது மரணத்தைக்கொண்டு வந்துவிடும். கர்த்தருடைய பின்னடியார்கள் அனைவரும் இந்தப் பாவத்திற்கு எதிராய் விழிப்போடு காணப்பட வேண்டும்; மேலும் எந்த ஒரு ஸ்தானத்திலாகிலும், அவரது வேலைக்காரர்களாக அல்லது வாய்க்கருவிகளாகக் காணப்படும் மகா கனத்தினைப் பெற்றிருப்பவர்களே, இதற்கு அதிகம் விழிப்போடு காணப்பட வேண்டும். ஒருவேளை தாவீதும், சவுலும் இத்தகைய உயர்ந்த ஸ்தானங்களில் காணப்பட்டிருந்திருக்க மாட்டார்களானால், இவர்களுக்கிடையே பொறாமையும், போட்டியும், பகைமையும் உருவாகுவதற்கு வாய்ப்புகளே இருந்திருக்காது.

பொறாமைகொண்ட சவுல், ஒரு பொல்லாத ஆவியினால், ஒரு தீய பண்பினால் கலங்கடிக்கப்பட்டார் என்று (10-ஆம் வசனத்தில்) வாசிக்கையில், நாம் ஆச்சரியமடைகிறதில்லை. பொல்லாத ஆவி எனும் வார்த்தையினை, விழுந்துபோன ஆவி ஒன்று, பிசாசு ஒன்று அவரைக் கலங்கப்பண்ணினது என்று அர்த்தம் கொடுப்பதாக நாம் புரிந்துகொள்ள வேண்டும். அன்பு, பொறுமை, சந்தோஷம் மற்றும் சமாதானம் என்பவை பரிசுத்த ஆவியின் அம்சங்களாக, அதாவது தேவனுடைய பண்புகளாக இருப்பதுபோல, பகைமை மற்றும் பொறாமையின் ஆவி என்பது, தேவனால் வரவிடப்பட்ட பொல்லாத ஆவியாக அல்லது பண்பாகக் காணப்படுகின்றது என்று நாம் நிச்சயமாய் அறிவோம்; தேவனால் வரவிடப்பட்டது என்கிறபோது, அது தேவனுக்கு எதிரான, தேவனுக்குத் தொலைவான ஒன்று என்று நாம் நிச்சயமாய் அறிவோம். சவுலை ஆட்கொண்டுள்ள இத்தகைய பொல்லாத ஆவியானது, தேவனுக்குத் தூரமான அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட முடியாத ஆவியாய்க் காணப்பட்டது என்பதை நாம் அடையாளங்கண்டுகொள்ளலாம்; இன்னுமாகச் சவுல் இஸ்ரயேலின் அரியணையில் தேவனால் அபிஷேகிக்கப்பட்ட பிரதிநிதியாகக் காணப்பட்டபடியால், தெய்வீக அனுமதி இல்லாமல் பொல்லாத ஆவியானது சவுலின்மீது கட்டுப்பாட்டினை அடைந்திருக்கமுடியாது என்றும்கூட நாம் அனுமானித்துக்கொள்ளலாம். பூர்வகாலத்தில் தேவ மனுஷர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு தெய்வீகத் தீர்ப்புகளை எடுத்துக்கூறுவது மற்றும் எழுதுவதுபோலவே, சில மனுஷர்கள் மாறுபாடானவைகளைப் பேசுவதற்கும், எழுதுவதற்கும் பொல்லாத ஆவியினால் முற்காலங்களில் ஏவப்பட்டுள்ளனர், இன்றும் சிலசமயம் ஏவப்படுகின்றனர். இதுவே 1 சாமுயேல் 18:10-ஆம் வசனத்தில் தீர்க்கத்தரிசனம் சொன்னான் என்று இடம்பெறும் வார்த்தையின் அர்த்தமாகும். சவுல் தனது கைகளில் ஈட்டியைப் பெற்றிருந்தபோது, ஞானமற்ற காரியங்களை, தகாத காரியங்களை மதியீனமாய்ப் பேசிக்கொண்டிருந்தார். சவுலினுடைய மனச்சோர்வினை அகற்றும் நோக்கத்திற்காக, ஒரு நண்பனாக, கூட்டாளியாக சுரமண்டலத்தை இசைத்துக்கொண்டிருந்த, அவரது உண்மையும், தாழ்மையுமான (தாவீதுக்கு) இளைய தளபதிக்குத் தீங்குபண்ண, சவுல்மேல் வந்தமர்ந்த பொல்லாத ஆவி, அவரது ஈட்டியினை எய்துவிட ஏவிற்று. 11-ஆம் வசனத்தில் (ஆங்கிலத்தில்) இடம்பெறும் Cast எனும் வார்த்தையானது motion என்கிற வார்த்தையைவிட மிகவும் அழுத்தம்கொடுக்கும் வார்த்தையாகக் காணப்படுகின்றது; சவுல் உண்மையில் ஈட்டியை எறிந்தார். (1 சாமுயேல் 19:10)



**தாவீதைக் கொல்லுவதற்கான சவுலின் முயற்சி - Gustave Dore'**

தாவீது அஞ்சாதவராகவும், பயமற்றவராகவும் காணப்பட்டார்; சவுல் மனச்சோர்வினுடைய தாக்கத்தின்கீழ்க் காணப்பட்டிருந்தபோதிலும், இவருக்கு முன்பு மறுபடியும் மறுபடியுமாகப் போய் நின்றவராகத் தாவீது காணப்பட்டார். சவுலுக்குத் தப்பி விலகிச் செல்வது என்பது ஏற்ற காரியம் என்றும், கடமை என்றும் தாவீது உணந்தவராகக் காணப்பட்டபோதிலும், அவர் பயந்ததாக எங்குமே குறிப்பிடப்படவில்லை; இன்னுமாகத் தன்னைப் பாதுகாப்பதில் தேவனுடைய வல்லமை செயல்பட்டது பற்றின ஞாபகம் அவருக்குத் தொடர்ந்து காணப்பட்டது என்பதாகத் தெரிகின்றது; இன்னுமாக ஏற்றகாலத்தில் இராஜாவாகும்படிக்குத் தேவன் தன்னை ஏற்கெனவே அபிஷேகித்துள்ளார் எனும் உண்மையும் அவரது ஞாபகத்தில் காணப்பட்டது. இத்தகைய விசுவாசமும், திடமனதும், நிஜமான தாவீதின் அங்கத்தினர்கள் அனைவருக்கும் நல்லதொரு படிப்பினையைச் சுட்டிக்காட்டுகின்றது. எதுவுமே நம்மை எந்த விதத்திலும் பாதிப்பிற்குள்ளாக்குவதில்லை. சில காரியங்கள், நமது மாம்சத்தின் நலன்களிலோ அல்லது சௌகரியங்களிலோ அல்லது வாழ்க்கையின் போக்கையோ குறுக்கிடலாம்; எனினும் நாம் மாம்சத்தில் இல்லாமல் ஆவியில் காணப்படுகின்றோம் என்பதையும், புதுச்சிருஷ்டிகளாகிய நமக்குத் தேவன் இராஜ்யத்தை வாக்களித்துள்ளார் என்பதையும் நினைவுகூருகையில், வெளியிலிருந்து வரும் எந்தச் செல்வாக்குகளும் நமது உண்மையான நலன்களையோ, நமது ஆவிக்குரிய நலன்களையோ குறுக்கிட முடியாது என்றும், தம்முடைய உண்மையுள்ளவர்களுக்குக் கர்த்தர் வாக்களித்துள்ள இராஜ்யத்தின் மகிமைகளை நாம் அடைவதைத் தடைபண்ணிட முடியாது என்றும் நம்மால் உணர்ந்துகொள்ள முடியும். கர்த்தர்மீதான நம்பிக்கையினையும், அவருக்கு நாம் கொண்டிருக்கும் உண்மையினையும் நாம் இழக்கும் காரியம் மட்டுமே, நம்மை அவரிடமிருந்தும், அவரது வாக்குத்தத்தங்களிலிருந்தும் பிரிக்க முடியும்.

தாவீதின்மீதான சவுலின் பொறாமையோடுகூட, அவரைக்குறித்த பயமும் சவுலுக்கு இருந்தது. தாவீதுமீது தனக்கு இருக்கும் பகைமையினையும், எதிர்ப்பினையும் தான் பகிரங்கமாய் வெளிப்படுத்தியிருந்தபோதிலும், சிங்கத்தைத் தாக்கின பயமற்ற அந்த இளைஞனாகிய தாவீது, தன்னை விட்டுவைப்பாரா என்று சவுல் சந்தேகத்திற்கிடமின்றி அநேகந்தரம் சிந்தித்துப் பார்த்திருக்க வேண்டும். கர்த்தர் தாவீதோடுகூட இருக்கின்றார், ஆனால் தன்னோடு இல்லை என்று சவுல் உணர்ந்துகொண்டார். தாவீது அரண்மனையில் காணப்படுவது சவுலுக்கு வெறுப்பாய் இருந்தது; மேலும், தாவீது தவிர்க்கப்பட முடியாதவரானபடியால், இராஜ்யபாரத்தினுடைய நலனுக்கடுத்த காரியங்களில் பல்வேறு பொறுப்புகளிலும், சேனைகளிலும் பணியமர்த்தப்பட்டார்; அதுவும் தாவீது முன்யோசனையில்லாமல் எதையேனும் செய்வாரானால், அதை வைத்து ஜனங்களின் கோபத்தை அவருக்கு எதிராகத் திசைத்திருப்பிவிடலாம் என்ற எதிர்பார்ப்பிலும், ஏதேனும் தாக்குதலில் தாவீது காயமடைவார் அல்லது கொல்லப்படுவார் என்ற எதிர்பார்ப்பிலும், தாவீது இப்படிச் சவுலினால் பணியமர்த்தப்பட்டார். ஆனால் அப்போஸ்தலன் விவரித்துள்ளதுபோன்று கர்த்தருடைய ஆவி என்பது தெளிந்த புத்தியுள்ள மனதின் ஆவியாக காணப்படுகின்றது; மேலும் தாவீது எந்த அளவுக்குக் கர்த்தரை விசுவாசித்து, அந்த விசுவாசத்தினால் வழிகாட்டப்பட்டாரோ, அந்த அளவுக்குத் தனது காரியத்தினைப் புத்தியோடு செயலாற்ற முடிந்தவராகவும், ஜனங்களுடைய அங்கீகரிப்பை வெல்ல முடிந்தவராகவும், சவுலை பயமடையச் செய்தவராகவும், மலைக்கப் பண்ணினவராகவும் தாவீதினால் காணப்பட முடிந்தது.

இப்பாடமானது கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களுக்கும், தற்காலத்திலுள்ள உலகத்திற்கும் இடையிலுள்ள உறவினை ஓரளவுக்குச் சித்தரிக்கின்றதாய் இருக்கின்றது. உலகப்பிரகாரமானவர்கள் அதிகாரத்தை உடையவர்களாகவும், செல்வாக்குப் பெற்றவர்களாகவும் இருக்கின்றனர், எனினும் தங்கள்மீது தெய்வீகத் தயவு இல்லை எனும் உண்மையினை உணர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர்; இன்னுமாகத் திவ்விய ஏற்பாட்டில் ஒரு யுக மாற்றம் சம்பவிக்கப்போகின்றது என்றும், சபையின் லவோதிக்கேயா பாகம் கர்த்தருடைய வாயாக இருப்பது நிறுத்தப்படும் மற்றும் வாயினின்று வாந்திப்பண்ணிப்போடப்படும் என்றும், உலகத்தின்படி கல்விமான்களாக அல்லது பிரபுக்களாக அல்லது வல்லவர்களாக இராத உண்மையுள்ள சிறுமந்தையினர் இராஜ்யத்தை அதிகமான வல்லமையிலும், மகிமையிலும் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்றுமுள்ள ***உண்மைகளை*** உணர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். எனினும் தங்கள் நடுவே அந்த அபிஷேகிக்கப்பட்ட வகுப்பார் காணப்படுகின்றனர் என்றும், அன்றாடம் அவர்கள் தங்கள் மத்தியில்தான் புழங்கிக்கொண்டிருக்கின்றனர் என்றும் இந்த உலகப்பிரகாரமானவர்கள் உண்மையில் அறிந்துகொள்வதில்லை; எனினும் தங்களைக்காட்டிலும் அதிகமாய்க் கர்த்தருடைய ஆவியைப் பெற்றிருப்பவர்கள்மீது, இதினிமித்தம் பொறாமை கொள்கின்றனர்; மேலும் தங்களிடத்தில் இருப்பவைகளைவிட பரிசுத்தமாய்க் காணப்படுபவைகளை, மேம்பட்டவைகளை மற்றும் சிறப்பானவைகளைக் காண்கையில் அவைகளை வெறுக்கின்றனர். சிலசமயங்களில் இவர்களது பொறாமையானது கிட்டத்தட்ட கொலை பாதகத்திற்கு நேராகவே வழிநடத்திவிடுகின்றது; தாவீது வகுப்பார் கர்த்தரோடு நெருக்கமான உறவினை வைத்திருப்பதின் காரணமாகவும், இவ்வகுப்பாருடைய இருதயங்களிலும், ஜீவியங்களிலும் அவரது ஆசீர்வாதம் வெளிப்படுகிறதின் காரணமாகவும், இவ்வகுப்பாரைக் கண்டு இவர்கள் அஞ்சுகின்றனர் மற்றும் பகைக்கின்றனர். நமது கர்த்தர் இந்த யுகத்திற்கு நிழலாய்க் காணப்பட்ட யூத யுகத்தினுடைய இறுதியில், இத்தகைய ஓர் இருதய நிலைமை காணப்பட்டது எனச் சுட்டிக்காண்பித்துள்ளார். அக்காலத்திலுள்ள மதசம்பந்தமான ஜனங்களைக்குறித்து அவர்: இருளானது ஒளியைப் பகைக்கின்றது; பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான். சத்தியத்தின்படி செய்கிறவனோ, தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான் என்றார் (யோவான் 3:20-21). இப்படியாகச் சவுல் மற்றும் தாவீதிற்கு இடையேயும், கர்த்தருடைய முதலாம் வருகையின்போது இருளை விரும்பினவர்கள் மற்றும் ஒளியை விரும்பினவர்களுக்கு இடையேயும் பிரிவினை காணப்பட்டது. அதுபோலவே இன்று ஒளியையும், சத்தியத்தையும் சிநேகித்து, பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்படுகிறவர்களுக்கும், வேறே மனநிலையினை உடையவர்களுக்கும் இடையே ஒரு பிரிவினை துரிதமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

கர்த்தருடைய உண்மையுள்ளவர்களை ஆறுதல்படுத்தும் மற்றும் ஆதரிக்கும் வார்த்தைகளாக, நம்முடைய ஆதார வசனமானது மனதில் நிறுத்தப்பட வேண்டும். இது தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் என்று புதிய ஏற்பாட்டில் இடம்பெறும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளுக்கு முழுவதும் இசைவாகவே உள்ளது.

R4218

# பொறாமை மற்றும் கொலைபாதகத்தின் ஆவி

## 1 சாமுயேல் 18:6-16

தேவனாகிய கர்த்தர் சூரியனும், கேடகமுமானவர். - சங்கீதம் 84:11

இப்பாடமானது கர்த்தருக்கு இசைவான ஓர் ஆவிக்கும் அல்லது மனநிலைக்கும் மற்றும் கர்த்தருக்கும், அவரது ஏற்பாடுகளுக்கும் இசைவில்லாத ஓர் ஆவிக்கும் அல்லது மனநிலைக்கும் இடையிலுள்ள வேறுபாட்டினை காண்பித்துத் தருகின்றது. கர்த்தருக்கு இசைவான ஆவியானது, ஆடுகளை மேய்க்கும் சிறுவனாகிய தாவீதில் வெளிப்படுகின்றது; இவர் இராஜாவாகும்படிக்கு இரகசியமாக அபிஷேகம்பண்ணப்பட்டு, பிற்பாடு கோலியாத்தை வீழ்த்தினதின் காரணமாக பிரபலமானார். சவுலைக்குறித்த பதிவைப் பொருத்தமட்டில், அவர் ஒரு பொல்லாத அல்லது தீய ஆவியினால் பீடிக்கப்பட்டிருந்தார் என்று பார்க்கின்றோம். கர்த்தருடைய ஆவியோ, தாவீது அபிஷேகம்பண்ணப்பட்ட நாள் முதற்கொண்டு, அவரிடத்தில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுவிசேஷயுகம் முழுவதும் பரிசுத்த ஆவியினுடைய அபிஷேகத்தின்கீழ்த் தேவனுடைய ஜனங்கள் அனுபவிக்கும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதல், புத்திரர்களெனப் பரிசுத்த ஆவியினால் முத்திரிக்கப்படுதல் எனும் மிக மேன்மையான ஆசீர்வாதங்களோடுகூட, முற்காலங்களில் கர்த்தருடைய ஆவியானது கொணர்ந்த ஆசீர்வாதங்களைச் சம்பந்தப்படுத்தி, நம்முடைய மனங்களில் நாம் குழப்பிக்கொள்ளக்கூடாது. அக்காலத்திலும், இக்காலத்திலும் கர்த்தருடைய ஆவியைப் பெற்றுக்கொண்டவர்களுடைய அனுபவங்களை ஒப்பிட்டுப்பார்க்கையில், அநேக காரியங்கள் சந்தேகத்திற்கிடமின்றி ஒன்றுபோல் காணப்படவே செய்யும்; ஆனாலும் பணிவிடை வீட்டாரால் அனுபவிக்க வாய்ப்பிருந்த எந்த ஒரு காரியங்களைக்காட்டிலும், புத்திரர் வீட்டாரென நாம் இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருப்பவைகளே மிக மேன்மையானவைகளாக இருக்கும் என்பது நிச்சயமே; ஏனெனில் தேற்றுவதற்கும், சத்தியத்தில் வழிகாட்டுவதற்கும், புதிய சுபாவத்தில் முத்திரிப்பதற்கும் ஏதுவான பரிசுத்த ஆவியானது அக்காலங்களில் கொடுக்கப்படவில்லை; காரணம் இயேசு அப்போது மகிமைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையால் பெந்தெகொஸ்தே நாளில் அருளப்பட்டதும், சபையால் அனுபவிக்கப்பட்டதுமான ஆவியின் ஆசீர்வாதங்களானது, மணவாட்டி வகுப்பாருக்குரிய கர்த்தருடைய விசேஷித்த ஆசீர்வாதமாகக் காணப்படுகின்றது; மேலும் இவர்களுக்காகப் பரிந்துபேசுபவர், தம்முடைய சொந்தப் பலியினுடைய புண்ணியத்தோடு, தேவனுடைய சந்நிதியில் பிரவேசித்தப்படியினாலேயே, அந்த ஆசீர்வாதமானது அருளப்பட முடிந்தது.

பணிவிடை வீட்டாருக்கு எந்த அளவில் பரிசுத்த ஆவியானது அருளப்பட்டிருந்தாலும், அந்த ஆவி அவர்களுக்கு நிதானத்தையும், தேவனோடு ஐக்கியத்தினையும், அவருடைய சித்தம் செய்வதற்குரிய வாஞ்சையினையும், அவரிடத்தில் சமாதானத்தையும் அருளும் விதமான ஆவியாகக் காணப்பட்டது; மேலும் அது இந்த விதத்தில் தெளிந்த புத்தியின் ஆவியாகக் காணப்பட்டு, சோதனைகள் மற்றும் ஏமாற்றமான தருணங்களில் இயல்பாக வருவதற்கு வாய்ப்புள்ள பதற்றத்திலிருந்தும், வருத்தத்திலிருந்தும், சோர்விலிருந்தும், துயரத்திலிருந்தும் அந்த ஆவியைப் பெற்றிருக்கும் நபரை பெருமளவில் விடுவித்தது. சவுலைக்குறித்துப் பார்க்கும்போது, அவருக்குள் பொல்லாத ஆவி ஒன்று வந்ததாகப் பதிவுசெய்யப் பட்டுள்ளது; ஆனால் இது அவர் பிசாசினால் ஆட்கொள்ளப்பட்டார் என்று அர்த்தமாகாது; மாறாக சவுலிடம் முன்பு காணப்பட்ட அமைதலுள்ள, சமாதானமுள்ள மற்றும் விசுவாசமுள்ள மனதிற்குப் பதிலாக, தீய மனமானது, மாறுபாடுள்ள மனமானது, சந்தோஷமற்ற அல்லது சோர்வுற்ற மனமானது வந்தது.

## கர்த்தரிடமிருந்து வந்த பொல்லாத ஆவி

ஆனால் தேவனிடமிருந்து ஒரு பொல்லாத ஆவி சவுலின்மேல் இறங்கிற்று என்றும், அவர் வீட்டுக்குள்ளே தீர்க்கத்தரிசனம் சொல்லிக்கொண்டிருந்தார் என்றும் நாம் வாசிக்கின்றோம். இது பேய் பிடித்துவிட்டதுபோல் தோன்றலாம் அல்லது Dr. Merrine-அவர்கள் தன்னுடைய Bibliotheca Sacra எனும் படைப்பில் பதிவுசெய்துள்ளதுபோலவும் இருக்கலாம்; அவர் சவுலுக்கு Psychic epilepsy/மனம் சார் வலிப்பு நோய் இருந்ததாகத் தெரிவித்துள்ளார்; அவரது எழுத்துகள் பின்வருமாறு: Epilepsy/ மனம் சார் வலிப்பு நோய் என்பது ஆரோக்கியமான மன வளர்ச்சி காணப்படும்போதும், மிகவும் அதிகமான அறிவாற்றல் காணப்படும்போதும்கூட இணைந்து காணப்படும்; மேதாவிகளுக்கும்கூட இந்நோய் காணப்படும். Julius Caesar, Augustus Caesar, Napoleon, Petrarch, Mohammed, Handel மற்றும் இன்னும் பல மாமனிதர்கள், மனம் சார் வலிப்புநோய் உடையவர்களே ஆவார்கள். இம்மாதிரியான மனநோய் உடையவர்களுக்குச் சில விஷயங்கள் பொதுவானவைகளாகவும், இவர்களது குணங்களில் ஆதிக்கம் செய்பவைகளாகவும் காணப்படும்; உதாரணத்திற்குக் கட்டுக்கடங்கா கோபத்தின் வெளிப்பாடு காணப்படும்; சில தருணங்களில் உச்சக்கட்டமான பரவச நிலைமையும், பின்னர் மறுபடியும் மந்தமான நிலைமையும் காணப்படும். இம்மாதிரியான நிலைமையில் காணப்படுகையில், எண்ணற்ற குற்றச்செயல்கள் செய்யப்படுகின்றன.

கர்த்தர் இத்தகைய தீமையான செல்வாக்கினை சவுல்மீது செயல்படுத்தினார் என்ற விதத்தில் இந்தப் பொல்லாத ஆவி கர்த்தரிடமிருந்து வந்தது என்று நாங்கள் புரிந்துகொள்ளாமல், மாறாக அவ்வசனத்தில் இடம்பெறும் “from”/விடப்பட்ட எனும் வார்த்தையினை முற்றிலும் வேறுபட்ட கோணத்தில் பார்க்கின்றோம்; இதன் அர்த்தத்தினை “not of,” “contrary to”/ அப்பாற்பட்ட என்ற விதத்தில் பார்க்கின்றோம்; “An evil spirit (apart) - from the Lord was upon Saul/கர்த்தருக்கு அப்பாற்பட்ட பொல்லாத ஆவி சவுலின்மேல் வந்தது. கோபம், குரோதம், பகை, பொறாமை, சண்டை முதலானவைகள் மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகளாயிருக்கின்றது என்று அப்போஸ்தலன் நம்மிடம் கூறுகின்றார்; ஆகையால் சவுலும் சரி, வேறு யாராயினும் சரி எந்த அளவுக்கு எதிராளியானவனுடைய இந்தக் கிரியைகளுடன் ஒன்றுபட்டு விடுகின்றார்களோ, அந்த அளவுக்கு அந்நபர் பொல்லாத ஆவியினாலும், பொல்லாத பண்புகளினாலும், எதிராளியானவனின் ஆவியினாலும் கட்டுப்படுத்தப்பட்டவராய்க் காணப்படுவார்; இன்னுமாக எதிராளியானவனுடன், அறிந்து உணர்ந்தவர்களாக ஆவியில் உடன்பாட்டிற்கு வருகிறவர்கள், தங்களுக்குள் பொல்லாத ஆவி உட்புகுவதற்கும், அதனால் ஆட்கொள்ளப்படுவதற்கும் தங்களை ஆளாக்கிக்கொள்வார்கள்.

நீதியின்மீதும், சத்தியத்தின்மீதும் பற்றுள்ள நிலையில் தங்கள் மனங்களைப் பெற்றிருப்பவர்கள், இதன் விளைவாகப் பொல்லாத ஆவிகள் உட்புகுவதிலிருந்து பாதுகாக்கும் பாதுகாப்பான செல்வாக்குகளினால் சூழப்பட்டிருப்பார்கள் என்பது சந்தேகத்திற்கிடமின்றி உண்மையாகவே உள்ளது. இதையே வேதவாக்கியங்களும் தெரிவிக்கின்றன; இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள் அல்லவா? கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார் (எபிரெயர் 1:14; சங்கீதம் 34:7). ஆனால் கர்த்தருக்காகக் கொண்டிருக்கும் பயபக்தியினின்றுள்ள எவ்விதமான விலகிச்செல்லுதலும் . . . நீதிக்கும் சத்தியத்திற்குமான நேர்மையினின்றுள்ள எவ்விதமான விலகிச்செல்லுதலும், கர்த்தருடைய தூதர்களின் இந்தப் பரிசுத்தமான

பாதுகாக்கும் செல்வாக்குகளினின்று/வல்லமையினின்று ஒருவரைப் பிரித்துத் தனியாக்கிவிடுகின்றது; பின்னர் இவர்களது இருதயம் மற்றும் மனமானது விழுந்துபோன தூதர்களின் குரோதத்தனமான செல்வாக்குகளின் தாக்கத்திற்கு உள்ளாகுகின்றது; இம்மாதிரியானவர்களுக்குள் புகுவதற்கும், முன்பில்லாதளவுக்கு இவர்களை மோசமாய் அசுசிப்படுத்துவதற்கும் என்று விழுந்துபோன ஆவிகள் எப்போதுமே ஆயத்தமாய்க் காணப்படுகின்றனர். இப்படிப்பினையானது நமது ஆண்டவருடைய உவமை ஒன்றினால் வலியுறுத்தப்படுகின்றது; அந்த உவமையில் ஒரு மனுஷனிடமிருந்து பிசாசு துரத்தப்பட்டு, அவனுடைய இருதயம் பெருக்கி, ஜோடிக்கப்பட்டிருந்தது; ஆனால் நல்ல மேய்ப்பனைத் தன் ஆத்துமாவில் ஏற்றுக்கொண்டிருந்தும், அவன் தன் சொந்தப் பலத்தால் நீதிக்கு நிற்க முயன்றபடியால், முந்தினதிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளினால் தாக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டான் என்றும், அம்மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிகக் கேடுள்ளதாயிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. லூக்கா 11:24-26.

இப்படியாகவே சவுலின் விஷயத்திலும் காணப்பட்டது; சுபாவ மனுஷனாக இவரிடத்தில் நிச்சயமாகவே சில உயர் பண்புகள் காணப்பட்டன; மேலும் இதன் காரணமாகவே சாமுயேல் இவரை அன்புகூர்ந்தார்; ஆனாலும் கர்த்தருக்குத் தன்னை முழுமையாய் அர்ப்பணம்பண்ண இவர் தவறிப்போனபடியால், இவர் தன் சொந்தச் சித்தத்தினாலும், சுயநலத்தின் ஆவியினாலும் தொடர்ந்து சோதனைக்குள்ளானார்; இந்த ஆவியானது, இவர் கர்த்தருக்குப் பிரியமான ஊழியக்காரனாய் இருப்பதற்கு இடையூறாயிருந்தது. இதன் விளைவாகக் கர்த்தருடைய விசேஷித்தப் பாதுகாப்பும், உதவியும் இவருக்கு அருளப்படவில்லை; எனவே சுயநலத்தின் ஆவியானது வளர்ந்தோங்கினது. தன்னிடத்திலும், தனது காரியங்கள் அனைத்திலும் தேவனுடைய சித்தம் நிறைவேறும்படியாக இவர் விரும்புவதற்குப்பதிலாக, இவருடைய இருதயத்தில் எதிர்மாறான சுயநலத்தின் மற்றும் சுயசித்தத்தின் ஆவியே பிரதானமாய் வளர்ந்துகொண்டிருந்தது என்று நம்முடைய பாடத்தில் பார்க்கின்றோம். இம்மாதிரியான இருதயத் தன்மைகளுக்கு, இத்தன்மையை வெளிப்படுத்துவதற்குரிய வாய்ப்புகள் மட்டுமே தேவையாக இருக்கின்றன; மேலும் இத்தகைய வாய்ப்பானது தாவீது தொடர்புடைய விஷயத்தில் சவுலுக்குக் கடந்துவந்தது. கோலியாத்தை வீழ்த்தின பிற்பாடு, தாவீதின் கீர்த்தி இஸ்ரயேலின் பட்டணங்கள் எங்கும் பெரிதளவில் பரவின. தாவீது, சேனையில் சேர்ந்து பெலிஸ்தர்களோடு யுத்தம்பண்ணி வெற்றி கிடைக்கவே, அக்கால வழக்கத்தின்படி பல்வேறு பட்டணங்களின் வாசல்களில் நின்று, வாசல் வழியே உட்பிரவேசிக்கும் வெற்றியடைந்த போர் வீரர்களை மரியாதையுடன் வரவேற்கும் ஸ்திரீகளினாலும், பிள்ளைகளினாலும் பாடி வாழ்த்தப்பட்டார். எல்லா இடங்களிலும் சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்ற பாடல் கொஞ்சம் கொஞ்சமாகப் பரவினது.

இராஜாவைத் தாவீது முழுவதுமாக மறைத்து, உயர்ந்துவிட்டார் எனும் அளவுக்குள்ள கனமானது, அன்றைய நாளின் (தாவீதாகிய) இளம் கதாநாயகனுக்கு வழங்கப்பட்டதின் நிமித்தம், பொறாமைகொள்ளாமலும், அவமதிப்பாக எண்ணாமலும் காணப்படும்படிக்கு, சவுலின் ஸ்தானத்தில் காணப்படும் எந்த ஒரு மனுஷனிடமும் எதிர்பார்க்கப்படுவது சரியே. சவுல் இராஜாவாவும் சரி அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி, இவர்களது சுபாவ உணர்வு என்னவாகக் காணப்பட்டிருந்தாலும் சரி, இவர்களிடம் என்ன தகுதியான உணர்வு காணப்பட்டிருக்க வேண்டும் என்பது தொடர்புடைய விஷயத்தில் நமக்கு எந்த ஐயமுமில்லை. இராஜா களிகூர்ந்திருக்க வேண்டும்; மேலும் முழுத்தேசத்தையும் ஆசீர்வதித்த வீரத்தைப் பெற்றிருந்த தேசபக்தியுள்ள இந்த இளைஞனை கனப்படுத்துவதில் சவுல் மகிழ்ச்சியாய் இருந்திருக்க

வேண்டும். இப்படிச் செய்திருந்திருப்பாரானால், இது தெளிந்த புத்தியின் மனதை வெளிப்படுத்தியிருந் திருக்கும்; இன்னுமாக இச்செயல் சவுலுக்குத்தானே கனத்தைக் கொண்டுவந்தி ருக்கும். ஆனால் இப்படியாக இல்லாமல், சவுலின் விஷயம் வேறுபட்டு காணப்பட்டதை நாம் காண்கையில், அதுவும் இம்மாதிரியான காரியங்கள் தொடர்புடைய விஷயத்தில் உலகத்திடம் பொதுவாகக் காணப்படும் ஆவியை, அதாவது சுயநலம் மற்றும் பெருமையின் ஆவியைக்குறித்து அறிந்தவர்களாக நாம் கண்ணோக்குகையில், சவுலின் விஷயம் நம்மை ஆச்சரியத்துக்குள்ளாக்குவதில்லை. சவுல் கோபத்தினாலும், பொறாமையினாலும் நிரம்பினவராகி, அந்நாள் முதற்கொண்டு தாவீதைக் காய்மகாரமாய்ப் பார்த்தார். தாவீதினிடத்தில் சவுல் தனக்குள திரானஒ ருபே பாட்டியாளனைக்க ண்டார்; மேலும்த ாவீதுக ர்த்தருக்குஓ ர்உ ண்மையான ஊழியக்காரன் என்றும், கர்த்தருடைய ஆசீர்வாதம் தாவீதின்மீது காணப்படுகின்றது என்றும் சவுல் உணர்ந்துகொண்டார். ஆனால் யோனத்தானோ வேறுபட்ட மனநிலைமையினைக் கொண்டவராக இருந்தார்; மேலும் தாவீதிலுள்ள எந்தப் பண்புகள், தாவீதை தன் தகப்பன் வெறுக்கும்படி செய்ததோ, அந்தப் பண்புகளின் காரணமாக யோனத்தான் தாவீதை அதிகமதிகமாய் அன்புகூர்ந்தார்.

## ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்குரிய பாடங்கள்

அபிஷேகிக்கப்பட்டவராகிய தாவீது, கர்த்தரால் அபிஷேகிக்கப்பட்டவர்களாகிய சபையை அடையாளப்படுத்துகின்றார் என்பதையும், சபை தங்கள் தலையாகிய இயேசுவோடுகூடப் பிற்பாடு உலகத்தை ஆசீர்வதிப்பதற்காகவும், சீர்தூக்கிவிடுவதற்காகவும், சாத்தான் மற்றும் பாவம் மற்றும் மரணமாகிய நுகத்தினின்று அனைவரையும் விடுவிப்பதற்காகவும் வேண்டி, உலகை ஆளுகைசெய்யும் சிங்காசனத்தில் அமருவார்கள் என்பதையும் நாம் மனதில் வைத்துக்கொள்கையில், நாம் இப்பாடத்தினுடைய சாரத்தினை இந்த வகுப்பாருக்குச் சரியாய்ப் பொருத்திப்பார்க்க முடிபவர்களாய் இருப்போம். பொல்லாங்கன்மீதும், தங்கள் சொந்தச் சரீரங்களில் பாவத்தின் வல்லமைமீதுமுள்ள இவர்களது வெற்றிகளும், இன்னுமாக விசுவாசத்திற்கான நல்ல போராட்டத்தின் விஷயத்திலுள்ள இவர்களது பொதுவான போராட்டங்களும், இவர்களின்மீது யோனத்தான் வகுப்பாரிலுள்ள சிலரின் அங்கீகரிப்பையும், கர்த்தருடைய வார்த்தைகளிலுள்ள மகாமேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களின் ஆறுதலையும் கொண்டுவருகின்றது (2 பேதுரு 1:4). எனினும் பாவத்தின்மீதான இந்த வெற்றிகள் என்பது இந்த வகுப்பாருக்கு, உலகத்தாரின் அன்பைப் பெற்றுத்தராது; இன்னுமாகக் கர்த்தருடைய ஆவியைப் பெற்றிராமல், மாறாக சுயநலத்தின் ஆவியினை, அதாவது சவுலில் வெளிப்பட்ட ஆவியினைப் பெற்றிருப்பவர்களின் அன்பைப் பெற்றுத்தராது. இவைகளைக் குறித்தே நமது ஆண்டவர்: உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள்; அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள் என்று கூறினபோது முன்னெச்சரித்தார். நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாக இருக்கின்றோம் என்றும், நம்முடைய ஒளியைப் பிரகாசிக்கப்பண்ண வேண்டும் என்றும், இப்படிச் செய்வதில் எவ்வளவு உண்மையாகக் காணப்படுவோமோ, அவ்வளவுக்கு வெளிச்சத்திற்குப் பதிலாக இருளையும், நீதிக்குப் பதிலாகப் பாவத்தையும், அன்புக்குப் பதிலாகச் சுயநலத்தையும் அன்புகூரும் இருளின் பிள்ளைகளுடைய எதிர்ப்பு நம்மீது கடந்துவரும் என்றும் ஆண்டவர் நம்மிடம் கூறுகின்றார்.

இப்பொழுது ஆளுகை செய்வதுபோன்று காட்டிக்கொண்டிருக்கும் தற்காலத்திலுள்ள பெயர்ச்சபையில், அதாவது தேவனுடைய பெயரளவிலான இராஜ்யத்தில் உள்ளவர்களை அநேகமாக சவுல் அடையாளப்படுத்தலாம். மனுஷர் மத்தியில் பெயர் பட்டங்களைப் பெற்றிராதவர்களாகவும், தங்கள்

அபிஷேகத்தை மனுஷர் மூலமாய்ப் பெற்றிராதவர்களாகவும், மனுஷரால் அங்கீகரிக்கப்படாதவர்களாகவும் காணப்படுபவர்கள்மீது கர்த்தருடைய ஆசீர்வாதம் காணப்படுவதை உணர்ந்துகொள்ளும் இந்தப் பெயர்ச்சபையினர், அவர்களுடைய வெற்றியின் நிமித்தம் பொறாமைகொள்கின்றனர்; இன்னுமாகப் பாபிலோன் அமைப்புகளைவிட தற்கால சத்தியமானது உலகில் தொடர்ந்து சீராகத் தழைத்தோங்குவதையும் இவர்கள் உணர்ந்துகொள்வதாகத் தோன்றுகிறது. சத்தியத்திற்காக அடையப்பட்ட ஒவ்வொரு வெற்றியும், சபைமீதான கர்த்தருடைய தயவு குறித்த ஒவ்வொரு சான்றும், பெயர்ச்சபையினிடத்தில் கோபத்தின், எதிர்ப்பின், பகைமையின், பொறாமையின், சண்டையின் ஆவியினை - தீய ஆவியினை உருவாக்குகின்றதாய் இருக்கின்றது; அதாவது மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகள் உருவாகுகின்றன.

சவுல் தீமையான ஆவியின்கீழ்த் தீர்க்கத்தரிசனம் உரைத்த காரியமானது, கடந்த காலங்களில் பல்வேறு தருணங்களில் தீய ஆவிகளின் வல்லமை செயல்பட்ட காரியங்களுடன் முழுமையாய் ஒத்துப்போவதாகத் தோன்றுகின்றது. மேலும் சீக்கிரமாய் எதிர்காலத்தில் வெளிப்படும் பாபிலோனின் வல்லமைகுறித்துப் பேசுகையில், நமது கர்த்தர் மிருகத்தின் சொரூபமானது சீக்கிரத்தில் உயிர்பெறும் என்றும், அது தன்னை எதிர்ப்பவர்கள் அனைவரின்மீதும் வானத்திலிருந்து அக்கினி வரும்படியாகக் கூப்பிடும் என்றும் கூறுகின்றார்; அதனோடு முழுமையாய் இசைவும், இணக்கமும் இல்லாதவர்கள் அனைவர்மீதும் சர்வவல்லமையுள்ள தேவனிடமிருந்து சாபமும், பழியும் வருவதாக கர்த்தருடைய நாமத்திலும், வல்லமையிலும் தெரிவித்திடும். அது கசப்பான வார்த்தைகள், தூஷணங்கள், உண்மைகளைத் திரித்தல் எனும் ஈட்டியினால் நம்மை அழித்துப்போடக்கூட நாடும்; அதாவது சவுல் இரண்டுமுறை தாவீதைத் தனது ஈட்டியைக்கொண்டு உருவக்குத்த முயற்சித்தது போன்றதாகும். ஆனால் தாவீது ஈட்டியினால் குத்தப்படாததுபோன்று, கர்த்தர் நம் மாம்சத்திற்கு எதிராக எவைகள் வர அனுமதித்தாலும், நாம் புதுச்சிருஷ்டிகள் என்ற விதத்தில் காயப்படாமல் காணப்படுவோம். அவரது அபிஷேகிக்கப்பட்டவர்களுக்கு - ‘அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடக்கும் (ரோமர் 8:28). நான் அபிஷேகம்பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத் (ஊழியர்களுக்கு) தீங்குசெய்யாமலும் இருங்கள் என்பதாக அவரது வார்த்தைகள் காணப்படுகின்றன (சங்கீதம் 105:15). மறுபடியுமாக ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது (லூக்கா 10:19) - உங்களது உண்மையான மற்றும் மேலான நலன்கள் பாதிப்படையாது என்று அவரது வார்த்தைகள் கூறுகின்றன.

## பொறாமை பாதாளத்தைப்போல் கொடிது

ஞானியினுடைய இந்த வார்த்தைகளானது, பல நூற்றாண்டு கணக்கான உலகத்தினுடைய அனுபவத்தில் உண்மையென மிகுதியாகவே நிரூபிக்கப்பட்டுள்ளது. ஒருவர் பின்வருமாறு கூறியுள்ளார்: பொறாமை என்பது அன்பின் ஒரு வகை என்று சொல்லப்பட்டுள்ளது. எனினும் பொறாமை வந்துவிட்டால், பிள்ளையின் குரல்வளையை நெரிக்கத் தகப்பன் முந்திக்கொள்ளவில்லையெனில், பிள்ளையானவன் தகப்பனை விஷம் வைத்துக் கொன்றுவிடுவான் என்பதேயாகும்.

புதுச்சிருஷ்டிகளுக்கான பாடம் என்னவெனில், நாம் காய்மகாரம்/உள்ளெரிச்சல், பொறாமை, பகை மற்றும் சண்டைச்சச்சரவுகளுக்கு எதிராய் விசேஷமாக விழிப்புடன் காணப்பட வேண்டும். இவைகளின் விஷயத்திலேயே உண்மையுள்ளவர்களுக்கான இறுதி பரீட்சைக் காணப்படும் என்பதில் ஐயமில்லை. யார் நிலைநிற்கக்கூடும்? எனும் கேள்வியானது - கர்த்தருக்காகவும், நீதிக்காகவும், சத்தியத்திற்காகவும்

நிற்போம் என்றும், தேவனுக்காகவும், சகோதர சகோதரிகளுக்காகவும் அன்பு பாராட்டுவோம் என்றும் உள்ள நிலைப்பாட்டினை எடுத்துள்ள யாவருக்குமான கேள்வியாகக் காணப்படுகின்றது. உண்மையாக நாம் நம்முடைய ஜீவியங்களை அர்ப்பணித்திருப்போமானால், கர்த்தருக்கு ஊழியம் புரிவதற்கும், சத்தியத்திற்கு ஊழியம் புரிவதற்கும், சகோதர சகோதரிகளுக்கு ஊழியம் புரிவதற்கும் என்று நம்முடைய ஜீவியங்களை ஒப்புக்கொடுத்திருப்போமானால், நாம் அன்பையும், உண்மையினையும் வெளிப்படுத்த வேண்டியவர்களாக இருப்போம். இப்படியிருக்க நம்முடைய இருதயங்களில் எவ்வித கசப்பான வேர்களும், எவ்வித கசப்பான வார்த்தைகளும், எவ்வித பொறாமையின் எண்ணங்களும் பிரவேசிப்பதற்கு அனுமதிப்போமானால், இது இவற்றை யாருக்கு எதிராகச் செலுத்துகின்றோமோ, அந்தச் சகோதரனையோ அல்லது சகோதரியையோ மாத்திரம் தீட்டுப்படுத்தாமல், நிச்சயமாகவே நம்முடைய சொந்த இருதயங்களையும்கூட விஷமாக்கி, இருதயத்திலுள்ள அன்பின் ஆவியினை, கர்த்தருடைய ஆவியினை அழித்துப்போடும்; இன்னுமாகக் கர்த்தருக்கு அப்பாற்பட்டதும், நம்மிடத்திலிருந்து கடந்து வருகின்றதுமான இந்தப் பொல்லாத ஆவியானது, கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்கள் அநேகரைத் தீட்டுப்படுத்தத்தக்கதாக அவர்களையும் தொற்றிவிடலாம். அப்படியானால், நாம் ஒவ்வொருவரும் எவ்வளவு எச்சரிக்கையோடு காணப்பட வேண்டும்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கின்றேன் என்று நமது ஆண்டவர் சுட்டிக்காட்டியுள்ள அளவுக்கு . . . இன்னுமாக ஒருவர் இன்னொருவரின் நலன்களுக்காகவும், நன்மைக்காகவும் மற்றும் கனத்திற்காகவும் மரிக்க விரும்பும் அளவுக்கு, நம்முடைய எண்ணங்கள், நம்முடைய நோக்கங்கள், நம்முடைய யோசனைகள் அனைத்தும் அன்பின் பிரமாணத்துடன் முழுக்க இசைவுடன் காணப்படுகின்றதா என்று நாம் எவ்வளவாய் ஆராய்ந்துப்பார்க்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

இன்னொரு பக்கத்தில் தாவீதில் காணப்பட்ட கர்த்தருடைய ஆவியானது, இவரை இவரது சத்துருக்களிடம் அன்போடும், இரக்கத்தோடும், பரிவோடும் காணப்படச் செய்தது. சவுல் மிகுந்த கோபத்தில் ஈட்டியை வீசினபோது தாவீது விலகிச் சென்றார் என்பது உண்மையே; எனினும் கர்த்தரிலும், அவரது தெய்வீகப் பராமரிப்பிலுமுள்ள விசுவாசத்தின் காரணமாகவே, தாவீது தொடர்ந்து இராஜாவின் கீதவாத்தியக்காரனாய்க் காணப்பட்டு, இராஜாவிற்கு ஊழியம் புரிந்துகொண்டிருந்தார்; தனது இருதயம் மற்றும் தனது குரலின் இனிமையான இசையினால் சவுலை மகிழ்வித்துக்கொண்டும், அவரின் மனச்சோர்வை விரட்டிக்கொண்டும் இருந்தார். இதுபோலவே நம்மை எதிர்ப்பவர்களிடமும் நாம் நடந்துகொள்ள வேண்டும். நமக்கு எதிராக தீமைசெய்யப்பட்டால், அது நம்மில் விரோதத்தின் ஆவியை உண்டுபண்ணுவதுதான் இயல்பான சுபாவ போக்காக இருக்கும்; இன்னுமாகத் தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும், குற்றப்படுத்துதலுக்குக் குற்றப்படுத்துதலையும் சரிக்கட்டுதல்தான் இயல்பான சுபாவ போக்காக இருக்கும்; இப்படிச் செய்வோமானால் இது நமக்கும் பாதகமாய் இருக்கும்; இன்னுமாக நம்மை எதிர்ப்பவர்களையும் அதிகம் பாதிப்பிற்குள்ளாக்கும் வாய்ப்பும் உள்ளது. தாவீது செய்ததே தகுதியான காரியமாகும்; அவர் தேவனுக்காகக் காத்திருந்தார்; தேவனுடைய ஏற்பாடுகளானது அனுமதித்தவைகளுக்கு அவர் அடிப்பணிந்தவராய்க் காணப்பட்டார். நம்முடைய மற்றும் தாவீதுடைய கணிப்பைப் பொருத்தமட்டில், பரம ஞானத்திற்கு அப்பாற்பட்ட எதுவும், தெய்வீக வல்லமையினால் தடுக்க முடியாத எதுவும் அவருக்கு நேராது. ஆகையால் இந்தச் சோதனையான அனுபவங்களானது, குணலட்சணத்தினுடைய மாபெரும் வளர்ச்சியினை கொண்டுவந்து, தெய்வீகச் சித்தத்திற்கு இசைவாக அவருடைய இருதயத்தைப் பலப்படுத்தியது.

## தேவ ஏற்பாட்டின்படியான மாற்றங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன

பல்வேறு வழிகளில், தாவீதில் விரோதத்தின் ஆவியினை உருவாக்கிட சவுல் முயற்சித்தார்; அவரை இருமுறை கொலைசெய்வதற்கு முயற்சித்ததோடு மாத்திரமல்லாமல், எல்லோர் முன்னிலையிலும் பண்ணின வாக்குறுதியின் ஒரு பாகத்தினை நிறைவேற்றாமலும் காணப்பட்டார்; அதாவது கோலியாத்தை வீழ்த்துகிறவன் தனது மருமகனாக்கப்படுவான் எனும் பாகத்தை நிறைவேற்றாமல் காணப்பட்டார். இதுவரையிலும் சவுல் எவ்வளவு மதியீனமாய், குறுகின பார்வையோடு காணப்பட்டிருந்திருக்கின்றார்! அவர் தேவனுடைய ஏற்பாடுகளை ஏற்றுக்கொண்டு, தாவீதின் விஷயத்திலுள்ள தனது கடமைகளை நிறைவேற்றி இருந்திருக்கலாம்; தாவீதை மருமகனாகப் பெற்றிருந்தால், தேவன் ஏற்பாடுபண்ணியிருந்தபடி தாவீது இறுதியில் இராஜ அதிகாரத்திற்கு வரும்போது, சவுலின் குடும்பம் தாவீதுடன் மிகவும் நெருக்கமாய்க் காணப்பட்டிருந்திருக்கும். ஆனால் வழக்கம்போல் பொறாமையும், பகைமையும் ஒருவரைத் தன் சொந்த நலன்களைப் பார்க்க முடியாதளவுக்குக் குருடாக்கிவிடுகின்றது. ஆகையால் சவுல் தனது மகள், தாவீதின் மனைவியாகாதபடிக்குத், தனது மகளைக் கொடுக்காதிருந்தார்; மேலும் தாவீதைப் படைத்தலைவனாக சேனைக்குள் அனுப்பி வைப்பதே சவுலின் அடுத்தக்கட்ட நடவடிக்கையாக இருந்தது; தாவீது யுத்தத்தில் காண்பிக்கும் துணிவானது, அவருக்கு மரணத்தைக் கொண்டுவந்திடலாம் என்று சவுல் நம்பிக்கைக்கொண்டிருந்தார் மற்றும் இப்படி எதிர்பார்ப்பும் கொண்டிருந்தார். ஆனால் கர்த்தர் தாவீதோடு இருந்தார் மற்றும் அவரை ஆசீர்வதித்தார்! தாவீது தன் செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடந்தான்; கர்த்தர் அவனோடேகூட இருந்தார் என்பதாகப் பதிவு காணப்படுகின்றது. (1 சாமுயேல் 18:14)

இதுபோலவே கர்த்தருடைய ஆவியை அதிக அளவில் பெற்றிருப்பவர்கள் அனைவரின் விஷயத்திலும் காணப்படுகின்றது; இதுபோலவே தங்கள் மனங்களும், தங்கள் இருதயங்களும் பிரகாசிக்கப்படுவதற்கும் மற்றும் சரியான பாதைக்கு நேராய் தாங்கள் வழிகாட்டப்பட பிரகாசிக்கப்படுவதற்கும் வேண்டிய வல்லமையினைப் பெற்றிருப்பவர்கள் அனைவரின் விஷயத்திலும் காணப்படுகின்றது. இவர்கள் அனைவரும் இந்தப் பரம செல்வாக்கின்கீழ் உன்னதமான தேவனுடைய குமாரர்களென ஞானமாயும், விவேகமாயும் நடந்துகொண்டு, பரலோகத்தில் இருக்கின்ற தங்கள் பிதாவை மகிமைப்படுத்தும் விதத்திலும், கர்த்தராம் இயேசுவை மகிமைப்படுத்தும் விதத்திலும் நடந்துகொள்ள வேண்டும்; இன்னுமாக விசுவாச வீட்டாரிலுள்ள யாவருக்கும் தங்களைப் பிரயோஜனமுள்ளவர்களாக ஆக்கிக்கொள்ள வேண்டும்; இன்னுமாகத் தாங்கள் இயேசுவோடுகூட இருந்தவர்கள் என்றும், இயேசுவினால் போதிக்கப்பட்டவர்கள் என்றும் மனுஷர் அடையாளம் கண்டுகொள்ளத்தக்கதாக, மனுஷர் முன்பாகத் தங்கள் வெளிச்சங்களை இவர்கள் பிரகாசிக்கப்பண்ண வேண்டும்.

ஆனால் தாவீது எந்தளவுக்கு ஞானமாய் நடந்துகொண்டாரோ, அந்தளவுக்குச் சவுல் இராஜாவும் அதிகம் பொறாமைகொண்டவரானார். கர்த்தரால் அதிகமதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டவராகவும், தனது தாழ்மையான ஜீவியத்திலும், ஞானத்திலும் தழைத்தோங்கினவராகவும் தாவீது காணப்பட்டபோது, அவர் இராஜாவிடமிருந்து அதிகம் எதிர்ப்பை அடைந்தவரானார். இப்படியாகவே நம் விஷயத்திலும் நிச்சயமாய்க் காணப்படும். நாம் எந்த அளவுக்குத் தெளிந்த புத்தியின் ஆவியினையும், கர்த்தருக்காகவும், சகோதர சகோதரிகளுக்காகவும் வைராக்கியம் கொண்டவர்களாகவும், சத்தியத்துக்குரிய ஊழியத்தில் நம்முடைய ஜீவியங்களை ஒப்புக்கொடுக்கின்றவர்களாகவும் காணப்படுகின்றோமோ, அந்த அளவுக்குக் கர்த்தருக்கு இருதய-இசைவில்லாமல் ஜீவித்துக்கொண்டிருப்பவர்களின் இருதயங்களில் அதிகம் பகைமையும், பயமும் உருவாகுவதற்கு ஏதுவானவர்களாகக் காணப்படுவோம். ஆனாலும் தாவீதை இஸ்ரயேலர்கள் மற்றும் யூதா ஜனங்கள் அனைவரும் சிநேகித்தார்கள் என்று நாம் வாசித்தறிவதுபோலவே, தேவனுடைய உண்மையான ஜனங்களின் விஷயத்தில் நிச்சயமாகவே காணப்படும்; ஏனெனில் இவர்கள் கர்த்தருடைய ஆவியைப் பெற்றிருப்பவர்களாலும், தாவீது வகுப்பாரில் உள்ளவர்களாலும் அதிகமதிகமாய் அன்புகூரப்படுகின்றனர்

மற்றும் மதிக்கப்படுகின்றனர். பிற்காலங்களில் சாத்தான் கட்டப்பட்டு, கர்த்தர் தம்முடைய இராஜ்யத்தை வானங்களுக்குக்கீழ் ஸ்தாபித்திருக்கையில், இன்னுமாகக் குருடான கண்கள் யாவும் திறக்கப்பட்டிருக் கையில், மேலும் செவிடான காதுகள் யாவும் திறக்கப்பட்டிருக்கையில், அப்போது சகல ஜனங்களும், அதாவது கர்த்தருடன் இசைவிற்குள் வந்துள்ள ஜனங்கள் அனைவரும், தாவீது வகுப்பாரின் - அதாவது கிறிஸ்துவின் உண்மைத்தன்மையினை அடையாளம் கண்டுகொள்வார்கள்; மேலும் அவர்கள் சார்பாகத் தேவனை மகிமைப்படுத்துவார்கள்.

## தேவனாகிய கர்த்தர் சூரியனும், கேடகமுமானவர்

நம்முடைய ஆதார வசனமானது, தாவீது வகுப்பாருக்கு, பிரியமான வகுப்பாருக்கு, அபிஷேகிக்கப்பட்ட வகுப்பாருக்கு, கிறிஸ்துவின் அங்கத்தினர்களுக்கு மாபெரும் உற்சாகத்தினைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இவர்களுக்குத் தேவனாகிய கர்த்தர் சூரியனாகவும், கேடகமாகவும் இருக்கின்றார்; இவர்களை அவர் வெளிச்சமூட்டுவது மாத்திரமில்லாமல், தாம் இவர்களுக்கு அருளும் ஆசீர்வாதங்களினால், இவர்கள் பாதிப்படையவும் அவர் விடார். அவர் இவர்களைச் சத்துருக்கள் அனைவரிடமிருந்தும்,எ ந்தவிதத்திலாகிலும்இ வர்களுக்குப்ப ாதிப்பாய்அ மையும்அ னைத்திலிருந்தும் கேடகமாய்ப் பாதுகாப்பார்; அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் (உரோமர் 8:28). இத்தகைய பாக்கியமான வாக்குத்தத்தங்களுடன் நாம் களிகூருதலோடே எதிர்காலத்தை நோக்க முடிபவர்களாகவும், தேவன் உண்மையுள்ளவர்களுக்கென்று வாக்களித்துள்ள மகிமையான பலன்களில் பங்குபெறுவோம் என்ற நம்பிக்கையும், விசுவாசமும் கொண்டவர்களாகவும் காணப்படலாம்.

தாவீது, இராஜாவாகும்படிக்கான தனது அபிஷேகத்தைக்குறித்தும், அப்போது தன்மீது கடந்து வரப்போகின்ற ஆசீர்வாதத்தைக்குறித்தும் வெறுமனே சிந்தித்துக்கொண்டிருப்பது, தாவீதுக்கு ஏற்புடைய காரியமாய் இராததுபோலவே, தேவன் உண்மையுள்ளவர்களுக்கென்று வாக்களித்துள்ள இராஜ்யத்தின் கனங்களைக்குறித்து வெறுமனே சிந்தித்துக்கொண்டிருப்பது ஏற்புடையதாய் இராது; ஏனெனில் இப்படிச் செய்வோமானால், நாம் இறுமாப்படைந்து, இப்படியாக வரவிருக்கின்ற அந்த ஆசீர்வாதங்களில் பங்கடைவதற்கு அபாத்திரர்களாகிப்போவோம். மாறாக தாவீதைப்போன்று, வரவிருக்கின்ற ஆசீர்வாதங்கள் சம்பந்தப்பட்ட பாக்கியமான செல்வாக்கினை மறவாதவர்களாக நாம் காணப்பட்டு, நம்முடைய கவனமானது தற்காலத்திலுள்ள விஷயங்களின்மீது காணப்பட வேண்டும். தற்காலத்தில் நம்முடைய கைக்கு அகப்படுவது எதுவோ, அதை முழுப்பெலத்துடன் செய்வதும், இப்படிச் செய்தால் மாத்திரமே நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் நம்மால் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும் என்பதை நினைவுகூருவதும் நமக்கடுத்தக் காரியங்களாகக் காணப்படுகின்றது.

சவுல் சார்பிலான ஒவ்வொரு எதிர்ப்பு நடவடிக்கையும், தாவீதிற்கு ஓர் ஆசீர்வாதத்தைக் கொணர்ந்து, அவருக்கு அதிகமதிகமான அனுபவங்களைக் கொடுத்து, இராஜா என்கிற அவரது எதிர்கால வேலைக்கென்று அவரைத் தகுதிப்படுத்தி, ஆயத்தப்படுத்தினது. இதுபோலவே உலகத்தினின்றும், மாம்சத்தினின்றும், எதிராளியினின்றும் இப்பொழுது நம்மீது வரத்தக்கதாகக் கர்த்தர் அனுமதித்துள்ள சோதனைகள், பிரச்சனைகள் மற்றும் ஏமாற்றங்கள் அனைத்துமே - இவைகள் அனைத்துமே உண்மையாய்ப் பயன்படுத்தப்படுமானால், அவரது மகிமையான இராஜ்யத்தின் சிலாக்கியங்களை அனுபவிப்பதற்கு ஆயத்தப்படுத்தும் காரியங்களாக செயலாற்றுகின்றதாய்க் காணப்படும்.

R5662

# துன்புறுத்தப்பட்ட ஒருவரின் விசுவாசம்
## 1 சாமுயேல் 19

கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான். - நீதிமொழிகள் 29:25

பெலிஸ்தர்களோடு யுத்தங்கள் தொடர்ந்துகொண்டிருக்கையில், தாவீது யுத்த மனுஷரின்மேல் அதிகாரியாக்கப்பட்டார்; மேலும் இவர் சவுல் இராஜாவோடும்கூடக் காணப்பட்டார். தாவீது போன இடங்களில் எல்லாம் வெற்றிமேல் வெற்றி வந்தது; மேலும் தன்னிடமிருந்த ஜனங்களுடைய ஆர்வமானது தாவீதினிடமாய்த் திரும்புவதையும் சவுல் இராஜா கண்டார். இப்படியாக வெற்றிபெற்று திரும்பி வந்த நாட்கள் ஒன்றில், ஊரிலுள்ள ஸ்திரீகளும், பெண் பிள்ளைகளும், சவுல் கொன்றது ஆயிரம் தாவீது கொன்றது பதினாயிரம் என்று பாடின போதே சவுலின் உணர்வுகள் மாறுபாடடைந்தது.

பொறாமையின் நெருப்பானது இராஜாவின் இருதயத்தினை முழுக்க ஆக்கிரமித்தது. அது முதல் தாவீதை அழித்துப்போடுவதே அவரது ஒரே நோக்கமாகக் காணப்பட்டது. அடுத்துவரும் இராஜாவாக இருக்கும்படிக்குத் தாவீது ஏற்கெனவே சாமுயேலினால் அபிஷேகிக்கப்பட்டுள்ளார் எனும் இரகசியமானது, சவுலிடமிருந்து மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அமலேக்கியர்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் கொடுக்கப்பட்ட தெய்வீக அறிவுரைகளின்படி செய்வதற்குச் சவுல் தவறிப்போனபடியால், இதன் பின்விளைவாக அரசாட்சியானது அவரிடமிருந்தும், அவரது வீட்டாரிடமிருந்தும் எடுக்கப்பட்டு வேறொருவருக்குக் கொடுக்கப்படும் என்று சாமுயேல் தீர்க்கத்தரிசி கூறியவைகளை மாத்திரமே சவுல் அறிந்திருந்தார். இப்படி ஒருபோதும் நிகழாது என்றும், தனது குமாரனாகிய யோனத்தானே தனக்குப்பின் இராஜாவாகக் காணப்படுவார் என்றும் சவுல் அநேகமாக நம்பியிருந்திருக்க வேண்டும்.

சுயநலம் விதைக்கப்பட்டதன் விளைவாகக் கொணரப்பட்ட கசப்பான கனியே பொறாமையாகும். இது பகுத்தறிவை சிதைத்துப்போட்டு, மகிழ்ச்சியை அழித்துப்போட்டுவிடுகின்றது. இது யாரை ஆட்கொண்டிருக்கின்றதோ, அந்நபரைக் கடுமையான விரக்திக்குள்ளாக்குகின்றது; ஆகையால் இது ஒருவன்மீது கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கும்போது, அவன் உண்மையில் வெறிபிடித்தவனாக/ பித்துப்பிடித்தவனாகக் காணப்படுவான். இது இராஜாவாகிய சவுலின் விஷயத்தில் விவரிக்கப்பட்டதோடு மாத்திரமல்லாமல், ஒவ்வொரு மனிதனுடைய அனுபவத்தின் விஷயத்திலும் இது விவரிக்கப்பட்டுள்ளது. பொறாமை என்றால் என்ன என்பதை யார்தான் அனுபவத்தினால் அறியாதவர்களாகக் காணப்படக்கூடும். இதைக்குறித்து அதிகமதிகமாகத் தெரியவரும்போது, மோசமாகவே இருக்கும். அநேகர் பொறாமையினால் பிள்ளைகளையும், பெரியவர்களையும் கொலைசெய்துள்ளனர். இது அநேகக்குடும்பங்களையும், தொழில்களையும் சிதைத்துப் போட்டிருக்கின்றது. இது மிகவும் பயங்கரமானது, அதே சமயம் சுயநலத்தினுடைய மிகவும் முட்டாள்தனமான வெளிப்பாடாகவும் காணப்படுகின்றது. தனக்குள் அதனை அடையாளம் கண்டுகொள்ளும் ஒவ்வொருவனும், இதினிமித்தம் அபாயத்தினை உணர்ந்தவனாக, அதை உடனடியாக நசுக்கிப்போட்டு, விழிப்போடு ஜெயங்கொள்ள நாடவேண்டும்; மேலும் அவன் கிறிஸ்தவனாக இருப்பானானால், ஜெபத்தோடு அப்படிச் செய்ய நாடவேண்டும்.

### சவுலின் பொறாமை, தந்திரமுள்ளதாய் இருந்தது

பொறாமையினுடைய கட்டுப்பாட்டின்கீழ்க் காணப்படுகையில், இராஜாவாகிய சவுல் கர்த்தரிடமிருந்து விடப்பட்ட பொல்லாத ஆவியை உடையவராக இருந்தாரென நமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டுமானால் அது கர்த்தருக்குப் புறம்பான

பொல்லாத ஆவியாகும்; அதாவது கர்த்தருடைய இரக்கத்தின், நீதியின், அன்பின் ஆவிக்கு எதிரான ஆவியாகும். பெலிஸ்தர்களுடனான யுத்தங்கள் முடிவடைந்த பிற்பாடு விரக்தியில் இராஜா கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கையில், சுரமண்டலத்தை வாசிக்கும் திறமையினால் தாவீது சிலசமயங்களில் இராஜாவைச் சாந்திப்படுத்தினார். எனினும் இராஜாவினுடைய கோபமான மனநிலையினை அறிந்திருந்தபடியாலும், உன்னிப்பாக கவனித்தபடியாலும், வழக்கமாய்ச் சவுல் கையில் வைத்திருந்த ஈட்டியை அவர் தன்மேல் எறிகையில், தாவீது இருமுறை இராஜாவை கவனித்தவராக, விலகிக்கொண்டார்.

தாவீதைச் சண்டைக்கு இழுத்து, அப்படி ஒருவேளை அவர் சண்டைக்கு வந்தால், அதைத் துரோகம் என்று காண்பித்து, அவருக்கு மரணதண்டனை வழங்குவதை நியாயப்படுத்திடலாம் என்ற எண்ணத்தில், இராஜா தனது மூத்த மகளைத் தாவீதிற்கு மனைவியாகக் கொடுப்பேன் என்று வாக்குக்கொடுத்துவிட்டு, பின்னர் வேறொருவனுக்கு அவளை மனைவியாகக் கொடுத்தார். ஆனால் தாவீதோ விவேகத்துடன் காணப்பட்டார்; இத்தகைய கனங்களைப் பெறும் அளவுக்கு, தான் உயர் குடும்பத்தினன் இல்லை என்றும், இராஜாவின் மகளுக்காக பரிசம் கொடுக்குமளவுக்குப் பொருளாதாரம் உடைய நிலைமையில் தான் இல்லை என்றும் கூறினவராக மாத்திரம் காணப்பட்டார். பின்னர் இராஜாவின் இளைய மகளாகிய மீகாளைத் தாவீதிற்கு விவாகம் பண்ணிக்கொடுக்க முற்பட்ட காரியம், அடுத்த வலை வீசுதலாகக் காணப்பட்டது. இளைஞனாகிய தாவீதோ மறுபடியுமாக இராஜாவின் மகளை மணப்பதற்கு, தான் தகுதியற்றவன் என்றும், பரிசம் கொடுப்பதற்குத் தன்னிடம் ஐசுவரியம் இல்லை என்றும் தெரிவித்தார். ஆனால் சவுலோ நூறு பெலிஸ்தர்களைக் கொன்றுபோடும் சாட்சியம், பரிசமாகக் காணப்பட வேண்டும் என்ற நிபந்தனையை வைத்தார். தன்னுடைய இந்த நிபந்தனையின்படி செய்வதற்கு முயற்சிக்கையில், தாவீது தன் சொந்த ஜீவனை இழந்து போய்விடுவார் என்று எதிர்பார்த்தவராகச் சவுல் இருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை; ஆனால் இப்படிச் சம்பவிப்பதற்குப் பதிலாக இளைஞனான தாவீதோ, இரண்டு மடங்கான எண்ணிக்கையில் பெலிஸ்தர்களைக் கொன்றுபோட்டு, சவுலின் குமாரத்தியாகிய மீகாளை வென்றார்.

இராஜா வெறித்தனமான பொறாமை அடைந்தவராக, தன் குமாரனாகிய யோனத்தானிடமும், தன் ஊழியர்களிடமும் தாவீதைக் கொன்றுபோட வேண்டும் என்று கூறினார். யோனத்தானுடைய உணர்வுகள் அன்பானதாகவும், சகோதர சிநேகமுள்ளதாகவும் காணப்பட்டது; ஆனால் இவரது தந்தையினுடைய உணர்வுகளோ கொடுமையானதாகவும், பொறாமையானதாகவும், சுயநலமானதாகவும் காணப்பட்டது. தாவீது இராஜ்யபாரத்தின் கனங்களை அடைவாரானால், அது யோனத்தானிற்கே வீழ்ச்சியாகக் காணப்படும். ஆகையாலே யோனத்தானின் அன்பு, பழமொழியாகிப்போனது. இதோடுகூட இவர் புருஷத்துவத்தின் மற்றும் சகோதரத்துவத்தின் உண்மையான ஆவியினையும், சமாதானம்பண்ணுகிறவரின் ஆவியினையும் பெற்றிருந்தவராகக் காணப்பட்டார். இவர் தாவீதிற்காகத் தன் தந்தையிடம் பரிந்துபேசினார். இவரது வார்த்தைகள், தன் நண்பனாகிய தாவீதிற்கு இவர் கொண்டிருந்த மரியாதைக்கும், பாசத்திற்கும்/நட்பிற்கும் அருமையான முன்மாதிரியாக நமக்கு விளங்குகின்றது. இவரோ: இராஜா தம்முடைய அடியானாகிய தாவீதுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதிருப்பாராக; அவன் உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்யவில்லை; அவன் செய்கைகள் உமக்கு மெத்த உபயோகமாயிருக்கிறதே. அவன் தன் பிராணனைத் தன் கையிலே வைத்துக்கொண்டு, அந்தப் பெலிஸ்தனைக் கொன்றதினாலே, கர்த்தர் இஸ்ரயேலுக்கெல்லாம் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டதை நீர் கண்டு, சந்தோஷப்பட்டீரே; இப்போதும் முகாந்தரமில்லாமல் தாவீதைக் கொல்லுகிறதினால், குற்றமில்லாத இரத்தத்திற்கு விரோதமாக நீர் பாவஞ்செய்வானேன் என்று கூறினார். (1 சாமுயேல் 19:4-5)

சமாதானம்பண்ணுகிறவரின் (யோனத்தானின்) வேண்டுகோள் கேட்கப்பட்டது. இராஜா மனமிரங்கினார். தாவீது மீண்டுமாக அழைத்துக்கொண்டுவரப்பட்டார். அவர் மறுபடியும், வீட்டாரில் ஓர் அங்கத்தினன் ஆக்கப்பட்டார். ஆனால் கொஞ்சம் காலமே இது நீடித்தது. இராஜா உயரிய உணர்வுகளைப் பெற்றிருக்காமல் இல்லை, எனினும் அவை ஆழமாயும் இருக்கவில்லை. அவை அவரது ஜீவியத்தைக் கட்டுப்படுத்தி ஆளவுமில்லை. மாறாக அவர் தீய மனதின், சுயநலமான மனதின், பொறாமையுள்ள மனதின், அதாவது தேவனுடைய ஆவிக்கும், மனதிற்கும் எதிரான மற்றும் மிகவும் அப்பாற்பட்ட மனதின் கட்டுப்பாட்டின்கீழ்க் காணப்பட்டவராக இருந்தார்.

கொஞ்ச காலத்திற்குள் மீண்டும் பொறாமையினால், இராஜா ஈட்டியினை எறிந்தது மாத்திரமல்லாமல், கொன்று போடவேண்டுமென்று குறிவைத்து எறிந்தார்; தாவீது அமர்ந்திருந்த இடத்திற்குச் சற்றே பின்புறத்தில் இருந்த சுவரிலே ஈட்டி பட்டது; தாவீது துரிதமாய்ச் செயல்பட்டு, விலகிக்கொண்டார். தாவீது தன் அறைக்குப் போனார்; ஆனால் அவர் அங்கு வருகையில், அவரைக் கொன்றுபோடும்படியாகக் கட்டளை கொடுக்கப்பட்ட ஒரு சேவகன் ஏற்பாடுபண்ணப்பட்டிருந்தான். தாவீதின் மனைவி, அவருக்குத் தகவல்கொடுத்து, ஜன்னல் வழியாய் அவரை இறக்கிவிடுவதன் மூலமாய், அவர் பாதுகாப்பாய்த் தப்பித்துச்செல்ல உதவிசெய்தாள். அநேகமாக வீடானது மதில் சுவரின்மேல் கட்டப்பட்டிருந்திருக்க வேண்டும்; அதாவது, பரிசுத்த பவுல் அடிகளார் தப்புவிக்கப்பட்ட சம்பவத்தில் காணப்பட்டது போன்றாகும்.



**ஜன்னல் வழியாய்த் தாவீது தப்பிச் செல்கின்றார் - Gustave Dore'**

## ஒரு மனைவிக்காக இருநூறு கொலைகள்

இச்சம்பவத்தினை வைத்துக்கொண்டு, கொலை செய்வதையும், கொலை செய்கிறவனையும் வேதாகமம் ஊக்குவிக்கின்றது என்பதினால், இது நீதிக்கு முரணாகக் காணப்படுகின்றது என்றும், நீதியுள்ள தேவனுக்கு முரணாகக் காணப்படுகின்றது என்றும் கூறி வேதாகமத்தை நிந்திக்கும்படியாக, பரியாசக்காரர்கள் வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்கின்றனர். இவர்கள் பின்வருமாறு கூறுகின்றனர்: தீர்க்கதரிசியாகிய தாவீது மிகவும் விவேகமுள்ளவராகவும், கர்த்தருடைய ஆவியையும், தெளிந்த புத்தியின் ஆவியையும் உடையவராகவும் விவரிக்கப்பட்டுள்ளார்; எனினும் ஒரு மனைவியை அடைவதற்குரிய விலையாக, அவர் இருநூறு மனிதர்களைக் கொன்றுபோடுகின்றார்; ஆனாலும் இதைக் கண்டிக்கும் விதமான ஒரு வார்த்தைகூட வேதவாக்கியங்களில் காணப்படுகிறதில்லை என்பதேயாகும்.

இத்தகைய குற்றச்சாட்டுகளும், சர்ச்சையான வாதங்களும் நியாயமான விதத்தில் கையாளப்பட வேண்டும். நீ நம்பிக்கையற்றவன், ஆகையால் உன்னுடன் வாதம்பண்ணுவதில் எந்தப் பிரயோஜனமும் இல்லை என்பதுபோன்ற வார்த்தைகளைக்கூறிக் கண்டுகொள்ளாமல் போகக்கூடாது. நீதி செய்கிறவனே நீதிமான்; அநீதி செய்கிறவன் அநீதிமான். இந்த வேதாகமக் கொள்கை தேவனுக்கும், தாவீதிற்கும், மற்ற எல்லோருக்கும் பொருந்தும். ஆனால் இது தொடர்பாகக் கேள்வி கேட்கப்படுகையில், நாம் திறந்த மனதுடன் இவ்விஷயத்தினை அணுகவேண்டும். தவறான அபிப்பிராயங்களுடைய கண்ணோட்டத்தில் நாம் குற்றஞ்சுமத்துகிறவர்களாக இராமல், மாறாக எப்படி இக்காரியத்திலுள்ள செயல்பாட்டினை, நாம் வேதாகமம் எங்கும் கடைப்பிடிக்கப்பட்டிருக்கும் நீதியின் கொள்கைகளுடன் இசைவுப்படுத்திடலாம் என்றே பார்க்க வேண்டும்.

முதலாவது விஷயமாக, நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ்க் காணப்பட்ட யூதனுக்கும், கிறிஸ்துவினுடைய தலைமையின்கீழ்க் காணப்படும் கிறிஸ்தவனுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தினை நாம் நம்முடைய மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இரண்டாவதாக, மரித்துப் போனவர்கள் இன்னமும் ஜீவித்துக்கொண்டிருக்கின்றார்கள் மற்றும் உடனடியாக நித்திய சித்திரவதைக்குள் கடந்துபோவார்கள் என்று வேதாகமம் போதிக்கிறதில்லை என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். மரித்தவர்கள் உண்மையில் மரித்துப்போய்விட்டார்கள் என்று வேதாகமம் போதிக்கின்றது; மேசியாவின் இராஜ்யத்தினுடைய பாக்கியமான செல்வாக்குகளின்கீழ், மிகவும் அனுகூலமான சூழ்நிலைகளின்கீழ், எதிர்காலத்தில் மரணத்திலிருந்து உயிர்த்தெழுதலே, மரித்தவர்களுக்குத் தேவன் முன்வைக்கும் நம்பிக்கையாக இருக்கப்போகின்றது என்றும் வேதாகமம் போதிக்கின்றது. பாவத்தின் தண்டனை மரணம் என்றும்,ம ரணத்திற்குப்பின்ச ித்திரவதைஎ ன்பதுத ண்டனைஇ ல்லைஎ ன்றும்வே தாகமம்ந மக்குத் தெரிவிக்கின்றது. தகப்பனாகிய ஆதாமினால் அறிந்தும், துணிந்தும் செய்யப்பட்ட பாவத்திற்காகவே, இந்தத் தண்டனையானது அவர்மீது நீதியாய்ச் செலுத்தப்பட்டுள்ளது என்று வேதாகமம் நமக்குத் தெரிவிக்கின்றது. மரபியல் சட்டங்களின் காரணமாக, நாம் பிறந்தது முதற்கொண்டு, நம்மில் நோய், அபூரணம், மரணம் என்பவைகளின் விதைகள் வந்துவிடுவதால், மனித குடும்பம் மரித்துக்கொண்டிருக்கின்றது என்று வேதாகமம் நமக்குத் தெரிவிக்கின்றது.

இந்தக் கண்ணோட்டத்தின்படி பார்க்கையில், நமது முழு உலகமும், மரணத்தீர்ப்பின்கீழ்க் காணப்படும் கைதிகளை உடைய உலகமாய்க் காணப்படுகின்றது. இதனாலேயே தேவதூதர்களுக்குத் தேவன் அருளும் சந்தோஷம், சமாதானம், ஜீவன், பூரணம் ஆகியவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்ட கையாளுதலை, மனுக்குலத்தின் விஷயத்தில் தேவன் கொண்டிருக்கின்றார் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது. இன்னுமாகப் பஞ்சம், கொள்ளைநோய், பூமி அதிர்ச்சிகள், புயல்கள் முதலானவைகள் - அதாவது மரணத்தைக் கொண்டுவரும் பல்வேறு சூழல்கள், கட்டுப்பாட்டினை எடுத்துக்கொள்வதற்குத் தேவன் அனுமதித்துள்ளது ஏன் என்பதையும் நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது. ஒரு மனுஷனுடைய கீழ்ப்படியாமையின் காரணமாக அனைவரையும் நீதியாய் ஆக்கினைத்தீர்ப் பிற்குள்ளாக்கின அதே தேவன், மரணபரியந்தமுள்ள கிறிஸ்துவினுடைய கீழ்ப்படிதலின் காரணமாக அனைவரும் நீதிக்கு ஏதுவாய்த் தீர்க்கப்படுவதற்குரிய ஏற்பாடு ஒன்றினைப் பண்ணியிருக்கின்றார் என்பதை நாம் அறிய வருகையில், நம்மால் காரியங்களைப் புதிய வெளிச்சத்தில் பார்க்க முடியும். தேவனைப்பற்றின வெளிச்சத்தையும், அறிவையும் கொண்டுவர வேண்டும் என்றும், தேவ தயவை பெறும் நிலைக்குத் திரும்புவதற்கும், நித்தியஜீவனை அடைவதற்குமுரிய முழு வாய்ப்பினை கொண்டுவர வேண்டும் என்றுமுள்ள, ஒரே நோக்கத்திற்காக மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படப்போகின்றது என்பதை நாம் அறிய வருகையில், நமது இருதயங்கள் களிகூருகின்றன.

மீண்டும் முதலாவது காரியத்திற்கு வருகையில், இந்தச் சுவிசேஷயுகத்திலுள்ள நம்மை, நாம் நியாயந்தீர்ப்பதுபோன்று, நாம் தாவீதையும், அவர் காலத்திலுள்ள ஜனங்களையும் நியாயந்தீர்க்கக்கூடாது என்று உணர்ந்துகொள்கின்றோம். சீனாய் மலையில் அவரும், அவரது ஜனங்களும் வைக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தின்கீழ் அவர் நியாயந்தீர்க்கப்பட வேண்டும் - அதாவது கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், மனுஷனுடைய ஜீவனுக்கு மனுஷனுடைய ஜீவன் என்பதின்படியாகும். கானான் தேசத்தின் ஜனங்களுடைய அக்கிரமத்தின் பாத்திரம் நிரம்பிவிட்டது என்றும், முழுத்தேசமும் ஆபிரகாமின் சந்ததிக்குக் கொடுக்கப்பட்டது என்றும், கூடுமானமட்டும் விரைவாக முழுத்தேசத்தையும் தங்களுடைய தாக்கிக்கொள்வதற்கான தெய்வீக அங்கீகரிப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றும் இஸ்ரயேலருக்குத் தெரிவிக்கப்பட்டது (1 சாமுயேல் 15:2-3). அனைவருக்கும் மேசியாவின் இராஜ்யத்தில் எதிர்கால ஏற்பாடு ஒன்று உள்ளது என்ற எந்த விவரமும் தெரிவிக்கப்படாமல், இஸ்ரயேலர்கள் தங்கள் சத்துருக்களை, கர்த்தருடைய சத்துருக்களாகக் கருதி, கொன்றுபோடுவதற்கு முழு அங்கீகாரம் கொடுக்கப்பட்டனர்.

பெலிஸ்தர்கள் கானான் தேசத்தில் காணப்பட்டார்கள்; இவர்கள் தங்கள் இடத்தை வைத்துக்கொண்டிருந்ததோடு மாத்திரமல்லாமல், இஸ்ரயேலரால் ஏற்கெனவே கைப்பற்றப்பட்ட பகுதிகளிலும் படையெடுத்து வந்துகொண்டிருந்தனர். பெலிஸ்தர்கள் அநேக இஸ்ரயேலர்களைக் கொன்றுப்போட்டனர். பெலிஸ்தர்களும், கானான் தேசத்தின் மற்றக் குடிகளும் முழுமையாய் அழித்துப்போடப்பட வேண்டும் என்ற தெய்வீகக் கட்டளைக்கு முழு இசைவாகவே காரியங்கள் செய்யப்பட்டன. ஆகையால் தெய்வீகத் திட்டம் தொடர்புடைய தெய்வீகக் கட்டளை என்று அனைத்து இஸ்ரயேலர்களாலும் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டவைகளை மாத்திரம் தாவீது நடைமுறைப்படுத் தினவராக காணப்பட்டார். இந்தக் கண்ணோட்டத்தின்படி மட்டும்தான் கர்த்தருடைய கட்டளைகளும்,

முற்காலங்களிலுள்ள இஸ்ரயேலர்களின் நடக்கைகளும் சரியானவைகளே என்று அடையாளம் கண்டுகொள்ள முடியும்.

நமது கர்த்தருடைய மீட்பின் வேலையுடனும், பெந்தெகொஸ்தேயின் ஆசீர்வாதங்களுடனும் துவங்கின புதிய யுகத்தின்கீழ், இந்த யுகத்தினுடைய கர்த்தரின் ஜனங்கள், அதாவது சபை, புதிய கட்டளைகளின்கீழ்க்/ஒழுங்குகளின்கீழ்க் காணப்படுகின்றனர்; முற்காலங்களில் யூதர்கள் தெய்வீக நீதியின் கொள்கைகளை நடப்பிக்கக் கட்டளையிடப்பட்டிருந்தது போன்று, சபை வார்த்தையினாலும், மாதிரியினாலும் இரக்கத்தின் கொள்கைகளை நடப்பிக்கக் கட்டளையிடப்பட்டுள்ளனர். நாம் நம் சத்துருக்களை அன்புகூர வேண்டும். நம்மைப் பகைக்கிறவர்களுக்கும், நம்மைத் துன்புறுத்துகிறவர்களுக்கும், நமக்கு விரோதமாய்ப் பொய்யாய்ச் சகல தீமைகளைப் பேசுகிறவர்களுக்கும் நாம் நன்மை செய்ய வேண்டும். இப்படியாக நாம் பரலோகத்திலிருக்கின்ற நம்முடைய பிதாவின் பிள்ளைகளாகக் காணப்படுவோம்; மேலும் அவருடைய பரிசுத்த ஆவியின் மூலம், அவரால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளோம் என்பதும் வெளிப்படுகின்றது. ஆனால் யூதர்கள் தேவனுடைய பிள்ளைகள் இல்லை. இவர்கள் பணிவிடை வீட்டார் ஆவார்கள் (எபிரெயர் 3:5). இவர்கள் தங்களைத் தேவனுடைய புத்திரர்களெனக் கூறவேண்டுமென்று எண்ணினதுகூட இல்லை. இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று அறிவித்தபோது, இவர்கள் கோபமடைந்து, இயேசு தேவதூஷணம் பேசினார் என்று கூறி, அவர்மேல் கல்லெறிய கற்களை எடுத்துக்கொண்டார்கள்.

தேவனுடைய முதலாவது மனித புத்திரன், ஆதாம் ஆவார். இவர் பாவம் செய்தபோது தேவனுடனான இந்த உறவினின்று துண்டிக்கப்பட்டார். இயேசு வரும்வரை ஆதாமிற்கு அடுத்து, வேறு யாரும் வேதாகமத்தில் தேவனுடைய புத்திரர்கள் என அடையாளம் கண்டுகொள்ளப்படவில்லை அல்லது பேசப்படவில்லை. அனைவரும் பாவிகளாகவும், அந்நியர்களாகவும், பரதேசிகளாகவும், தூரமானவர்களாகவும், குற்றவாளி கைதிகளாகவும் மரணத்தீர்ப்பின்கீழ்க் காணப்பட்டனர். ஆனால் இயேசு வந்தபோது, புதிய உபதேசம் மாத்திரம் அல்ல புதிய உறவும் கடந்து வந்தது. மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். கிறிஸ்துவோ அவருடைய (புத்திரர்) வீட்டிற்கு மேற்பட்ட குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார். நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மைபாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம். (எபிரெயர் 3:5-6)

---

R5664

# ஆபத்தில் உதவுகிறவனே நண்பன்
## 1 சாமுயேல் 20

சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான். - நீதிமொழிகள் 17:17

வரலாறானது நட்பிற்குச் சிறந்த இலக்கணமாக திகழ்ந்தவர்களைக்குறித்துப் பதிவுசெய்துள்ளது; ஆனால் அவைகளில் தலைச்சிறந்தது நம்முடைய பாடத்தில் இடம்பெறும் சம்பவமாகும் - அதாவது இஸ்ரயேலின் அரியணைக்கு வருங்கால வாரிசாகக் காணப்பட்ட, சவுலின் குமாரனாகிய யோனத்தான், தெய்வீகத் திட்டத்திலும், ஜனங்களுடைய இருதயங்களிலும் தனக்குப் போட்டியாளனாகக் காணப்பட்ட தாவீதின்மீது கொண்டிருந்த நட்பும், அன்பும் ஆகும். இவரது நட்பின் தூய்மையும், சுயநலமின்மையும், பரிணாம கோட்பாட்டிற்கு முற்றிலும் முரண்படும் விதத்தில் அந்தக் காலங்களில் சிலரால் பெற்றிருக்கப்பட்ட சான்றாண்மையை/நற்குணத்தை நமக்கு விவரித்துத் தருகின்றதாய் இருக்கின்றது.

யோனத்தானிடம் காணப்பட்ட அன்பின் ஆவியானது, இவரது தந்தையும், இராஜாவுமாகிய சவுலிடம் காணப்பட்ட பொறாமையின் ஆவியினின்று முற்றும் வேறுபட்டுத் தனித்துவமாய் ஓங்கி நிற்கின்றது. தாவீது கோலியாத்தை வென்ற பிற்பாடே, யோனத்தான் அவரை முதலாவது சந்தித்திருக்க வேண்டும். அழித்துப்போடப்பட வேண்டியவராகவும், தனக்குப் போட்டியாய் இருக்கின்றார் என்பதாகவும் தாவீதைக்குறித்து எண்ணுவதற்குப் பதிலாக, பெருந்தன்மையுள்ள யோனத்தான் தனது சொந்த இராஜ வஸ்திரத்தைக் கழற்றி, தனது வாள் மற்றும் பிரபலமான தன் வில்லோடுகூடத் தாவீதிற்குக் கொடுத்தார்.

அருள்திரு Alex Whyte-அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: யோனத்தான் சவுலுடைய மூத்தக் குமாரனாகக் காணப்பட்டார்; இப்படியாக இவர் இஸ்ரயேலுக்கு அடுத்துவரும் இராஜாவாகக் காணப்பட்டார். சௌந்தரியமும், துடிப்பும் கொண்டவராகவும், மனவுறுதி மற்றும் வீரமும் உடையவராகவும் திகழ்ந்த யோனத்தான், இராணுவத்தின் பெருமையாகவும், பொது ஜனங்களுக்குக் கண்மணி போன்றவராகவும் காணப்பட்டார். இவரது சிநேகிதர்கள் இவரது அழகின் நிமித்தமாகவும், வேகமாக ஓடும் இவரது திறமையின் நிமித்தமாகவும், இவரை மறிமான் என்று அழைத்தார்கள். இவரது தந்தையினுடைய மகா அவலமான மீறுதல்கள் நிமித்தம், இவர் உடனடியாக இஸ்ரயேலின் இரண்டாம் இராஜாவாகவும், சவுலுக்கு அடுத்தபடியாக சிங்காசனத்தில் வர வேண்டியவராகவும் காணப்பட்டிருந்திருப்பார். இன்னுமாக ஒரு சிங்காசனத்திற்கு நிலையான தன்மையையும், ஒரு கிரீடத்திற்குப் பிரகாசத்தையும் கொடுக்கின்ற இருதயம் மற்றும் உன்னத குணநலன்களோடு, அதுவரை சிங்காசனத்தில் வீற்றிருந்த எந்த ஓர் இராஜாவைப்பார்க்கிலும், யோனத்தான் சிறந்தவராகவே இருந்திருப்பார். உண்மையான நண்பன் கிடைக்கப்பெறுவது போன்று, ஜீவியத்தில் வேறு எந்த ஆசீர்வாதமும் காணப்படுவதில்லை என்று முன்னோர்களில் ஒருவர் நன்றாகவே எழுதியுள்ளார்; மேலும் கவிஞன் ஒருவன் பின்வருமாறு எழுதியிருக்கின்றார்:

வாழ்க்கையில் ஒரு நண்பரைப்போன்ற மகிழ்ச்சியை வேறு எதுவும் தருவதில்லையே.<br>
நம் சொந்த இருதயத்துடன் இணைந்து துடிக்கும் இருதயத்தில்<br>
தீர்க்கத்தரிசனமும், நிறைவேறுதலும் ஒன்றாக இணைகின்றன.<br>
நண்பனின் இருதயத்தை நாமும் அறிந்திருக்கின்றோம்,<br>
நண்பனின் இருதயம் நம்மையும் அறிந்திருக்கின்றதுவே.

## ஆபத்தில் உதவுகிறவனே நண்பன்

யோனத்தானுடைய நட்பும், அன்பும் உணர்ச்சிவசப்பட்ட வகையானதல்ல. அது நிஜமான அன்பாகும். இவர் வார்த்தையில் மாத்திரம் அன்பு செய்தவராகக் காணப்படாமல், கிரியையிலும், நிஜத்திலும் அன்பு செய்தவராகக் காணப்பட்டார்; தனது தந்தை, தனது நண்பனுக்குத் தயை பாராட்டினபோது மாத்திரம், இவர் தாவீதை அன்புகூர்ந்தவராகக் காணப்படவில்லை; இன்னுமாகப் பொது ஜனங்கள் தாவீதைப் பாராட்டியபோதும்,இ ப்படியாகத்த ாவீதும ற்றவர்களின்த யையைப்பெ பற்றவராகக்க ாணப்பட்டபோதும் மாத்திரம், அவரை அன்புகூர்ந்தவராக யோனத்தான் காணப்படவில்லை; மாறாக இராஜா தன் நண்பனுக்குச் சத்துருவாக மாறி, அவரது ஜீவனைக் கொன்றுபோட நாடினபோதும்கூட, முன்புபோலவே யோனத்தான் அவரை அன்புகூர்ந்தவராகக் காணப்பட்டார். எந்த ஒரு நட்பும், பரிசோதிக்கப்பட்ட பின்னரே, நட்பாகக் கருதப்பட முடியும் என்பது என்னவோ உண்மைதான். சோதனையில், பரீட்சையில் நிலைநிற்காத எந்த ஒரு நட்பும் . . . தியாகங்கள் ஏதும் செய்திடாத எந்த ஒரு நட்பும் . . . மாதிரியாகப் பின்பற்றப்பட வேண்டிய நட்பாகக் காணப்படுவதில்லை.

கனம்பண்ணுவதில் முந்திக்கொள்ளும் அன்பினைத் தம்முடைய பின்னடியார்கள் பெற்றிருக்க வேண்டும் என்று கர்த்தரால் அறிவுறுத்தப்படும் அன்பின் வகையினை யோனத்தான் பெற்றிருந்தார். மற்ற வகை அன்புகளானது மேன்மையானவைகளாகக் காணப்பட்டாலும், இதுவே சந்தேகத்திற்கிடமின்றி பூமிக்குரிய அன்பிற்கும் மேலாக, தலைச்சிறந்ததாக ஓங்கி நிற்கின்றது; இதற்கு விசேஷமான காரணம், இது தேவபக்தியின் அடிப்படையினால் உருவான ஒன்றாக இருப்பதினாலேயே ஆகும். இன்னுமாக இதற்குக் காரணம் என்னவெனில், தாவீது கர்த்தரை அன்புகூர்ந்தவராகவும், காத்திருக்க வேண்டும் என்று அப்போது வெளிப்பட்ட கர்த்தருடைய சித்தத்தினால் தாவீது வழிநடத்தடப்பட நாடினவராகவும் காணப்பட்டதினாலேயே ஆகும்; தாவீது விவேகமாய் நடந்துகொண்டார் என்று பதிவுகள் தெரிவிக்கின்றன. ஞானத்தின் இந்த ஆவியினை யோனத்தான் கிரகித்துகொண்டதாலும், நீதியின் ஆவியினால் தாவீது வழிநடத்தப்படுவதை யோனத்தான் கிரகித்துகொண்டதாலும் இவர் தாவீதை அன்புகூர்ந்தார்.

நாம் எந்த விகிதாச்சாரத்தில் வேதாகமத்தைப் புரிந்துகொண்டு, சத்தியத்தின் ஆவியினைப் பெற்றுக்கொள்கின்றோமோ, அதே விகிதாச்சாரத்தில் நாம் முடிந்த மட்டும் அக்கொள்கைகளை - அதாவது அது நட்பின் விஷயமாகவோ அல்லது இராஜாவிற்கு ஆற்ற வேண்டிய கடமையின் விஷயமாகவோ அல்லது குடும்பத்தினருக்கு ஆற்ற வேண்டிய கடமையின் விஷயமாகவோ அல்லது நம் தேவனுக்கு ஆற்ற வேண்டிய கடமையின் விஷயமாகவோ, எதுவாக இருப்பினும், இவைகள் சம்பந்தப்பட்ட கொள்கைகளை உணர்ந்துகொள்ள முடிபவர்களாகவும், அவைகளைப் பின்பற்ற முடிபவர்களாகவும், அதை முன்மாதிரிப்படுத்த முடிபவர்களாகவும் காணப்படுவோம். அநேக செல்வாக்குகளினால் (செயல் விளைவுகளினால்) சுயநலம், பேராசை மற்றும் பொறாமையின் ஆவியானது உருவாகுவதுபோன்று, உண்மையான நட்பினையும், உண்மையான அன்பினையும், இருதயம் மற்றும் தலையின்/மனதின் சிறந்த பண்புகள் அனைத்தையும் உருவாக்கும் செல்வாக்குகளானது, கர்த்தரிடமிருந்து வருபவைகளாகக் காணப்படுகின்றன.

முந்தின பாடத்தில் எவ்வாறு யோனத்தான், தனது தந்தையாகிய இராஜாவிற்கும், தாவீதிற்கும் இடையில் சமாதான காரணராய்ச் செயல்பட்டார் என்பதை நாம் ஏற்கெனவே கவனித்திருக்கின்றோம். இன்றைய பாடமானது, யோனத்தான் ஓர் உண்மையான நண்பனெனச் செயல்பட்ட மற்றுமொரு

சந்தர்ப்பத்தின்மீது, நமது கவனத்தைத் திருப்புகின்றதாய் இருக்கின்றது. தாவீது தனது ஜீவன் அபாயத்தில் காணப்படுகின்றதென உணர்ந்தவராக, தனது பயங்களைக்குறித்து யோனத்தானிடம் தெரிவித்தார். யோனத்தானோ, தனது தந்தை தன் வாக்கை மீறப்போகின்றார் என்பதை அறிந்து அதிர்ச்சிடைந்தார், அதேசமயம் தாவீதின் மனப்பான்மையினைக் கண்டு மனங்கவரப்பட்டார். அமாவாசியின் பண்டிகை சமீபித்திருந்தது; தாவீது, இராஜாவின் பந்தியில் இருக்கும்படிக்கு எதிர்ப்பார்க்கப்பட்டார்; பந்தியில் இராஜாவாகிய சவுல் நடுவிலும், இளவரசனாகிய யோனத்தான் வலது பாரிசத்திலும், சேனாதிபதி இடது பாரிசத்திலும், தாவீது நான்காம் ஸ்தானத்திலும், இராஜாவிற்கு எதிர்புறமாக அமர வேண்டியிருந்தார்கள். இரண்டு நண்பர்களுக்கிடையே பண்ணப்பட்டிருந்த ஏற்பாட்டின்படி யோனத்தான், தனது தந்தையினுடைய நோக்கங்களைத் திட்டவட்டமாய் உறுதிப்படுத்திக்கொண்டு, காரியத்தைத் தாவீதிற்குத் தெரிவிக்க வேண்டியிருந்தது.

பண்டிகையினுடைய முதலாம் நாளில், யோனத்தான் தன் தகப்பனுடைய கவனத்தைத் தாவீது உட்காரும் இடத்தின்மீது திருப்ப முயற்சித்தும், இராஜா எதுவும் பேசாதிருந்தார். பின்னர் இராஜா தாவீது எனும் பெயரை வெறுப்பதுபோன்று, ஈசாயின் மகன் வராதுபோனது என்ன என்று விசாரித்தார். தனது அனுமதியின் பேரில் தாவீது பெத்லெகேமில் பலியிடச் சென்றுள்ளார் என்று யோனத்தான் பதிலளித்தார்.

இந்தத் தருணத்தில் தாவீதைக் கொன்றுபோடுவதற்குரிய இராஜாவின் நோக்கம் முறியடிக்கப்பட்டுவிட்டதாகத் தோன்றுகிறது; மேலும், தான் மிகவும் உண்மையாய் நேசித்த தனது குமாரனின்மீது கோபத்தின் ஆவேசத்தை வெளிப்படுத்தினார். தனது குமாரனை அடங்காத குமாரன் என்றும், அவன் தாய்க்கு அவமானமானவன் என்றும் கூறி, இப்படியாக அவன் தன் குமாரன் இல்லை என்று இராஜா தெரியப்படுத்தினார். தனது கோபத்தில் இராஜா தன் குமாரன்மீது ஈட்டியை எறிந்தார்; அவரைக் கொல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் இப்படிச் செய்யாமல், தன் கொடிய பொறாமையினால் உண்டான கோபத்தை வெடித்துக் கொட்டினவராக மாத்திரம் காணப்பட்டார். யோனத்தானுடைய பிரதியுத்தரமானது, தனது நண்பன் நிமித்தம், தான் நஷ்டப்படப் போகின்றவைகளைக்குறித்து இவர் சிந்தியாமல், தனது நண்பனுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக்குறித்தே அதிகமாக இவர் சிந்தித்ததை வெளிப்படுத்துகின்றது.

கோபதாபமாய்ப் பந்தியைவிட்டு எழுந்திருந்துபோய், அமாவாசியின் மறுநாளாகிய அன்றையதினம் போஜனம்பண்ணாதிருந்தான்; தன் தகப்பன் தாவீதை நிந்தித்துச் சொன்னது அவனுக்கு மனநோவாயிருந்தது. (1 சாமுயேல் 20:34)

இது அருமையான ஒரு நட்பாகும்; அதாவது பிரச்சனைகளின்போது தனது நலத்தை மறந்துபோய், நண்பனின் நலனுக்கடுத்தவைகளை மாத்திரம் சிந்திக்கும் நட்பாகும். மனித அன்பிற்கும், நட்பிற்கும் அப்பாற்பட்டு வேறுபட்ட விதத்தில், இயேசுவைக்குறித்து: ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை என்று நாம் வாசிக்கின்றோம் (யோவான் 15:13). இயேசுவினுடைய விஷயத்தைப் பொறுத்தமட்டில், அது பூலோக அன்பிற்கு அல்லது நட்பிற்கு மிகவும் அப்பாற்பட்டதாகக் காணப்பட்டது; ஏனெனில் நாம் பாவிகளாக இருந்தபோதிலும், கிறிஸ்து நமக்காக மரித்தார். இப்படியாகக் கர்த்தர் கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் முன்மாதிரியை வைத்தார் என்றும், கிறிஸ்தவர்கள் சகோதர சகோதரிகளுக்காகத் தங்கள் ஜீவியங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்றும், ஒருவர் இன்னொருவருக்காக மரிப்பதற்காய் ஆயத்தமாகக் காணப்பட வேண்டும் என்றும் அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். இதுவே பரம அன்பு, தெய்வீக நட்பாகும்; இதற்கு நமது கர்த்தர் மற்றும்

அப்போஸ்தலர்களுடைய மாதிரிகளுக்கு அடுத்தப்படியாக, யோனத்தானுடைய அன்பானது உதாரணமாக எடுத்துக்கொள்ளப்படலாம்.

## உனக்கு இன்னும் அப்பால் இருக்கின்றது அல்லவா?

அடுத்த நாள் காலையில் தன் வீட்டிலிருந்து திரும்பின தாவீது, இராஜாவின் எண்ணங்கள் பற்றின யோனத்தானுடைய கணிப்பை அறிந்துகொள்ளும்படிக்குக் கடந்துவந்தார். யோனத்தான் தனது வில் மற்றும் அம்புகளுடன் ஒரு பெரிய கல்லண்டையில் காணப்படும் வெளி இடத்திற்குச் செல்ல வேண்டும் என்பதும், அம்பை எய்த பின்னர், அம்பு உனக்கு இன்னும் அப்பால் இருக்கிறது அல்லவா? நீ தரித்து நிற்காமல், தீவிரித்துப்போ என்று யோனத்தான் சொன்னால், தாவீது தப்பி ஓட வேண்டும் என்பதே தகவல் என்பதும் தீர்மானிக்கப்பட்டிருந்த signal/சைகையாக இருந்தது. இப்படியாகவே செய்யவும்பட்டது. எனினும் நிரந்தரமாகப் பிரியாவிடை கொடுக்க வேண்டும், அதுவும் தனிப்பட்ட தொடர்புகள் எதுவும் இனிமேல் இராது என்ற நிலையில், பிரிந்துபோக வேண்டும் என்பதை, அந்த இரு நண்பர்களினால் எண்ணிக்கூடப்பார்க்க முடியவில்லை. தாவீது ஒளிந்திருந்த கல்லுக்குப் பின்னால், அவரிடம் யோனத்தான் போனார். கிழக்கத்திய பகுதிகளினுடைய வழக்கத்தின்படி, அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் தழுவி, ஒருவரையொருவர் முத்தம்செய்து பிரியாவிடை பெற்றார்கள்; ஆண்மகன்களுக்கே உரிய பாசத்துடன் இந்த உண்மையான சிநேகிதர்கள் விடைபெற்றுக்கொண்டார்கள்.

இங்குத் தாவீது தொடர்புடைய தேவனுடைய ஏற்பாடுகளின்மீதுள்ள தனது விசுவாசத்தினை யோனத்தான் வெளிப்படுத்தினார்; மேலும் என்ன சம்பவித்தாலும் தன்னையும், தன் குடும்பத்தினரையும் தாவீதுத யவோடுந டத்தே வண்டும்எ ன்றுத ன்னோடுஉ டன்படிக்கைஒ ன்றைப்ப ண்ணும்படியாகத் தாவீதினிடத்தில் கேட்டுக்கொண்டவராக: யோனத்தான் தாவீதை நோக்கி: நீர் சமாதானத்தோடே போம், கர்த்தர் என்றைக்கும் எனக்கும் உமக்கும், என் சந்ததிக்கும் உமது சந்ததிக்கும், நடுநிற்கும் சாட்சி என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தைக்கொண்டு நாம் இருவரும் ஆணையிட்டுக்கொண்டதை நினைத்துக்கொள்ளும் என்றான். பின்பு அவன் எழுந்து புறப்பட்டுப்போனான். யோனத்தானோ பட்டணத்திற்குப் போய்விட்டான். (1 சாமுயேல் 20:42)

சவுலின் குடும்பத்தினருக்கு நண்பனாக இருப்பதாகப் பண்ணின உடன்படிக்கையினை, தாவீது ஒருபோதும் மறக்கவில்லை என்று வேதாகமச் சரித்திரமானது நமக்குத் தெரிவிக்கின்றது. கிழக்கத்திய வழக்கத்தின்படி, ஒரு புதிய சாம்ராஜ்யம் அதிகாரத்திற்கு வருகிறது என்றால், உடனே இவர்கள் வீழ்த்தப்பட்ட சாம்ராஜ்யத்தினுடைய ஆண்கள் அனைவரையும் முற்றிலும் சங்காரம் பண்ணிப்போடுவார்கள். ஆனால் இப்படியாகத் தாவீது செய்யவில்லை.

கொஞ்ச காலத்திற்குப் பிற்பாடு பெலிஸ்தர்களோடு மேற்கொண்ட யுத்தத்தின்போது போர்க்களத்தில் தன் தகப்பனோடு, யோனத்தானும் மரித்தபோது, தாவீது பின்வரும் அருமையான வார்த்தைகளைத் தெரிவித்தார்:

யோனத்தானே, உயரமான ஸ்தலங்களிலே வெட்டுண்டுபோனாயே.
என் சகோதரனாகிய யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப்படுகிறேன்;
நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய்;உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது;
ஸ்திரீகளின் சிநேகத்தைப்பார்க்கிலும் அதிகமாயிருந்தது.

இச்சம்பவத்தைக்குறித்துவ ாசிக்கும்ய ார்ஒ ருவரும்ந ட்புறவுெ தாடர்புடையவ ிஷயத்தில்,ஓ ர் உத்தமமான, ஒரு சிறந்த, இன்னும் உண்மையான ஒரு நண்பனாக இருக்க ஊக்குவிக்கப்படுவார்களே ஒழிய, மற்றபடி அல்ல என்று நாங்கள் நம்புகின்றோம்; அதிலும் விசேஷமாக யோனத்தானுடைய அன்பு பற்றின இச்சம்பவத்தின்வ ாயிலாக,க ிறிஸ்துவின்அ ன்புகு றித்தும்,க ிறிஸ்தவர்கள்ே தவனுடையப ிரியமான குமாரனின் சாயலாக வேண்டும் என்ற அறிவுரை குறித்தும், கிறிஸ்தவர்களின் நட்பானது உத்தமமாயும், உண்மையாயும், விசேஷமாய் ஒருவர் இன்னொருவரைத் தாங்குகிறதாயும் இருக்க வேண்டும் என்ற அறிவுரைகுறித்தும், நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம் (கலாத்தியர் 6:10) என்ற அப்போஸ்தலனின் அறிவுரைகுறித்தும், கிறிஸ்தவர்களுக்குச் சுட்டிக்காண்பிக்கப்படுவதன் மூலமாக, கிறிஸ்தவர்களும் ஆசீர்வாதம் ஒன்றைப் பெற்றுக்கொள்வார்கள் என்று நாங்கள் நம்புகின்றோம்.

R1907

## தாவீது மற்றும் யோனத்தான்

### 1 சாமுயேல் 20:32-42

சகோதரனிலும் அதிக சொந்தமாய்ச் சிநேகிப்பவனுமுண்டு. - நீதிமொழிகள் 18:24

பாவத்தினால் சபிக்கப்பட்ட இப்பூமியில், உண்மையான நட்பு என்பது அபூர்வமான மலராகக் காணப்படுகின்றது; மேலும் இத்தகைய நட்பு கண்டுபிடிக்கப்பட்டு, உண்மையுள்ளதென நிரூபிக்கப் படுகையில், அந்த நட்பானது உயர்வாய் மதிக்கப்பட வேண்டும். இது தேவனுடைய சாயலின் ஓர் அம்சமாகும். சுயநலம் ஆளும் ஓர் இருதயத்தில், உண்மையான நட்பு காணப்படவே முடியாது; ஏனெனில் தன்னலம் குறுக்கிடப்படும் கணத்திலேயே, போலியும், வலுவற்றதுமான நட்பானது தணிந்துபோக துவங்கிவிடுகின்றது அல்லது (போலி நட்பின்) துரோகம் வெட்ட வெளிச்சமாகிவிடுகின்றது.

தாவீது மற்றும் யோனத்தானுக்கு இடையில் காணப்பட்ட நட்பானது நிச்சயமாகவே உண்மையான ஒன்றாகும்; ஏனெனில் இவர்கள் இருவரின் நட்பானது, சோதனையின் சூளையில் நிரூபிக்கப்பட்டது; இன்னுமாக ஈனமான மனிதர்களால் ஒருபோதும் நிலைநிற்க முடியாத சோதனையான சந்தர்ப்பங்களின்கீழ், இவ்விருவரின் நட்பானது பல வருடங்கள் உறுதியாய் நிலைத்திருந்தது. இந்த நட்பானது, ஒருவர் இன்னொருவர் பற்றிக்கொண்டிருந்த வெறும் விருப்பங்கள் மற்றும் கற்பனைகளின் அடிப்படையில் உண்டானதாயிராமல், ஒருவர் இன்னொருவரிடத்தில் கண்ட உண்மையான குணங்களின் அடிப்படையில் உண்டானதாகும்; அந்தக் குண இயல்புகளே, இவர்களது நட்பிற்குக் காரணமாயிருக்கும் கவர்ச்சிகளாகவும், பிணைப்புகளாகவும் காணப்பட்டன. இருவருமே தேவனுக்குப் பக்தியுள்ள மனுஷராய் இருந்தனர்; விசுவாசமுள்ள புருஷராய் இருந்தனர்; தைரியமுடையவர்களாகவும், பராக்கிரமசாலிகளாகவும், சத்தியத்தையும், நீதியையும் அன்புகூருகின்றவர்களாகவும் காணப்பட்டனர்; இந்தக் குண இயல்புகளை இவர்கள் ஒருவரில் ஒருவர் கண்டுகொண்ட காரியமே, இவர்களது ஆன்மாக்களை ஒன்றாய்ப் பின்னிப்பிணைத்தது.

இராஜாவாகிய சவுலின் மூத்த மகனாகிய யோனத்தானே, இயல்பாய் அவரது அரியணையைச் சுதந்தரிக்க வேண்டியவராய் இருந்தார்; ஒருவேளை சவுல் தெய்வீக அதிருப்திக்கு ஆளாகவில்லையெனில், மேலும் இதன் காரணமாக தன் சந்ததிக்குரிய இந்தச் சிலாக்கியத்தினை பறிகொடுக்கவில்லையெனில்,

தன்னுடைய ஸ்தானத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லையெனில், சந்தேகத்திற்கிடமின்றி யோனத்தானே, தன் தகப்பனுக்கு அடுத்தபடியாக இராஜாவாகியிருப்பார் (1 சாமுயேல் 13:13). யோனத்தான் தன் தகப்பனுக்கு விசுவாசமுள்ள குமாரனாகவும், தேவனுக்கும் அவரது ஜனங்களுக்கும் உற்சாகம் உள்ள ஊழியக்காரனாகவும் காணப்பட்டார். தகப்பனுக்கும் குமாரனுக்கும் இடையில் காணப்பட்ட நெருங்கிய பிணைப்பானது, பல்வேறு விஷயங்களினால் வெளிப்பட்டது; அவை பின்வருமாறு: பெலிஸ்தர்களுக்கு எதிரான தனது திட்டத்தைத் தன் தகப்பனுக்கு இரகசியமாய் வைத்துக்கொள்வதன் மூலமாக மாத்திரமே, யோனத்தானால் தனது ஆபத்தான பயணத்தை மேற்கொள்ள முடியும் (1 சாமுயேல் 14:1). சவுலிட்ட விநோதமான ஆணையானது, அவர் தன் குமாரனுக்காகக் கொண்டிருந்த பாசத்தை வலியுறுத்துகின்றது (1சாமுயேல் 14:39-44). தேவைப்படும் பட்சத்தில், தன் ஆணையினை நிறைவேற்றுவதற்குத் தன் பாசத்திற்குரிய குமாரனை, தான் பலிசெலுத்துவார் என்று சவுல் அறிவித்தார். ஆனால் கர்த்தர் யோனத்தான் பக்கத்தில் இருக்கின்றார் என்று கூறி, ஜனங்கள் அவரைக் காப்பாற்றினார்கள். தகப்பனுக்கும், குமாரனுக்கும் இடையில் மிகவும் குறிப்பிடத்தக்க மற்றும் நெருங்கிய நம்பிக்கை காணப்பட்டது. யோனத்தான்: அப்படி ஒருக்காலும் வராது. நீர் சாவதில்லை, இதோ, எனக்கு அறிவிக்காமல் என் தகப்பன் பெரிய காரியமானாலும் சிறிய காரியமானாலும் ஒன்றும் செய்கிறதில்லை; இந்தக் காரியத்தை என் தகப்பன் எனக்கு மறைப்பானேன்? அப்படி இருக்கமாட்டாது என்றார் (1 சாமுயேல் 20:2). யோனத்தான் தன் தகப்பனிடத்தில் பெரும் செல்வாக்கு உடையவராய்க் காணப்பட்டார் (1 சாமுயேல் 19:6); இன்னுமாக ஆண்டவருடைய ஜனங்களை அவர்களது சத்துருக்களிடமிருந்தும், அவர்களை ஒடுக்குகிறவர்க ளிடமிருந்தும் காத்துக்கொள்ளும் காரியத்தில், தன் தகப்பனுடன் நன்கு ஒத்துழைத்தவராகவும் காணப்பட்டார்.

யோனத்தான் ஆண்டவரையும், அவரது ஜனங்களையும் அன்புகூர்ந்தார்; மேலும் அவர்கள் சார்ந்த விஷயத்தில் தேவனுடைய வல்லமையில் பலமான விசுவாசம் வைத்தவராகவும் காணப்பட்டார். கோலியாத் முன்னிலையில் தாவீது போய் நின்றதுபோன்று, யோனத்தானும் தேவனிடத்தில் விசுவாசம் வைத்தவராக, ஒருவேளை கர்த்தர் நமக்காக ஒரு காரியம் செய்வார்; அநேகம் பேரைக்கொண்டாகிலும், கொஞ்சம்பேரைக்கொண்டாகிலும்,இ ரட்சிக்கக்க ர்த்தருக்குத்த டையில்லை எ ன்றுகூறி,த ன்னுடைய ஆயுததாரியோடுகூடப் பெலிஸ்தரின் தாணையத்திற்குப் போனார் என்று பார்க்கின்றோம். (1 சாமுயேல் 14:6)

யோனத்தான், இஸ்ரயேலின் சிங்காசனத்திற்கு முறையாக வரும் அடுத்த வாரிசாகக் காணப்பட்டபோதிலும், மேலும் இவருடைய ஸ்தானத்தை எடுத்துக்கொள்ளும்படிக்குத் தாவீது அபிஷேகிக்கப்பட்டிருந்தபோதிலும், யோனத்தான் இராஜ குடும்பத்தைச் சேர்ந்தவராகவும், வயதில் முதிர்ந்தவராகவும், மேலும் தாவீது மேய்ப்பனாகவும் சுமார் 23-வயதை உடைய வாலிபனாகக் காணப்பட்டபோதிலும், இந்த அருமையான நட்புறவில், போட்டியின் ஆவியோ, பொறாமையின் ஆவியோ, வீண் பெருமையோ காணப்படவில்லை. இவர்கள் இருவருமே தங்களுடைய எளிமையான இருதயத்தில், கர்த்தருடைய நியமனம் ஞானமும், சிறந்ததுமானது என்று ஏற்றுக்கொண்டனர்; இன்னுமாகக் கர்த்தருக்கும் ஜனங்களுக்குமான தன் தன் பங்கையும், ஒருவர் இன்னொருவருக்கான தன் தன் பங்கையும் நன்கு ஆற்ற வேண்டுமெனத் தீர்மானித்துக்கொண்டனர்; ஆகையால் சவுல் அதிகாரத்தில் காணப்படும்படிக்குக் கர்த்தர் அனுமதிக்கும் காலம்வரையிலும், சவுல் ஆற்ற வேண்டிய கடமைகளின் விஷயத்தில், அவருக்கு யோனத்தான் ஒத்துழைப்புக் கொடுத்தார்; அதே சமயம் தனக்குப் பதிலாக

ஆளுகைசெய்யும்படிக்கு யார் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை அறிந்தவராக, நியமிக்கப்பட்ட அந்நபரைப் பாதுகாப்பதற்காகவும், காப்பாற்றுவதற்காகவும் வேண்டி தன் ஸ்தானத்தின் அதிகாரத்தை யோனத்தான் நன்கு பயன்படுத்தினவராகவும் காணப்பட்டார்.

தனக்கும், தன் வீட்டாருக்கும் எதிரி என்று சவுலினால் கருதப்பட்ட தாவீதிற்கு எதிராகப் பொறாமையினாலும், காழ்ப்புணர்வினாலும், பகைமையினாலும், பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தினாலும் சவுல் நிறைந்தவராகக் காணப்பட்டு, தாவீதைக் கொன்றுபோடும்படிக்குத் தொடர்ந்து முற்பட்டுக்கொண்டிருந்தார்; இப்படிக் காரியங்கள் இருக்க, யோனத்தான் தன் சகல அதிகாரத்திற்கு உட்பட்ட வல்லமையினைக்கொண்டு, தாவீதைப் பாதுகாத்தார் மற்றும் ஆதரித்தார், அதுவும் தன் சொந்த ஜீவனைப் பணையம் வைத்து இப்படிச் செய்தார். (1 சாமுயேல் 20:32-33)

சவுலைச் சேவிக்கும்படியாகத் தாவீது சவுல் வீட்டிற்கு வந்தார்; யோனத்தானுடைய மனம் இந்தத் தாவீதுடன் பிணைந்தபோது, யோனத்தான் தாவீதைத் தன் ஆத்துமாவைப்போலச் சிநேகித்ததினால், அவனும் இவனும் உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள். (தாவீது கர்த்தரினால் அபிஷேகிக்கப்பட்டவர் என்பதையும், இராஜ்யபாரத்திற்கு வருவதற்குக் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர் என்பதையும் அடையாளங்கண்டுகொண்டவராக) யோனத்தான் போர்த்துக்கொண்டிருந்த சால்வையைக் கழற்றி, அதையும், தன் வஸ்திரத்தையும், தன் பட்டயத்தையும், தன் வில்லையும், தன் கச்சையையும்கூடத் தாவீதுக்குக் கொடுத்தான் என்று வாசிக்கின்றோம் (1 சாமுயேல் 18:3-4). இவ்விதமாய்த் தேவனுடைய சித்தத்திற்குச் சகல விஷயங்களிலும் கீழ்ப்பட்டவர்களாகக் காணப்பட்ட இவர்கள் இருவரும், ஒருவருக்கொருவர் உண்மையுள்ள நட்புறவைக் கொண்டிருப்பார்களென உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள்.

தாவீது, சவுலின் முகத்திற்குத் தப்பி தன் ஜீவனை இரட்சிக்கும்படிக்கு ஓடும் முகாந்தரத்தில், யோனத்தானிடம் பிரியாவிடை பெற்றுக்கொள்கையில், மீண்டுமாக நிரந்தரமான நட்புறவைக் கொண்டிருப்பதற்கு உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள். தாவீது தென்புறமான இடத்திலிருந்து எழுந்து வந்து, (யோனத்தானை நெருங்கி) தரையிலே முகங்குப்புற விழுந்து, (தன் நண்பனுடைய குணம் மற்றும் ஸ்தானத்தின் மீதுள்ள மிகுந்த மரியாதையினை வெளிப்படுத்தும் விதமாக) மூன்றுவிசை வணங்கினான்; அவர்கள் ஒருவரை ஒருவர் முத்தஞ்செய்து அழுதார்கள்; தாவீது மிகவும் அழுதான். யோனத்தான்: நீர் சமாதானத்தோடே போகும்படிக்கு உம்மை அனுப்பிவிடுவேன்; கர்த்தர் என் தகப்பனோடு இருந்ததுபோல் உம்மோடும் இருப்பாராக. மேலும், (நீர் இராஜ்யபாரத்திற்கு வருகையில்) நான் உயிரோடிருக்கையில், நான் சாகாதபடிக்கு நீர் கர்த்தரின் நிமித்தமாய் எனக்குத் தயை செய்யவேண்டியதும் அல்லாமல், கர்த்தர் தாவீதின் சத்துருக்களாகிய ஒவ்வொருவரையும் பூமியின்மேல் இராதபடிக்கு, வேர் அறுக்கும்போதும், (பிற்காலத்தில் தன் சந்ததியினர் சிங்காசனத்தின்மீது உரிமைப்பாராட்ட முற்படுகையில், தாவீது சோதனைக்குள்ளாகலாம் என்று மனக்கண்ணால் யோனத்தான் கண்டவராக) நீர் என்றைக்கும் உமது தயவை என் வீட்டைவிட்டு அகற்றிவிடாமலும் இருக்கவேண்டும் என்றார். இப்படி யோனத்தான் தாவீதின் குடும்பத்தோடே உடன்படிக்கைபண்ணி, தாவீதுடைய சத்துருக்களின் கையிலே கர்த்தர் கணக்குக் கேட்பாராக என்று சொல்லி, யோனத்தான் தாவீதை மிகவும் சிநேகித்தபடியினால், பின்னும் அவனுக்கு ஆணையிட்டான்; தன் உயிரைச் சிநேகித்ததுபோல அவனைச் சிநேகித்தான். (1 சாமுயேல் 20:13-17)

ஒருமுறை மாத்திரமே அவர்கள் மீண்டும் சந்தித்தனர்; ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்குப் பிற்பாடு அந்தச் சந்திப்பு நடைபெற்றிருக்கலாம். அது சீப் வனாந்தரத்தில் நிகழ்ந்தது. சவுல் தாவீதைக்

கொன்றுபோடும்படிக்குத் தொடர்ந்து அவரை வேட்டையாடிக்கொண்டிருந்தார்; தாவீதின் சூழ்நிலையினை அறிந்துகொண்டவராக, மீண்டும் யோனத்தான் அவரைத் தேடிச்சென்றார். அப்பொழுது சவுலின் குமாரனாகிய யோனத்தான் எழுந்து, காட்டிலிருக்கிற தாவீதினிடத்தில்போய், தேவனுக்குள் அவன் கையைத் திடப்படுத்தி: நீர் பயப்படவேண்டாம்; என் தகப்பனாகிய சவுலின் கை உம்மைக் கண்டுபிடிக்க மாட்டாது; நீர் இஸ்ரயேலின்மேல் இராஜாவாயிருப்பீர்; அப்பொழுது நான் உமக்கு இரண்டாவதாயிருப்பேன்; அப்படி நடக்கும் என்று என் தகப்பனாகிய சவுலும் அறிந்திருக்கிறார் என்றான் . . . (மறுபடியும்) அவர்கள் இருவரும் கர்த்தருக்கு முன்பாக உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள். (1 சாமுயேல் 23:16, 17)

இச்சம்பவத்தைக் குறித்த பதிவில், நாம் தவிர்த்துச் செல்ல முடியாதளவுக்குள்ள விலையேறப்பெற்ற பாடங்கள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு:

(1) அபூர்வமாகவே காணப்படும் என்றாலும், உண்மையான மற்றும் உறுதியான நட்புறவைக் கொண்டிருத்தல் என்பது சாத்தியமான ஒன்றேயாகும் என்பது காண்பிக்கப்பட்டுள்ளது.

(2) யாருடைய சித்தங்களானது தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாய் ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கின்றதோ, மேலும் யார் சத்தியம் மற்றும் நீதியின் உறுதியான கொள்கைகளினால் இயக்கப்படுகின்றனரோ, அத்தகைய உயர்பண்புகளுள்ள மற்றும் சுயநலமற்ற மனங்களுக்கு இடையே மட்டும், இத்தகைய உண்மையான மற்றும் நித்தியமான நட்புறவு நிலைக்க முடியும் என்பது சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது.

(3) ஒருவேளை இம்மாதிரியான நட்புறவானது, யூத நியாயப்பிரமாணத்தினுடைய மங்கலான வெளிச்சம் உள்ள காலங்களில் காணப்பட்டதெனில், சுவிசேஷயுக வெளிச்சத்தின்கீழ் அதிகமாய்க் காணப்பட வேண்டும் எனும் காரியத்தையும் சுட்டிக்காண்பிக்கின்றது. அப்போதிருந்த அதே சூழ்நிலைகள் என்பது, இப்போது எல்லா வேளைகளிலும் அதேபோல் காணப்பட முடியாது என்பது உண்மை என்றாலும், அதற்கொத்த அநேகச் சந்தர்ப்ப சூழ்நிலைகள் இப்பொழுதும் காணப்படவே செய்கின்றன. போட்டி பொறாமைகள் ஏற்படுவதற்கும், தேவனுடைய சித்தம் மற்றும் நியமனங்களைப் புறக்கணித்து, சொந்த சித்தத்தையும், வழிமுறைகளையும் மாற்றாகக் கொண்டுவருவதற்குமான சோதனைகள் என்பது எப்போதும் காணப்படவே செய்கின்றன.

இம்மாதிரியான சோதனைக்கு உள்ளாகும்போது, யோனத்தான் மற்றும் சாமுயேலின் தலைச்சிறந்த உதாரணங்களை நினைவிற்குக் கொண்டுவருவோமாக. யோனத்தான் தேவனுக்குள் தாவீதின் கரங்களைப் பலப்படுத்தினவராக தாவீதிடம்: நீர் பயப்பட வேண்டாம் . . . நீர் இஸ்ரயேலின் மேல் இராஜாவாய் இருப்பீர்; அப்பொழுது நான் உமக்கு இரண்டாவதாக இருப்பேன் என்று கூறினார் (1 சாமுயேல் 23:17). சாமுயேலும் தனக்குப் போட்டியாளனாக வந்த சவுலைப் பற்றி, கர்த்தர் தெரிந்துகொண்டவனைப் பாருங்கள், சமஸ்த ஜனங்களுக்குள்ளும் அவனுக்குச் சமமானவன் இல்லை என்றார் (1 சாமுயேல் 10:24). ஆகையால் ஒருவரையொருவர் கனம்பண்ணுவதில் முந்திக்கொள்வோமாக; கர்த்தருடைய சித்தமும், கர்த்தருடைய வழிகளின்படியான காரியங்களும் செழித்தோங்குவதில் களிகூருவோமாக!

தாவீது மற்றும் யோனத்தானுக்கிடையிலுள்ள நட்புறவானது, மகிமையடைந்த சபைக்கும், தேவனுடைய இராஜ்யத்தில் இவர்களுக்கு அடுத்தப்படியாக இருக்கப்போகும் பூமியின் பிரபுக்களுக்கும் இடையில் காணப்படப்போகும் அருமையான பரஸ்பர இணக்கத்தைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இவர்களுக்கிடையே எந்த ஒரு பூசல்களோ அல்லது போட்டியோ அல்லது பொறாமையோ

இருக்கப்போவதில்லை; ஏனெனில் ஒவ்வொருவரும் தேவனுடைய ஆச்சரியமான திட்டத்தில் தங்களுக்குக் கொடுக்கப்படும் கனமுள்ள ஸ்தானத்தில் காணப்படுவதில் மகிழ்ச்சியாய் இருப்பார்கள்; இன்னுமாக ஒருவரையொருவர் தங்களது உயிரைப்போன்று சிநேகிப்பார்கள். ஆபிரகாமின் உடன்படிக்கையில் சுவிசேஷயுக சபை கிருபையின் முதலாம் ஸ்தானத்தைப் பெறுபவர்களாகவும், கனத்தில் அடுத்ததாக முற்பிதாக்கள் இடம்பெறுபவர்களாகவும் இருப்பினும், இப்படி இருப்பதில் இவர்கள் களிகூருவார்கள்; ஏனெனில் தெய்வீக ஞானமும், அன்பும் இப்படியாகத் திட்டமிட்டுள்ளது.

யோனத்தானுடைய வீட்டார்மீது தனது இரக்கத்தை நீக்குவதில்லை என்று யோனத்தானுடன் பண்ணின உடன்படிக்கையினைத் தாவீது நினைவுகூர்ந்து காணப்பட்டதுபோலவே (2 சாமுயேல் 9:1-13), முதலாவது முற்பிதாக்களையும், பிற்பாடு முற்பிதாக்களின் அதிகாரத்திற்குக்கீழே காணப்படப்போகும் பூமியின் குடிகள் அனைவரையும் ஆசீர்வதிப்பதற்குரிய தங்களது உடன்படிக்கையினை, மகிமையடைந்த சபையும் நினைவுகூருவார்கள். சவுல் தாவீதை வேட்டையாட துரத்தினதுபோல, நம்மைத் தீவிரமாய் வேட்டையாட (கெர்ச்சிக்கிற சிங்கம்போல்) சாத்தான் முயற்சித்துக்கொண்டிருக்கையில், நமக்கு மிகவும் உதவிகரமாய் இருந்துள்ள முற்பிதாக்களின் வாழ்க்கையானது என்றென்றும் நினைவில் வைக்கப்படும், அதாவது நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசிகள் மூலமான முற்பிதாக்களின் அன்பின் ஊழியங்களும், இன்னுமாகத் தேவபக்தியுள்ள ஜீவியத்திற்கும், குணலட்சணத்திற்கும் அவர்கள் சிறந்த மாதிரிகளாகக் காணப்பட்ட காரியமும், என்றென்றும் நினைவில் வைக்கப்படும். (1 பேதுரு 5:8)

R4127 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## முதலாம் மாதத்தில் பஸ்கா

சந்திர காலம் மற்றும் சூரிய காலத்தின் அடிப்படையிலுள்ள யூதருடைய ஆண்டுக்குறிப்பேட்டுடன், சூரிய காலத்தின் அடிப்படையிலான நம்முடைய ஆண்டுக்குறிப்பேட்டை இசைவுப்படுத்திடுவதில் அநேகர் அதிகமாகவே சிரமத்திற்குள்ளாகுகின்றனர். இப்படியானவர்களுக்கு, ஸ்மித் வேதாகம அகராதியில் இவ்விஷயம் குறித்து இடம்பெறும் பாகத்தையும் மற்றும் எபிரெய காலகணக்கு நிபுணர் லிண்டோ அவர்கள் இவ்விஷயம் குறித்து எழுதியுள்ள பாகத்தையும் மேற்கோளிட்டு, அன்பாய் உதவிட விரும்புகின்றோம்.

ஸ்மித் வேதாகம அகராதியானது முன்வைப்பது என்னவெனில்:

இரண்டு அமாவாசைகளுக்கு இடையிலுள்ள காலப்பகுதியாகிய Synodical மாதம் என்று அழைக்கப்படுகின்ற சந்திர மாதத்திற்கு 29:12:44:3 1/3, அதாவது 29 ½ நாட்களும், ¾ மணி நேரமும் காணப்படுகின்றபடியால், ஒரு மாதத்திற்கு 29 நாட்கள் என்றும், அடுத்து வரும் மாதத்திற்கு 30 நாட்கள் என்றும் காணப்படத்தக்கதாக ஏற்பாடுபண்ணப்படுகின்றது. ஒரு மாதத்திற்கு 30-நாட்கள் காணப்படும்போது, பாதி நாளானது விடுமுறையாகக் காணப்படமுடியாது எனும் கோட்பாட்டின் அடிப்படையில், மாதத்தினுடைய கடைசி நாளும், அடுத்த நாளும், அமாவாசை எனக் கடைப்பிடிக்கப்படுகின்றது. முப்பதாம் நாளானது பாதி முந்தின மாதத்தின் நாளாகவும், பாதி அமாவாசையாகவும் காணப்படுவதினால், அந்த முழு நாளும் விடுமுறையாகக் காணப்படுகின்றது மற்றும் அடுத்த நாளும் அமாவாசையினுடைய முதலாம் முழு நாளாக இருக்கின்றபடியால், இதுவும் விடுமுறையாகக் காணப்படுகின்றது. இந்தக் கோட்பாடானது முற்காலங்களிலேயே கைக்கொள்ளப்படுகின்றது என்பது 1 சாமுயேல் 20:5, 27-ஆம் வசனங்களில் பார்க்கப்படலாம்.

R3232

# தனித்தன்மையான நட்புறவு

## 1 சாமுயேல் 20:12-23

சகோதரனிலும் அதிக சொந்தமாய்ச் சிநேகிப்பவனுமுண்டு. - நீதிமொழிகள் 18:24

முற்காலங்களில் வாழ்ந்த மாமனிதர்களுக்கிடையே நிலவின தீவிரமான நட்பு குறித்த அநேக சம்பவங்களைச் சரித்திரமானது தெரிவிக்கின்றது; எனினும் இப்பாடத்தில் இடம்பெறும் யோனத்தான் மற்றும் தாவீதிற்கு இடையிலுள்ள நட்பைவிட மிகச்சிறந்த வேறெந்த நட்பையும் சரித்திரமானது தெரிவிக்கிறதில்லை. தாவீதிற்கான யோனத்தானுடைய அன்பும், யோனத்தானிற்கான தாவீதினுடைய அன்பும், சுயநலமற்ற நட்பாக மாத்திரம் பிரகாசியாமல், இன்னுமாக யோனத்தானுடைய நலனுக்கடுத்தவைகளைப் பாதிப்பதுபோன்றுள்ள தோற்றம்கொண்ட நட்பாகவும் தோன்றியது - ஆனால் உண்மையில் இப்படிப் பாதிப்பு கொடுக்கும் ஒன்றாகக் காணப்படவில்லை.

இராஜவாகிய சவுலின் மகனாகிய யோனத்தான், இஸ்ரயேலின் அரியணைக்கு அடுத்த வாரிசாக அடையாளம் காணப்பட்டார்; அப்போது அவருக்கு 35-வயதாயிருந்தது. ஊரிலிருந்து வந்தவரும், சுமார் 21-வயதை உடையவருமான தாவீதோ, திடீரென ஜனங்களுக்கு முன்பு பிரபலமடைந்தவர் ஆனார்; இவர் ஆயிரம் புருஷர்களுக்குத் தளபதியாக நியமிக்கப்பட்டார்; மேலும் சமீபத்தில்தான் இவர் சவுலின் குமாரத்தியை விவாகம்பண்ணினார். சவுல் ஜனங்களுடைய பாசத்தின் விஷயத்தில் தாவீதைத் தனக்குப் போட்டியாளனாகவே பார்த்தார்; மேலும் அனைத்துக் காரியங்களுமே, என்றோ ஒருநாள் தாவீது, சவுலுக்கு அடுத்தப்படியாக அரியணைக்கு வருவார் என்பதை முன்கூட்டியே உணர்த்தியதாய் இருந்தது. விழுந்துபோன மனுஷீகத்தினுடைய கண்ணோட்டத்தின்படி பார்க்கையில், தாவீதைத் தனக்கான எதிரியாகவும், போட்டியாளனாகவும் யோனத்தான் கருதுவதற்கு அனைத்துக் காரணங்களும் இருந்தன; மேலும் விழுந்துபோன சுபாவத்தினுடைய பொறாமையும், எரிச்சலும், யோனத்தானுடைய இருதயத்தில் நட்பிற்கும், அன்பிற்கும் பதிலாக, பகைமையையும், விரோதத்தையுமே வளர்த்தியிருந்திருக்கும். இவைகளையெல்லாம் பார்க்கும்போது, இக்காரியங்களே இந்த இரு இளைஞர்களுக்கிடையே நிலவின குறிப்பிடத்தக்க நட்பினை, சரித்திரத்தினுடைய பக்கங்களில் மிகவும் அருமையான நட்புகளில் ஒன்றாக ஆக்கியுள்ளது.

யோனத்தானுடைய ஆத்துமா, தாவீதின் ஆத்துமாவோடே எப்படி ஒன்றாய் இசைந்திருந்தது என்றும், அவர்களுடைய நேசங்களும், நம்பிக்கைகளும், அன்புகளும் எப்படிப் பின்னிப்பிணைந்திருந்தது என்றும் நாம் வாசித்தறிகின்றோம். தாவீது சவுலின் அரண்மனையில் தங்கும்படிக்கு வந்தபோது, யோனத்தான் தனது வஸ்திரங்களில் சிலவற்றை அவருக்குக் கொடுத்த காரியமும், மற்ற பல பாசத்தின் வெளிப்பாடுகளும், அவர்களது விலையேறப்பெற்ற நட்புணர்வுகளின் வெளிப்புற வெளிக்காட்டல்களாக இருந்தன; இவைகள் அனைத்தும், அதாவது தாவீதை மரியாதைப்படுத்தி, அவரது கனத்தை மேம்படுத்துவது என்பது இயல்பாகவே அடுத்த வாரிசாகத் தோற்றமளித்த யோனத்தானுடைய நிலைமையைச் சிறுமைப்படுத்தினதாகவே இருந்தது; மேலும் அரண்மனையில் தனக்கான கனத்தினுடைய ஸ்தானத்தைத் தக்கவைக்க விரும்பியிருப்பாரானால், இப்படியாகவெல்லாம் செயல்பட்டிருக்கமாட்டார். தங்கள் சொந்தக் கனங்களையும்/மரியாதையையும், பெருமையையும் தக்கவைப்பதற்கு, மற்றவர்களை நசுக்கிப்போடுதல்

அவசியமானது என்று அனுமானிக்கும் தவறை குறுகிய மனமுடையவர்கள் செய்வதுண்டு; ஆனால் யோனத்தான் இப்படியாகக் குறுகிய மனமுடையவராக இராமல், பெருந்தன்மையுடையவராக இருந்தபடியால், அன்று முதல் இன்றுவரை, இவரை அறிந்துகொண்டவர்கள் அனைவராலும் இவரது குணங்களானது விரும்பப்பட்டன.

எல்லாவற்றிற்கும் ஒரு காரணம் உண்டு; இந்த இரண்டு உயர்பண்புள்ள ஆன்மாக்களுக்கிடையே காணப்பட்ட இந்த அன்பிற்கும் காரணம் ஒன்று இருக்க வேண்டும். நீதியுள்ளவைகள் எவைகளோ, அன்புள்ளவைகள் எவைகளோ, தூய்மையுள்ளவைகள் எவைகளோ, பெருந்தன்மையுள்ளவைகள் எவைகளோ, கனமுள்ளவைகள் எவைகளோ, அவைகளையே நாம் அன்புகூரவும், உயர்வாய் மதிக்கவும் வேண்டும் என்று அப்போஸ்தலன் தெரிவித்துள்ளார்; அப்படியானால் இவைகளுக்கு எதிரானவைகளை நாம் அன்புகூருவது என்பது தகுதியானதல்ல என்பதும் சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது. நீதி மற்றும் நன்மையின் கொள்கைகளை அன்புகூருவதற்கும், நபர்களை அன்புகூருவதற்கும் இடையில் வித்தியாசம் உண்டு என்பது உண்மையே; எனினும் நபர்கள்மீது வைக்கப்படும் அன்பு என்பது, அவர்கள் பெற்றிருக்கும் தலைச்சிறந்த பண்புகளின் மற்றும் அன்பிற்குப் பாத்திரமான பண்புகளின் காரணமாகவே காணப்பட வேண்டும் என்பதே கவனிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம். இந்த இரண்டு மனிதர்களும், இவர்கள் மோசமான மற்றும் இழிவான நபர்களாக இருந்திருப்பார்களானால், இவர்கள் ஒருவரையொருவர் அன்புகூர்ந்திருக்கமாட்டார்கள்; ஏனெனில் இழிவானவர்களாலேயே இழிவானவர்களை அன்புகூர முடியும்; மேலும் தாறுமாறானவர்களாலேயே தாறுமாறானவர்களை அன்புகூர முடியும்.

யோனத்தான் அன்புகூருமளவுக்கு, தாவீதின் குணங்களில் எது அவரைக் கவர்ந்ததாய் இருந்தது? சந்தேகத்திற்கிடமின்றி அது அவருடைய உயர்பண்புகளும், அவரது தைரியமும், அவரது நேர்மையும், இராஜா மற்றும் ஜனங்களுக்கான அவரது உண்மைத்தன்மையும், எல்லாவற்றிற்கும் மேலாக தேவன்மீதான அவரது விசுவாசமும், தேவனையே அவர் சார்ந்திருந்ததுமாகும். தாவீது அன்புகூருமளவுக்கு யோனத்தானிடம் என்ன இருந்தது? மேற்கூறப்பட்ட அதே பண்புகளில் அநேகமானவைகள் யோனத்தானிடமும் காணப்பட்டன. யோனத்தானும் தைரியமுள்ளவராவார்; மேலும் இதை அவர் ஏற்கெனவே நிரூபித்துக்காட்டியும் உள்ளார்; அவர் உத்தமராகவும், நேர்மையுள்ளவராகவும், தாழ்மையுள்ள மனமுடையவராகவும், பெருந்தன்மையுள்ளவராகவும், நண்பனுக்கு உண்மையானவராகவும், எல்லாவற்றிற்கும் மேலாக தன் தேவனுக்கு உண்மையானவராகவும் காணப்பட்டார். (1 சாமுயேல் 14:1-15, 27-30, 43; 23:16-18)

இந்த இரண்டு மனிதர்கள் விஷயத்தில், இவர்கள் இருவரும் ஒருவர்மேல் ஒருவர் அன்பு பாராட்டத்தக்கதாக, இயல்பான சில இருதய பண்புகளைப் பெற்றிருந்தபோதிலும், இவர்கள் தனிப்பட்ட விதத்தில் தேவனிடம் கொண்டிருந்த விசுவாசமும், பக்தியுமே இவர்களை மிகவும் ஒன்றிணைத்த காரியங்களாகக் காணப்பட்டன. யாரேனும் சிறந்த நண்பர்களாகக் காணப்பட வேண்டுமெனில், அவர்கள் இருவருமே ஆர்வம் காட்டும் மூன்றாம் நோக்கம்/குறிக்கோள் ஒன்று காணப்பட வேண்டும் என்றும், வட்டத்தின் ஆரங்கள் (radii of a circle) போன்று, மையத்தை நோக்கி அவர்கள் வர வர, அவர்கள் ஒருவரையொருவர் நெருங்கி வருவார்கள் என்றும் யாரோ ஒருவர் சொல்லியிருக்கின்றார். இப்படியே இந்த இரண்டு மனுஷர்களின் விஷயத்திலும் சம்பவித்தது; தேவனுக்கும், தேவனில் மாதிரிப்படுத்தி விளக்கப்பட்டுள்ள சத்தியம் மற்றும் நீதியின் கொள்கைகளுக்கும் இவர்கள் கொண்டிருந்த உண்மையே,

இவர்களது நட்புறவின் உறுதிக்குக் காரணமாயிருந்தது; மேலும் இது, பலதரப்பட்ட தங்களது பூமிக்கடுத்த நன்மைகள், தங்கள் அன்பை முறித்துப்போடுவதைத் தடைபண்ணிற்று.

இதே கொள்கையே உண்மையுள்ள, சுயநலமற்ற அன்பு அனைத்திலும் விளங்குகின்றது; கவர்ந்து இழுப்பதற்கும், ஒருவர் இன்னொருவர்மீது காட்டும் அன்பு மற்றும் அக்கறையை ஊக்குவிக்கிறதற்கும் ஏதுவாக ஒருவரையொருவர் கவர்ந்து ஈர்ப்பதற்குரிய ஏதோ ஒன்று காணப்பட வேண்டும். அன்பு மற்றும் நட்பின் வாக்குறுதிகளை மீறுவது என்பது அல்லது திருமண வாக்குறுதிகளை மீறுவது என்பது, வாக்குறுதியைப் பண்ணினவர்களில் யாரோ ஒருவர் சுயநலமான அன்பை உடையவராய் இருக்கின்றார் என்பதையும், கர்த்தருடைய வார்த்தைகள் போதிக்கின்றதும், இப்பாடத்தில் சிறப்பாய் விளக்கப்பட்டுள்ள துமான தூய்மையான அன்பைப் பெற்றிருக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டுகின்ற தாயிருக்கின்றது. சுயநலமான அன்பு என்பது நிச்சயமாகவே திறமிக்கவர்களையும், நல்லவர்களையும், சிறந்தவர்களையும், உயர் பண்புடையவர்களையும் ரசித்துப்பார்க்கும்; ஆனாலும் சரிசமமாய் உயர்பண்புகளையும், சிறப்புகளையும் உடையவர்களை ரசிப்பதில்லை; இச்சுயநலமான அன்பானது, அதன் சொந்த நலன்களுக்கு இலாபமாய் உள்ளது என்று அது நம்பும் தருணங்களில், நட்பைக் கைவிடுவதற்குரிய சோதனையினால் நிச்சயமாக ஒருநாள் தாக்கப்படும். யோனத்தானுடைய அன்பானது, இந்தச் சுயநலமான அன்பின் வகையாக இருக்கவில்லை; இதன் காரணமாக, அது மாறா தன்மையுடையதாய் இருந்தது; (மனதில் எழும்ப வாய்ப்பிருந்த) சுயநலமான எண்ணங்களை மேற்கொண்டதற்கேற்ப, அவருடைய அன்பானது உறுதியும், பலமும் அடைந்தது. இந்தக்கோணத்தில் பார்க்கும்போது, இது நமது கர்த்தர் இயேசு தம் ஜனங்களுக்காகக்கொண்டிருந்த அன்பினை அடையாளப்படுத்திக் காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. தன் ஸ்தானத்தையும் இழக்கத் துணிந்தவராக, யோனத்தான் தாவீதை அன்புகூர்ந்ததுபோல, தம்முடைய ஜனங்களுக்குத் தாம் மீட்பராகத்தக்கதாகப் பிதாவோடு தமக்கிருந்த மகிமையினை நமது கர்த்தர் இயேசு துறந்தார்; இந்தத் தம்முடைய ஜனங்களைக்குறித்தே அவர்: நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள் என்று கூறியுள்ளார். (யோவான் 15:14)

நண்பன் என்ற பெயருக்குப் பாத்திரமான ஒருவன்
எல்லோருக்கும் அப்பாற்பட்டவனாகக் காணப்படுவான்;
அவனது அன்பு, சகோதரனின் அன்பிலும் மேலானது;
அவனது அன்பு விலையுயர்ந்ததும், இலவசமானதும், முடிவில்லாததுமாகும்.

நம்முடைய இந்தப் பாடமானது, இந்த இரண்டு நண்பர்களையும், தாவீதின் ஜீவன் அபாயத்தில் இருந்தப்போதுள்ள தருணத்தில் அறிமுகம்பண்ணுகின்றது. நம்முடைய முந்தைய பாடத்தில், சவுல் தாவீதிற்குத் தீங்குசெய்ய வேண்டுமென்றிருந்தார் என்று பார்த்தோம். அந்தப் பாடத்தில் நாம் பார்த்த பயமுறுத்தும் செயல்களானது, சவுலினால் பலமுறை செய்யப்பட்டன; இறுதியில் சவுல் தனது வாத்தியக்காரனாகிய தாவீதின்மீது ஈட்டியை எறிந்தார்; ஆனால் அதிலிருந்து தாவீது தப்பித்துக் கொள்கின்றார். இந்தப் பகைமையான வெளிப்பாட்டின் காரணமாகவே, சவுல் இராஜா தாவீதின் விஷயத்தில் சில மனமாற்றங்களைக் காண்பிக்காததுவரையிலும், இராஜாவின் முன்னிலையில் தாவீது வருவது ஞானமாய் இராது என்று இந்த இரண்டு நண்பர்களும் முடிவெடுத்தார்கள். அண்மையில் வரவிருந்த பந்தியானது முக்கியமான ஒன்றாய்க் காணப்பட்டது; யோனத்தானும், வீட்டாரிலுள்ள மற்றவர்களும் அங்குக் காணப்படுவார்கள்; எனினும் அதில் பங்குகொண்டு, தன் ஜீவனை தாவீது அபாயத்திற்குள்ளாக்குவது

என்பது விவேகமாய் இராது என்று எண்ணினார்கள்; ஆகையால் இராஜாவிடம் யோனத்தான் (தாவீது வராததற்குரிய) காரணத்தைச் சொல்ல வேண்டும் என்றும், இராஜாவின் மனநிலை என்ன என்று பிற்பாடு தாவீதிற்கு அறிவிக்கப்பட வேண்டும் என்றும், பின்னர் தேவைப்பட்டால் தாவீது நாட்டைவிட்டு ஓடவேண்டும் என்றும் ஏற்பாடுகள் பண்ணப்பட்டிருந்தன. தாவீதின்மீதுள்ள கசப்பினால் சவுலின் இருதயம் நிரம்பியிருந்ததை யோனத்தான் கண்டுகொண்டார்; அதுவும் தன் குமாரன், தாவீதிற்காகக் காரணங்களைக் கூறினபோது, சவுல் கோபம் அடைந்தவராக, தனது ஈட்டியை அவர்மேல் எறியும் அளவுக்குக் கசப்பு அவரிடம் இருந்தது; அவரைக் கொல்ல வேண்டும் என்பதற்காக எறியவில்லை என்றாலும், தனது அதிருப்தியின் காரணமாகவே ஈட்டியை எறிந்தார். யோனத்தான் தன் தகப்பனுடைய தவறுகள் மற்றும் கோபங்கள் நிமித்தம் வருத்தம் அடைந்தார்; மேலும் முன்னமே ஏற்பாடுபண்ணியிருந்த சைகையின்படியே, காரியத்தை யோனத்தான் தாவீதிடம் உடனடியாகத் தெரிவித்துவிட்டார். இந்த இரண்டு நண்பர்களாலும், தனிப்பட்ட விதத்தில் சந்திக்காமல் விடைபெற்றுக்கொள்ள முடியவில்லை; இவர்கள் சந்தித்து, ஒருவரையொருவர் முத்தஞ்செய்து, அழுது, ஒருவருக்கொருவர் வாக்குறுதிகளைப் பண்ணிக்கொண்டு, ஒருவருக்கொருவர் கொண்டிருந்த அன்பினுடைய உண்மைக்குத் தேவனைச் சாட்சியாக நிறுத்திக்கொண்டனர். சவுலுக்கு அடுத்தபடியாக இராஜாவாக இருக்கும்படிக்குத் தாவீதே கர்த்தருடைய தெரிந்துகொள்ளுதலாய்க் காணப்படுகின்றார் என்பதில் யோனத்தான் மிகவும் தெளிவடைந்தவராய்க் காணப்பட்டார் என்பது உறுதியே; மேலும் தேவனுக்கு முழுமையான விசுவாசமும், அர்ப்பணிப்பும் கொண்டவராகக் காணப்பட்டபடியால், யோனத்தான் தெய்வீக ஏற்பாட்டினை எதிர்க்கும் எந்த எண்ணங்களையும் பெற்றிருக்கவில்லை. அநேகமாக ஒருவர்மேல் ஒருவருக்கு இருந்த நம்பிக்கையில், தாவீது தான் அபிஷேகிக்கப்பட்டிருக்கும் காரியத்தைக்குறித்து யோனத்தானிடம் ஏற்கெனவே சொல்லியிருந்திருப்பார்; இன்னுமாக இராஜாவாகிய சவுலை எதிர்த்தழிப்பதற்குத் தகுதியான காரணமாகவோ அல்லது சாக்காகவோ, தான் அபிஷேகிக்கப்பட்ட காரியத்தை, தான் கருதப்போவதில்லை என்றும் தாவீது யோனத்தானுக்கு உறுதியளித்திருக்க வேண்டும்; இன்னுமாகக் கர்த்தர்தாமே தன்னை அழைத்து, தன்னை அபிஷேகித்துள்ளபடியால், கர்த்தரால் ஏற்கெனவே இராஜாவின் ஸ்தானத்திற்கு அபிஷேகிக்கப்பட்டுள்ளவருக்கு (சவுலிற்குத்) தீங்கு செய்யத்தக்கதாக, தன் கையை நீட்டாமலேயே, கர்த்தர் தமக்குரிய காலத்தில், தமக்குரிய வழியில், தன்னை அதிகாரத்திலும், வல்லமையிலும் நிறுவ வல்லவர் என்றும் யோனத்தானுக்குத் தாவீது உறுதியளித்திருப்பார்.

நட்புறவு என்பது, மனம் மற்றும் இருதயத்தினுடைய பண்புகள் சம்பந்தப்பட்டது என்பதை நாம் ஏற்கெனவே பார்த்திருக்கின்றோம். பெருந்தன்மையுள்ளவர்கள், பெருந்தன்மையுள்ளவர்களை நேசிப்பார்கள்; உயர்பண்புள்ளோர் உயர்பண்புகள் உள்ளோரை நேசிப்பார்கள்; நேர்மையானோர் நேர்மையுள்ளவர்களை நேசிப்பார்கள்; சாந்தமுள்ளோர் சாந்தமுள்ளவர்களை நேசிப்பார்கள்; இப்பொழுதோ கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் பெரியவர்கள், ஞானவான்கள் அல்லது சிறந்தவர்கள் அநேகரில்லை என்றும், மாம்சத்தின்படி சிறந்தவர்களாய் இராதவர்கள் மத்தியிலிருக்கும் ஜனங்களையே தேவன் தம்முடைய உடன்படிக்கையின் ஜனங்களென, நண்பர்களென, பிள்ளைகளென அன்புகூருகின்றார் மற்றும் ஏற்றுக்கொள்கின்றார் என்றுமுள்ள உண்மையின்மீது, இப்பொழுது உங்களது கவனத்தைத் திருப்புகின்றோம். கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் வல்லவர்களோ, சிறப்புமிக்கவர்களோ அநேகர் இராமல், மாறாக இவ்வுலகத்தின் தரித்திரர்களும், விசுவாசத்தில் ஐசுவரியமானவர்களுமே பிரதானமாய்க் காணப்படுகின்றனர் என்பது உண்மையாக இருப்பினும், கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள்

மத்தியிலுள்ள நேசமும், நட்பும், பூமிக்குரிய எந்த ஒரு பந்தம் அல்லது உறவைக்காட்டிலும் பலமுள்ளதாகவும், ஆழமாகவும் காணப்படுகின்றது என்பதையும் நாம் கவனிக்கின்றோம். இது நட்புறவிற்குரிய பொதுவான கொள்கைக்கு முரண்பாடான ஒன்றாகக் காணப்படுகின்றதல்லவா? பாவிகளாகிய நம்மீதுள்ள தேவனுடைய அன்பு என்பது நட்பான ஒன்றாக இல்லாமல், மாறாக இரக்கமான ஒன்றேயாகும்; அதேபோன்று பாவிகள் மீதான அவரது ஜனங்களின் அன்பு என்பது, நட்பான ஒன்றாயிராமல், மாறாக இரக்கமான, பரிதவிக்கிற ஒன்றேயாகும்; இன்னுமாக அவர்களுடைய சீர்க்கேட்டினின்று வெளிவர அவர்களுக்கு உதவ வேண்டுமென்கிற வாஞ்சையாகவும் காணப்படுகின்றது. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, பாவிகளாய் இருப்பதை நாம் நிறுத்திக்கொண்ட பிறகே, நாம் தேவனுடைய நண்பர்கள் ஆகுவதற்கும், அவரை நம்முடைய நண்பராக உணர்ந்துகொள்வதற்குமான சிலாக்கியம் அடைந்தவர்களானோம். பாவிகளாய் இருப்பதை நாம் நிறுத்திக்கொண்டு, பிரியமானவருக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகே, நம்மைப்போல் மாறியுள்ள மற்றவர்களின் நண்பர்களாகுகின்றோம்; மேலும் நட்பு எனும் இப்பண்பில் வளரத் துவங்குகின்றோம் - அதாவது பரிசுத்த ஆவியின் பங்காளிகளென, சகோதர சகோதரிகளென ஒருவரையொருவர் அன்புகூரும் பண்பில் வளரத் துவங்குகின்றோம்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், நட்பில் இரண்டு தளங்கள் காணப்படுகின்றன - ஒன்று சுபாவ தளம்; இதில் ஒத்த சுபாவ பண்புகள் உள்ள மனிதர்கள் ஈர்க்கப்படுகின்றனர்; மேலும் ஆவிக்குரிய தளம் என்ற ஒன்று இருக்கின்றது; இதில் சுபாவ பண்புகளில் வேறுபட்டவர்கள், ஆனாலும் ஆவிக்குரிய நம்பிக்கைகளில், நோக்கங்களில், குறிக்கோள்களில் ஒத்திருப்பவர்கள், புதிய பந்தத்தினால், புதிய அன்பினால் இன்னும் அதிகமாய் ஒருவரோடு ஒருவர் நெருங்கி இழுக்கப்படுகின்றனர்; இந்தப் புதிய பந்தமும், புதிய அன்பும் இவர்களது மாம்சங்களை ஒருங்கிணைக்காமல், மாறாக கிறிஸ்தவ அன்பிலும், ஒருமைப்பாட்டிலும் இவர்களது இருதயங்களை ஒருங்கிணைக்கின்றது.

கிறிஸ்து இயேசுவுக்குள்ளான இந்தப் புதுச்சிருஷ்டிகள், ஒருவரையொருவர் மாம்சத்தின்படி அறியாமல், மாறாக ஆவியின்படி அறிந்துகொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். மாம்சத்தின்படி இவர்களது பெலவீனங்கள் என்னவாக இருப்பினும், இவர்கள் ஒவ்வொருவரின் ஆவியில் அல்லது புதிய மனதில் சிறந்த உணர்வுகள், உயர்ந்த எண்ணங்கள் காணப்படுகின்றன; அதாவது நன்மையானவைகள் எவைகளோ, உண்மையுள்ளவைகள் எவைகளோ, மேன்மையானவைகள் எவைகளோ, தூய்மையான வைகள் எவைகளோ, அவைகளே காணப்படுகின்றன. இவர்கள் தேவனுக்கு இசைவாயுள்ள சித்தத்தின், நோக்கத்தின்பு தியக ண்ணோட்டத்தின்படிஒ ருவரையொருவர்அ ன்புகூருகின்றனர்; மேலும்உ லகம், மாம்சம் மற்றும் எதிராளியானவனின் பொல்லாத செல்வாக்குகளுக்கு/ஆதிக்கங்களுக்கு எதிராக விசுவாசத்தின் நல்லப் போராட்டத்தைப் போராடுவதில் ஒருவருக்கொருவர் காண்பிக்கும் தீவிரத்தினை இவர்கள்ப ார்க்கையில்,இ வர்கள்ஒ ருவர்இ ன்னொருவருக்காய்க்கொ காண்டிருக்கும்ந ட்பும்வ ளர்ந்து பெருகுகின்றது. பழையவைகள் அனைத்தும் ஒழிந்துபோய் அனைத்தும் புதிதாகியுள்ள, கிறிஸ்து இயேசுவுக்குள்ளானபு துச்சிருஷ்டிகளுக்கிடையில்ந ிலவும்அ ன்பையும்,ந ட்பையும்எ ந்தந ாவினாலும், எழுதுகோலாலும் சரிவர விவரித்திட முடியாது.

எனினும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை அன்புகூருவதுபோலவே, மற்றப் பிள்ளைகளையும் அன்புகூர வேண்டும் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது; ஒருவனுக்குத் தன் சொந்தப் பிள்ளையின் விஷயத்திலேயே பெரிதான பொறுப்பு காணப்படுகின்றது மற்றும் இதை உணர்ந்துகொள்ளவும் வேண்டும்.

அதேபோல் பரிசுத்தவான்கள் அனைவரும்கூட ஒரே மாதிரியாக அன்புகூரப்படுவார்கள் என்றும் எடுத்துக்கொள்ளக்கூடாது. நமது ஆண்டவர் தம்முடைய சீஷர்களில் சிலரை விசேஷமாய் அன்புகூர்ந்தார் என்பதாக நமக்குக் கூறப்பட்டுள்ளது. காலங்கள் செல்லச் செல்ல அபூரணத்திற்குப் பதிலாக பூரணம் காணப்படுகையில், சகோதர சகோதரிகள் அனைவரும் பூரணர்களாகவும், அயலார் யாவரும் பிரியத்திற்குரிய சகோதரராயும் இருப்பார்கள். எனினும் அதற்கு முன்புவரையிலும், மனித கடமைகள் மற்றும் ஆவிக்குரிய வளர்ச்சியின் அடிப்படையில், நாம் பகுத்தறிவுள்ளவர்களாக இருந்து அனைவரையும் அன்புகூர வேண்டும். (யூதா 22)

பெயர்க்கிறிஸ்தவர்களும், உண்மை கிறிஸ்தவர்களும் காணப்படுவதுபோல, கிறிஸ்துவின் நாமத்தை அறிக்கைப்பண்ணிக்கொள்கின்றவர்கள் மத்தியிலும் பெயரளவிலான அன்பும், உண்மையான அன்பும் காணப்படுகின்றது; கர்த்தருடைய சிந்தையையும், அவருடைய குணலட்சணங்களையும், அவரது இயல்புகளையும், அவரது அன்பையும், அவரது நட்பையும் வளர்த்திக்கொள்வதே கர்த்தருடைய உண்மையான ஜனங்களின் குறிக்கோளாக அதிகமதிகமாய்க் காணப்பட வேண்டும்; மேலும் இவற்றை நாம் வளர்க்கத்தக்கதாக, அவர் அப்போஸ்தலனைக்கொண்டு, பரத்திலிருந்துள்ள அந்த அன்பை மிகவும் தத்துரூபமாக விவரித்து, நம் கவனத்திற்குக் கொண்டுவருகின்றார். அந்த விவரம் 1 கொரிந்தியர் 13-ஆம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. புதுச்சிருஷ்டிகளாகக் காணப்படும் அனைவராலும் அந்த அன்பானது அடையப்பெற்றிருக்க வேண்டும்; ஏனெனில் கிறிஸ்துவினுடைய ஆவி இல்லாத மனுஷன், அவருடையவன் அல்ல; எனினும் கர்த்தருடைய ஜனங்கள் கர்த்தரில் பலமடையும்போது - தேவனுடைய அன்பு குமாரனின் சாயலாகும்போது - எல்லோருக்கும் மேலாக நண்பனாய்க் காணப்படும் அவருக்கு ஒப்பாகும்போது - இப்படிக் காணப்படுவதற்கேற்ப, அதிகமதிகமாய் அவ்வன்பானது அடையப்படும் மற்றும் உணர்வுபூர்வமாய்ப் புரிந்துகொள்ளப்படும்.

ஓர் எழுத்தாளர் பின்வருமாறு கூறுகின்றார்: அன்புகூரப்படுவதைக்காட்டிலும், அன்புகூருவதும், இன்னுமாக வாங்குவதைக்காட்டிலும் கொடுப்பதும், ஊழியம் நமக்குச் செய்யப்படுவதைக்காட்டிலும், நாம் ஊழியஞ்செய்வதும்தான் வாழ்க்கைக்குப் பெருமை சேர்க்கின்ற காரியமாகக் காணப்படுகின்றது. சுயநலவாதி, நண்பர்களை கண்டடைந்தாலும், அவனால் நண்பர்களைத் தக்கவைத்துக்கொள்ள முடியாது.

இன்னொருவர் பின்வருமாறு கூறியுள்ளார்: அந்தோ! பகிர்ந்துகொள்ள நண்பன் ஒருவன் இல்லாத காரணத்தினால், எத்தனைப் பெருந்தவறுகளும், மகா அபத்தங்களும் அநேகரால் செய்யப்பட்டுள்ளன.

அநேக விமர்சகர்கள் எண்ணுவதுபோன்று, குறைவுகளைப்பற்றின கணிப்பில், உண்மையான விமர்சனம் காணப்படுவதில்லை, மாறாக பாராட்டில்தான் உண்மையான விமர்சனம் காணப்படுகின்றது. அளவு மீறிய மென்மையைவிட, அளவு மீறிய கொடூரத்தினாலேயே, அநேகருடைய வாழ்க்கை அழிக்கப்பட்டுள்ளது.

ஒரு நபரின் அன்பு, அனைத்து மனிதர்களுக்கான நன்மையினை நோக்கிச் சென்றுக்கொண்டிருக்கும்போது, அது உலகளாவிய நன்மைக்கு ஏதுவான அன்பாக மாறும். மெழுகுவர்த்தியானது அதனை எரியப்பண்ணுபவர்மீது மாத்திரம் ஒளியைப் பிரகாசிக்காமல், அதன் கதிர்களின் வட்டத்திற்குள் வரும் அனைவரின்மீதும் ஒளியைப் பிரகாசிப்பிக்கின்றது.

உண்மையான நட்பில், நன்மைசெய்வதற்கு ஏதுவாய்க் காணப்படும் ஆற்றல்கள் ஒவ்வொன்றும், போலி நட்புறவில் பொல்லாங்கு செய்வதற்கு ஏதுவான ஆற்றலாகிவிடுகின்றன.

இந்தப் பொய் புரளிகளைப் பரப்பினது நண்பனா அல்லது சத்துருவா?
ஐயோ! பாலகர்களே அல்லாமல் வேறு யார் இப்படிக் கேள்வி கேட்பார்கள்!
அவன் எனக்கு மிகவும் நெருக்கமான ஒரு நண்பன்போன்று காணப்படும் எதிரியாவான்.

R4223

# ஆபத்தில் உதவுபவனே நண்பன்

## 1 சாமுயேல் 20:30-42

(36-பக்கத்தில் இடம்பெறும் கட்டுரையின் தொடர்ச்சி)

### அன்பு எப்படி வளர்க்கப்படலாம்

இருவரில் இளைஞனாகக் காணப்பட்ட தாவீது, நாம் பார்த்திருக்கிறபடி இயல்பாகவே ஆழ்ந்த, பெருந்தன்மையான குணங்களை உடையவராகவும், தீவிரமாய் அன்புகூர முடிபவராகவும் காணப்பட்டார்; எனினும் அந்த அன்பு வளர்வதற்கு இன்னும் காலம் தேவையாக இருந்தது. மேலும் இவருக்கான யோனத்தானுடைய அன்பானது முதலாவது பிரகாசமாகவும், மிகவும் தீவிரமாகவும் காணப்பட்டது; இதனால் தாவீது கவரப்பட்டு, பதிலுக்கு அன்பு பாராட்டினவராகக் காணப்பட்ட காரியம், தேவன் முதலாவது நம்மை அன்புகூர்ந்து,ப ின்னர்இ தன்க ாரணமாகந ம்அ ன்பானதுஅ வர்பால்அ திகமதிகமாய்வெ ளிப்பட்ட காரியத்திற்கு ஒத்திருக்கின்றது. யோனத்தான் எவ்வாறு இராஜாவிற்கும், தாவீதிற்கும் இடையில் சமாதானத்தைத் தக்கவைக்க முயற்சித்தார் என்பதையும், தன் நண்பனைக் கொன்றுபோடுவதற்குத் தன் தகப்பன் எண்ணம் கொண்டிருப்பதை அறிந்தபோது, இனிமேலும் இராஜாவின் அருகே தாவீது காணப்படுவது என்பது அவரது ஜீவனுக்குப் பாதுகாப்பாய் இராது எனும் கட்டம் வந்துள்ளபடியால், அவர் தப்பி ஓட வேண்டும் என்று அவருக்கு எப்படி யோனத்தான் முன்னெச்சரித்தார் என்பதையும் நம்முடைய இப்பாடம் நமக்குத் தெரிவிக்கின்றது. இந்த எச்சரிப்பானது, முன்னேற்பாட்டின்படி அரண்மனையினின்று சற்று தொலைவிலுள்ள வெளிப்பகுதியில் வைத்துக் கொடுக்கப்பட்டது. தாவீது ஒரு பெரிய கல்லுக்குப் பின்னாக ஒளிந்துகொண்டார். வில் வித்தையைப் பயிற்சி செய்யப்போகின்றதாகக் காரணம் கூறிவிட்டு, அம்புகளை எடுத்துச் செல்வதற்கெனச் சிறுபிள்ளையாண்டானை யோனத்தான் தன்னோடுகூட அழைத்துப் புறப்பட்டார். அவ்விடத்தைவிட்டு தாவீது தப்பி ஓட வேண்டுமா அல்லது இல்லையா என்று தாவீதிற்கு ஆலோசனை சொல்லப் போகவேண்டும் என்பதே யோனத்தானுடைய உண்மையான திட்டமாகக் காணப்பட்டது. நீ தரித்து நிற்காமல் தீவிரித்துப் பொட்டெனபோ என்று பிள்ளையாண்டானை நோக்கி யோனத்தானால் சொல்லப்பட்ட வார்த்தைகளானது, அம்புகளைப்பற்றி சொல்லப்படுவதுபோன்று இருப்பினும், அவை உண்மையில் தாவீது சூழ்நிலையினுடைய நெருக்கடியை அறிந்துகொள்ளத்தக்கதாகத் தாவீதிற்காகச் சொல்லப்பட்ட வார்த்தைகளாகக் காணப்பட்டன.



*நண்பனாகிய தாவீது*
**- Lifeway Collection.**

பின்னர் பிள்ளையாண்டானை அம்புகளுடன் அரண்மனைக்கு அனுப்பிவிட்ட பிற்பாடு, யோனத்தான் தனது நண்பனுடன் சில நிமிடங்கள் செலவிட துணிவதற்கு முடிவெடுத்தார். இந்த ஒரு கட்டத்தில் தாவீது யோனத்தானுடைய அன்பின் ஆழத்தை உணர்ந்தார்; அவரது அன்பானது பல்வேறு வழிகளில் நிரூபிக்கப்பட்டிருந்தது; இப்பொழுதும் இறுதியாக, தாவீதின்மீது தனது தகப்பனுடைய பழிவாங்குதல் கடந்துவர அனுமதித்தால், அது தனக்கே நன்மையாக இருக்கும் என்றபோதிலும், தாவீதின் ஜீவனைப் பாதுகாக்க வேண்டும் என்ற இவருடைய விருப்பத்திலும் இவரது அன்பு நிரூபிக்கப்பட்டது. பரிசுத்தவான்கள் மத்தியில் தவிர, மற்றபடி இம்மாதிரியான அன்பு என்பது அபூர்வமான ஒன்றேயாகும்; பரிசுத்தவான்கள் மத்தியிலும்கூட அதிகமான எண்ணிக்கையில் இருந்ததில்லை. எனினும் சகோதரனைக்காட்டிலும் நெருக்கமாய்க் காணப்படும் நண்பன் ஒருவரைக் கண்டடைவோமானால், அந்நபரை உயர்வாய் மதிப்போம்; காரணம் இப்படிக் காணப்படுவது அரிது என்பதினாலாகும்.

தாழ்மை மற்றும் மரியாதையை வெளிப்படுத்தும் கிழக்கத்திய வழக்கத்தின்படி, தாவீது இச்சந்திப்பின்போது மூன்றுமுறை தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கினார். நண்பர்கள் ஒருவரையொருவர் முத்தமிட்டு அழுதனர். இருவரில் தாவீது மிகவும் இருதயம் நொருங்கிப் போயிருந்தவராகக் காணப்பட்டார் என்பதாகத் தெரிகின்றது. தாவீது கர்த்தரில் நம்பிக்கைக் கொண்டிருந்தபோதிலும், அவர் ஒதுக்கிவைக்கப்பட்டவரென - விலக்கிவைக்கப்பட்டவரென தன் வீட்டைவிட்டுப் போகப்போகின்றார். தனது பிரியமான நண்பனாகிய யோனத்தானுடைய தோழமையை இழப்பதோடு மட்டுமல்லாமல், தனது சொந்தத் தேசத்திலுள்ள அநேக ஜனங்களால், தாவீது இராஜதுரோகியாகப் பார்க்கப்படப்போகின்றார்; காரணம் இராஜாவினுடைய எதிர்ப்பாகும்; மேலும் இந்த எதிர்ப்பின் காரணமாக விரட்டியடிக்கப்பட வேண்டிய நிலைமைக்குத் தாவீது ஆளாக வேண்டியிருக்கும்.

அப்போதுதான் யோனத்தான்: நீர் சமாதானத்தோடே போம்; கர்த்தர் என்றைக்கும் எனக்கும் உமக்கும் என் சந்ததிக்கும் உமது சந்ததிக்கும் நடுநிற்கும் சாட்சி என்று கூறினார் (1 சாமுயேல் 20:42); பதிவின்படி அவர்கள் பிரிந்துசென்றார்கள்; ஒன்றோ இரண்டோ வருடங்களுக்குப் பின்னர், சவுல் தாவீதைத் தேடிச்சென்ற தருணத்தைத் தவிர, மற்றப்படி அவர்கள் மீண்டும் சந்திக்கவே இல்லை. அவர்கள் சந்தித்த அந்த ஒரு தருணத்திலும், யோனத்தான் தன் நண்பனை ஆறுதல்படுத்தச் சென்று, தேவனுக்குள் அவர் கையைத் திடப்படுத்தினார் என்று வாசிக்கின்றோம். (1 சாமுயேல் 23:16)

யோனத்தான் மற்றும் அவரது அன்பைக்குறித்த தாவீதினுடைய கணிப்பின் ஒரு கணநேர கண்ணோட்டமானது, வில்லின் பாடல் என்ற தலைப்பிலுள்ள கவிதையில் பார்க்கப்படலாம்; இக்கவிதையானது, தனது நண்பனாகிய யோனத்தானுடைய மரணத்தின்போதுள்ள தாவீதின் புலம்பலாகக் காணப்படுகின்றது. என் சகோதரனாகிய யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப்படுகிறேன்; நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய்; உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது; ஸ்திரீகளின் சிநேகத்தைப்பார்க்கிலும் அதிகமாயிருந்தது என்று தாவீது புலம்பினார் (2 சாமுயேல் 1:26). அன்புக்குரிய நண்பர்களே, இதைவிட அருமையான அன்பு ஒன்றைக்குறித்து நாம் அறிவோம் மற்றும் அதைக்குறித்து நாம் சில சமயங்களில் பின்வருமாறு பாடியும் இருக்கின்றோம்:

தெய்வீகமான இயேசுவின் அன்பு,
எந்தன் ஏக்கமுள்ள இருதயம்தனை நிரப்புவதாக.

அன்பே, அன்பைப் பிறப்பிக்கின்றது; வேதவாக்கியங்களும், நாம் முதலாவது தேவனை அன்புகூரவில்லை என்றும், தேவனே முதலாவதாக நம்மை அன்புகூர்ந்தார் என்றும், தம்முடைய குமாரனைக் கொடுத்ததில் தம்முடைய அன்பை வெளிப்படுத்தினார் என்றும் நமக்குத் தெரிவிக்கின்றன. இயேசுவின் அன்பே நம்மைக் கவர்ந்து, பிரதியுத்தரமாக நம்முடைய அன்பை வெளிக்கொணர்ந்தது. எல்லாப் புத்திக்கும் மேலான தேவனுடைய அன்பின் மற்றும் கிறிஸ்துவினுடைய அன்பின் நீளங்களையும், அகலங்களையும், உயரங்களையும், ஆழங்களையும் நாம் நாளுக்கு நாள் அதிகமதிகமாகப் புரிய வருகையில், இவர்கள்மீதான நமது அன்பும் பொங்கிப்பெருகும். மேலும் இப்படிப் பெருகுகையில், நாம் அதிகமதிகமாகத் தேவனுக்கு ஒத்த சாயலாகுவோம்; மேலும் இதற்கேற்ப, நம்மை அன்புகூராதவர்கள்மீதும் நம்மிடமிருந்து அன்பு கடந்துசெல்லும்; மற்றவர்களுக்கான இந்த நம்முடைய அன்பானது, அவர்களிலும் சிலரிடத்தில் பிரதியுத்தரமாக அன்பை ஏவி, உலகத்தின் ஆவிக்கும், உலக ஆசைகளுக்கும், உலகத்தின் சுயநலத்திற்கும் எதிராகக் காணப்படும் இக்கொள்கையை அவர்கள் அதிகமாய்ப் புரிந்துகொள்வதற்கு வழிநடத்திடும். ஆகையால் தேவனுக்கொத்த இப்பண்பினை வளர்த்திக்கொள்வதற்கு நாம் நாடுவோமாக. வேதவாக்கியங்களானது, அன்பே உலகில் பிரதானமான காரியம் என்று தெரிவிப்பது மட்டுமல்லாமல், அது தெய்வீகக் குணலட்சணத்தின் சாராம்சம் என்றும், அன்பு எனும் ஒரே வார்த்தையில் உள்ளடங்கும் திவ்விய பிரமாணத்தினுடைய சாராம்சமாகவும் இந்த அன்பு காணப்படுகின்றது என்றும் வேதவாக்கியங்கள் தெரிவிப்பதைக் கவனிப்போமாக. இந்த ஒரு பண்பை நாம் அப்பியாசப்படுத்துகையில், நாம் எந்த மகிமையான வாய்ப்புகளுக்காக அழைக்கப்பட்டிருக்கின்றோமோ, இன்னுமாக நமது கர்த்தருடைய கிருபையினால், நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்துவதன் மூலம் நாம் எவைகளை அடைய நாடிக்கொண்டிருக்கின்றோமோ, அவைகளுக்காக நம்மை நாம் ஆயத்தப்படுத்திக் கொள்கின்றவர்களாக இருப்போம்.

வேதவாக்கியங்களில் துல்லியமாய் வேறுபடுத்திக் காண்பிக்கப்பட்டுள்ளது; யோனத்தானுடைய இந்தஅ ன்பும்,ப ிதாம ற்றும்கு மாரனுடையஅ ன்பும்ப ின்பற்றுவதற்குப்ப ாத்திரமானமு ன்மாதிரியாக முன்வைக்கப்பட்டிருக்கின்றபோதிலும், இன்னொரு வகை குணமும் சித்தரிக்கப்பட்டுள்ளது; சங்கீதத்தில் நமது கர்த்தர் குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ள இடத்தில் யூதாஸ் குறித்தும் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது: என் பிராணசிநேகிதனும், நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும், என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான் (சங்கீதம் 41:9). அன்பின் இந்த ஆவியானது, அதாவது நட்பின் விஷயத்திலுள்ள நம்முடைய ஆவியானது, அன்பின் ஊற்றுக்கண்ணிலிருந்து வருகின்றதாவெனப் பார்த்துக்கொள்வோமாக, ஏனெனில் தேவன் அன்பாகவே இருக்கின்றார். இரண்டு மாபெரும் ஊற்றுகள் இருக்கின்றன என்றும், தித்திப்பான ஊற்றுக்கண்ணிலிருந்து கசப்பான தண்ணீர் சுரக்காது என்றும், கசப்பான ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பான தண்ணீர் சுரக்காது என்றுமுள்ள அப்போஸ்தலனின் வார்த்தைகளையும் நாம் மனதில் வைத்துக்கொள்வோமாக (யாக்கோபு 3:11). ஆகையால் நண்பனுக்கோ, சகோதரனுக்கோ கொண்டிருக்கும் வஞ்சனையின் ஆவி என்பது, எந்த விதத்திலும் அன்பின் ஆவி சம்பந்தப்பட்டதாயிராமல், இதற்கு எதிரானது என்பதை நம் இருதயங்களில் பதியவைத்துக் கொள்வோமாக. தித்திப்பான ஊற்றுக்கண்ணிலிருந்து, தூய்மையான ஊற்றுக்கண்ணிலிருந்து, அன்பின் ஊற்றுக்கண்ணிலிருந்து, பகைமை எனும், குரோதம் எனும், பொறாமை எனும், சண்டை எனும் கசப்பான தண்ணீர்கள் சுரப்பதில்லை என்பதை நினைவில்கொள்வோமாக. இம்மாதிரியான தீமைகளானது, வேறு திசையிலிருந்து, வேறு ஊற்றுக்கண்ணிலிருந்து, தேவனுக்கும் மனுஷனுக்குமான சத்துருவிடமிருந்து வருகின்றது என்பதை நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். இந்தப் பண்புகளானது, மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகள் என்று வேதவாக்கியங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன. இன்னுமாக அன்பு மற்றும் நட்பின் உணர்வுகளானது, கசப்பு மற்றும் பகைமையின் உணர்வுகளாக முற்றிலுமாக மாறுவது என்பது உடனடியாக நடைபெறாமல், படிப்படியாகவே நடக்கின்ற பணி என்பதையும்கூட நினைவில்கொள்வோமாக. யூதாசின் விஷயத்திலும் நாம் படிப்படியான மாறுபாட்டைப் பார்க்கின்றோம்; அது ஆரம்பத்தில், மற்றவர்கள் கர்த்தரால் கனப்படுத்தப்பட்டதன் நிமித்தமான முறுமுறுப்பாக மட்டும் காணப்பட்டது; எனினும் அந்த முறுமுறுப்பின் ஆவியானது பெருகினது. இன்னுமாக யூதாசுக்காகத் தம் ஜீவனை கையளித்தவரும், நண்பர்களுக்கெல்லாம் நண்பரானவருமானவரைக் காட்டிக்கொடுப்பதற்கு அந்த ஆவியானது ஒரு வாரக் காலத்திற்குள்ளாக துணிந்தது. மரபுவழியாக, வீழ்ச்சியின் வழியாக எதிராளியானவனிடமிருந்து தீமையின், சுயநலத்தின் விதைகளைப் பெற்றவர்களாக நாம் சுபாவத்தின்படி காணப்படுகின்றோம் என்பதை நினைவில்கொள்வோமாக; இம்மாதிரியான தீமையின் வேர்கள் அனைத்தையும் பிடுங்குவதற்கு நாம் தொடர்ந்து விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும் என்றும் நினைவில்கொள்வோமாக; அன்பின் நறுமணமானது நம்முடைய முழு ஜீவியங்களையும் நிரப்பி, அன்பாகவே இருக்கின்றவரோடும், எல்லோரையும்விட மேலான நண்பனாய் இருக்கின்றவரோடும் இணைவதற்கு வேண்டி நம்மை ஆயத்தப்படுத்தத்தக்கதாக, நாம் தொடர்ந்து அன்பு எனும் மென்மையான செடியினை நட்டு, வளர்த்த வேண்டும் என்றும் நினைவில்கொள்வோமாக.

## நம்முடைய ஆதார வசனம்

சிநேகிதன் எல்லாக் காலங்களிலும் சிநேகிப்பான் என்று ஞானி சரியாகத்தான் கூறியிருக்கின்றார். சிநேகிப்பதினால் தனக்கு நன்மை உண்டாகும் என்று எண்ணி, அந்தந்தக் காலத்திற்கு மட்டும் சிநேகிப்பவன் அன்பு இன்னது என்று அறியாதவனாவான். யார் ஒருவன் செழிப்பான காலங்களில் மட்டும் அன்புகூருகின்றவனாகவும், சகோதரனாகவும் காணப்படுகின்றானோ, அதே சமயம் துன்பங்கள் மற்றும் வறுமையினுடைய உக்கிரத்தின்போது யார் ஒருவனுடைய அன்பும், நட்பும் காணாமல் போய்விடுகின்றதோ, அத்தகையவன் அன்பு இன்னது என்று உண்மையில் ஒருபோதும் புரிந்துகொள்ளாதவன் ஆவான்; இன்னுமாக அத்தகையவன் உலக ஆசைகளினுடைய - சுயநலத்தினுடைய குறிப்பிட்ட ரகமாக/brand மட்டும் காணப்படுபவன் ஆவான்.

தேவன் நம்மிடத்தில் தம்முடைய அன்பைப் பாராட்டி, சுயநலத்தின் மூலமாக அல்ல, மாறாக தயாளத்தின் மூலமாக, பெரும் விலைகொடுத்து, நம்முடைய சிறையினின்றுள்ள நமக்கான விடுதலையை அருளி, புத்திரத்துவத்தின் சிலாக்கியங்களை நமக்கு அருளினதுபோலவே, உண்மையான அன்பும் பலிசெலுத்துவதற்கு வாஞ்சிக்கும். ஆகையால் மற்றவர்களுக்காக, கர்த்தருக்காக, சகோதர சகோதரிகளுக்காக, இன்னும் சத்துருக்களுக்காக ***நாம் கொண்டிருக்கும் அன்பை***, அவர்களுடைய நலன்களுக்காகவும், மேலான நன்மைக்காகவும் வேண்டி எதையும் பலிசெலுத்த துணிவதற்குரிய ***நம்முடைய வாஞ்சையைக்கொண்டு கணித்துக்கொள்வோமாக.*** கர்த்தருடைய காரியங்களுக்காக நாம் எதையும் பலிசெலுத்தாதவர்களாக நம்மை நாம் காண்போமானால், நாம் ஆண்டவரை அன்புகூருகின்றோம் என்று கூறுவதன் மூலம், நம்மை நாம் ஏமாற்றிக்கொள்ளாமல் இருப்போமாக. சகோதர சகோதரிகளுக்காகவும், நமது பிரியத்திற்குரிய மற்றவர்களுக்காகவும் உள்ள நன்மைக்கடுத்த காரியங்களுக்காக, நாம் பலிசெலுத்துவதற்கும், சகிப்பதற்கும் விருப்பமற்றவர்களாக நம்மை நாம் காண்கின்றோமானால், இதை அன்பு என்று தவறாய்ச் சொல்லாதிருப்போமாக. நம்முடைய சத்துருக்கள் தேவையில் காணப்படும் போதும்கூட, அவர்களுக்கு இரக்கம்காட்ட விரும்பாதவர்களாக நம்மை நாம் காண்கின்றோமானால், தவறாய்ப் புரிந்துகொள்ள வேண்டாம், ஏனெனில் தயவு பாராட்டுதலும், இரக்கம் பாராட்டுதலும், சுயத்தை வெறுத்தலுமே, அன்புள்ள இருதயத்திற்குரிய ஒரே அட்டவணையாக இருக்கின்றது என்று கர்த்தர் கூறியுள்ளார். இம்மாதிரியான அன்புள்ள இருதயம், இராஜ்யத்தில் இடத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமாய் இருக்கின்றது என்று ஒருமுறை நாம் கண்டுகொள்ளமுடிந்தால், இது இம்மாதிரியான குணலட்சணத்தை அடைவதில் நம்மை இருமடங்கு தீவிரம் காண்பிப்பவர்களாக்கும். இன்னும் அடுத்தபடியாக, ஒருவன் அல்லது ஒருவள் அன்பின் இருதயத்தைப் பெற்றிருக்காவிடில் இந்த யுகத்திலும் சரி, இனிவரும் யுகத்திலும் சரி, யார் ஒருவரும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதில்லை என்பதைக் கண்டுகொள்வோமானால், அன்பே, நாமும் மற்றவர்களும் அடைய வேண்டிய மற்றும் பேணி வளர்க்க வேண்டிய பிரதான காரியமாகவும், மிக முக்கியமான காரியமாகவும் இருக்கின்றது என்று உணர்வடைய உதவப்படுவோம்.

Canon Farrar-அவர்களின் உண்மையுள்ள பின்வரும் வார்த்தைகளைக் கவனியுங்கள்: என் சகோதரரே, எல்லா மனிதரிலும் நற்குணங்களையும், அழகையும் காணும் அன்பானது, மனிதனில் நற்குணங்களையும், அழகையும் உருவாக்க உதவிடும். அன்புபாராட்டுகிறவர்களைப் பொறுத்தமட்டில், ஒரு சாதாரணமான மனுஷன்கூட, பாச பொலிவுடன் உள்ள மனிதனாகவே தென்படுவான். ஏதோ ஒரு நபரை உற்சாகமற்றவர் (dull) என்று எண்ணுகின்றீர்களா? ஏன் இப்படி? நீங்கள் உற்சாகமில்லாமல் இருப்பதினாலேயே, உங்களுக்கு இப்படி தோன்றுகின்றது. உங்களுக்குள்ளே ஒரு தேவதை இருக்கின்றது; ஆனால் அது உங்களுக்குத் தெரியாது. குரோதமும், அகந்தையும் நிரம்பப் பெற்ற ஒருவருக்கு, தேவதைக்கூட உற்சாகமற்றுதான் தெரியும் என்று நான் எண்ணுகின்றேன். ஒவ்வொரு மனித ஆத்துமாவும் இரத்தினக் கற்கள் நிரம்பின மலை குகை போன்றுதான் இருக்கின்றது. ஏதோ ஒரு பிளவு வழியாக, குகைக்குள் சாதாரணமாய்ப் பார்ப்பவருக்கு, அனைத்தும் இருட்டாகவும், கருமையாகவும் தெரியும் மற்றும் பார்த்தப்பின் அதை மறந்தும் போய்விடுவார். ஆனால் வெளிச்சத்தை உள்ளே அனுமதித்துப் பாருங்கள்; விளக்கை உயர்த்திப் பிடித்துப் பாருங்கள்; தேவனுடைய சூரிய ஒளி குகைக்குள் செல்ல அனுமதித்து, குகையின் சரிவுகளில் வெளிச்சம் பரவ அனுமதியுங்கள்; அந்தோ! குகையானது படிகக் கற்களினாலும், சுகந்திக் கற்களினாலும் மின்னும்; மேலும் ஒவ்வொரு தனித்தனி படிகக்கல்லும் ஒளியினுடைய தொடுதலின் காரணமாய், அதன் தன்மை வெளிப்படுவதினால் சிறு அதிர்விற்குள்ளாகும். ஒருவேளை உங்கள் முன், ஆத்துமாக்கள் பிரகாசமாய் இல்லை என்றால், அதற்குக் காரணம் அவர்கள் பிரகாசிக்கத்தக்கதாக நீங்கள் அவர்களுக்கு எந்த ஒளியையும் கொண்டுவரவில்லை என்பதேயாகும். அகந்தை மற்றும் பகைமை எனும் பரிதாபகரமான, உள்ளுக்குள் குமுறுகிற, புகையாயுள்ள உங்கள் விளக்குகளை வெளியே வீசிவிடுங்கள்; அன்பு எனும் விளக்கை அவர்களுக்காக உயர்த்திப் பிடியுங்கள். அந்தோ! அவர்களும் எழும்பிப் பிரகாசிப்பார்கள்; ஆம்! கனவில்கூடப் பார்க்கமுடியாத மகிமையில் ஜுவாலித்து எரிவார்கள்.

இந்தப் பொய் புரளிகளைப் பரப்பினது நண்பனா அல்லது சத்துருவா?
ஐயொ! பாலகர்களே அல்லாமல் வேறு யார் இப்படிக் கேள்வி கேட்பார்கள்!
அவன் எனக்கு மிகவும் நெருக்கமான ஒரு நண்பன்போன்று காணப்படும் எதிரியாவான்.

R4225

# உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்

## 1 சாமுயேல் 22

உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்.

- லூக்கா 6:27

ஏழு வருடங்களாக தாவீது தன் வீட்டினின்று/தேசத்திலிருந்து துரத்தப்பட்டவராகவும், விலக்கிவைக்கப்பட்டவராகவும் வாழும் நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டார். பொல்லாத ஆவிகளினால் தொந்தரவிற்குள்ளாக்கப்பட்ட இராஜாவாகிய சவுல், சில சமயங்களில் உண்மையில் பித்துப்பிடித்தவர்போல் காணப்பட்டார்; சில மனுஷர்கள் வேட்டையாடுவதில் மகிழ்ச்சியை அனுபவிப்பதுபோன்று, சவுலும் பொழுதுபோக்கு ஓய்விற்காக வேண்டி, அந்த ஏழு வருடங்கள் தாவீதை ஒவ்வொரு இடத்திலும் வேட்டையாட தேடித்திரிந்தார் என்பதில் ஐயமில்லை. இது தொடர்பாக தாவீது, தான் தப்பித்த காரியத்தைக்குறித்துச் சங்கீதத்தில் தெரிவிக்கின்றார். அதிருப்தியிலிருந்த பெருந்திரளான ஒரு ஜனக்கூட்டம், தாவீதைத் தங்கள் தலைவனாகப் பெற்றிருக்க விரும்பி, அவரோடுகூடக் காணப்பட்டார்கள்; இவர்களில் பெரும்பாலானோர் சவுலின் துன்புறுத்தல்களுக்கு ஆளானவர்கள் ஆவார்கள். ஏறக்குறைய நானூறு பேராகிலும் இருந்திருப்பார்கள் (1 சாமுயேல் 22:2); பிற்பாடு அறுநூறு பேர் காணப்பட்டனர் (1 சாமுயேல் 25:13, 27). தாவீதின் நிமித்தமாய்த் துன்புறுத்தப்பட்ட தாவீதின் பெற்றோரும், சகோதரரும்கூட அந்தக் கூட்டத்தில் காணப்பட்டனர்; தீர்க்கதரிசியாகிய காத்தும், பிரதான ஆசாரியனாகிய அகிமெலேக்கின் குமாரர்களில் ஒருவரான பிரதான ஆசாரியனாகிய அபியத்தாரும் (1 சாமுயேல் 22:22,23), உறவினனும், பின்னர் படைத்தலைவனானவனுமாகிய அபிசாவும் கூடவே காணப்பட்டார்கள்; (1 சாமுயேல் 26:6). இன்னுமாக இந்தக் கூட்டத்தில் காத் கோத்திரத்திலிருந்து பதினொரு பராக்கிரமசாலிகளும் (1 நாளாகமம் 12:8-14), இரண்டு கைகளினாலும் ஒரே மாதிரி நன்கு வில்லில் அம்பு எரியும் இருபத்து மூன்று பென்யமீன் கோத்திர வில்வீரர்களும் சேர்ந்துகொண்டார்கள். (1 நாளாகமம் 12:1-7)

பேராசிரியர் Wright-அவர்கள், அப்போது நிலவிய சூழ்நிலைகளின்படி, தேசத்திலிருந்து துரத்தப்பட்ட சட்டவிரோதியாக காணப்படுவது என்பது பாராட்டத்தகுந்த விஷயமாய் இருந்ததெனக் கருத்து தெரிவிக்கின்றார். பேராசிரியர் பின்வருமாறு கூறியுள்ளார்: அக்காலக்கட்டத்தில் சட்டவிரோதி என்பது, ஒழுங்கின்மையின் காரியமாகக் கருதப்படவில்லை; அது நியாயமான புரட்சி ஒன்றின் துவக்கமாகக் கருதப்பட்டது. அதுல்லாம் கெபியில் தாவீதோடுகூடச் சேர்ந்துகொண்ட அதிருப்தியடைந்திருந்த மனுஷர்கள், அக்காலத்தின் உண்மையான தேசபக்தர்கள் ஆவார்கள். இது நாபாலுக்கு தாவீது அனுப்பின செய்தியிலிருந்து நிரூபணமாகுகின்றது; எல்லையில் காணப்பட்ட கோத்திரங்களின் படையெடுப்பிலிருந்து நாபாலைப் பாதுகாத்ததில், ஓர் அரசாங்கத்தினுடைய கடமைகள் அனைத்தையும் தான் நிறைவேற்றியுள்ளதாகவும், ஆகையால் தான் கேட்ட கப்பமானது, எந்த ஒரு ஸ்தாபிக்கப்பட்டிருந்த அதிகாரம் கேட்கும் நியாயமான வரியைவிட அதிகமானதல்ல என்பதாகவும் தாவீதின் அந்தத் தூது காணப்பட்டது.

அந்தச் சுண்ணாம்புக் கற்கள் பகுதியில் அநேகம் கெபிகள் இருந்தன. அதுல்லாம் என்று அழைக்கப்படும் கெபியில் பல அறைக்கட்டுகளும், இன்னுமாகச் சிறு சேனை காணப்படுவதற்குரிய இடவசதியும் இருந்தது; இந்தக் கெபியானது, தாவீது கோலியாத்தை எதிர்த்த இடத்திற்கு

அருகாமையிலேயே காணப்பட்டது. இந்தக் கெபியின் பெயர் வேதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற இடங்களில், மூன்று சுவாரசியமான காரியங்கள் காணப்படுகின்றன. இந்தச் சம்பவங்களில் ஒன்று, 1நாளாகமம் 11:15-19-வரையிலான வசனங்களில் சொல்லப்பட்டுள்ளது; இது தாவீதினுடைய பின்னடியார்களின் மெய்ப்பற்றுகுறித்தும், தாவீதினுடைய சுயநலமற்ற நிலைகுறித்தும் தெரிவிக்கின்றது; தாவீதின் சுயநலமற்ற நிலையே, அவரது பின்னடியார்கள் அன்பு வைப்பதற்குரிய அடித்தளமாகக் காணப்பட்டதுஎ ன்பதில்ச ந்தேகமில்லை.இ ச்சம்பவமானதுபெ லிஸ்தர்கள்ப டையெடுத்துவ ந்தபோது நிகழ்ந்தது; அப்போது தாவீதும், அவரோடுகூடக் காணப்பட்டவர்களும் சவுலின் பக்கத்தில் காணப்பட முடியவில்லை, எனினும் அவருக்கு எதிராகவும் இவர்கள் காணப்படவுமில்லை. பெலிஸ்தரின் பாளயம் கெபிக்கும், தாவீதின் சொந்த ஊராகிய பெத்லெகேமின் தண்ணீர் கிணற்றிற்கும் இடையில் காணப்பட்டது. தாகமடைந்தவராகத் தாவீது பெத்லெகேமின் கிணற்றுத் தண்ணீருக்காக ஏங்கினார். தங்கள் தலைவரின்மீதான பற்றில், தாவீதினுடைய மூன்று பிரதான புருஷர்கள், பெலிஸ்தருடைய பாளயத்தைத் துணிந்து தாண்டிச்சென்று, அவர் ஆசைப்பட்ட தண்ணீரைக் கொஞ்சம் எடுத்துக்கொண்டு வந்தார்கள். அதைப் பெற்றுக்கொண்டபோதோ, இத்தகைய அன்பையும், மரியாதையையும் தன் பின்னாடியார்களிடத்திலிருந்து பெற்றுக்கொண்டதின் நிமித்தம், தாவீதின் இருதயமானது தேவனுக்கான நன்றியினால் நிரம்பினது; எனினும் அதைக் கொண்டுவருவதற்கு அவர்கள் கொடுத்த விலையையும், அங்கிருந்த அபாயங்களையும் எண்ணிப் பார்த்தபோது, தாவீது இதற்குத் தன்னைப் பாத்திரமற்றவராக உணர்ந்தார்; மேலும் அந்தத் தண்ணீரைக் கர்த்தருக்கு ஸ்தோத்திர பலியாகச் செலுத்தினார்; தனது பின்னடியார்களின் அன்பிற்கு மரியாதை செலுத்தும் வண்ணமாக இப்படிச் செய்தார். இதைக்குறித்துக் கவிஞன் பின்வருமாறு கூறியுள்ளார்:

எல்லோரும் பிரமித்து நின்றார்களே!<br>
அங்கிருந்த முப்பதுபேரின் மத்தியிலிருந்த,<br>
அந்த மூன்று பராக்கிரமசாலிகளோ<br>
தங்கள் ஆன்மா இராஜாவாகிய தாவீதோடும், தேவனோடும்<br>
பின்னிப்பிணையப்பட்டதை உணர்ந்தனரே.

இரண்டாம் சுவாரசியமான நிகழ்வு, தாவீதின் வயதான பெற்றோர்கள் அதுல்லாம் கெபியிலிருந்து நீண்ட பிரயாணமாக, பாறைகள் நிறைந்த குன்றுகளின் வழியாகவும், சவக்கடலைச் சுற்றியும், மோவாபின் மலைகளைக் கடந்தும், மோவாப் இராஜாவின்கீழ்ப் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட காரியமாகும். (1 சாமுயேல் 22:3-4)

மூன்றாம் சுவாரசியமான நிகழ்வு, இராஜாவாகிய சவுல் இந்தக் கெபியில் காணப்படுகையில் கொல்லாமல் விடப்பட்டார். (1 சாமுயேல் 24)

(இக்கட்டுரையின் தொடர்ச்சி, பக்கம்:88)

R3238

# தீமையை நன்மையினால் வெல்லு
## 1 சாமுயேல் 22

உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்.
- லூக்கா 6:27

இந்தப் பாடம் இராஜாவாகிய சவுலின் பொறாமைக்கும், பகைமைக்கும் தப்பியோடினபோதுள்ள தாவீதின் ஏழு வருட அனுபவங்களைப் பற்றியதாகும். இராஜாவாகிய சவுல் இஸ்ரயேலின் அரியணையில், பெயருக்குக் கர்த்தருடைய பிரதிநிதியாக இன்னமும் காணப்பட்டபோதிலும், தெய்வீக ஆசீர்வாதங்களையும், வல்லமையையும் இழந்தவராய்க் காணப்பட்டார்; மேலும் சவுலுக்கு அடுத்துவரும் இராஜாவெனத் தாவீது அபிஷேகிக்கப்பட்ட பிற்பாடு, இந்த ஆசீர்வாதங்களும், வல்லமையும் ஓரளவுக்குத் தாவீதிற்குக் கைமாற்றப்பட்டதாய் இருந்தது. இப்பாடமானது இருவருக்கும் இடையிலுள்ள வேறுபாட்டினை நம் மனங்களுக்கு முன்பு தெளிவாய்க் காண்பித்துத் தருகின்றது; அதாவது ஒரு பக்கம் இராஜாவின் பகுத்தறிவானது/உள்ளமானது பொல்லாங்கான உணர்வுகளினால் மேற்கொள்ளப்பட்டது; இன்னொரு பக்கத்தில் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷனாகிய தாவீது பூரணராக இல்லை என்றாலும், நீதியின் கொள்கைகளினுடைய வழிகாட்டுதலின்கீழ்த் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளும் விஷயத்திலும், தீமையின் தூண்டுதல்களை மேற்கொள்ளும் விஷயத்திலும் ஜெயங்கொண்டார். தாவீதை நாம் பூரணர் என்று எண்ணிக்கொள்ளக்கூடாது. அவரது தப்பிதங்களையும், பாவங்களையும் அலட்சியம்பண்ணுகிறவர்களாகவும் நாம் காணப்படக்கூடாது; இன்னும் அவற்றை (வாழ்க்கையில்) பின்பற்றவும் கூடாது. புதிய ஏற்பாட்டின்படியுள்ள பரிசுத்தவான்களில் ஒருவராகவும் தாவீது இருப்பதில்லை. பரம அழைப்பில் பங்கடைவதற்கு முடியாத ஆதி காலங்களில் இவர் வாழ்ந்தவர் ஆவார்; மேலும் நம்முடைய இரட்சிப்பின் அதிபதியும், இடுக்கமான வழியில் நம்முடைய முன்னோடியுமான இயேசு அப்போது வராதிருந்தபடியால், தாவீதால் இயேசுவின் அடிச்சுவடுகளிலும் பின்தொடர்ந்து நடக்கமுடியாது. தாவீது தேவனிடத்தில் முழுக்க விசுவாசம் வைத்தவராகவும், நேர்த்தியான நோக்கம்கொண்டவராகவும் காணப்பட்ட காரியத்திலேயே, இவர் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷனாகக் காணப்பட்டார். கர்த்தருடைய சித்தம் செய்ய வேண்டும் என்றே இவர் இருதயத்தில் வாஞ்சித்தார்; மேலும் இப்படிச் செய்வதற்குத் தவறும்போதெல்லாம் அது இவருக்குத் துக்கத்தை உண்டாக்கி, இவர் மனந்திரும்புவதற்கு வழிநடத்தினது. தேவன் தம்முடைய குணலட்சணங்களையும், தம்முடைய ஜனங்கள் தொடர்புடைய திட்டத்தையும், பூரணமான சித்தத்தையும் வெளிப்படுத்துவதற்கு முந்தின காலப்பகுதியில், இவர் வாழ்ந்தவராவார். எல்லாக் காரியங்களையும் பார்க்கும்போது, தாவீது காண்பித்த விசுவாசமும், கீழ்ப்படிதலும் மிகவும் குறிப்பிடத்தக்கவையாக இருந்தன; ஆகையால் சுவிசேஷயுக சபையினால் இவரது *ஒட்டுமொத்த* வாழ்க்கையும் முன்மாதிரியாக அல்லது உதாரணமாக எடுத்துக்கொள்ளப்படக்கூடாது என்றபோதிலும், தகுதியான விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுக்கான அநேகம் அருமையான விளக்கங்களானது, இவரது வாழ்க்கையிலிருந்து எடுக்கப்படலாம்; இவைகளில் சில நம்முடைய இந்தப் பாடத்திலும் பார்க்கப்படலாம்.

சவுலின் கோபத்திற்குத் தாவீது தப்பி விலகியோடினது முதற்கொண்டும், சவுலின் மரணம் வரையிலுமான அந்த ஏழு வருடக்காலங்கள் என்பது, விசுவாசம் மற்றும் பொறுமைக்கான நீண்டதொரு

பரீட்சையின் காலமாக விசேஷமாய்த் தாவீதிற்குக் காணப்பட்டிருக்க வேண்டும். இதில் அவரது நடக்கையானது சிறந்ததும், உண்மையானதுமாகக் காணப்பட்டது. அவர் தன்னுடைய இராஜாவிற்கும், தன் ஜனங்களுக்கும் மிகவும் உண்மையாய்ச் சேவை புரிந்திருக்கின்றார், எனினும் அதற்குப் பலனாகப் பாடுகளையே அனுபவித்தார். அவர் கொஞ்சக்காலம் ஓர் அந்நிய தேசத்தில் நாடோடியாகக் காணப்பட்டார்; அவரது தகப்பனுடைய வீட்டாரும் பாதுகாப்பிற்காக, மோவாப் தேசத்திற்குள் இடம் மாற்றப்படும் கட்டாயத்திற்குள்ளாக்கப்பட்டார்கள். தன்னைக் கர்த்தர் அழைத்துவந்ததும், இராஜாவாகிய சவுலுக்கு அடுத்து வருபவரெனத் தன்னை அபிஷேகித்ததும், தன்னுடைய இராஜ்யபாரம் வருவதற்கு இப்படியாகத் தாமதம் உண்டுபண்ணினதும், இன்னுமாகத் தேசத்திலிருந்து துரத்தப்பட்ட ஒருவராக வேட்டையாடப்படுவதற்கும், துன்பப்படுத்தப்படுவதற்கும் தான் அனுமதிக்கப்பட்டதும், தாவீதிற்கு விநோதமாகவே தோன்றியிருந்திருக்க வேண்டும். எனினும் இது அவரது விசுவாசத்திற்கு விலையேறப்பெற்ற பரீட்சையாகக் காணப்பட்டது; சந்தேகத்திற்கிடமின்றி விசுவாசத்தின் வேர்களை வலுவடையப்பண்ண உதவினது; இப்படியாக அவரது குணலட்சணம் வலுவடையவும், கர்த்தருக்குள்ளான அவரது விசுவாசம் உறுதியடையவும் உதவப்பட்டார். இது தவிர்த்து, அந்த ஏழு வருடங்களும், தாவீது தனது இராஜ ஸ்தானத்திற்குத் தயாராகுவதற்கு விலையேறப்பெற்றதாகக் காணப்பட்டிருக்க வேண்டும் என்பதை நம்மால் சுலபமாக உணர்ந்துகொள்ள முடிகின்றது. அந்த வருடங்களானது, அவர் ஜனங்களோடு நெருங்கி பழகுவதற்கும், அவர்களது அன்றாட வாழ்க்கையின் காரியங்களையும், பொதுவான உணர்வுகளையும் அறிந்துகொள்வதற்கும், அயலகத்தாராகிய ஜனங்களிடம் நன்கு பழகுவதற்கும் உதவினது. எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் கர்த்தருடன் மிகவும் நெருக்கமடைந்தவர் ஆனார். கர்த்தருடைய வழிநடத்துதல்களைத் தாவீதினால் வெளிப்படையாய் அறிந்துகொள்ள முடியாத தருணங்களிலும், அவரது வழிநடத்தல்களை விசுவாசிப்பதற்குத் தாவீது கற்றுக்கொண்டார் என்பதிலும் நமக்கு நிச்சயமே. சங்கீதங்களில் பல, இந்த ஒரு காலப்பகுதியின்போது, அந்தந்த நேரங்களில் சம்பவித்த தாவீதின் அனுபவங்களைப்பற்றின (உடனடி) பதிவுகளாக ஒன்றில் காணப்பட்டது அல்லது அந்த அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்ளப்பட்ட பாடங்களுடைய பிந்தைய பதிவுகளாகக் காணப்பட்டன. அப்படியான சங்கீதங்களில் சில: 34, 52, 56, 57, 63 -ஆம் சங்கீதப் பகுதிகளாகும்.

எதிர்காலத்தில் நமது ஆசீர்வதிக்கப்பட்ட கர்த்தருடன் பூமியை ஆளுகைசெய்யவிருக்கும் இராஜாக்களாக மற்றும் ஆசாரியர்களாகக் காணப்படுவதற்கென்றும், பூமியின் குடிகள் யாவரையும் ஆசீர்வதிப்பதற்கென்றும் ஏற்கெனவே புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றுக்கொண்டவர்களும், கர்த்தருடைய அபிஷேகித்தலைப் பெற்றுக்கொண்டவர்களுமான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களால், இக்கட்டுரை தெரிவித்திடும் நிகழ்வின்போதுள்ள தாவீதினுடைய சோதனையான அனுபவங்களிலிருந்து விலையேறப்பெற்ற பாடங்களை எளிதில் அடையாளம் கண்டுகொள்ளலாம். இவ்வுலகத்தின் அதிபதி நம்முடைய சத்துருவாக இருக்கின்றார்; இப்படி இவர் காணப்படுவதற்குரிய காரணம், நாம் தீமை செய்திருக்கின்றோம் என்பதாக இல்லாமல், மாறாக தனக்குக் குறுகின காலமே உள்ளது என்பதை இவர் உணர்ந்திருப்பதினாலும், நமக்குள் இருக்கும் கர்த்தருடைய ஆவிக்கு எதிரான ஓர் ஆவியினை இவர்

பெற்றிருக்கின்றதினாலுமே ஆகும். நம்மை அபிஷேகித்துவிட்டு, இராஜ்யத்தில் மகிமை, கனம் மற்றும் அழியாமை தருவதாக நமக்கு உறுதியளித்துவிட்டு, இவ்வளவு சோதனையான அனுபவங்களும், உலகம், மாம்சம் மற்றும் பிசாசானவனோடு இவ்வளவு கடினமான போராட்டங்களும் நமக்கு வர ஏன் கர்த்தர் அனுமதித்துள்ளார் என்று நாமும்கூட சிலசமயங்களில் யோசித்திருப்போம். நாம் கர்த்தருடைய வழியைக்குறித்து மிகவும் குறிப்பாகக் கற்றுக்கொள்ளும்போது, இன்னுமாக அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய (தற்காலத்தின் போதுள்ள) உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை (நாம் பெற்றுக்கொள்வதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகின்றது) உண்டாக்குகிறது என்று கற்றுக்கொள்ளும்போது, காரணங்கள் தெளிவாகுகின்றது. நமக்குப் பொறுமை தேவையாக இருக்கின்றது; மேலும் இது சோதனைகள் மூலமாக மாத்திரமே சம்பாதிக்கப்பட முடியும். நமக்கு விசுவாசம் தேவையாக இருக்கின்றது; மேலும் இது தேவைகள் வருவதன் மூலமாக மாத்திரமே வளர்க்கப்பட முடியும். நம்முடைய எதிர்கால வேலைக்கடுத்த அனுபவங்கள் நமக்குத் தேவையாக இருக்கின்றது; இது இத்தகைய அனுபவங்கள் மூலமாக மாத்திரமே சம்பாதிக்கப்பட முடியும்; இந்த அனுபவங்களின் காரணமாக நம்மைச் சுற்றியுள்ளவர்களுடைய பிணிகள் மற்றும் கஷ்டங்கள் மற்றும் சோதனைகளின் உணர்வுகளால் தொடப்படுபவர்கள் ஆகுகின்றோம்; நாம் சிங்காசனத்தை அடையும்போது, இந்த ஜனங்களுக்கே நாம் ஊழியக்காரர்களாகவும், பிரதிநிதிகளாகவும் காணப்படப்போகின்றோம். ஆகையால் தாவீதிற்கு இருந்ததுபோல, நமக்கும் தீமையை எதிர்ப்பது, அதுவும் தீமையைத் தீமையினால் இல்லாமல், நன்மையினால் எதிர்ப்பது என்பதே தற்கால அனுபவங்களின் படிப்பினையாக இருக்கின்றது.

தாவீது மற்றும் வேதாகமத்தின் மற்ற மாமனிதர்களுடைய சம்பவங்களைக் கவனிக்கையில், அவர்களைப்பற்றின பதிவுகளினுடைய நேர்மையின் நிமித்தம் மனங்கவரப்படுகின்றோம்; அவர்களது நற்கிரியைகள் எப்படிப் பதிவுசெய்யப்பட்டுள்ளதோ, அதுபோலவே அவர்களது தீய நடக்கைகள் குறித்தும் ஒரேமாதிரி ஒளிவுமறைவு இன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. இது வேதாகமத்தினுடைய தனித்தன்மைகளில் ஒன்றாகும்; அதன் உண்மைத்தன்மைக்கான அப்புத்தகத்தின் அத்தாட்சிகளில் இதுவும் ஒன்றே! தாவீதின் நற்பெயரைக் கெடுக்கக்கூடியதாய்க் காணப்படும் எந்த ஒரு தகவலையும் தவிர்த்துவிட்டு, தாவீதின் சரித்திரத்தைப் பளப்பளப்பாக்குவது என்பது எவ்வளவு சுலபமான காரியமாய் இருந்திருக்கும்; ஒருவேளை வேதாகமம் தெய்வீக மேற்பார்வையின்கீழ் ஆயத்தம்பண்ணப்படாதிருந்தால், விசேஷமாக இராஜா ஒருவரின் விஷயத்தில் நிச்சயமாகவே பதிவுகள் மேற்கூறியபடி பளப்பளப்பாக்கப்பட்டிருக்கும். வேதாகமத்தில் இடம்பெறும் மாமனிதர்களின் தப்பிதங்கள் சில, பதிவுசெய்யாமல் விடப்பட்டிருந்தால், வேதாகமம் வாசிப்பதற்கு நன்றாயிருந்திருக்குமெனச் சிலர் எண்ணுவார்கள் என்பதில் எங்களுக்கு நிச்சயமே. இந்த மாமனிதர்கள் சிலரின் சோதனைகள், தவறுகள், மனந்திரும்புதல் முதலானவைகள்குறித்த பதிவுகளானது, இவர்களது நற்கிரியைகள் மற்றும் நல்மனம் குறித்த பதிவுகளைவிட ஆசீர்வாதங்களில் குறைவானதாய்க் காணப்பட்டதில்லை. கர்த்தருடைய ஜனங்களில் சிலர் மாம்சத்திலுள்ள தங்கள் பெலவீனங்களை உணருகையில், பாவத்திற்கு எதிரான போராட்டத்தில், அடைய வேண்டிய நிலைமையில் அவ்வப்போது குறைவடைந்துபோகையில், வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள மற்றவர்களின் அனுபவங்களினால்

தைரியப்படுத்தப்பட்டுள்ளனர்; தொடர்ந்து பாவத்திற்குள் அமிழ்ந்துபோகாமல் இருக்க வேண்டும் என்றும், கர்த்தருக்கு பயப்படும்படிக்கு அவரிடத்தில் மன்னிப்பு உண்டு என்றும் உணர்ந்துகொள்ள முடிபவர்கள் ஆகுகின்றனர். உமக்குப் பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு. நீரோ மன்னிப்பு அளிப்பவர்; மனிதரும் உமக்கு அஞ்சி நடப்பர் (திருவிவிலியம், சங்கீதம் 130:4). இப்படிப்பட்டவர்கள் பல்வேறு தருணங்களில் தாவீது வீழ்ச்சிக்குள்ளானதையும், மனந்திரும்பினதையும், மனம் வருந்தினதையும், மீண்டுமாகக் கர்த்தருடைய தயவு பெற்றுக்கொண்டதையும் கவனிக்கையில், இது இவர்களுக்கு இதேபோல் மனந்திரும்புவதற்கும், தேவனுடைய இரக்கம் மற்றும் மன்னிப்பில் இதேபோல் நம்பிக்கைகொள்வதற்கும், தங்கள் வீழ்ச்சி மற்றும் பாவத்திலிருந்து எழுவதற்கும், நீதி, சத்தியம், தூய்மை முதலானவைகளுக்குரிய யுத்தத்தை மீண்டும் புதியதாய்த் துவங்குவதற்கும் தைரியம் கொடுக்கின்றது.

(இக்கட்டுரையின் தொடர்ச்சி, பக்கம:83)



**தாவீதின் பராக்கிரமசாலிகள் - James Tissot**

R3238

# தீமையை நன்மையினால் வெல்லு

## 1 சாமுயேல் 26:5-12, 21-25

உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்.
- லூக்கா 6:27

(82-பக்கத்தில் இடம்பெறும் கட்டுரையின் தொடர்ச்சி)

நம்முடைய இந்தப் பாடமானது சவுலினால் தேடப்படும்போது சம்பவித்த தாவீதின் அனுபவங்களில் ஒன்றைப் பற்றினதாகும். பொல்லாத ஆவியினுடைய கட்டுப்பாட்டின்கீழ்க் காணப்பட்ட இராஜாவாகிய சவுலின் தாறுமாறான நடக்கையானது, தாவீதை இவர் கையாண்டதுபோலவே, மற்ற மனுஷரையும் அநீதியாய்க் கையாளுவதற்கு வழிநடத்தியிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை; சிலரிடம் ஒரு காரணத்திற்காகவும், வேறு சிலரிடம் வேறு காரணத்திற்காகவும் சவுல் இப்படியாக நடந்திருக்க வேண்டும். இப்படியாகச் சவுலின் பகைமைக்கு ஆளான இம்மாதிரியான ஜனங்களும், இன்னுமாக நாட்டிலிருந்து தப்பியோடும் நிலைக்கும், சட்ட விரோதிகள் என்று அழைக்கப்படும் நிலைக்கும் தள்ளப்பட்டவர்களாகிய ஜனங்களும் தாவீதைத் தேடிச்சென்று, அவரது உயர் அதிகாரத்திற்குக்கீழ்த் தங்களை இணைத்துக்கொண்டார்கள். ஆரம்பத்தில் இவர்களின் எண்ணிக்கை நானூறாகவும், பிற்பாடு அறுநூறாகவும் இருந்தது (1 சாமுயேல் 22:2; 25:13; 27:2). இராஜாவினுடைய தாறுமாறான போக்கின் காரணமாக இயல்பு வாழ்க்கையில் ஈடுபட முடியாதிருந்த இந்த மனுஷர், ஒவ்வொரு இடமாக மாறி மாறிச் சென்றனர்; இவர்கள் உணவு உட்கொள்ள வேண்டிய விஷயமே, இவர்கள் கடந்துபோன இடங்களிலெல்லாம், இவர்களது வருகையானது சந்தேகத்திற்கிடமின்றி விவசாயிகளுக்கு வருத்தமாகக் காணப்பட்டது. இவர்கள் உணவைத் தேடும் காரியமானது யூதப் பிரமாணத்திற்கு இசைவாகவே செய்யப்பட்டிருக்க வேண்டும்; அப்பிரமாணத்தின்படி பசியாய் இருக்கும் யார் ஒருவனும், எந்த ஒரு நிலத்திற்குள்ளும், பழத்தோட்டத்திற்குள்ளும் அல்லது திராட்சத்தோட்டத்திற்குள்ளும் செல்லலாம் மற்றும் தொந்தரவின்றி திருப்தியடைவது வரையிலும் புசிக்கலாம்.

சீப் வனாந்தரத்திலுள்ள கிராமத்து ஜனங்கள் இராஜாவின் தயவைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற வாஞ்சையினாலும், இன்னுமாக இவ்வளவு திரளான புருஷர் வந்து தங்கள் உணவைக் கொள்ளையடிப்பது குறித்துக் கொண்டிருந்த அச்சத்தினாலும், தாவீதும், அவரது கூட்டாளிகளும் தங்கள் சுற்றுப்புறங்களில் கண்டுபிடிக்கப்படலாம் என்று இராஜாவாகிய சவுலுக்குத் தூது அனுப்பினார்கள். இராஜா உடனடியாக மூவாயிரம் போர்வீரர்களைக் கூட்டிக்கொண்டு, தாவீதையும் அவரது கூட்டாளிகளையும் பிடித்துவிடலாம் என்ற ஆவலில், அந்த இடத்திற்குச் சென்றார். எனினும் தாவீதையும், அவரோடுகூட இருந்தவர்களையும் எளிதில் பிடிக்க முடியவில்லை; சாதாரணமான படைகளைவிட, இவர்கள் வேவு பார்ப்பதில் நன்கு பழக்கமுடையவர்களாகக் காணப்பட்டனர். தங்களைக்குறித்து இராஜா எதையேனும் அறிந்துகொள்வதற்கு முன்னதாக, இவர்கள் இராஜா மற்றும் அவரது சேனையின் அசைவுகள் குறித்த விவரங்கள் அனைத்தையும் உடனுக்குடன் தெரிந்துகொண்டவர்களாக இருந்தனர்.

சம்பவத்தின் பதிவிலிருந்து, எப்படித் தாவீது தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவரோடுகூடச் சவுலின் பாளயத்திற்குச் சென்றார் என்று பார்க்கின்றோம். இராஜாவாகிய சவுலும், அவரது சேனையிலுள்ள

அனைவரும், வெளியில் படுத்திருந்தார்கள்; பாலஸ்தீன வழக்கப்படி, தங்கள் மேல்வஸ்திரத்தை மாத்திரம் போர்த்திக்கொண்டு படுத்திருந்தார்கள். இராஜா இரதங்களில் படுத்திராமல், இரதங்கள் சூழ்ந்திருந்த இடத்தில் அல்லது கொட்டகையில் படுத்திருந்தார்; இராஜாவை மீதமுள்ள சேனையிடமிருந்து வேறுபடுத்திக் காண்பிக்கும் பொருட்டாக, அவரது ஈட்டியானது அவரது தலைமாட்டில் ஊன்றப்பட்டிருந்தது; இப்படிச் செய்வது என்பது, அந்த நாட்டிலுள்ள நாடோடிகளில் பிரதானமானவர்கள் மத்தியில், இன்னமும் நிலவிவரும் பழக்கமாகக் காணப்படுகின்றது. இராஜா மற்றும் அவரது சேனையின் நிமித்தமாக தாவீதும், அவரது கூட்டாளிகளும் அச்சம் கொண்டிருப்பார்கள் என்றும், இராஜாவின் அருகே வருவதற்குத் திட்டமிடமாட்டார்கள் என்றும் சவுலின் சேனையிலுள்ளவர்கள் எண்ணி, பாதுகாப்பாய் உணர்ந்தபடியால், ஜாமக்காரர்களுக்கான அல்லது காவலர்களுக்கான ஏற்பாடு எதுவும் செய்யவில்லை; இதன் காரணமாக தாவீதும், அவரோடுகூட இருந்தவர்களும் சுலபமாக இராஜாவை நெருங்கினார்கள்; இவர்கள் நினைத்திருந்தால், இராஜா உறங்குகையில், அவரைக் கொன்றுபோட்டு, யாருடைய கண்களுக்கும் அகப்படாமலேயே தப்பித்துச் சென்றிருக்கலாம். இராஜாவைக் கொலை செய்வதைத் தாவீது தவிர்த்துக் கொண்டதற்குரிய காரணம், தாவீது தனக்கு வந்த அனுகூலமான வாய்ப்பைக் கண்டுகொள்ள முடியாதளவுக்கு அறிவற்றவராய் இருந்தார் என்பதினால் இல்லாமல், மாறாக தேவன்மீது இவர் கொண்டிருந்த மரியாதையும், அவருக்கான இவரது உண்மையுமேயாகும். தேவனே இஸ்ரயேலின் இராஜா என்பதையும், அவரே சவுலை இராஜாவின் ஸ்தானத்தில் நியமித்திருக்கின்றார் மற்றும் இராஜாவாக அபிஷேகித்துள்ளார் என்பதையும், இராஜாவை தேவனுடைய பிரதிநிதியாகக் கனப்படுத்துவது ஜனங்களுடைய கடமையாக இருக்கின்றது என்பதையும் தாவீது முழுமையாக அடையாளம் கண்டுகொண்டிருந்தார். (புறஜாதிகள் மத்தியிலுள்ள இராஜாக்கள் இப்படியாகத் தேவனால் நியமிக்கப்படுகிறதில்லை) தேவன் தன்னை சவுலுக்கு அடுத்தபடியாக இராஜாவென அபிஷேகித்துள்ள படியால், இப்போதும்கூட தேவனே கிருபையாய்ச் சவுலின் ஜீவனைத் தன் கையில் ஒப்புக்கொடுத்துள்ளார் என்று நியாயம் கற்பித்துக்கொள்ளும் அளவுக்குத் தாவீது எளிதில் வளைகிற/சிதைந்துபோன ஒரு மனசாட்சியைப் பெற்றிருக்கவில்லை. மாறாக தேவனே இன்னமும் இராஜாவாக இருக்கின்றார் என்றும், சவுலை அரியணையிலிருந்து இறக்குவதற்கும், இன்னுமாகத் தன்னை அரியணைக்குத் தம்முடைய சொந்த வழியில் கொண்டுவருவதற்கும் தேவையான வல்லமை அனைத்தையும் பெற்றிருக்கின்றார் என்றும், சர்வ வல்லமையுள்ளவர் தம் திட்டத்தை நிறைவேற்றும் விஷயத்தில், அவருக்காகச் சவுலை, தான் கொலை செய்வது என்பது அவசியம் இல்லை என்றும் தாவீது சரியாய்ப் பகுத்தறிந்துகொண்டவராய்க் காணப்பட்டார்.

சோதனையை இன்னமும் தீவிரமாக்கும் விதமாக, தாவீதோடுகூட இருந்தவர்கள் (தாவீது எதுவும் சொல்லாமலேயே) (சவுலைக் கொன்றுபோடுவதற்குரிய) சில யோசனைகளைத் தாங்களாகவே முன்வைத்தவர்களாகவும், அதை நிறைவேற்றுவதற்கு முன்வந்தவர்களாகவும் காணப்பட்டனர்; இதினிமித்தம் தாவீது சார்பில் ஒரு வார்த்தையும் வெளிப்படாமலேயே அல்லது அவர் தன் விரலை அசைக்காமலேயே, முழுக்காரியமும் அவர்களால் செய்யப்பட்டிருந்திருக்க முடியும். பெலவீனமான ஒரு மனதிற்கு, இது மிகவும் கடுமையான சோதனையாக இருந்திருக்கும் - குற்றம் தன் மீது சுமராதே என்றும், காரியத்தைத் தடுக்க தான் முற்படாமல் இருந்தால், வெறுமனே அமைதி காத்துக்கொண்டிருந்தால், முழுக்காரியமும் இன்னொருவரால் நிறைவேற்றி முடிக்கப்படுமே என்றும் பெலவீனமான மனமுடைய ஒருவனால் தனக்குள்ளாகச் சிந்திக்கப்படலாம். ஆனால் முறைப்படியோ அல்லது குறிப்பாலோ தன் சம்மதம்

தெரிவிக்கப்படாமல், தன் கூட்டாளிகள் செயல்படமாட்டார்கள் என்பதைத் தாவீது அறிந்திருந்தார். கொலைசெய்வதில் யார் வேண்டுமானாலும் கருவியாகப் பயன்படுத்தப்பட்டாலும், பொறுப்பு தன் மீதே காணப்படும் என்று தாவீது உணர்ந்துகொண்டவராய் இருந்தார். சவுலிடம் காணப்பட்ட பொறாமையின், குரோதத்தின், பகைமையின் மற்றும் கொலைபாதகத்தின் ஆவியினை, இதே ஆவியினைக்கொண்டு எதிர்கொள்ளாமல், அதாவது தீமைக்குத் தீமை செய்யாமல், மாறாக சவுலின் தீய மற்றும் கொலைபாதக நோக்கங்களுக்குப் பதிலுக்குப்பதிலாக இரக்கம் காண்பிக்க வேண்டும் என்று தாவீது தீர்மானித்துக்கொண்டார். இது வெறும் கொள்கையாக/வார்த்தையாக மட்டும் காணப்படவில்லை; சவுலின் மீது எந்த ஒரு கொலைபாதகத்தின் ஆவியினையும், தாவீது ஒருபோதும் தன் இருதயத்தில் பெற்றிருக்கவில்லை; இப்போதும்கூடச் சவுலைத் தன் கையில் பெற்றிருந்தார்; மேலும் அவரை அழித்துப்போடுவதற்கு இது தாவீதிற்குக் கிடைத்த இரண்டாம் தருணமாய்க் காணப்பட்டது. சவுலையும், சவுலைப்போன்ற குணங்களையுடைய யார் ஒருவரையும் பாசம் கலந்த அன்பினால் தாவீது அன்புகூர்ந்தார் என்று நாம் எண்ணிக்கொள்ளக்கூடாது. அவர் நம்முடைய ஆதார வசனத்தினுடைய வார்த்தைகளின் படியுள்ள கோணத்தில் சவுலை அன்புகூர்ந்தார்; அதாவது நம்முடைய சத்துருக்கள் மீது நாம் கொண்டிருக்க வேண்டிய தகுதியான அன்பாகும்; அனுதாபம் மற்றும் பரிதாபத்தின் அன்பாகும் - இவ்வன்பானது சத்துருவினுடைய (தீய) குணங்களை எவ்வளவுதான் அங்கீகரியாமல் இருந்தாலும், இவ்வன்பானது சத்துருவுக்குத் தீமை செய்யாது, அதேசமயம் மற்றவர்கள் சத்துருவுக்குத் தீமை செய்வதற்கு ஊக்குவிக்கவும் செய்யாது, மாறாக சத்துருவைக் கொன்றுபோடாமல், அவனுக்கு எந்த விதத்திலாகிலும் இரக்கம்செய்ய ஆயத்தமாயிருக்கும்.

இங்கு ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அனைவருக்கும் நல்லதொரு பாடம் காணப்படுகின்றது. பூமிக்குரிய அரசாங்க ஆளுகைகளின் விஷயத்தில் மட்டுமல்லாமல், விசேஷமாகச் சபையில் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள் விஷயத்திலும்கூட நாம் கர்த்தருடைய நியமனங்களையும், அனுமதிகளையும் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். இத்தகையவர்கள் நீதிக்குச் சத்துருக்களாக மாறிப்போனாலும், இவர்களது அழிவை நிறைவேற்றுவது நமக்கடுத்த காரியமல்ல. இராஜ்யத்திற்கு நம்மை அழைத்தவரும், இராஜ்யத்தைத் தம்முடைய ஏற்றவேளையில் நமக்குத் தருவதாகவும் வாக்களித்தவருமான கர்த்தர், தற்காலத்தில் நாம் சமாதானமாய் வாழவேண்டும் என்பது தம்முடைய சித்தமாகக் காணப்படுகின்றது என்று தெரிவிக்கின்றார். இன்னுமாக நம்முடைய சத்துருக்களிடம்கூட, அதாவது நம்மை அல்லது நமது குணங்களைத் தாக்க/கெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தேடித்திரிபவர்களிடம்கூட அல்லது நம்மை அழித்துப்போட வேண்டும் என்றிருப்பவர்களிடம்கூட நாம் பொறுமையுடனும், நிதானத்துடனும், இரக்கத்துடனும் காணப்பட வேண்டும் என்பதும் தம்முடைய சித்தமாகக் காணப்படுகின்றது என்று தெரிவிக்கின்றார். நாம் தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும், தூற்றுதலுக்குத் தூற்றுதலையும் சரிக்கட்டாமல், அதற்குப்பதிலாக நம்முடைய சத்துருக்களைக்குறித்து முடிந்தமட்டும் நாம் அன்பாய்ப் பேச வேண்டும், முடிந்தமட்டும் அவர்களை இரக்கத்தோடு கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்; எந்த விதத்திலாகிலும் நம்முடைய சரீரத்தைக்கொண்டோ அல்லது நம்முடைய நாவுகளைக் கொண்டோ அல்லது வேறு எதன் மூலமாகவோ நாம் பழிக்குப்பழி வாங்காமல் அல்லது அவர்களின் ஆவியினை வெளிப்படுத்தாமல் இருந்து, அதற்குப் பதிலாகத் தீமைக்கு நாம் நன்மையினையும், குரோதம் மற்றும் கேட்டிற்குப்பதிலாக நாம் இரக்கத்தினையும், பரிவினையும் வெளிப்படுத்திடுவோமாக.

தாவீதும், அவரது கூட்டாளிகளும் பாதுகாப்பான இடத்தை அடைந்த பிற்பாடு, ஏற்றவேளை வந்தபோது, அவர்கள் இராஜாவையும், பிரதான படைத்தலைவரையும் சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்; இராஜாவின் ஜீவன் மரண அபாயத்தில் இருந்தது, ஆனாலும் கொல்லாமல் விடப்பட்டார் என்ற உண்மையினை அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றார்கள்; மேலும் இதற்குச் சாட்சியங்களாய் இருக்கும் ஈட்டியையும், தண்ணீர் செம்பையும் காண்பித்தார்கள்; இன்னுமாக இராஜா தங்களிடம் அனுப்பிவைக்கும் தூதுவனிடம் அப்பொருட்கள் திருப்பிக்கொடுத்து அனுப்பப்படும் என்றும் தெரிவித்தார்கள். இந்தக் காரியத்தில் தன்னுடைய இந்தச் செய்கைக்குக் காரணமாயிருந்த தன்னுடைய பெருந்தன்மையின் ஆவியினைக்குறித்து, தாவீது அனைவருக்கும் தெரியப்படுத்தினது என்பது தவறல்ல. இராஜா உடனடியாகச் சூழ்நிலையினைக் கிரகித்துக்கொண்டார்; மேலும் உடனடியாக இதை ஒப்புக்கொள்வதற்கும், தன்னுடைய தவறான நடக்கைக்கு மன்னிப்பு கேட்பதற்குமுரிய பக்குவம் கொண்டிருந்தார். தாவீதின் இச்செயலானது சவுலை வென்றது.

இச்சம்பவத்தில் நிகழ்ந்ததுபோல, (தீமைக்குக் கைமாறாக) நன்மை செய்வதினால் வரும் விளைவுகள் எல்லாத் தருணங்களிலும் இதேபோன்று இவ்வளவு தெளிவாய்த் தெரியாது; ஏனெனில் பொல்லாங்கு செய்கிறவர்களில் சிலர் சவுல் பெற்றிருந்ததைவிட, குணங்களிலும், கொள்கைகளிலும் மோசமானவர்களாகக் காணப்படுவார்கள்; வெறுப்புடையவர்களாகவும், பொறாமைகொண்டவர்களாகவும், குரோதம்கொண்டவர்களாகவும் காணப்படுவார்கள். ஒருவேளை செய்யப்பட்ட தீமைக்கு நாம் நன்மை செய்கின்ற காரியமானது, பொல்லாங்கு செய்தவரிடத்தில் நன்றியுணர்வினைக் கொண்டுவரவில்லை என்றாலும், (நாம் செய்த) இக்காரியம் சரியே மற்றும் இது நமக்கு ஓர் ஆசீர்வாதமாகுகின்றது. பொல்லாங்கு செய்தவனே, நம்முடைய இரக்கத்தினால் பிடிப்பட தவறுவதன் காரணமாக இழப்பிற்குள்ளாகுகின்றான். சவுல் மனஸ்தாபப்பட்டார் என்பது உறுதி என்றாலும், தாவீது தன்னைச் சவுலின் அதிகாரத்திற்குக்கீழ் ஒப்புக்கொடுக்கும் அளவுக்கு சவுலின்மீது நம்பிக்கை வைக்காதிருந்தார்; இதில் நமக்கும் பாடம் ஒன்று காணப்படுகின்றது, அதென்னவெனில் நம்முடைய சத்துருக்களிடம் நாம் பெருந்தன்மையாக நடந்துகொள்ளும்போது, அவர்கள் செய்த தீமைக்குக் கைமாறாக நாம் நன்மை செய்யும்போது, அவர்கள் சார்பிலான சீர்பொருந்துதலின் விஷயத்தைப் பொருத்தமட்டில், நாம் உடனடியாக நம்பி விடக்கூடாது; மாறாக சவுலின் விஷயத்தில் சவுல் பொல்லாத ஆவியினுடைய கட்டுப்பாட்டின்கீழ்க் காணப்பட்டார் என்று தாவீது உணர்ந்துகொண்டது போன்று, நாமும் உணர்ந்துகொள்ள வேண்டும்; இன்னுமாக (சத்துரு சார்பில்) தவறுகள் ஏதேனும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்குமாயின் அல்லது சீர்பொருந்துவதாக ஏதேனும் அறிக்கை பண்ணப்பட்டிருக்குமாயின், இவை இருதயம் நல்மாற்றம் அடைந்துள்ளது என்பதை நிரூபித்துக் காண்பிப்பதற்குப் போதுமான கால அவகாசம் கொடுக்கப்படுவதற்கு முன்புவரை, குணத்தில் ஏற்பட்டுள்ள நல்மாற்றம் என்று எடுத்துக்கொள்ளப்படுவதற்குப் பதிலாக, உணர்ச்சி வசப்பட்ட நிலையாக மாத்திரம் கருதப்பட வேண்டும் என்றும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

சவுலுக்குத் தாவீது கொடுத்த பதிலானது, எப்படிப் பார்த்தாலும் உண்மையாய் இருப்பதற்கும், பொறுமையாய் இருப்பதற்குமான உதாரணமாகக் காணப்படுகின்றது. தாவீது சவுலுடைய தவறைத் தவறு என்று வலியுறுத்தவுமில்லை, தவறு இல்லை என்று மறுக்கவுமில்லை; அதேசமயம் தாவீது, இராஜாவினுடைய தயவிற்காகவும், இரக்கத்திற்காகவும் கெஞ்சி கேட்கவுமில்லை. மாறாக தேவனிலுள்ள தனது நம்பிக்கையினை அறிக்கையிட்டார் - தேவன் தம்முடைய நீதி மற்றும் இரக்கத்தின்படி எல்லா மனுஷரையும்

கையாளுவார் என்றும், தேவன் மற்றும் அவரது கொள்கைகள் மீதான தனது மரியாதையே, இராஜாவின் ஜீவனைத் தப்பிப்பிழைக்கச்செய்தது என்றும் தெரிவித்தார். தான் இராஜாவுக்கு இரக்கம் காட்டினதுபோல, கர்த்தரும் தனக்கு இரக்கம் பாராட்டுவார் என்று நம்புவதாகவும், இராஜாவில் அல்ல, கர்த்தரிடத்திலிருந்தே தனக்கு உதவியும், மனதுருக்கமும் கடந்து வரும் என்று நம்புவதாகவும், அவரே தன்னை எல்லா உபத்திரங்களினின்றும் விடுவிப்பார் என்று நம்புவதாகவும் தாவீது தெரிவித்தார். எந்த அளவுக்குத் தாவீது தனது இந்த வார்த்தைகளினுடைய உயர் கொள்கையினைப் புரிந்திருந்தார் என்பதை நாம் அறியோம். அவர் ஒரு தீர்க்கத்தரிசியாகக் காணப்பட்டபடியால், அவர் அநேக இடங்களில் தலை மற்றும் சரீரமாகிய கிறிஸ்துவிற்கு நிழலாய்க் காணப்படுகின்றார். அவரது வார்த்தைகள் அவருக்குத் தனிப்பட்ட விதத்தில் பொருந்துவதைப் பார்க்கிலும் சபைக்கே மிகக் குறிப்பாக பொருந்துகின்றதாய் இருக்கின்றது. தாவீது இன்னமும் நியாயப்பிரமாணத்தின்கீழ்க் காணப்படுகின்றார்; ஆகையால் அவர் நியாயப்பிரமாணத்தினால் நியாயந்தீர்க்கப்பட வேண்டியவராவார்; நியாயப்பிரமாணத்தின்படி ஒருவனும் நீதிமானில்லை என்பது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது என்று அப்போஸ்தலன் தெரிவித்துள்ளார். நம்முடைய நாட்களில், நாமோ கிறிஸ்துவினுடைய நீதியின் வஸ்திரத்தினால் மூடப்படுகின்றோம்; ஆகையால், மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார் (உரோமர் 8:4). நீதிக்கடுத்த நம்முடைய இருதயத்தின் நோக்கங்களானது, கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியத்தின்கீழ்த் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பூரணமான கிரியைகளுக்குப்பதிலாக, அவருக்கும், அவருடைய வார்த்தைகளுக்கும் உண்மையாய்க் காணப்படும் நம்முடைய வாஞ்சைகளும், பிரயாசங்களும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன; ஆகையால் ஏற்றகாலத்தில் பிரியமானவருக்குள், அவரது இராஜ்யத்தின் மகிமைக்குள் நம்மை தேவன் ஏற்றுக்கொள்வார் என்று நாம் நம்பிக்கைக்கொள்கின்றோம். மீண்டுமாகத் தாவீதின் உணர்வுகளே, நம்முடையதாகவும் காணப்பட வேண்டும்; தான் சவுலின் மீது இரக்கம் காட்டினதுபோல, தேவன் தன் மீதும் இரக்கம் காட்டுவார் என்று தாவீது அறிக்கை பண்ணின விஷயத்தில், நம்முடைய கவனத்தைக் கவர்ந்த அவரது கொள்கைகள், நம்முடையதாகவும் காணப்பட வேண்டும். இதுவே நம் ஆண்டவருடைய போதனைகளின் முக்கிய சாராம்சமாகும். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார் (மத்தேயு 6:15) - இரக்கம் காண்பிக்காதவன் இரக்கம் பெறுவதில்லை.

தன்னிடம் இருப்பதைவிட, தாவீதிடம் காணப்படும் ஆவியே அதிகம் நீதியுள்ளதாய் இருக்கின்றது என்று சவுல் அடையாளம் கண்டுகொண்டு, தாவீது பிற்காலங்களில் அபரிவிதமாய்ச் செழித்தோங்குவார் என்று கூறினதுபோலவே, ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் சத்துருக்களும்கூட, தங்கள் நடக்கைக்கும், கர்த்தருடைய ஆவியினால் வழிநடத்தப்படுகிறவர்களின் நடக்கைக்கும், இடையிலுள்ள வேறுபாட்டினை உணர்ந்துகொள்வார்கள்; இவர்கள் சவுல்போன்று வெளிப்படையாக ஒப்புக்கொள்ளவில்லையென்றாலும், நிச்சயமாய் உணர்ந்துகொள்வார்கள். சவுலினால் நிழற்படுத்தப்படும் வகுப்பார் பெரும் திரளாய்க் காணப்படுவார்கள். இந்த வகுப்பார் நீதியை அடையாளம் கண்டுகொள்வார்கள் மற்றும் அதை ஒப்புக்கொள்வார்கள், எனினும் அநீதியையே பின்பற்றுவார்கள்; இவ்வகுப்பார் நன்மையை அடையாளம் கண்டுகொள்வார்கள், எனினும் நன்மையினை தீமையினால் எதிர்ப்பார்கள். தேவனை விசுவாசிக்கும் விஷயத்திலும், அவரைப் பிரியப்படுத்துவதற்கு வாஞ்சிக்கும் விஷயத்திலும், பிரியமானவன் என்ற அர்த்தத்தைப் பெற்றிருக்கும் தாவீதிற்கு நாம் ஒத்திருப்போமாக; தாவீது அநேகம் விதங்களில், தலை மற்றும் சரீரமாகிய கிறிஸ்து எனும் பிரியமானவருக்கு நிழலாய்க் காணப்படுகின்றார்.

R4225

# உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்

**1 சாமுயேல் 26:17-25**

(78-பக்கத்தில் இடம்பெறும் கட்டுரையின் தொடர்ச்சி)

## தாவீது பரீட்சிக்கப்பட்டார் - சவுல் தப்புவிக்கப்பட்டார்

நம்முடைய இன்றைய பாடம், சவுலைத் தாவீது இரண்டாம் விசை கொல்லாமல் விடும் சம்பவம் பற்றியதாகும். தாவீது மற்றும் அவரது கூட்டத்தாருக்கு எதிராக, இராஜா பெரும் சேனையோடு வந்திருந்தார். அந்தக் காலங்களினுடைய வழக்கத்தின்படி, இராஜாவை நடுவில் பெற்று பாளயமிறங்கியிருந்தார்கள்; இராஜாவிற்கு அடையாளமாக, அவர் அருகில் அவரது ஈட்டி நாட்டி வைக்கப்பட்டிருந்தது. அந்தக் காலப்பகுதிகளில், அந்த நாட்டில் மழை பெய்வதற்குரிய அபாயம் இல்லாதிருந்ததால், கூடாரங்கள் பொதுவாகப் பயன்படுத்தப்படாதிருந்தது; இன்னுமாகப் பயணம் செய்பவர்கள், தங்கள் மேல்வஸ்திரங்களினால் தங்களைப் போர்த்திக்கொள்வதும், சௌகரியமான ஏதோ ஓர் இடத்தில் படுத்துக்கொள்வதும், அப்போது வழக்கமாயிருந்தது. தனது ஒற்றர்கள் வாயிலாக அந்த முழுத்தேசத்தைக் குறித்தும், அங்குச் சம்பவிக்கும் அனைத்தையும் குறித்தும் தாவீது அறிந்துவைத்திருந்தார்; தாவீதின் கூட்டாளிகளிலுள்ள பிரதானமானவர்களில் ஒருவன், சத்துருவை வீழ்த்துவதற்கும், கொஞ்சம் புத்தி பேதலித்துக் காணப்படும் இராஜாவின் ஆளுகையினின்று தேசத்தைக் காப்பாற்றுவதற்கும், இன்னுமாகத் தாவீதிற்கும், அவரோடுகூடக் காணப்படும் உத்தம மனுஷருக்கும் எதிராகச் செய்யப்பட்ட முறைகேடுகளைச் சரிப்படுத்துவதற்குமான தைரியமான யோசனை ஒன்றை முன்வைத்தான். திட்டத்தைச் சொன்னவன் தாவீது தனக்குச் சம்மதம் தெரிவித்தால், பிரயாணத்தின் களைப்பில் வீரர்கள் தூங்கிக்கொண்டிருக்கும் போது, இராஜாவாகிய சவுலின் பாளயத்திற்குள் தான் புகுந்து, சவுலை அவரது கூடாரத்தில் கொன்றுபோட்டு, இப்படியாக அவர் நிமித்தமான தங்கள் பிரச்சனைகள் அனைத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்துவிடுவதாகத் தெரிவித்தான். இந்தத் திட்டமானது, ஆயிரம் வீரர்களில் தொள்ளாயிரத்து தொன்னூற்றொன்பதுபேருக்குச் சரியான ஒன்றாகத் தோன்றலாம்; எனினும் அது தாவீதைக் கவரவில்லை.

சவுலுக்கு அடுத்த இராஜாவாக இருக்கும்படிக்கு அபிஷேக தைலமானது தன் மீது வந்திருந்தபோதிலும், இராஜா என்ற ஸ்தானத்திற்கும், அதிகாரத்திற்கும் இராஜாவாகிய சவுல், தேவனால் நியமிக்கப்பட்டவராவார் என்ற சரியான பார்வையினைத் தாவீது கொண்டிருந்தார். தான் அரியணைக்கு ஏறுவதற்குரிய கர்த்தருடைய ஏற்றவேளை வரும்போது, கர்த்தரே அதைத் தமக்குரிய வழியில் செய்ய முடிபவராகவும், செய்கின்றவராகவும் காணப்படுவார் என்று தாவீது நிதானித்துக்கொண்டார்; கண்டுங்காணாதது போலிருந்துவிட்டு, மறைமுகமாக இராஜாவின் மரணத்திற்கு ஆதரவை தான் கொடுப்பது என்பது, தன் சார்பிலான பாவமாக மாறிவிடும் என்றும் தாவீது சரியாய் நிதானித்துக்கொண்டார். தான் சவுலைக் கொல்லப்போவதில்லை என்றும், மற்றொருவன் சவுலைக் கொல்வதற்கு ஒப்புதலையும் தான் கொடுப்பதில்லை என்றும், (கொலை திட்டத்திற்கு) எதிர்ப்பு தெரிவிக்கையில், அரை மனதோடும் தான் எதிர்ப்பு தெரிவிப்பதில்லை என்றும் தாவீது தீர்மானமாய்க் காணப்பட்டார். இத்தகைய தைரியமான கொலை திட்டத்தைத் தீட்டியவன், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய எந்த ஒரு வாய்ப்பினையும் பெற்றுக்கொள்ள முடியாதளவுக்கு, தாவீது சவுலின் *பாதுகாவலனாக* செயல்படவேண்டும் என்று

தீர்மானித்தார். தாவீது அந்தக் கூட்டாளியோடுகூட, வேறொரு திட்டத்தை நிறைவேற்றும்படிக்குப் பாளயத்திற்குப் போனார்; அதாவது சவுல் முற்றிலுமாக (இந்த ஒரு தருணத்தில்) தனது கைப்பிடிக்குள்ளாக இருந்திருக்கின்றார் என்றும், சவுலுக்குத் தீமை செய்ய அல்ல, மாறாக வேறே விருப்பமே தன் இருதயத்தில் காணப்படுகின்றது என்றும் இராஜாவுக்கு நிரூபிக்கும்படியாக, பாளயத்தினின்று ஏதோ ஒன்றைத் தன்னோடுகூட எடுத்து வரும்படியாகவே தாவீது புறப்பட்டுப் போனார்.

இந்தத் தனது திட்டத்தை நிறைவேற்றும்படியாக, தாவீது அபிசாயுடன்கூடச் சத்தமில்லாமலும், விரைவாகவும் சவுலின் பாளயத்திற்குள் கடந்துசென்றார். முதலாவதாகச் சவுலின் ஈட்டியை அவரது கூடாரத்திலிருந்து எடுத்துக்கொண்டார்கள்; பின்னர் கூடாரத்திற்குள் பிரவேசிக்கையில், இராஜாவினுடைய படுக்கையின் அருகே, அவரது தண்ணீர்ச் செம்பைக் கண்டு, அதையும் எடுத்துக்கொண்டார்கள். பின்னர் இருவரும்ச வுலின்ப ாளயத்திற்குள திரேஉ ள்ளம லையில்ே பாய்ந ின்று,வ ீர்களையும்,ச வுலையும் எழுப்பத்தக்கதாகச் சத்தமிட்டனர். தான் யார் என்று தாவீது சொல்லாமல், அதே நேரம் தான் எப்படிப் பாளயத்திற்குள் வந்து, இராஜாவின் ஈட்டியையும், தண்ணீர்ச் செம்பையும் எடுத்துக்கொண்டார் என்றும் கூறி, பின்னர் இராஜாவைப் பாதுகாப்பதில் காண்பிக்கப்பட்ட அஜாக்கிரதையின் நிமித்தமாக, சவுலின் படைத்தளபதியைக் கடிந்துகொண்டார். உடனே பாளயமிறங்கியிருந்த அனைவரும் விழித்துக்கொண்டனர்; தாவீதின் குரலையும், தனது ஈட்டி மற்றும் செம்பு காணாமல் போயுள்ளது எனும் உண்மைகளையும் இராஜா அடையாளம் கண்டுகொண்டார். இராஜாவிற்குத் தீமை செய்வதற்குரிய எந்த நோக்கமும் தனக்கு இல்லை என்பதையும், அவருக்குப் பாதகம் செய்வதற்குரிய எந்த விருப்பமும் தனக்கு இல்லை என்பதையும் நிரூபிக்க வேண்டும் என்பதற்காக மாத்திரமே அப்பொருட்களை எடுத்துக்கொண்டதாகத் தாவீது விவரித்து, தூதுவர்கள் மூலமாய் அவைகளைத் திரும்பக்கொடுத்து அனுப்புவதாகத் தெரிவித்தார். சவுலின் இந்தப் பகைமைக்குக் காரணம் அவரது பொல்லாங்கான ஆசைகளும், சுயநலமுமேயாகும் என்று தாவீது பழியினைச் சாற்றாமல், பணிவுடன் பின்வருமாறு கூறினார்: அதென்னவெனில், ஒருவேளை கர்த்தர் சவுலைத் தனக்கு எதிராக ஏவி விட்டிருப்பாரானால், கர்த்தருக்குப் பலி ஏறெடுத்தால், காரியம் முற்றுப்பெறும்; இன்னுமாக ஒருவேளை இராஜா சில மனுஷரின் ஆலோசனையின்படி இப்படிச் செயல்படுகின்றாரானால், அந்த மனுஷர் பொல்லாதவர்களாய் இருக்க வேண்டும்; ஏனெனில் அந்த மனுஷனுடைய ஆலோசனையின் விளைவு, ஒரு சக இஸ்ரயேலனை அவன் வீட்டிலிருந்தும், நாட்டிலிருந்தும் துரத்திவிட்டதோடு மாத்திரமல்லாமல், அவனை புறஜாதிகள் மத்தியில் துரத்தினதன் மூலம், அவனை அவனுடைய தேவனிடமிருந்தும், அவனுடைய மதத்தினிடமிருந்தும்கூடத் துரத்திவிட்டது என்று தாவீது விவரித்தார். தனது இரத்தம் சிந்தப்பட வேண்டியது அவசியமானால், தனது மரணம் இஸ்ரயேல் தேசத்திற்குள்ளாக நடப்பதே தனது விருப்பம் என்றும், இந்த ஒரு காரணத்திற்காகத்தான் தன்னுடைய இந்தச் சொந்தத் தேசத்தை விட்டு, தான் வெளியேறவில்லை என்றும் இராஜாவுக்குத் தாவீது தெரியப்படுத்தினார். மேலும் இராஜா தன்னைச் சத்துருவாகக் கருதி தன்னை வேட்டையாடத் திரிவதும், தன்னையும் தன் கூட்டாளிகளையும் சாம்ராஜ்யத்திற்குச் சத்துருக்கள் என இராஜா எண்ணிக்கொள்வதும், கௌதாரியை வேட்டையாடுவதுபோல் தன்னை வேட்டையாட வந்ததும் கேலிக்கிடமாய் இருக்கின்றது என்றுள்ள தன் கருத்தை முன்வைத்தார். (1 சாமுயேல் 26:19-20; திருவிவிலியம்)

தான் தவறு செய்துள்ளதை ஒப்புக்கொள்ளும் அளவுக்கு இராஜாவாகிய சவுல் நேர்மையுள்ளவராய்க் காணப்பட்டார். மேலும் அவர்: நான் பாவம் செய்தேன்; என் குமாரனாகிய தாவீதே, திரும்பி வா; என் ஜீவன்

இன்றையதினம் உன் பார்வைக்கு அருமையாயிருந்தபடியால், இனி உனக்கு ஒரு பொல்லாப்புஞ் செய்யேன்; இதோ, நான் மதியற்றவனாய் மகா பெரிய தப்பிதஞ்செய்தேன் என்றார். (1 சாமுயேல் 26:21)

## என்னை எல்லா உபத்திரவத்திற்கும் நீங்கலாக்கி விடுவாராக

இராஜாவுக்குத் தாவீது கொடுத்த பதில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாக இருந்தது; மேலும் இது இம்மனுஷனுடைய குணலட்சணத்தினுடைய சாராம்சமாகவும், இவரது நடத்தைக்கான வழிகாட்டுதலாகவும் காணப்படுவது, கர்த்தருக்காக இவர் கொண்டிருந்த பக்தியும் மற்றும் இவரது விசுவாசமும் ஆகும் என்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றது. தாவீது கூறினதாவது: கர்த்தர் அவனுக்கு (அவனவன்) நீதிக்கும் உண்மைக்கும் தக்கதாகப் பலன் அளிப்பாராக; இன்று கர்த்தர் உம்மை என் கையில் ஒப்புக்கொடுத்திருந்தும், கர்த்தர் அபிஷேகம்பண்ணினவர்மேல், என் கையை நீட்ட மனதில்லாதிருந்தேன். இதோ, உம்முடைய ஜீவன் இன்றையதினம்எ ன்ப ார்வைக்குஎ ப்படிஅ ருமையாயிருந்ததோ,அ ப்படியேஎ ன்ஜ ீவனும்க ர்த்தரின் பார்வைக்கு அருமையாயிருப்பதினால், அவர் என்னை எல்லா உபத்திரவத்திற்கும் நீங்கலாக்கி விடுவாராக என்றார் (1 சாமுயேல் 26:23, 24). இது எத்துணை அருமையான வார்த்தைகளாக இருக்கின்றது. இவ்வார்த்தைகளில் சவுல் தனக்கு இரக்கம் காட்ட வேண்டும் என்ற எந்த விதமான வேண்டுதலும் இல்லை, சவுலைச் சார்ந்திருப்பதாகத் தெரிவிக்கும் எதுவும் இல்லை, மாறாக கர்த்தரிடம் ஏறெடுக்கப்பட்ட விண்ணப்பமாகவும், கர்த்தர் தன்னை விடுவிக்க வல்லவராகவும், விடுவிக்க முடிபவராகவும் இருப்பதிலுள்ள தனது முழுமையான நம்பிக்கையை வெளிப்படுத்துவதாகவுமே, தாவீதின் இந்த வார்த்தைகள் காணப்பட்டன. இன்னுமாகத் தாவீது ஒருபோதும் அனுபவித்திராத கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்திலுள்ள அனுகூலங்களையும், பாடங்களையும் பெற்றிருக்கும் அருமையான கிறிஸ்தவ ஜனங்களிலுள்ள அநேகர் கற்றிராத பாடம் ஒன்றினை, தாவீது கற்றுக்கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. தாவீதின் நடக்கையும், வார்த்தைகளும், எங்களுக்குத் தவறிழைக்கின்றவர்களை நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் தப்பிதங்களையும் மன்னித்தருளும் - அதாவது நாங்கள் மற்றவர்களுக்கு இரக்கம் பாராட்டுவதுபோன்று, எங்களுக்கு இரங்கியருளும் என்று கர்த்தர் கற்பித்துத் தந்த ஜெபத்தின் இந்த ஒரு பகுதியினை, தாவீது புரிந்திருப்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. நான் சவுல் இராஜாவாகிய உமக்கு இரக்கம் பாராட்டினதுபோல், கர்த்தரும் என் மீது இரக்கம் பாராட்டுவாராக என்பதே தாவீதின் வார்த்தைகளுடைய சாராம்சமாய் இருந்தன.

அப்பொழுது சவுல் தாவீதை நோக்கி: என் குமாரனாகிய தாவீதே, நீ ஆசீர்வதிக்கப்பட்டவன்; நீ பெரிய காரியங்களைச் செய்வாய், மேன்மேலும் பலப்படுவாய் என்றான்; அப்படியே தாவீது தன் வழியே போனான்; சவுலும் தன் ஸ்தானத்திற்குத் திரும்பினான் (1 சாமுயேல் 26:25). சவுலிடம் திரும்பி வரும்படிக்கு அழைக்கப்பட்டபோதிலும், சவுலின் வார்த்தைகளும், இருதயமும் நம்பப்பட முடியாதவை என்று தாவீது உணர்ந்தார். இது நாம் அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும்; அதென்னவெனில், பொல்லாத மனுஷனுடைய இருதயமானது வருத்தப்படுவதுபோன்றும், மென்மையாகியுள்ளதுபோன்றும், அன்பாய் இருப்பதுபோன்றும் கணப்பொழுது தோன்றினாலும், அவ்விருதயமானது நம்பமுடியாத ஒன்றாக இருக்கும் என்பதே படிப்பினையாகும். ஆனால் அதற்கென்று நமக்குப் பொல்லாப்பை அல்லது தீங்கை அல்லது பாதகத்தைச் செய்த யார் ஒருவரிடத்திலும், நம்மால் மீண்டும் நம்பிக்கை வைக்கமுடியாது என்பதாக நாம் புரிந்துகொள்ளக்கூடாது; மாறாக நாம் தீமைக்குத் தீமையினையும், கசப்பிற்குக் கசப்பினையும்,

பழிவாங்குதலுக்குப் பழிவாங்குதலையும், தூஷணத்திற்குத் தூஷணத்தையும் செய்யாமல் இருக்கும் அதேவேளையில், நாம் ஞானத்தையும் பயன்படுத்துகின்றவர்களாகக் காணப்பட வேண்டும்; இன்னுமாக (தீமை செய்தவரின்) இருதயம் மாற்றமடைந்துள்ளது என்பதற்கும், துர்க்குணம் எனும் புளித்தமா புறம்பே கழிக்கப்பட்டுள்ளதற்குமான உறுதியினை, வார்த்தைகளினால் மட்டும் இல்லாமல், நடைமுறை சாட்சியங்களாலும் ஒருவர் நமக்குத் தராததுவரையிலும், அத்தகைய ஒரு நபரின் அதிகாரத்தின்கீழ் நம்மை நாம் முழுவதுமாக ஒப்புக்கொடுத்துவிடாமல் காணப்பட வேண்டும்.

## புதுச்சிருஷ்டிகளுக்கான மற்றப் பாடங்கள்

தாவீது கோலியாத்திற்கு எதிராக மாபெரும் வெற்றியினை அடைந்திருந்தார்; எனினும் இந்த ஒரு பாடமானது,அ வர் *தனக்கு*எ திராகஇ ன்னும்பெ ரிதானஒ ருவெ ற்றியினைஅ டைந்தார்எ ன்றுள்ள காரியத்தைப் பதிவு செய்கின்றது. பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத ஒரு சுபாவ மனுஷனாக, இவர் வியக்கத்தக்க சுயகட்டுப்பாட்டினை நிச்சயமாகவே வெளிப்படுத்தியுள்ளார். சவுலுக்காக இவர் கொண்டிருந்த அன்பே, இராஜாவின் ஜீவனைத் தப்பிப்போகச் செய்தது என்று நம்மால் சொல்ல முடியாது; மாறாக கர்த்தருக்காக இவர் கொண்டிருந்த அன்பும், தெய்வீக அதிகாரத்தின் மீதான இவரது மரியாதையுமே காரணங்களாய் இருந்தன. கர்த்தருக்காக இவர் கொண்டிருந்த பக்தியானது மிகவும் வலுவாய் இராமல் இருந்திருக்குமானால், இவரைச் சோதனையானது அடித்துக்கொண்டு போயிருந்திருக்கும் என்பதை நம்மால் உணர்ந்துகொள்ள முடிகின்றது; ஒரு சராசரி மனுஷனுக்கு, பின்வரும் எட்டு காரணங்களின் நிமித்தமாக, இங்குச் சத்துருவைக் கொலைசெய்யும் காரியமானது நியாயமானதாகத் தோன்றலாம்; அவை: (1) இச்சம்பவம், சவுல் இராஜாவுக்கும், அவரது சேனைக்கும் மற்றும் தாவீதுக்கும், அவரது கையாட்களுக்கும் இடையில் நடைபெறும் சட்டபூர்வமான போராகவே காணப்பட்டது. இன்றைய காலங்களில் இம்மாதிரியான திடீர் தாக்குதல் முற்றிலும் நியாயமான ஒன்றாகவே கருதப்படும். (2) தாவீது தன் உயிரைக் காப்பாற்ற வேண்டுமானால், அதற்கு இராஜாவின் மரணம் அவசியமானது போன்றிருந்தது; மேலும் இப்படிப்பட்ட தற்காப்பு என்பது, உலகத்தால் பரவலாக இயற்கையின் முதல் விதியாக அங்கீகரிக்கப்படுகின்றது. (3) அலைந்துத் திரியும் தன் வாழ்க்கையினின்று தப்பித்து, தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களில் ஒருவராய் அமைதியாயும், சமாதானமாயும் வாழ வேண்டும் என்ற தாவீதின் ஆசை நிறைவேற வேண்டுமென்றால், கண்டிப்பாக சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கும். (4) இராஜாவாகவும், சவுலுக்கு அடுத்து வருபவராகவும் தாவீது அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கும் காரியமும், அரியணைக்கு வருவதால் வரும் அனுகூலமான காரியமும் சிறந்த காரணங்களாக அநேகருக்குத் தென்படலாம். (5) சவுலினால் தான் பட்ட கஷ்டங்களுக்காகப் பழிவாங்க வேண்டும் என்று தாவீது நினைத்திருந்திருப்பா ரானால், சந்தேகத்திற்கு இடமின்றி களமிறங்கியிருந்திருப்பார். (6) தாவீதின் தேசப்பற்று, அதாவது அவரது ஜனங்களுக்காகவும், அவரது தேசத்திற்காகவும் அவர் கொண்டிருந்த அன்பும், இன்னுமாகச் சவுல் இராஜாவாய்க் காணப்படுவதற்குரிய தகுதியினை இழந்து கொண்டே வருகின்றார் என்ற உண்மையினை தாவீது உணர்ந்துகொண்டிருந்த காரியமும், சவுலைக் கொன்றுபோடுவதற்குரிய (தகுந்த) காரணமாகத் தெரியலாம். (7) இப்படியாக தன் கைக்கு வரும் வாய்ப்பினைப் பயன்படுத்தி, காரியத்தை நிறைவேற்றுவது என்பது, தெய்வீக வழிநடத்துதல் என்றுகூட அர்த்தம் எடுத்துக்கொள்ளப்படலாம்; இப்படித்தான் பொல்லாத இருதயமும், குற்றமுள்ள மனசாட்சியும் தீர்மானித்திருக்கும். (8) தான் சுகமாய்க் காணப்படுவதற்கும், தன்னைப் பாதுகாப்பதற்கும் என்று தங்கள் ஜீவன்களைப் பணையம் வைத்த தனது கூட்டாளிகளின்

நலனுக்குக்காக, இராஜா கொல்லப்படுவது அவசியமாய் இருந்தது; இன்னுமாக இவர்களில் அநேகரால், இராஜாவைக்கொ ல்லாமல்வ ிடுவதிலுள்ளத ாவீதின்ே நாக்கத்தினைப்பு ரிந்துகொள்ளமு டியவில்லை என்பதில் ஐயமில்லை. இவர்களைப் பொருத்தமட்டில், இத்தகைய வாய்ப்பினைக் கைநழுவவிடும் தாவீதின் நடக்கையானது புத்தியீனமானதாகவும் காணப்பட்டிருக்கும். தாவீதுக்கும், உபத்திரவத்தில் இவரோடு இருந்தவர்களுக்கும் இடையிலான நட்பில் இதினிமித்தம் பிளவு ஏற்பட வாய்ப்பிருந்தது.

நிச்சயமாகவே எந்த ஒரு பெலவீனமான மனுஷனும் அல்லது கர்த்தருக்குப் பயபக்தியற்றும், அவரில் விசுவாசமற்றும் காணப்படும் எந்த ஒரு மனுஷனும், இம்மாதிரியான புறத்தூண்டுதல்களின் அழுத்தங்களுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்துவிடுவான். ஆனால் தாவீது இணங்கவில்லை எனும் உண்மையானது, அவரது குணங்களுக்கும், அவரது கொள்கைகளுக்கும், இன்னும் அதிகமாய்ச் சான்று அளிக்கின்றது.

கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் மேம்பட்ட பாடங்களைக் கற்றுக்கொண்டிருப்பவர்களும், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படும் அனுகூலத்தைப் பெற்று, இதனால் திவ்விய குணலட்சணம் மற்றும் சித்தம் குறித்த ஆழமான காரியங்களைப் புரிந்துகொள்ள முடிகிறவர்களாகக் காணப்படுபவர்களுமான நம் விஷயத்தில், காரியங்கள் என்னவாகக் காணப்படுகின்றது? நாமும் தாவீதைப்போன்றே உண்மையுள்ளவர்களாகவும், பெருந்தன்மையுள்ளவர்களாகவும் காணப்படுகின்றோமா? நிச்சயமாகவே தாவீதைவிட, நம்மிடமே கர்த்தர் அதிகமாய் எதிர்பார்ப்பார்; ஆகையால் புத்திரர் வீட்டாராய் காணப்படுகின்றவர்களும், எல்லா விதங்களிலும் பணிவிடை வீட்டாரைக்காட்டிலும் அனுகூலங்களை அதிகமாய்ப் பெற்றிருப்பவர்களுமான நாம், நம்மிடம் அதிகமான எதிர்பார்ப்பினைப் பெற்றிருக்க வேண்டும். நம்முடைய மீட்பரும், நம்முடைய எஜமானரும், நம்முடைய போதகருமானவர் நமக்குப் பின்வருமாறு போதித்து, புதிய கட்டளையைக் கொடுத்திருக்கின்றார் அல்லவா? நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன் (யோவான் 13:34). மீண்டுமாக நம்முடைய ஆதார வசனத்திலும் உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் என்று நமக்குப் போதிக்கப்பட்டுள்ளது. நாம் பெற்றிருக்கின்ற போதகங்களை, பாடங்களை, நாம் புரிந்திருக்கின்றோம் என்பதை எப்படி வெளிப்படுத்துகின்றோம்? தேவனுக்காகவும், அவரது போதனைகளுக்காகவும், சகோதர சகோதரிகளுக்காகவும், நம்முடைய சத்துருக்களுக்காகவும் கொண்டிருக்க வேண்டிய அன்பின் இந்தப் பிரமாணத்தினை தினந்தோறும் நாம் எப்படி நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகின்றோம்?

## இராஜ்யத்தில் கொலை செய்பவன் இருப்பதில்லை

தாவீதிற்கு வந்தது போன்ற எந்தப் பரீட்சைகளும், இன்று கிறிஸ்தவர்களாய்க் காணப்படும் நமக்கு வராது என்று சொல்லலாம்; எனினும் ஒருவேளை வருமாயின், எந்தக் கிறிஸ்தவனும், எந்தப் பரிசுத்தவானும் கொலை செய்கிறவனாய்க் காணப்படக்கூடாது. இந்தப் புதிய யுகத்தில் நாம் அதே பிரமாணத்தின்கீழ்க் காணப்பட்டாலும், அப்பிரமாணத்திற்கு உயர்வான அர்த்தம் அல்லது விளக்கம் காணப்படுகின்றது எனும் விஷயத்தை நாம் மறந்து விடக்கூடாது என்று நாங்கள் தெரிவிக்கின்றோம்; உதாரணத்திற்குப் பின்வரும் ஆண்டவருடைய வார்த்தைகளைப் பாருங்கள்: நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை

நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று. தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷகொலைபாதகனாயிருக்கிறான் (மத்தேயு 5:22, 28; 1 யோவான் 3:15). திவ்விய பிரமாணத்திற்கும், நம்முடைய மனங்களில் அதன் செயல்பாட்டிற்கும், மேல்கூறப்பட்டுள்ள இந்த மேம்பட்ட அர்த்தங்களைப் பொருத்திப்பார்க்கும்போது, தாவீதிற்கு வந்தது போன்ற வாய்ப்புகள் நம் ஒவ்வொருவருக்கும் வரும் என்று நாம் எளிமையாகக் கண்டுகொள்ளலாம்; தீமைக்குத் தீமை செய்வதற்கும், உதாசனத்துக்கு உதாசனத்தைச் சரிக்கட்டவும், நம்முடைய அயலானை - நமது சகோதரனைக் கொலை செய்வதற்கும், அதாவது அவனது செல்வாக்கு, அவனது நற்பெயர் முதலானவைகளைக் கொலை செய்வதற்குமான வாய்ப்புகள் நம் ஒவ்வொருவருக்கும் வரும்.

இந்தப் பரீட்சைகளை நாம் எப்படி எதிர்கொள்கின்றோம்? தாவீதைப்போன்று நாம் சுயத்தை ஜெயம் கொள்கின்றோமா அல்லது பொல்லாங்கனால் நாம் ஜெயிக்கப்படுகின்றோமா? ஒருவேளை பொல்லாங்கன் ஜெயித்துக்கொண்டிருக்கின்றான் என்றால், இப்படியாக நாம் தாவீது அல்லது பிரியமானவனின் வகுப்பாரிலுள்ள அங்கத்தினர்களாக இல்லை என்று நிரூபிக்கின்றவர்களாய்க் காணப்படுவோம்; இன்னுமாக எதிராளியானவனோடு ஓர் உறவை ஏற்படுத்திக்கொள்கின்றவர்களாகவும், அவனது ஆவியினையும், அவனது குணங்களையும் கொஞ்சம் உடையவர்களாகவும் காணப்படுவோம்; மேலும் இதை, நமது சகோதரனுக்கு எதிராக தவறு செய்யும்போதும், சகோதரனைக் கொலை செய்யும்போதும் வெளிப்படுத்துகின்றவர்களாகவும் காணப்படுவோம். இம்மாதிரியான விஷயங்களில், தம்முடைய ஜனங்களுக்கு இந்த யுகத்தினுடைய முடிவில் விசேஷித்த சோதனைகள் வரும் என்று நமது கர்த்தர் தெரிவித்துள்ளார். சகோதரன் சகோதரனையும், பெற்றோர் பிள்ளைகளையும் மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பார்கள் என்றும், கர்த்தருடைய உண்மையுள்ள ஜனங்கள், மனுஷர் எல்லோராலும் பகைக்கப்படுவார்கள் என்றும் கர்த்தர் தெரிவித்துள்ளார். இம்மாதிரியான காரியங்களில் நாம் எந்தளவுக்குச் சத்துருவுக்கு மறைமுக ஆதரவு அல்லது ஒத்துழைப்பு கொடுத்துக்கொண்டிருக்கின்றோம்? அபிஷேகம் பண்ணப்பட்ட அங்கத்தினர்களில் ஒருவருக்குப் பாதகம் செய்யத்தக்கதாக, அவரைத் தொடுவதற்குத் துணியாமல் இருக்குமளவுக்கு, பூர்வ காலத்து தாவீதைப்போன்று நாம் கர்த்தரிடம் அவ்வளவு பயபக்தி கொண்டிருக்கின்றோமா? இன்னுமாக சவுல் தாவீதிற்குச் செய்தது போன்று நம்முடைய ஜீவனைக் கொல்ல நாடுகின்ற, நமக்குத் தீமை செய்கின்ற - நமக்கு விரோதமாய்த் தீமையாய்ப் பேசுகின்ற சத்துருவைக்கூடத் தொடுவதற்குத் துணியாமல் இருக்குமளவுக்குப் பூர்வ காலத்து தாவீதைப்போன்று நாம் கர்த்தரிடம் அவ்வளவு பயபக்தி கொண்டிருக்கின்றோமா?

கர்த்தருடைய ஜனங்களுக்கு வரும் சோதனையினுடைய ஒரு குறிப்பிட்ட பாகமானது, தாவீதின் இந்தப் பரீட்சையில் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளது; அதாவது நாமே செய்ய விரும்பிடாத தீமையினை, மற்றொருவர் செய்வதற்கு நாம் ஆதரவு கொடுப்பதற்குரிய சோதனையாகும். தாவீது அபிசாயை நோக்கி: உன்னுடைய விருப்பத்தின்படி செய்வாயாக; நான் ஒதுங்கி நிற்கப்போகின்றேன். எனினும் நீ

செய்யப்போகின்ற காரியம், நம்முடைய ஜனங்களுக்கு நன்மையாயிருக்கும் என்றும், அது இராஜாவுக்குக்கூட நன்மையாக இருக்கும், ஏனெனில் அவர் அவருக்கே சத்துருவாய்க் காணப்படுகின்றபடியால், அவர் மரிப்பதே நலம் என்றும் நான் நம்புவதை உனக்குத் தனிப்பட்ட விதத்தில் சொல்கின்றேன் என்று கூறுவது தாவீதிற்குச் சுலபமான காரியமாகவே இருந்திருக்கும். தாவீது எப்படிச் செயல்பட்டார் என்பதை கவனிப்போமாக; ஒருவேளை வேறே விதத்தில் செயல்பட்டிருப்பாரானால், அது பரம பிதாவிற்குப் பிரியமற்று காணப்பட்டிருந்திருக்கும் என்றும், தாவீதும் பரீட்சையில் தோற்றுப் போயிருந்திருப்பார் என்றும் புரிந்துகொள்வோமாக.

இப்படியே நம்முடைய விஷயத்திலும் காணப்படும். நாம் அநீதி செய்யாதவர்களாகவும், தீமை பேசாதவர்களாகவும், தீமையினை யோசிக்காதவர்களாகவும், நண்பனுக்கு அல்லது சத்துருவுக்குத் தீமை செய்யாதவர்களாகவும் மட்டும் இராமல், மிகவும் மனப்பூர்வமாகவும் இப்படிக் காணப்பட வேண்டும்; இதினிமித்தம் நமக்கு நன்மை உண்டாகத்தக்கதாக, வேறொருவர் தீமைசெய்ய முன்வருவார் என்றால், நாம் தெய்வீகச் சித்தத்திற்கும், சகோதர சிநேகத்தின் பிரமாணத்திற்கும் இசைவாக காணப்பட்டு, நம்முடைய சகல பெலத்தோடும் அவ்வாலோசனையை எதிர்க்கின்றவர்களாய்க் காணப்பட வேண்டும்.

சோதனைகள் நிறைந்த அந்த ஏழு வருடங்களில், தாவீது, இராஜா என்கிற நிலைக்குப் பயிற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருந்தார். அந்த வருடங்கள் துன்பம் எனும், துன்புறுத்தல் எனும், பரீட்சை எனும் பள்ளிக்கூடமாகக் காணப்பட்டது; மேலும் அதில் விலையேறப்பெற்ற பாடங்களைக் கற்றுக்கொண்டார். அவரது மிகவும் சுவாரசியமான சங்கீதங்களில் அநேகமானவைகள், அந்தக் காலப்பகுதிகளைச் சார்ந்தவையாகும்; உதாரணத்திற்கு 34 மற்றும் 57-ஆம் சங்கீதங்கள் ஆகும். இதுபோலவே இந்தச் சுவிசேஷயுக சபையிலுள்ள கர்த்தருடைய அபிஷேகிக்கப்பட்ட ஜனங்களும், இப்பொழுது பயிற்சி எனும் வனாந்தரத்தில் காணப்படுகின்றனர்; இங்கு நம்மை எதிர்ப்பவர்களால் நாம் பின்தொடரப்படுகின்றோம்; இதுவே, நம்முடைய இராஜ ஸ்தானத்தை நாம் எடுத்துக்கொள்ளத்தக்கதாக, நம்மை ஆயத்தப்படுத்துவதற்கு விலையேறப்பெற்ற பாடங்களை நாம் கற்றுக்கொள்வதற்குரிய காலப்பகுதியாகும்; மேலும் இந்தக் காலப்பகுதிகளில்தான், தாவீதைப்போன்று நம்முடைய இருதயங்களும் கர்த்தருக்குத் துதியினையும், நன்றியினையும், புகழ்ச்சியினையும் சாற்றுகின்றது. ஒவ்வொரு விஷயத்திலும் தாவீதிற்கும், நமக்கும் இடையிலுள்ள வித்தியாசங்கள், நமக்குள்ள அனுகூலங்களையே சுட்டிக்காட்டுகின்றன. தாவீதின் காரியங்கள் நிழலானவைகளாகவும், பூமிக்குரியவைகளாகவும் காணப்பட்டன. ஆனால் நம்முடையவைகள் நிஜமானவைகளாகவும், பரத்திற்கடுத்தவைகளாகவும், விலையேறப்பெற்ற உண்மைகளாகவும் காணப்படுகின்றன. நாம் எப்படிப்பட்ட நடக்கையுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும்! இந்தப் பாடங்களை நாம் எத்தனை முழுமையாய்க் கற்றுக்கொள்ள வேண்டும்! நாம் அடையப்போகின்ற பரிசாகிய இராஜ்யம், எத்தனை பெரிது! நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள். (யோவான் 13:17)

R5672

# நான் அபிஷேகம் பண்ணினவர்ளைத் தொடாதீர்கள்
## 1 சாமுயேல் 26

உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்.
- லூக்கா 6:27

தலைமறைவாய்க் காணப்பட்டவரும், இராஜாவாகிய சவுலினால் வேட்டையாட தேடித் திரியப்பட்டவருமாகிய இளைஞனான தாவீதின் வாழ்க்கை கேள்விக்குறியானது. சமுதாயத்திடமிருந்து நீதியாக அல்லது அநியாயமாக விலக்கிவைக்கப்பட்ட ஆதரவற்றவர்கள் அடங்கின ஒரு வகுப்பார் அவரிடம் வந்து இணைந்துகொண்டனர். இவர்களில் சிலர் சந்தேகத்திற்கிடமின்றி குற்றவாளிகளாய் இருந்தனர்; சிலர் கடன்பட்டவர்களாய் இருந்து, சிறைதண்டனைக்குப் பாத்திரமானவர்களாய்க் காணப்பட்டு, சுதந்தரம் முதலானவைகளைத் தக்கவைத்துக்கொள்வதற்கெனத் தப்பி ஓடினவர்களாய் இருந்தனர். கொஞ்சக்காலத்தில் ஆயுதம் தரித்தவர்களும், (மனம் நொந்துபோன) சாகத்துணிந்தவர்களும் காணப்பட்ட நானூறு புருஷர்களுடைய கூட்டத்திற்கு, இளைஞனான தாவீது தலைவன் ஆனார்.

இவ்வனுபவமானது, பிற்காலத்தில் அவரது இராஜ்யபார பணிக்கு அவரை ஆயத்தப்படுத்துவதில் மாபெரும் பயிற்சியாகக் காணப்பட்டது. இவ்வனுபவமானது சமுதாயத்தில் மனம் நொந்துபோன ஜனங்களின் நிலைமை குறித்த கண்ணோட்டத்தினை தாவீதிற்குக் கொடுத்தது. விவசாயிகளிடம் வரி வசூலிக்கப்படுவது போன்ற விதத்தில், வரி வசூலித்து தாவீதும், அவரது சிறு சேனையும் உயிர் வாழ்ந்து வந்தார்கள். இந்த வரியை வாங்கிக்கொண்டதற்கு உபகாரமாக, பெலிஸ்தர்களிடமிருந்து மாத்திரமல்லாமல், மோவாபிலிருந்து யோர்தானைக் கடந்து அடிக்கடி வந்த கொள்ளைக்காரர்களிடமிருந்தும், தாவீது சந்தேகத்திற்கு இடமின்றி ஜனங்களுக்குப் பாதுகாப்பு கொடுத்தார். அக்காலத்தில் இராஜாவாகிய சவுலின் அரசாட்சியினால், காவலாளர்களின் பாதுகாப்பு போன்ற எந்தவிதமான பாதுகாப்பும் போதுமான அளவுக்கு வழங்கப்படவில்லை என்பதில் நிச்சயமே. தனது ஜனங்களுடைய நலன்களுக்கடுத்த காரியங்களைப் பாதுகாப்பதற்குப்பதிலாக, இராஜா தனது உண்மையுள்ள ஊழியக்காரனாகிய தாவீதிற்கு எதிராக வெறித்தனமாய்ப் பொறாமைப்பட்டுக்கொண்டிருந்தார்; மேலும் காடுகளில் காட்டு மிருகங்களை வேட்டையாடுவது போன்று, அடிக்கடி தாவீதை வேட்டையாடும்படிக்குத் தேடித் திரிந்துகொண்டிருந்தார்.

தாவீதோடுகூட வந்தவர்களில், மூன்று பேர் அவரது சகோதரியின் மூன்று குமாரர்கள் ஆவார்கள். இவர்கள் பிற்பாடு இராஜாவாகிய தாவீதோடு, அவருடைய எல்லா வேலைகளிலும் இடம்பெற்ற மிகவும் முக்கியமான நபர்களாய்க் காணப்பட்டனர். ஒருவர் யோவாப் ஆவார்; இவர் படைகளின் தளபதியானார். மற்ற இருவர் அபிசாய் மற்றும் ஆசகேல் ஆவார்கள்; இவர்கள் பராக்கிரமசாலிகளாய் இருந்தனர்; இவர்களும் பிற்பாடு தாவீதின் இராஜ்யபாரத்தில் கீர்த்திப் பெற்றவர்களாய்க் காணப்பட்டனர்.

### தாவீதின் குணலட்சணத்தினுடைய மேன்மை

சிறிது காலம் தாவீது மற்றும் அவரது கூட்டத்தாருக்கு, அதுல்லாம் கெபி அரணாக இருந்தது. தாவீது விரும்பியிருந்தால், அவரால் செய்ய முடிந்திருக்கும் உள்நாட்டு போருக்கு, தன் ஜனத்தை ஆளாக்குவதற்கு அவர் மறுத்த காரியமானது, பெரிதும் பாராட்டதகுந்த விஷயமாகும். ஒருவேளை அப்படிப் போர்

தொடுத்திருந்திருப்பாரானால், நிச்சயமாகவே ஆரம்பம் துவங்கி பெரும்பான்மையான ஜனங்கள், அவர் பக்கத்திற்கே ஆதரவை வழங்கியிருந்திருப்பார்கள்; மேலும் சவுல் இராஜாவின் மீதும் அவர் நிச்சயமாகவே வெற்றியடைந்திருப்பார். இதுவே தேவனுடைய சித்தம் என்று நினைத்து, அவர் தன்னைத்தானே எத்தனைச் சுலபமாய் ஏமாற்றியிருக்க முடியும்! தீர்க்கத்தரிசியாகிய சாமுயேலின் வாயிலாக, தேவன் தன்னை இராஜாவாக அபிஷேகம் பண்ணியுள்ளார் என்பதைத் தாவீது நினைவுகூர்ந்தார்; அதேசமயம் காரியத்தைக் கையில் எடுப்பது தனக்கடுத்த காரியம் அல்ல என்றும், தெய்வீக வல்லமையானது சவுலின் இராஜ்யபாரத்தைக் கவிழ்த்துப்போட்டு, அந்த வல்லமையினால் சவுலுக்கு அடுத்த இராஜாவெனத் தன்னிடம் அதிகாரம் கொடுக்கப்படும் தேவனுடைய காலங்கள் வரும்வரை பொறுமை காப்பது தனக்கடுத்த காரியம் என்றும்கூடத் தாவீது நினைவுகூர்ந்தார்.

இப்படியாகக் கர்த்தருக்காய்க் காத்திருக்கும் காரியத்தினை தேவனுடைய ஜனங்கள் அனைவரும் நினைவுகூருவார்கள் என்றால், அது எத்துணை ஆசீர்வாதமாய் இருக்கும்! நான் கொள்ளையாட எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (செப்பனியா 3:8). கர்த்தருடைய காலங்களும், வேளைகளும் நமக்கு நன்மையானவைகளாகக் காணப்படும்; மேலும் கர்த்தருடைய சித்தத்திற்குக் காத்திராமல் அவசரப்பட்டு தானாகவே, காரியத்திற்குள் இறங்குவதற்கு ஏறெடுக்கும் எந்தவிதமான பிரயாசங்களும் நிச்சயமாகவே பாதகமாய் முடியும். தாவீது தேவனில் முழுக்க விசுவாசம் கொண்டவராக இருந்தபடியாலும், அவருக்குக் கீழ்ப்படியும் ஆவியினை தாவீது பெற்றிருந்தபடியாலும், தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷன் என்று அழைக்கப்பட்டார்; இதனால் இவர் பூரணமானவர் என்று அர்த்தமாகாது; இவர் எப்போதுமே கர்த்தருடைய சித்தத்தைச் செய்தவரும் அல்ல; எனினும் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவதே, இவரது இருதயத்தின் உண்மையான வாஞ்சையாகக் காணப்பட்டது; மேலும் எப்போதெல்லாம் மாம்சத்தினுடைய பெலவீனத்தின் காரணமாக, இவர் மாறுபட்ட போக்கினை எடுத்துக்கொண்டாலும், தவறைக் கண்டுகொள்ளும்போது, அவர் காலந்தாழ்த்தாமல் மனம் வருந்துவதற்கும், தெய்வீக மன்னிப்பை நாடுவதற்கும், தன் நடக்கையை மாற்றிக்கொள்வதற்கும் முனைந்தார்.

Joseph Parker-அவர்கள் பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளார்: (தாவீதின்) இந்த நிழலில், உலகத்தில் காணப்பட்டபோதுள்ள இயேசு கிறிஸ்துவின் நிலைமைக்கான சித்தரிப்பைக் காண்கின்றோம் என்பதை மறுக்க இயலாது. இயேசு மனுஷரால் இகழப்பட்டார் மற்றும் புறக்கணிக்கப்பட்டார்; அவருக்குத் தலை சாய்க்க இடமில்லாதிருந்தது; அவரைச் சூழ்ந்திருந்த ஜனங்கள் எல்லையற்ற எதிர்பார்ப்பு உள்ளவர்களாகவும், கீழ்த்தரமானவர்களாகவும், சீர்க்கெட்டவர்களாகவும், எல்லா வகையான தேவைகளில் இருந்தவர்களாகவும் காணப்பட்டனர்; பூமியாகிய இந்த அதுல்லாம் கெபியில் தேவகுமாரன் சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், அவரைச் சுற்றிலும் பராக்கிரமசாலிகளோ அல்லது புத்திசாலிகளோ காணப்படவில்லை.

தனது கூட்டாளிகளோடு அதுல்லாம் கெபியில் சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், தாவீது வீட்டைப்பற்றின ஏக்கத்தில், பெத்லகேமிலுள்ள தன் ஊரின் கிணற்றுத் தண்ணீரைக்குறித்து ஆவல்கொண்டு, அந்தத் தண்ணீர் கிடைத்தால் நன்றாய் இருக்குமெனத் தெரிவித்தார். இதினிமித்தம் அவரது உண்மையுள்ள கூட்டாளிகளில் மூன்றுபேர் (இதில் ஒருவர், தாவீதின் சகோதரி மகன் ஆவார்), தாவீதிற்குத் தெரியாமல், ஆபத்தான இந்தப் பிரயாணத்தை மேற்கொண்டார்கள். இரண்டு காரணங்களின்

நிமித்தம் இப்பிரயாணம் ஆபத்தானதாகக் காணப்பட்டது, அவை: (1) இவர்கள் இராஜாவாகிய சவுலினால் நாட்டிலிருந்து விலக்கிவைக்கப்பட்டவர்களாய் இருந்தனர்; (2) அக்காலத்தில் பெத்லகேம் பெலிஸ்தர்களின் கைகளில் காணப்பட்டது; ஆனால் இந்த இடர்களையெல்லாம் பொருட்படுத்தாமல், இந்தத் தைரியமுள்ள புருஷர்கள், தங்கள் தலைவருக்காகத் தாங்கள் கொண்டிருந்த அன்பினையும், உண்மையினையும் வெளிப்படுத்தி, தாவீதினால் விரும்பப்பட்ட அந்தக் கிணற்றிலிருந்து தண்ணீர் மொண்டு, தோல் துருத்தியில் கொண்டுவந்தார்கள்.

அவர்கள் வந்து சேர்ந்து, தண்ணீரைத் தாவீதிடம் கொடுத்தபோது, இவர் அருமையானதொரு இருதய உண்மையினை வெளிப்படுத்தினார். அவர்கள் காண்பித்துள்ள மகா அன்பினையும், அவர்களின் துணிவினையும், அவர்கள் கொண்டு வந்த தண்ணீரையும் தாவீது புகழ்ந்தது மாத்திரமில்லாமல், இன்னுமாக அது மிகவும் விலையேறப்பெற்றது என்றும், மிகப்பெரிய விலைகொடுத்துக் கொண்டுவரப்பட்டுள்ளபடியால், அதைச் சாதாரணமாய்ப் பயன்படுத்தக்கூடாது என்றும் தெரிவித்தார். தாங்கள் அனுபவிக்கின்ற ஆசீர்வாதங்களுக்காகவும், இன்னுமாக இத்தகைய உண்மையுள்ள கூட்டாளிகளின் ஆறுதல் மற்றும் ஆதரவிற்காகவும் கர்த்தருக்கு நன்றி பலியாக, காணிக்கையாக அந்தத் தண்ணீரைத் தாவீது தரையில் ஊற்றினார். இந்த ஒரு செய்கையிலும்கூடத் தாவீதின் மகத்துவமும், கர்த்தருக்கான அவரது பக்தியும், அவரது விசுவாசமும் மீண்டுமாக வெளிப்படுகின்றது! இது இவரைச் சராசரியான எந்த ஒரு மனுஷனைக்காட்டிலும் மேன்மையானவராக, ஒரு மாமனிதராக வெளிப்படுத்துகின்றது.

## இராஜ்யத்தின் வேலைக்காகப் பயிற்றுவித்தல்

இந்த ஒரு காலகட்டத்தில் தாவீதும், அவரது கூட்டாளிகளில் சிலரும் நோப் என்னும் ஸ்தலத்தில் காணப்பட்டனர்; இங்கு அகிமெலேக்கு எனும் ஆசாரியன் தாவீதிற்கு இரக்கம் பாராட்டினார். இதை வேவுகாரர் மூலம் அறிந்துகொண்ட இராஜாவாகிய சவுல், அந்த இடத்திலுள்ள ஆசாரியர்கள் அனைவரையும், அவர்களது வீட்டார் அனைவரையும், மொத்தம் எண்பத்தைந்து பேரையும் கொன்றுபோட்டார். இதினிமித்தம் அகிமெலேக்கின் குமாரர்களில் ஒருவன், ஆசாரியனின் சணல்நூல் ஏபோத்தைத் தரித்து, தாவீதிடம் வந்தார். தீர்க்கத்தரிசிகளில் ஒருவன் தாவீதோடு இணைந்துகொண்டான். இவை அனைத்தும் தாவீதின் ஸ்தானத்தை இன்னும் அதிகமாய் உறுதிப்படுத்தினது. இன்னுமாகச் சவுலை விட்டு, தேவனுடைய தயவானது விலகிவிட்டது என்பதையும் சவுலுக்கு அதிகமாய் உறுதிப்படுத்தியது. எனினும் சவுல் தேவனுக்கும், அவரது தெய்வீக ஏற்பாடுகளுக்கும் எதிராகப் போராடுவதைத் தொடர்ந்துகொண்டே இருந்தார்.

இப்படியாக தாவீதின் படையானது, படிப்படியாக அறுநூறு பேராக அதிகரித்தது; இது அவரது அனுபவங்களையும் அதிகரித்தது; மேலும் அவருக்கு வரவிருந்த வேலைக்கென அவரை நன்கு ஆயத்தமும் பண்ணினது. Bishop Wilberforce-அவர்கள் பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளார்: மனுஷரைப்பற்றி அறிந்துகொள்வதற்கும், அவர்களை ஆளுவதற்கும் தேவையான ஒரு மகா பயிற்சியானது, அந்த நாடு கடத்தப்பட்ட வனாந்தர வாழ்க்கையில் காணப்பட்டது. முழுமையாக கட்டுப்படுத்தும் மேலாதிக்கத்தி னாலேயே, அத்தகைய கட்டுப்பாடற்றவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும். இத்தகையவர்கள் உள்ள ஒரு கூட்டத்திற்குத் தயக்கத்தோடு/வேறு வழியின்றி தலைவனான தாவீது, மனுஷரை ஆளும் இரகசியத்திலும், ஒன்றுக்கொன்று ஒத்திசைவில்லாத இருதயங்களை ஒற்றுமையான உறவிற்குள் ஒன்றிணைக்கும் இரகசியத்திலும் கைத்தேறுவதற்குக் கற்றுக்கொண்டார்.

அவ்வப்போது இராஜாவாகிய சவுல், தாவீதைக் கொன்றுபோடுவதற்கு மனக்கொந்தளிப்பு அடைவார். இப்படியான தருணங்கள் ஒன்றில், தாவீதும், அவரது கூட்டாளிகளும் சவக்கடலின் மேற்கு பகுதியில் காணப்பட்ட தரிசான பாறைகள் மத்தியில் இருந்த குகை ஒன்றில் காணப்பட்டனர்; அநேகம் வீரர்களோடு இராஜாவாகிய சவுல், தாவீதைத் தேடிவந்து, இளைப்பாறுதல் பெற்றுக்கொள்ளதக்கதாக அதே குகைக்குள் பிரவேசித்தார்-இக்குகையில் எவ்வளவு காலம் காணப்பட்டார்கள் என்பதை நாம் அறியோம். Kitto-அவர்கள், இந்தக் குகைகளில் சில, ஆயிரத்து ஐந்நூறு மனுஷருக்கு இடங்கொள்ளும் அளவுக்கு மிகப்பெரியவைகளாகக் காணப்பட்டன என்று நமக்குத் தெரிவிக்கின்றார். இன்னொரு எழுத்தாளர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: என்கேதியிலிருந்து சுமார் இருபது மைல் தொலைவில் காணப்பட்ட இந்தக் குகைகள் ஒன்றில், ஒருமுறை முப்பதாயிரம் பேர் ஒளிந்திருந்தார்களென வழிப்போக்கன் ஒருவன் தெரிவித்தான். இந்தக் குகைகள் நடுராத்திரி போன்று இருட்டாய்க் காணப்படும். உள்ளிருந்து ஒருவரால் வெளிப்புறத்தைத் தெளிவாகப் பார்க்க முடியும், ஆனால் உட்புறத்திலோ ஓர் அடி பார்ப்பது என்பதும் கூடாத காரியமாகும்.

தாவீதும், அவரது கூட்டாளிகளும் குகையின் மிக உள்ளான பகுதியில் காணப்பட்டனர்; சவுலும், அவரது கூட்டத்தாரும் இளைப்பாறும்படிக்குக் குகைக்குள் பிரவேசித்தபோது, சவுல் மாத்திரமாகிலும் கொல்லப்பட வேண்டும் என்று தாவீதின் கூட்டத்தார் விரும்பினார்கள்; சவுல் கொல்லப்பட்டால், தங்கள் சோதனையான அனுபவங்கள் அனைத்தும் முடிவிற்கு வரும் என்றும், இராஜா அதுவரை செய்திருந்த மற்றும் செய்துகொண்டிருந்த தீமைகள் அனைத்திற்கும் நீதியான கைமாறாக, அவரது மரணம் காணப்படும் என்றும் அவர்கள் எண்ணினார்கள். ஆனால் தாவீதோ சம்மதிக்கவில்லை. இதற்குப்பதிலாக, இராஜா தன் பிடிக்குள் இருந்தார் என்பதற்கும், தான் நினைத்திருந்தால் இராஜா கொல்லப்பட்டிருந்திருப்பார் என்பதற்குமான சாட்சியமாகவும், இராஜாவுக்கான தன்னுடைய உண்மைக்குச் சாட்சியமாகவும் காணப்படும்படிக்கு, இராஜாவாகிய சவுலினுடைய வஸ்திரத்தின் ஒரு துண்டை மாத்திரம் தாவீது வெட்டி எடுத்துக்கொண்டார்.

இராஜாவும், அவரது கூட்டத்தாரும் ஒரு குறிப்பிட்ட தொலைவிற்குப் போனபிற்பாடு, ஆபத்து இல்லை எனும் கட்டத்தில், தாவீதும் அவரது கூட்டாளிகளும் தங்களை வெளிப்படுத்தினார்கள்; மேலும் இராஜா அவரது குடிகளின் உண்மையினை புரிந்துகொள்ளவில்லை என்றும், அவரைக் கொன்றுபோட தாங்கள் விரும்பாதபோது, இராஜாவோ தங்களைக் கொன்றுபோட தேடித் திரிகின்றார் என்றும் கூறி, எதிர்ப்பைத் தெரிவித்தனர். சவுலின் மனசாட்சி தொடப்பட்டது. அவரோ: நீ என்னைப்பார்க்கிலும் நீதிமான் என்று கூறி அழுதார். தான் இப்படி இனிமேலும் செய்வதில்லை என்று சவுல் சத்தியம்பண்ணினார்; நாட்டைவிட்டுத் துரத்தப்பட்ட தாவீதை, வேட்டையாடத் திரியும் காரியமானது கொஞ்சக் காலத்திற்கென்று கைவிடப்பட்டது. எனினும் நம்முடைய இப்பாடமானது, இதைப்போன்று பிற்பாடு நடந்த வேறொரு அனுபவத்தையும் தெரிவிக்கின்றது.

இம்முறை தன் சகோதரி மகனோடு மாத்திரம் தாவீது சவுலின் பாளயத்திற்குள் சென்று, அவர் தலைமாட்டில் காணப்பட்ட அவரது ஈட்டியையும், அவரது தண்ணீர்ச் செம்பையும் எடுத்துக்கொண்டு வந்தார். இங்கிருந்து வெளியேறி, கொஞ்சம் தொலைவில், பள்ளத்தாக்கிற்கு எதிரிலுள்ள மலைக்குச் சென்றார்; இங்கு அவரால் சவுலிடமும், அவரது சேனையிடமும் தெளிவாய்க் கேட்கும் விதத்திலும், பாதுகாப்பாயும் பேசமுடியும். சவுலின் போர்ச்சேவகரைவிட, தான் மிகவும் விழிப்போடு இருப்பது மாத்திரமல்லாமல்,

இராஜாவுடைய நலன்களுக்கடுத்த காரியங்களில் தான்தான் மிகவும் உண்மையாய்க் காணப்படுகின்றார் என்பதையும் இராஜாவிற்குத் தாவீது சுட்டிக்காட்டினார்; தன்னிடம் யாரையாவது அனுப்பிவைத்தால், ஈட்டி மற்றும் தண்ணீர்ச் செம்பு இரண்டையும் கொடுத்து அனுப்புவதாகத் தெரிவித்தார்; மேலும் இராஜாவுக்குத் தீங்குசெய்ய வேண்டும் என்ற எண்ணம் தனக்கு இல்லை என்றும், தனது முழுமையான உண்மையினைக்குறித்து இராஜாவுக்குத் தெரியப்படுத்தி, அவரை நம்பவைப்பதற்கென்றும், தன்னைச் சத்துருபோன்று வேட்டையாடத் திரிவது தவறு எனப் புரியவைப்பதற்கென்றும்தான் அவ்விரண்டு பொருட்களையும் எடுத்து வந்ததாகத் தாவீது தெரிவித்தார்.

இப்படி இராஜாவின் பாளயத்திற்குள் ஊடுருவது என்பது இன்று சாத்தியமற்ற காரியமாகும்; காரணம் நவீன கால முறைகளின்படி இன்று காவலாளர்கள், இராணுவ குழுக்கள் முதலானவர்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளனர்; ஆனால் அன்றைய காலங்களில் இப்படியாகக் காணப்படவில்லை; இன்றும்கூடக் கிழக்கத்திய நாடுகளில் இம்மாதிரியான ஏற்பாடுகள் அதிகளவில் இருப்பதில்லை. கிதியோனும், அவரது கூட்டாளிகளும்கூட இதைப்போலவே பாளயத்திற்குள் ஊடுருவினார்கள் என்பதை நினைவுகூருகின்றோம். ஆபிரகாம், ஐந்து இராஜாக்களைத் தேடிச் சென்றபோது, அவர்கள் சரியான பாதுகாவலர்களின் ஏற்பாடுகளின்றி உறங்கிக்கொண்டிருந்தார்கள் எனும் சம்பவத்தையும் நினைவுகூருகின்றோம். கிழக்கத்திய நாட்டின் அனுபவமிக்க ஒரு வழிப்போக்கன் பின்வருமாறு தெரிவித்துள்ளார்: அரேபிய நாட்டவர் களைப்படையும்போது விசேஷமாக, ஆழ்ந்து தூங்குவார்கள். நான் பிரயாணம் செய்கையில், பெரும்பாலும் என்னுடையக முதைஓ ட்டிகளும்,ப ணிவிடைக்காரரும்,ஆ பத்தாய்த்தே தான்றும்இ டங்களைக்க ாவல் காப்பதாகக் கூறுவார்கள்; ஆனால் ஒவ்வொருமுறையும் அவர்கள் உடனடியாகத் தூங்கிவிடுவதையே நான் பார்த்திருக்கின்றேன்; அதுவும் நான் அவர்கள் மத்தியில் நடந்துசென்றால், அவர்கள் விழிக்காமல் தூங்குவது மாத்திரமல்லாமல், அவர்கள் மூடிக்கொள்ளும் போர்வையினைக்கூட எடுத்துக்கொள்ளலாம் எனும் அளவுக்குப் பொதுவாகவே ஆழ்ந்து தூங்கிவிடுவார்கள்.

## நன்மை பயக்கும் ஒரு பாடம்

தனது சத்துருவைக் கொன்றுபோட விரும்பாததற்குக் காரணம், சவுல் தேவனால் அபிஷேகம்பண்ணப்பட்டவர் என்றும், சவுலைத் தாக்குவது என்பது சர்வவல்லவரின் ஏற்பாடுகளைத் தாக்குவதாக இருக்கும் என்றும் தாவீதின் விளக்கம் காணப்பட்டது. மனசாட்சிக்குக் கட்டுப்பட்டவரான தாவீதினால் இப்படித் தாக்க இயலாது. நான் அபிஷேகம்பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், என்னுடைய ஊழியர்களுக்குத் தீங்கு செய்யாமலும் இருங்கள். (சங்கீதம் 105:15)

இந்தக் கொள்கையினை இன்று வாழும் நாமும் மனதில் வைத்துக்கொள்வது நலமாய் இருக்கும். எனினும் இன்றுள்ள இராஜாக்கள், கர்த்தரால் அபிஷேகம்பண்ணபட்டவர்கள் என்று நாம் எண்ணிக்கொள்ளகூடாது. இன்றுள்ள இராஜாக்கள் அவர்களாகவே தங்களை ஏற்படுத்திக்கொண்டவர்கள் ஆவார்கள். இவர்களது இராஜ்யங்கள் இவ்வுலகத்தின் இராஜ்யங்கள் ஆகும். ஆனால் இஸ்ரயேலோ

தேவனுடைய விசேஷத்த இராஜ்யமாகக் காணப்பட்டது; அதை அவர் விசேஷமான உடன்படிக்கை ஏற்பாட்டின்கீழ் அங்கீகரித்திருந்தார். இராஜாவாகிய சவுல் தெய்வீக அதிகாரத்தினால், பரிசுத்த ஆவிக்கு நிழலாய்க் காணப்படும் விசேஷித்த அபிஷேக தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்டார். ***அதே தைலத்தினால் தாவீது அபிஷேகிக்கப்பட்டிருந்தது***, சவுலில் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ள கர்த்தருடைய அபிஷேகத்தின் விஷயத்தில் ***தலையிடுவதற்குரிய உரிமையினைத் தாவீதிற்குக் கொடுப்பதற்காக அல்ல***, மாறாக தாவீது, சவுலை அப்புறப்படுத்துவதன் மூலமாக இல்லாமல், கர்த்தர் தம்முடைய ஏற்றவேளையிலும், ஏற்ற விதத்திலும் தாவீதுக்கு அரியணையைக் கொடுப்பதன் மூலம், சவுலுக்கு அடுத்த இராஜாவாகத் தாவீது காணப்படுவார் என்ற ***“நிச்சயத்தை” தாவீதிற்குக் கொடுப்பதற்கேயாகும்.***

பூமியின் இராஜாக்கள், தாங்கள் மேசியாவின் இராஜ்யத்தினுடைய பிரதிநிதிகளென ஆளுகையும், அரசாட்சியும் செய்கின்றனர் என்று அவர்களது இராஜ்யங்களின் நாணயங்களில் பொறிக்கப்பட்டிருப்பினும், இது தவறு என்பதை நாம் அறிவோம். மேசியாவின் இராஜ்யம் இன்னும் ஸ்தாபிக்கப்படவில்லை. உம்முடைய இராஜ்யம் வருவதாக என்று நாம் இன்னமும் ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கின்றோம்.

## பூமியின் ஐந்து பேரரசுகள்

பூமியிலிருந்து தம்முடைய நிழலான இராஜ்யத்தைத் தேவன் மாற்றிப்போட்டபோது, கடைசி இராஜாவாகிய சிதேக்கியாவிற்கு வந்த செய்தி பின்வருமாறு: பாகையைக் கழற்று, கிரீடத்தை எடுத்துப்போடு; அது இனி முன்போலிராது; தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனைத் தாழ்த்துவேன். அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன் (எசேக்கியேல் 21:26-27). உலகில், திவ்விய ஆளுகையைப் பொறுத்தமட்டில், சிதேக்கியாவின் காலம் முதற்கொண்டு மேசியாவின் ஆயிர வருட இராஜ்யம் வருவதற்கு இடையில், ஓர் இடைப்பட்ட காலம் காணப்படும் என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் எவ்வகையான இராஜ்யத்தை உலகத்தில் தங்களால் ஸ்தாபிக்க முடியும் என்பதைக் காட்டும்படிக்கு, தேவன் புறஜாதிகளுக்கு வாய்ப்பு கொடுத்தார். சிதேக்கியாவின் காலமாகிய கி. மு. 606 முதற்கொண்டு, நான்கு வேறுபட்ட வகையான அரசாங்கங்களைப் பெற்றிருக்கின்றோம்; நான்காவது அரசாங்கம் வஞ்சகமான விதத்தில் உருவெடுத்துள்ளது. இந்த இராஜ்யங்கள் பின்வருமாறு: (1) பாபிலோன், (2) மேதோ-பெர்சியா, (3) கிரேக்க மற்றும் (4) உரோம் ஆகும். ஐரோப்பாவின் தற்போதைய அரசாங்கங்களானது, புதிய உருவத்தின்கீழ் உள்ள உரோம சாம்ராஜ்யமேயாகும். இவர்களது சட்டங்களும், முறைகளும், இலட்சியங்களும் அப்படியே உரோமைப்போன்று காணப்படுகின்றது; ஆனால் ஏமாற்றுகிறவர்களாகவும், ஏமாற்றப்பட்டவர்களாகவும் காணப்படும் இவர்கள், தங்களைக் கிறிஸ்தவ இராஜ்யங்களாக அடையாளம் காட்டிக்கொள்கின்றனர்; மேலும் பொது ஒப்புக்கொள்ளுதலின் பேரில் முழு உலகமும் இவர்களைக் கிறிஸ்தவ மண்டலம், அதாவது கிறிஸ்துவின் இராஜ்யம் என்று அழைக்கப் பழகியும்விட்டனர்.

வேதாகமம் இதை அடையாளம் காட்டியுள்ளது; இந்த அனைத்து அரசாட்சிகளையும் அடையாளம் காட்டும் நிழலான சிலையில், காலில் காணப்பட்டதுபோன்றே, பாதங்களிலும் இரும்பு காணப்பட்டது; எனினும் கல்போன்ற பாதம் என்று காண்பிக்கத்தக்கதாக, அந்த இரும்போடுகூடக் களிமண்ணும் பாதங்களில் இணைந்து காணப்பட்டது; கல் தேவனுடைய இராஜ்யத்திற்குரிய அடையாளமாகும். ஆகையால் இந்த ஐரோப்பா இராஜ்யங்களானது, போர் புரிந்துகொண்டும், கிறிஸ்துவின் ஆவியினை வெளிப்படுத்துவதற்குப்பதிலாக, அப்போஸ்தலனால் மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகள் என்று அழைக்கப்படும் கோபத்தையும், குரோதத்தையும், பொறாமையையும், பகைமையையும், சண்டை சச்சரவுகளையும் வெளிப்படுத்திக்கொண்டும் இருக்கின்றது; இந்த இராஜ்யங்கள் தங்களை மேசியாவின் இராஜ்யங்களென உரிமைப்பாராட்டிக்கொண்டிருக்கின்றன; இவர்களே அந்தச் சிலையின் நிழலில், சீக்கிரத்தில் முழுப்பூமியையும் நிரப்பவிருக்கின்ற கல்லை (இராஜ்யத்தைப்)போன்று, போலி தோற்றத்தில் காணப்படும் சிலையின் (களிமண்) பாதங்களினால் அடையாளப்படுத்திக் காண்பிக்கப்பட்டுள்ளனர். (தானியேல் 2:31-45)

மேசியாவின் இராஜ்யமானது, மனித கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து உருண்டு வந்த கல்லினால் அடையாளம் காட்டப்படுகின்றது; மேலும் சிலையிலுள்ள பாதங்களின் விரல்கள் அடையாளப்படுத்தும் இராஜாக்களின் நாட்களில், கல்லானது சிலையை மோதி, அதைத் தூளாக்கிப்போடும்; பின்னர் அந்தக் கல்லானது பூமியெங்கும் மகா பர்வதமாக அல்லது கர்த்தருடைய இராஜ்யமாக நிரம்பிக் காணப்படும். இந்த நொறுக்கிப் போடுதலானது சமீபத்துள்ளது என்று நாங்கள் நம்புகின்றோம்; ஐரோப்பாவின் தற்போதைய யுத்தங்களானது, ஜாதிகளைப் பலவீனப்படுத்துவதற்கு என்றும், புரட்சியினை சுட்டிக்காட்டும் மகா பூமியதிர்ச்சி எனும் அடுத்தக்கட்ட உபத்திரவத்திற்கு அவர்களை ஆயத்தப்படுத்துவதற்கு என்றும் கர்த்தர் திட்டமிட்டுள்ளார்.

புரட்சிகளைத் தொடர்ந்து உடனடியாக, தற்போதைய ஒழுங்குமுறைகளை/அமைப்புகளை முற்றிலும் அழித்துப்போடும் காரியங்களை அடையாளப்படுத்தும் மகா நிழலான நெருப்பானது கடந்து வரும். இந்த நெருப்பு ஒழுங்கின்மையையும், இன்னுமாக அனைத்து ஆளுகைகளும், அதிகாரங்களும் கவிழ்க்கப்படும் காரியத்தையும் அடையாளப்படுத்துகின்றது. இப்படியாக (ஆளுகை விஷயத்தில்) மனிதனுடைய சிறந்த பிரயாசங்கள் அனைத்தும் போலியானவைகளே என்றும், இறுதியில் அழிவுக்கு நேராக வழிநடத்திவிடும் என்றும் மனிதனே புரிந்துகொள்ளத்தக்கதாகத் தேவன் அனுமதிக்கின்றார். பாடத்தைக் கற்றபின், மனுக்குலம் முழுவதும் மேசியாவின் இராஜ்யத்திற்கு ஆயத்தமாய் இருப்பார்கள்; அப்போது அந்த இராஜ்யம் வரும்; மேலும் அது சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்ட இராஜ்யமாகக் காணப்படும். (ஆகாய் 2:7)

R5673

# இராஜாவாகிய சவுலின் இறுதி யுத்தம்
## 1 சாமுயேல் 28

யேகோவா என் பெலனும், என் கேடகமுமாயிருக்கிறார்; என் இருதயம் அவரை நம்பியிருந்தது; நான் சகாயம் பெற்றேன். - சங்கீதம் 28:7

இஸ்ரயேலின் வரலாற்றிலும், தேவனுடைய பிரியமான தாவீதின் அனுபவங்களிலுமுள்ள ஒரு சுவாரசியமான காலப்பகுதியை நாம் இன்று ஆராயப்போகின்றோம். இராஜாவாகிய சவுல் கொடுத்த துன்பங்களினாலும், அவர் தேடி துரத்துவதினாலும், தாவீதுக்குப் பாதுகாப்பான இடம் இல்லாமற்போயிற்று. பெலிஸ்தர்கள் தாவீதைச் சத்துருவாகக் கருதுவதற்குப்பதிலாக, நண்பனாகக் கருதி தாவீதுக்கும், அவருடன் இருப்பவர்களுக்கும் சிக்லாக் என்னும் பட்டணத்தைக் கொடுத்தார்கள். தாவீது இங்கே தங்கியிருந்து அமலேக்கியரை கைப்பற்றினாரே ஒழிய, இஸ்ரயேலர்களுக்கு எதிராக போர்தொடுக்கவில்லை. (மற்ற) ஜனங்களின் பொல்லாப்பினிமித்தம், அப்பொல்லாப்பு நிறைவடையும்போது அவர்கள் அழிக்கப்படுவார்கள் எனக் கர்த்தர் கூறியுள்ள ஜனங்களுக்கு எதிராக யுத்தம் பண்ணுவதற்கான உரிமை தாவீதுக்கு இருப்பினும், அவரால் கர்த்தருடைய ஜனங்களுக்கு எதிராக விருப்பத்துடன் யுத்தம் மேற்கொள்ள முடியவில்லை.

இதற்கிடையில் சவுலின் ஆளுகைக்குரிய முடிவும் நெருங்கினது. பெலிஸ்தரிடமிருந்து புது தாக்குதல் வந்தது. இதன் முடிவைக்குறித்துச் சவுல் ஐயம் கொண்டிருந்தார். (ஆரம்பத்தில்) தெய்வீக ஒழுங்குகளுக்கு இசைவாக வாழ்ந்த இராஜாவாகிய இவர், அஞ்சனக்காரிகள், அஞ்சனக்காரர் அனைவரையும், மரித்தவரோடு தொடர்பு வைத்திருக்கிறோம் என்று கூறின அனைவரையும் இஸ்ரயேல் தேசத்தைவிட்டுப் புறப்படுமாறு கட்டளையிட்டிருந்தார். எனினும், சிலர் இங்கொன்றாய், அங்கொன்றாய்க் காணப்பட்டார்கள். சவுலின் இயலாமையான காலகட்டங்களில், கர்த்தர் அவருக்குப் பதில் கொடுக்காதபோது, அவர் எந்தோரின் அஞ்சனக்காரியிடம் சென்றார். இவள் இராஜாவின் பிரதான தளபதியாகிய அப்னேரின் தாய் என்று சிலரால் கருதப்படுகின்றாள்.

அஞ்சனம் பார்த்துக் கூறினால், தனக்கு எவ்வித பாதிப்பும் நேராது என்று அஞ்சனக்காரிக்கு உறுதி அளிக்கப்பட்ட பின்னர், இறந்தவர்களின் ஆவி என (இன்றுள்ள ஆவியுலகத் தொடர்பாளர்கள் எண்ணுவதுபோல்) இவளும் எண்ணியிருந்த, விழுந்துபோன ஆவிகளுடன் தொடர்புக்குள் சென்றாள். தான் சாமுயேலை அழைத்ததாக இவள் சந்தேகத்திற்கு இடமின்றி உண்மையாகவே நம்பினாள். ஆனால் வேதமோ, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள் என்றே கூறுகின்றது (பிரசங்கி 9:5). சாமுயேல் தனது பிதாக்களோடு நித்திரைபண்ணி, உயிர்த்தெழுதலின் காலைக்காக காத்திருந்தார். அவரால் ஆலோசனை கொடுக்க முடியாது. என்ன நடந்துகொண்டிருக்கின்றது என்பதைக்கூட அவரால் அறிந்துகொள்ள முடியாது.

பொல்லாத ஆவிகள் அன்றும், இன்றும் ஆவியுலகத் தொடர்பாளர்கள் (mediums) வாயிலாக, மரித்தவர்கள்போன்று ஆள்மாறாட்டம் செய்து, தங்களுடைய மேலான அறிவின்மூலம் மரித்தவர்களுக்குப்

பதிலாக வந்து பேசுகிறார்கள். இந்தச் சம்பவத்தில் கேள்வி கேட்கப்பட்டபோது, நாளை யுத்தத்தில் இராஜா தோற்பார் எனவும், அவரும், அவருடைய குமாரர்களும் வெட்டப்படுவார்கள் எனவும் கூறப்பட்டது.

நம்முடைய இனத்தின் விஷயங்களை எப்படி விழுந்துபோன தூதர்கள் அறிந்திருந்தார்கள் என்று நமக்குத் தெரியவில்லை. ஆனால் இவர்களோடு தொடர்பு வைத்துக்கொள்வது சரியல்ல என்பதையும், அதைச் செய்யக்கூடாது எனக் கர்த்தர் கட்டளையிட்டுள்ளார் என்பதையும் நாம் அறிவோம். இவர்களுடைய முக்கிய நோக்கம், ஜனங்களை வஞ்சிப்பதாகும். பரிசுத்தவானாகிய பவுலைப் பொருத்தமட்டில், இவர்கள் சொப்பனங்கள் வாயிலாகவும், வெளிப்படுத்தல்கள் வாயிலாகவும், சபைக்குள் அநேக பேய்களின் உபதேசங்களைக் கொண்டுவந்துள்ளனர். (1 தீமோத்தேயு 4:1) செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளத்தைலத்தை நாறி கெட்டுப்போகப் பண்ணுகிறதுபோல, இவர்கள் விசுவாசங்களைக் கெடுத்தார்கள். (பிரசங்கி 10:1)

மரித்தவர்கள் இறந்துவிட்டனர் எனவும், அவர்களால் எவ்வித விஷயங்களையும் தெரிவிக்க முடியாது எனவும், அவர்களால் சந்தோஷப்பட முடியாது எனவும், துக்கப்பட முடியாது எனவும், மாறாக அவர்கள் செயலிழந்த நிலையில் காணப்படுபவர்களாக இருந்து, கல்வாரியில் செலுத்தப்பட்ட ஈடுபலியின் விளைவாக, சகலருக்கும் தேவனுடைய மகிமை குறித்த அறிவை மேசியா கொண்டுவரும் மேலான நாளினுடைய, விடியலுக்காக காத்திருக்கின்றார்கள் எனவும் வேதம் மிகவும் தெளிவாகப் போதிக்கின்ற விஷயங்களை ஜனங்கள் உணர்ந்துகொண்டால், எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும். மரித்தவர்கள் உயிரோடு இருக்கும்போது இருந்ததைவிட, இப்பொழுதே அவர்கள் அதிகமாக உயிரோடு இருக்கின்றார்கள் என்ற போதனை, கர்த்தருடைய வார்த்தைகளுக்கு எதிரானவைகளாகும். மேலும் இது, கிறிஸ்தவ ஜனங்களைச் சிந்திக்க வைக்காதபடிக்கு அடக்கி வைத்துள்ள பல்வேறு வருத்தத்திற்குரிய தப்பறைகளுக்கு அஸ்திபாரமாகவும் இருக்கின்றது. தங்களுடைய மரித்த நண்பர்கள் உயிர்த்தெழுதலின் விடியல்வரை நித்திரை பண்ணிக்கொண்டிருக்கின்றார்கள் என ஜனங்கள் அறிந்துகொண்டால், எவரும் மரித்தவர்களுக்காக ஜெபம் பண்ணமாட்டார்கள் அல்லது அவர்களை உத்தரிக்கும் ஸ்தலத்திலிருந்து விடுவிக்கும்படி பூசையும் பண்ணமாட்டார்கள்.

மரித்தவர்கள் உயிரோடிருக்கின்றார்கள் என்ற இந்தக் கோட்பாடு, தேவனுக்கு எதிரான கடும் தூஷணங்களின் அஸ்திபாரமாக, சகல பிரிவுகளிலுள்ள விசுவாசப்பிரமாணங்களில் காணப்படுவதே மிகவும் சீர்கேடான விஷயமாகும். இவை தேவனுடைய குணலட்சணம் மற்றும் திட்டத்திற்கு எதிரான தூஷணங்களாகவே இருக்கின்றன; மேலும் இத்தூஷணங்கள், நன்மையான எந்த ஈவுகளும், பூரணமான எந்த வரங்களும் பரத்திலிருந்துண்டாகி, யாரிடமிருந்து இறங்கிவருகின்றதோ, அந்த இரக்கங்களின் பிதாவுடைய குணங்களுக்கும், அதாவது சகல கிருபை பொருந்தின தேவனுடைய குணங்களுக்கும், பண்புகளுக்கும் தூரமானதாகக் காணப்படுகின்றன; இம்மாதிரியான தூஷணங்கள் பிசாசுகள்மீது சுமத்தப்பட்டால், அவைகளுக்கும்கூட இது அவமதிப்பானவையாகக் காணப்படும்.

(இக்கட்டுரையின் தொடர்ச்சி, பக்கம்:141)

R754

# ஆவியுலகத் தொடர்பு பற்றிய கோட்பாடு குறித்த ஆராய்ச்சி

அஞ்சனம் பார்க்கிறவர்களை நாடி, குறிசொல்லுகிறவர்களைத் தேடாதிருங்கள்; அவர்களாலே தீட்டுப்பட வேண்டாம். - லேவியராகமம் 19:31

தன் மகனையாவது தன் மகளையாவது தீக்கடக்கப்பண்ணுகிறவனும், குறிசொல்லுகிறவனும், நாள்பார்க்கிறவனும், அஞ்சனம்பார்க்கிறவனும், சூனியக்காரனும், மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாயவித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்க வேண்டாம். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்; இப்படிப்பட்ட அருவருப்புகளின் நிமித்தம் உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை (தேசங்களிலிருந்து) உன் முன்னின்று துரத்திவிடுகிறார். - உபாகமம் 18:10 - 12

மரித்தவர்கள் வேறொரு மண்டலத்தில் அல்லது நிலைமையில் ஜீவனோடு இருக்கின்றார்கள் என்ற நம்பிக்கை என்பது புதிதான ஒன்றல்ல. இது பூர்வ கால ஜனங்களுடைய மதங்களின் ஒரு பாகமாகவும், சகல புராணங்களின் வேராகவும் காணப்படுகின்றது. இதன் காரணமாக, மரித்தோர் உலகில் உயிரோடு வாழ்ந்துகொண்டிருப்பவர்களுடன் உரையாட முடியும் மற்றும் உரையாடினார்கள் என்ற நம்பிக்கை சரியென்று, இன்றுபோல் அன்றும் பார்க்கப்பட்டது.

உண்மைபோல் தோன்றுகின்றதும், தவறான புரிந்துகொள்ளுதலிலிருந்து உருவானதுமான ***இந்தக் கருத்தானது***, மனுஷருடைய உடலிலிருந்து பிரிந்துபோன ஆவிகள் என்ற தோற்றத்தில், பிசாசுகளினால் செய்யப்பட்டு வந்த ***வஞ்சனைகளுக்கு மறைவிடத்தையும், வலிமையினையும் கொடுத்தது.*** (இவைகள் பற்றின உண்மைகளானது வேதவாக்கியங்களில் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன). இப்படியாகத் தங்கள் அடையாளத்தை இவர்கள் குதூகலமாய் மறைத்துக்கொண்டனர்; மேலும் இப்படியாக அநேகருடைய மனங்களையும், ஜீவியங்களையும் இவர்கள் தொடர்ந்து ஆண்டுகொண்டு வருகின்றனர்.

ஆவிகளோடு இப்படி நெருங்கிப் பழகுவதை அல்லது அறிமுகமாகிக்கொள்வதை, இழிவான அருவருப்பாக தேவன் கருதுகின்றார்; மேலும் (ஆவியுலகத் தொடர்பாளர்கள் வாயிலாக) இதில் ஈடுபடுபவர்களுக்கும், ஆவிகளிடம் குறிகேட்பவர்களுக்கும் மரணம் அளிக்கப்படும் என்று அச்சுறுத்தலும் கொடுத்துள்ளார்.

ஆவிகளிடம் குறிகேட்கும் காரியமானது, கானான் தேசத்தில் குடியிருந்த அந்நிய ஜனங்களினால் பெரிய அளவில் ஆசரிக்கப்பட்டு வந்தது என்பது உறுதியே. ஆவியுலகத் தொடர்பு பற்றிய கோட்பாட்டிற்கு எதிராக ஆர்த்தடாக்ஸ்/orthodoxy என்பவர்கள், எதிர்ப்பது போன்ற ஒரு வலுவற்ற போலி தோற்றத்தைக் காண்பித்துக் கொள்கின்றனர். அக்கோட்பாட்டினைச் சமாளிக்க, ஆர்த்தடாக்ஸ் கருத்துகளானது, உண்மையில் வல்லமையற்று காணப்பட்டது. ஏனெனில் ஆர்த்தடாக்ஸ் கருத்துகளானது ஆவியுலகத் தொடர்பு பற்றிய கோட்பாட்டை ஊக்குவித்துப் பலப்படுத்துகின்றது. இது Allegheny-யின் Rev. W. J. Robinson-அவர்களால் கொடுக்கப்பட்ட பிரசங்கத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. நவம்பர் மூன்றாம் தேதி 1884-ஆம் வருடத்தின் Pittsburg Dispatch -பத்திரிக்கையின் பின்வரும் பத்திகளைக் கீழே மேற்கோளிடுகின்றோம்:

## நவீன கால ஆன்மீகம்

“Allegheny-யில் உள்ள First United Presbyterian சபையில் நேற்று மாலை வழக்கத்திற்கு மாறாக, பெரியதொரு கூட்டம் கூடிவந்திருந்தது; அந்தச் சபையின் போதகராகிய Rev. W. J. Robinson D. D அவர்களால் கொடுக்கப்படவிருந்த நவீன கால ஆன்மீகம் என்னும் சுவாரசியமான மற்றும் அறிவுரைகள் நிறைந்த செய்தியைக் கேட்கும்படிக்குக் கூடிவந்திருந்தார்கள். இவர் தெரிந்துகொண்ட ஆதார வசனம்: அவர்கள் மோசேக்கும் தீர்க்கத்தரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும் நம்பமாட்டார்கள் (லூக்கா 16:31). செய்தியைத் துவங்குகையில், வேதவாக்கியங்களில் தேவனுடைய வார்த்தைகளால் ஏற்கெனவே வெளிப்படுத்தப்பட்டவைகளுக்கு அதிகமாக எதுவும் சொல்ல முடியாது என்பதால், எந்த ஓர் ஆத்துமாவும் ஆவியின் தேசத்திலிருந்து திரும்பிவருவதற்குரிய எந்தத் தேவையினையும் தான் காணவில்லை என்று கூறினார். மகனுடைய ஆவியைக்குறித்து இராஜாவாகிய தாவீது பேசின வார்த்தைகளைக் குறிப்பிட்டார்; நான் அதினிடத்துக்குப் போவேனே அல்லாமல், அது என்னிடத்துக்குத் திரும்பி வரப்போகிறது இல்லை (2 சாமுயேல் 12:23). மனுஷன் படுத்துக்கிடக்கிறான், வானங்கள் ஒழிந்துபோகுமளவும் எழுந்திருக்கிறதும் இல்லை, நித்திரை தெளிந்து விழிக்கிறதும் இல்லை என்று யோபு கூறின வார்த்தைகளையும் குறிப்பிட்டார் (யோபு 14:12). மூன்று தருணங்களில், ஆவியின் தேசத்திலிருந்து ஆன்மாக்கள் திரும்பியுள்ளதாக வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இயேசு தம் சீஷர்களில் மூவரைக் கூட்டிக்கொண்டு மலைக்குச் சென்றபோது, அவர்கள் தூங்கி, பின்னர் எழும்பினபோது மோசே மற்றும் எலியாவைக் கண்ட காரியம், முதல் சம்பவம் என்று கூறினார். இராஜாவாகிய சவுலுக்குச் சாமுயேல் தோன்றி, மறுநாள் சம்பவிக்கப்போகும் அவரது மரணத்தை முன்னறிவித்து, தாவீதின் ஆளுகை இனிமேல் காணப்படும் என்று அறிவித்த காரியம் இரண்டாம் சம்பவம் என்று கூறினார். லாசருவைத் துன்புறுத்தி, ஜீவியத்தின் தேவைகள் பற்றின அவரது மன்றாட்டுகளுக்குச் செவிசாய்க்க மறுத்த ஐசுவரியவானின் திரும்பிவருதல் மூன்றாம் சம்பவம் என்று கூறினார்.

பின்னும் அவர்: சாமுயேலின் வருகைக்கான அவசியம் இல்லாமல் இருந்தது, காரணம் சவுல் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் காணப்பட்டதின் நிமித்தமும், தன்னுடைய துணிகரத்தின் நிமித்தமும் தனக்கு என்ன நேரப்போகின்றது என்பதை நன்கு அறிந்திருந்தார்; மேலும் ஏற்கெனவே தெரியப்படுத்தப்பட்டிருக்கின்ற காரியங்களை மட்டுமே தன்னால் கூறமுடியும் என்பதால், சவுல் தன்னிடம் விசாரிக்க வந்ததில் எந்தப் பிரயோஜனமும் இல்லை என்று சொல்லி மனுஷருக்குப் புரியவைப்பதற்காகவே சாமுயேல் வந்தார் என்பது உறுதி. மோசே பல வருடங்களுக்கு முன்னதாகவே மரித்துவிட்டார். எலியா நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னதாகவே வேறு உலகத்திற்குக் கடந்துபோய்விட்டார். நரகத்தின் சித்திரவதைக்குறித்து ஐசுவரியவானின் செய்தி காணப்பட்டது; இதை நாம் அனைவருமே கேட்டிருக்கின்றோம். பூமியில் இருக்கும்போது மனந்திரும்புவது மாத்திரமே ஆத்துமாவை இரட்சிக்கும் என்றும், நரகத்தில் மனந்திரும்புவது கூடாதகாரியம் என்றும் ஐசுவரியவான் தெரிவித்தார். இக்கருத்தும்கூட வேதவாக்கியங்கள் வாசிக்கப்படுகையில் அல்லது விளக்கப்படுகையில் அனைவராலும் கேட்கப்பட்ட கருத்தாகவே இருக்கின்றது. (ஆவியுலகிலிருந்து) திரும்பிவந்தவர்கள் அனைவரும், தேவன் மனுஷனுடைய கண்கள் மற்றும் மனங்களுக்கு முன்பு எப்போதும் முன்வைத்த உண்மைகளையே செய்திகளாகக் கொண்டுவந்தனர் மற்றும் அறிவித்தனர். ஆனால் இந்த வேதாகமப் பதிவுகளுக்கும், இன்று ஆவியாக திரும்பவருபவர்களுக்கும் எவ்வளவு வித்தியாசம் காணப்படுகின்றது. அனைத்து காலப்பகுதிகளிலுமே ஒரே

ஒருவர் (சாமுயேல்) மட்டுமே, அழைப்பு விடுக்கப்பட்டு, அதற்கு இணங்கிவந்து தோன்றினார். பூர்வ காலங்களில் ஆவியாக திரும்பிவந்தவர்கள், சத்தியத்தின் செய்தியைக் கூறும் சத்தங்களாக வெளிப்பட்டனர்; ஆனால் இன்று ஆவியாகத் திரும்பிவருபவர்கள் தட்டும் ஓசைகளினால் தங்களை வெளிப்படுத்துகின்றனர்; இப்படி ஓசை கேட்டால், ஆவியுலகத்தினின்று ஆவி வந்துள்ளது சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது. வேதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள, ஆவிகள் அறிவித்த செய்திகள், சத்தியங்களாக இருந்தன; ஆனால் இன்றைய காலங்களில் பேசுகின்ற ஆவியானது, ஏதோ முணுமுணுக்கின்றது; அதுவும் இந்த ஆவிகள் எவைகளைக் கற்றறிந்திருந்தாலும், இப்போது அவைகளின் முந்தைய அறிவை/புலன்களை இழந்துள்ளன. அவைகள் அர்த்தமின்றி பேசி உளறுகின்றன. சத்தியம் மற்றும் அசத்தியத்திற்கும், வெளிச்சம் மற்றும் இருளுக்கும் இடையில் வித்தியாசம் காணப்படுகின்றன. மனுஷர் அனைவரும் அறிய வேண்டிய காரியங்களை வேதாகமம் பெற்றிருக்கின்றன; மரித்தோரின் சாட்சியமும் காணப்படுகின்றது. இப்போதோ மரித்தோர் நம்மிடம் திரும்பிவராதிருக்க, நாம் குறிகேட்பதற்கென்று வேகவேகமாக அவர்களிடம்போய் நின்றுகொண்டிருக்கின்றோம். இந்த உலகத்தையும், உங்கள் வேதாகமத்தையும் ஆராய்ந்துபாருங்கள்; இனிவரும் உலகத்திற்காக ஆயத்தமாகிக்கொள்ளுங்கள். இவையே அந்தப் போதகருடைய செய்தியின் இறுதி வார்த்தைகளாகக் காணப்பட்டன.

மேலே கூறப்பட்டுள்ள இவ்வார்த்தைகளானது, மரித்தோரின் நிலை மற்றும் இருப்பிடம் குறித்த ஆர்த்தடாக்ஸின் கண்ணோட்டமாகக் கருதப்படலாம்.

ஒரே ஒருவர் மட்டுமே அழைப்பிற்கு இணங்கி, வந்து தோன்றினார் என்று Rev. ராபின்சன் அவர்கள் கூறியுள்ளார்; ஆனால் ஒருவர் மட்டும்தான் என்றால் ஏன் அநேகரில்லை? மேலும் குறிப்பிடப்பட்டிருக்கும் அந்த ஒருவர், தேவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரனாகிய சாமுயேல் ஆவார். ஒருவேளை இதுவே உண்மையாக இருக்குமானால், பின்னர் தேவனுடைய நீதியுள்ள ஊழியக்காரன் பொல்லாத ஆவியுலகத் தொடர்பாளர்களுடைய கட்டுப்பாட்டின்கீழ்க் காணப்பட்டார் என்று கூறவேண்டியிருக்கும்; இன்னுமாகத் தேவனுடைய ஊழியக்காரர் அனைவருமே சந்தேகத்திற்கிடமின்றி இதே பொல்லாத ஆவிகளுடைய கட்டுப்பாட்டின்கீழ்க் காணப்படுகின்றார்கள் என்றும் கூறவேண்டியிருக்கும்; மேலும், தேவ சித்தத்திற்கு எதிரான இந்த அருவருப்பினின்று சாமுயேலைப் பாதுகாப்பதற்கு மகா தேவன் வல்லமையற்றவராக இருப்பாரானால், இருளின் அதிகாரங்களினின்று பாதுகாக்கப்படும்படிக்கு எந்தத் தேவபிள்ளைதான் எதிர்பார்ப்பு கொண்டிருக்க முடியும்? தேவன் மற்றும் அவரது வார்த்தைகள் குறித்த இத்தகைய கண்மூடித்தனமான மற்றும் தவறான வழிகாட்டுதலின் பேரில் வந்த கண்ணோட்டங்களுக்கு எதிராக எங்களது கோபத்தையும், வெறுப்பையும் வெளிப்படுத்துவதற்கு எங்களால் சரியான வார்த்தைகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. உயர் ஸ்தானங்களில் காணப்படும் போதகர்கள், தேவனுடைய வார்த்தைகளைத் தவறாய் மேற்கோளிடும்போதும், அப்பட்டமாய் முரணாய்ப் பேசும்போதும், ஆவியுலகத் தொடர்புபற்றிய கோட்பாடு பரவிக்கொண்டிருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர்முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது. செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்; நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே. மரணத்தில் உம்மை நினைவுகூருவதில்லை, பாதாளத்தில் உம்மைத்

துதிப்பவன் யார்? என்று தேவனுடைய வார்த்தைகள் தெரிவிக்கின்றன (பிரசங்கி 9:5, 10; சங்கீதம் 6:5). ஒன்றில் ஆர்த்தடாக்ஸ் கோட்பாடுகளும், உரோம கோட்பாடுகளும் மற்றும் ஆவியுலகத் தொடர்புபற்றிய கோட்பாடுகளும் உண்மையானவையாகவும், இன்னுமாக ஜீவனுள்ளோரின் பண்புகளும்/இயல்புகளும், உணர்வுகளும் மரித்தோரிடம் காணப்படுகின்றது எனும் கூற்றுகள் உண்மையானவையாகவும், தேவனுடைய வார்த்தைகள் பொய்யானவையாகவும் காணப்பட வேண்டும்; இல்லையேல், மரித்தோர் எதுவும் அறியார்கள் எனும் தேவனுடைய வார்த்தைகள் உண்மையானவையாகவும், மனிதனால் ஏற்படுத்தப்பட்ட இந்த அமைப்புகள் பொய்யாய்ப் போதிக்கிறதாகவும் காணப்பட வேண்டும். இரண்டும் சரி என்ற மத்திய நிலை இருக்க முடியாது. நாம் இதில் ஏதோ ஒன்றை மறுத்தாக வேண்டும்.

ஒருவேளை முனைவர் ராபின்சன் அவர்கள், யோபு புத்தகத்திலிருந்து சரியாய் மேற்கோளிட்டிருப் பாரானால், அவர் தன் சொந்த வாதத்தைச் சரிசெய்திருந்திருப்பார்.

மனுஷனோவென்றால் செத்தபின் ஒழிந்துபோகிறான்; மனுபுத்திரன் ஜீவித்துப்போனபின் (gasps out-expires - Young) அவன் எங்கே? தண்ணீர் ஏரியிலிருந்து வடிந்து, வெள்ளம் வற்றிச் சுவறிப்போகிறதுபோல, மனுஷன் படுத்துக்கிடக்கிறான், வானங்கள் ஒழிந்து போகுமளவும் எழுந்திருக்கிறதும் இல்லை, நித்திரை தெளிந்து விழிக்கிறதும் இல்லை என்று யோபு கூறியுள்ளார். (யோபு 14:10-12)

இதைவிட மிக எளிமையாக தெரிவிக்கப்பட முடியுமா? இது (மரணத்தில்) ஜீவன் சம்பந்தப்பட்ட அனைத்தும் இல்லாமல்போவதைச் சுட்டிக்காட்டுகின்றது - அதாவது ஞானம், அறிவு, கிரியை, வித்தை, ஞாபகங்கள் அல்லது நன்றிசெலுத்துதல் அனைத்துமே இல்லாமல் போய்விடுகின்றது. யாருமே மரணத்தின் தண்டனையினின்று தப்பித்துக்கொள்ள முடியாது. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கின்றனர். எந்த மனுஷனாலும் தன் ஆத்துமாவை மரணத்தின் வல்லமையினின்று விடுவித்துக்கொள்ள முடியாது. மனுஷன் ஜீவனுள்ளோரின் தேசத்தினின்று அறுப்புண்டு போகப்பட்டுள்ளான் - ஜீவன் முழுவதும் தற்போதைக்குத் துண்டிக்கப்பட்டுள்ளது எனும் காரியமானது, மனுஷனோவென்றால் செத்தபின் ஒழிந்துபோகிறான்; மனுபுத்திரன் ஜீவித்துப்போனபின் அவன் எங்கே? (யோபு 14:10) எனும் வார்த்தைகள் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது; இவ்வார்த்தைகளானது, அவன் மரித்தப்பின், அவன் இல்லாதே போகிறான் என்று சுட்டிக்காண்பிக்கின்றது; உயிர்த்தெழுதல் மூலம் அவன் தேவனுடைய திட்டத்தில் ஓர் இடத்தைப் பெறுவானேயன்றி, மற்றபடி மரித்தப்பின், மனிதன் இல்லாதே போகின்றான்.

பாவத்தின் சம்பளம் மரணமாகும் - ஜீவனற்றுப் போகுதலாகும். இதிலிருந்து தப்பிக்க இயலாது; இதிலிருந்து வெளியே எழுந்து வருவதற்கு எந்த வாய்ப்புகளும் இல்லை; இக்காரியமானது சந்தேகத்திற்கு இடமின்றி வேதவாக்கியங்களால் நிரூபிக்கப்பட்டுள்ளது; மேலும் இக்காரியத்திற்கு, எழுந்திருக்கிறதும் இல்லை, விழிக்கிறதும் இல்லை எனும் வார்த்தைகளினால் மிகுந்த அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது; எனினும் வானங்கள் ஒழிந்துபோகுமளவும் எனும் வார்த்தைகள் மூலம், அதாவது புதிய யுகம் அறிமுகப்படுத்தப்படுவதன் மூலம், நியமிக்கப்பட்ட காலங்களில் மரித்தோரின் எழுந்திருத்தல் அல்லது உயிர்த்தெழுதல் சம்பவிக்கும் என்றும் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது; தற்போதைய யுகமானது அசைக்கப்பட்டு, மாற்றிப்போடப்படும் என்று இயேசுவினாலும், பவுலினாலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (மத்தேயு 24:29; எபிரெயர் 12:26-27). தேவனுடைய வார்த்தைகளுக்கு விதிவிலக்கு என்பது இல்லை என்பதால், மரித்துப்போன மனுஷரோடு தொடர்புகொள்ளலாம் எனும் கூற்று ஒரு வஞ்சனை என்பது உறுதியே. ஆவியுலகத் தொடர்பு பரிமாற்றத்தில் நடைபெற்றுள்ள வஞ்சனையானது மிகவும்

அருவருப்பானதாகும்; ஏனெனில் இங்கு மனுஷரோடு இல்லாமல், மாறாக பிசாசுகளுடன் தொடர்புகொள்ளப்பட்டிருக்கின்றது. இதற்குத் தேவனுடைய வார்த்தைகளில் அநேகம் நிரூபணங்கள் இருக்கின்றன. பாரம்பரிய ஆர்த்தடாக்ஸ் கோட்பாடுகள் இந்த அருவருப்பை எதிர்க்க திராணியற்றுக் காணப்படுகின்றது, ஏனெனில் மரணம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் இப்பாரம்பரிய சபையானது, தவறான கொள்கைகளைப் பின்பற்றிக்கொண்டிருக்கின்றது; மேலும் இதற்கு எதிர்மாறான கருத்தைத் தெரிவிக்கும் தேவனுடைய வார்த்தைகளின் சாட்சியைத் துணிந்து புறக்கணிக்கவும் செய்கின்றது.

நவீன கால ஆவியுலகத் தொடர்புபற்றிய கொள்கையைப் பெற்றிருக்கும் ஆவியுலக மத்தியஸ்தர்கள், பூர்வ காலத்தில் அஞ்சனம் பார்த்தவர்களுக்கு ஒத்தவர்களாகக் காணப்படுகின்றனர்; இவர்கள் சூனியக்காரிகள் மற்றும் குறிசொல்லுகிறவர்கள் எனும் பெயரில், இப்போதுபோல, அப்போதும் இறந்துபோனவர்களின் ஆவியைக் கொண்டுவருவதற்கும், அந்த ஆவிகளோடு தொடர்புகொள் வதற்குமான வல்லமை தங்களுக்கு இருப்பதாக உரிமை பாராட்டிக்கொண்டவர்களாய்க் காணப்பட்டனர். இது சவுலின் வேண்டுகோளுக்கு எந்தோரின் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ கொடுத்த பதிலில் காண்பிக்கப்பட்டுள்ளது; அப்பொழுது அந்த ஸ்திரீ: உமக்கு நான் யாரை எழும்பிவரப்பண்ண வேண்டும் என்பதற்கு, அவன் சாமுயேலை எழும்பிவரப்பண்ண வேண்டும் என்றான் (1 சாமுயேல் 28:11). அவள் கூப்பிட்டபோது சாமுயேல்போல் வந்த அதே ஆவிகள், ஜீவித்துக்கொண்டிருக்கும் மனுஷர்களின் மரித்துப்போன நண்பர்கள்போன்று ***இன்றும்*** வருகின்றன. ஒருவேளை முனைவர் ராபின்சன் அவர்கள் கூறுவதுபோன்று, இந்த ஆவிகள் சத்தியத்தைத்தான் கூறினது என்றால், இன்னுமாகப் பாரம்பரிய கோட்பாடுகள் சரியானது என்றால், அடுத்தநாள் பொல்லாங்கான சவுல், நீதிமானான சாமுயேலோடுகூடக் காணப்பட்டிருந்திருக்க வேண்டும்.

ஒருவேளை அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்தில் குறிகேட்பது என்பது அஞ்சனம் பார்க்கிறவர்களை நாடி, குறிசொல்லுகிறவர்களைத் தேடாதிருங்கள்; அவர்களாலே தீட்டுப்படவேண்டாம் என்று இடம்பெற்றுள்ள தேவனுடைய கட்டளைக்கு முரணானதாக இருக்குமானால், இக்காரியத்தைப் பொல்லாப்பு என்று கண்டனம்பண்ணியுள்ள தேவனுடைய தீர்க்கத்தரிசியானவர் இப்பொழுது மரித்துப்போயிருக்க, எப்படி இந்தப் பொல்லாப்பில் பங்கெடுப்பார்? (லேவியராகமம் 19:31). சாமுயேல் விரும்பி வந்தாரோ அல்லது விருப்பமில்லாமல் வந்தாரோ, எப்படியாக இருப்பினும், அவர்தான் (ஆவியாக) வந்திருக்கின்றார் என்றால், மரணதண்டனைக்குத் தீர்க்கப்பட்டுள்ள (சவுல்) ஒருவர் மீது இப்படி இரக்கம்பாராட்டி, சவுலோடு உரையாடின காரணத்தினால், அந்தகார வல்லமைக்குக் கீழ்ப்பட்டவராகிவிடுவார்.

ஒருவேளை வந்தது சாமுயேல் இல்லை என்றால், பின்னர் வந்தது யார்? ஒரு தீய ஆவியே, அதாவது பொய்யுரைக்கும் ஆவியே சாமுயேல் என்று ஆள்மாறாட்டம் பண்ணி வந்துள்ளது என்று நாங்கள் பதிலுரைக்கின்றோம்.

மனுக்குலத்தைத் தங்களது தீய கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவருவதற்குரிய எந்த ஒரு வாய்ப்புகளையும் இந்தப் பொல்லாத ஆவிகள் பயன்படுத்திக் கொள்கின்றனர்; இவர்கள் தங்களோடு தொடர்புகொள்பவர்களிடம், தங்கள் அடையாளத்தை மறைத்துக்கொள்வதன் மூலம் ஏமாற்றுகின்றனர். தன் மகனையாவது தன் மகளையாவது தீக்கடக்கப்பண்ணுகிறவனும், குறிசொல்லுகிறவனும், நாள் பார்க்கிறவனும், அஞ்ஞனம் பார்க்கிறவனும், சூனியக்காரனும், மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாயவித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம்.

இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்; இப்படிப்பட்ட அருவருப்புகளின் நிமித்தம் உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை (கானானில் முன்பு காணப்பட்டிருந்த ஜாதிகள் - இவர்களின் பாவங்களையே இஸ்ரயேலின் இராஜா பின்பற்றினார்) உன் முன்னின்று துரத்திவிடுகிறார் (உபாகமம் 18:10); அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறிசொல்லுகிறவர்களையும் பின்தொடர்ந்து சோரம்போக எந்த ஆத்துமா அவர்களை நாடுகிறானோ, அந்த ஆத்துமாவுக்கு விரோதமாக எதிர்த்துநின்று, அவனைத் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோகப்பண்ணுவேன் என்று தேவனுடைய கட்டளைகள் காணப்படுகின்றன (லேவியராகமம் 20:6). இந்தக் கட்டளைகளைச் சவுல் நன்கு அறிந்திருந்தார்; எந்தோரின் அஞ்சனக்காரியிடம் குறிகேட்பதற்கென்று அணுகுகையில், தான் வேண்டுமென்றும், துணிந்தும் அந்தக் கட்டளைகளுக்கு விரோதமாகச் செயல்படுகின்றார் என்பதையும் சவுல் அறிந்திருந்தார்; இந்த மீறுதலின் நிமித்தமான தண்டனையை தேவன் சவுலுக்கு வரப்பண்ணினார். அப்படியே சவுல் கர்த்தருடைய வார்த்தையைக் கைக்கொள்ளாமல், கர்த்தருக்குச் செய்த தன் துரோகத்தினிமித்தமும், அவன் கர்த்தரைத் தேடாமல் அஞ்சனம் பார்க்கிறவர்களைக் கேட்கும்படிக்குத் தேடினதினிமித்தமும் செத்துப்போனான் (1 நாளாகமம் 10:13). இப்படியாக பிரச்சனை முடிவுக்கு வந்தது. சவுல் தேவனுடைய கட்டளைக்கு விரோதமாக, ஆவிகளோடு தொடர்பில் இருந்த ஒருவரிடம் குறிகேட்டு விசாரித்ததில் பாவம் செய்தார். ஆகையால் கர்த்தருடைய தீர்க்கத்தரிசியிடம் விசாரிக்கப்படவில்லை என்பதும், இயேசுவாலும், அவரது சீஷர்களாலும் துரத்தப்பட்டது போன்றதொரு பொல்லாத ஆவியினிடத்திலேயே சவுல் விசாரித்துள்ளார் என்பதும் தெளிவாகிவிட்டது. இந்த ஆவிகளும், விழுந்துபோன ஆவிகளின் கூட்டத்தில் உள்ளவைகள்தான் என்பது இச்சம்பவத்திற்கும், வேதாகமத்திலுள்ள இன்னொரு சம்பவத்திற்கும் காணப்படும் ஒற்றுமைகளினால் புரிந்துகொள்ளப்படலாம்; நாங்கள் ஜெபம்பண்ணுகிற இடத்துக்குப் போகையில் குறிசொல்ல ஏவுகிற ஆவியைக்கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டாள். அவள் பவுலையும் எங்களையும் பின்தொடர்ந்து வந்து: இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள். இப்படி அநேகநாள் செய்துகொண்டு வந்தாள். பவுல் சினங்கொண்டு, திரும்பிப்பார்த்து: நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான்; அந்நேரமே அது புறப்பட்டுப்போயிற்று (அப்போஸ்தலர் 16:16-18). இது 1 சாமுயேல் 28-ஆம் அதிகாரத்தின் சம்பவத்திற்கு ஒத்திருக்கின்றது. அப்பொழுது சவுல் வேஷம் மாறி, வேறு வஸ்திரம் தரித்துக்கொண்டு, அவனும் அவனோடேகூட இரண்டுபேரும் இராத்திரியிலே அந்த ஸ்திரீயினிடத்தில் போய்ச் சேர்ந்தார்கள்; அவளை அவன் நோக்கி: நீ அஞ்சனம் பார்த்து எனக்குக் குறிசொல்லி, நான் உன்னிடத்தில் சொல்லுகிறவனை எழும்பிவரச்செய் என்றான் (1 சாமுயேல் 28:8). எந்தோரின் அஞ்சனக்காரி செய்த ***அஞ்சனமும்***, பவுலினால் பெண்ணிடமிருந்து துரத்தப்பட்ட அசுத்த ஆவிகளின் சம்பவத்தில், அந்தப் பெண்ணிடம் செயல்பட்டுவந்த ஆவிகளின் ***செயல்பாடும், தன்மையும்*** ஒரே வகையானவை ஆகும்.

அதேபோன்று முனைவர் ராபின்சன் அவர்களினால் மேற்கோளிடப்பட்ட மறுரூப மலை சம்பவத்தில், மோசேயும், எலியாவும் தோன்றின காரியம், மரித்தவர்கள் உயிரோடு இருக்கின்றார்கள் எனும் கூற்றினை ஆதரிப்பதில்லை; ஏனெனில் இது ஒரு தரிசனம் என்று இயேசு தம்முடைய சீஷர்களிடம் கூறி, தாம் உயிர்த்தெழுவதுவரையிலும், கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கு முன்னடையாளமான இந்தத் தரிசனத்தை யாரிடமும் பகிர்ந்துகொள்ளக்கூடாது என்று கட்டளையிட்டார். (மத்தேயு 17:9)

புதிய ஏற்பாட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ள உவமைகள் அனைத்திற்கும் ஆர்த்தடாக்ஸ் பிரிவினர் மறைமுகமான அர்த்தம் உள்ளதென விவரிக்கின்றனர்; ஆனால் ஐசுவரியவான் மற்றும் லாசரு உவமையினை மட்டும், பொதுவாய் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைக்கு எதிர்மாறாக, சொல்லர்த்தமாய்ப் பார்த்து விளக்கம் கொடுக்கின்றனர். இப்படிக் கூறுவதில் சில நகைப்பிற்கிடமான விளக்கங்களையும் கொடுக்கின்றனர்; அதென்னவெனில், லாசரு தூதர்களினால் ஆபிரகாமின் மடிக்கு அழைத்துச் செல்லப்படுகின்றார்; இருவருக்கும் இடையில் பெரும் பிளவு ஏற்படுத்தப்பட்டுள்ளதினால், பரலோகத்திலிருந்து, ஆர்த்தடாக்ஸ் நம்பும் நரகத்திற்கு யாரும் செல்வதில்லை; இன்னுமாக நரகத்திற்குச் செல்பவர்கள் ஒருபோதும் திரும்பிவருவதில்லை என்றும், அங்கு மூழ்குகின்றவர்கள், என்றென்றுமாக மூழ்கிவிடுகின்றனர் என்றும் (ஆர்த்தடாக்ஸ் பிரிவினர்) கூறுகின்றனர். ஆனால் ஐசுவரியவான் ஆவியுலகினின்று (ஆர்த்தடாக்ஸ் நம்பும் நரகத்தினின்று) செய்தி ஒன்றுடன் பூமிக்குத் திரும்பிவந்தார் என்று முனைவர் ராபின்சன் அவர்கள் பேசிய சில புதிய வார்த்தைகள், நகைப்பின் உச்சகட்டமாகவும் மற்றும் முன்னுக்குப் பின் முரண்பாடுள்ள நிலையின் உச்சகட்டமாகவும் காணப்படுகின்றது; இந்த உவமை பற்றின சீரான விளக்கத்திற்கு, "Food for Thinking Christians" எனும் படைப்பில் பக்கம்: 154-ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.

HG 727

## இராஜாவாகிய சவுல் மரித்தவர்களோடு பேசினாரா?

அஞ்சனக்காரியும், ஆவியுலகப் பேச்சாளருமான எந்தோரின் சூனியக்காரியோடு, இராஜாவாகிய சவுல் ஆலோசனைகூட்டம் நடத்தினது பற்றி 1 சாமுயேல் 28:7-20-வரையிலுள்ள வசனங்களில் இடம்பெறும் வேதாகமப் பதிவானது, இன்று செய்யப்பட்டு வரும் காரியங்களுக்கு உதாரணமாய்க் காணப்படுகின்றது. இந்த அஞ்சனம்பார்க்கிறவர்கள் சம்பந்தமான பிரமாணங்கள் மிகவும் கடும் கட்டுப்பாடுகளுடன் காணப்பட்டபோதிலும், தண்டனையாக மரணம் விதிக்கப்பட்டிருந்தபோதிலும், இன்றுள்ள ஆவியுலகத் தொடர்பாளர்கள் கூறிக்கொண்டிருப்பதுபோன்று, அன்றும் மரித்துப்போன நண்பர்களிடமிருந்து இயற்கைக்கு அப்பாற்பட்ட தகவல் பெறுவதாக நம்பி சில நபர்கள் கூறிக்கொண்டிருந்தனர்; இவர்கள் மூலமாகப் பெற வாய்ப்பிருந்த இந்த ஆதாயங்களுக்காக, சிலர் தங்கள் ஜீவனையும் பணையம் வைக்க விரும்பினார்கள். தேவன் கட்டளையிட்டிருந்தபோதிலும், இன்னுமாகத் தானும் கட்டளையிட்டிருந்த போதிலும்,இ வைகளைம ீறியும்இ ஸ்ரயேலில்அ ஞ்சனம்பார்க்கிறஅ நேகர்க ாணப்பட்டனர்எ ன்பதை இராஜாவாகிய சவுல் நன்கு அறிந்திருந்தார்; இவரின் வேலைக்காரர், எந்தோரிலுள்ள அந்த அஞ்சனம்பார்க்கும் ஸ்திரீயைக் கண்டுபிடிப்பதற்குச் சிரமப்படவில்லை. அஞ்சனக்காரியை சந்திப்பதற்கென்று சவுல் வேஷம் மாறிக்கொண்டார்; எனினும் இந்தப் பெண், சவுல் சௌந்தரியவான் என்றும், எல்லா இஸ்ரயேல் ஜனங்களும் அவர் தோளுக்குக் கீழாயிருந்தார்கள் என்றும் நன்கு அறிந்திருந்தாள் என்பதில் சந்தேகமில்லை (1 சாமுயேல் 9:2). ஆகையால் அத்தருணத்தில் அஞ்சனம்பார்ப்பதின் நிமித்தமாக, தனக்கு எந்தப் பாதகமும் வருவதில்லை என்று, அங்கு வந்திருந்த சவுலின் உறுதிமொழியினையும், வாக்குறுதியையும் பெற்றுக்கொள்வதில் அப்பெண் கவனமாய் இருந்தாள்.

எந்தோரின் அஞ்சனக்காரி மூலம் பொல்லாத ஆவிகள் பயன்படுத்தின வழிமுறைகளானவைகள் (methods), இன்று பயன்படுத்தப்படும் வழிமுறைகளுக்கு ஒத்திருந்தது. இந்த ஆவிகள் அஞ்சனக்காரியினுடைய மனக்கண்களுக்கு முன்பாக, வயதான தீர்க்கத்தரிசியாகிய சாமுயேலுக்கு ஒத்த

ஒரு தோற்றத்தினை - நீண்ட சால்வையைப் போர்த்தியிருக்கும் வழக்கத்தின்படியான ஒரு தோற்றத்தினை உருவாக்கிக் காண்பித்தார்கள். அவள் தனது இந்த மனக்காட்சியினை விவரித்தபோது, சவுல் உடனடியாக, அது சாமுயேல்பற்றின விவரங்களாக இருக்கின்றன என்று அடையாளம் கண்டுகொண்டார்; ஆனால் சவுல் எதையும் நேரடியாகப் பார்க்கவில்லை; மாறாக சொல்லப்பட்ட விவரங்களை வைத்து, வந்துள்ளவர் சாமுயேல் என்று அறிந்துகொண்டார் என்று பார்க்கின்றோம். இம்மாதிரியான சூழ்நிலைகளில் எந்த ஒரு நபரும் பொதுவாக நம்பிவிடுவதுபோன்றே சவுலும் எளிதில் நம்பிவிட்டவராக, அதற்குமேல் கேள்விகளைக் கேட்கவில்லை; அதாவது ஒருவேளை சாமுயேல் இப்பொழுது ஆவிக்குரிய ஜீவியாகவும், நல்ல நிலைமையிலும் இருப்பாரானால், பின்னர் ஏன் அவர் தற்காலத்தில் காணப்பட்டது போன்றே வயதானவராகவும், முதுகு வளைந்தவராகவும் காணப்படுகின்றார் என்று சவுல் கேள்வி கேட்கவில்லை; இன்னுமாக மனிதனாக இருந்தபோது சாமுயேல் போர்த்தியிருந்த அதே பழைய சால்வையை, ஏன் அவர் ஆவிக்குரிய உலகிலும் போர்த்திக்கொண்டிருக்கின்றார் என்றும் சவுல் கேள்வி கேட்கவில்லை.

சவுல் கர்த்தரினால் கைவிடப்பட்டிருந்தார்; இப்போதும்கூடத் தீர்க்கத்தரிசிபோல் ஆள்மாறாட்டம் செய்து, சாமுயேலின் பெயரில், தங்கள் தொடர்பாளராகிய அஞ்சனக்காரி மூலம் சவுலிடம் பேசிக்கொண்டிருந்த இந்தப் பொய்பேசும் ஆவிகளினால் சவுல் சுலபமாய் வஞ்சிக்கப்பட்டுவிட்டார்.

பூமியின் சகல காரியங்களைப்பற்றி நன்கு தகவல் அறிந்தவர்களாக மட்டுமல்லாமல், இந்த விழுந்துபோன ஆவிகள், ஏமாற்றுவதிலும் வல்லவர்களாக இருந்தார்கள். இந்த ஆவிகள் சவுலுக்குப் பதிலளிக்கையில், இவரை நன்கு ஏமாற்றத்தக்கதாக மரித்துப்போன தீர்க்கத்தரிசியின் பாவனைகளையும், பாணிகளையும் பாவித்துக்கொண்டன. (இப்படித்தான் இந்தப் பொய்யான ஆவிகள் மரித்தோரின் முகத்தோற்றத்தினையும், பாணிகளையும், இயல்புகளையும்போன்று போலியாய் நடித்துக்காட்ட எப்போதும் நாடுகின்றன). நீ என்னை எழும்பி வரப்பண்ணி, என்னைக் கலைத்தது என்ன? என்று சாமுயேலின் தோற்றத்தில் வந்த ஆவி கேட்டது. இந்தப் பதிலானது, ஒரு நபர் மரிக்கும்போது, ஓர் உயிர்த்தெழுதலுக்காகக் காத்திருக்கையில், அவர் ஷியோலில், அதாவது பிரேதக்குழியில் உணர்விழந்து இருப்பார் என்றுள்ள யூதர்களின் நம்பிக்கைக்கு இசைவாகவே காணப்பட்டது (யோபு 14:12-15, 21; சங்கீதம் 90:3; பிரசங்கி 9:5-6). ஆகையால் சாமுயேல் பிரேதக்குழியிலிருந்து அழைக்கப்பட்டார் என்பதுபோலும், பரலோகத்திலிருந்து அழைக்கப்படவில்லை என்பதுபோலும், அவரது இளைப்பாறுதல் அல்லது அமைதலான நித்திரை கலைக்கப்பட்டது என்பதுபோலும் அந்த ஆவிகள் காட்டிக்கொண்டன (சங்கீதம் 13:3; யோபு 14:12; சங்கீதம் 90:5; யோவான் 11:11-14). ஆகையால் உயிரோடு இருக்கும்போது, தன்னைப் பார்க்க மறுத்த சாமுயேல் தீர்க்கத்தரிசி, இப்பொழுது அஞ்சனக்காரியின் ஆச்சரியமான வல்லமைகள் மூலம் தன்னோடு உரையாடும்படிக்குப் பலவந்தம் பண்ணப்பட்டுள்ளார் என்று சவுல் எண்ணிகொள்ளத்தக்கதாக எளிதாக வஞ்சிக்கப்பட்டுப்போனார் (1 சாமுயேல் 15:26, 35-ஆம் வசனங்களை பார்க்கவும்). சவுல் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்போது, கர்த்தர் அவனுக்குச் சொப்பனங்களினாலாவது, ஊரீமினாலாவது, தீர்க்கத்தரிசிகளினாலாவது மறுஉத்தரவு அருளவில்லை. சாமுயேல் சவுலை நோக்கி: நீ என்னை எழும்பிவரப்பண்ணி, என்னைக் கலைத்தது என்ன என்று கேட்டான். அதற்குச் சவுல்: நான் மிகவும் நெருக்கப்பட்டிருக்கிறேன்; பெலிஸ்தர் எனக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார்கள்; தேவனும் என்னைக் கைவிட்டார்; அவர் தீர்க்கத்தரிசிகளினாலாவது, சொப்பனங்களினாலாவது எனக்கு மறு உத்தரவு அருளுகிறதில்லை; ஆகையால் நான் செய்ய வேண்டியதை நீர் எனக்கு அறிவிக்கும்படிக்கு, உம்மை அழைப்பித்தேன் என்று சவுலின் வார்த்தைகள் காணப்பட்டன. (1 சாமுயேல் 28:6, 15)

## தேவனுக்குப்பதிலாக அஞ்சனக்காரிக்குச் சாமுயேல் கீழ்ப்படிவாரா?

இம்மாதிரியான ஒரு சந்தர்ப்பத்தில், சவுலிடம் சாமுயேல் உரையாடுவார் என்று அனுமானிப்பதிலுள்ள பொருந்தாமையினை, சரியான அறிவினைப் பெற்றிருக்கும் எந்த ஒரு நபரினாலும் உடனடியாகக் கண்டுகொள்ள இயலும்.

(1) தேவன் சவுலைக் கைவிட்டுவிட்டார் என்பதை (உயிரோடிருக்கும்போது) சாமுயேல் அறிந்திருந்தார்; ஆகையால் சவுலிடம் பேசுவதற்கோ, கர்த்தரே சொல்ல விரும்பாத எந்த ஒரு தகவலையும் சவுலுக்குக் கொடுப்பதற்கோ சாமுயேலுக்கு உரிமை இல்லாதிருந்தது. மேலும் சாமுயேலும் இப்படிச் செய்யமாட்டார்.

(2) கர்த்தரால் கண்டிக்கப்பட்டவர்களும், இஸ்ரயேலின் தேசத்தில் காணப்படுவதற்கு உரிமையற்றவர்களுமான ஆவியுலகத் தொடர்பாளர்கள்/spirit-medium, தேவன் கைவிட்ட பொல்லாத இராஜாவின் வல்லமையினால், சாமுயேலைக் கலைக்க முடியும் என்றும், அவரை ஷியோலிலிருந்து வெளியே கொண்டுவர முடியும் என்றும் அனுமானிப்பது எத்தனை நகைப்பிற்கிடமானதாகும். சாமுயேல் பூமிக்கடியில் காணப்பட்டாரா அல்லது தூரமாய்ப் பரலோகத்தில் காணப்பட்டாரா? அவர் எங்கிருந்தாலும், இராஜாவாகிய சவுலின் கேள்விகளுக்கு அவர் பதில் கொடுக்கத்தக்கதாக, அவர் இராஜாவின் முன் வரும்படிக்கு, அவருக்குக் கட்டளையிடுவதற்கு அஞ்சனக்காரிக்கு அதிகாரம் இருந்ததா? உயிரோடு இருப்பவர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கத் தோன்றும்படிக்கு, மரித்தோரைக் கலைப்பதற்கும், அவர்களை மேலே அழைத்து வருவதற்கும் அல்லது வேறு ஏதேனும் விதத்தில் அவர்களை அழைத்துக் கொண்டுவருவதற்கும், ஆவியுலகத் தொடர்பாளர்களுக்கு வல்லமை உண்டு என்று அனுமானிப்பது பகுத்தறிவிற்கு உட்பட்டதாக இருக்குமா?

சாமுயேலைப்போன்று போலித்தனமாய் ஆள்மாறாட்டம் பண்ணி வந்த அஞ்சனக்கார ஆவிகளானது, சவுல் அறிந்திராத எதையும் முன்னுரைக்கவில்லை. தன்னிடமிருந்தும், தன் வீட்டாரிடமிருந்தும் இராஜ்யபாரம் கடந்துபோகக் கர்த்தர் கட்டளையிட்டுள்ளார் என்று சவுல் அறிந்திருந்தார்; மேலும் நாளைய தினத்தில் பெலிஸ்தரின் சேனைகளோடுள்ள யுத்தத்தைக்குறித்த அச்சத்தினால், சவுல் அஞ்சனக்காரியை நாடினார். தாவீது தனக்குப்பின் அரியணைக்கு வருவார் என்று தேவன் சவுலிடம் கூறியிருந்தபடியால், சவுல் தனக்கும், தன் வீட்டாருக்கும் இரக்கம் கிடைக்குமென எதிர்பார்ப்பு கொண்டிருக்கவில்லை. கர்த்தர் உன்னுடைய ஜனமாகிய இஸ்ரயேலரையும் பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுப்பார்; நாளைக்கு நீயும் உன் குமாரரும் என்னோடிருப்பீர்கள்; இஸ்ரயேலின் பாளயத்தையும் கர்த்தர் பெலிஸ்தரின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்ற பதிலையே சவுல் எதிர்பார்த்தார் (1 சாமுயேல் 28:19). பெலிஸ்தருடைய நிலை மற்றும் சேனையின் பெலத்தைக்குறித்தும், சவுலின் நிலை மற்றும் சேனையின் பெலவீனத்தைக்குறித்தும், சவுல் ஏற்கெனவே பயந்துபோயுள்ளார் என்பதுகுறித்தும், சூழ்நிலையின்நிமித்தம் கவனம் சிதறின நிலையில், அஞ்சனக்காரி வழியாய் இப்படிக் குறிகேட்டுக்கொண்டிருக்கின்றார் என்பதுகுறித்தும், (நன்கு தகவல் அறிவுள்ள) பிசாசுகள் சவுலைவிட நன்கு அறிந்துவைத்திருந்தன. அந்த ஒரு காலகட்டத்தின்போதுள்ள யுத்த காரியத்தைக்குறித்து நன்றாய்த் தெரிந்திருக்கும் யார் ஒருவரும், பின்வரும் காரியங்களை அறிந்திருப்பார்கள்:

(1) அந்த ஒரு நாள் யுத்தத்தோடு காரியங்கள் முடிந்து விடும்.

(2) மேலும் இராஜா மற்றும் அவரது வீட்டார் மரித்து விடுவார்கள் என்பதே நியாயமான விளைவாகக் காணப்படும். எனினும் அந்தத் தீய ஆவிகள் தவறாய்க் காரியங்களை முன்னுரைத்தன; ஏனெனில் சவுலின் குமாரர்களில் இருவர் உயிர்த்தப்பி, பல வருடங்கள் வாழ்ந்தார்கள். அஞ்சனக்காரியைச் சந்தித்து பல நாட்கள் கழித்தே யுத்தமும், சவுலின் மரணமும் சம்பவித்ததென்று *அறிஞர்கள்* கருத்துகளைக்கூறி, தீய ஆவிகளின் வார்த்தைகளை மறுக்கின்றனர்.

சாத்தானும், தீமை செய்வதில் சாத்தானின் கூட்டாளிகளுமான விழுந்துபோன தூதர்களும், ஜீவியத்தின் அநேகக் காரியங்கள் தொடர்புடைய விஷயத்தில், மனுஷரைக்காட்டிலும் அதிகம் தெரிந்திருப்பார்கள் எனும் கூற்றில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. சுபாவத்தின்படி அவர்கள் மனுஷரைக்காட்டிலும் உயர்ந்தவர்கள் என்றும், மிகவும் அறிவுள்ளவர்கள் என்றும் நாம் நினைவில்கொள்ள வேண்டும்; ஏனெனில் மனுஷன் தேவதூதரைக்காட்டிலும் சற்று சிறியவனாகச் சிருஷ்டிக்கப்பட்டுள்ளான் (சங்கீதம் 8:5); இதுவுமல்லாமல் மரணத்தில் சீக்கிரம் அறுப்புண்டுபோகின்ற மனுஷனுடைய சொற்பமும், முழுக்க பிரச்சனைகளும் உள்ள ஜீவியத்தின் வருடங்களோடு ஒப்பிடுகையில், சாத்தானுக்கும், விழுந்துபோன ஆவிகளுக்கும் அழிவு மற்றும் மரணத்தின் தொந்தரவு இல்லாத பல்லாயிர வருடங்களின் (வாழ்நாள்) அனுபவங்கள் இருக்கின்றன என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். மனுக்குலத்தினால், இந்தப் பொல்லாத ஆவிகளினுடைய தந்திரங்களைச் சமாளிக்க முடியாமல் காணப்படுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை; இந்தப் பிசாசுகளுடன் தொடர்புகொள்வதற்கு மறுப்பு தெரிவிக்க வேண்டும் என்ற தெய்வீக ஏற்பாட்டில்தான் நமக்கான ஒரே பாதுகாப்பு காணப்படுகின்றது. ஆகையால் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்போது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற (கோபமுள்ள) சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான் என்று கர்த்தருடைய வார்த்தை காணப்படுகின்றது. (யாக்கோபு 4:7; 1 பேதுரு 5:8-9)

R4976 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## கொடிய காலங்கள் வருமென்று

மேலும், கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. - 2 தீமோத்தேயு 3:1

அந்தகார சங்கிலிகளினால் விழுந்துபோன தூதர்கள் கட்டுப்பாட்டிற்குள் வைக்கப்பட்டிருப்ப தற்கும், பிசாசுகளின் பிரபுவாகிய சாத்தான் கட்டப்படுவதற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தினை நாம் தெளிவாய் வேறுபடுத்திக்கூற அறிந்திட வேண்டும். சாத்தானின் கட்டப்படுதல் என்பது வேதவாக்கியங்கள் முன்வைப்பதுபோன்று, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் சம்பவிக்கின்ற காரியமாகும்; பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங்கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான் (வெளிப்படுத்தல் 20:2). அந்த ஆயிரம் வருடகாலங்களில் கிறிஸ்து மற்றும் அவரது பரிசுத்தவான்கள், தேவனுடைய இராஜாக்களெனவும், ஆசாரியர்களெனவும் ஆளுகைசெய்வார்கள். விழுந்துபோன தூதர்களின் கட்டுப்பாடுகுறித்துப் பரிசுத்த பேதுருவும், பரிசுத்த யூதாவும் குறிப்பிடுகின்றனர். இந்த விழுந்துபோன தூதர்களைக்குறித்துப் பேசுகையில் பரிசுத்த பேதுரு அடிகளார் பின்வருமாறு கூறியுள்ளார்:

அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற்போனவைகள். (1 பேதுரு 3:20; யூதா 6; 2 பேதுரு 2:4)

வேதவாக்கியங்களை ஆராயும்போது, வெளிச்சத்தின் தூதர்கள் சிலர் கீழ்ப்படியாமல் போனவர்களாகி, தங்கள் ஆதிமேன்மையைத் துறந்து, மனிதர் ஆகும்படிக்கு விரும்பி, மனித உருவம் எடுத்துக்கொண்டார்கள் என்று பார்க்கின்றோம். இவர்களைப்பற்றின பதிவை ஆதியாகமம் 6:1-4-வரையிலான வசனங்களில் காண்கின்றோம்: மனுஷர் பூமியின்மேல் பெருகத்துவங்கி, அவர்களுக்குக் குமாரத்திகள் பிறந்தபோது, தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொண்டார்கள். அப்பொழுது கர்த்தர்: என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சந்தானே, அவன் இருக்கப்போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம் என்றார். அந்நாட்களில் இராட்சதர் பூமியிலே இருந்தார்கள்; பின்பு தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளோடே கூடுகிறதினால், இவர்கள் அவர்களுக்குப் பிள்ளைகளைப் பெற்றபோது, இவர்களும் பூர்வத்தில் பேர்பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள். 1600-வருடங்களாக பூமி முழுவதும் பொல்லாங்கினால் நிரம்பிக் காணப்பட்டது. பேழையில் காக்கப்பட்டவர்களைத் தவிர்த்து, மீதமுள்ள மனுக்குலம் யாவரையும் தேவன் அழித்துப்போட்டார்.

## தேவனுடைய வார்த்தைகளை அவமாக்கிப்போட ஆவிகள் நாடுகின்றன

விழுந்துபோன ஆவிகளுக்கு என்னவாயிற்று என்று அப்போஸ்தலன் தொடர்ந்து தெரிவிக்கின்றார். இவர்கள் முன்பைவிட வல்லமையிலும், அதிகாரங்களிலும் குறைவுபட்டிருக்கின்றனர். முன்பு இவர்களுக்கு மனித உருவம் எடுக்கும் வல்லமை இருந்தது; இவர்கள் புசித்து, பானம்பண்ண முடிகிறவர்களாய் மாத்திரம் காணப்படாமல், இன்னுமாக மனுஷர் செய்யக்கூடிய காரியங்கள் அனைத்தையும் செய்ய முடிகிறவர்களாகவும் காணப்பட்டார்கள். ஜலப்பிரளயத்திற்குப் பிற்பாடு இவர்கள் அந்தகார சங்கிலிகளினால் கட்டிப்போடப்பட்டனர்; அதாவது மனித உருவம் எடுப்பதற்கும், முன்பு இவர்கள் செய்து வந்ததுபோன்று ஒளியிலுள்ள தங்கள் வல்லமையைப் பயன்படுத்துவதற்கும் தடைபண்ணப்பட்டனர். எனினும் இவர்கள் தொடர்ந்து கிரியை புரிந்துகொண்டிருக்கின்றனர்; அதாவது யுத்தத்தின் முடிவு என்னவாக இருக்கும் என்று விசாரிக்கும்படிக்குச் சவுல் எந்தோரின் அஞ்சனக்காரியிடம் உதவிக்காக நாடினபோது, இவள் வாயிலாகச் செயல்பட்டதுபோன்று, இன்னமும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றனர். (1 சாமுயேல் 28:7-20)

மரித்தவர்களோடு தொடர்புகொண்டிருப்பதுபோன்று நடித்துக்கொண்டிருப்பவர்களிடமிருந்தும், முணுமுணுவென்று ஓதுகிற குறிகாரர்களிடமிருந்தும் நாம் விலகிக்கொள்ள வேண்டும் என்று ஏசாயா தீர்க்கத்தரிசி கூறியுள்ளார் (ஏசாயா 8:19). இந்த விழுந்துபோன ஆவிகள் தேவனுடைய வார்த்தைகளை அவமாக்கிப்போட நாடுகின்றன; ஆகையாலே மரித்தவர்கள் பலரைப்போன்று, இந்த ஆவிகள் ஆள்மாறாட்டம் செய்து காட்சிக்கொடுக்கின்றன; சவுலின் விஷயத்திலும் சாமுயேல்போன்று ஆள்மாறாட்டம் பண்ணித் தோன்றின. சவுலுக்குத் தேவன் தெரிவிக்க மறுத்த விவரங்களை, சாமுயேல் வந்து சவுலுக்குக் கொடுத்தார் என்று அனுமானிக்கக்கூடாது. இதே கொள்கையானது நம்முடைய நாட்களுக்கும் பொருந்தும். மனித சித்தங்களைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதன் வாயிலாக, மனித சரீரங்களைக் கட்டுப்பாட்டிற்குள் பெற்றுக்கொள்ளும்போதே அல்லாமல், மற்றபடி விழுந்துபோன ஆவிகளினால் தங்கள் கிரியைகளை நடப்பிக்க முடியாது.

R2171 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# ஆவியுலகைத் தொடர்புகொள்ளுதல் பற்றி வேதவாக்கியங்கள் கூறுவது என்ன?

## மரித்தவர்கள்போன்று ஆள்மாறாட்டம் பண்ணும் இந்த ஆவிகள் யார்?

உயிர்த்தெழுதல் சம்பவிப்பதற்கு முன்புவரை, மரித்தோரிடம் தொடர்புகொள்ள முடியாது எனும் காரியத்திற்கு வேதவாக்கியங்களில் மிக அதிகமான மற்றும் மிக உறுதியான சாட்சியங்களை நாம் பெற்றிருக்கின்றோம். இன்னுமாக இந்த (விழுந்துபோன) ஆவிகளில் சில மாத்திரமல்லாமல், இவைகள் அனைத்துமே பொல்லாத ஆவிகள் என்றும், பொய்யுரைக்கும் ஆவிகள் என்றும், வஞ்சிக்கும் ஆவிகள் என்றும் வேதவாக்கியங்களின் உறுதியான சாட்சியங்களும்கூடக் காணப்படுகின்றன. தகவல்களை விசாரிப்பதற்கென்று இந்த ஆவிகளிடம் நாடக்கூடாது என்று மனுக்குலத்திற்கு வேதவாக்கியங்களானது தடைவிதித்துள்ளது; இன்னுமாக இந்தப் பிசாசுகள், தங்கள் ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாத தேவதூதர்கள் ஆவார்கள் என்று தெளிவாய் நமக்கு தெரிவிக்கின்றது; அதாவது ஜலப்பிரவாகத்திற்கு முன்புள்ள காலத்தில், மனுக்குலத்தினைப் பாவத்திலிருந்து தூக்கியெடுப்பதற்குப் பிரயாசம் எடுக்கத்தக்கதாக, அதாவது இந்நோக்கத்திற்காக வேண்டி மனுக்குலத்தை மேற்பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த தேவதூதர்களில் சிலர் ஆவார்கள்; இந்தத் தேவதூதர்களுக்கு இப்படி அனுமதிக்கப்பட்டதற்குரிய காரணம், இவர்கள் தங்கள் தோல்வியின் வாயிலாக, கிறிஸ்துவில் ஏற்பாடுபண்ணப்பட்டுள்ள ஏற்பாடுகளினால் மாத்திரமே பாவத்திற்குத் தீர்க்கமான விடுதலை உண்டு எனும் காரியத்தைக் கற்றுக்கொள்வதற்கேயாகும். இந்தத் தூதர்கள் மனுக்குலத்தைத் தூக்கிவிடுவதற்குப்பதிலாக, இவர்கள் பாவத்திற்குள் வசீகரிக்கப்பட்டு, வேறொரு சந்ததியினை உருவாக்கும்படிக்கு, தங்களுக்கு அருளப்பட்ட வல்லமையினைத் தவறாய்ப் பயன்படுத்திக்கொண்டனர்; அதாவது மனித உருவம் எடுத்துக்கொள்வதற்குத் தங்களுக்கு அருளப்பட்ட வல்லமையினைத் தவறாய்ப் பயன்படுத்திக்கொண்டனர் (ஆதியாகமம் 6:1-6). முறைதவறி பிறந்த இவர்களது சந்ததியானது, ஜலப்பிரவாகத்தில் அழிக்கப்பட்டது; மேலும் இந்தத் தூதர்களுக்கும், மனித சரீரத்தில் உருவம் எடுக்கும் வல்லமையின் விஷயத்தில் தடை விதிக்கப்பட்டது; இன்னுமாகத் தங்கள் ஆதிமேன்மையைக் காத்துக்கொண்டவர்களாகிய மற்ற பரிசுத்த தூதர்களிடமிருந்தும், இவர்கள் விலக்கி, தனித்து வைக்கப்பட்டனர்.

பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று அப்போஸ்தலனாகிய பேதுரு தெரிவித்துள்ளார் (2 பேதுரு 2:4). இந்த வகுப்பாரைக்குறித்து யூதாவும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: தங்களுடைய (தகுதியான நிலையினை) ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்துவைத்திருக்கிறார் (யூதா 1:6). இந்தப் பொல்லாத தூதர்கள் பற்றி குறிப்பிடப்படும் மூன்று காரியங்களைக் கவனியுங்கள்.

(1) இவர்கள் Tartarus/டார்டரசில் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர், அதாவது கட்டுப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனர், ஆனால் அழிக்கப்படவில்லை. இந்த ஒரு வேதவாக்கிய பகுதியிலேயே, டார்டரஸ்

என்னும் வார்த்தை நரகம் என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. இது படுகுழியினை/கல்லறையினைக் குறிப்பதுமில்லை, அக்கினியும் கந்தகமுமான கடலினால் அடையாளப்படுத்தப்படும் இரண்டாம் மரணத்தினைக் குறிப்பதுமில்லை; மாறாக இது/டார்டரஸ், காற்றினை அல்லது பூமியின் ஆகாய மண்டலத்தினை குறிக்கின்றதாய் இருக்கின்றது.

(2) இவர்களுக்கு இந்தச் சிறைப்படுத்தப்பட்ட நிலைமையிலும் சில சுதந்தரங்கள் காணப்படுகின்றன; எனினும் இவர்கள் சங்கிலியினால் கட்டப்பட்டவர்களாக அல்லது ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் கட்டுப்படுத்தப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர்; அதாவது இவர்கள் அந்தகாரச் சங்கிலிகளின் கீழ்க்காணப்படுவதினால், இவர்கள் ஒளியிலுள்ள தங்கள் வல்லமைகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

(3) இந்தக் கட்டுப்பாடானது மகா நாளின் நியாயத்தீர்ப்புக்கு முன்புவரை - மகா ஆயிர வருட நாளுக்கு முன்புவரைத் தொடரும் - கிட்டத்தட்ட நான்காயிரம் வருடங்கள் முழுவதும் தொடரும். இப்பொழுது நாம் ஆயிர வருட நாளின் - அந்த மகா நாளின் விடியலில் காணப்படுவதினால், அந்தகாரம் சம்பந்தப்பட்டுள்ள இந்தக் கட்டுப்பாடுகளில் சில, படிப்படியாக அப்புறப்படுத்தப்படும் என்று புரிந்துகொள்ளப்படலாம். ஒருவேளை இப்படியாக இருக்குமானால், ஒருவேளை அந்தகாரத்தின் சங்கிலிகள் விடுவிக்கப்படுமானால், ஜலப்பிரவாகம் முதற்கொண்டு இன்றுவரை காணப்பட்டதைவிட மிக அதிகமாக மனுக்குலத்தினை ஏமாற்றத்தக்கதாக, வெட்ட வெளிச்சத்தில் வஞ்சனைகளை அல்லது பொய்யான அற்புதங்களை (இப்பொழுது செய்ய முயற்சிப்பதுபோலவே) இந்தப் பொல்லாத ஆவிகள் நடப்பிக்க முடிபவர்களாகுவார்கள்.

இந்த விழுந்துபோன தூதர்களை அல்லது பிசாசுகளை, பிசாசுகளின் அதிபதியாகிய சாத்தானோடு குழப்பிக்கொள்ளக்கூடாது; இவர் தனது பொல்லாத நடக்கையினை நெடுங்காலத்திற்கு முன்னதாகவே துவங்கிவிட்டார்; இவரே தெய்வீக அரசாங்கத்திற்கு முதல் சத்துருவாகவும், நீண்ட காலமாய்க் காணப்பட்ட ஒரே சத்துருவாகவும் காணப்பட்டார்; தேவதூதர்களின் வரிசையில் மேன்மையானவராகச் சிருஷ்டிக்கப்பட்டிருந்த இவர், சர்வவல்லவருக்குத் தன்னை போட்டியாளனாக நிறுத்திக்கொண்டார்; இன்னுமாக ஆதாமும், அவரது சந்ததியினரும் தன்னுடைய வேலைக்காரராய்க் காணப்படும்படிக்கு, அவர்களை வஞ்சிக்கவும், வசப்படுத்தவும் நாடினார்; மேலும் நாம் அனைவருக்கும் தெரிந்திருக்கிறபடியே இவர் கொஞ்ச காலத்திற்காகிலும், இதில் பெருமளவு வெற்றி கண்டவராகக் காணப்பட்டார். இவ்வுலகத்தின் அதிபதியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளுடைய இருதயத்தில் இப்பொழுது கிரியை புரிபவராகவும் காணப்படும் இவர், வஞ்சிக்கப்பட்டு, அடிமைப்பட்டுள்ள மிகத் திரளான பின்னடியார்களைப் பெற்றிருக்கவே செய்கின்றார். மேலும் தூதர்களின் திசைமாறுதலுக்கு, சாத்தான் இயல்பாக வரவேற்பு கொடுத்திருந்திருப்பார்; இவர்கள் தங்கள் ஆதிமேன்மையினைக் காத்துக்கொள்ளாதவர்களும், ஜலப்பிரவாகத்தின் காலம் முதற்கொண்டு கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டவர்களுமான தூதர்கள் ஆவார்கள்; ஆகையாலே இவர் அவர்களின் பிரபுவென, பிசாசுகளின் அதிபதியென அழைக்கப்படுகின்றார்; மேலும் சந்தேகத்திற்கிடமின்றி, இவர் தூதர்களின் வரிசையில் மேன்மையானவராகக் காணப்பட்டபடியினால், மற்றவர்களைக் கொஞ்சம் கட்டுப்படுத்துகின்றவராக காணப்படுகின்றார்.

இந்த விழுந்துப்போன தூதர்கள், பிசாசுகள், தங்களைப்போன்றவர்களின் மத்தியில் செய்வதற்கு எதுவும் பெற்றிருப்பதில்லை; இந்தப் பொல்லாத ஆவிகள், நல்ல ஜனங்களிடமே விளையாட்டுக்காட்ட

எப்போதும் விரும்புகின்றன; மேலும் இந்த நல்ல ஜனங்களைக் கெடுப்பதிலும், கீழ்த்தரமானவர் களாக்குவதிலும்தான் இவர்களுடைய மகிழ்ச்சி காணப்படுகின்றது. வேதவாக்கியங்களில் பதிவுசெய்யப் பட்டுள்ள இந்தப் பிசாசுகளின் சரித்திரத்தை நாம் பார்க்கையில், ஜலப்பிரவாகத்திற்கு முன்பு இவர்களுடைய விழுகைக்கு இவர்களை வழிநடத்தியிருந்த தீமையான வேட்கைகள்/ஆசைகள் இன்னமும் இவர்களிடத்தில் தொடர்ந்து காணப்படவே செய்கின்றது என்று கவனிக்கின்றோம். சிற்றின்ப வேட்கைக்கடுத்த மற்றும் இழிவான காரியங்களுக்கடுத்த விஷயங்களிலும் இவர்களுடைய பிரதான பிரியம் இன்னமும் காணப்படுகின்றது; மேலும் நற்பண்புகள் உள்ளவர்களுக்கு எதிராக தொல்லைப் புரிவதிலும், தாங்கள் யார் மீது முழுக்கட்டுப்பாட்டினை அடைகின்றார்களோ, அவர்களைத் தீயொழுக்கத்திற்குள்ளாக்குவதிலும்தான், இந்த ஆவிகள் மனுக்குலத்தின் விஷயத்தில் பரவலாய் நாட்டம் கொண்டிருக்கின்றன.

அநேகக்கிறிஸ்தவ ஜனங்கள் பிசாசுகளின் கிரியையினை மனித மனகுறைபாடுகள் என்றும், மனநிலையின் சமசீரற்ற நிலைமை மற்றும் திடீர் எழுச்சிகள் என்றும் கூறும்போது, இவர்கள் கர்த்தரும், அப்போஸ்தலர்களும் வஞ்சிக்கப்பட்டுள்ளனர் என்ற முடிவிற்கு வந்துவிட்டனர் என்பதை நாம் நன்கு அறிவோம். ஆனால் ஒரு வேளை இந்த விஷயத்தில் நமது கர்த்தர் தவறிழைத்திருப்பார் என்றால், வேறு காரியங்களிலும்கூட, அவரது போதனைகள் பாதுகாப்பான வழிகாட்டியாக இராது என்பதை நாம் அனைவருமே ஒப்புக்கொண்டாக வேண்டும்.

தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன (யாக்கோபு 2:19); இவ்வசனத்தில் இந்தப் பிசாசுகளின் மனோபாவம் மற்றும் அறிவுத்திறன்குறித்துக் கவனியுங்கள். மனிதர்கள் விசுவாசித்து நடுங்குகின்றார்களா? பிசாசுகள் நம்முடைய கர்த்தரை நோக்கி: நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று சத்தமிட்டு, அநேகரைவிட்டுப் புறப்பட்டது. அவரைக் கிறிஸ்து என்று பிசாசுகள் அறிந்திருந்தபடியால், அவர் தொடர்ந்து அவைகளைப் பேசவொட்டாமல் அதட்டினார் (லூக்கா 4:41). வேறொரு ஆவி: இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று கேட்டது (அப்போஸ்தலர் 19:15). குறிசொல்லுகிற ஆவியை உடைய ஓர் இளம் பெண்ணிடமிருந்து பவுல், ஆவியை விரட்டின சம்பவம் நல்லதொரு உதாரணமாய்க் காணப்படுகின்றது (அப்போஸ்தலர் 16:16-19). இந்த இளம் பெண்ணின் திறமையை அல்லது வல்லமையை அப்போஸ்தலன் இல்லாமலாக்கிப் போட்டார் என்று யாரேனும் சொல்லுவார்களா? அவளை ஆவி ஒன்று ஆட்கொண்டு, அவள் சரீரத்தைப் பயன்படுத்திக் கொண்டிருந்தது என்று ஒப்புக்கொள்ளலாம் அல்லவா? மனித சரீரத்திற்கு ஒவ்வாத தீய ஆவி அவளிடத்தில் குடிகொண்டிருந்தது என்று சொல்லலாம் அல்லவா?

வேதவாக்கியங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள பிசாசுகளைப் பொருத்தமட்டில், அவைகள் மரித்துப்போன பொல்லாத புருஷர் மற்றும் ஸ்திரீகளின் ஆவிகள் என்றும், அவைகள் ஆவியுலகத் தொடர்பாளர்களினால் அங்கீகரிக்கப்படும் பொய்யின் ஆவிகள் என்றும் கூறிக்கொண்டிருப்பவர்களில் அநேகருக்கு இன்னொரு சிக்கல் காத்திருக்கின்றது; ஏனெனில் மரித்துப்போன பொல்லாதவர்களின் ஆவி (ஆத்துமா) நரக சித்திரவதைக்குள் கடந்துசெல்லும் என்று இவர்கள் கூறுவதுண்டு, காரணம் இவர்கள் ஷியோல் மற்றும் ேே டிசை சித்திரவதை ஸ்தலம் என்று தவறாய்ப் புரிந்திருக்கின்றனர். அப்படியானால், எப்படி இந்த ஆவிகளினால் இவ்வளவு சுதந்தரமாகச் சுற்றித்திரிந்து கொண்டிருக்க முடிகின்றது?

பில்லிசூனியம், குறிசொல்லுதல், மாயவித்தைகள், மாந்திரீகம் முதலானவைகள் அநேகரால் முற்றிலும் ஏமாற்று வித்தைகளாகப் பார்க்கப்படுகின்றன. ஆனால் இவைகள் எகிப்தியர்கள் மத்தியில்

பலமான இடத்தைக் கைப்பற்றியிருந்ததைக் காண்கையிலும், இவைகளுக்கு எதிராக இஸ்ரயேலர்களுக்காகத் தேவன் விசேஷித்த ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார் என்று காண்கையிலும், அவர் நல்ல விஷயங்களுக்கு எதிராக அல்லது இல்லாத ஏதோ சில காரியங்களுக்கு எதிராக எந்தக் கட்டுப்பாடுகளையும் விதிக்கவில்லை என்பதில் நமக்குச் சந்தோஷமேயாகும். இஸ்ரயேலர்களுக்குக் கொடுக்கப்பட்ட அறிவுரையானது மிகவும் தெளிவாக இருந்தன: (மரித்துப்போனவர்களோடு பேசுவதாகக் கூறிக்கொள்ளும்) குறிசொல்லுகிறவர்களோடோ, சூனியக்காரர் அல்லது சூனியக்காரிகளோடோ, மாய சக்திகளோடோ, வசியம்பண்ணுகிறவர்களோடோ, மாந்திரீகத்தினாலும், மந்திரம் ஓதுவதினாலும் அற்புதங்கள் நிகழ்த்துபவர்களோடோ எவ்விதமான தொடர்புகொள்ளுதலும், குறிகேட்பதும் பண்ணப்படக்கூடாது என்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளன. பின்வரும் வேதவாக்கியங்கள் அனைத்தையும் கவனமாய் வாசித்துப்பாருங்கள்: யாத்திராகமம் 22:18; உபாகமம் 18:9-12; லேவியராகமம் 19:31; 20:6, 27; 2 இராஜாக்கள் 21:2, 6, 9, 11; 1 நாளாகமம் 10:13-14; அப்போஸ்தலர் 16:16-18; கலாத்தியர் 5:19-21; வெளிப்படுத்தல் 21:8; ஏசாயா 8:19-20; 19:3)

அஞ்சனக்காரியும், ஆவியுலகப் பேச்சாளருமான எந்தோரின் சூனியக்காரியோடு, இராஜாவாகிய சவுல் ஆலோசனைகூட்டம் நடத்தினது பற்றி 1 சாமுயேல் 28:7-20-வரையிலுள்ள வசனங்களில் இடம்பெறும் வேதாகம பதிவானது, இன்று செய்யப்பட்டு வரும் காரியங்களுக்கு உதாரணமாய்க் காணப்படுகின்றது. இந்த அஞ்சனம் பார்க்கிறவர்கள் சம்பந்தமான பிரமாணங்கள் மிகவும் கடும் கட்டுப்பாடுகளுடன் காணப்பட்டபோதிலும், தண்டனையாக மரணம் விதிக்கப்பட்டிருந்தபோதிலும், இன்றுள்ள ஆவியுலகத் தொடர்பாளர்கள் கூறிக்கொண்டிருப்பதுபோன்று, அன்றும் மரித்துப்போன நண்பர்களிடமிருந்து இயற்கைக்கு அப்பாற்பட்ட தகவல் பெறுவதாக நம்பி சில நபர்கள் கூறிக்கொண்டிருந்தனர்; இவர்கள் மூலமாகப் பெற வாய்ப்பிருந்த இந்த ஆதாயங்களுக்காக, சிலர் தங்கள் ஜீவனையும் பணையம் வைக்க விரும்பினார்கள். தேவன் கட்டளையிட்டிருந்தபோதிலும், இன்னுமாகத் தானும் கட்டளையிட்டிருந்த போதிலும்,இ வைகளைம ீறியும்இ ஸ்ரயேலில்அ ஞ்சனம்பார்க்கிறஅ நேகர்க ாணப்பட்டனர்எ ன்பதை இராஜாவாகிய சவுல் நன்கு அறிந்திருந்தார்; இவரின் வேலைக்காரர், எந்தோரிலுள்ள அந்த அஞ்சனம்பார்க்கும் ஸ்திரீயைக் கண்டுபிடிப்பதற்குச் சிரமப்படவில்லை. அஞ்சனக்காரியை சந்திப்பதற்கென்று சவுல் வேஷம் மாறிக்கொண்டார்; எனினும் இந்தப் பெண், சவுல் சௌந்தரியவான் என்றும், எல்லா இஸ்ரயேல் ஜனங்களும் அவர் தோளுக்குக் கீழாயிருந்தார்கள் என்றும் நன்கு அறிந்திருந்தாள் என்பதில் சந்தேகமில்லை (1 சாமுயேல் 9:2). ஆகையால் அத்தருணத்தில் அஞ்சனம்பார்ப்பதின் நிமித்தமாக, தனக்கு எந்தப் பாதகமும் வருவதில்லை என்று, அங்கு வந்திருந்த சவுலின் உறுதிமொழியினையும், வாக்குறுதியையும் பெற்றுக்கொள்வதில் அப்பெண் கவனமாய் இருந்தாள்.

எந்தோரின் அஞ்சனக்காரி மூலம் பொல்லாத ஆவிகள் பயன்படுத்தின வழிமுறைகளானவைகள் (methods), இன்று பயன்படுத்தப்படும் வழிமுறைகளுக்கு ஒத்திருந்தது. இந்த ஆவிகள் அஞ்சனக்காரியினுடைய மனக்கண்களுக்கு முன்பாக, வயதான தீர்க்கத்தரிசியாகிய சாமுயேலுக்கு ஒத்த ஒரு தோற்றத்தினை - நீண்ட சால்வையைப் போர்த்தியிருக்கும் வழக்கத்தின்படியான ஒரு தோற்றத்தினை உருவாக்கிக் காண்பித்தார்கள். அவள் தனது இந்த மனக்காட்சியினை விவரித்தபோது, சவுல் உடனடியாக, அது சாமுயேல்பற்றின விவரங்களாக இருக்கின்றன என்று அடையாளம் கண்டுகொண்டார்; ஆனால் சவுல் எதையும் நேரடியாகப் பார்க்கவில்லை; மாறாக சொல்லப்பட்ட விவரங்களை வைத்து, வந்துள்ளவர் சாமுயேல் என்று அறிந்துகொண்டார் என்று பார்க்கின்றோம். இம்மாதிரியான சூழ்நிலைகளில் எந்த ஒரு நபரும் பொதுவாக நம்பிவிடுவதுபோன்றே சவுலும் எளிதில் நம்பிவிட்டவராக, அதற்குமேல் கேள்விகளைக்

கேட்கவில்லை; அதாவது ஒருவேளை சாமுயேல் இப்பொழுது ஆவிக்குரிய ஜீவியாகவும், நல்ல நிலைமையிலும் இருப்பாரானால், பின்னர் ஏன் அவர் தற்காலத்தில் காணப்பட்டது போன்றே வயதானவராகவும், முதுகு வளைந்தவராகவும் காணப்படுகின்றார் என்று சவுல் கேள்வி கேட்கவில்லை; இன்னுமாக மனிதனாக இருந்தபோது சாமுயேல் போர்த்தியிருந்த அதே பழைய சால்வையை, ஏன் அவர் ஆவிக்குரிய உலகிலும் போர்த்திக்கொண்டிருக்கின்றார் என்றும் சவுல் கேள்வி கேட்கவில்லை.

சவுல் கர்த்தரினால் கைவிடப்பட்டிருந்தார்; இப்போதும்கூடத் தீர்க்கத்தரிசிபோல் ஆள்மாறாட்டம் செய்து, சாமுயேலின் பெயரில், தங்கள் தொடர்பாளராகிய அஞ்சனக்காரி மூலம் சவுலிடம் பேசிக்கொண்டிருந்த இந்தப் பொய்பேசும் ஆவிகளினால் சவுல் சுலபமாய் வஞ்சிக்கப்பட்டுவிட்டார்.

பூமியின் சகல காரியங்களைப்பற்றி நன்கு தகவல் அறிந்தவர்களாக மட்டுமல்லாமல், இந்த விழுந்துபோன ஆவிகள், ஏமாற்றுவதிலும் வல்லவர்களாக இருந்தார்கள். இந்த ஆவிகள் சவுலுக்குப் பதிலளிக்கையில், இவரை நன்கு ஏமாற்றத்தக்கதாக மரித்துப்போன தீர்க்கத்தரிசியின் பாவனைகளையும், பாணிகளையும் பாவித்துக்கொண்டன. (இப்படித்தான் இந்தப் பொய்யான ஆவிகள் மரித்தோரின் முகத்தோற்றத்தினையும், பாணிகளையும், இயல்புகளையும்போன்று போலியாய் நடித்துக்காட்ட எப்போதும் நாடுகின்றன). நீ என்னை எழும்பி வரப்பண்ணி, என்னைக் கலைத்தது என்ன? என்று சாமுயேலின் தோற்றத்தில் வந்த ஆவி கேட்டது. இந்தப் பதிலானது, ஒரு நபர் மரிக்கும்போது, ஓர் உயிர்த்தெழுதலுக்காகக் காத்திருக்கையில், அவர் ஷியோலில், அதாவது பிரேதக்குழியில் உணர்விழந்து இருப்பார் என்றுள்ள யூதர்களின் நம்பிக்கைக்கு இசைவாகவே காணப்பட்டது (யோபு 14:12-15, 21; சங்கீதம் 90:3; பிரசங்கி 9:5-6). ஆகையால் சாமுயேல் பிரேதக்குழியிலிருந்து அழைக்கப்பட்டார் என்பதுபோலும், பரலோகத்திலிருந்து அழைக்கப்படவில்லை என்பதுபோலும், அவரது இளைப்பாறுதல் அல்லது அமைதலான நித்திரை கலைக்கப்பட்டது என்பதுபோலும் அந்த ஆவிகள் காட்டிக்கொண்டன (சங்கீதம் 13:3; யோபு 14:12; சங்கீதம் 90:5; யோவான் 11:11-14). ஆகையால் உயிரோடு இருக்கும்போது, தன்னைப் பார்க்க மறுத்த சாமுயேல் தீர்க்கத்தரிசி, இப்பொழுது அஞ்சனக்காரியின் ஆச்சரியமான வல்லமைகள் மூலம் தன்னோடு உரையாடும்படிக்குப் பலவந்தம் பண்ணப்பட்டுள்ளார் என்று சவுல் எண்ணிகொள்ளத்தக்கதாக எளிதாக வஞ்சிக்கப்பட்டுப்போனார் (1 சாமுயேல் 15:26, 35-ஆம் வசனங்களை பார்க்கவும்). சவுல் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்போது, கர்த்தர் அவனுக்குச் சொப்பனங்களினாலாவது, ஊரீமினாலாவது, தீர்க்கத்தரிசி களினாலாவது மறுஉத்தரவு அருளவில்லை. சாமுயேல் சவுலை நோக்கி: நீ என்னை எழும்பிவரப்பண்ணி, என்னைக் கலைத்தது என்ன என்று கேட்டான். அதற்குச் சவுல்: நான் மிகவும் நெருக்கப்பட்டிருக்கிறேன்; பெலிஸ்தர் எனக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார்கள்; தேவனும் என்னைக் கைவிட்டார்; அவர் தீர்க்கத்தரிசிகளினாலாவது, சொப்பனங்களினாலாவது எனக்கு மறு உத்தரவு அருளுகிறதில்லை; ஆகையால் நான் செய்ய வேண்டியதை நீர் எனக்கு அறிவிக்கும்படிக்கு, உம்மை அழைப்பித்தேன் என்று சவுலின் வார்த்தைகள் காணப்பட்டன. (1 சாமுயேல் 28:6, 15)

## தேவனுக்குப்பதிலாக அஞ்சனக்காரிக்குச் சாமுயேல் கீழ்ப்படிவாரா?

இம்மாதிரியான ஒரு சந்தர்ப்பத்தில், சவுலிடம் சாமுயேல் உரையாடுவார் என்று அனுமானிப்பதிலுள்ள பொருந்தாமையினை, சரியான அறிவினைப் பெற்றிருக்கும் எந்த ஒரு நபரினாலும் உடனடியாகக் கண்டுகொள்ள இயலும்.

(1) தேவன் சவுலைக் கைவிட்டுவிட்டார் என்பதை (உயிரோடிருக்கும்போது) சாமுயேல் அறிந்திருந்தார்; ஆகையால் சவுலிடம் பேசுவதற்கோ, கர்த்தரே சொல்ல விரும்பாத எந்த ஒரு தகவலையும் சவுலுக்குக் கொடுப்பதற்கோ சாமுயேலுக்கு உரிமை இல்லாதிருந்தது. மேலும் சாமுயேலும் இப்படிச் செய்யமாட்டார்.

(2) கர்த்தரால் கண்டிக்கப்பட்டவர்களும், இஸ்ரயேலின் தேசத்தில் காணப்படுவதற்கு உரிமையற்றவர்களுமான ஆவியுலகத் தொடர்பாளர்கள்/spirit-medium, தேவன் கைவிட்ட பொல்லாத இராஜாவின் வல்லமையினால், சாமுயேலைக் கலைக்க முடியும் என்றும், அவரை ஷியோலிலிருந்து வெளியே கொண்டுவர முடியும் என்றும் அனுமானிப்பது எத்தனை நகைப்பிற்கிடமானதாகும். சாமுயேல் பூமிக்கடியில் காணப்பட்டாரா அல்லது தூரமாய்ப் பரலோகத்தில் காணப்பட்டாரா? அவர் எங்கிருந்தாலும், இராஜாவாகிய சவுலின் கேள்விகளுக்கு அவர் பதில் கொடுக்கத்தக்கதாக, அவர் இராஜாவின் முன் வரும்படிக்கு, அவருக்குக் கட்டளையிடுவதற்கு அஞ்சனக்காரிக்கு அதிகாரம் இருந்ததா? உயிரோடு இருப்பவர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கத் தோன்றும்படிக்கு, மரித்தோரைக் கலைப்பதற்கும், அவர்களை மேலே அழைத்து வருவதற்கும் அல்லது வேறு ஏதேனும் விதத்தில் அவர்களை அழைத்துக் கொண்டுவருவதற்கும், ஆவியுலகத் தொடர்பாளர்களுக்கு வல்லமை உண்டு என்று அனுமானிப்பது பகுத்தறிவிற்கு உட்பட்டதாக இருக்குமா?

சாமுயேலைப்போன்று போலித்தனமாய் ஆள்மாறாட்டம் பண்ணி வந்த அஞ்சனக்கார ஆவிகளானது, சவுல் அறிந்திராத எதையும் முன்னுரைக்கவில்லை. தன்னிடமிருந்தும், தன் வீட்டாரிடமிருந்தும் இராஜ்யபாரம் கடந்துபோகக் கர்த்தர் கட்டளையிட்டுள்ளார் என்று சவுல் அறிந்திருந்தார்; மேலும் நாளைய தினத்தில் பெலிஸ்தரின் சேனைகளோடுள்ள யுத்தத்தைக்குறித்த அச்சத்தினால், சவுல் அஞ்சனக்காரியை நாடினார். தாவீது தனக்குப்பின் அரியணைக்கு வருவார் என்று தேவன் சவுலிடம் கூறியிருந்தபடியால், சவுல் தனக்கும், தன் வீட்டாருக்கும் இரக்கம் கிடைக்குமென எதிர்பார்ப்பு கொண்டிருக்கவில்லை. கர்த்தர் உன்னுடைய ஜனமாகிய இஸ்ரயேலரையும் பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுப்பார்; நாளைக்கு நீயும் உன் குமாரரும் என்னோடிருப்பீர்கள்; இஸ்ரயேலின் பாளையத்தையும் கர்த்தர் பெலிஸ்தரின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்ற பதிலையே சவுல் எதிர்பார்த்தார் (1 சாமுயேல் 28:19). பெலிஸ்தருடைய நிலை மற்றும் சேனையின் பெலத்தைக்குறித்தும், சவுலின் நிலை மற்றும் சேனையின் பெலவீனத்தைக்குறித்தும், சவுல் ஏற்கெனவே பயந்து போயுள்ளார் என்பதுகுறித்தும், சூழ்நிலையின்நிமித்தம் கவனம் சிதறின நிலையில், அஞ்சனக்காரி வழியாய் இப்படிக் குறிகேட்டுக்கொண்டிருக்கின்றார் என்பதுகுறித்தும், (நன்கு தகவல் அறிவுள்ள) பிசாசுகள் சவுலைவிட நன்கு அறிந்துவைத்திருந்தன. அந்த ஒரு காலகட்டத்தின்போதுள்ள யுத்த காரியத்தைக்குறித்து நன்றாய்த் தெரிந்திருக்கும் யார் ஒருவரும், பின்வரும் காரியங்களை அறிந்திருப்பார்கள்:

(1) அந்த ஒரு நாள் யுத்தத்தோடு காரியங்கள் முடிந்து விடும்.

(2) மேலும் இராஜா மற்றும் அவரது வீட்டார் மரித்து விடுவார்கள் என்பதே நியாயமான விளைவாகக் காணப்படும். எனினும் அந்தத் தீய ஆவிகள் தவறாய்க் காரியங்களை முன்னுரைத்தன; ஏனெனில் சவுலின் குமாரர்களில் இருவர் உயிர்த்தப்பி, பல வருடங்கள் வாழ்ந்தார்கள். அஞ்சனக்காரியைச் சந்தித்து பல நாட்கள் கழித்தே யுத்தமும், சவுலின் மரணமும் சம்பவித்ததென்று ***அறிஞர்கள்*** கருத்துகளைக்கூறி, தீய ஆவிகளின் வார்த்தைகளை மறுக்கின்றனர்.

சாத்தானும், தீமை செய்வதில் சாத்தானின் கூட்டாளிகளுமான விழுந்துபோன தூதர்களும், ஜீவியத்தின் அநேகக் காரியங்கள் தொடர்புடைய விஷயத்தில், மனுஷரைக்காட்டிலும் அதிகம் தெரிந்திருப்பார்கள் எனும் கூற்றில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. சுபாவத்தின்படி அவர்கள் மனுஷரைக்காட்டிலும் உயர்ந்தவர்கள் என்றும், மிகவும் அறிவுள்ளவர்கள் என்றும் நாம் நினைவில்கொள்ள வேண்டும்; ஏனெனில் மனுஷன் தேவதூதரைக்காட்டிலும் சற்று சிறியவனாகச் சிருஷ்டிக்கப்பட்டுள்ளான் (சங்கீதம் 8:5); இதுவுமல்லாமல் மரணத்தில் சீக்கிரம் அறுப்புண்டுபோகின்ற மனுஷனுடைய சொற்பமும், முழுக்க பிரச்சனைகளும் உள்ள ஜீவியத்தின் வருடங்களோடு ஒப்பிடுகையில், சாத்தானுக்கும், விழுந்துபோன ஆவிகளுக்கும் அழிவு மற்றும் மரணத்தின் தொந்தரவு இல்லாத பல்லாயிர வருடங்களின் (வாழ்நாள்) அனுபவங்கள் இருக்கின்றன என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். மனுக்குலத்தினால், இந்தப் பொல்லாத ஆவிகளினுடைய தந்திரங்களைச் சமாளிக்க முடியாமல் காணப்படுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை; இந்தப் பிசாசுகளுடன் தொடர்புகொள்வதற்கு மறுப்பு தெரிவிக்க வேண்டும் என்ற தெய்வீக ஏற்பாட்டில்தான் நமக்கான ஒரே பாதுகாப்பு காணப்படுகின்றது. ஆகையால் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்போது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற (கோபமுள்ள) சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான் என்று கர்த்தருடைய வார்த்தை காணப்படுகின்றது. (யாக்கோபு 4:7; 1 பேதுரு 5:8-9)



சவுல் மற்றும் எந்தோரின் அஞ்சனக்காரி

அறிவுள்ள இந்தப் பொல்லாத ஆவிகளினால் கடந்த காலத்தைக்குறித்தும், நிகழ் காலத்தைக்குறித்தும் கூறமுடிந்தாலும், இவைகளால் ***எதிர்காலத்தைக்குறித்து யூகிப்பதைத் தவிர்த்து*** (guess), அதிகமாக வேறு எதுவும் செய்ய முடியாது. எனினும் இந்த யூகங்களானது, இவர்களிடம் குறிகேட்கின்றவர்களைத் திருப்திப்படுத்துவதற்கென்று சொல்லப்படுகின்றது; ஒருவேளை குறிகேட்கின்றவன் கொண்டிருக்கும் எதிர்பார்ப்புகளுக்கு எதிர்மாறாக விளைவுகள் இருக்கப்போகின்ற போதிலும், கூறப்படுகின்ற விஷயங்கள் உண்மைபோன்று தோன்றுமளவுக்கு மிகவும் தந்திரமாக பெரும்பாலும் முன்வைக்கப்படுகின்றது. Croesus/க்ரோயஸ் எனும் இராஜா, Delphi/டெல் பியிலுள்ள கோயிலுக்குக் குறிகேட்கச் சென்றபோது, அங்கு அவருடைய தற்காலத்தைக்குறித்துச் சொல்லப்பட்டவைகளைக் கேட்ட மாத்திரத்தில், அவர் மனித சக்திக்கு அப்பாற்பட்ட அறிவு விளங்கினதாகப் புரிந்துகொண்டார்; அதில் நம்பிக்கை அடைந்தவராக, தான் பெர்சியர்களுக்கு எதிராக யுத்தம்பண்ண படையெடுத்துச் செல்லலாமா என்று அந்த ஆவியுலகத் தொடர்பாளர்களிடம் விசாரித்தார். அவருக்குக் கொடுக்கப்பட்ட பதிலானது, வரலாற்று ஆசிரியரான ஹெரோடாட்டஸ் (Herodotus) அவர்களினால் பதிவுசெய்யப்பட்டுள்ளது. Halys/ஹாலிஸ் ஆற்றைக் கடந்துசெல்கையில், Croesus/க்ரோயஸ் வலிமைமிக்க பேரரசை அழித்திடுவார்! என்பதே (ஆவிகளின்) பதிலாய்க் காணப்பட்டது. இதை நம்பி க்ரோயஸ் பெர்சியர்களைப் படையெடுத்துச் சென்று தாக்கி, தோற்றுப்போனார். க்ரோயசின் வலிமைமிக்க பேரரசுதான் அழிந்தது! பிசாசுகளுக்கு எதிர்காலத்தைக்குறித்துத் தெரியாது என்பதற்குப் பூமியின் வரலாறு முழுவதும் சாட்சியங்கள் காணப்படுகின்றன. இந்த ஆவிகளுக்குத் தேவனுடைய வார்த்தைகளானது அறைகூவலிடுகின்றது:

உங்கள் வழக்கைக் கொண்டு வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பலமான நியாயங்களை வெளிப்படுத்துங்கள் என்று யாக்கோபின் இராஜா உரைக்கிறார். அவர்கள் அவைகளைக் கொண்டு வந்து, சம்பவிக்கப்போகிறவைகளை நமக்குத் தெரிவிக்கட்டும்; அவைகளில் முந்தி சம்பவிப்பவைகள் இன்னவைகளென்று சொல்லி, நாம் நம்முடைய மனதை அவைகளின்மேல் வைக்கும்படிக்கும், பிந்தி சம்பவிப்பவைகளையும் நாம் அறியும்படிக்கும் நமக்குத் தெரிவிக்கட்டும்; வருங்காரியங்களை நமக்கு அறிவிக்கட்டும். பின்வரும் காரியங்களை எங்களுக்குத் தெரிவியுங்கள்; அப்பொழுது நீங்கள் தேவர்கள் என்று அறிவோம். (ஏசாயா 41:21-23)

ஒருவேளை அடுத்த நாள் சவுல், சாமுயேலோடுகூட இருக்கப்போகின்றார் என்றால், சாமுயேல் தீர்க்கதரிசி எங்கேயிருந்தார்? நிச்சயமாக இவர்கள் இருவரும் சேரப்போகின்ற இடம் பரலோகமாய் இராது, ஏனெனில் நிச்சயமாகவே பொல்லாங்கனாகிய சவுல் பரலோகத்திற்குள் பிரவேசிப்பதற்குத் தகுதியற்றவர் ஆவார் (யோவான் 3:5). அதேசமயம் கந்தகமும், சித்திரவதையும் உள்ள ஸ்தலத்திலும் இவர்கள் இருவரும் சேரப்போவதில்லை; ஏனெனில் நிச்சயமாகவே சாமுயேல் அப்படியொரு இடத்திற்குரியவரல்ல. இப்படியாக இருப்பதற்கு வாய்ப்பில்லை, ஏனெனில் சாமுயேலினாலும், முற்பிதாக்களினாலும், தீர்க்கத்தரிசிகளினாலும் போதிக்கப்பட்டபடி, அக்காலங்களில் நிலவின பொதுவான ஒரு விசுவாசத்தினுடைய கண்ணோட்டத்திலேயே, அந்தக் குறிசொல்லும் ஆவிகள் சவுலிடம் இப்படியாகத் தெரிவித்தன; அதாவது மரித்துப்போகின்றவர்கள் அனைவரும், அவர்கள் நல்லவர்களாகவோ, கெட்டவர்களாகவோ இருப்பினும், அனைவரும், பிரதான தூதனாகிய மிகாயேலுடைய உயிர்த்தெழுதலின் வல்லமையினால் எழுப்பப்படுவதுவரையிலும், நித்திரை நிலையாகக்

காணப்படும் மரணநிலையாகிய ஷியோலுக்கு, அதாவது பாதாளத்துக்குப் போவார்கள் என்பதே அந்த விசுவாசமாகக் காணப்பட்டது (தானியேல் 12:1-2); ஆனால் அஞ்சனக்காரியிடம் காணப்பட்ட குறிசொல்லும் ஆவியோ, முன்கூட்டியே அதனால் மரித்தோரை எழுப்ப முடிந்தது என்று கூறிற்று; ஆனால் நாம் விளக்கிக் காண்பித்திருக்கின்றபடி, இது ஒரு வஞ்சனையாகும்; சாமுயேல்போல் ஆள்மாறாட்டம் பண்ணி, சாமுயேலின் சார்பாக பதில்கொடுத்த இந்தப் பொய்யுரைக்கும் ஆவிகளின் காரியம் மோசடியான காரியமாகும்.

இந்த ஒரு வேதவாக்கிய பகுதியைக்குறித்து Charles Wesley/சார்லஸ் வெஸ்லி அவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார்:

நாளை நீயும், உன் குமாரனும்
என்னோடுகூட இளைப்பாறுவீர்கள்;
இந்தப் புனிதமான வார்த்தைகள் எதை முன்னறிவித்தன?
பிரியப்போகும் அந்த உயிருக்கு நம்பிக்கையின் பிரகாசமாய் இருந்ததா?

அங்குச் சாமுயேலோடு சவுல் இருப்பாரெனில்,
சாமுயேலின் நிமித்தம் சவுலுக்கு அங்கு நரக வலி இருக்காதே;
அங்கு அன்புள்ள யோனத்தான் இருப்பாரெனில்,
சவுலுக்கு அங்கு யோனத்தானின் நிமித்தம் மீளா பரிதவிப்பு இருக்காதே.

இந்த விழுந்துபோன தூதர்கள் அல்லது பிசாசுகள் காட்சி கொடுக்கையில், சராசரி அறிவுள்ள மனுஷர்கள் இவைகளினால் மிகவும் எளிமையாக வஞ்சிக்கப்பட்டு, உயிரோடிருப்பவரிடமிருந்து வரும் சான்றுகளைவிட, மரித்தோர் தொடர்புடைய இந்த உண்மையற்ற சான்றுகளை ஏற்றுக்கொண்டு விடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்க ஒரு காரியமாய் இருக்கின்றது. ஆவியுலகத் தொடர்பாளர்கள், மரித்த ஒரு நபர், தோற்றத்தில் எப்படி இருந்தார் என்பது பற்றியும், அவரது பாவனைகள் உடைகள் பற்றியும் விவரங்கள் கொடுத்தால், குறிகேட்க வந்தவன் அதை நம்புவான்; இன்னுமாக மரித்த நபரிடமிருந்து வரும் செய்தியினை குறிகேட்க வந்தவன் புனிதமான ஒரு செய்திபோன்று கருதிக்கொள்வான்; ஆனால் குறிகேட்க வந்த மனுஷனோ, உயிரோடிருக்கும் ஓர் ஏமாற்று பேர்வழியிடம் ஏமாறாதபடிக்கு மிகவும் ஜாக்கிரதையாகக் காணப்படுவான்; இன்னுமாக ஏமாற்றுப்பேர்வழியின் வேலைக்காரன் வாயிலாக வரும் செய்தியின் விஷயத்திலும், ஏமாறாதபடிக்கு ஜாக்கிரதையாகக் காணப்படுவான்.

வேத வாக்கியங்களில் குறிசொல்கிறவர்கள்குறித்தும், சூனியக்காரிகள்குறித்தும், ஆவியுலகத் தொடர்பாளர்கள்குறித்தும் குறிப்பிடப்பட்டிருக்கும் காரியமானது, இந்தத் தொடர்பாளர்கள் வாயிலாக இந்த ஆவிகளானது, பல நூற்றாண்டுகள் காலமாக இஸ்ரயேலர்களோடு தொடர்புகொள்ள நாடிக்கொண்டிருக் கின்றது என்று நாம் புரிந்துகொள்ளத்தக்கதாக வழிநடத்துகின்றது. ஆனால் அந்தந்த காலத்திற்கேற்ப இவைகள் தங்களை வெளிப்படுத்தும் விதங்களை மாற்றிக்கொள்வது இவைகளின் வழக்கமாயிருக்கின்றது; கொஞ்சம் காலம் New England மற்றும் Ohio மற்றும் Europe முழுவதும் பில்லிசூனியம் பிரபலமாயிருந்து, பின்னர் பிரபலமற்றுபோனது; பின்னர் ஆவியுலகைத் தொடர்புகொள்ளும் கொள்கை பிரபலமாயிற்று; பின்னர் இதுவும்போய், Clairaudience/சேணோசை, Materialization/உருவம் எடுத்தல் போன்றவைகள், இவைகளின் பிரதான பிரயாசங்களாகக் காணப்படுகின்றன; இதில் உருவம் எடுத்தல் என்பது மிகவும் கடினமான ஒன்றாகவும், பாதகமானதாகவும், பெரும்பாலும் குறிசொல்லுகிறவர்கள் மற்றும் ஏமாற்றுக்காரர்களின் உதவியோடும் நடப்பிக்கப்படுகின்றது.

R196 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## ஆவியுலகத் தொடர்பு பற்றின கோட்பாடு

வேதாகமச் சொல் தொகுதியினை/concordance எடுத்துக்கொண்டு, அதில் சூனியக்காரர், சூனியக்காரிகள், குறிசொல்லும் ஆவியையுடைய அஞ்சனம்பார்க்கிறவர்கள், மனுக்குலத்தோடு தொடர்புகொள்ளத்தக்கதாக பிசாசுகள் பயன்படுத்தும் தொடர்பாளர்கள்/mediums ஆகியவைகளுக்கு எதிராக, தேவன் எவ்வளவு காரியங்களைப் பேசியிருக்கின்றார் என்பதைப் பாருங்கள். குறிசொல்லும் இந்த ஆவியின் தொடர்பாளர்கள், தாங்கள் மரித்தவர்களோடு தொடர்புகொள்வதாகவும், அவர்களிடமிருந்து தங்கள் தகவல்களைப் பெற்றிருப்பதாகவும் கூறிக்கொள்கின்றனர். இப்படிச் சொல்வதினால் இவர்கள், மரித்தவர்களினால் எந்தத் தகவலையும் அளிக்க முடியாது என்று நமக்கு உறுதியளிக்கும் தேவனுடைய வார்த்தைகளின் தெளிவான அறிக்கைக்கு முரண்படுகின்றனர். (யோபு 14:10-21; பிரசங்கி 9:10)

ஆனால் இது, ஏதேனில் வைத்து ஏவாளிடம் சாத்தான் கூறிய பொய்யை, இன்னும் தொடருவதற்குரிய சாத்தானின் மற்றுமொரு வழிமுறை மாத்திரமேயாகும். [அவன் ஆதிமுதல் பொய்யனாய் இருந்தான் என்று இயேசு கூறியுள்ளார்]. மனிதன் கீழ்ப்படியாமல்போனால், அவன் மரித்துப்போவான் என்று தேவன் கூறியிருந்தார்; ஆனால் சாத்தானோ இந்த வார்த்தைகளுக்கு முரணாகப் பேசினார்; மனிதன் சுபாவத்தின்படி அழிக்கமுடியாதவனாவான் மற்றும் அவனால் மரிக்க முடியாது என்றும், தேவன் பொய்யுரைத்துள்ளார் என்றும் சாத்தான் கூறினார். அதுமுதற்கொண்டு, நீங்கள் சாகவே சாவதில்லை எனும் வார்த்தைகளை விடாப்பிடியாக நிலைநிறுத்த நாடி வந்தார். ஆவியுலகத் தொடர்பாளர்கள் (mediums) வாயிலாகத் தங்களிடம் பேசினது பிசாசுகளின் ஆவிகளே என்று ஜனங்கள் ஒருவேளை புரிந்துகொள்வார்கள் என்றால், ஜனங்கள் தவிர்த்து வெறுத்துவிடுவார்கள் என்பதைச் சாத்தான் நன்கு அறிந்திருந்தார்; ஆகையால் தகவல்களைக் கொடுப்பது மரித்தவர்களே ஆவார்கள் என்று காட்டிக்கொள்கின்றான்; [இந்தம ரித்துப்போனவர்கள்,ம ரித்தவர்களாய்இ ராமல்,மு ன்பில்லாதளவுக்கு ஜீவனுள்ளவர்களாய் இருக்கின்றார்களென (சாத்தான்) காண்பித்துக் கொள்கின்றான்].

இதற்கான ஓர் உதாரணம் 1 சாமுயேல் 28-ஆம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. இஸ்ரயேலின் இராஜாவாகிய சவுல் பொல்லாதவராகிப் போனார்; தேவன் தீர்க்கத்தரிசிகள் மூலமாகச் சவுலோடு எந்தத் தொடர்பு பரிமாற்றங்களையும் வைத்துக்கொள்ளவில்லை. சவுல் பெலிஸ்தருக்கு எதிராக ஒரு யுத்தம் மேற்கொண்டார்; மேலும் பெரியதொரு யுத்தத்தை அவர் பண்ண வேண்டியவராகவும் காணப்பட்டார். அவர் ஆலோசனை பெறவும், முடிவு என்னவாக இருக்குமென அறியவும் விரும்பினார். தேவன் அவருக்குப் பதில்தர மறுத்ததினால், நிராகரிக்கப்பட்ட மற்றும் தடைவிதிக்கப்பட்ட வகுப்பாரில் ஒரு வகுப்பாராகிய ஆவியுலகத்

தொடர்பாளரும், குறிசொல்லும் ஆவியை உடையவளுமான எந்தோரின் அஞ்சனம்பார்க்கும் ஸ்திரீயின் உதவியினை நாடினார்.

இந்தச் சம்பவத்தை அனைவரும் அறிந்திருப்பீர்கள் (1 சாமுயேல் 28:3-20); அந்த அஞ்சனக்காரி, விசாரிக்க வந்தவர் யார் என்று தெரியாததுபோன்று காட்டிக்கொள்கின்றாள். சவுலின் வாஞ்சையை அறிந்துகொள்கின்றாள். சாமுயேலுடைய உருவ தோற்றத்தின் விவரங்களைக் கொடுக்கின்றாள். முழுச்சம்பவத்தையும் அறிவீர்கள். பின்னர்ச் சவுல் யுத்தத்தில் தோற்றுப்போகின்றார்; அவரும், அவரது குமாரரும் மரித்துப்போய்விடுகின்றனர். அஞ்சனக்காரி மூலம் முன்னுரைக்கப்பட்ட விஷயங்கள் நடந்தது என்பதினால், இது சாமுயேல்தான் தகவல் கொடுத்திருக்கின்றார் என்பதற்கு நிரூபணமாக இருக்கின்றது என்று சிலர் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் இந்தத் தகவல்களையெல்லாம் சாத்தானால் முன்னறிவிக்க முடியும்; ஒருவேளை சாமுயேல் உயிரோடு இருந்திருந்தால் அவராலும், இந்தத் தகவல்களையெல்லாம் முன்னறிவித்திருக்க முடியும். இப்படிச் சாத்தானால் முன்னறிவிக்க முடியும் என்று கூறுவதற்குரிய காரணம், சாத்தான் தீர்க்கத்தரிசியாகக் காணப்பட்டார் என்பதினால் இல்லை; அல்லது தேவன் வரவிருக்கின்ற காரியங்களைச் சாத்தானுக்கு வெளிப்படுத்தியுள்ளார் என்பதினாலும் இல்லை; மாறாக சாத்தான் தேவனுடைய வார்த்தைகளின் மாணாக்கன் ஆவார்; மேலும் சாத்தான் அந்த வார்த்தைகளின் விசுவாசியும் ஆவார். பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன (யாக்கோபு 2:19). சவுலின் தோல்வி மற்றும் தாவீது அரியணைக்கு வருவது குறித்துத் தீர்க்கத்தரிசியினால் முன்னுரைக்கப்பட்டுள்ளது; இதைச் சவுலும், சாத்தானும் அறிவார்கள்; மேலும் தேவனுடைய ஒவ்வொரு வார்த்தைகளும் உண்மையானவைகள் என்று சாத்தான் கற்றுணர்ந்திருக்கின்றார்.

மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும் எனும் அப்போஸ்தலனின் வார்த்தைகளையும் நாம் மறந்துவிடக்கூடாது (எபிரெயர் 2:14). சாத்தான் மரணதண்டனையைச் செயல்படுத்துகின்றவராகவும், தண்டனையைச் செயல்படுத்துவதற்குத் தேவனிடமிருந்து அனுமதி பெற வேண்டியவராகவும் இருப்பதினால் (யோபு 1:12), அடுத்த நாளின் யுத்தத்தில் சவுல் மற்றும் அவரது குமாரர்களின் மற்றும் மற்ற அநேகரின் ஜீவன் விஷயத்தில், தான் அதிகாரம் உடையவராய் இருப்பார் என்று சாத்தான் அறிந்திருப்பார் என்பதில் விநோதம் ஏதேனும் உள்ளதா? இல்லை; இது நியாயமான அனுமானமேயாகும். தேவன் மரணதண்டனைக்கு ஏதுவானதெனக் கண்டித்துள்ள ஒரு வழிமுறையினை மற்றும் பொல்லாப்பு என்று தீர்த்துள்ள ஒரு வழிவகையினை, தேவன் (அல்லது சாமுயேல்) பயன்படுத்துவார் அல்லது அங்கீகரிப்பார் என்று நாம் ஒரு கணம்கூட நிச்சயமாய் எண்ணக்கூடாது. (1 நாளாகமம் 10:13-ஆம் வசனத்தை வாசிக்கவும்)

# தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகள்

சங்கீதம் 89 - NLT (New Living Translation)

3 என்னால் தெரிந்துகொள்ளப்பட்டவனோடே உடன்படிக்கைபண்ணி,
என் தாசனாகிய தாவீதை நோக்கி:

20 என் தாசனாகிய தாவீதைக்கண்டு பிடித்தேன்;
என் பரிசுத்த தைலத்தினால் அவனை அபிஷேகம்பண்ணினேன்.

21 என் கை அவனோடே உறுதியாயிருக்கும்;
என் புயம் அவனைப் பலப்படுத்தும்.

27 நான் அவனை எனக்கு முதற்பேறானவனும்,
பூமியின் இராஜாக்களைப் பார்க்கிலும் மகா உயர்ந்தவனுமாக்குவேன்.

28 என் கிருபையை என்றென்றைக்கும் அவனுக்காகக் காப்பேன்;
என் உடன்படிக்கை அவனுக்காக உறுதிப்படுத்தப்படும்.

33 ஆனாலும் என் கிருபையை அவனை விட்டு விலக்காமலும்,
என் உண்மையில் பிசகாமலும் இருப்பேன்.

34 என் உடன்படிக்கையை மீறாமலும்,
என் உதடுகள் விளம்பினதை மாற்றாமலும் இருப்பேன்.

35 ஒருவிசை என் பரிசுத்தத்தின்பேரில் ஆணையிட்டேன்,
தாவீதுக்கு நான் பொய்சொல்லேன்.

36 அவன் சந்ததி என்றென்றைக்கும் இருக்கும்;
அவன் சிங்காசனம் சூரியனைப்போல எனக்கு முன்பாக நிலைநிற்கும்.

R2015

# தாவீதின் ஜெயங்கள்

## 1 சாமுயேல் 30:21-25


(211-பக்கம் இடம்பெறும் கட்டுரையின் தொடர்ச்சி)

தாவீதின் நீதியான நடக்கைபற்றின இன்னுமொரு பதிவானது, 1 சாமுயேல் 30:21-25-வரையிலான வசனங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளது; யுத்தத்தின்போது, சரீர பெலவீனத்தின் (விடாய்த்துப்போனதின்) காரணமாக அல்லது பொருட்களைப் பாதுகாக்க அல்லது வீட்டைப் பாதுகாக்க என்று யுத்தத்தில் கலந்துகொள்ளாமல் காணப்பட்டவர்களும், யுத்தத்திற்குச் சென்றவர்களோடுகூடச் சரிசமமாகக் கொள்ளையுடமைகளைப் பங்கிட்டுக்கொள்ளும்படியாகத் தாவீது இஸ்ரயேலுக்குப் பிரமாணத்தினை ஏற்படுத்தினார். இதைக்குறித்த பதிவு மிகவும் தெளிவாகக் காணப்படுகின்றது. அதை நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்: விடாய்த்துப்போனதினாலே தாவீதுக்குப் பின்செல்லாமல், பேசோர் ஆற்றண்டையிலே தங்கியிருந்த இருநூறுபேரிடத்துக்குத் தாவீது வருகிறபோது, இவர்கள் தாவீதுக்கும், அவனோடிருந்த ஜனத்திற்கும் எதிர்கொண்டு வந்தார்கள்; தாவீது அந்த ஜனத்தினிடத்தில் சேர்ந்து, அவர்கள் சுகசெய்தியை விசாரித்தான். அப்பொழுது தாவீதோடே நடந்துவந்த மனுஷரில் பொல்லாதவர்களும் பேலியாளின் மக்களுமான எல்லாரும்: அவர்கள் எங்களோடே வராதபடியினால் நாங்கள் திருப்பிக்கொண்ட கொள்ளையுடைமைகளில் அவர்களுக்கு ஒன்றும் கொடுப்பதில்லை; அவர்களில் ஒவ்வொருவனும் தன்தன் மனைவியையும்த ன்தன்ப ிள்ளைகளையுமேஅ ழைத்துக்கொண்டுே பாகட்டும்எ ன்றார்கள்.அ தற்குத் தாவீது: என் சகோதரரே, கர்த்தர் நமக்குத் தந்ததை நீங்கள் இப்படிச் செய்யவேண்டாம்; கர்த்தர் நம்மைக் காப்பாற்றி, நமக்கு விரோதமாய் வந்திருந்த அந்தத் தண்டை நம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார். இந்தக் காரியத்தில் உங்கள் சொற்கேட்க யார் சம்மதிப்பான்? யுத்தத்திற்குப் போனவர்களின் பங்கு எவ்வளவோ, அவ்வளவு ரஸ்துக்களண்டையில் இருந்தவர்களுக்கும் பங்குவீதம் கிடைக்கவேண்டும்; சரிபங்காகப் பங்கிடுவார்களாக என்றான். அப்படியே அந்நாள் முதற்கொண்டு நடந்து வருகிறது; அதை இஸ்ரயேலிலே இந்நாள்வரைக்கும் இருக்கும் கட்டளையும் பிரமாணமுமாக ஏற்படுத்தினான். (1 சாமுயேல் 30:21-25)

இஸ்ரயேலுக்கான இந்தப் பிரமாணம் என்பது, பல்வேறு தருணங்களுக்குப் பொருந்தக்கூடிய ஒரு கொள்கைபற்றின அறிக்கையாகக் காணப்பட்டது. உதாரணத்திற்கு வீட்டைக் கவனித்துக்கொள்கின்ற மனைவியானவள், வீட்டைக் கவனிக்கும் பணியினின்று விடுவிக்கப்பட்டு, பணம் சம்பாதிக்க நேரத்தைப் பெற்றுள்ள கணவனோடுகூடச் சமமான பங்கினைப் பெற்றுக்கொள்ள வேண்டியவள் ஆவாள். நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளும் விஷயத்திலும், ஜீவியத்தின் பாரங்களைச் சுமக்கும் விஷயத்திலும், புருஷனும், மனைவியுமான ***இருவருமே*** சுதந்தரித்துக்கொள்கின்றவர்களாய்க் காணப்படுகின்றனர்.

இந்தப் பாடத்தினுடைய ஆதார வசனமானது, இப்பொழுது விசுவாசத்தின் நல்ல போராட்டத்தினைப் போராடிக்கொண்டிருக்கும் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் பெற்றிருக்க வேண்டிய சரியான மனநிலையினைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. சூழ்நிலைகள் அந்தகாரமாயும், ஆபத்து நிறைந்ததுமாயும் காணப்படலாம் - சத்துருக்கள் பெருகலாம் - மனக்கலக்கங்கள் அதிகரிக்கலாம்; எனினும் பயப்பட வேண்டாம் என்று வசனம் தெரிவிக்கின்றது - கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர்,

யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் அரணானவர் யாருக்கு அஞ்சுவேன்? நானோ, ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப்போயிருப்பேன். கர்த்தருக்குக் காத்திரு, திடமனதாயிரு, அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார், கர்த்தருக்கே காத்திரு என்று தாவீது கூறியுள்ளார். (சங்கீதம் 27:1-14)



**யுத்தத்தின் கொள்ளை உடைமைகளோடு தாவீது**

R3240

# மாபெரும் வாய்ப்புகள் தவறாய்ப் பயன்படுத்தப்பட்டன

## 1 சாமுயேல் 31:1-13

மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிறவழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்
- நீதிமொழிகள் 14:12

சவுல் இராஜாவினுடைய வாழ்க்கை முழுவதிலும் மதியீனமான தவறுகளும், தப்பிதங்களுமே காணப்பட்டது. இவருடைய வாழ்க்கையானது, தெய்வீகத் தயவின்கீழ் மாபெரும் வாய்ப்புகளுடன் ஆரம்பித்தது. மேலும், இவருடைய தேசத்தாரின் அன்பும், பாராட்டும்கூட இவருக்குக் காணப்பட்டது. இவருடைய தனிப்பட்ட பண்புகள் பல்வேறு விதங்களில் மதிப்புக் கொடுக்கப்படுவதற்கு ஏதுவாய் மாத்திரம் இராமல், இவருடைய சரீர தோற்றமும்கூட இவருடைய செல்வாக்கைக் கூட்டிற்று; அதாவது, இவருடைய தலையும், தோளும் இவருடைய சக மனிதர்களைக்காட்டிலும் உயர்வானதாகவும், பார்ப்பதற்கு அருமையானதாகவும், இவருடைய ஜனங்களைக் கவர்ந்ததாகவும் இருந்தது. இப்படியெல்லாம் இவர் இருந்தபோதிலும், இவர் தோற்றுவிட்டார். இவருடைய தோல்விக்கான காரணங்களிலிருந்து நாம் ஒவ்வொருவரும் விலையேறப்பெற்ற படிப்பினைகளைப் பெற்றுக்கொள்ளலாம். சவுலினுடைய காரியத்தைக்குறித்து, சம காலத்தில் வாழ்ந்தவர் ஒருவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

சவுலிடம் தைரியம், செயலாற்றுவதற்குத் தயாராக இருக்கும் தன்மை, இன்னுமாக ஆரம்ப நாட்களில் தன்னடக்கம் மற்றும் பெருந்தன்மை போன்ற அருமையான மற்றும் உயர்வான குணநலன்கள் காணப்பட்டது. இந்தக் குணங்களையெல்லாம், இவர் இயல்பாகவே கொண்டிருந்தார். ஆயினும், தன்னிடத்தில் ஒழுக்கத்திற்குரிய குணங்களை விருத்திச் செய்வதற்காகவோ அல்லது தன்னிடத்தில் இயல்பாக காணப்படாத பண்புகளைப் பெற்றுக்கொள்வதற்காகவோ இவர் எப்போதாகிலும் நாடினதுபோன்று எந்த அறிகுறியும் இல்லை; இன்னுமாக, இவருக்கு மத விஷயங்களில் பலமான ஈடுபாடு இருந்தது என நாம் அனுமானிப்பதற்கும்கூட நமக்கு எவ்விதமான காரணங்களும் இல்லை. கொடிய விஷ காற்றிற்கு முன்பு, மலர்கள் கருகிப்போவதுபோன்று, இவருடைய சுயநலத்தின் தீங்கான செல்வாக்கினிமித்தம் இவரது நல்ல பண்புகள் கருகிப்போய், தீமை வளர ஆரம்பித்துவிட்டது. இவரிடம் ஆரம்பத்தில் காணப்பட்ட பண்புகள் மறைந்துபோய், எதிர்மாறான பண்புகளாக மாறினது. தன்னடக்கம் இறுமாப்பாக மாறினது. மேலும், இவர் நீண்ட காலமாக சுய சித்தத்திற்கு இடம் கொடுத்தப்படியால், அது இவருக்குள் கொடூரத்தையும், கடுமையான சந்தேகத்தையும், எளிதில் சினங்கொள்ளும் தன்மையையும் வளர்த்தது. மேலும், இவர் இவருக்குள்ளாக வளர்த்தின காரணமற்ற பகைக்கு, இவர் அடிமையாகவும் மற்றும் இதன் நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டவராகவும் ஆகிவிட்டார். தேவனுக்கு எதிராகப் போராடுகின்றவன், தன்னுடைய சொந்தக் குணங்களையே அழித்துப் போட்டுவிடுகின்றான். இவருக்குள் காணப்பட்ட விடாப்பிடியான சந்தேகமும், இவர் இவருக்குள் அனுமதித்திருந்த கலகமும், பிசாசு போல் இவருடைய வாழ்நாட்களின் கடைசி வருடங்களை, எண்ணங்களினால் அவதிப்படுத்தி, வேட்டையாடியது. கில்போவாவிலே இவர் பண்ணின கடைசி யுத்தத்தில், இவர் தன்னுடைய சொந்தப் பட்டயத்தின் மேல் விழுந்து மரித்தக் காரியமானது, 'அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றி சடிதியில் நாசமடைவான்' என்ற பயங்கரமான வார்த்தையை நம்முடைய நினைவிற்குக் கொண்டுவருகின்றது.

இந்த அனைத்து அனுபவங்களுக்கும் சவுலை வழிநடத்தினது அவருடைய சுயநலமேயாகும்; இவர் வழக்கத்திற்கு மாறான விதத்தில் சுயநலமாய் இருக்கவில்லை. மனுக்குலத்தில் பெரும்பான்மையானவர்கள் சவுலுக்குச் சரிசமமாக சுயநலம் கொண்டவர்களாகவும், சுயசித்தம் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர்; மேலும், சவுலைப்போன்று பெரும்பான்மையானவர்கள், தங்களுடைய ஆரம்பக்கட்டத்தில் என்னதான் வாய்ப்புகளைப் பெற்றிருந்தாலும், தோல்வியையே தழுவினவர்களாகக் காணப்படுகின்றார்கள். தாவீதினுடைய வாழ்க்கையானது, கர்த்தருடைய சித்தத்திற்கு ஆரம்பத்திலேயே அர்ப்பணம்பண்ணுவதிலுள்ள அனுகூலங்களுக்கும், அதில் விளங்கும் ஞானத்திற்கும், இப்படியானவர்கள் மீதுவரும் ஆசீர்வாதங்களுக்கும் மாதிரியாகக் காணப்படுகின்றது. மேலும் இந்த ஆசீர்வாதங்களோடு, பரீட்சைகள் மற்றும் கஷ்டங்களும் கடந்து வருகின்றது. இதுபோல, சவுலினுடைய வாழ்க்கையானது, கர்த்தரைப் புறக்கணித்து, தங்களுடைய சொந்த வழிகளில் தங்களை வழிநடத்த முற்படுகின்றவர்களுடைய தவறுகளுக்கான மாதிரியாக விளங்குகின்றது. இப்படிக் கர்த்தரைப் புறக்கணித்து, தங்களுடைய சொந்தப் பாதைகளில் நடக்க முற்படுபவர்கள், சவுலைப்போன்று தங்களுடைய சுயநலமான பேராசைகளினால் தவறாய் வழிநடத்தப்படுவார்கள். சவுலினுடைய விசேஷமான இரண்டு மீறுதல்கள் பின்வருமாறு: (1) தெய்வீக ஏற்பாட்டின்படி இவர் பலிசெலுத்துவதற்கான உரிமையைப் பெற்றிராதபோது, இவர் பலிசெலுத்தின காரியம் ஆகும் (1 சாமுயேல் 13:1-14); (2) கர்த்தரிடமிருந்து வந்த நேரடியான கட்டளைக்கு இவர் கீழ்ப்படியாதக் காரியம் ஆகும்; இது 1 சாமுயேல் 15:1-15-ஆம் வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தாவீது இராஜாகூடத் தவறு செய்தார் என்றும், பல தருணங்களில் அவர் கர்த்தருடைய சித்தத்திற்கு எதிராக செயல்பட்டார் என்றும் விவாதிக்கப்படலாம். ஆனால், இவர்கள் இருவருக்கும் இடையேயுள்ள பரந்த வித்தியாசத்தை நாம் கவனித்தாக வேண்டும்; அதாவது, தாவீதின் இருதயத்தில் அவர் எப்போதும் கர்த்தருக்கு உண்மையாய் இருந்தார் என்பதும், அவர் தவறு செய்த பிற்பாடெல்லாம் அவர் கொண்டிருந்த துக்கம் உண்மையுள்ளதாகவும், எதிர்காலத்தில் அவரை மிகுந்த ஜாக்கிரதையுடன் காணப்படச் செய்ததாகவும் இருந்தது என்பதும் கவனிக்கப்பட வேண்டும். ஆனால், சவுலினுடைய விஷயத்திலோ, பிரச்சனை எப்போதும் அவருடைய இருதயத்திலேயே காணப்பட்டது; அதாவது, அவருடைய இருதயம் கர்த்தருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து காணப்படாமல், அவருடைய சுய சித்தத்தினால் வழிநடத்தப்பட்டதாகவே காணப்பட்டது. மேலும், பின்விளைவுகள் குறித்த பயம் காரணமாக அவர் மனம்வருந்தி மன்னிப்புக் கேட்டாரேயொழிய, கர்த்தருடைய வழியிலிருந்து விலகிப்போனதற்காக அவர் வருந்தினதே இல்லை.

இங்கு நாம் இன்று காணப்படும் உண்மையான கர்த்தருடைய ஜனங்களுக்கும், பெயரளவிலான கர்த்தருடைய ஜனங்களுக்கும் இடையேயுள்ள மாபெரும் வித்தியாசத்தைக் கவனிக்க முடிகின்றது. உண்மையாக அர்ப்பணம்பண்ணினவர்கள் இடறிவிழுந்தாலும், தவறு செய்கிறவர்களாக இருந்தாலும், அவர்கள் இருதயத்திலோ அவர்கள் கர்த்தருக்கு என்றென்றும் உண்மையுள்ளவர்களாகவும், அவருக்கு ஊழியம்செய்வதற்கும், அவரைப் பிரியப்படுத்துவதற்கும் விருப்பமுள்ளவர்களாகவும் காணப்படுவார்கள். இவர்களே உண்மையுள்ள ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் ஆவார்கள். மேலும், இவர்கள்மீது கர்த்தருடைய ஆசீர்வாதம் காணப்படும். தங்களைக் கர்த்தருடைய ஜனங்களென அறிக்கைப் பண்ணிக்கொள்ளும் மற்றொரு வகுப்பாரோ, இருதய அளவில் கர்த்தரிடமிருந்து மிகத் தொலைவில் காணப்படுகின்றார்கள். மேலும் உதடுகளினாலும், வெளி அனுசரிப்பினாலும் மாத்திரம் கர்த்தரிடம் நெருங்கி இருப்பதுபோன்று

காணப்படுகின்றார்கள். இப்படிப்பட்டவர்கள் உண்மையுள்ளவர்கள் அடையும் பங்கில் பங்கடையாமல், தற்காலத்தில் வந்துள்ள அழைப்பு தொடர்பான எந்த வாய்ப்புகளின் விஷயங்களிலும், தங்களுடைய சொந்தச் சுயசித்தத்தினால் உண்டாகும் விளைவுகளையே அறுக்கின்றவர்களாக இருப்பார்கள்.

வேறொரு எழுத்தாளர் இப்படியாக எழுதுகின்றார்: சவுல், தேவனை விட்டுவிட்டபோது, அவருக்கும், தேவனுக்குமிடையே ஒரு பிரிவினை ஏற்பட்டது. மேலும், அவருடைய இருதயத்தை ஒரு தீய ஆவி ஆட்கொண்டது. சவுலினுடைய அழிவைத் துரிதப்படுத்துவதற்கென, தேவன் நேரடியாக எதையாகிலும் செய்தார் என்ற எவ்விதமான அறிகுறிகளையும் நாம் பார்க்கவில்லை. சவுலோ, தீய இருதயத்தினால் இயல்பாகவே உண்டாகும் விளைவுகளை அனுபவிக்க விடப்பட்டார்; தேவனுடைய வழிநடத்துதலும், உதவியும் இல்லாத ஜீவியத்தை ஜீவிக்கவும், இன்னுமாகச் சுயநலத்தினாலும், கோப உணர்ச்சிகளினாலும் வழிநடத்தப்படும் ஜீவியத்தினால் உண்டாகும் விளைவுகளைச் சந்திக்கவும் விடப்பட்டார். சவுல் தன்னுடைய சத்துருக்களை ஜெயங்கொள்வதற்குப்பதிலாக, தாவீதை வேட்டையாடுவதில் தனது நேரத்தைச் செலவிட்டார். இப்படியாக, இவர் தனது நேரத்தைச் செலவழித்ததினிமித்தம் இவருடைய இராஜ்யத்தை இவர் கவனிக்கத் தவறினார். மேலும், ஜனங்களும் அதிருப்தி அடைந்தார்கள். மேலும், சவுலினுடைய சிறப்பான மனிதர்களில் அநேகர், இவரைக் கைவிட்டு தாவீதிடம் போய்ச் சேர்ந்துகொண்டார்கள்; இன்னுமாக எதிரிகளுடைய தேசத்திற்குள்ளும் துரத்தப்பட்டுப் போனார்கள். இவருடைய சேனை தைரியத்தை இழந்தது. மேலும், இவருடைய கடைசி யுத்தத்தின்போது, இவர் ஆயத்தமாகுவதை விட்டுவிட்டு, அஞ்சனக்காரியிடம் குறிகேட்பதற்கென இரவு முழுவதையும் செலவழித்தப்படியால், இவர் யுத்தத்தின்போது பெலமில்லாமலும், சோர்வடைந்தவராகவும் காணப்பட்டார். இப்படியாக, கடைசியில் தற்கொலை செய்துகொண்டு பரிதாபமாய் மரித்துப்போனார். அவர்கள் தங்கள் வழியின் பலனைப் புசிப்பார்கள்; தங்கள் யோசனைகளினால் திருப்தியடைவார்கள். (நீதிமொழிகள் 1:31)

சவுலினுடைய இறுதி நாட்களிலுள்ள அனுபவங்கள் தொடர்பான காரியங்களையே நம்முடைய பாடத்தில் நாம் பார்க்கின்றோம். பெலிஸ்தர்கள் ஒரு சேனையோடு, இஸ்ரயேலுக்குள் புகுந்துவிட்டார்கள். மேலும், இவர்களோடு யுத்தம் பண்ணும்படிக்கு, சவுலும் சேனையோடு புறப்பட்டுப் போனார். இரண்டு சேனைகளும் நாசரேத்துக்குக் கொஞ்சம் தொலைவில் பாளயம் இறங்கினார்கள். யுத்தத்திற்கு முந்தின இரவில் இராஜாவாகிய சவுல், எந்தோரில் இருக்கும் அஞ்சனக்காரியிடம் குறிகேட்கப் போயிருப்பாரானால், இவருடைய மனம் எவ்வளவு சோர்வடைந்திருக்க வேண்டும் என்பதை நம்மால் கற்பனை செய்துபார்க்க முடிகின்றது. இவர் தன்னுடைய சுயசித்தத்தின்படி, கர்த்தருடைய சித்தத்தைப் புறக்கணித்தார். இறுதியில் தாவீதை இஸ்ரயேலின் சிம்மாசனத்தில் கொண்டுவந்து அமர்த்துவதே, கர்த்தருடைய சித்தமாக இருக்கின்றது என உணர்ந்துகொண்ட சவுல், தாவீதின் மீதான பகையினால் நிரம்பினவராகக் காணப்பட்டார். ஆகவே, தனக்கு எவ்விதமான தீங்கைச் செய்யாதவனும், தனக்கு மிகவும் உண்மையாய் இருந்தவர்களில் ஒருவனாகவும் இருந்த தாவீதை எதிர்க்கும்போது, தான் உண்மையில் தேவனை எதிர்த்துப் போராடிக்கொண்டிருக்கின்றார் என்று சவுல் உணர்ந்தவராக இருந்தார். ஆகவே, யுத்தத்திற்கு முந்தின நாள் சவுல், கர்த்தரிடம் விசாரிக்க நாடியும், எவ்விதமான பதிலையும் பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தபோது, அவர் சோர்வடைந்து, நம்பிக்கை இழந்துபோனது குறித்து ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. சவுல், எந்தோரின் அஞ்சனக்காரியை நினைவுகூர்ந்து, அடுத்தநாள் நடக்கப்போகும் யுத்தத்தின் முடிவுகுறித்து

அறிந்துகொள்ள அவளிடம் விசாரிக்க முடிவு பண்ணினார். இங்கும் கூட, தெய்வீகச் சித்தத்திற்கு எதிராக தான் செயல்படுகின்றதை சவுல் அறிந்திருந்தார். ஏனெனில், யாத்திராகமம் 22:18 மற்றும் உபாகமம் 18:10, 12-ஆம் வசனங்களில் உள்ள கர்த்தருடைய கட்டளையைச் செயல்படுத்துவதற்குச் சவுல்தான் கட்டளையிட்டிருந்தார். இப்படியான சவுலுடைய போக்கு, கர்த்தர் அங்கீகரிக்காத குணலட்சணங்களுக்கான மாதிரியாக விளங்குகின்றது. ஆவியுலகத் தொடர்பாளர்கள் வாயிலாக தீய ஆவிகளுடன் தொடர்பு கொள்வதென்பது, தேவன் அங்கீகரிக்காத காரியம் என்று சவுல் அறிந்திருந்தும், அவர் அவ்வழியையே தெரிந்தெடுத்தார். இதுபோல, இன்றும் கர்த்தருடைய ஜனங்களில் சிலர், தீய ஆவியினை உடையவர்களைத் தேடிச்செல்லக் கூடாது என்று வேதவாக்கியங்கள் போதித்திருந்தபோதிலும், அதைப் பொருட்படுத்தாமல், ஆவிகளுடன் தொடர்பு வைக்கின்ற காரியம் எப்படிச் செய்யப்படுகின்றது என்று பார்க்க மாத்திரமே வேண்டும் என்று கூறி ஆவியுலகக் கோட்பாளர்களின் கூட்டத்தில் பங்குக்கொள்கின்றனர். கர்த்தருடைய போதனைகளை அலட்சியம் பண்ணி, சுயசித்தத்தின்படி காணப்பட்ட தன்மையே, சவுலை பிரச்சனைக்குள்ளாக்கியது. மேலும், இத்தன்மையை இன்றும் பெற்றிருப்பவர்களையும் அது நிச்சயமாக பிரச்சனைக்குள்ளாக்கும். தேவனுடைய கட்டளைகளின் விஷயத்தில் அஜாக்கிரதையுடன் காணப்படு பவர்கள்மீது தேவன் பிரியம் கொள்வதில்லை. மேலும், சவுல் தனது வழியைத் தெரிந்துகொண்டு, அதில் நடக்க தேவன் அனுமதித்ததுபோன்று, சவுலைப்போன்றவர்களும் தங்களுடைய சொந்த வழியைத் தெரிந்தெடுத்து அதில் நடப்பதற்கு அனுமதித்துவிடுவார். ஒரு குறிப்பிட்ட காலம்வரையிலும் சுயசித்தத்தின்படியான இந்த வழியானது எவ்வளவுதான் ஞானமுள்ளதாகத் தோன்றினாலும், இறுதியில் சமாதானம் மற்றும் கர்த்தருடனான ஐக்கியம் தொடர்புடைய விஷயங்களில் பாதிப்பைக் கொண்டு வருகின்றதாகவே இருக்கும். கர்த்தருக்கென்று தங்களை முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களும், தங்களுடைய சுயசித்தத்தைக்காட்டிலும் கர்த்தருடைய சித்தத்தையே அதிகமாக நேசிக்கின்றவர்களும் மாத்திரந்தான், தேவனை அன்புகூருகின்றவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்ற வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலை எதிர்பார்க்கின்றவர்களாக இருக்க முடியும்.

சவுலும், அவருடைய மூன்று குமாரர்களும், அவருடைய ஒட்டுமொத்த பாதுகாவலர்களும் யுத்தத்தில் மாண்டுபோனார்கள்; அதாவது விசேஷமாக இராஜ வம்சத்தாரைக் கொன்று போடும்படிக்கு பெலிஸ்தர்கள் மேற்கொண்ட யுத்தத்தில், இராஜ வம்சத்தார் மாண்டு போனார்கள். தான் எதிரிகளின் கைகளில் சிக்கி, அந்நாட்களின் வழக்கத்தின்படி சத்துருக்களால் சித்திரவதைப் படுத்தப்படாதபடிக்குச் சவுல் தற்கொலை செய்துகொண்டார். சவுலின் தோல்வியில், பெலிஸ்தர்கள் சந்தோஷமடைந்தார்கள். மேலும், அவர்களுடைய வெற்றிக்கான சாட்சியாக அவருடைய தலையானது, அவர்களுடைய பட்டணங்கள் ஒவ்வொன்றிற்கும், வெற்றிச் சின்னம் போன்று கொண்டு செல்லப்பட்டது. பெலிஸ்தர்கள் அஸ்தரோத் தேவதையை வழிபடுகின்றவர்களாக இருந்தார்கள். மேலும், தங்களுடைய வெற்றிக்கான நினைவுகூருதலாக அஸ்தரோத் தேவதையின் கோயில் ஒன்றில், சவுலினுடைய ஆயுதங்களைத் தொங்கவிட்டார்கள். சவுல் மற்றும் அவருடைய குமாரர்களுடைய சரீரங்களையோ பெத்சானின் அலங்கத்தில் கட்டித் தொங்கவிட்டார்கள்; அதாவது, சவுலையும், அவருடைய குமாரர்களையும் அவமானப்படுத்தும்படியாக, இப்படி அவர்களுடைய சரீரங்களைக் கட்டித் தொங்கவிட்டனர். ஆனால் பெலிஸ்தர்கள் அச்சரீரங்களை இன்னும் அவமானப்படுத்தாதப்படிக்கு, மனாசே கோத்திரத்து புருஷர்கள் அச்சரீரங்களை எடுத்துக்கொண்டு, அவைகளை எரித்து, சாம்பலையும், அவர்களுடைய அவிந்துபோகாத எலும்புகளையும் புதைத்துவிட்டனர்.

நம்முடையப ாடத்தின்ஆ தாரவ சனம்,அ னைவரும்ந ினைவுகூருவதற்குப்ப ாத்திரமானஒ ரு வசனமாக இருக்கின்றது. நாம் நம்முடைய சொந்தக் காரியங்களை வழிநடத்துவதற்கு ஆற்றல் அற்றவர்கள் என்றும், நமக்குத் தெய்வீக ஆலோசனை அவசியம் என்றும் உள்ள காரியங்களே படிப்பினைகளாகும். எவ்வளவுதான் அறிவு மனிதனுக்கு இருந்தாலும்கூட, மனிதனுடைய கணிப்பானது நம்பத்தகுந்ததல்ல; முடிவு எடுக்கும் விஷயங்களிலும் மற்றும் அறிவிலுமுள்ள நம்முடைய குறைபாடுகளின் காரணமாக மனிதனுக்குச் செம்மையானதாகவும், ஞானமானதாகவும், அனுகூலமானதாகவும், விரும்பத்தக்கதாகவும் காணப்படும் வழிகளில் நாம் கடந்து செல்வதினிமித்தம் ஏமாற்றமும், மனநோவும் ஏற்பட்டு, இறுதியில் அவ்வழி மரணத்திற்கு, அதாவது இரண்டாம் மரணத்திற்கு நேராக நடத்துகின்றதாகவே இருக்கும். நம்முடைய ஞானமின்மையையும், சொந்தக் காரியங்களை நடத்துவதற்கு நாம் திராணியற்றவர்களாய் இருக்கும் நிலைமையையும் நாம் உணர்ந்து மற்றும் ஒப்புக்கொண்டு, வழிநடத்துதலுக்காக நம்முடைய மாபெரும் சிருஷ்டிகரை நோக்கிப்பார்ப்பதே நம் அனைவருக்குமான சரியான மற்றும் ஞானமுள்ள வழியாகும். நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை என்ற வசனத்தின் எச்சரிப்பிற்குச் செவிசாய்ப்பவர்கள் சந்தோஷமாய் இருப்பார்கள் (பிரசங்கி 12:1). எவ்வளவு சீக்கிரமாக நாம் இந்தச் சரியான பாதையைத் தெரிந்துகொள்கின்றோமோ, அப்போது எல்லாவிதத்திலும் முடிவு சிறப்பாகக் காணப்படும்; கர்த்தருடைய சித்தத்திற்கு நம்முடைய சித்தத்தை வளைந்துகொடுப்பதும்கூடச் சுலபமாகக் காணப்படும்; கர்த்தருடைய வழிநடத்துதல் மூலம் வரும் படிப்பினைகளும், திருப்தியும், சமாதானமும் மிகவும் விலையேறப்பெற்றதாகவும் இருக்கும். கர்த்தருடைய சித்தம் நம்முடைய அனைத்துக் காரியங்களிலும் நிறைவேறத்தக்கதாக, நம்முடைய இருதயத்தையும், ஜீவியத்தையும் மற்றும் அனைத்துக் காரியங்களையும் முழுமையாய்க் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கும் அர்ப்பணிப்பே, ஒவ்வொரு நீதிமானாக்கப்பட்ட விசுவாசியும் சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்திற்குள் கொண்டுவரப்படுவதற்கு அவசியமான அர்ப்பணிப்பாகும்.

R4234

# சவுல் இராஜாவின் அவமானமான முடிவு

## 1 சாமுயேல் 31

உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு. - ஆமோஸ் 4:12

சவுலின் வாழ்க்கை மிகவும் அனுகூலமான நிலைகளோடு தொடங்கி, மிகவும் பழிப்புக்கிடமான தற்கொலையில் முடிவடைந்தது. ஒரு படைத்தலைவனாகவும், ஓர் இராஜாவாகவும் திறமிக்கவராய்க் காணப்பட்ட இம்மனுஷன், ஒரு விஷயத்தில் குறைவுபட்டவராக இருந்தார்; மேலும் இதுவே அவரது வாழ்க்கை ஒட்டுமொத்தமாய்த் தோல்வியினைத் தழுவுவதற்குக் காரணமாயிற்று. நாம் பார்த்திருக்கின்றபடி, அவர் பயபக்தியற்றவரோ, கெட்டவரோ, துஷ்டத்தனமானவரோ கிடையாது. அநேகக் காரியங்களில் அவர் சர்வவல்லவர்மீது ஆழ்ந்த பக்திகொண்டிருப்பதை வெளிப்படுத்தியுள்ளார்; மேலும் தேவ சித்தத்தைச் செய்வதற்குப் போதுமானஅளவுக்கு வாஞ்சையினையும் வெளிப்படுத்தியிருக்கின்றார். அவரது வீழ்ச்சிக்கான காரணம், இருமனமேயாகும். இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாய் இருப்பான் என்று அப்போஸ்தலன் குறிப்பிட்டுள்ளார். தேவனுக்கும், உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய நம்மால் கூடாது என்று நமது கர்த்தர் தெரிவித்துள்ளார். இராஜாவாகிய சவுல் தேவனைச் சேவிக்க வாஞ்சித்தார்; அதே சமயம் அவர் சுயத்தையும், உலகப்பொருளையும்கூடச் சேவிக்க வாஞ்சையாய் இருந்தார். அவர் தன்னை முழுமையாய் அர்ப்பணிப்பதும், தெய்வீகச் சித்தத்திற்குத் தன் சித்தத்தை

முழுமையாய் ஒப்புக்கொடுப்பதும்தான், அவருக்கு ஏற்றகாரியமாய் இருந்திருக்கும். இதுதான் அவருக்கும், அவருக்குப்பின் அரியணைக்கு வந்த தாவீதிற்கும் இடையிலுள்ள பிரதான வித்தியாசமாகும். வெளிப்புறத்தில் சவுல், தாவீதைப்போன்று சிறந்த குணங்களை உடையவராய்க் காணப்பட்டார்; ஆனால் தாவீது, தேவனை முதலாவதாக வைத்துக்கொண்டு, தன் சொந்தச் சித்தத்தை, தெய்வீகச் சித்தத்திற்கென்று ஒப்புக்கொடுத்துவிட்டார்; இதன் காரணமாக மீதமுள்ள மனித குடும்பத்தாரைப்போல இவரும் பெற்றிருக்கும் சுபாவ பிழைகள் விஷயத்தில், இவர் என்ன சுபாவ தவறுகளைச் செய்திருந்தாலும், அவைகள் இவர் பெற்றிருந்த தேவனுக்கான இருதய-நேர்மையினால் ஈடுசெய்யப்பட்டது; தேவனுக்கான இருதய-நேர்மையானது இவரை ஒருபோதும் வழிவிலகிப்போக அனுமதித்ததில்லை; இந்த நேர்மையானது, இவர் மீறுதல் பண்ணின ஒவ்வொரு தருணத்திலும், இவரை மிகவும் கசந்து அழப்பண்ணினது மற்றும் தெய்வீக மன்னிப்பை நாட வழிநடத்தினது; இப்படியாகத் தேவனோடு நெருங்கி சஞ்சரிக்கப்பண்ணினது. ஆகையாலே தாவீது தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷனாகக் காணப்பட்டார்; இதற்குக் காரணம் இவரது மாம்சம் பூரணம் என்பதினால் அல்ல, மாறாக இவரது நோக்கம் மற்றும் இருதய வாஞ்சையிலுள்ள பூரணமேயாகும். சவுலின் பண்புகள் இன்றுள்ள அநேக உலகப்பிரகாரமான ஜனங்களிடம் காணப்படுகின்றது; இவர்கள் தங்கள் சித்தங்களைக் கர்த்தருக்கு முழுமையாய் ஒப்புக்கொடுப்பதன் மூலமும், முழுமையாய் அர்ப்பணம்பண்ணுவதன் மூலமும் பரிசுத்தவான்களாகிடலாம்; எனினும் இவர்கள் தங்கள் சொந்த சித்தங்களைத் தக்கவைத்துக்கொள்ள நாடுகையில் வீழ்ச்சிக்குள்ளாகுகின்றவர்களாகவும், மெச்சிக்கொள்வதற்கு ஏதுவான எதையும் செய்யாதவர்களாகவும் காணப்படுவார்கள்.

## பொறாமையினால் வெறிகொண்டவர் ஆனார்

தீர்க்கத்தரிசியாகிய சாமுயேலின் அறிவிப்புப்படி, தெய்வீகத் தயவை இழந்துபோனது நிமித்தம் சவுல் துக்கப்பட்டார்; எனினும் தெய்வீக ஆசீர்வாதம் இளைஞனான தாவீதோடு காணப்படுவதைக் கவனிக்கத் துவங்கியதற்கு முன்புவரை, இவர் தன் காரியத்தைப் பொருட்படுத்தவில்லை. மனித சந்தோஷங்களுக்கு மிகத் தீவிர எதிரிகளில் ஒன்றான பொறாமை, இவரது மனதிற்குள் பிரவேசித்தது; எதையும் சிந்தித்துப்பார்க்க முடியாதவராக இவரை ஆக்கிற்று. மிகவும் உண்மையுள்ளவராகக் காணப்பட்ட தாவீது, சவுலைச் சேவித்தார்; சிறந்த பலன்களைத் தாவீது கொணர்ந்தார்; இதனால் கர்த்தருடைய வழிநடத்துதலின்படி தாவீதே தனக்குப்பின் இராஜ்யபாரத்திற்கு வருவார் என்று சவுல் அடையாளம் கண்டுகொண்டார். இதுவே இவருக்குள் பகை வருவதற்கும், இந்தப் பகையினால் இவர் தாவீதைக் கொன்றுபோட நாடுவதற்கும், பின்னர் தன் படைகளோடு தாவீதை கொள்ளைக்காரனை வேட்டையாடுவதுபோன்று வேட்டையாட திரிவதற்கும் வழிநடத்திற்று என்று பார்க்கின்றோம். இச்சம்பவத்தோடு சம்பந்தப்பட்டுள்ள பல்வேறு பதிவுகளை வைத்துப்பார்க்கும்போது, தாவீதுமீதான பொறாமையின் காரணமாக, சவுலுக்குள் புகுந்த பொல்லாத ஆவியானது, தெளிந்த புத்தியற்ற ஆவியாகவும், தீய அல்லது பாதகமான ஆவியாகவும் அல்லது மனப்போக்காகவும் இருந்தது என்று தெளிவாகச் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. இதில் சவுல் அடையாளப்படுத்தும் உலகப்பிரகாரமான வகுப்பாருக்கு மாத்திரமல்லாமல், புதுச்சிருஷ்டிகளாகிய நமக்கும்கூட மாபெரும் பாடம் ஒன்று காணப்படுகின்றது. ஜீவியத்தினுடைய நம்முடைய பிரயாணத்தில், பெரும்பாலும் தினந்தோறும் நாம் பல சந்தர்ப்பங்கள் மற்றும் சூழ்நிலைகளை எதிர்கொள்வோம்; ஆனால் ஒருவேளை இவை தவறாய் எதிர்கொள்ளப்படுமாயின், இது தேவனோடு ஐக்கியமும், உறவும் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய பாதை முழுவதையும் மாற்றிப்போட்டு, பாவத்திற்கு நேராகவும், தேவனை எதிர்ப்பதற்கு நேராகவுமுள்ள பாதைக்குள் நடத்திவிடும். தன் ஜீவியத்தில் எழும்பும் நெருக்கடிகள் மத்தியில், இரண்டு குரல்கள் தன்னிடம் பேசுவதை எந்தக் கிறிஸ்தவன்தான் உணர்ந்திருக்கமாட்டான்? ஒரு குரல், என்ன விலைகொடுத்தேனும் தேவனுக்குக் கீழ்ப்படிந்து இருக்கவும், தாழ்மையாய் இருக்கவும் கூறும்;

இன்னொரு குரல் பெருமையினால் ஆதரிக்கப்படும் சுயசித்தத்தை முன்வைத்துக் கொண்டேயிருக்கும். ஒருவேளை முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களாக நாம் காணப்படுவோமானால், அதாவது இம்மாதிரியான பாவ சோதனைகள் அபூர்வமாய்க் காணப்படும் ஒரு நிலைமைக்கு, நாம் அநேக வெற்றிகள் மூலம் வந்திருப்போமானால், இப்போதும் நாம் தொடர்ந்து விழிப்போடுதான் காணப்பட வேண்டும்; மேலும் நமக்கு மிகவும் தந்திரமுள்ள எதிராளி காணப்படுகின்றான் என்பதையும், புதிய மனம் எனும் பொக்கிஷத்தினைப் பூமிக்குரிய மண்பாண்டங்களில் பெற்றிருக்கின்றோம் என்பதையும், நம் மாம்சத்தில் பூரணம் வாசமாயிருக்கிறதில்லை என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். இவைகளை நாம் நினைவுகூரும்போது, இவை நம்மை மிகவும் தாழ்மையுள்ளவர்களாக்க வேண்டும்; கர்த்தரை நெருக்கமாய்ப் பற்றிக்கொண்டு காணப்பட வழிநடத்த வேண்டும்; தெய்வீகச் சித்தத்திற்கு ஏதேனும் விதத்தில் எதிராகத் தென்படும் எந்த ஒரு நடக்கையையும், சிந்தையையும் குறித்து நாம் அஞ்சவும், வெறுக்கவும் நம்மை வழிநடத்த வேண்டும். ஒருவேளை சில விஷயங்களில் நம்மீது இருந்த கர்த்தருடைய தயையானது இன்னொருவருக்குக் கடந்துபோவதுபோன்று தோன்றினாலும், நாம் யோனத்தானுடைய நடக்கையைப் பின்பற்ற வேண்டும்; மேலும் தேவனோடு யுத்தம்பண்ணுவது என்பது புத்தியீனமான காரியம் என்றும், அதனால் எந்த ஆசீர்வாதமும் வருவதில்லை என்றும் நாம் திட்டவட்டமாய் அறிந்துகொள்ள வேண்டும்.

## பெலிஸ்தரின் படையெடுப்பு

சவுல் தனது எல்லா நேரங்களையும், கவனங்களையும் தாவீதைத் துன்புறுத்துவதற்கே கொடுத்துக் கொண்டிருந்தார் என்று நாம் அனுமானிப்பது சரியாய் இராது. சந்தேகத்திற்கிடமின்றி அவர் திறமைமிக்க மனுஷனாக இருந்தபடியால், அவர் தன் இராஜ்யபாரமெங்கும் பெரும் செல்வாக்கு கொண்டவராகக் காணப்பட்டார். இது சவுலின் மரணத்திற்குப் பின்னரும், இஸ்ரயேலின் பத்துக் கோத்திரத்தார் தாவீதை அங்கீகரிக்க மறுத்து, சவுலின் வாரிசோடு பற்றுதலாய்க் காணப்பட்டார்கள் எனும் காரியத்திலிருந்து உறுதியாகுகின்றது. இன்னொரு பக்கத்தில், சவுலின் வெறித்தனமான பொறாமையானது, சந்தேகத்திற்கிடமின்றி அவரைத் தனிப்பட்ட விதத்தில் பெலவீனப்படுத்திக் கொண்டிருந்தது, இன்னுமாக ஜனங்களுடைய வளமையான ஆதாரங்களையும் பலவீனப்படுத்திக்கொண்டிருந்தது; இதனால் இஸ்ரயேல் தேசத்தைப் படையெடுத்து தாக்குவதற்கு இதுவே சரியான காலம் என்று பெலிஸ்தர்கள் கருதினார்கள். யுத்தமானது எல்லைகளில் பண்ணப்படவில்லை; இன்னுமாகப் படையெடுத்து வந்தவர்கள் உடனுக்குடன் முற்றிக்கையிடாமல், யுத்தம் துவங்குவதற்கு முன்னதாக ஓரளவுக்கு படிப்படியாக முற்றிக்கைப் போட்டுக்கொண்டவர்களாகக் காணப்பட்டார்கள். இதற்கிடையில் இராஜாவாகிய சவுல் எந்தோரின் அஞ்சனக்காரியைப் பார்க்கச் சென்ற காரியத்திலிருந்து, அவரது மனம் எப்படியாகக் காணப்பட்டது என்பதை நிதானிக்க முடிகின்றது. பரிதாபத்திற்குரிய மனுஷன்! தேவனில் விசுவாசம் வைக்கும் அளவிற்கு, இவர் தேவனைப்பற்றி போதுமான அளவுக்கு அறிவைப் பெற்றிருந்தார்; இன்னுமாக விசேஷித்த தெய்வீகத் தயவினின்று தான் துண்டிக்கப்பட்டுள்ளார் என்பதை இவர் பல வருட காலங்களாக அறிந்தவராகவே காணப்பட்டார்; இன்னுமாகத் தாவீதை எதிர்ப்பதின்மூலம், தான் தேவனுக்கு எதிராக விருதாவாய்ப் போராடிக்கொண்டிருக்கின்றார் என்பதையும் இவர் அறிந்தவராகவே காணப்பட்டார். இவைகள் அனைத்தின் மத்தியிலும், தனது இருதயத்தினுடைய சஞ்சலத்தின் நிமித்தம், இவர் மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஆலோசனை சிலவற்றை வாஞ்சித்தார். இவர் தாவீதைக் கொன்றுபோடுவதற்கு நாடினது மாத்திரமல்லாமல், தாவீதுக்கு சமுகத்தப்பங்களைக் கொடுத்த ஆசாரியனையும் கொன்றுபோட்டார்; தேவதயவு தனக்குத் தேவை என்பதை இவர் உணர்ந்திருந்தபோதிலும், தேவ தயவினின்று தன்னைத் துண்டிக்கும் அனைத்துக் காரியங்களையும் செய்து வந்தார்.

## எந்தோரின் அஞ்சனக்காரியைச் சந்திக்கச் செல்லுதல்

சவுலின் நாட்களிலும்கூட விழுந்துபோன தூதர்களும், பிசாசுகளும் மரித்தோரைப்போன்று ஆள்மாறாட்டம் பண்ண நாடினார்கள்; மேலும் உயிரோடு இருப்பவர்களின் மரித்துப்போன நண்பர்கள்போன்று தங்களை உயிரோடு இருப்பவர்களுக்குக் காண்பித்து, இவர்களைத் தொடர்புகொள்ள நாடினார்கள். பிசாசுகளோடுள்ள இத்தகைய தொடர்பு பரிமாற்றங்களுக்குக் கர்த்தர் தெளிவாய்த் தடை விதித்திருந்தார்; மேலும் அஞ்சனம்பார்க்கிறவர்களையும், குறிசொல்லுகிறவர்களையும், ஆவியுலகத் தொடர்பாளர்களையும் இஸ்ரயேல் தேசத்தினின்று வெளியேற்றி, இப்படியாக இஸ்ரயேலர்களிடமிருந்து இந்தச் சோதனையை அப்புறப்படுத்த வேண்டும் எனும் கண்ணோட்டத்தில், இவர்கள் கொல்லப்பட வேண்டும் என்ற கட்டளை, சவுலின் ஆளுகை காலம் முழுவதும் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுதோ தன்னுடைய மனக்கலக்கத்தில், அஞ்சனக்காரி மூலம் தீர்க்கத்தரிசியாகிய சாமுயேலோடு தொடர்புகொள்ளத்தக்கதாக இராஜாவாகிய சவுல் வேஷமாறி, அஞ்சனக்காரியிடம் சென்றார். மரித்தவர்கள் மரித்தவர்களாகக் காணப்படுவதில்லை, மாறாக உடலிலிருந்து விடுவிக்கப்பட்ட ஆன்மாக்களாய்க் காணப்படுகின்றனர் என்று உலகமெங்கும் விரைவாய்ப் பரவிக்கொண்டு காணப்படும் வஞ்சனைக்குள் சவுலும் விழுந்துவிட்டார் என்பது உறுதியே. இந்த யூகத்தில்தான், இவர் அஞ்சனக்காரியைச் சமாதானப்படுத்தி, தீர்க்கத்தரிசியாகிய சாமுயேலோடு உரையாடும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு அவளிடம் வேண்டிக் கொண்டார்.

அங்கு வெளிப்பட்ட உருவமானது இரண்டு விதங்களில் சம்பவித்ததாக எடுத்துக்கொள்ளப் படலாம். அவை:

(1) தீய ஆவி ஒன்று சாமுயேல்போன்று ஆள்மாறாட்டம்பண்ணி, நாளைய தினத்தின் யுத்தத்திற்குரிய முடிவை முன்னுரைத்திருக்கலாம். முன் உணர்ந்த/முன்னுரைக்கப்பட்ட முடிவுகளைப் பகுத்தறிவுள்ள யார் ஒருவராலும் சந்தேகத்திற்கிடமின்றி சொல்லமுடிவது எளிமையான காரியமேயாகும். இதுவுமல்லாமல் இம்மாதிரியான காரியங்களில் தகவலைப் பெறுவதற்குப் பிசாசுகள் என்னென்ன வசதிவாய்ப்புகளைப் பெற்றிருந்தன என்பதையும் நாம் அறியோம். ஆவிகள் ஆவியுலகத் தொடர்பாளர்கள் (mediums) வாயிலாக இன்று தெரிவிக்கும் அநேகக் காரியங்கள், அவைகளின் துல்லியத்தின் விஷயத்தில் குறிப்பிடத்தக்கவைகளாகவே காணப்படுகின்றன.

(2) சவுல் (நேரடியாக) எதையேனும் பார்த்ததாகவோ, எதையேனும் கேட்டதாகவோ எதுவும் சொல்லப்படவில்லை. அவரது உரையாடல்கள் அஞ்சனக்காரி வழியாகவே காணப்பட்டது; அவள்தான் பார்த்தாள், அவளுக்குத்தான் பேசுபவைகள் கேட்டன, அவள்தான் தெரிவிக்கவும் செய்தாள். அஞ்சனக்காரி கூறிய காரியங்களை வைத்து, அதுவும் சால்வைபோன்ற விவரங்கள் கொடுக்கப்பட்டதை வைத்து, வந்துள்ளது தீர்க்கத்தரிசியாகிய சாமுயேல் என்று சவுல் யூகித்துக்கொண்டார். தனது எதிர்காலத்தைக்குறித்து உறுதிப்படுத்துவதற்கென்று, அவர் தொடர்ந்து முயற்சித்ததிலுள்ள அவரது துணிவு ஆச்சரியமாகவே உள்ளது. சவுல் தேவனை அறிந்தவராகவும், தான் ஏற்கெனவே தெய்வீகத் தயவற்று இருப்பதை உணர்ந்துக்கொண்டவராகவும் இருக்கையில், தடை விதிக்கப்பட்ட காரியங்களைச் செய்வதின்மூலம், இன்னும் அதிகமாகத் தேவனுடைய கோபத்திற்கு ஆளாகக்கூடாது என்று அஞ்சியிருந்திருக்க வேண்டும் என்று சிலர் எண்ணலாம். இங்கும் கர்த்தருடைய ஜனங்களுக்குப் பாடம் ஒன்று உள்ளது. தகுதியான வழிமுறைகள் மூலம் நமக்குக் கர்த்தர் கொடுக்க விரும்பாதவைகளை, நாமும் விரும்பாமல் இருப்பது நலம். கர்த்தரைத் தந்திரமாய் ஏமாற்றுவதற்கு ஒருவர் முயற்சிப்பதும், எந்த விதத்திலாகிலும் கர்த்தரைவிட முந்திக்கொள்ள முயற்சிப்பதும் விருதாவான காரியமேயாகும். நீ உன்

எதிராளியோடு வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகள், சவுலின் விஷயத்தில் - அதாவது தேவன் இவருக்குச் சத்துருவாகியுள்ள இத்தருணத்திற்கு நிச்சயமாகவே பொருந்தும். தேவன் சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாய்ச் செய்வார் என்ற உறுதியில், சவுல் தன்னைக் கர்த்தருடைய இரக்கம் கிடைக்கத்தக்கதாக முற்றிலும் ஒப்புக்கொடுப்பதே, அவருக்கு ஏற்றகாரியமாகக் காணப்பட்டிருந்திருக்க வேண்டும். நாமும் இப்படியாகவே செய்ய வேண்டும். தெய்வீகச் சித்தத்திற்கு உண்மையாய்க் காணப்படுவதே, நமக்கான ஒரே பாதுகாப்புள்ள மற்றும் மகிழ்ச்சியுள்ள வழியாகக் காணப்படுகின்றது.

## சவுலும், யோனத்தானும் மரித்துப்போனார்கள்

அடுத்த நாள் யுத்தம் நடந்தது; இஸ்ரயேலர்களின் சேனை மோசமான நிலையில் காணப்பட்டது; சவுலும், அவரது மூன்று குமாரர்களும், அவரது சேனையில் அநேகரும் கொல்லப்பட்டார்கள். நம்முடைய இந்தப் பாடம் சவுலின் தற்கொலை பற்றி தெரிவிக்கின்றது. உயிரோடு தன் சத்துருக்கள் கையில் அகப்படுவதைக்காட்டிலும், தற்கொலை செய்துகொள்ள விரும்பினார். பரிதாபமான மனுஷன்! இவரது கடைசி மணி நேரங்களின் கிலேசத்தினைக் கவிஞன் பின்வருமாறு விவரித்துள்ளார்:

உன் கைகளினால் உன் இருதயம்தனை,<br>
உன் பட்டயத்தால் நீ துளைத்தாயே;<br>
கிரீடமின்றி, குதிரையின்றி, தலையின்றி<br>
உன் வீட்டாரின் வாரிசும், பிதாவுமாகிய சவுலே!<br>
இப்படி நீ விழுந்தாயே!



சவுல் தன் பட்டயம் மீது விழுதல்
- William Isaacsz

இப்பாடத்தினுடைய இறுதி வசனப்பகுதிகளானது பின்வருபவைகளைத் தெரிவிக்கின்றது: பெலிஸ்தர்கள் தங்கள் வெற்றியைக்குறித்து அறிவிக்கத்தக்கதாகச் சவுலின் ஆயுதங்களைப் பல்வேறு பட்டணங்களுக்கு அனுப்பிவைத்தனர்; மேலும் சவுலின் சரீரத்தினை பெத்சானின் அலங்கத்திலே தூக்கிப்போட்டார்கள். சவுலுடைய ஆளுகையின் ஆரம்பகால பகுதியில், நாற்பது வருடங்களுக்கு முன்னதாக, அம்மோனியர்கள் யாபேஸ் பட்டணத்தைத் தாக்கி, அப்பட்டணத்தை மேற்கொண்டனர்; மேலும் அப்பட்டணத்தார் சரணடையும்படிக்குக் கோரிக்கை வைத்தனர்; மேலும் யாபேஸ் பட்டணத்தான் ஒவ்வொருவனும் தனது வலது கண்ணை பிடுங்கிக்கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையை (அம்மோனியர்கள்) வைத்தார்கள்; அப்போது இவர்களை விடுவிக்கும்படியாக இராஜாவாகிய சவுல் உடனே கடந்துசென்று, இவர்களைக் காப்பாற்றினார். நாற்பது வருடங்களுக்குப் பின்னரும் யாபேசின் மனுஷர், தங்கள் சார்பிலான சவுலின் உதவியை மறவாமல் காணப்பட்டது குறிப்பிடத்தக்க காரியமாகும்; அழுகத்துவங்கின நிலையிலும், கழுகுகளினால் பட்சிக்கப்பட்ட நிலையிலும், பட்டணத்தினுடைய அலங்கத்தில் சவுல் மற்றும் அவரது குமாரர்களின் சரீரங்கள் அவமானப்படுத்தப்படத்தக்கதாக தூக்கிப்போடப்பட்டிருப்பதை யாபேசின் மனுஷர் கேள்விப்பட்டபோது, இவர்கள் நீண்ட தூரம் சென்று, சரீரங்களைக் கீழே இறக்கி, இனிமேலும் அந்தச் சரீரங்கள் அவமானப்படுத்தப்படாதபடிக்குத் தகனித்துப் போட்டார்கள்; பின்னர் எஞ்சின கருகிப்போன எலும்புகளைக் கவனமாய் எடுத்து, அடக்கம்பண்ணினார்கள். இப்படியாக, தங்களுக்கு ஒருகாலத்தில் பாராட்டப்பட்ட இராஜாவின் இரக்கத்துக்குத் தங்கள் நினைவுகூருதலைத் தெரிவித்தார்கள். இரக்கமான வார்த்தைகளும், இரக்கமான கிரியைகளும் ஒருபோதும் மறக்கப்பட்டுப்போவதில்லை; மேலும்இ துக ர்த்தருடையஜ னங்களாகவ ிசேஷமாய்க்க ாணப்படாதவர் களிடத்திலும், எத்தகைய ஓர் தாக்கத்தைக்கொண்டிருக்கின்றது என்று பார்க்கையில் நாங்கள் அடிக்கடி ஆச்சரியமே அடைகின்றோம். நன்றி பாராட்டும் ஆவியின், இரக்கம் பாராட்டும் ஆவியின் இத்தகைய சான்றுகளானது, நம்முடைய இனமானது விழுகையின் காரணமாகக் கவலைக்கிடமாய் வீழ்ச்சியடைந்தும், சிதைந்தும் இருப்பினும், ஆதியில் மாம்சத்திலிருந்த தேவசாயலின் அம்சங்களானது, சுபாவ மனுஷனுடைய வார்த்தைகளிலும், கிரியைகளிலும் இன்னமும் கண்டறியப்படுகின்றது என்ற உண்மையினை உறுதிப்படுத்துகின்றது. இவைகள் இல்லையெனில், எதுவும் செய்ய முடியாது. புதிய யுகம் வரும்போதும், அப்போது சாத்தான் கட்டப்பட்டிருக்கும்போதும், தீமைக்குத் தடைவிதிக்கப்பட்டிருக்கும் போதும், தவறு செய்வதைவிட, சரியானவற்றை செய்வதே சுலபமான காரியமாகக் காணப்படும்; அப்போது அநேகர் நீதிக்கு இசைவாக வருவார்கள்; இறுதியில் நீதியை விரும்பவும், அக்கிரமத்தை வெறுக்கவும் கற்றுக்கொள்வார்கள்!

உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு என்ற நம் பாடத்தினுடைய வசனமானது, எல்லாக் காலங்களிலும், அனைவருக்கும் பொருந்தும் வசனமாகும். ஆனால் தேவனைச் சந்திப்பதற்கும், குணலட்சணம் குறித்த அவரது தீர்ப்பினை/முடிவினைக்குறித்துக் கேட்பதற்குமான சரியான வழி என்பது நாம் பொதுவாக எண்ணிக்கொண்டிருப்பது போன்று இருப்பதில்லை - அதாவது நோய் வருவதற்குரிய அல்லது மரணம் சம்பவிப்பதற்குரிய அறிகுறியினை நாம் உணரும்போதோ அல்லது ஆபத்துக் காணப்படும் போதோ, நாம் பக்தியாய்க் காணப்படுவதற்குத் துவங்க வேண்டும் என்று நாம் எண்ணிக்கொண்டிருப்பது போன்று இருப்பதில்லை. நாம் கிறிஸ்துவில் விசுவாசிகளாகி, பாவத்திலிருந்து திரும்பி, மன்னிப்பை நாடி தேவதயவிற்கு நாம் தகுதியாவது முதற்கொண்டு, நாம் நம்முடைய சரீரங்களை ஜீவப்பலிகளாக அவருக்கு ஒப்புக்கொடுப்பதற்கும்,இ ப்படியாகஅ வரிடமிருந்துஅ வரதுபு த்திரசு விகாரத்தின்ஆ வியைப்பெ பற்று

ஐக்கியத்திற்குள்ளாக வருவதற்கும் வலியுறுத்தப்படுகின்றோம். இது கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் பிரவேசிப்பதற்குரிய வழியாகிவிடுகின்றது; இந்தப் பள்ளிக்கூடத்தில் மீட்பருடைய மகிமையான இராஜ்யத்தில், அவரோடுகூட உள்ள மகிமையான வேலையில் பங்கெடுப்பதற்கு ஆயத்தமாகும்படி தேவனுடைய புத்திரர்களென நாம் கற்பிக்கப்படுகின்றோம். தேவனுடைய புத்திரர்கள் கிருபையிலும், அறிவிலும் வளர்கையில், இவர்கள் தெய்வீகக் கிருபை பற்றின உணர்ந்துகொள்ளுதலிலும் வளருவார்கள், கவிஞன் கூறியிருப்பதுபோன்று,

ஓ, எந்தப் பூமிக்குரிய மேகமும் எழும்பி,
அடியானின் கண்களிலிருந்து உம்மை மறைக்காதிருப்பதாக.

இப்படிப்பட்ட இருதய நிலைமையில் காணப்படுபவர்கள், எந்த நேரத்திலும் தங்கள் தேவனைச் சந்திப்பதற்கு ஆயத்தமாய் இருப்பார்கள். உண்மையில் தேவனோடுள்ள இவர்களது சந்திப்பு ஏற்கெனவே துவங்கிவிட்டது; மேலும் இதன் இனிமையான தொடர்ச்சியை எவ்வளவேனும் தடைபண்ணும் எந்த ஒரு காரியமும், நிச்சயமாகவே பெரும் துன்பத்தையே கொண்டு வரும்.

தொகுதி - **IV** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]
பக்கம் : xiii

# அர்மகெதோன் யுத்தம்

அர்மகெதோன் என்ற எபிரேய பதம் மெகிதோ அல்லது அழிவின் சிகரம் என்ற அர்த்தத்தைக் கொடுக்கின்றது. மெகிதோவானது Esdraelon/எஸ்டிரிலான் சமவெளியின் தென்கோடியில் ஒரு குறிப்பிட்ட ஸ்தானத்தைப் பெற்றிருக்கின்றது. அதோடு மலைப்பிரதேசத்தினுள் மிக முக்கியமானதொரு கணவாயையும் பெற்றிருக்கின்றது. பழைய ஏற்பாட்டு சரித்திரத்தின் மிகப் பிரபலமான யுத்தங்கள் நடந்த பாலஸ்தீன யுத்தக்களத்தின் இடமாக இது இருக்கின்றது. அங்குக் கிதியோனும், அவனது சிறுகுழுவும் சத்தமிட்டு, மீதியானியரை, அவர்களே ஒருவரை ஒருவர் யுத்தத்தில் தங்களை நாசப்படுத்திக் கொள்ளும்படி செய்தனர் (நியாயாதிபதிகள் 7:19-23). அங்குதான் பெலிஸ்தரால் சவுல் இராஜா தோற்கடிக்கப்பட்டார் (1 சாமுயேல் 31:1-6). அங்குதான் இஸ்ரயேல் சரித்திரத்தின் மிக மோசமான பேரழிவைக் கொண்டுவந்த யுத்தங்கள் ஒன்றில், யோசியா இராஜா எகிப்தின் இராஜா நேகோவால் சங்கரிக்கப்பட்டார் (2 நாளாகமம் 35:22-25). ஆகாப் இராஜாவும், அவனது மனைவி யேசபேலும் அங்கு யெஸ்ரயேல் பட்டணத்தில் வாழ்ந்தனர். பிறகு அங்குதான் யேசபேல் மிகப் பயங்கரமானதொரு மரணத்தைச் சந்தித்தாள். (2 இராஜாக்கள் 9:30-37)

இந்த யுத்தங்கள் நிழலான அர்த்தத்தில் உள்ளன. மீதியானியருடைய தோல்வியானது மீதியானியரிடம் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரயேல் ஜனத்தை விடுதலைசெய்தது. ஆகவே, கிதியோனும், அவனது படைகளும் நமது கர்த்தரையும், சபையையும் அடையாளமாய்க் காட்டுகின்றது. இவர்களே மனுக்குலத்தைப் பாவம் மற்றும் மரணம் என்ற அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்குபவர்கள். சவுல் இராஜாவின் மரணமும், பெலிஸ்தரால் அவரது இராஜ்யத்தின் வீழ்ச்சியும் - மேசியாவைக்குறிக்கும் தாவீதின் ஆளுகைக்கு வழியைத் திறந்தது. வெளிப்படுத்தின விசேஷத்தில் வலுசர்ப்பம் என்று அடையாளமாய் அழைக்கப்படுவது, ஆகாப் இராஜாவின் அரசாட்சியைக் குறிக்கின்றது. யேசபேல் இராணி மகாவேசி என்ற பெயரால் அழைக்கப்படும் பாபிலோனை முன்னறிவிக்கிறாள். தன்னை தீர்க்கத்தரிசி என்று சொல்லுகிற

யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம் பண்ணவும், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளை புசிக்கவும் அவர்களுக்கு போதித்து, அவர்களை வஞ்சித்தாள். (வெளிப்படுத்தல் 2:20)

சத்தியம் மற்றும் அசத்தியத்திற்கும், சரி மற்றும் தவறுக்கும், தேவன் மற்றும் உலகப்பொருளுக்கும் இடையிலுள்ள மாபெரும் முரண்பாடுகளோடு, இந்தப் பிரபலமான போர்க்களமாகிய அர்மகெதோனை இணைத்துப் பேசுவதை மிகப் பொருத்தமான ஒன்றாய் வேதத்தில் தெளிவாய்க் கர்த்தர் காண்பிக்கின்றார். இவைகளின் மூலமாய் சுவிசேஷயுகம் முடிவுக்கு வருவதும், மேசியாவின் யுகம் ஆரம்பமாவதும் அறிவிக்கப்படுகின்றது. வேதத்தின் கடைசி புத்தகத்தில் அவர் மிகப் பலமான அடையாளமொழியைக் காரணத்துடனேயே உபயோகப்படுத்தியிருக்கின்றார்; அவைகளுடைய வெளிப்படுத்துதலின் சரியான காலம் வரும்வரை குறிப்பிட்ட முக்கியமான சத்தியங்களை மறைத்துவைக்கும் கண்ணோட்டத்திலேயே அவ்வாறு செய்திருக்கின்றார். ஆனால் ஏற்ற நேரத்திலும்கூட, துன்மார்க்கரில் ஒருவனும் உணரான், ஞானவான்களோ உணர்ந்துகொள்ளுவார்கள். (தானியேல் 12:10) தேவனோடு இருதயத்தில் ஒன்றுபடாத எவரும் இதை அறியமாட்டார்கள்; அவருடைய ஜனங்கள் மத்தியிலுள்ள ஞானவான்கள் மாத்திரமே உணர்ந்துகொள்வார்கள்; ஆண்டவருடைய உவமையில் இடம்பெறும் புத்தியுள்ள கன்னிகை என்ற பிரிவினர் உணர்ந்துகொள்வார்கள். (மத்தேயு 25:1-13)

R5673

# இராஜாவாகிய சவுலின் கடைசி யுத்தம்

## 2 சாமுயேல் 1

யேகோவா என் பெலனும், என் கேடகமுமாயிருக்கிறார்; என் இருதயம் அவரை நம்பியிருந்தது; நான் சகாயம் பெற்றேன். - சங்கீதம் 28:7

(103-பக்கம் இடம்பெறும் கட்டுரையின் தொடர்ச்சி)

### வில்லின் பாட்டு

தாவீது யுத்தத்தின் முடிவை அறிந்தபோது, சவுலுக்கும் யோனத்தானுக்குமான அவருடைய அனுதாபங்களை, ஓர் அருமையான பாடலில் வெளிப்படுத்தியுள்ளார். இப்பாடலின் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவெனில், அதில் சவுல் எவ்வாறு தன்னைத் துன்பப்படுத்தினார் என்பதுகுறித்தோ, எவ்வாறு தன்னுடைய ஜீவனை எடுக்க நாடினார் என்பதுகுறித்தோ ஒரு வரி கூடக் காணப்படுவதில்லை என்பதே ஆகும். அப்பாடல் சவுல் செய்த நல்ல காரியங்களைப்பற்றின பாராட்டுகளை உள்ளடக்கியுள்ளது. மேலும் அப்பாடல் ஸ்திரீகளின் நேசத்தைப்பார்க்கிலும் அதிகமாய் இருக்கும் யோனத்தானின் நேசத்தைக் கூறுகின்றது. அப்பாடல் 2 சாமுயேல் 1:17-27 - வரையிலான வசனப்பகுதிகளில் இடம்பெறுகின்றது. சவுலிலிருந்து, இறந்தோர் ஊர்வலம் என்பது (ஜார்ஜ் என்ற) இசையமைப்பாளரால் இயற்றப்பட்ட ஓர் இசையமைப்பாகும். இது யோனத்தானுக்கும், சவுலுக்கும் தாவீது பாடிய வில்லின் பாடலிலுள்ள உணர்வுகளை, இசையில் வெளிப்படுத்தும் ஒரு முயற்சியாகும். இதன் காரணமாக, இது இன்று பெரியவர்களின் இறுதி மரண சடங்குகளில் (funeral services) பயன்படுத்தப்பட்டுள்ளது.

யுத்தத்தில் யோனத்தான் உட்பட சவுலின் புத்திரர்கள் கொல்லப்பட்டார்கள். சவுலும் காயம் அடைந்திருந்தார். தான் ஒருவேளை பெலிஸ்தரின் கரங்களில் அகப்பட்டால், தன்னை மரணத்திற்கு ஏதுவாக துன்பப்படுத்துவார்கள் எனச் சவுல் அஞ்சினபடியால், தன்னைக் கொன்று போடும்படிக்குத் தன்னுடைய ஆயுததாரியைக் கேட்டுக்கொண்டார். இறுதியில் சவுல் தன்னுடைய பட்டயத்தினாலே தற்கொலை செய்துகொண்டார்.

வாலிபனான அமலேக்கியன் ஒருவன், தாவீதின் தயவைப் பெற்றுக்கொள்ளலாம் (தாவீதிடம் நற்பெயர் வாங்கிக்கொள்ளலாம்) என்று எண்ணி, தாவீது எவ்வாறெல்லாம் சவுலால் துன்பப்படுத்தப்பட்டார் என்பதைக் கொஞ்சம் அறிந்திருந்தபடியால், சவுலின் மரண செய்தியையும், சவுலின் தலையின் மேல் இருந்த முடியையும், அவர் புயத்திலிருந்த அஸ்தகடகத்தையும், தாவீதினிடத்திற்குக் கொண்டுவந்தான். மேலும் இராஜாவாகிய சவுல் தன்னிடம் கேட்டுக் கொண்டதின் பேரில் சவுலை, தான் கொன்று போட்டதாகவும் கூறினான். தனக்கு கனம் உண்டு பண்ணும் வகையிலே இக்கற்பனைக் கதையைக் கூறினான். ஆனால் இவன் எதிர்பார்த்ததற்கு முற்றிலும் எதிராக தாவீது இந்தச் சங்கதிகளைக் கண்நோக்கிச் செயல்பட்டார். தாவீது அவனை நோக்கி: கர்த்தர் அபிஷேகம் பண்ணினவரை கொன்றுபோடும்படி நீ உன் கையை நீட்ட பயப்படாமற்போனது என்ன என்றார். தாவீது அந்த அமலேக்கியனைக் கொன்று போடும்படிக்குக் கட்டளையிட்டார். தாவீது இராமுழுவதும் சவுலுக்காகவும், யோனத்தானுக்காகவும் புலம்பி அழுதார்.

இஸ்ரயேலின் இராஜாவாக தான் இறுதியில் நிறுத்தப்படுவார் என்ற முழுமையான நம்பிக்கையில் தாவீது, அநேக வருடங்களாகக் கர்த்தரை நோக்கிக் காத்திருந்தார். தான் இராஜாவாகும் நிகழ்வை அவர் எவ்விதத்திலும் துரிதப்படுத்தாமல், கர்த்தர் தன்னை அமர்த்தப்போகிற அதிகாரத்திற்கும், பொறுப்புகளுக்கும், ஆயத்தமாக மாத்திரம் நின்றுகொண்டிருந்தார். தாவீதுடைய வாழ்க்கை நமக்கு எத்துணை அருமையான மாதிரியாக உள்ளது! கிறிஸ்தவர்கள் தங்களுடைய ஜீவியத்தின் சகல விஷயங்களிலும், கர்த்தருடைய வேளைக்காக பொறுமையுடன் காத்திருக்க கற்றுக்கொள்ள வேண்டும். உம்முடைய இராஜ்யம் வருவதாக என்று ஜெபித்து, இராஜ்யத்திற்காகக் காத்திருப்பது மாத்திரமல்லாமல், கிறிஸ்தவர்கள் தங்களுடைய சகல விஷயங்களிலும், தங்களுடைய நன்மைக்கு ஏதுவாய்க் காரியங்களை மாற்றும் அவருடைய வழிநடத்துதல்களுக்காகக் காத்திருக்க வேண்டும். கிறிஸ்தவர்களிடம் பெரும்பாலும் காணப்படும் தவறுகளில் ஒன்று,க ர்த்தருடையவ ழிநடத்துதலையும்,த ங்களுடையந ன்மைக்குஏ துவாகஅ வர்வ ாக்களித்துள்ள பராமரிப்பையும் கவனியாமல், அதற்குக் காத்திராமல், தங்களுக்குப் பாதிப்பு ஏற்படும் விதத்தில் தங்கள் விஷயங்களைத் தாங்களே வழிநடத்திவிடுவார்கள்.

தானும் தன்னோடு இருப்பவர்களும் பெலிஸ்திய பட்டணத்தைவிட்டு புறப்படும் நேரம் வந்துவிட்டது என்று தாவீது உணர்ந்தபோது, ஆசாரியர்கள் மூலமாயும், ஏபோத்தின் மூலமாயும் கர்த்தரிடத்தில் விசாரித்தார். தாவீது, யூதேயாவுக்குப் போகவேண்டும் என்ற பதில் வந்தது. எந்தப் பட்டணத்திற்குச் செல்ல வேண்டும் எனவும் தாவீது விசாரித்தார். தாவீது எப்ரோனுக்குப் போகும்படி பதில் பெற்றுக்கொண்டார். தாவீதும், அவரோடு இருந்தவர்களும் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போனார்கள். தாவீதின் சொந்த கோத்திரமாகிய யூதா கோத்திரம், தாவீதைத் தங்களுடைய இராஜாவாக ஏற்றுக்கொண்டனர். இதற்கு ஏழு வருடங்களுக்குப் பிற்பாடே, இவர் சமஸ்த இஸ்ரயேல்மீதும் இராஜாவானார். இதற்கிடையில் சவுலின் குமாரர்களில் ஒருவனான இஸ்போசேத் உயிரோடு இருந்தபடியால், சவுலின் பிரதான படைத்தலைவனான அப்னேர் இஸ்போசேத்தை இஸ்ரயேலின் இராஜாவாக அபிஷேகம் பண்ணினார். யூதாவின் இராஜாவாகிய தாவீது, மற்ற கோத்திரங்களின் ஆதரவைக் கேட்க முயற்சியாமல், கர்த்தருடைய ஏற்ற வேளைக்காகக் காத்திருந்தார். தாவீது முழுஇஸ்ரயேலுக்கும் இராஜாவாகுவதற்கு முன்பு, ஏழு வருடங்கள் கடந்தோடியது.

பின்னர் தாவீதின் ஊழியர்களுக்கு எதிராக அப்னேர், பெரும் படையைத் திரட்டி, கடுமையான போராட்டம் நடத்தினார். இதில் தாவீதின் படைகள் ஜெயம் கொண்டது; எதிர்தரப்பு படையினர் தோற்றுப்போனார்கள். கடைசியாக, அப்னேருக்கு இஸ்போசேத் இராஜாவின் மீது கோபம் மூண்டபோது, அப்னேர் தாவீதுக்கு நேராக அனைத்து இஸ்ரயேலர்களின் இருதயங்களையும் திருப்ப உதவுவேன் என்றும், தாவீதுக்கு வேலையாளாக இருப்பேன் என்றும் தாவீதிடம் கூறினார். இது கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்கு இசைவாய் இருக்கின்றபடியால், இது கர்த்தருடைய சித்தம் என்று கருதி தாவீது ஏற்றுக்கொண்டார். ஆனால் காரியங்கள் இதன்படியாக சம்பவிக்கவில்லை. காரணம், தாவீதின் உடன்பிறப்புடைய மகனும், யுத்தத்தில் முக்கியமான நபருமாகிய யோவாப், அப்னேரை வஞ்சகமாக சங்காரம் பண்ணினான். இந்த இடத்திலும் தாவீது நடந்து கொண்டவிதம் வித்தியாசமாக இருந்தது. அப்னேரின் மரணத்தைக்குறித்துச் சந்தோஷப்படுவதற்குப் பதிலாக, தாவீது துக்கித்து, யோவாபின் இந்தத் தவறான செய்கையை வெளிப்படையாகக் கண்டித்தார். இஸ்ரயேலில் பிரபுவும், பெரிய மனுஷனுமாகிய ஒருவன் விழுந்தான் என்று அறியீர்களா என்று கூறி, தனது திறமிக்க வீரர்களின் முன்னிலையில், அப்னேரை ஒரு மாபெரும் போர்வீரன் என்று பாராட்டுமளவுக்குத் தாவீது தைரியமுள்ளவராக இருந்தார்.

## சமஸ்த இஸ்ரயேலுக்கும் இராஜா

சில காலத்திற்குப்பின், சிலர் இஸ்போசேத் இராஜாவைக் கொன்று, அவன் மரித்ததற்குச் சான்றாக, அவன் தலையைத் தாவீதிடம் கொண்டுவந்தார்கள்; தாங்கள் பரிசளிக்கப்படுவார்கள் என்று எண்ணினார்கள். இவர்கள் தாவீது இராஜாவின் மனநிலையைத் தவறாக எண்ணி இருந்தனர். இவர்களும் தண்டிக்கப்பட்டனர். இவர்கள் இராஜாவைக் கொன்று போட்டுள்ளனர். ஆகவே, இவர்களும் அதேபோன்று கொன்று போடப்படும் தண்டனையைப் பெற்றுக்கொண்டார்கள். இவ்வாறாக, அன்றும் இன்றும் அரிதாயுள்ள நீதியின் கொள்கையை, தாவீதின் வாழ்க்கையில் ஜனங்கள் கண்டனர். இவை அனைத்தும் ஜனங்களிடையே இராஜாவைப் பிரபலப்படுத்தியது; அவர் தன்னலமற்றவர் மற்றும் குறுகிய மனமற்றவர் எனவும், தன்னை எதிர்க்கிறவர்களிடமும், தனது எதிராளிகளிடமும்கூடப் பரந்த மனம் கொண்டவராகவும், பெருந்தன்மையோடு நடந்துகொண்டவராகவும் இருந்தார் எனவும் ஜனங்கள் உணர்ந்துகொண்டனர். அவருக்கு நீதி குறித்து மிகுந்த மதிப்பு காணப்பட்டது; அதேசமயம் தனது சத்துருக்களுக்கு அனுதாபமும் காட்டினார்.

இறுதியாக, பதினொரு கோத்திரங்களும், தாவீதை முழுஇஸ்ரயேலுக்கும் இராஜாவாக ஏற்றுக்கொள்ளும் விருப்பத்தைத் தெரிவிக்கும் பிரதிநிதியை அவரிடத்திற்கு அனுப்பினபோது, தாவீது 37-வயதாய் இருந்தார். இச்சம்பவம், சவுல் இராஜா மரித்த ஏழரை ஆண்டுகளுக்குப் பின்பும், முதலில் சாமுயேலால் அபிஷேகிக்கப்பட்டு 17-வருடங்களுக்குப் பின்பும் சம்பவித்தது. இந்த ஒவ்வொரு வருடத்திலும் விசுவாசமும், பொறுமையும் தாவீது இராஜாவினிடத்தில் காணப்பட்டது. இதன் மூலம் இராஜாவாகிய தாவீதின் குணலட்சணங்களும் வெளிப்படுகின்றது. அவருடைய குணலட்சணங்கள், தேவனுக்கான அவருடைய பயபக்தியையும், தெய்வீகச் சித்தத்திற்கு அவர் தன்னைக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்ததையும் காட்டுகின்றது.

அனைத்து இஸ்ரயேலின் கோத்திரங்களுக்கு இராஜாவாக, தாவீது ஏற்றுக்கொள்ளப்பட்ட காரியம், அவருடைய தலையில் மூன்றாம் முறையாக அபிஷேகத்தைலம் ஊற்றப்பட்டு, அவர் அபிஷேகிக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டுகின்றது.

இதற்கிடையில் தாவீது இராஜாவினால் அழிக்கப்படுவார்கள் எனத் தேவனால் கூறப்பட்ட கர்த்தருடைய சத்துருக்களாகிய தனது சத்துருக்களை ஜெயம்கொள்வதில், தாவீது பெலம் கொண்டு பெருகினார். எமோரியரின் அக்கிரமம் நிறைவடையும்போது, அது அவர்கள் பூமியில் இராதபடிக்கு அழிக்கப்படுவதற்கான கர்த்தருடைய சித்தத்தைச் சுட்டிக்காட்டுகின்றது என்பதை நம்முடைய வாசகர்களுக்கு நினைவுபடுத்துகின்றோம். (ஆதியாகமம் 15:16). யுத்தத்தின் மூலமாகவோ அல்லது கொள்ளை நோயின் மூலமாகவோ அல்லது பஞ்சத்தின் மூலமாகவோ அழிக்கப்பட்டாலும், எதுவாயினும் சரி, மரணம் எனும் தெய்வீகத் தீர்ப்பு நிறைவேற வேண்டும்.

நோய், யுத்தம், பஞ்சம், கொள்ளைநோய், மரணம் ஆகியவைகள் உலகை ஆளுகை செய்யும்படிக்குத் தேவன் அனுமதித்துள்ளார். தேவன், மாபெரும் மீட்பர் மூலமாக மனுஷருக்குரிய மீட்பையும், மனுஷருக்குரிய இரட்சிப்பையும் ஆயத்தமாக்கிக் கொண்டிருக்கின்றார். மேசியாவின் இராஜ்யம் விரைவில் பூமியின் மீதான ஆளுகையை எடுத்துக்கொண்டு, பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையை நிறுத்தி, சாத்தானைக் கட்டி, பூமியின் மீது தெய்வீகச் சத்தியத்தின் சூரியனைப் பிரகாசிக்கப்பண்ணும். அப்போது சகல குருடான கண்களும் திறக்கப்படும். சகல செவிடான செவிகளும் திறக்கப்படும். உண்மையான தேவனையும், அவருடைய உண்மையான செய்தியையும் புரிந்துகொள்ளவும், அறிந்துகொள்ளவும் தடையற்றுக் காணப்படும்.

இதற்கிடையில் இஸ்ரயேலின் பட்டயத்தினால் மரித்தவர்கள் எவரும், காலம் கடந்துள்ளதை அறிய மாட்டார்கள். பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிற அனைவரும், விழிக்கும் ஆயிரவருட அரசாட்சியில் அவர்கள் விழித்தெழுவார்கள். அவர்கள் அப்பொழுது மிகவும் சாதகமான சூழ்நிலைகளில் காணப்படுவார்கள். அவர்கள் அறியாமை மற்றும் மூடநம்பிக்கையின் கட்டுகளிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். மேசியாவின் ஆயிரவருட இராஜ்யத்தில் அவர்கள் தங்களுடைய பெலவீனங்கள் மற்றும் குறைவுகளிலிருந்து, ஏதேனில் இழந்ததும், கல்வாரியில் மீட்டுக் கொள்ளப்பட்டதுமாகிய மனித பரிபூரணத்திற்குத் திரும்புவார்கள்.

R4224 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன்

யோனத்தான் மற்றும் இவரது அன்பு பற்றின தாவீதின் புரிந்துகொள்ளுதல் குறித்த ஒரு பார்வையினை, வில்லின் பாடல் என்று அழைக்கப்படுகின்ற பாடலில் பார்க்கலாம்; இப்பாடலானது தாவீதின் நண்பனாகிய யோனத்தானுடைய மரணத்தின் நிமித்தமான தாவீதின் புலம்பலாகும். என் சகோதரனாகிய யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப்படுகிறேன்; நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய்; உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது; ஸ்திரீகளின் சிநேகத்தைப்பார்க்கிலும் அதிகமாயிருந்தது (2 சாமுயேல் 1:26). ஆனால் அன்புக்குரிய நண்பர்களே, இதைவிட இன்னும் அருமையானதொரு அன்பினை நாம் அறிவோம்; மேலும் அந்த அன்பைக்குறித்து நாம் சில சமயங்களில் பின்வருமாறு பாடுவோம்:

தெய்வீகமான இயேசுவின் அன்பு,
எந்தன் ஏக்கமுள்ள இருதயம்தனை நிரப்புவதாக.

அன்பு, அன்பினை உருவாக்குகின்றது; ஆகையாலே நாம் முதலாவது தேவனை அன்பு கூறவில்லை என்றும், அவரே நம்மை முந்தி அன்புகூர்ந்து, தம்முடைய குமாரனைக் கொடுத்ததன் மூலம், நமக்கான தம்முடைய அன்பினை வெளிப்படுத்தினார் என்றும் வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. ஆகையால் இயேசுவின் அன்பே நம்மைக் கவர்ந்து இழுத்தது, இன்னுமாக நம்முடைய பிரதி அன்பினையும் கொணர்ந்தது. நாம் நாளுக்குநாள், எல்லாப் புத்திக்கும் மேலான தேவனுடைய மற்றும் கிறிஸ்துவினுடைய அன்பிற்கான நீளத்தையும், ஆழத்தையும், உயரத்தையும், அகலத்தையும் அதிகமதிகமாய் உணர வருகையில், இவர்கள் மீதான நமது அன்பும் பொங்கிவழியும். மேலும் இவ்வன்பு அதிகரிக்கையில், நாமும்கூடத் தேவனுக்கொத்த சாயலாகுவோம்; மேலும் இதற்கேற்ப நம்மிடமிருந்தும், நம்மை அன்புகூராத மற்றவர்கள்மீதும் அன்பு கடந்துசெல்லும்; மற்றவர்களுக்கான நம்முடைய இந்த அன்பானது, மற்றவர்களிலும் பிரதி அன்பினை உருவாக்கும்; மேலும் உலக ஆவிக்கும், உலக சிநேகத்துக்கும், உலக சுயநலத்துக்கும் எதிராய்க் காணப்படும் (மேலே குறிப்பிடப்பட்டுள்ள) இந்த ஒரு கொள்கையினைக்குறித்த அதிகப்படியான புரிந்துகொள்ளுதலுக்குள் மற்றவர்களையும் வழிநடத்தும். ஆகையால் தேவனுக்கு ஒத்த இந்தப் பண்பினை வளர்த்துக்கொள்ள நாடுவோமாக. அன்பு உலகத்தில் பிரதானமானது மாத்திரமல்லாமல், அது தெய்வீகக் குணலட்சணத்தின் முக்கிய சாராம்சமாகவும், இந்த அன்பென்னும் ஒரே வார்த்தையில், அதன் நிறைவேறுதலைப் பெற்றிருக்கும் தெய்வீகப் பிரமாணத்தின் முக்கிய சாராம்சமாகவும் காணப்படுகின்றது என்றும்கூட வேதவாக்கியங்கள் சுட்டிக்காண்பிப்பதை நாம் கவனிப்போமாக. ஆகையால் இப்பண்பினை நாம்

அப்பியாசப்படுத்தும்போது, நாம் அழைக்கப்பட்டிருக்கின்றதும், நமது கர்த்தருடைய கிருபையினால் நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்துவதன் மூலம் நாம் அடைய நாடுகின்றதுமான மகிமையான வாய்ப்புகளுக்காக, நம்மை நாம் ஆயத்தப்படுத்திக்கொள்ளுகின்ற வர்களாகக் காணப்படுவோம் என்பதையும் நினைவில் கொள்வோமாக.

## வில்லின் பாட்டு

*இஸ்ரயேலின் அலங்காரம் உயர்ந்த ஸ்தானங்களில் அதமாயிற்று;*
*பராக்கிரமசாலிகள் விழுந்துபோனார்கள்.*
*பெலிஸ்தரின் குமாரத்திகள் சந்தோஷப்படாதபடிக்கும்,*
*விருத்தசேதனம் இல்லாதவர்களின் குமாரத்திகள் களிகூராதபடிக்கும்,*
*அதைக் காத் பட்டணத்தில் அறிவியாமலும்,*
*அஸ்கலோனின் வீதிகளில் பிரஸ்தாபப்படுத்தாமலும் இருங்கள்.*
*கில்போவா மலைகளே, உங்கள்மேல் பனியும் மழையும் பெய்யாமலும்,*
*காணிக்கைக்கு ஏற்ற பலன்தரும் வயல்கள் இராமலும் போவதாக;*
*அங்கே பராக்கிரமசாலிகளுடைய கேடகம் அவமதிக்கப்பட்டது;*
*சவுல் தைலத்தால் அபிஷேகம்பண்ணப்படாதவர்போல*
*அவர் கேடகமும் அவமதிக்கப்பட்டதே.*
*கொலையுண்டவர்களின் இரத்தத்தைக் குடியாமலும்,*
*பராக்கிரமசாலிகளின் நிணத்தை உண்ணாமலும்,*
*யோனத்தானுடைய வில் பின்வாங்கினதில்லை;*
*சவுலின் பட்டயம் வெறுமையாய்த் திரும்பினதில்லை.*
*உயிரோடே இருக்கையில் சவுலும் யோனத்தானும் பிரியமும் இன்பமுமாயிருந்தார்கள்;*
*மரணத்திலும் பிரிந்துபோனதில்லை;*
*கழுகுகளைப்பார்க்கிலும் வேகமும்,*
*சிங்கங்களைப்பார்க்கிலும் பலமுமுள்ளவர்களாயிருந்தார்கள்.*
*இஸ்ரயேலின் குமாரத்திகளே, உங்களுக்கு இரத்தாம்பரத்தைச் சிறப்பாய் உடுப்பித்து,*
*உங்கள் உடையின்மேல் பொன் ஆபரணங்களைத் தரிப்பித்த*
*சவுலுக்காக அழுது புலம்புங்கள்.*
*போர்முகத்தில் பராக்கிரமசாலிகள் விழுந்தார்களே;*
*யோனத்தானே, உயரமான ஸ்தலங்களிலே வெட்டுண்டு போனாயே.*
*என் சகோதரனாகிய யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப்படுகிறேன்;*
*நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய்;*
*உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது;*
*ஸ்திரீகளின் சிநேகத்தைப்பார்க்கிலும் அதிகமாயிருந்தது.*
*பராக்கிரமசாலிகள் விழுந்துபோனார்களே;*
*யுத்த ஆயுதங்கள் எல்லாம் அழிந்து போயிற்றே.*

*2 சாமுயேல் 1:17-27* ISV

R1996

# யூதாவின் இராஜாவாகிய தாவீது

## 2 சாமுயேல் 2:1-11

கர்த்தர் இராஜரிகம்பண்ணுகிறார்; பூமி பூரிப்பாகி, திரளான தீவுகள் மகிழக்கடவது. - சங்கீதம் 97:1

தாவீது, உயரிய மற்றும் பலதரப்பட்ட சுபாவ திறமைகளை உடைய மனுஷனாவார்; வெற்றிகரமான அரசியல் வல்லுனரின், போர்வீரனின், பாடகனின், கவிஞனின் அபூர்வமான திறமைகளுடைய கலவையான ஒரு மனுஷன் ஆவார். இவரது பிரதான பண்புகள், இவரது பெருந்தன்மையிலும், தயாளத்திலும்/பரிவிலும், தாழ்மையிலும், இரக்கத்திலும், உற்சாகத்திலும், துணிவிலும் அடங்குகின்றது. இவர் தேவனிடத்தில் பயபக்தியாய்க் காணப்பட்டார்; இவரது இளமைப்பருவம் முதற்கொண்டு, இவர் தேவனுடைய வாக்குத்தத்தங்களிலும், வழிநடத்துதல்களிலும் முழுமையான விசுவாசம் கொண்டதாகத் தெரிகின்றது. எனினும் தாவீது ஒரு முன்மாதிரியான பரிசுத்தவான் அல்ல; நம்மை வியப்பில் ஆழ்த்திய அருமையான மற்றும் உயர்வான பண்புகளுக்கு முற்றிலும் எதிர்மாறான சில விநோதமான ஒழுங்கின்மைகளும், இவரது குணங்களில் ஓங்கி நின்றதை நாம் காணலாம். எனினும் இவைகளை இவர் உணர்ந்த அளவிற்கேற்ப, மிக உண்மையாய் மனம் வருந்தினார்; இன்னுமாக மனம் வருந்துதலுக்கு இவரை வழிநடத்தின தாழ்மையினையும் நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது; மேலும் சுதந்தரித்துக்கொண்ட சீர்கேடுகளினால் கஷ்டப்படும் விழுந்துபோன பெலவீனமான பின்னடியார்கள் அனைவரும், தாழ்மையோடு தங்கள் குறைபாடுகளை ஒப்புக்கொண்டு, தேவனுடைய உருக்கமான இரக்கங்களைத் தாங்கள் சார்ந்திருக்கின்றதைத் தேவன் எப்படி இரக்கத்தோடும், அன்போடும் கருத்தில் எடுத்துக்கொள்கின்றாரோ, அந்தக் கண்ணோட்டத்திலேயே நாமும் தாவீதின் விஷயத்தினைக் கருத்தில்கொள்கின்றோம். இவர் வாலிபனாக இருக்கையில், இவரைத் தேவன் இஸ்ரயேலின் இராஜாவாக அபிஷேகம்பண்ண இருந்தபோது, இவரைக்குறித்து: கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தேடினார் என்று கூறப்பட்டுள்ளது (1 சாமுயேல் 13:14). இவர் பின்னாட்களில் தவறுகள் செய்திருந்தபோதிலும், இவரது ஆழ்ந்த மனவருந்துதலின் காரணமான கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, இவரது பின்னாட்களிலும் இவர் கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷன் என்று அநேகக்காரியங்களில் சொல்லப்பட முடிந்தவராகவே காணப்பட்டார். இந்த வசனத்தின் வார்த்தைகளானது, இவர் வாலிபனாக அல்லது புருஷனாக இருந்தபோது, இவரிடம் பூரணம் காணப்பட்டது என்பதற்கான சாட்சியமாகக் கருதப்படக்கூடாது, அதற்குப் பதிலாகத் தேவன் இவரை நியமித்துள்ள ஸ்தானத்திற்குரிய இவரது தகுதியை சுட்டிக்காட்டுவதாக அவ்வார்த்தைகளானது கருதப்பட வேண்டும்; அந்த ஸ்தானமானது மிகுந்த கனத்திற்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமான ஒன்றாகக் காணப்படுவதினால், அந்த ஸ்தானத்திற்குத் தகுதியானவர் என்ற தேவனுடைய தெரிந்துகொள்ளுதலானது, இவரிடத்தில், அதிலும் விசேஷமாக இவரது தெரிந்துகொள்ளுதலின்போது, உயர்ந்த குணங்களும், ஆற்றலும் இருந்துள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இதுபோலவே சவுல் அபிஷேகம்பண்ணப்படும்போதும், அவர் விஷயத்திலும் காணப்பட்டது; இவரைக்குறித்துத் தீர்க்கத்தரிசியாகிய சாமுயேல்: கர்த்தர் தெரிந்துகொண்டவனைப் பாருங்கள், சமஸ்த ஜனங்களுக்குள்ளும் அவனுக்குச் சமமானவன் இல்லை என்றார். (1 சாமுயேல் 10:24)

தாவீதின் ஆரம்பகால வாழ்க்கையினுடைய விசேஷித்த அனுபவங்களானது, இஸ்ரயேலின் இராஜாவாக இவர் செய்யவிருந்த வாழ்நாள் முழுவதுமான பணிக்கு இவரை ஆயத்தப்படுத்துவதில் பெரும் பங்குவகித்ததாய் இருந்தது. சிறு மேய்ப்பனாக இருந்தபோது, தாவீது சிங்கத்துடனும், கரடியுடனும் எதிர்த்த சம்பவமும், இராட்சதன் கோலியாத்துடன் பண்ணிய சண்டையும், சவுலோடு அரண்மனையில் இருந்தபோது ஏற்பட்ட அனுபவங்களும், யோனத்தானோடும், மற்றவர்களோடும் இவருக்குக் கிடைத்த நட்பும், பழக்கமும், சவுலுக்கு இவர் தப்பி ஓடுவதுமாகிய சம்பவங்கள் அனைத்தும், சவுலுடைய மரணத்துக்குப்பின் இவர் பொறுப்பேற்க வேண்டிய ஸ்தானத்திற்குத் தெரிந்துகொள்ளப்பட்டவரென இவர் முதிர்ச்சியடைவதற்கும், ஆயத்தமாகுவதற்கும் பங்காற்றின. அனுபவம் எனும் இந்தப் பள்ளிக்கூடத்தில் இவர் திடமனம், துணிவு, தேவனைச் சார்ந்திருத்தல் பற்றின விலையேறப்பெற்ற பாடங்களைக் கற்றுக்கொண்டார்; இன்னுமாக அசாதாரணமான பிரச்சனைகளின்போதும், கடுமையான சோதனைகள் மற்றும் பரீட்சைகளின்போதும், எப்படி ஞானமாய் நடந்துகொள்வது என்பதற்கடுத்த பாடங்களையும் கற்றுக்கொண்டார். அரண்மனை வாழ்க்கையினுடைய சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் அறிந்துகொண்டார்; பின்னர் தேசத்திலிருந்து துரத்தப்பட்ட/நாடோடியாகக் காணப்பட்ட ஏழு வருட கால அனுபவங்களின்போது, மற்ற ஜாதிகள் மத்தியில் காணப்பட்டபோது,அ வர்களைக்குறித்தும்அ றிந்துகொண்டார்; இவைகள்ப ின்னாட்களில்இ வர்களை எப்படிக் கையாளுவது என்பது தொடர்புடைய விஷயத்திற்குச் சந்தேகத்திற்கிடமின்றி இவருக்குப் பெரும் உதவியாய் இருந்தது. இவர் நாடோடியாகக் காணப்படும்போது, அதிருப்தி அடைந்திருந்த ஜனங்கள் இவரோடு கூடிக்கொண்டார்கள்; இவர்களில் பெரும்பாலானோர் சவுலினுடைய ஒடுக்குதலினால் பாதிக்கப்பட்டவர்களாய் இருந்தனர். ஜனங்கள் மத்தியில் முதன்மையானவர்களாகக் காணப்பட்டவர்களில் அநேகர் இக்கூட்டத்தில் காணப்பட்டனர்; இவர்கள் பின்னாட்களில் இவரைச் சேவித்தார்கள்.

இப்படியாகத் தேவன் தம்முடைய ஊழியக்காரனைத் தெரிந்துகொண்டது மாத்திரமல்லாமல், தாவீது அழைக்கப்பட்ட கடமைகளுக்கடுத்த காரியங்களில், இவரைத் தேவன் பயிற்றுவிக்கவும் செய்தார். தாவீதின் விஷயத்திலுள்ள இந்த ஏற்பாடானது, பொதுவாய் நிலவும் தேவனுடைய ஏற்பாடுகளை நம்முடைய நினைவிற்குக்கொண்டு வருகின்றது; அதாவது தேவன் எப்படி ஞானமாய்க் காரியங்களை அருமையாக நடப்பித்து, எல்லாவற்றையும் வழிநடத்தி தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுகின்றார் என்பதை நமக்கு நினைப்பூட்டுகின்றது. பெரும்பாலான ஆறுதலளிக்கும் சங்கீதங்கள் அநேகவற்றை இவர், நாடோடியாக வாழ்ந்த காலங்களிலுள்ள தனது கடினமான அனுபவங்களின்போது எழுதியுள்ளார். உண்மையைச் சொல்ல வேண்டுமெனில், இம்மனுஷனுக்கு வந்த அசாதாரணமான மற்றும் பலதரப்பட்ட அனுபவங்களும், சங்கீதத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றபடி, அந்த அனுபவங்களிலிருந்து வந்த படிப்பினைகளும், எல்லா யுகங்களிலும் காணப்படும் தேவனுடைய ஜனங்களுக்கு ஆறுதலாகவும், ஆசீர்வாதமாகவும் காணப்படுகின்றது. பொதுவான ஒரு கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, தாவீதின் அனுபவங்களானது, பரலோக இராஜ்யத்திற்கென்று இதேபோன்று, ஆயத்தப்படுத்தப்பட்டு வரும் சுவிசேஷயுக சபைக்கு ஒத்திருக்கின்றது. சந்தேகத்திற்கிடமின்றி இந்த ஒரு காரணத்தின் நிமித்தமாகவே தாவீதின் அனுபவங்கள், நம் அநேகருடைய இருதயங்களில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

தாவீது அபிஷேகம்பண்ணப்பட்டது முதற்கொண்டு, இவர் இராஜ்யபாரத்தை ஸ்தாபிப்பதுவரையுள்ள இவரது நடக்கைகள்குறித்த பதிவுகளானது, இவர் தேவனிடத்தில் கொண்டிருந்த முழுமையான

விசுவாசத்தினை வெளிப்படுத்துகின்றது - அதாவது தன்னை அழைத்து, தன்னை அபிஷேகம்பண்ணினவர், தம்முடைய ஏற்றவேளையில், தன்னை அரியணையில் ஏற்றுவதற்கும், தன்னுடைய இராஜ்யபாரத்தை ஸ்தாபிப்பதற்கும் வல்லமையுள்ளவராக இருக்கின்றார் என்று தேவனில் முழுமையாக நம்பிக்கைக் கொண்டிருந்தார். சவுல் தன்னைக் கொன்றுபோடத் தேடித் திரிந்தபோதும்கூட, சவுலை அப்புறப்படுத்துவதற்கோ, சவுலின் அதிகாரத்தை வலுவற்றதாக்குவதற்கோ தாவீது எவ்விதமான முயற்சிகளையும் எடுக்கவில்லை. சவுல் தூங்கிக்கொண்டிருந்தபோது, அவரைக் கொன்றுபோட தாவீதிற்கு வாய்ப்பு வந்தபோதிலும், கர்த்தர் அபிஷேகம்பண்ணின மனுஷன்மீது இவர் கை வைக்க மனதில்லாதிருந்தார். தேவன் வாக்களித்துள்ளவைகளை அவர் நிறைவேற்றவும் வல்லவராயிருக்கின்றார் என்பதை அறிந்தவராக, தாவீது தேவனுடைய ஏற்றவேளைக்காய்ப் பொறுமையோடு காத்திருக்க விரும்பினார்; சவுல் மரித்த பிற்பாடும்கூட, காலியாய் இருந்த அந்த ஸ்தானத்தினை இவர் உடனேபோய் உரிமைப்பாராட்டிடவில்லை, மாறாக கர்த்தருடைய வேளை வந்துள்ளதாவென, முதலாவது கர்த்தரிடம் விசாரித்தவராய்க் காணப்பட்டார்.

கர்த்தருடைய வேளை வந்தபோது, தாவீதும், இவர் குடும்பத்தாரும், இன்னும் இவரோடு இருந்த புருஷர்களும், அவர்களின் குடும்பத்தாரும் எப்ரோனுக்குப் போகும்படிக்குச் சொல்லப்பட்டது; இவர் ஆரவாரம் செய்து அங்குச் செல்லவில்லை அல்லது அங்குச் சென்றவுடன், இவர் தனது உரிமைகுறித்து உரிமைப்பாராட்டிக்கொள்ளவுமில்லை; மாறாக கர்த்தருடைய வழிகாட்டுதலுக்குரிய கூடுதல் விவரங்களுக்காக அமைதியாய்க் காத்திருந்தார். அப்பொழுது யூதாவின் மனுஷர் வந்து அங்கே தாவீதை யூதா வம்சத்தாரின்மேல் இராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள் (2 சாமுயேல் 2:4); இப்படியாகத் தெய்வீக அபிஷேகத்திற்கு இசைவாக மாத்திரமல்லாமல், தேவனுடைய விருப்பத்திற்கும் இசைவாகக் காரியங்கள் நடைபெற்றன. இப்படியாகத் தெய்வீக நியமனத்தினால் மாத்திரமல்ல, ஜனங்களுடைய தெரிந்து கொள்ளுதலினாலும், தாவீதின் இராஜ்யபாரம் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்த எல்லாக் காரியங்களிலுள்ள தாவீதின் நடக்கையினையும், இவர் விஷயத்திலுள்ள தெய்வீக வழிநடத்துதல்களையும் பார்க்கையில், இந்த யுகத்திலுள்ள தேவனால் அபிஷேகம்பண்ணப்பட்ட ஜனங்களாகிய சுவிசேஷயுக சபைக்கு ஆரோக்கியமான பாடங்கள் காணப்படுகின்றன. தேவனுடைய சுதந்தரர்களாகவும், இயேசு கிறிஸ்துவின் இராஜ்யத்திலும், மகிமையிலும், அவரோடு உடன்சுதந்தரர் களாகவும், தேவனுடைய ஆசாரியர்களாகவும், இராஜாக்களாகவும் இருக்கும்படிக்கு அவரால் அழைக்கப்பட்டவர்களாக மற்றும் அபிஷேகம்பண்ணப்பட்டவர்களாக நாம் இருக்கின்றபடியால், இந்த உயர்த்தப்படுதலுக்குரிய கர்த்தருடைய ஏற்றவேளைக்காய்ப் பொறுமையோடு காத்திருப்பது நமக்குரிய காரியமாகும்; இதற்கிடையில் தாவீதைப்போன்று, எதிர்காலத்தில் நாம் பூமியின் குடிகள் அனைவரையும் ஆசீர்வதிப்பதற்கென்று பெற்றுக்கொள்ளப்போகின்ற அதிகாரமும், வல்லமையுமுள்ள ஸ்தானத்திற்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கும்படிக்கு அவசியமாய் இருக்குமெனத் தேவன் தம்முடைய ஏற்பாட்டில் கண்டு அனுமதிக்கின்ற பயிற்சிகள் அனைத்தையும் நாமும் பொறுமையோடு சகித்துக்கொள்வோமாக.

அரியணைக்கு வந்தப் பிற்பாடுள்ள தாவீதின் நடக்கையானது, முன்பு அவரிடத்தில் காணப்பட்ட அதே ஞானத்துடனும், உயர் குணங்களுடனும்தான் காணப்பட்டது. இவர் மேற்கொண்ட ஞானமுள்ள மற்ற செய்கைகளில் ஒன்று, இவர் மரித்துப்போன தனது போட்டியாளனும், சத்துருவுமானவருக்கு

நினைவுகூருதலாக அவருக்குக் கனம் செலுத்திய காரியமாகும்; இது மிகவும் குறிப்பிடத்தக்க காரியமாகும்; இதைப்போன்று முன்பு யாரும் செய்ததாகச் சரித்திரத்தின் பக்கங்களில் பதிவிடப்படவில்லை. பெலிஸ்தர்கள், சவுல் மற்றும் அவரது குமாரர்களின் சரீரங்களை அவமானத்திற்குள்ளாக்கியபோது, அந்தச் சரீரங்களை மீட்டு, நல்லமுறையில் யாபேஸ் பட்டணத்தார் அடக்கம்பண்ணினதன் காரணமாக, இவர்கள் பாராட்டின இரக்கத்திற்குத் தனது நன்றியுணர்வை வெளிப்படுத்தும்படியாக, தாவீது கீலேயாத் தேசத்து யாபேசின் புருஷர்களுக்குத் தூதுவர்களை அனுப்பிவைத்தார். சவுல் தங்களுக்கு முன்பு ஒரு காலத்தில் பாராட்டின இரக்கத்தை யாபேசின் புருஷர்கள் நினைவுகூர்ந்து, இப்படிச் செய்தார்கள் (1 சாமுயேல் 11:1-11). இவர்களை நோக்கி தாவீது: கீலேயாத்தேசத்து யாபேசின் மனுஷரிடத்தில் ஸ்தானாபதிகளை அனுப்பி, நீங்கள் உங்கள் ஆண்டவனாகிய சவுலுக்கு இந்தத் தயவைச் செய்து, அவரை அடக்கம்பண்ணினபடியினாலே, கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. கர்த்தர் உங்களைக் கிருபையும் உண்மையுமாய் நடத்துவாராக; நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்தபடியினால், நானும் இந்த நன்மைக்குத்தக்கதாக உங்களை நடத்துவேன் என்று கூறினார். (2 சாமுயேல் 2:5-6)

ஓர் ஆற்றல் மிக்க போட்டியாளனும், கடுமையான சத்துருவானவனும் மரித்துப்போகையில், இதில் களிகூரும் ஒரு தீய மனதினின்று தாவீது எவ்வளவு வேறுபடுகின்றார். இப்படிக் களிகூருவதற்குப் பதிலாக, தாவீது சவுலினுடைய நல்ல குணங்களையெல்லாம் நினைத்துப்பார்க்கின்றார்; சவுலினுடைய கடைசி காலங்களில் அவர்மீது பொல்லாத ஆவி கடந்துவந்ததைக் குறித்தும், இதனால் சவுல் இத்தகைய பொல்லாத காரியங்களை நடப்பித்தார் என்பதுகுறித்தும் தாவீது புலம்பினார்; யோனத்தானுடைய அன்பு பற்றின நினைவுகளானது, தாவீதுக்கு எப்போதுமே விலையேறப்பெற்றவைகளாக இருந்தன. இப்படியாகத்தான் தாவீது தன் சத்துருவை ஜெயம்கொண்டார்.

இப்படியாகத் தாவீது யூதாவின் இராஜாவாக அங்கீகரிக்கப்பட்டபோதிலும், இஸ்ரயேலின் மற்றக் கோத்திரத்தார் தாவீதின்மீதான தெய்வீக அபிஷேகத்தினைப் பொருட்படுத்தாதவர்களாக, உயிர்ப்பிழைத்திருந்தச வுலின்ம கனாகியஇ ஸ்போசேத்தைத்த ங்கள்இ ராஜாவாக்கிக்கொ காண்டார்கள். இதற்கும் தாவீது எதிர்ப்பு எதுவும் தெரிவித்துப் போராடவில்லை; இவருக்குப் போட்டியாக வந்த அரசாட்சியின் விஷயங்களில், இவரது நடவடிக்கைகள் தற்காப்பு நடவடிக்கைகளாக மாத்திரம் இருந்ததே ஒழிய, ஆவேசமான வெறித்தனங்களாய் இருக்கவில்லை. பல்வேறு யுத்தங்களிலும், சண்டைகளிலும் இவரது படைகள் வெற்றிப்பெற்றவைகளாகவே காணப்பட்டன; இவரது பலமும், செல்வாக்கும் வளர்ந்தோங்கியது, இவருடைய எதிராளியின் பலம் குறைந்துகொண்டே இருந்தது. அரசியல் தலைவர்கள் மற்றும் மதத்தலைவர்கள், இருவரின் மத்தியிலும் (தாவீதிடம் காணப்பட்டதுபோன்று) பொறுமையின் ஆவியும், அதிகாரத்தைத் தாங்களாகவே எடுத்துக்கொள்ள மனமில்லாமையும் இருக்குமானால் நலமாயிருக்கும். தலைவர்கள்/ஆளுபவர்கள் தங்களை ஜனங்கள்மீது திணிப்பதும், ஊழியஸ்தானத்தை நாடுவதும் - அதாவது அந்த ஊழியஸ்தானம் ஒரு மனுஷனைத் தேடிவருவதற்குப் பதிலாக, தாங்களாகவே ஊழிய ஸ்தானத்தைத் தேடிப்போவதுமே, தலைவர்கள் மத்தியில் பொதுவாக வழக்கமாய்க் காணப்படுகின்றது.

கர்த்தர் இராஜரிகம் பண்ணுகிறார்; பூமி பூரிப்பாகி எனும் ***ஆதார வசனமானது***, தாவீதின் சிங்காசனத்தினுடைய நிஜமாகிய, அதாவது யேகோவா தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவராகிய நமது கர்த்தராம் இயேசுவின் இராஜ்யம் பூமியெங்கும் ஸ்தாபிக்கப்படும் ***அந்த ஆசீர்வாதமான காலங்கள் பற்றின தீர்க்கதரிசனமாய்க் காணப்படுகின்றது.*** அக்காலத்தில்தான் பூமி பூரிப்பாகும்; ஏனெனில் இராஜா நீதியோடு ஆளுகை செய்வார்; நீதியும், நியாயமும் அவரது சிங்காசனத்தினுடைய ஆதாரமாய்க் காணப்படும்.

R4235

# தாவீது இராஜாவாக பதவியேற்றார்

## 2 சாமுயேல் 2:1-7; 5:1-5

தாவீது நாளுக்குநாள் விருத்தியடைந்தான்; சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவனோடகூட இருந்தார். - 2 சாமுயேல் 5:10

இராஜாவாகிய சவுல் மரித்தபோது, தாவீது அவரது முப்பதாவது வயதில் காணப்பட்டார். பத்து வருடங்களுக்கு முன்பு அவர் பல்வேறு சூழ்நிலைகளில் வாழ்ந்தவராய்க் காணப்பட்டார். பொறாமையின் காரணமாக அரண்மனையிலிருந்து துரத்தப்பட்ட தாவீது, காட்டு விலங்குபோல் இராஜாவினால் வேட்டையாடப்பட்டார்; தாவீதின் இந்த அனுபவங்களானது நலமானவைகளாகக் காணப்படவில்லை. குற்றவாளி போன்று இவர் பார்க்கப்பட்டபடியாலும், இவர் ஒரு காலத்தில் இராஜாவின் தயவை மிகுதியாய்ப் பெற்றிருந்தார், இராஜாவின் படைத்தலைவனாய் இருந்தார், இப்போதோ இராஜாவின் தயவை இழந்துவிட்டார் என்று மாத்திரமே அறிந்தவர்களாகவும், மற்றபடி எதையும் அறியாதவர்களாகவும் காணப்பட்ட பெரும்பாலான ஜனங்களினால் சந்தேகக் கண்ணோட்டத்தில் இவர் பார்க்கப்பட்டபடியாலும், இப்பொழுது (சவுலின் மரணத்திற்குப்பின்) இவரை வேறு கோணத்தில் பார்ப்பது என்பது சிலருக்குச் சிரமமான காரியமாக இருந்திருக்கும், மேலும் பொறாமையோடுதான் பார்த்திருப்பார்கள். தேவன்தான் இஸ்ரயேலை ஆளுகிறவர்களை நியமிக்கிறவர் எனும் காரியத்தினை மறுபடியுமாக வேறு சிலர் கவனிக்கத்தவறி, தாவீது துரோகம் புரிந்து அரியணையை அபகரித்தவர் என்றும், தன் எஜமானைக் கொன்று, ஆதாயம் அடைய நாடின மனுஷன் ஆவார் என்றும் எண்ணியிருக்கக்கூடும். நம்முடைய கடந்த பாடத்தில் நாம் பார்த்த அவலமான போரில் சவுலும், அவரது மூன்று குமாரர்களும் மரித்துப்போனதைத் தொடர்ந்து, சீர்க்குலைவான/அவலமான சூழ்நிலைகள் நிலவினபோதிலும், பதினொரு கோத்திரத்தாரும் உடனடியாக சவுலின் நான்காவது குமாரன் இஸ்போசேத்திற்கு ஆதரவு கொடுக்க முன் வந்தார்கள்; இவர்கள் ஒருகணம்கூடத் தாவீதைக் கருத்தில் எடுத்துக்கொள்ளவில்லை.

அறுநூறு புருஷர்கள் அடங்கின தனது கூட்டத்தாருக்குத் தலைவனாகக் காணப்பட்ட தாவீது யூதாவின்தெ ன்மேற்குப்ப குதியாகியச ிக்லாகுக்குவ ந்தார்.த ாவீது,ச வுலின்ம ரணத்தைக்குறித்துக் கேள்விப்பட்டபோது, தன்னுடைய சொந்த பகுத்தறிவில், என்ன செய்ய வேண்டும் என்று தீர்மானிப்பதற்குப்பதிலாக, கர்த்தரிடம் விசாரித்தார். ஓர் இளைஞனாக இவர் வீட்டைவிட்டு துரத்தப்பட்டு, தேசத்திலிருந்து துரத்தப்பட்டு, கொள்ளைக்காரனைப்போன்று வேட்டையாடப்பட்டு, ஜீவியத்தின் சிறந்த செல்வாக்குகள் அனைத்தினின்றும் துண்டிக்கப்பட்டவராய் இருக்க, இவர் அதேசமயம் இந்தளவுக்குக் கர்த்தர் பேரிலான தனது பயபக்தியைக் காத்துக்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்க காரியமாய் நமக்குக் காணப்படுகின்றது. அந்தோ பரிதாபம்! சகல சாதகமான சூழ்நிலைகளைப் பெற்றவர்களாகவும், வேதாகமத்தைத் தங்கள் கரங்களில் பெற்றவர்களாகவும், வேத ஆராய்ச்சிகளுக்குரிய உதவி முதலானவைகளைப் பெற்றவர்களாகவும் காணப்படும் அநேகக் கிறிஸ்தவர்கள் உண்மையில் குறைவுபட்டவர்களாகவே காணப்படுகின்றனர்! சுயமானது வாழ்க்கையில் முடிவுகளை எடுத்து, வழிகாட்டும்போது, எத்தனை சீக்கிரமாய்க் கர்த்தரும், அவருடைய சித்தமும் மறக்கப்பட்டுப்போகின்றன!

ஒரு கிறிஸ்தவன் தன் ஜீவியத்தின் முக்கிய காரியங்களைக் கையில் எடுக்கையில், கர்த்தருடைய சித்தத்தை அறிந்துகொள்ள உண்மையாய் நாடுவானானால், இது கர்த்தருக்கு முற்றும் முழுமையான அர்ப்பணிப்பு காணப்படுகின்றது என்பதற்கும், கிருபையில் வளர்ச்சி காணப்படுகின்றது என்பதற்கும் சான்றாக உண்மையில் கருதப்படலாம். உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். (நீதிமொழிகள் 3:6)

தாவீதிற்குப் பயிற்சி அளிக்கப்பட்ட பள்ளிக்கூடமானது கடினமான/கரடுமுரடான ஒன்றாக ஒருவேளை பார்க்கப்பட்டாலும், இதிலிருந்து இவர் அநேகப் பாடங்களைக் கற்றுக்கொண்டார் என்பது நிச்சயமே. நான் யூதாவின் பட்டணங்கள் ஒன்றிலே போய் இருக்கலாமா? என்பதே தாவீது விசாரித்த முதல் கேள்வியாக இருந்தது. இதற்குச் சாதகமான பதிலே தாவீதிற்கு கொடுக்கப்பட்டது. பின்னர் எவ்விடத்துக்குப் போகலாம்? அதாவது எந்தப் பட்டணம் எனது தலைநகரமாக அல்லது தலைமையகமாக இருக்கும்? என்று வினவினார். எப்ரோனுக்குப் போகும்படிக்குக் கர்த்தர் கூறினார். தனது சொந்த கோத்திரத்திலுள்ள ஜனங்கள் தன்னை நன்கு அறிவார்கள் என்றும், தான் ஏன் சவுல் இராஜாவினால் துன்பப்படுத்தப்பட்டார் என்பதைப் புரிந்துகொள்வார்கள் என்றும் தாவீது ஞானமாய்க் கணித்துக்கொண்டார். தாவீதிற்கு அவரது சொந்த நாட்டில் கனம் இல்லாமல் இருக்கவில்லை; இன்னுமாக தன் சொந்த கோத்திரத்தின்மீது அவருக்கு நம்பிக்கை இல்லாமலும் இருக்கவில்லை. இவைகளோடுகூட அவருக்குத் தெய்வீக ஞானத்திலும், தெய்வீக வல்லமையிலும் விசேஷித்த நம்பிக்கை காணப்பட்டது. கர்த்தர் தன்னை வழிநடத்துகின்றார் என்றும், தன்மீது ஏற்கெனவே அபிஷேகத்தைலம் ஊற்றப்பட்டுவிட்டது என்றும் தாவீது அறிந்திருந்தார்; அடுத்தக்கட்ட நடவடிக்கை என்ன என்று கர்த்தர் எப்போது சுட்டிக்காண்பிக்க போகின்றார் என்பதை மாத்திரம் தாவீது அறியவேண்டியிருந்தார்; எனினும் கர்த்தருக்காகக் காத்திருப்பதும், அவர் தனக்கு வாக்குத்தத்தம் பண்ணியுள்ள காரியங்களை அவசரப்பட்டுக் கைப்பற்றுவதற்கு முயற்சிக்காமல் இருப்பதுமே, தன்னுடைய கடமையாக காணப்படுகின்றது என்று தாவீது அடையாளம் கண்டுகொண்டார். இவர் பத்து வருடங்களுக்கு அதிகமாகவே காத்திருந்திருக்கின்றார். கர்த்தருக்காய் இன்னும் பொறுமையோடு காத்திருக்க இவர் தயாராய் இருந்தார்.

நிஜமான தாவீதிற்கு - பிரியமானவருக்கு - கிறிஸ்துவுக்கு எவ்வளவு முக்கியமான பாடம் இங்கே காணப்படுகின்றது! நமது கர்த்தராம் இயேசு, இராஜ்யம் என்பது கைப்பற்றப்பட அல்லது அபகரிக்கப்பட வேண்டிய ஒன்றெனக் கருதவில்லை என்று அப்போஸ்தலன் இயேசுவைக்குறித்துச் சாட்சி பகர்கின்றார். இயேசு பிதாவின் வேளைக்காகக் காத்திருந்தார். அதற்கிடையில் அவர் பிதாவின் சித்தத்திற்கு இசைவாகத் தம்மைத் தாழ்த்திக்கொண்டார்; மேலும் என்ன விலைகொடுத்தேனும் அந்தச் சித்தத்தைச் செய்வதில் மகிழ்ச்சிகொள்வதாக தம்மைக்குறித்துச் சான்று பகர்ந்தவராகவும் காணப்பட்டார். சகலத்திற்கும் சுதந்தரவாளியும், உயர்வாய் உயர்த்தப்படப் போகின்றவருமானவரின் இந்த உண்மையுடன்கூடிய மற்றும் பொறுமையுடன்கூடிய காத்திருப்பில், தேவன் மகிழ்ச்சியடைந்தார். இதுபோல அவரது பின்னடியார்களாகிய நாமும், கர்த்தருக்கே காத்திரு என்று தீர்க்கதரிசியாகிய தாவீது கூறின வார்த்தைகளை நினைவில்கொள்ள வேண்டும் (சங்கீதம் 27:14). எந்த ஒரு காரியத்திலும் கர்த்தர் செய்வதற்குமுன் நாம் முந்திக்கொள்ள முயற்சிப்பது என்பது ஆபத்தான காரியமாகும் என்று, நம்மில் சிலர் அனுபவத்தில் கற்றிருக்கின்றனர். நமக்கு நாமே வழிகாட்டுமளவுக்கு நாம் போதுமான ஞானம் பெற்றவர்களல்ல. உண்மையில், கவிஞன் கூறியிருப்பதுபோன்று,

நம் ஞானத்திற்கு மிக அப்பாற்பட்டவைகளில் களமிறங்க அஞ்சுவோமே நாம்.

நம்முடைய பெலவீனமான நிலைமையின் தன்மையை நம்மால் உணர்ந்துகொள்ள முடியுமானால், அது நம்மை மிகவும் தன்னடக்கம் உள்ளவர்களாகவும், ஜாக்கிரதை உள்ளவர்களாகவும் மாற்றிவிடும். நம்முடைய சொந்த நலன்களும், நித்திய மகிமையும் ஆபத்திற்குள்ளாவது மாத்திரமல்லாமல், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் மற்றச் சக அங்கத்தினர்களின் நலன்களும் பாதிப்பிற்குள்ளாகிவிடும். யோசிக்காமல் பேசப்படும் ஒரு வார்த்தை, யோசிக்காமல் செய்யப்படும் ஒரு செயல், முன்யோசனையற்ற எந்த ஒரு காரியமும் இருதயத்தை மோசமான நிலைகளுக்குள்ளாக்கிவிடும்; மேலும் நாம் பிற்பாடு வாக்குத்தத்தத்தினை அடைகின்றவர்களாய் இருப்பினும், அதைக் கர்த்தர் விரும்பும் விதத்தில் இல்லாமல், உபத்திரவத்தின் வழியாகவே அடைகின்றவர்களாகக் காணப்படுவோம்.

## உங்கள் சாந்தகுணம் தெரிந்திருப்பதாக

சவுல் விஷயத்தில் தாவீது எப்படிப்பட்ட மனப்பாங்கையும், உணர்வையும் கொண்டிருப்பார் என்று சிலர் தவறாய்க் கற்பனைப்பண்ணிக்கொண்டு, தாங்கள் எவ்வாறு சவுலை வீழ்த்துவதற்கு உதவினார்கள் என்பதை வெளிப்படுத்தும் சம்பவங்களைத் தாவீதிடம் வந்து கூறினால், அவருடைய தயவை சம்பாதித்துக் கொள்ளலாம் என்று எண்ணிக்கொண்டனர்; ஆனால் அத்தகையவர்கள் தாவீதினால் உடனடியாகக் கடிந்துகொள்ளப்பட்டனர்; இராஜாவாகிய சவுலைக்குறித்துப் பேசும் ஒவ்வொரு தருணங்களிலும், தாவீது கவனமாய் வார்த்தைகளைப் பயன்படுத்திப் பேசினார்; இதற்குக் காரணம் எந்த ஒரு மனுஷனைக்குறித்தும் தீமைபேசுவது தவறு என்பதினால் மாத்திரமல்லாமல், சவுல் ஓர் இராஜாவாகத் தேவனுடைய பிரதிநிதியாகவும், தாவீதைப்போன்று கர்த்தரால் அபிஷேகிக்கப்பட்டவராகவும் காணப்பட்டார் என்பதினாலாகும். தனது சத்துரு மரித்துவிட்டார் என்பதினால் எவ்விதமான ஆர்ப்பரிப்பும் செய்யாமல், தாவீது யாபேசின் புருஷர்கள் சவுலுக்கும், அவரது குமாரர்களுக்கும் நல்லதொரு அடக்கம் பண்ணினதின் நிமித்தம், அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விசேஷித்த ஸ்தானாதிபதிகளை அனுப்பிவைத்தார். அவர்கள் செய்த இக்காரியத்தினை, தனக்கு எதிரான பகைமையானதொரு செயலாகக் கருதவில்லை, மாறாக தானும் பங்கெடுக்க மகிழ்ச்சிக்கொள்ளும் கண்ணியமான மற்றும் உத்தமமான ஒரு செய்கையாகவே தான் கருதியுள்ளதை, அவர்கள் அறிய வேண்டுமென்று தாவீது விரும்பினார். **கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. கர்த்தர் உங்களைக் கிருபையும் உண்மையுமாய் நடத்துவாராக; நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்தபடியினால், நானும் இந்த நன்மைக்குத்தக்கதாக உங்களை நடத்துவேன். இப்பொழுதும் நீங்கள் உங்கள் கைகளைத் திடப்படுத்திக்கொண்டு நல்ல சேவகராயிருங்கள். உங்கள் ஆண்டவனாகிய சவுல் மரித்தபின்பு, யூதா வம்சத்தார் என்னைத் தங்கள்மேல் இராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள் என்று தாவீது சொல்லச் சொன்னார்.** (2 சாமுயேல் 2:5-7)

தாவீதின் இந்த நடக்கையானது இராஜதந்திரம் என்றும், சவுலுக்கும், அவரது குமாரர்களுக்கும் நல்லதொரு அடக்கத்தைப்பண்ணின யாபேசின் புருஷர்களை எதிர்க்காமல் காணப்பட்டதில், தாவீது ஞானமாய் நடந்துகொண்டார் என்றும் சிலர் வழக்காடலாம். ஒருவேளை இப்படியாகத்தான் இருக்கும் என்றாலும்கூட, இது தாவீதிற்குப் புகழ்ச்சியாகத்தான் இருக்குமே ஒழிய, இவர் பெயரைக் கெடுக்கின்றதாய் இராது. இது இவரிடம் கர்த்தருடைய ஆவியும், தெளிந்த புத்தியின் ஆவியும் காணப்பட்டதைச்

சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். இரக்கமான செய்கையைப் புரியும் எந்த ஒரு நபரின் நோக்கத்தினையும் தாக்குவது என்பது தேவையற்ற காரியமென நாங்கள் எண்ணுகின்றோம். அந்த நோக்கத்தினைத் தீமை என்று கூறாமல், நாம் யாதொன்றைக்குறித்தும் தீமையாய் எண்ணாமல் இருப்போமாக. இதே கொள்கை, கர்த்தருடையஜ னங்களுக்கும்பெ பாருந்தும்.ப ணங்களைத்த ருமக்கொடைகள்மு தலானவைகளுக்குக் கொடுக்கும் தொழிலதிபர்கள் தவறான நோக்கம் கொண்டுள்ளனர் என்று கூறக்கூடாது. (சிலர், அநேகமாக அநேகர் விஷயத்தில்) இந்தத் தருமங்களினால் சில ஆதாயங்கள் ஏற்படலாம் என்ற எண்ணம் உள்ளே காணப்படுவது உண்மையாகக்கூட இருக்கலாம்; எனினும் அந்தத் தர்மத்தில் இரக்கம் எனும் நோக்கமே இல்லை, முற்றிலும் அதில் கீழ்த்தரமான நோக்கம் மட்டுமே காணப்படுகின்றது என்றும் கூறமுடியாது. ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும், நாம் இரக்கமான எண்ணங்களைக் கொண்டிருக்க முயற்சிக்கையில், நாம் சந்தோஷமாகக் காணப்படுவோம். கண்பார்வை இழந்த சகோதரர் ஒருவர் பின்வருமாறு சமீபத்தில் கூறினார்: என்னுடைய கண் பார்வை இழந்த நிலை என்பது, அநேக பாதகங்களிலிருந்து என்னைக் காத்துக்கொள்கின்றது என்பதில் எனக்கு ஐயமில்லை. நான் ஜனங்களைச் சந்திக்கும்போது, நான் அவர்கள் சந்தோஷமுள்ளவர்களாகவும், பெருந்தன்மையுள்ளவர்களாகவும், நல்லவர்களாகவும் காணப்படுவதாக எண்ணிக்கொள்வதற்கு முயற்சிப்பேன்; ஆனால் ஒருவேளை எனக்குக் கண்பார்வை இருந்திருக்குமானால், அவர்கள் நான் விரும்புமளவுக்குத் தயவுள்ளவர்களாகவும், பெருந்தன்மையுள்ளவர்களாகவும் காணப்படுகின்றார்கள் என நினைப்பது சாத்தியமற்றதாக இருந்திருக்கும்.

தாவீது, தான் யூதாவின் இராஜாவாக இருக்கின்றார் எனும் உண்மையினிடத்திற்குக் கவனத்தினைத் திருப்பியக் காரியம் என்பது, தன்னைப் பத்து வருடங்களாக வேட்டையாடின சவுலின் ஸ்தானத்தில் தான் இராஜாவாகக் காணப்படுகின்றபடியால், யாபேசின் புருஷர்கள் ஒருவேளை அவரைத் தங்கள்மீது இராஜாவாகப் பெற்றிருக்க விரும்பலாம் என்ற யோசனையை அவர்களுக்கு முன்பு வைப்பதற்கேயாகும். தன்னை ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் அவர்களது அவல நிலை மேலும் தொடரும் என்ற விதத்தில் மறைமுகமாகத் தெரிவித்தார்.

## நாம் விசுவாசித்து நடக்கின்றோம்

தன்னை யூதா கோத்திரத்தார் அங்கீகரித்த பிற்பாடு, மற்றக் கோத்திரங்களும் தன்கீழ் விரைவாக வந்துவிடுவார்கள் என்று அநேகமாகத் தாவீது எதிர்பார்த்திருந்திருக்க வேண்டும். எனினும் இதை நடைமுறைப்படுத்துவதற்குத் தாவீது எந்த ஒரு முயற்சிகளையும் மேற்கொண்டதாக நமக்குப் பதிவுகளில் தெரிவிக்கப்படவில்லை. அவர் கர்த்தருக்காய்க் காத்திருந்தார். நிச்சயமாகவே அது நீண்டதொரு காத்திருத்தலாகவே இருந்திருக்கும். இஸ்ரயேலின் பதினொரு கோத்திரங்களுக்கு இராஜாவாக இருந்த இஸ்போசேத்தின் படைத்தலைவனாகிய அப்னேர், இஸ்ரயேலுடைய சத்துருக்களுக்கு எதிராக யுத்தங்கள் செய்து, ஓரளவுக்கு வெற்றிகளைக்கொண்டு வந்துக்கொண்டிருந்தார். தனக்கு முடிசூட்டுவதில் தேவன் ஏற்பாடுபண்ணியிருந்த திட்டங்களை நடைமுறைப்படுத்த கர்த்தர் நோக்கம் கொண்டிருக்கின்றாரா அல்லது இல்லையா என்று யோசித்துப் பார்ப்பதற்குத் தாவீதிடம் அநேகச் சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. வெளியிலுள்ள சத்துருக்களிடம் அடைந்த வெற்றிகளின் நிமித்தமான கௌரவத்தின் காரணமாக

இஸ்போசேத் இராஜா, யூதா கோத்திரத்தின்மீது தன் கவனத்தைத் திருப்பினார்; மேலும் உரிமைப்பேரான இராஜாவுக்கு எதிராக, யூதா கோத்திரத்தார் கலகம் செய்கின்றனர் என்று வாதாடத் துவங்கினார். இதன் விளைவாக செழிப்புள்ள ஓர் ஆளுகையின் காலங்களுக்குள் இஸ்ரயேல் பிரவேசிக்காமல், உள்நாட்டுப்போர் துவங்கினது. சகோதரர்கள் சகோதரர்களுக்கு எதிராக யுத்தம்பண்ணினார்கள் - தேவ தயவைப் பெற்றிருந்த ஜனங்களில் ஒரு சாரார், மற்றச் சாராரோடு யுத்தம்பண்ணினார்கள். இது இரண்டு வருடங்களாகத் தொடர்ந்தது; மேலும் படிப்படியாகத் தாவீதிற்கும், அவரது படைகளுக்கும் வெற்றிகள் வரத்துவங்கின. ஆகையாலே, தாவீது வரவர பலத்தான், சவுலின் குடும்பத்தாரோ வரவர பலவீனப்பட்டுப் போனார்கள் என்று வாசிக்கின்றோம். (2 சாமுயேல் 3:1)

உள்நாட்டுப் போரைக்குறித்தும், எப்படிக் கர்த்தருடைய ஜனங்களில் ஒரு சாரார், இன்னொரு சாராருக்குத் தீங்குசெய்ய நாடினார்கள் என்பதுகுறித்தும் நாம் கவனிக்கையில், நாம் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களைப்பற்றி நினைப்பூட்டப்படுகின்றோம்; இன்னுமாகச் சிலசமயங்களில் சகோதர சகோதரிகள், மனதில் மிகவும் வேறுபாடுகள் கொண்டவர்களாகி, தேவனுடைய வழிநடத்துதல்களுக்கு மிகவும் முரண்பட்டு நடக்கின்றவர்களாகி, ஒருவருக்கொருவர் பகைவர்களாகிவிடும் உண்மையும் நம்முடைய நினைவுகளுக்கு வருகின்றது. இப்படியாக காரியங்கள் காணப்படுவது பரிதாபத்திற்குரியதாகும்! தேவனுடைய அன்பு நம்மை நெருக்கி ஏவ நாம் அனுமதியாதபோது, நாம் அவரது அன்பு மற்றும் ஐக்கியத்தினின்று மாறிப்போவது மாத்திரமல்லாமல், சகோதர சகோதரிகளை வெட்டி வீழ்த்தும்படிக்கு, பட்டயத்தையும் பயன்படுத்துகின்றவர்களாக மாறிவிடுவது பரிதாபத்திற்குரிய காரியமாகும்! இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்குச் சற்று முன்பு கர்த்தருடைய அனுமதியின்படி, வரவிருக்கிற நாட்களில் ஆவிக்குரிய இஸ்ரயேலனின் விஷயத்தில், சகோதரனுக்கு விரோதமாக சகோதரன் எழும்பும் காட்சியினை மனதிலும், இருதயத்திலும் நன்கு நிறுத்திக்கொள்ளுங்கள். மற்றவர்கள் எப்படி வேண்டுமென்றாலும் போர் செய்யட்டும், ஆனால் நம்முடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல் இருக்கத்தக்கதாகவும், உடன்படிக்கை செய்து கொண்டதன்மூலம் கர்த்தருடையவர்களாக மாறினவர்களுக்கு எதிராக நம்முடைய யுத்தங்கள் காணப்படாமல், மாபெரும் எதிராளியானவனுக்கு எதிராகக் காணப்படத்தக்கதாகவும் நாம் தீர்மானித்துக்கொள்வோமாக. மாம்சத்துக்கேற்ற போராயுதங்கள் என்பது துப்பாக்கிகளும், பட்டயங்களும் மாத்திரமல்ல, இவைகளைவிட நாவு மிகுந்த காயத்தை உண்டுபண்ணுகிறதாகவும், மரணத்தைக் கொண்டுவருகிறதாகவும் காணப்படுகின்றது; அதாவது நாவை நாம் புறங்கூறுவதற்கும், காயப்படுத்துவதற்கும் பயன்படுத்துகையில் இப்படியாகக் காணப்படும். தேவனைத் துதிக்கிற நாவைக்கொண்டு, நாம் எந்த மனுஷனுக்கும், அதிலும் விசுவாச வீட்டாரிலுள்ள யார் ஒருவருக்கும் எதிராக தீமை செய்யக்கூடாது என்று தேவன் தடைவிதித்திருக்கின்றார்.

## இஸ்ரயேலனைத்தின் மீதும் இராஜா

இறுதியில் இஸ்போசேத் இராஜாவும், அவரது படைத்தலைவனாகிய அப்னேரும், இருவருமே கொடுமையாகக்கொலைசெய்யப்பட்டனர்; இதுவ ிஷயத்தில்த ாவீதுஎ ந்தவிதத்திலும்உ டந்தையாகக் காணப்படவில்லை என்பதையும், சவுலுடைய குமாரர்களைப் பொருத்தமட்டில், தாவீது நட்பின் காரணமாக யோனத்தானுடன் பண்ணியிருந்த உடன்படிக்கையானது, அவர்களுக்குப் பாதுகாப்பாய்க் காணப்பட்டது

என்பதையும் நாம் கவனமாய்க் கவனிப்போமாக. எனினும் இந்த மனுஷரின் மரணமானது, சூழ்நிலைகளைக்குறித்துத் தீவிரமாய் யோசித்துப்பார்க்கும் வாய்ப்பினை இஸ்ரயேல் ஜனங்களுக்கு ஏற்படுத்திக்கொடுத்தது; மேலும் இவர்கள் யோசித்துப் பார்த்தபோது, தாவீதோடு தேவதயவு காணப்படுகின்றது என்பதையும், அவர் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷனாய்க் காணப்படுகின்றார் என்பதையும், தன்னைத் தங்களது இராஜாவாக ஏற்றுக்கொண்ட ஜனங்களுக்கு, தாவீது ஓர் இராஜாவாக வல்லமை வாய்ந்த பணிகளைச் செய்துகொண்டிருந்தார் என்பதையும் ஜனங்கள் புரிந்துகொண்டார்கள். இஸ்ரயேல் கோத்திரத்தில் காணப்பட்ட நல்லறிவுள்ளவர்கள், இப்பாடத்தில் நாம் பார்க்கும் முடிவிற்கு நேராக ஜனங்களை வழிநடத்தினார்கள் என்று பார்க்கின்றோம். அக்காலத்திலே இஸ்ரயேலின் கோத்திரங்களெல்லாம் எப்ரோனிலிருக்கிற தாவீதினிடத்தில் வந்து: இதோ, நாங்கள் உம்முடைய எலும்பும் உம்முடைய மாம்சமுமானவர்கள். சவுல் எங்கள்மேல் இராஜாவாயிருக்கும்போதே இஸ்ரயேலை நடத்திக்கொண்டுபோனவரும், நடத்திக்கொண்டு வந்தவரும் நீரே; கர்த்தர்: என் ஜனமாகிய இஸ்ரயேலை நீ மேய்த்து, நீ இஸ்ரயேலின்மேல் தலைவனாயிருப்பாய் என்று உம்மிடத்தில் சொன்னாரே என்றார்கள் (2சாமுயேல்5:1-2). இறுதியில் ஜனங்கள் கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்தார்கள். இப்படியானதொரு சூழ்நிலையினைக் கர்த்தரால் முன்பே ஏற்படுத்தியிருக்க முடியும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால் இப்படி முன்பே செய்வதற்குரிய எந்தத் தெய்வீக நோக்கங்களும் காணப்படவில்லை. இப்படியே நம்முடைய காரியங்கள் அனைத்திலும் காணப்படும்; இதை நாம் அறிந்திருப்பது நலம். ஆதிமுதல் அந்தம்வரை அறிந்திருக்கும் தேவன், தம்முடைய ஜனங்களின், அதுவும் குறிப்பாக அபிஷேகம்பண்ணப்பட்ட வகுப்பாரில் தமக்குச் சொந்தமானவர்களாய் இருப்பவர்கள் ஒவ்வொருவரின் நன்மைக்கேதுவாய், காரியங்களை ஞானமாய் வழிநடத்துகின்றார்.

இராஜாவாகிய தாவீது இஸ்ரயேல் ஜனங்களுடன் ஓர் உடன்படிக்கையைப்பண்ணினார் என்று நம்முடைய இந்தக் கட்டுரை தெரிவிக்கின்றது. இப்படிச் செய்துகொண்டதின் நிமித்தம், ஓர் அரசியல் சாசனத்தின்கீழ் வரையறைக்குட்பட்ட முடியாட்சியினைக்கொண்ட ஓர் இராஜாவாக ஊழியம்புரிய தாவீது ஒப்புக்கொண்டார். ஜனங்களுடைய உரிமைகள் எவைகள் என்பதையும், இராஜாவின் உரிமைகள் எவைகள் என்பதையும் வெளிப்படையாய் விவரிக்கும் ஓர் உடன்படிக்கையினை, ஒரு சாசனத்தைத் தாவீது ஏற்படுத்தினார். இஸ்ரயேல் மத்தியில் நிறுவப்பட்ட இந்த ஏற்பாடு, உலகத்திலே இவர்கள்தான் மிகவும் முன்னேற்றமடைந்த ஜனங்களாய் இருந்தார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; மேலும் சரித்திரத்தை நாம் கவனிக்கையில், அப்போதிருந்த இராஜாக்கள் கொடுங்கோலர்களாகவும், தங்கள் சொந்த கருத்துகளின் அடிப்படையில் ஜனங்களை ஆண்டவர்களாகவும், ஜனங்களுடைய உரிமைகளையும், சுதந்தரங்களையும் புறக்கணித்தவர்களாகவும் காணப்பட்டனர். சகல இஸ்ரயேல்மீது தாவீது இராஜாவாக உயர்த்தப்படுதல் தொடர்புடைய சுவாரசியமான விழாக்கள் மற்றும் தாவீது தொடர்புடைய விஷயத்தில் ஜனங்கள் மத்தியில் காணப்பட்ட சந்தோஷம் குறித்து 1 நாளாகமம் 12:23-40 வரையிலான வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இராஜ்யபாரத்திற்காகக் காத்திருந்ததிலுள்ள தாவீதின் அனுபவங்களும், அவர் கற்றுக்கொண்ட பாடங்களும், வளர்த்துக்கொண்ட குணலட்சணங்களும் மற்றும் அவரை ஞானமுள்ளவராகவும், சாந்தமுள்ளவராகவும் மாற்றின ஆயத்தங்களும், இவை அனைத்துமே சுவிசேஷயுக சபைக்கு, மாபெரும்

பாடங்களாகக் காணப்படுகின்றன. நாமும்கூடக் கர்த்தருடைய சிங்காசனத்தில் அமருவதற்கும், அவர் நாமத்தில் ஆளுகைசெய்வதற்கும் அழைக்கப்பட்டிருக்கின்றோம். நாமும்கூட அந்த ஸ்தானத்திற்கென்று பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டிருக்கின்றோம்; மேலும் இதைக்குறித்துப் பேசுகையில், இது முடிசூட்டப்படும் நாட்கள் வருகையில், நாம் பிரவேசிக்கப்போகின்ற மகிமை மற்றும் சந்தோஷம் எப்படியிருக்கும் என்பதற்குரிய முன் அனுபவமாக இருக்கின்றது என்று அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். தேவனுடைய ஜனங்கள்மீது தாவீதை இராஜாவாக்குவதற்கும், அரசாங்கத்தின் விஷயத்தில் தேவனுடைய மாதிரியாக அவர் சரியாய்க் காணப்படுவதற்கும், தாவீதிற்குப் பயிற்சியும், சுயகட்டுப்பாடும், விசுவாசமும், தன்னடக்கமும், நம்பிக்கையும் தேவைப்பட்டது; அப்படியானால் இன்னும்மேலான ஸ்தானத்திற்கு அழைக்கப்பட்டவர்களும் - அதாவது தேவனுடைய பிரதிநிதிகளாக பூமியின் சிங்காசனத்தில் காணப்படுவதற்கென்று அழைக்கப்பட்டவர்களும் - சீர்கெட்ட நிலையினின்று ஜனங்களை மீட்டு, தேவனுடன் முழுஇசைவிற்குள் கொண்டுவரும் நோக்கத்திற்காக மனுக்குலத்தை ஆளவும், நியாயந்தீர்க்கவும், பரீட்சிக்கவும் வேண்டி இராஜரிக ஆசாரியக்கூட்டத்திற்குள் அழைக்கப்பட்டவர்களுமான நமக்கு, இன்னும் எத்தனைக் கடுமையான பாடங்கள் கொடுக்க வேண்டியிருக்கும்! நிச்சயமாகவே நாம் எதிர்பார்த்ததைவிட, நம்முடைய பரீட்சைகளும், சோதனைகளும் குறைவாகவே உள்ளது எனத் தாவீதைப்போன்று நாமும் சொல்லுவோம்.

தாவீதின் குணலட்சணங்களில் உள்ள வலுவான காரியம் என்ன என்றும், நாம் எதை வளர்த்துக்கொள்ள நாட வேண்டும் என்றும் அறியத்தக்கதாக, நாம் அவரது குணலட்சணங்களைக் கூர்ந்து ஆராய்வோமானால், அவரில் இருந்த வலுவான காரியம், சரியாய் வழிகாட்டப்பட்டிருந்த அவரது சித்தமேயாகும்; அதாவது அவரது நாட்டம்/தீர்மானம் என்பதை நாம் ஒத்துக்கொள்வோம். மனித சித்தத்தினுடைய வல்லமையைக் கணிப்பது என்பது சிரமமான காரியமேயாகும். தற்கால ஜீவியத்தின் நலன்கள் அனைத்தையும், நம் சித்தங்களுடைய கட்டுப்பாட்டின்கீழ்த் தேவன் விட்டிருக்கின்றார் என்பது வெளிப்படையாய்த் தெரிகின்ற காரியமாகும்; இதுபோலவே எதிர்கால ஜீவியத்தினுடைய வெற்றிகளில் பெரும்பான்மையானவைகளையும் நம் சித்தங்களுடைய (விருப்பங்களுடைய) கட்டுப்பாட்டின் கீழே விட்டிருக்கின்றார் என்பதும் உண்மையே. பாவத்திற்கு எதிராக நம் சித்தங்களானது சரியானமுறையில் தீர்மானங்களை எடுக்குமானால், நம் சித்தங்கள் வெல்லப்படவே முடியாது. நாம் வாசிக்கிறபடி, பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். எதிராளியானவனுக்கு எதிராக, பாவத்திற்கு எதிராக, நோய் வியாதிக்கு எதிராக மனதினால், சித்தத்தினால் எத்தகையதொரு சக்தி வாய்ந்த ஆற்றலைச் செயல்படுத்த முடியும் என்பதை நாம் புரிய முயற்சிப்பது என்பது சிரமமான காரியமாகும்; எனினும் இப்படிப்பட்ட சித்தம் ஒன்று இருக்கின்றது என்ற வேதாகமத்தின் நிச்சயத்தினை நாம் பெற்றிருக்கின்றோம்; இன்னுமாக சித்தத்தை அப்பியாசப்படுத்தியதிலுள்ள நம்முடைய சொந்த அனுபவங்களும்கூட, நாங்கள் இங்கே முன்வைக்கும் கூற்றினுடைய உண்மையினை முழுமையாய் நிரூபித்தும் உள்ளது. பலமான சித்தம்கொண்டவர்கள் என்பவர்கள் தேவனுடைய ஜனங்கள் மட்டுமே என்ற நிலையும் இல்லை. சாத்தானும், சீர்கெட்டவர்களில் அநேகரும் பலமான சித்தமுடையவர்களாவார்கள். இதனாலேயே இவர்களில் பொல்லாப்பின் ஆவி காணப்படுகின்றது எனும் உண்மைக்கான அர்த்தம் விளங்குகின்றது. கர்த்தருடையவர்கள் யாவரும் உறுதியான மனமுடையவர்களாக/தீர்மானமுடையவர்களாக இருப்பதின் மதிப்பினையும், ஊசலாட்டத்தின் விரும்பத்தகா நிலையினையும் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

இருமனமுள்ள மனுஷன், தன் வழிகளில் எல்லாம் நிலையற்றவனாக இருப்பான் என்று அப்போஸ்தலன் உண்மையைத்தான் கூறியிருக்கின்றார். இத்தகைய ஒரு நபர் எதிலும் வெற்றிக் காண்பதில்லை. இப்படிப்பட்டவனுக்கு வரும் அசாதாரணமான எந்த ஒரு வெற்றியும், தற்செயலாக வந்ததாகவே மாத்திரம் காணப்படும். இங்கு நாம் இந்தச் சுவிசேஷயுக சபையைக் கையாளுவதிலுள்ள கர்த்தருடையவ ழிமுறைகளில்க ாணப்படும்ஒ ானத்தினைக்க ாண்கின்றோம். தம்மைஆ வியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளுகிறவர்களைப் பிதாவானவர் விரும்புகிறார். அவர் தம்முடைய நற்குணங்களை நமக்குத் தெரியப்படுத்துகின்றார்; மேலும் ஒருவன் சரியான சித்தத்தைக் கொண்டிருப்பதற்கு ஊக்குவிக்கும்படி, தேவையான உதவிகளை அருளுகின்றார்; அதுவும் இப்படிச் செய்வானானால், தேவையான ஒவ்வொரு தருணத்திலும் கர்த்தர்தாமே தேவையான உதவியையும், ஒத்தாசையையும் அருளுவார் என்ற வாக்குறுதியினையும் கொடுக்கின்றார். மேலும் எதிராளியானவன் நம்மைவிட பலமுள்ளவனாகவும் ஞானமுள்ளவனாகவும் இருப்பினும், அவனால் நமக்குத் தீங்குசெய்ய முடியாது, ஏனெனில் நமக்கு எதிராக இருப்பவர்கள் அனைவரையும்விட, நம் சார்பாக இருப்பவர் பெரியவராகக் காணப்படுகின்றார். இதன் காரணமாக நம்முடைய அனைத்தையும் தத்தம் செய்யும் - நம் சித்தங்களை அவரது வழிகாட்டுதலுக்கு ஒப்புக்கொடுத்துவிடும் - பலியினாலான உடன்படிக்கையினை அவரோடு நாம் பண்ணிக்கொள்வதற்கு நம்மை ஊக்குவிக்கின்றார். இப்படிச் செய்பவர்கள் பாக்கியவான்கள். இப்படிச் செய்பவர்கள் வெகு சொற்பமானவர்களே. பெரும்பான்மையான மனுக்குலத்தார் சுயசித்தத்தில் தொடர்ந்து காணப்படுபவர்களாகவும், கர்த்தர் சம்பந்தப்பட்ட விஷயங்களிலும், அவரது சித்தம் சம்பந்தப்பட்ட விஷயங்களிலும் பெருமளவில் தர்க்கம் பண்ணிக்கொண்டிருக்கின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். சித்தத்தை வலிமைப்படுத்துவதிலும், குணலட்சணத்தைப் பெலப்படுத்துவதிலும் ஏறெடுக்க வேண்டிய பிரயாசங்களின் காரணமாகவே, இதற்கு vows/வாக்குறுதிகள் மேற்கொள்வது உதவியாய் இருக்குமென நாம் அடையாளம் கண்டுகொள்கின்றோம். தாக்குவதற்கு மிகவும் வாய்ப்பாய்க் காணப்படும் இடங்களைத் தொடுவதற்காக, எதிராளியானவன் விழிப்பாய்க் காணப்படுவான்; அரண்களை வலுவாய் வைத்துக்கொள்ள வேண்டும்; நம்முடைய பலியைக் கர்த்தரின்கீழ் வைப்பதற்குத் தொடர்ந்து முயற்சித்துக்கொண்டிருக்க வேண்டும்; எதிராளியானவனை எதிர்ப்பதற்கும், சத்தியத்திற்கு ஊழியம் புரிவதற்கும், விசுவாச வீட்டார் யாவருக்கும் ஊழியம் புரிவதற்கும், நம்முடைய வார்த்தைகள், கிரியைகள் மற்றும் எண்ணங்களைக் காவல் காப்பதற்குமுரிய நம்முடைய சித்தங்களில் உறுதியாய் நிலைத்திருப்போமாக.

## மோசே மற்றும் ஆட்டுக்குட்டியானவரின் பாட்டு

இராஜாவாகிய தாவீது பொறுப்பேற்றபோது, வழக்கத்தின்படியே களிப்பும், பாடல்களும், சந்தோஷ ஆரவாரங்களும் தொடர்ந்தன. கிட்டத்தட்ட ஒவ்வொரு தேசமும், அதன் இராஜாக்கள் மற்றும் இராஜ்யபாரங்கள் குறித்த நினைவுகூருதல்களை உள்ளடக்கியிருக்கும் தேசிய கீதங்களைப் பெற்றிருக்கின்றன. இதுபோலவே மிகவும் ஆச்சரியமான காரியங்களை நடப்பித்து, சீக்கிரத்தில் வெளிப்படப்போகும் கர்த்தருடைய இராஜ்யமும் காணப்படும் அல்லவா? தேவனுடைய மகிமையான ஆலயமாகிய சபை - அதாவது இப்பொழுது வடிவமைக்கப்பட்டு, வெட்டப்பட்டு, மெருகூட்டப்பட்டுவரும் ஜீவனுள்ள கற்கள், மாபெரும் உச்சிக்கல்லோடு இணைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றதல்லவா? சபையின்

தலை கிறிஸ்து ஆவார். நாம் ஏற்கெனவே நம்முடைய இருதயங்களில் கர்த்தரை முடிச்சூட்டியும், வாழ்த்தியும் காணப்பட்டு, சகல முழங்கால்களும் கர்த்தருக்கு முடங்கப்போகும் காலத்திற்காக சந்தோஷ ஆரவாரத் தோடு எதிர்நோக்கியிருக்கின்றோம்.

இதற்கிடையில், மணவாட்டி வகுப்பாரில் அங்கத்தினர்களாகவும், அவரோடு உடன் சுதந்தரர்களாகவும் ஆக நம்பிக்கைகொண்டிருக்கும் நாம், பணிவிடைக்காரனாகிய மோசேயின் பாட்டையும், ஆட்டுக்குட்டியானவரின் பாட்டையும் பாடுவதற்குக் கற்றுக்கொள்ளும்படிக்கு எதிர்பார்க்கப்படுகின்றோம். அவர்களும் மகா சத்தமிட்டு: அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள் (வெளிப்படுத்தல் 5:12). அவர்கள் சிங்காசனத்திற்கு முன்பாகவும், நான்கு ஜீவன்களுக்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும் புதுப்பாட்டைப் பாடினார்கள். அந்தப் பாட்டு பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்துநாலாயிரம் பேரேயல்லாமல் வேறொருவரும் கற்றுக்கொள்ளக்கூடாதிருந்தது (வெளிப்படுத்தல் 14:3). தேவனோடுகூட அவர் சீயோன் மலையில், இராஜ்யத்தில் இருப்பார். இந்தப் பாட்டு, சகல ஜனங்களுக்கும் உரியதாகப்போகும் மகா சந்தோஷத்தின் நற்செய்தியாக இருக்கின்றது என்பதை நாம் உணர்ந்துகொள்கையில், இப்பாட்டினை நாம் எந்த அளவுக்குக் கற்றிருக்கின்றோம் - எந்த அளவுக்கு அப்பாட்டினை இப்பொழுது நம்மால் பாடமுடியும் என்பதை அறிந்துகொள்ள ஆவலாய் இருக்கின்றோம். இந்தப் பாடத்தைக் கற்றுக்கொள்வது என்பது வாழ்நாள் முழுவதும் எடுத்துக்கொள்ளும் ஒன்றென நாம் காண்கின்றோம். கேட்கும் செவிகளை உடையவர்கள் யாவருக்கும், நம்முடைய தேவனைக்குறித்துச் சாட்சி பகர்கையில், இது நமக்கு நிந்தனைகளையும், அவமானங்களையும், எதிர்ப்புகளையும் கொண்டுவருவதாக இருப்பினும், சாட்சி பகரும் இச்சிலாக்கியத்தில் நாம் களிகூருகின்றோம். நம்முடைய பொறுமையும், நம்முடைய விசுவாசமும் தொடர வேண்டும்; ஆசீர்வாதமான நற்செய்தியினை ஆற்றல்மிக்க விதத்தில் மற்றவர்களுக்குச் சொல்வதற்கு, இராஜ்யமானது அதன் அழகிலும், மகிமையான மாறுதலிலும் ***நம்மில்*** வெளிப்படுவதற்கு (உருவாகுவதற்கு) நாம் காத்திருக்க வேண்டும்.

R2001

# சமஸ்த இஸ்ரயேல்மீது, தாவீது இராஜாவானார்
## 2 சாமுயேல் 5:1-12

தாவீது நாளுக்குநாள் விருத்தியடைந்தான். சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவனோடேகூட இருந்தார். - 2 சாமுயேல் 5:10

இப்பாடமானது சிறு விளக்கவுரை கொடுக்கப்படவேண்டிய ஒரு சிறு சரித்திர பதிவாகும். இது எப்படித் தேவனுடைய ஏற்றவேளையிலும், வழியிலும், தாவீதை சகல இஸ்ரயேல்மீதும் இராஜாவாக ஏற்படுத்தும் அவருடைய நோக்கம் நிறைவேற்றப்பட்டது என்பதைக் காண்பித்துத்தருகின்றது. இது தாவீதுடைய வல்லமையினாலோ அல்லது பராக்கிரமத்தினாலோ அல்ல, மாறாக தேவனுடைய ஏற்பாட்டினாலேயே ஆகும்; இதற்கிடையில் சகலத்தையும் நேர்த்தியாய்ச் செய்துமுடிக்கின்ற தேவனுக்காய்க் காத்திருப்பது எத்துணை ஆசீர்வாதமான காரியம் என்று தாவீது கற்றுக்கொண்டார்; மேலும் இவருடைய விசுவாசமும் பெலப்பட்டது.

யூதாவில் மாத்திரமல்லாமல், சகல இஸ்ரயேலிலும் தாவீதின் சிங்காசனத்தை உறுதிப்படுத்துவதற்குரிய கர்த்தருடைய வேளை இப்பொழுது வந்துவிட்டபடியால், இன்னுமாகத் தாவீது கர்த்தருடைய தெரிந்துகொள்ளுதலாக மாத்திரம் காணப்படாமல், ஜனங்களுடைய தெரிந்துகொள்ளுதலாகவும் காணப்பட்டபடியால், இவரை முழுத்தேசத்தின்மீதும், இராஜாவின் ஸ்தானத்திற்கு உடனடியாக ஏற்றுக்கொள்வதற்கு ஆதரிக்கும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளத்தக்கதாக, ஜனங்கள் தங்கள் பிரதிநிதிகள் மூலம் தாவீதிடம் சென்றார்கள். இவர் எப்ரோனில் ஏழு வருடங்கள் செய்த ஆளுகையானது, இவரது ஞானத்தினையும், திறமையினையும் வெளிப்படுத்தினது; முழுத்தேசத்தினுடைய காரியங்களையும் ஒழுங்குபடுத்தும் அவசியத்திலிருந்த ஜனங்களுக்கு, இவர் பொருத்தமான மனுஷனாகக் காணப்பட்டார்; இவர் அவர்களின் எலும்பில் எலும்பாகவும், மாம்சத்தில் மாம்சமாகவும் காணப்பட்டார்; இவர் தைரியமுள்ளவர் என்பதும், உண்மையுள்ளவர் என்பதும், மகா திறமையுள்ளவர் என்பதும் சவுலின் நாட்களிலேயே நிரூபிக்கப்பட்டிருந்தது; ஆகையால் தாவீது அவர்களோடு ஓர் உடன்படிக்கையினைப் பண்ணிக்கொண்டார். இந்த உடன்படிக்கையானது, இராஜாவின் உரிமைகளையும், வரையறைகளையும் விவரித்துக்கூறும் ஒருவகை ஆவணமாக இருந்திருக்க வேண்டும். தங்கள் பற்றுறுதியையும், ஆதரவையும் கொடுப்பதாக ஜனங்களும், தங்கள் சார்பில் உறுதிமொழி தெரிவித்தார்கள். இஸ்ரயேலின் அரசாங்கம் என்பது, முழுவதும் ஓர் அரசனுடைய தன்னிச்சையான ஆளுகையாகக் காணப்படாமல், மாறாக அதிகாரங்களுக்கு வரையறைகளை விதிக்கப்பெற்றுள்ள ஓர் அரசாங்கமாகவே காணப்பட்டது.

தாவீது எருசலேமை, புதிதாய் ஒருங்கிணைந்துள்ள இராஜ்யபாரத்திற்குரிய தனது புதிய தலைநகரமாகத் தெரிந்துகொண்டார்; ஏனெனில் எருசலேம் தன் சொந்த கோத்திரமாகிய யூதாவின் எல்லைகளுக்குள் இருப்பினும், அது எல்லைக்கு அருகாமையிலும், மையப்பகுதியிலும், சமஸ்த இஸ்ரயேலுக்கும் பொருத்தமான தலைநகரமாகவும் காணப்பட்டது. அது யோசுவாவின் நாட்கள் முதற்கொண்டு, இஸ்ரயேலுக்கு அரண்போன்று இருந்து, பாதுகாப்பு கொடுத்து வந்துள்ளது; மேலும் எருசலேமானது, அதில் முன்னமே குடியிருந்தவர்களினால், கைப்பற்றவே முடியாத ஒன்றாகக் கருதப்பட்டது. எனினும் எருசலேமில், கானானியர்களில் எஞ்சியிருந்த எபூசியர் குடியிருந்தனர்; இவர்களைக்

கானானிலிருந்து ஒழித்துப்போடும்படி இஸ்ரயேலுக்குக் கட்டளையிடப்பட்டிருந்தது. இந்த ஜனங்கள்/எபூசியர்கள் தாங்கள் குடியிருக்கும் இடத்தினுடைய வலிமையினை உணர்ந்தவர்களாக, தாவீதிடம் சரணடைய மறுத்தார்கள்; எதிர்ப்புத் தெரிவித்தவர்களாக, இவர்கள் தாங்கள் சரணடைவதில்லை என்று தெரிவித்தனர்; தங்கள் மத்தியில் காணப்படும் குருடரும், சப்பாணிகளும்கூடப் பட்டணத்தைப் பாதுகாக்க முடிபவர்களாக இருக்கின்றனர் என்று தெரிவித்தனர். தாவீது சூழ்நிலையை ஆராய்ந்து பார்த்துவிட்டு, அந்த அரண் செங்குத்தான மலைமீது காணப்படுவதினால், நீர்க்கால்கள் (குடை கால்வாய் என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது) வழியாய்ச் சென்று தாக்குதலை மேற்கொள்வதே சிறந்தது என்று கிரகித்துக்கொண்டார்; மேலும் அந்த உயரமான மலையில் ஏறி, குருடர்கள் என்றும், சப்பாணிகள் என்றும் தங்களைக்குறித்துச் சொல்லிக்கொள்பவர்களை முறியடிக்கிறவர்களுக்கு வெகுமானம் ஒன்றையும் தாவீது வாக்களித்திருந்தார். இவைகள் எல்லாவற்றிலும், விழுந்துபோன சுபாவத்தின் பெலவீனங்களையும், பாவங்களையும் தைரியமாய் எதிர்த்து, ஜெயங்கொள்ளும் கிறிஸ்தவனுக்கு ஏற்ற நடக்கைக்கடுத்த ஆலோசனைகளை நிழலான விதத்தில் பெற்றிருக்கின்றோம்.

இப்பாடமானது, தேசப்பற்று குறித்த பாடமாக முன்வைக்கப்படுகின்றது. இவ்வுலகத்தின் இராஜ்யங்களுக்காக, உலகத்தின் சார்பில் வெளிப்பட்ட தேசப்பற்றின் ஆவிக்கு எதிராக நாம் கூறுவதற்கு ஒன்றுமில்லை. நிலவிவரும் சூழ்நிலைகள் மத்தியில், இந்த ஆவியானது, பெருமளவில் சமாதானத்தையும், ஒழுங்கையும் கொண்டுவந்துள்ளது; இப்படி இல்லையேல் பெருமளவில் பாதிப்பு காணப்பட்டிருக்கும்; மேலும் நம்முடைய ஒட்டுமொத்த மனுக்குலத்தின் நலன்கள்மீது கவனம்காட்டும் அளவுக்கு மனிதர்களின் மனங்களும், இருதயங்களும் அவ்வளவுக்குப் பெரிதாகவும், அவ்வளவுக்குத் தாராளமானதாகவும் இல்லாததினால், சில பொதுநலன்கள் ஒவ்வொரு நாட்டினுடைய தனிமனிதர்களை ஒருமித்த சமுதாயத்தினராக அல்லது தேசமாக இணைத்து வைத்திருப்பது என்பது நலமான காரியமேயாகும்; இப்படியாக மனித வாழ்க்கையினுடைய பல்வேறு அம்சங்களில், ஒருமித்த முன்னேற்றத்தினைக் காணலாம். எனினும் இவைகளின் நலமான விஷயங்களானது, தேசத்தின் சுயநலம், பேராசை, பெருமை, பொல்லாங்கான இலட்சியங்களினால் ஒழித்துக்கட்டப்படுகின்றன; ஆகையால் ஒவ்வொரு தேசத்திலுள்ள தேசபக்தியின் உணர்வுகளில், கடும்வெறுப்பின் கசப்புகளும், அண்டை நாட்டவர் மீதான பகைமைகளும் காணப்படுகின்றன; மேலும் நாட்டினுடைய நன்மைகளுக்கடுத்த நலன்கள் பாதிக்கப்படும்போது மாத்திரமே, தனிநபர்களுடைய நன்மைகளுக்கடுத்த நலன்கள் பாதிப்பதாகப் பார்ப்பதோடு, தேசபக்தியின் தீவிரம் நின்றுவிடுகின்றது. முற்றிலும் சுயநலமற்ற எதுவுமே, தேசங்களுடைய அரசியலில் காணப்படுகிறதில்லை.

இந்த உலகப்பிரகாரமான, சுயநலமான தேசபக்தியானது, அதாவது தன் சொந்த நாட்டினுடைய நலன்களை மாத்திரம் காக்கின்றதும், மீதமுள்ள மனுக்குலத்தைப் புறக்கணிக்கின்றதும் அல்லது மீதமுள்ள மனுக்குலத்திற்குப் பேரழிவை உண்டாக்குகின்றதுமான தேசபக்தியானது, கிறிஸ்தவனை இயக்கும் தேசபக்தியாகக் காணப்படக்கூடாது. கிறிஸ்தவனின் தேசபக்தியானது, மனுக்குலம் அனைத்தின் நலன்களையும் கருத்தில் எடுத்துக்கொள்ளும் ஒன்றாகக் காணப்பட வேண்டும். இவ்வுலகத்தின் இராஜ்யங்கள் பூரண நீதியின்மீது கட்டப்படாதவைகளாகக் காணப்படுகின்றது; இல்லையேல் பொதுவான மனுக்குலத்தை உயர்த்துவதற்கும், ஆசீர்வதிப்பதற்கும் என்று சக்திகள் முழுவதையும் அர்ப்பணிப்பதற்கு விரும்பாதவைகளாக அல்லது முடியாதவைகளாக இந்த இராஜ்யங்கள் காணப்படுகின்றது; இன்னுமாக இந்த இராஜ்யங்கள் அனைத்தும், இவ்வுலக அதிபதியினுடைய ஆளுகையின்கீழ்க் காணப்படுகின்றது;

ஆகையால் நம்முடைய அர்ப்பணிப்பிற்குப் பாத்திரமான அந்த ஒரே ஒரு நீதியின் அரசாங்கத்திற்கு, அதாவது ஏற்றகாலத்தில் பூமியின் குடிகள் அனைவரையும் ஆசீர்வதிக்கப்போகும் தேவனுடைய இராஜ்யத்திற்கு மாத்திரம் நம்முடைய தேசபக்தியின் உணர்வுகளானது காணப்பட வேண்டும்.

தேவனுடைய ஜனங்களின் இருதயங்களில்தவிர, மற்றபடி அந்த இராஜ்யம் இன்னும் ஸ்தாபிக்கப்படவில்லை என்பது உண்மையே. தேவனுடைய ஜனங்களின்மீது யேகோவா தேவனால் அபிஷேகிக்கப்பட்டவர் இராஜாவாக ஆளுகை செய்துகொண்டிருக்கின்றார்; காலங்கள் செல்லச்செல்ல அவரது ஆளுகை பூமியெங்கும் செலுத்தப்படும். இந்தத் தகுதியுள்ள இராஜாவிற்கே, தேவனுடைய ஜனங்கள் தங்கள் உண்மை அனைத்தையும் சமர்ப்பிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர்; அவரது ஆளுகையின்கீழுள்ள உயர்ந்த கொள்கைகளுக்கும், அவரது இராஜ்யத்திற்கு ஆதரவான காரியங்களுக்கும்தான் இவர்கள் பரிசுத்தமான வைராக்கியத்துடனும், தேசபக்தியுடனும் தங்களை அர்ப்பணித்துக் காணப்பட வேண்டும்; சேவிப்பதற்குரிய அவர்களது திறமையின் வித்தியாசங்கள் காரணமான வரையறையைத்தவிர மற்றபடி இந்தத் தேசபக்திக்கு எந்த வரையறையும் இல்லை.

உலகத்திடமிருந்து, கர்த்தருடைய ஜனங்கள் முற்றிலும் வேறுபிரிக்கப்பட்டிருக்கின்ற காரியமானது, கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களினால் மீண்டும் மீண்டுமாக வலியுறுத்தப்பட்டிருந்தபோதிலும், இது கிறிஸ்தவர்கள் என்று தங்களைக்குறித்து அறிக்கைப் பண்ணிக்கொள்பவர்களினால் பொதுவாய்ப் பார்க்கத் தவறப்படுகின்றது; இவர்கள் தாங்கள் உலகத்தோடு கலந்து காணப்பட வேண்டும் என்றும், உலகத்தின் நோக்கங்கள், இலட்சியங்கள் மற்றும் தங்கள்மேல் தாங்களே ஏற்றிக்கொண்ட பொறுப்புகள் முதலியவற்றில் - அரசியலில், சமுதாயத்தில் மற்றும் இராணுவத்தில் பங்காளிகளாகக் காணப்பட வேண்டும் என்றும் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். தம்முடைய ஜனங்களைக்குறித்து இயேசு, நான் உலகத்தானல்லாதது போல, அவர்களும் உலகத்தாரல்ல என்று கூறியுள்ளார் (யோவான் 17:16). நாம் உலகில் குடிமக்களாக இராமல், மாறாக அந்நியர்களாகக் காணப்பட வேண்டும்; எனினும் சட்டங்களுக்குக் கீழ்ப்படிகின்ற அந்நியர்களாகவும், இராயனுக்குரியதை இராயனுக்குக் கொடுப்பவர்களாகவும், தேவனுக்குரியதை தேவனுக்குக் கொடுப்பவர்களாகவும் காணப்பட வேண்டும்; எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன். ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள். எவனுக்கு வரியைச் செலுத்தவேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்தவேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள். எவனுக்குப் பயப்படவேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள். எவனைக் கனம்பண்ணவேண்டியதோ அவனைக் கனம்பண்ணுங்கள். ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள். பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான். (உரோமர் 13:1, 7-8)

ஒரு காலத்தில் இஸ்ரயேலில் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததும், தாவீது இராஜாவாக நியமிக்கப்பட்டிருந்ததும் போன்றதொரு இறையாட்சியின்கீழ், இப்பொழுது நாம் காணப்படுகின்றோமானால், பின்னர் கிறிஸ்தவர்களாகிய நாம் அதன்பால் தேசப்பற்றின் உணர்வுகளை மிகுதியாய்ப் பெற்றிருக்க வேண்டும். தேவன் தம்முடைய நிழலான பூமிக்குரிய அரியணை ஆட்சியினை நீக்கிப்போட்டுள்ளார் என்பதையும், தாவீதின் அரியணைக்கும், இராஜ்யத்திற்கும் நிஜமாகிய தம்முடைய இராஜ்யத்தினைக் கிறிஸ்து வந்து,

ஸ்தாபிப்பதுவரையிலும் அது இருப்பதில்லை என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். இந்தச் சாட்சியினை எத்தனை பேர் விசுவாசித்து, புதிய இராஜாவின் நோக்கங்களுக்கென்று தங்களை முழுமையாய் அர்ப்பணித்துக்கொள்கின்றனரோ, இராஜ்யமானது பூமியில் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னதாக, இவர்களுடைய இருதயங்களில் ஆளுகையைத் துவங்குகின்றது; பின்னர் அவரது இராஜ்யமானது ஏற்றகாலத்தில் ஸ்தாபிக்கப்படும்போது, அவரோடுகூட இவர்களுக்குச் சுதந்தரர்களாகும் சிலாக்கியம் அருளப்படும்.

ஆனால் உலகமானது, இந்த இராஜ்யத்தைக்குறித்து அறிந்துகொள்வதில்லை அல்லது புரிந்துகொள்வதில்லை; சுபாவப்படியான மற்றும் சீர்கெட்ட இருதயத்தினால் இந்த இராஜ்யத்தினுடைய நீதியின் கொள்கைகளையும், உலகத்தின் இராஜ்யத்திற்கும், தேவனுடைய இராஜ்யத்திற்கும் இடையிலுள்ள பெரும் வித்தியாசத்தையும் புரிந்துகொள்ளவோ அல்லது கிரகித்துக்கொள்ளவோ முடியாது. இந்தக் காரணத்தினாலேயே, இந்தப் பூமிக்குரிய இராஜ்யங்களைத் தேவனுடைய இராஜ்யம் என்றும், கிறிஸ்தவ மண்டலம் என்றும் அழைக்கின்றவர்களோடும், இது தேவனுடைய இராஜ்யம் என்பதுபோல் இதை சேவிப்பவர்களோடும் இணைந்துகொள்வதற்குரிய அழைப்பிற்கு இணங்காத, எந்த ஒரு தேவஜனங்களுடைய வாழ்க்கையையும் உலகத்தினால் புரிந்துகொள்ள முடியாது.

மற்றெல்லாக் காரியங்களில் காணப்படுவதுபோன்று, நாம் இவ்விஷயத்திலும் கர்த்தரை முழுமையாய்ப் பின்பற்றி நடந்து, சகல காரியங்களிலும் உலகத்திடமிருந்து பிரிந்து நடப்பவர்களாய் இருப்போமானால், உலகத்திலிருந்தும், நாம் உலகத்தாராய் இராமல் காணப்படுவோமானால், நாம் தவறாய்ப் புரிந்துகொள்ளப்படுவோம் மற்றும் வெறுக்கப்படுவோம் என்று மாத்திரம் எதிர்பார்க்கலாம். நாம் கர்த்தருடைய பின்வரும் வார்த்தைகளை நினைவில்கொள்ள வேண்டும்: உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால்,( உலகத்தின்எ ண்ணங்கள்,ெ காள்கைகள்,வ ழிமுறைகள்,மு தலானவைகளில் பங்குகொள்பவர்களாய் இருந்தால்) உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினால், உலகம் உங்களைப் பகைக்கிறது. ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள் (யோவான் 15:18-20). நற்கிரியைகளைச் செய்யும் பக்திவைராக்கியமுள்ள ஜனங்களாக நாம் காணப்படத்தக்கதாகப் பார்த்துக்கொள்வோமாக.

R4255

## சவுல் மற்றும் தாவீது பற்றின ஒரு பார்வை

### 2 சாமுயேல் 5:12

கர்த்தர் தன்னை இஸ்ரயேலின்மேல் இராஜாவாகத் திடப்படுத்தி, தம்முடைய ஜனமாகிய இஸ்ரயேலினிமித்தம் தன்னுடைய இராஜ்யத்தை உயர்த்தினார் என்று தாவீது கண்டறிந்தார்.

- 2 சாமுயேல் 5:12

நாம் பார்க்கப்போகின்ற இந்த இரண்டு மனுஷரில், சவுல் நிச்சயமாகவே தன்னுடைய ஜீவியத்தின் துவக்கத்தில் மிகவும் அனுகூலமான வாய்ப்புகளைப் பெற்றவராக இருந்திருக்கின்றார். மாம்சத்தில் இவர் இராஜா எனும் ஸ்தானத்திற்கு விசேஷித்த விதத்தில் மிகவும் பொருத்தமானவராகத் தோன்றினபடியால், இவர் ஜனங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது, ஜனங்கள் இவரது இந்த இயற்கையான

அம்சங்களை அடையாளம் கண்டுகொண்டு, எவ்வித தயக்கமும் காண்பிக்காமல், இவரை ஏற்றுக்கொண்டனர். கொஞ்ச காலங்கள் இவர் தாழ்மையுடன் நடந்துகொண்டு, கர்த்தருடைய சித்தத்தைச் செய்வதற்குக் கவனமாய் நாடினார்; எனினும் இவர் தன்னை முழுவதுமாய் அர்ப்பணிக்காத காரணத்தினால், இவர் சீக்கிரத்தில் தன் சொந்தச் சித்தத்தினை, கர்த்தருடைய சித்தமெனக் குழப்பிக்கொண்டார். இதன் விளைவு கீழ்ப்படியாமையும், தோல்வியும், கலக்கமடைந்த மனமுமாகும்; பித்துபிடிக்கும் நிலை வருமளவுக்கு மனமானது தாறுமாறாய் போய்க்கொண்டிருந்தது; இறுதியில் அவமானமான ஒரு மரணமும் வந்தது. சவுலின் குணத்தில் காணப்பட்ட குறைவானது, கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணிப்பதில் இவருக்கு இருந்த குறைவாகவும், இவர் தன் சொந்தச் சித்தத்தைக் கொஞ்சம் தக்கவைத்துக்கொண்ட காரியமாகவும் காணப்பட்டது. இதுவே பிரச்சனையாகக் காணப்பட்டது. இதைப்போன்ற பிரச்சனையே, தங்கள் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்தத் தவறிப்போகின்றவர்கள் அனைவருக்கும் காணப்படுகின்றது. இத்தகையவர்கள் இரண்டாம் மரணத்திற்குள் போகிறதாக இருப்பினும் அல்லது திரள்கூட்ட நிலைக்குள் போகிறதாக இருப்பினும், இவர்களது வீழ்ச்சிக்கான அந்தத் தவறுகள், ஜீவியத்தின் எல்லாக் காரியங்களிலும் கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணிக்கத் தவறியதில் காணப்படுகின்றது; இன்னுமாக ஜீவியத்தின் எல்லாக் காரியங்களிலும் அவரது வழிகாட்டுதல்களையும், வழிநடத்துதல்களையும் விசுவாசத்தில் ஏற்றுக்கொள்ளத் தவறியதில் காணப்படுகின்றது; இன்னுமாக அவர் சித்தத்தைச் செய்ய நாடி, சுயத்தைப் புறக்கணிக்க, அழித்துப்போட நாடுவதற்கு தவறியதில் காணப்படுகின்றது.

தாவீதின் குணங்களானது, சவுலிடமிருந்து முற்றிலும் வேறுபட்டு காணப்பட்டது. தனது வாழ்க்கை பயணத்தினுடைய துவக்கத்தில் அதிகம் அனுகூலமான சூழ்நிலைகளைப் பெற்றிராதவரும், உயரமான தோற்றம் கொண்டிராதவரும், அஞ்சுகிற தோற்றம் கொண்டிராதவரும், அதிக வசதியில்லாத குடும்பத்திலிருந்து வந்தவரும், பிறப்பிலிருந்தே மகா திறமைகளைப் பெற்றிராதவருமான தாவீதின் வாழ்க்கையும், இதன் விளைவுகளும், சவுலிடமிருந்து மிகவும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. வெற்றிகளும், தோல்விகளும் உள்ள தாவீதின் வாழ்க்கையினை நாம் எங்குப் பார்த்தாலும், அங்கு அவர் தைரியத்தையும், உறுதியினையும் சரியானமுறையில் செயல்படுத்தியிருப்பதைக் காணலாம். இவர் காட்டு விலங்குகளை வேட்டையாடும் வேடனல்ல, மாறாக மந்தையைக் காக்கும்பொருட்டு சிங்கத்தையும், கரடியையும் கொன்றுபோட்டார் என்று பார்க்கின்றோம். இவர் குத்துச்சண்டை வீரனோ அல்லது வாள்போர் வீரனோ அல்ல; எனினும் சந்தர்ப்பம் வந்தபோதோ இவர் தன் ஜனங்களைக் காப்பதற்கென்று, ஜீவனைப் பணையம் வைக்கத் துணிந்தார் என்று பார்க்கின்றோம். இராஜாவாகும்படிக்கு அபிஷேகிக்கப்பட்டபோது, தனக்குக் கொடுக்கப்பட்ட கனத்தினை இவர் உயர்வாய் மதித்திருந்தபோதிலும், இவர் அதைத் தன்னடக்கத்துடன் வைத்துக்கொண்டார் - ஒருபோதும் அதைக்குறித்துத் தற்பெருமையடித்துக்கொள்ளவில்லை; மேலும் தெய்வீக ஏற்பாட்டை துரிதப்படுத்துவதற்காக ஒருபோதும் முன்யோசனையின்றி முயற்சிக்கவுமில்லை என்று பார்க்கின்றோம். இவர் இராஜாவின் எதிர்ப்பினைப் பொறுமையோடு சகித்தார்; அதே சமயம் இராஜாவின் குடும்ப அங்கத்தினர்களை மிகுந்த மரியாதையுடன் நடத்தினார் என்று பார்க்கின்றோம்; இறுதியாகத் தன்னைத் தேசத்தின்மீது இராஜாவாகத் திணித்து, தன்னை ஏற்றுக்கொள்ளும்படிக்கு ஜனங்களைக் கட்டாயப்படுத்துவதற்குப்பதிலாக, இவர் தொடர்ந்து கர்த்தருடைய வேளைக்காகப் பொறுமையோடு காத்திருந்தார் என்று பார்க்கின்றோம். மாமனிதர்கள் மற்றும் நீதிமான்களின் ஜீவியங்களைப்

படித்துப்பார்ப்பதால் வரும் விளைவுகளில் ஒன்று, அவர்கள் எந்த விதத்தில் உலகத்தை மேம்படுத்த முடிந்தவர்களானார்கள் என்பதைப் பார்த்து அறிந்துகொள்வதேயாகும்.

மாமனிதர்களின் வாழ்வு எங்களுக்கு நினைவுபடுத்துவதெல்லாம்,
நாமும் நம் வாழ்வுதனை உன்னதமான ஒன்றாய் ஆக்கிடலாம் என்றே;
நாமும் வாழ்க்கை ஓட்டம்தனை நிறைவுசெய்கையில்,
விட்டுச்சென்றிடலாமே நம் அடிச்சுவடுகளை காலம் எனும் மணல் மீதினிலே!

உலகில் உயர்வான நிலைக்கு உயர்ந்தவர்களில் அநேகர், நாம் காணத்தக்க அடிச்சுவடுகள் எதையும் விட்டுச்சென்றதில்லை; ஆனால், மகாபெரும் உதாரணமாய் இருந்தவர்களைக் கர்த்தர் நமக்கு முன்வைக்கையில், நமக்கு ***அடிச்சுவடுகளைச்*** சுட்டிக்காண்பிக்கின்றார்; மேலும் எப்படிச் சில அடிச்சுவடுகள் மேல்நோக்கிச் சென்றுள்ளன என்றும், எப்படிச் சில அடிச்சுவடுகள் கீழ்நோக்கிச் சென்றுள்ளன என்றும் காண்பித்துத் தருகின்றார். சவுல் கீழ்நோக்கிச் சென்றவராகவும், தாவீது மேல்நோக்கிச் சென்றவராகவும் காணப்படுகின்றனர். ஓர் அடிச்சுவட்டை நாம் தவிர்த்துக்கொள்ள வேண்டும், இன்னுமாக மற்ற அடிச்சுவட்டினால் நாம் நன்மை அடையலாம் எனும் அளவுக்கு, இந்த அடிச்சுவடுகள் எவ்வளவு வேறுபடுகின்றது என்பது நம் அனைவராலும் கவனிக்கப்பட வேண்டும் என்பதே முக்கியமான காரியமாய்க் காணப்படுகின்றது. தாவீதின் வெற்றிக்கான இரகசியம், இவர் தனது நோக்கத்தின் விஷயத்தில் உறுதியாகக் காணப்பட்டார் என்பது மாத்திரமல்லாமல், இவரது நோக்கம் தெய்வீகச் சித்தத்திற்கு முழுவதும் இசைவான நிலையில் காணப்படத்தக்கதாகப் பார்த்துக்கொள்ளப்பட்டது என்பதுமாகும். சிங்கம் மற்றும் கரடியுடன் போராடிய சம்பவத்தை இராஜாவாகிய சவுலிடம் கூறும்போதும்கூட, அவைகளைத் தன் கைக்கு ஒப்புக்கொடுத்தவர் தேவன் என்று கூறி, தாவீது தேவனுக்கே மகிமையைச் சாற்றினார். இப்படியாகவே இவரது வாழ்க்கை முழுவதும், தனது வெற்றிகளின் விஷயங்களில் தேவனுக்கு மகிமையைச் செலுத்துவதற்குரிய இவரது விருப்பத்தினை நாம் கவனிக்கின்றோம்; மேலும் தன் ஜீவியத்தில் எங்கெல்லாம் தோல்விகள் வந்ததோ, அவைகள் தன் சொந்தப் பெலவீனத்தின் காரணமாக வந்தவைகள் என்று உணர்ந்துகொள்வதற்குரிய இவரது விருப்பத்தினை நாம் கவனிக்கின்றோம்; அல்லது மாறுவேடத்தில் வந்த தெய்வீக ஆசீர்வாதங்கள் என்று உணர்ந்துகொள்வதற்குரிய இவரது விருப்பத்தினையும் நாம் கவனிக்கின்றோம். இப்படியாக உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார் எனும் பரிசுத்த வார்த்தைகளுக்குரிய உதாரணத்தினைத் தாவீதின் முழு வாழ்க்கையிலும் நாம் பார்க்கின்றோம். (நீதிமொழிகள் 3:6; சங்கீதம் 37:4)

## உயர் இலட்சியங்களின் முக்கியத்துவம்

நம்மைச் சுற்றியுள்ள உலகத்தையும், பெயர்ச்சபையையும் நாம் பார்க்கையில், பெரும்பான்மையான மனுக்குலத்தார் எவ்விதமான இலட்சியங்களும், எவ்விதமான குறிக்கோள்களும் இல்லாமல் காணப்படுவதைக் காண்கின்றோம். அந்தோ பரிதாபம்! இவர்கள் எவ்விதமான இலக்கையும் பெற்றிருக்கவில்லை என்றால், இவர்களால் எப்படிச் சந்தோஷமாயிருக்க முடியும் அல்லது ஏதேனும் உயர்ந்த இலக்கை அடைய முடியும்? மீண்டும் நாம் ஜனங்களைக் கவனிக்கையில், இலட்சியங்களைப் பெற்றிராதவர்களைவிட இழிவான மற்றும் அவமானத்திற்குரிய இலட்சியங்களைச் சிலர் பெற்றிருப்பதே மோசமான காரியமாகக் காணப்படுகின்றது. பரிதாபத்திற்குரிய சிருஷ்டிகள்! விழுந்துபோன சந்ததியில்

கொஞ்சமே சீர்க்கெட்டும், அதிக அனுகூலங்களைப்பெற்றும் காணப்படும் வேறு சிலருடன் ஒப்பிட்டுப்பார்க்கையில், பாவத்தில் பிறந்து, துர்க்குணத்தில் உருவாகி, சாதகமற்ற சூழ்நிலைகளில் அநேகமாக வளர்க்கப்பட்டுள்ள சிலர் மிகவும் குறைவுப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். மீண்டும் ஜனங்களைப் பார்க்கும்போது, சிறந்த உலகப்பிரகாரமான இலட்சியங்களை உடையவர்களாகவும், இன்னுமாக ஆஸ்தியையும், செல்வாக்கையும், வல்லமையையும் கனமிக்க சிறந்த விதத்தில் பயன்படுத்த வேண்டும் என்றும், சக சிருஷ்டிகளுக்கு ஊறுவிளைவிக்கப் பயன்படுத்தாமல், நன்மை பயக்க பயன்படுத்த வேண்டும் என்றும் உள்ள வாஞ்சையில் ஆஸ்திகள் முதலானவைகளை நாடித் தேடுகிறவர்களாகவும் காணப்படும் ஒரு மூன்றாம் வகுப்பாரை நாம் காண்கின்றோம். இவர்கள் முதல் இரண்டு வகுப்பாரைவிட, ஜீவியத்தில் சிறந்த நோக்கங்களைப் பெற்றிருப்பதற்காகப் பாராட்டப்பட வேண்டும். இவர்கள் அநேகமாக சிறந்த பிறப்பையும், நல்ல சூழ்நிலையினையும் பெற்றவர்களாக இருக்கின்றனர்.

நாம் மீண்டும் பார்க்கையில், நான்காவது ஒரு வகுப்பாரைக் காண்கின்றோம்; இவர்கள் தேவ கிருபையினால், பூமிக்குரிய காரியங்களினின்று பரத்திற்குரிய காரியங்கள்மீது தங்கள் கண்களை உயர்த்திப் பார்க்கப் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களுக்கு, பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. பரலோக சந்தோஷம், பரலோக ஐக்கியம், பரலோக ஊழியம் பற்றின தரிசனமானது, இவர்களது மனங்களை மிகவும் மறுரூபப்படுத்தியுள்ளபடியால், இவர்களது மாம்சம் இன்னமும் பலவீனமாகக் காணப்படுகின்றபோதிலும், இவர்கள் புதிய மனதைக்கொண்டு ஜெயங்கொள்கின்றனர். இந்த வகுப்பாரை, பூமியினால் திருப்திப்படுத்திட முடியாது. இவர்களுக்குப் புதிய நெறிமுறைகள்/கொள்கைகள் வந்துள்ளன; மேலும் இவர்கள் இவ்வுலகத்தின் காரியங்கள், இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று உணர்ந்தும், புரிந்தும் இருக்கின்றனர். இவ்வுலகத்தின் காரியங்கள் இவர்களுக்குக் குப்பையும், தூசியுமாய்க் காணப்படுகின்றது. இந்த வகுப்பாரையே கர்த்தர் தம்முடைய விசேஷித்த பராமரிப்பு மற்றும் அறிவுறுத்தலின்கீழ் வைத்திருக்கின்றார். இவர்கள் தங்களை அவருக்கென்று அர்ப்பணித்துள்ளபடியால், அவர் இவர்களுக்குத் தேவனுடைய ஆழங்களின், உயரங்கள், அகலங்கள், அடி ஆழங்கள், நீளங்கள் சிலவற்றை வெளிப்படுத்துகின்றார். இப்படியாக அவர் இவர்களுக்குத் தம்முடைய அறிவு மற்றும் கிருபையின் மூலம் ஒரு தெய்வீக வல்லமையினைக் கொடுக்கின்றார். இந்த வல்லமையானது, அவருடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் இவர்களில் உண்டாக்குகின்றது. இந்தத் தயவுள்ள ஸ்தானத்தை இவர்கள் அடைந்துள்ளதற்குரிய இரகசியம் என்னவெனில், இவர்கள் தேவனுடைய தயவைக்குறித்துக் கேள்விப்பட்டபோது, இவர்களுடைய இருதயங்கள் கவரப்பட்டன; இவர்கள் தங்களையே கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுத்தனர்; மேலும் இவர்களில் நடந்தேறிய கிருபையின் வேலையானது, கர்த்தருடைய வேலையாகும். ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். (எபேசியர் 2:10; யாக்கோபு 1:8)

## இருமனமுள்ளவன் நிலையற்றவனாய் இருப்பான்

நாம் மறுபடியுமாக பாகுபாடு ஒன்றினை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்; ஏனெனில் இஸ்ரயேல் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரயேலரல்லவே. கர்த்தர் தம் குணலட்சணம் மற்றும் தம் திட்டம்குறித்து வெளிப்படுத்தினவைகளுக்கு இந்த நான்காம் வகுப்பாரிலுள்ள சிலர் அதிகம் பொறுப்புணர்வு

கொண்டவர்களாகவும், சிலர் அவ்வளவுக்குப் பொறுப்பு உணர்வினை கொண்டிராதவர்களாகவும் காணப்படுகின்றனர். சிலர் பொறுப்புணர்வில்லாமல், இந்த உலகத்தின் காரியங்களையும், அதன் கனங்களையும், அதேசமயம் தேவன் அளிக்கப்போகும் கனங்களையும், இனிவரும் உலகத்தையும் ஆதாயப்படுத்திக்கொள்ள நாடுவார்கள். இப்படிச் செய்கையில் இவர்கள் ஆண்டவருடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுக்காதவர்களாகக் காணப்படுவார்கள்; இப்படியாக நடந்துகொள்பவர்கள் தோல்வியினைத் தழுவுபவர்களாகக் காணப்படுவார்கள் என்றும், இவர்களால் உலகத்தையும் திருப்திப்படுத்த இயலாது, கர்த்தரைப் பிரியப்படுத்துவதிலும் வெற்றிக்காண இயலாது என்றும் ஆண்டவர் தம் சீஷர்கள் அனைவருக்கும் உறுதிப்படுத்தியுள்ளார். இத்தகையவர்கள் இறுதியில் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள், எனினும் இவர்கள் புத்தியுள்ள கன்னிகைகளாகக் காணப்படுவதில்லை. இவர்கள் ஆயிர வருட இராஜ்யத்தில் ஆளுகை செய்யப்போவதில்லை. தங்கள் முழு இருதயத்தோடும், தங்கள் முழு ஆன்மாவோடும், தங்கள் முழுப்பெலத்தோடும் மற்றும் தங்கள் முழு மனதோடும் தம்மைத் தொழுது கொள்பவர்களையே கர்த்தர் தேடிக்கொண்டிருக்கின்றார். முழு ஆன்மாவோடு தொழுதுகொள்பவர்களே, ஆயிர வருட இராஜ்யத்தின்போது இராணியாக, மணவாட்டியாக, ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாக, அவரோடு உடன் சுதந்தரர்களாகக் காணப்படும்படிக்குத் தேவனால் விசேஷமாகத் தேடப்படும் வகுப்பாராய்க் காணப்படுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் மாத்திரமே இராஜரிக குடும்பத்தின் அங்கத்தினர்களாகவும், திவ்விய சுபாவத்தின் பங்காளிகளாகவும் காணப்படும்படிக்குத் தேவன் முன்குறித்துள்ளார்; தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார் (உரோமர் 8:29). இவர்களுக்குக் கிருபையையும், மகிமையையும் கொடுத்தருளுவார்; மேலும் இவர்கள் உத்தமமாய் நடக்கின்றபடியால், இவர்களிடமிருந்து எந்த நன்மையையும் அவர் விலக்கி வைக்கிறதில்லை. இவர்களுடைய இருதயங்கள் உத்தமமாய்க் காணப்படுகின்றது; தேவனுக்கும், நீதி மற்றும் அன்பின் விஷயத்திலுள்ள அவருடைய பிரமாணங்களுக்கும் இவர்களுடைய நோக்கங்கள் உண்மையானவைகளாகக் காணப்படுகின்றன. கிறிஸ்துவின் உடன் சுதந்தரர்களாக, இராஜ்யமாகக் காணப்படப்போகும் இந்த ஜெயங்கொள்ளும் வகுப்பாரிடம் காணப்பட வேண்டிய விசேஷித்த அம்சங்களைப்பற்றி நம் மனங்களில் நிறுத்திக்கொள்வோமாக; அதாவது இவர்கள் தேவனுக்கு உண்மையாய்க் காணப்பட வேண்டும், இன்னுமாக அர்ப்பணம்பண்ணினவர்களாக, உறுதியானவர்களாக, விசுவாசம் மற்றும் நம்பிக்கையினால் முழுக்க நிரம்பினவர்களாகக் காணப்பட வேண்டும் என்றுமுள்ள இந்த விசேஷித்த அம்சங்களைப்பற்றி நம் மனங்களில் நிறுத்திக்கொள்வோமாக.

இப்பண்புகள் நம்மில் உடனடியாக வருவதற்கு நாம் எதிர்பார்க்க முடியாது. மாறாக இவைகள் புதிய மனதின் படிப்படியான வளர்ச்சியும், முன்னேற்றமுமாகக் காணப்படுகின்றது; எனினும் இவைகளின் விஷயத்தில் வளர்ச்சிக் காணப்படுவதற்கு முன்னதாக, இருதயத்தில் கொள்கை காணப்பட வேண்டும் - அதாவது நேர்மை மற்றும் உறுதியின் கொள்கையானது காணப்பட வேண்டும். பின்னர்க் கிறிஸ்தவனுடைய குணலட்சணத்தில் சித்தம் (விருப்பம்) என்ற சிறிய வார்த்தைக்கு மிக முக்கிய இடம் காணப்படுகின்றது. கிறிஸ்தவன் விருப்பம்/சித்தம் கொண்டிருப்பவனாகக் காணப்படவேண்டும்; மேலும் சித்தமானது/விருப்ப மானது தேவனுடன் முழுஇசைவுடன் காணப்படத்தக்கதாகச் சரியாய் வழிகாட்டப்பட வேண்டும்.

## குறிக்கோளைச் செதுக்குதல்

வெற்றிகரமான ஜீவியம் ஒவ்வொன்றிற்கும், ஓர் உயர்ந்த மற்றும் சிறந்த குறிக்கோள் காணப்படுவது தகுதியானது மற்றும் அவசியமானதும்கூட என்று நாங்கள் சற்று முன்புதான் கூறியிருந்தோம். எனினும் குறிக்கோளை நடைமுறைப்படுத்தும் விஷயத்தில் நாம் பொறுமையைக் காட்டாததுவரையிலும், அக்குறிக்கோளைப் பெற்றிருப்பதில் எந்தப் பிரயோஜனமும் இல்லை. மைக்கேல் ஏஞ்சிலோ எனும் மாபெரும் சிற்பி குறித்த பின்வரும் பதிவு ஒன்று உள்ளது: இவர் ஒரு பளிங்குக்கல்லைப் பார்த்தவுடன் சுத்தியல் மற்றும் உளி கொண்டு வேலை செய்ய துவங்கிவிட்டார்; அங்கும் இங்குமாக துண்டுகளைத் தாறுமாறாக உடைத்து செதுக்கிக் கொண்டிருந்தார். என்ன செய்துகொண்டிருக்கின்றார் என்று அவரிடம் கேட்கப்பட்டபோது, அவரோ: இதில் நான் ஒரு தேவதூதனைக் காண்கின்றேன்; அவனை வெளியே கொண்டுவர வேண்டும் என்று பதிலளித்தார். இவர் தன் மனதில் குறிக்கோளைப் பெற்றிருந்தார்; அதை அடைவதற்கு விடாமுயற்சியுடன் உழைத்தார்; அந்தப் பளிங்குக் கல்லிலிருந்து தேவதூதனைச் செதுக்கி எடுத்தார். இப்படியாகவே வெற்றிகரமான ஒவ்வொரு ஜீவியத்தின் விஷயத்திலும் காணப்பட வேண்டும். நாமும் குறிக்கோளைப் பெற்றிருக்க வேண்டும். நாமும் தேவதூதனைக் காண வேண்டும். பின்னர் நாமும் அதை அடைய வேலை செய்ய வேண்டும்; கவனமாய், பொறுமையாய் ஜெபத்தோடு வேலை செய்ய வேண்டும். கிறிஸ்தவன் முன் காணப்படும் குறிக்கோள் (அடைய வேண்டிய மாதிரி) தேவதூதனாக மட்டும் காணப்படாமல், அதைவிட அதிகமானதாகவே காணப்படுகின்றது; அது தெய்வீகமாக காணப்படுகின்றது. இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்ற அப்போஸ்தலனின் வார்த்தைகள் உண்மையானவைகளே. (2 பேதுரு 1:4)

இதே கருத்து, வேறொரு இடத்தில் பரிசுத்த யோவானாலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது நாம் தேவனுடைய புத்திரர்களாக இருக்கின்றோம், எனினும் இனி எவ்விதமாய் இருப்போமென்றும், எவ்விதமான மகிமையும், கனமும் நம்முடையதாக இருக்குமென்றும் இன்னும் வெளிப்படவில்லை; எனினும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம் என்று அப்போஸ்தலன் நமக்கு உறுதியளிக்கின்றார் (1 யோவான் 3:2). ஒருவேளை அப்போது முதலாம் உயிர்த்தெழுதலினுடைய மாற்றத்தின் காரணமாக, நாம் அவருக்கு ஒப்பாயிருப்போமென்றால், ஒருவேளை அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்போமானால், கர்த்தருடைய மகிமையான காரியங்களையும், மேன்மையான உயர்த்தப்படுதலையும் நமக்கு நாம் பொருத்திக்கொள்ளலாம்; கர்த்தருடைய மேன்மையான உயர்த்தப்படுதலைக்குறித்து அப்போஸ்தலர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்: ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும் . . . (பிலிப்பியர் 2:9-10); எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக . . . (எபேசியர் 1:20). ஒருவேளை நாம் அவருக்கு ஒப்பாயிருந்து, அவரது மகிமையில் பங்கடைவோமானால், இந்த மகிமை அனைத்தும், தேவன்தாமே நம் பார்வைக்கு முன்வைத்துள்ள மகிமையான இலட்சியங்களில்/குறிக்கோளில் உள்ளடங்கும். இக்கண்ணோட்டத்தினைப் பெற்றிருக்கும் யார்தான், கர்த்தருடைய (செதுக்கும்) அடிகளுக்குத் தன்னை ஒப்புக்கொடுப்பதற்கு விரும்பாமல் இருப்பார்? தேவையான செதுக்குதல்களையும், மெருகூட்டுதல்களையும் சகிப்பதற்கு யார்தான் விரும்பாமல் இருப்பார்? அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும் பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று அறிந்து, யார்தான் உபத்திரவத்திற்குத் தன்னை ஒப்புக்கொடுப்பதற்கு விரும்பாமல் இருப்பார்? (உரோமர் 5:3). இவைகள் நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், இதினிமித்தம் தேவனை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாய்

இருப்பதில்லை, மாறாக நம்மை அன்புகூர்ந்து, தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை மீட்டுக்கொண்டவருடன், தேவனுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் நமக்கு அளிக்கப்படும்.

## கர்த்தர் அவரைத் திடப்படுத்தினார்

நாம் சற்று முன்பு பார்த்தவைகளுக்கு நம்முடைய ஆதார வசனம் இசைவாகவே காணப்படுகின்றது; இன்னுமாகத் தாவீதின் வெற்றிகளுக்குரிய இரகசியத்தினை மறுபடியுமாக நமக்குக் காண்பித்துக்கொடுத்து, கர்த்தர் பிரியப்படும் குணலட்சணத்தை நாம் எந்த விதத்தில் வளர்க்க வேண்டும் என்றுள்ள விதத்தையும் நமக்குக் காண்பித்துக்கொடுக்கின்றது. தாவீதின் நிலையில் இன்னொருவர் காணப்பட்டிருந்தால், ஒருவேளை அவர்: கர்த்தர் மிகுந்த பாரபட்சமுடையவர்; ஆகையாலே அவரது கிருபைகளை நான் பெற்றுக்கொள்ளும்படி என்னைத் தெரிந்தெடுத்துள்ளார். தேசத்திலுள்ள வேறெந்த நபர்களைக்காட்டிலும், அவர் என்மீது மிகுந்த அக்கறை உடையவராய் இருக்கின்றார் என்று எண்ணம்கொண்டவராகக் காணப்படலாம். இம்மாதிரியான எண்ணம் காணப்பட்டிருந்திருக்குமானால், கூடவே வீண்பெருமையும், பெருமையும் கடந்து வந்திருக்கும்; இது தாவீதிற்கு (மற்றும் அனைவருக்கும்) பாதகமாகியிருந்திருக்கும். இத்தகையவர் பின்வருமாறுகூடச் சொல்லியிருக்கலாம்: இந்தத் தேசத்தின் இராஜாவாகுவதற்குக் கர்த்தர் தேசத்திலேயே என்னைத்தான் தகுதியான நபராகக் கண்டிருக்கின்றார்; ஆகையால் இந்த எண்ணம் இல்லாத யார் ஒருவனும், கர்த்தருக்கு முரணாய்க் காணப்படுகின்றவனாய் இருப்பான்; அத்தகையவன் எனது வெறுப்பிற்கும் நிராகரிப்பிற்கும் ஆளாகுவான். இம்மாதிரியான ஒரு நிலைப்பாட்டினைத் தாவீது எடுத்திருந்திருப்பாரானால், இது அவரில் தீய குணலட்சணத்தை உருவாக்கியிருந்திருக்கும்; இம்மாதிரியான நிலைப்பாட்டினை யார் ஒருவர் எடுத்தாலும், இது அவர்களுக்குத் தீங்கையே விளைவிக்கின்றதாய்க் காணப்படும். இது ஒருவரை தற்பெருமையடித்துக்கொள்ளச் செய்யும், ஆணவமாக்கிடும், அன்பற்றவராக்கிடும் மற்றும் கர்த்தருக்கு ஒழுங்கின்படி ஊழியம்புரிவதற்கு அபாத்திரனாக்கிடும்.

இந்த விஷயத்தில் தாவீது கொண்டிருந்த சிந்தையே ஏற்றதாகும். கர்த்தர்தாமே இஸ்ரயேலின்மீது தன்னை இராஜாவாகத் திடப்படுத்தியுள்ளார் என்றும், தம் ஜனங்களாகிய இஸ்ரயேலின் நிமித்தமாகவே தன்னை இராஜாவாக உயர்த்தியுள்ளார் என்றும் தாவீது உணர்ந்திருந்தார். இதுபோலவே சபையினுடைய தெரிந்துகொள்ளுதலின் விஷயத்திலும்கூட, தேவன் நோக்கம் ஒன்றினைப் பெற்றிருக்கின்றார் என்று நாம் நினைவில்கொள்ள வேண்டும். அப்போஸ்தலன் கூறுவதுபோன்று நாம் ஒரு நோக்கத்திற்காகத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கின்றோம். உலகத்தை ஆசீர்வதிக்கும் இராஜ்யம் ஒன்றே தேவனுடைய நோக்கமாகக் காணப்படுகின்றது. தேவனிடம் மற்ற அநேக சிருஷ்டிகள் இருக்கின்றனர். தேவதூதர்களும், மனுஷர்களும் இருக்கின்றனர்; இவர்களை இந்த மாபெரும் நோக்கத்திற்காகத் தேவனால் தேர்ந்தெடுத்திருக்க முடியும். இன்னுமாகத் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றத்தக்கதாக இவர்களைத் தம்முடைய வல்லமையினால் வனைந்திருக்க முடியும் மற்றும் வடிவமைத்திருக்க முடியும். ஆனாலும் அவர் தம்முடைய இரக்கத்தினால், தம்முடைய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கென்று, ஞானிகளையும், வல்லவர்களையும், பிரபுக்களையும் தெரிந்துகொள்ளாமல், உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். இக்கருத்தானது நாம் மிகுந்த தாழ்மையில் காணப்படுவதற்கும், கர்த்தருக்கு நெருக்கமாய்க் காணப்படுவதற்கும் உதவுவதாக. பூமியின் குடிகள் யாவரையும் ஆளுகை செய்வதற்கும், நியாயந்தீர்ப்பதற்கும், சீர்தூக்கிவிடுவதற்கும் நம்மைத் தகுதிப்படுத்தி, ஆயத்தப்படுத்துவதற்கு அவசியமான பாடங்களைக் கற்றுக்கொள்வதற்கு நாடுவோமாக.

R2002

## பெட்டி எருசலேமுக்குக் கொண்டுவரப்பட்டது
### 2 சாமுயேல் 6:1-12

சேனைகளின் கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிற மனுஷன் பாக்கியவான். - சங்கீதம் 84:12

இக்கட்டுரையில் நாம் பார்க்கப்போகின்ற சம்பவத்தின் விசேஷித்த போதனை, கர்த்தருக்கான பயபக்தி பற்றியதாகும். அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார். தேவன் பரிசுத்தவான்களுடைய ஆலோசனை சபையில் மிகவும் பயப்படத்தக்கவர், தம்மைச் சூழ்ந்திருக்கிற அனைவராலும் அஞ்சப்படத்தக்கவர். தேவன் மோசேயோடே பேசும்படிக்கு எரிகிற முட்புதரில் தோன்றினபோது, அவர்: இங்கே கிட்டிச்சேராயாக; உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்று கூறினார். இதுபோலவே, இஸ்ரயேல் ஜனங்கள் அனைவருடைய பார்வைக்கும் முன்பாக, மேகத்தில் சீனாய் மலையில் தோன்றினபோதும் மிகுந்த பயபக்தி வெளிப்படுத்தப்பட்டது; இன்னுமாகப் பயபக்தியற்று நெருங்கி வருவதற்கு முயற்சிக்கும் எந்த ஒரு காரியங்களுக்கும் எதிராக விசேஷித்த தடைகளும் விதிக்கப்பட்டன. தேவனுடைய பிரமாணங்களுக்கும், வாசஸ்தலத்திற்கும் பயபக்தி கொண்டிருக்கும்படிக்கு இஸ்ரயேலுக்கு விசேஷமாய்க் கட்டளையிடப்பட்டிருந்தது. (சங்கீதம் 111:9; யாத்திராகமம் 20:7; சங்கீதம் 89:7; யாத்திராகமம் 3:5; 19:11-13; லேவியராகமம் 19:30)

பயபக்தி என்பது பெரும்பாலும் பிரமிப்பும்/அச்சமும், அன்பும் கலந்த ஆழ்ந்த ஒரு மரியாதையின் உணர்வு என்று விவரிக்கப்படலாம்; இன்னுமாகத் தெய்வீகமானவர் தொடர்புடைய விஷயத்தில் தொழுதுகொள்ளும் உணர்வு என்றும், இவ்வுணர்வினால் ஊக்குவிக்கப்பட்ட அல்லது இவ்வுணர்வுகளுக்கு இணங்கின ஒரு நடக்கை என்றும் விவரிக்கப்படலாம். கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (சங்கீதம் 111:10). இதுவே சிருஷ்டிகர் விஷயத்தில், நம்முடைய காரணகர்த்தர் விஷயத்தில், ஒட்டுமொத்த அண்டசராசரத்தினுடைய சிருஷ்டிகரும், பாதுகாவலரும், ஆண்டவருமானவர் விஷயத்தில், சிருஷ்டிகள் கொண்டிருக்க வேண்டிய ஒரே ஏற்ற மனப்பாங்காகும். ஆகையால் அவர் பேசும்போது, அவர் சத்தத்திற்கு நம்முடைய செவிகள் பயபக்தியோடு கவனித்திருக்க வேண்டும்; அவர் ஆணையிடுகிறபடி செய்வதற்கு நம் ஒவ்வொரு ஆற்றலும் விழிப்போடு காணப்பட வேண்டும். நம்முடைய பாதுகாப்பும், நம்முடைய சந்தோஷமும் கர்த்தருக்காக நாம் கொண்டிருக்கும் ஒப்புயர்வற்ற பயபக்தியையே பிரதானமாய்ச் சார்ந்துள்ளது; இன்னுமாக அன்புகாட்டுவதற்கு என்றும், நன்றியறிதலோடு காணப்படுவதற்கு என்றும் தூண்டுகிற மற்றும் அறிவுரைகளுக்கு உடனடியாக விவேகத்துடன் செவிசாய்த்து, அறிவிலும், ஞானத்திலும் வளருகின்ற அந்த உயர்குணங்களும்கூட, கர்த்தருக்காக நாம் கொண்டிருக்கும் ஒப்புயர்வற்ற பயபக்தியையே பிரதானமாய்ச் சார்ந்துள்ளது. இப்படியாகக் கர்த்தர், தம் நாமத்திற்குப் பாத்திரமான மரியாதையினை நம்மில் வளர்த்தி, விருத்தியாக்குகின்றார்.

தேவனுடைய பெட்டி என்பது, இஸ்ரயேலில் தெய்வீகப் பிரசன்னம் காணப்படுவதற்குரிய அடையாளமாய்க் காணப்பட்டது; இன்னுமாக இது நிழலான ஆசரிப்புக்கூடாரத்தில் காணப்பட்ட மிகுந்த புனிதமான காரியமாகவும் காணப்பட்டது. ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள ஒவ்வொன்றும் செய்யப்பட்டது போலவே, இதுவும் தெய்வீக வழிகாட்டுதலின் பேரிலேயே செய்யப்பட்டது; இது, (இயேசுவை

அடையாளப்படுத்தும்) பிரதான ஆசாரியன் மாத்திரமே பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படும், அதுவும் வருடத்திற்கு ஒருமுறை, பாவநிவாரணநாளின்போது அனுமதிக்கப்படும் மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டிருந்தது. இது தெய்வீகப் பிரசன்னத்திற்கு அடையாளமாகவும், தெய்வீகப் பிரசன்னமாகவும் காணப்பட்டபடியால், பயபக்தியற்று கையாளப்படுவதிலிருந்தும், எல்லோராலும் பார்க்கப்படுவதிலிருந்தும் பாதுகாக்கப்பட்டிருந்தது. கிறிஸ்துவின் சரீரத்திற்கு - இந்த யுகத்தினுடைய பரிசுத்தவான்களுக்கு அடையாளமாய்க் காணப்படும் ஆசாரியர்கள் மாத்திரமே, அதைத் தொடுவதற்கு அல்லது பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். இந்த யுகத்தின் நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகள் அனைவரையும் அடையாளப்படுத்தும் லேவியர்கள், ஆசரிப்புக்கூடாரம் இடம் விட்டு இடம் பெயர்க்கப்படும்போது, அதைப் பயபக்தியோடே சுமந்து செல்வதற்கு முறைப்படி நியமிக்கப்பட்டவர்கள் ஆவார்கள்; எனினும் பெட்டியானது ஆசாரியர்களினால், முதலாவது கவனமாய் மூடப்பட வேண்டும்; லேவியர்கள்கூடப் பெட்டியைப் பார்க்கவோ, தொடவோ கூடாது. (எண்ணாகமம் 4:15-20)

இப்பாடத்தில் நாம் பார்க்கவிருக்கும் சம்பவம் நிகழ்வதற்கு முன்புள்ள காலங்களில், இஸ்ரயேலில் ஆன்மீக நிலைமை மிகவும் மோசமாகக் காணப்பட்டது; பல வருடங்களாக உடன்படிக்கைப் பெட்டியானது, ஆசரிப்புக்கூடாரத்தில் அதற்குரிய இடத்தில் இல்லாதிருந்தது. தெய்வீகப் பிரசன்னத்தினுடைய கண்ணுக்குத் தெரியும் அடையாளமாக அது காணப்பட்டபடியால், பெட்டி எங்கெல்லாம் கொண்டுபோகப்பட்டதோ, அங்கெல்லாம் தேவனுடைய வல்லமையும், தயவும் கடந்துச்சென்றது; உதாரணத்திற்கு இஸ்ரயேல் வெட்டாந்தரை வழியாய் யோர்தானைக் கடந்துவந்த சம்பவத்தில், பெட்டியைச் சுமந்துவந்தவர்கள் நதியை நெருங்கினவுடன், அவர்களுக்கு முன்பு தண்ணீர்கள் பிரிந்தன; மறுபடியுமாகப் பெட்டிக்கு முன்பு எரிகோவின் மதில்கள் விழுந்து, இஸ்ரயேலர் மகா வெற்றியினை அடைந்தனர். ஆனால் இஸ்ரயேலர் தேவனுக்கு விரோதமாய்ப் பாவம்செய்தபோதோ, அத்தகைய வல்லமை வெளிப்படவில்லை. பெட்டி சத்துருக்களின் கரங்களில் அகப்படுவதற்கும்கூட அனுமதிக்கப்பட்டது; இஸ்ரயேலர் மகா தோல்வியினை அடைந்தபோது, பெட்டியைக் கைப்பற்றுவதற்குப் பெலிஸ்தர்கள் அனுமதிக்கப்பட்டனர். தேவன், இப்படியாக இஸ்ரயேலைத் தண்டித்தப்போதிலும், தம் பிரசன்னத்தினுடைய புனிதமான அடையாளம், புறஜாதிகளின் கரங்களிலேயே காணப்படும்படிக்கு நீண்டகாலம் அனுமதிக்கவில்லை; அதை வைத்திருந்ததற்காகப் பெலிஸ்தர்களும் தண்டிக்கப்பட்டனர்; அதை மீண்டுமாக இஸ்ரயேலர்களிடம் ஒப்படைப்பதற்கு மகிழ்ச்சிகொள்ளுமளவுக்கு, அவர்கள் தண்டிக்கப்பட்டனர். அதைத் திரும்பிக்கொடுக்கும் போது, அதை மூடுவதற்கு ஆசாரியர்களோ, அதைச் சுமப்பதற்கு லேவியர்களோ புறஜாதிகள் மத்தியில் காணப்படவில்லை. ஆகையால் பெலிஸ்தர்கள் அதை ஒரு புது வண்டியில் வைத்தனர்; இன்னுமாக வண்டியை ஓட்டுபவர்கள் இல்லாமல், மாடுகள் அதன் போக்கில் போகும்படிக்கு விட்டுவிட்டனர்; தேவன் பெட்டியை இஸ்ரயேலின் பட்டணமாகிய பெத்ஷிமேசுக்குக் கொண்டுவந்தார். இப்படியாகப் பெட்டி, மீண்டும் அவர் ஜனங்களிடத்திற்கு வந்தது. ஆனால் பெத்ஷிமேசின் ஜனங்கள், பெட்டி தொடர்புடைய திவ்விய பிரமாணங்களின் கட்டுப்பாடுகளை அசட்டைப்பண்ணி, பெட்டியைப் பார்த்தார்கள். தேவன் அவர்களைப் பெரிய சங்காரத்தினால் சங்கரித்து, ஐம்பதினாயிரத்து எழுபதுபேரை அடித்து, அவர்களைத் தண்டித்தார். இப்படியாக, கர்த்தருக்காக அச்சம் கொண்டிருக்க வேண்டும் என்பதுகுறித்தும், அவரது

பிரமாணங்களுக்குப் பயபக்தியுடன் காணப்பட வேண்டும் என்பதுகுறித்தும் அவர்கள் கற்பிக்கப்பட்டனர். இந்தப் பரிசுத்தமான தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கத்தக்கவன் யார்? (கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமான) பெட்டி நம்மிடத்திலிருந்து யாரிடத்துக்குப்போகும் என்று பெத்ஷிமேசின் மனுஷர் சொல்லி, கீரியாத்யாரீமின் குடிகளுக்கு ஆட்களை அனுப்பி: பெலிஸ்தர் கர்த்தருடைய பெட்டியைத் திரும்ப அனுப்பினார்கள். நீங்கள் வந்து, அதை உங்களிடத்துக்கு எடுத்துக்கொண்டு போங்கள் என்று சொல்லச்சொன்னார்கள். அப்படியே கீரியாத்யாரீமின் மனுஷர் வந்து, கர்த்தருடைய பெட்டியை எடுத்து மேட்டின் மேலிருக்கிற அபினதாபின் வீட்டிலே கொண்டுவந்து வைத்து, கர்த்தருடைய பெட்டியைக் காக்கும்படிக்கு, அவன் குமாரனாகிய எலெயாசாரைப் பரிசுத்தப்படுத்தினார்கள் (1 சாமுயேல் 6:20-21; 7:1). இங்குப் பெட்டி இருபது வருடங்களாக இருந்தது (1 சாமுயேல் 6:1-21; 7:1, 2). ஓரேப் பர்வதத்தில் வைத்து கர்த்தர் இஸ்ரயேலருக்குப்பண்ணின நியாயப்பிரமாண உடன்படிக்கையின் அடிப்படையிலேயே, கர்த்தர் அவர்களைக் கையாண்டார். தேவனுடைய உடன்படிக்கையின் ஒரு பாகத்தினராக இருப்பதற்குத் தயைபாராட்டப்பெற்றவர்கள் எவரும், இதினிமித்தம் பதில்சொல்லவும் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள்; இப்படிப்பினையைப் புதிய உடன்படிக்கைக்குரியவர்களாகிய நாம் இங்குப் பெற்றுக்கொள்கின்றோம். எனினும் அந்த ஐம்பதினாயிரம் புருஷர்கள் இரண்டாம் மரணத்தில் சங்கரிக்கப்பட்டுவிட்டனர் என்று எண்ணிக்கொள்ளக் கூடாது; ஏனெனில் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழுள்ள இஸ்ரயேலின் பரீட்சை, நிழலானது மாத்திரமேயாகும்; அது (அப்பரீட்சையானது), அப்பிரமாணத்தின்கீழ்க் காணப்படுபவர்களின் இறுதி முடிவை தீர்மானிக்கவில்லை.

தாவீது சமஸ்த இஸ்ரயேல்மீது இறுதியில் திடப்படுத்தப்பட்ட பிற்பாடு, பெட்டியை எருசலேமிற்குக் கொண்டுவரும்படிக்கும், ஒரு தேசமாக, தேவனை இருதயப்பூர்வமாகவும், பயபக்தியாயும் தொழுதுகொள்வதற்கு ஜனங்களை வழிநடத்தும்படிக்கும் திட்டமிட்டார்; இப்படி ஜனங்களை வழிநடத்துவதற்கு, புனிதமான உடன்படிக்கைப் பெட்டியைத் திரும்ப அதன் இடத்திற்குக் கொண்டுவருவதே, எடுக்கப்பட வேண்டிய முதலாம் நடவடிக்கையாக இருந்தது. அவர் தேசத்திற்கான பிரதிநிதிகள் முப்பதாயிரம்பேரைக்கூட்டி ஆலோசனை நடத்தி, இப்படியாக இக்காரியத்தினை ஒரு தேச நிகழ்வாக்கினார்; இப்படிச் செய்து ஒட்டுமொத்த ஜனங்களையும், தேவனைத் தொழுதுகொள்ளும் விஷயத்தில் மறுமலர்ச்சிக்குள் நடத்தினார்.

பெட்டியை எருசலேமுக்குக் கொண்டுவருவதற்குத் தெரிவுசெய்யப்பட்ட வழிமுறையானது, நியாயப்பிரமாணத்திற்கு இசைவான ஒன்றாய்க் காணப்படவில்லை; பிரமாணத்தின்படி பெட்டியானது லேவியர்களால் பயபக்தியோடு சுமக்கப்பட வேண்டும்; ஆனால் பெலிஸ்தர்கள் பெட்டியைக் கீரியாத்யாரீமுக்கு அனுப்பி வைத்தபோது செய்ததுபோலவே, இவர்களும் அதை (அநேகமாக) மாடுகள் பூட்டப்பட்டிருந்த புது இரதத்தின்மீது ஏற்றினார்கள். இது விஷயத்தில் தம்முடைய பிரமாணம்கூறும் காரியங்களுக்குக் கீழ்ப்படிவது தொடர்புடைய காரியத்தில், தேவன் தம்முடைய ஜனங்களல்லாத பெலிஸ்தர்களின் அறியாமையையும், இயலாமையையும் பொறுத்துக்கொண்டபோதிலும், இஸ்ரயேலர் இவ்விஷயத்தில் காண்பித்த அஜாக்கிரதையை அல்லது அவர்களது மறதியைத் தேவன் பொறுத்துக்கொள்ளவில்லை; தம் அதிருப்தியை அவர்களுக்குக் கடுமையான விதத்தில்

வெளிப்படுத்தினார். பரவலாய்ச் சந்தோஷமும், ஆரவாரமும், பல்வேறு இசைக்கருவிகளின் சத்தங்களும் காணப்படுகையில், திடீரென இரதம்/வண்டி தள்ளாட, அதன்மேல் வைக்கப்பட்டிருந்த பெட்டி விழும் அபாயம் ஏற்பட, அதைத் தாங்கிப்பிடிக்கும்படி ஊசா தன் கரங்களை நீட்ட, அவர் உடனடியாக அடிக்கப்பட்டுச் செத்துப்போனார்.

இது கடுமையான மற்றும் மிகவும் அவசியமான கடிந்துகொள்ளுதலாகக் காணப்பட்டது. ஊர்வலம் நின்றுபோனது; தாங்கள் கர்த்தருடைய கட்டளையைப் புறக்கணித்துள்ளனர் என்பதினாலும், தாங்கள் கர்த்தருடைய பிரசன்னத்திற்குரிய அடையாளச் சின்னத்தை உரிய பயபக்தியோடு கையாளுவதற்குத் தவறிவிட்டனர் என்பதினாலும், இக்காரியம் முழுத்தேசத்திற்குமான கடிந்துகொள்ளுதலாகக் கடந்து வந்துள்ளதென இராஜாவும், ஜனங்கள் அனைவரும் புரிந்துகொண்டனர். கர்த்தரைப்பற்றின பயம் இராஜாவுக்கும், ஜனங்கள் அனைவருக்கும் உண்டானது; இசையும், கொண்டாட்டங்களும் மௌனமாகிப்போயின; ஜனங்கள் கலைந்து போனார்கள்; அனைவரும் சிந்தனையில் மூழ்கினவர்களாக, தங்கள் இல்லங்களுக்குத் திரும்பிச்சென்றனர். பெட்டியை எருசலேமிற்குக் கொண்டுசெல்லும் தனது திட்டத்தைத் தொடருவதற்கு இராஜா அஞ்சினவராக, எல்லாவற்றையும் நிறுத்திவிட்டு, லேவியனாகிய ஓபேத் ஏதோமின் வீட்டில் பெட்டியைக் கொண்டுவந்துசேர்த்தார்; இந்த லேவியன் சந்தேகத்திற்கிடமின்றி, பெட்டியைப் பயபக்தியோடு ஏற்றுக்கொண்டிருந்திருக்க வேண்டும்; ஏனெனில் இதன் காரணமாக, தேவனுடைய பெட்டி ஓபேத் ஏதோமின் வீட்டிலே அவனிடத்தில் மூன்று மாதம் இருக்கையில், கர்த்தர் ஓபேத் ஏதோமின் வீட்டையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார் என்று வாசிக்கின்றோம். (1 நாளாகமம் 13:13-14)

பெட்டி அங்கு மூன்று மாதங்கள் இருந்தது; இராஜாவாகிய தாவீதோ கர்த்தருக்காக வைராக்கியம் கொண்டவராகவும், ஜனங்கள் கர்த்தரைச் சரியாய்த் தொழுதுகொள்ளத்தக்கதாக அவர்களை வழிநடத்த வேண்டும் என்று அக்கறைகொண்டவராகவும் தொடர்ந்து காணப்பட்டு, இந்த அசாதாரணமான சம்பவத்தின் பாடங்களை அமைதியாய் ஆராய்ந்துகொண்டிருந்தார். தேவனுடைய பெட்டி ஓபேத் ஏதோமின் வீட்டிலே அவனிடத்தில் மூன்று மாதம் இருக்கையில், கர்த்தர் ஓபேத் ஏதோமின் வீட்டையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார் என்று தாவீதிற்கு அறிவிக்கப்பட்டது(1 நாளாகமம் 13:14). தாவீது பாடத்தினைக் கவனமாய்க் கற்றுக்கொண்டார்; பின்னர் உடனடியாக செயல்பட தீர்மானித்தார் - பெட்டியைப் பிரதான தலைநகரத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்றும், அதற்கு முழுத்தேசத்திலேயே கனத்தில் பிரதானமான இடத்தைக் கொடுக்க வேண்டும் என்றும் ஏற்கெனவே திட்டமிட்டிருந்த தனது ஆதி நோக்கத்தை நடைமுறைப்படுத்த உடனடியாக முற்பட்டார்; ஜனங்களுடைய பிரதிநிதிகள் அனைவரோடும் கூடிக்கொண்டு, இதைத் தேசிய நிகழ்வாக்குவதற்கும், ஆன்மீகத்தின் விஷயத்தில் மாபெரும் தேசளாவிய மறுமலர்ச்சியினைக் கொண்டுவருவதற்கும் உடனடியாக முற்பட்டார். ஆனால் இம்முறை, தெய்வீகப் பிரசன்னத்திற்குரிய அடையாளச் சின்னமானது, தெய்வீக வழிகாட்டுதல்களின்படியே பயபக்தியோடு சுமந்து கொண்டுவரப்படுவதற்குத் தாவீது ஏற்பாடுபண்ணினார்.

அவன் தனக்குத் தாவீதின் நகரத்தில் வீடுகளை உண்டாக்கி, தேவனுடைய பெட்டிக்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தப்படுத்தி, அதற்கு ஒரு கூடாரத்தைப் போட்டான். பிற்பாடு தாவீது: லேவியர் ஒழிய வேறொருவரும் தேவனுடைய பெட்டியை எடுக்கலாகாது. தேவனுடைய பெட்டியை எடுக்கவும், என்றைக்கும்

அவருக்குப் பணிவிடை செய்யவும், அவர்களையே கர்த்தர் தெரிந்துகொண்டார் என்றான். முதலில் நீங்கள் அதைச் சுமக்காதபடியினாலும், நாம் நம்முடைய தேவனாகிய கர்த்தரை நியாயமானபடியே தேடாதேபோனபடியினாலும், அவர் நமக்குள்ளே அடிவிழப்பண்ணினார் என்றான். ஆசாரியரும் லேவியரும் இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தரின் பெட்டியைக் கொண்டுவரத் தங்களைச் சுத்தம்பண்ணிக் கொண்டார்கள். பின்பு லேவி புத்திரர் கர்த்தருடைய வார்த்தையின்படியே, மோசே கற்பித்தப் பிரகாரம் தேவனுடைய பெட்டியை அதன் தண்டுகளினாலே தங்கள் தோள்மேல் எடுத்துக்கொண்டு வந்தார்கள். அப்படியே இஸ்ரயேலனைத்தும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைக் கெம்பீரத்தோடும், எக்காளங்கள், பூரிகைகள் கைத்தாளங்களின் தொனியோடும், தம்புருகளையும் சுரமண்டலங்களையும் வாசிக்கிற சத்தத்தோடும் கொண்டுவந்தார்கள். (1 நாளாகமம் 15:1-2, 13-15, 28)

கர்த்தருடைய பெட்டியைச் சுமந்துபோகிறவர்கள் ஆறு தப்படி நடந்தபோது, மாடுகளையும் கொழுத்த ஆட்டுக்கடாக்களையும் (தாவீது) பலியிட்டான். தாவீது சணல்நூல் ஏபோத்தைத் தரித்துக்கொண்டு, தன் முழுப்பலத்தோடும் கர்த்தருக்கு முன்பாக (சந்தோஷத்தை வெளிப்படுத்தும் விதமாக) நடனம்பண்ணினான். அப்படியே தாவீதும், இஸ்ரயேல் சந்ததியார் அனைவரும் கர்த்தருடைய பெட்டியைக் கெம்பீர சத்தத்தோடும் எக்காள தொனியோடும் கொண்டுவந்தார்கள். (2 சாமுயேல் 6:13-15)

இப்படியாகக் கர்த்தருக்குக் காண்பிக்கப்பட வேண்டிய பயபக்திக்குறித்து இஸ்ரயேலர்களுக்குக் கற்பிக்கப்பட்டிருந்தபோதிலும், இப்பாடம் சுவிசேஷயுகத்தினுடைய சபைக்கும் சரிசமமாகவே பொருந்தும். தேவனுடைய கட்டளைகளில் ஓர் எழுத்தையாகிலும் மாற்றுவது என்பது நமக்கடுத்த காரியமல்ல. விசுவாசிகளின் ஞானஸ்நானம் பற்றின கட்டளையை, குழந்தைகளுக்குரிய தெளிப்பு ஞானஸ்நானமாக மாற்றுவது நமக்கடுத்த காரியமல்ல; கர்த்தருடைய இராப்போஜனத்தின் எளிமையினையும், இதற்கு முன்பு அனுசரிக்கப்பட்ட நிழலான பஸ்கா அனுசரிப்பினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள காலங்கள் பற்றின காரியங்களையும் மாற்றுவது நமக்கடுத்த காரியமல்ல. உலகப்பிரகாரமான மனமுடையவர்களைத் திருப்திப்பண்ணத்தக்கதாக அவரது பரிசுத்தமான பிரமாணங்கள் முன்வைக்கும் நீதியான கோரிக்கைகளின் தீவிரத்தினைக் குறைத்துப்போட முற்படுவதற்கோ அல்லது அவரது பரிசுத்த பிரமாணங்களின் கற்பனைகளையும், அறிவுரைகளையும் புறக்கணிப்பதற்கோ நமக்கு உரிமையில்லை. மனித தத்துவங்களையும், வீணான கற்பனைகளையும் பொருட்படுத்தாமல், தேவனுடைய பிரமாணங்களும், சாட்சியங்களும், நல்லதும், உத்தமுமான இருதயங்களுக்குள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; அவரில் நம்பிக்கை வைத்திருக்கிறவன் பாக்கியவான்; மேலும் இப்படிப்பட்டவனுக்கு, கர்த்தருடைய வார்த்தைகள் கூறுவதாவது: . . . எனும் சொற்கள், எல்லா விஷயங்களிலும் எழும்பக்கூடிய கருத்து முரண்பாடுகளுக்கு முற்றுப்புள்ளியாகக் காணப்படும்.

நம்முடைய ஜீவியங்கள் அநேக முடிச்சுகளுடன் இருக்கையில்,
அவர் வார்த்தைகளைப் பற்றிக்கொள்வோமே.
அப்போது நம் ஜீவியங்கள் முழுவதும் நம் கர்த்தரின்
தித்திப்பினால் பிரகாசிக்குமே!

R3252

# திவ்விய தயவைச் சரியாய் நாடுதல்
## 2 சாமுயேல் 6:1-12

உம்முடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள். - சங்கீதம் 84:4

தாவீது இஸ்ரயேலைக் கைப்பற்றினதன் காரணமாக இல்லாமல், மாறாக இராஜாவின் ஸ்தானத்தில் தான் அமர்த்தப்படுவதற்குரிய கர்த்தருடைய வேளைக்காய்ப் பொறுமையோடு காத்திருந்ததன் காரணமாக, இஸ்ரயேலின் சகல கோத்திரங்கள்மீதும், அவர்களால் விரும்பி தெரிந்துகொள்ளப்பட்ட இராஜாவான பிற்பாடு, தாவீது எருசலேமைக் கைப்பற்றி, அதைத் தன் சாம்ராஜ்யத்தின் தலைநகரமாக்கினார். பின்னர் இஸ்ரயேல் தேசத்தை மீண்டும் படையெடுத்த பெலிஸ்தர்களுடன் யுத்தங்கள் தொடர்ந்தன. இந்த யுத்தங்களில், கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் காரணமாக, இஸ்ரயேலர்கள் வெற்றிக்கண்டார்கள். இம்மாதிரியான சூழ்நிலைகளில் ஏழு வருடங்கள் கடந்துபோயின; இஸ்ரயேல் சாம்ராஜ்யம் அமைதியாய், பிரச்சனைகளற்று காணப்படுகையில், சத்துருக்களினால் தொல்லைப்படுத்த முடியாத நிலை காணப்படுகையில்தான், இக்கட்டுரையின் சம்பவம் நிகழ்கின்றது. இந்த ஒரு காலகட்டத்தில், சுமார் நாற்பத்து நான்கு வயதை அடைந்திருந்த தாவீது, அநேக வருடங்களாக தேசம் ஆன்மீகத்தில் மிகவும் குறைவுபட்டிருப்பதை அடையாளம் கண்டுகொண்டார்; மேலும் இப்பொழுது கோத்திரங்கள் அனைத்தையும் ஒன்றுசேரப்பண்ணினதன்மூ லமாக,க ர்த்தர்த ங்களைஆ சீர்வதித்து,த ங்களுக்குச்ச மாதானத்தைத் தந்துள்ளபடியால், ஜனங்களின் ஆன்மீக உணர்வுகளில் மறுமலர்ச்சியினைக் கொண்டுவருவதற்கு, தன்னால் செய்யமுடிந்ததைச் செய்வதற்குரிய சரியான வேளை வந்துள்ளது என்பதையும் தாவீது அடையாளம் கண்டுகொண்டார். அவருடைய இருதயம் எப்போதுமே கர்த்தருக்கு உண்மையாய்க் காணப்பட்டபடியால், மற்றவர்களும் கர்த்தரைத் தங்கள் வெளிச்சமாகவும், தங்கள் இரட்சிப்பாகவும் பெற்றிருக்கும் நிலைக்குள் முழுமையாய்க் கடந்துவர வேண்டும் என்று வாஞ்சித்தார். இப்படியாகவே கர்த்தரிடம் உண்மையாய் பயபக்தி கொண்டிருப்பவர்களும், அவரில் விசுவாசம்கொண்டிருப்பவர்களுமாகிய அனைவரும் காணப்பட வேண்டும்; இவர்கள் தங்கள் சந்தோஷங்களை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ளவும், கர்த்தரின் சமாதானம் மற்றும் இளைப்பாறுதலுக்குள் மற்றவர்களும் வர உதவவும் வாஞ்சிக்க வேண்டும்.

வனாந்தரத்தில் மோசேயின் கரங்களைக்கொண்டு கர்த்தர் ஏற்படுத்தின ஆசரிப்புக்கூடாரத்தின் பொருட்களில், உடன்படிக்கைப் பெட்டியானது பிரதானமான ஒன்றாக இருந்தது என்பது தெரிகின்றது. யோசுவாவின் நாட்கள் முதற்கொண்டு, ஆசரிப்புக்கூடாரத்தின் ஆராதனை விஷயங்கள் தொடர்ந்து நடைபெற்றதா என்பதுகுறித்து நமக்கு எந்தத் திட்டவட்டமான தகவல்களும் இல்லை. அநேகமாக ஆராதனைகள் ஏறக்குறைய சீராக காணப்பட்டிருக்க வேண்டும். இந்த ஆராதனை தொடர்புடைய விஷயங்களில், பெட்டி முக்கிய மையக்காரியமாகக் காணப்பட்டபடியால், பெட்டி இடம் பெயர்க்கப்படும்போது, ஆசரிப்புக்கூடாரத்தின் மற்ற பணிமுட்டுகளும், பலகைகள், திரைகள், விளக்கு, மேஜை, பீடங்கள் முதலானவைகளும் இடம்பெயர்க்கப்பட வாய்ப்பிருக்கின்றது.

இஸ்ரயேலர் பாலஸ்தீனியாவிற்குள் பிரவேசித்த கொஞ்ச நாட்களிலேயே, யோசுவா எருசலேமின் வடக்கில் இருபது மைல் தொலைதூரத்தில் காணப்பட்ட சீலோவிலே பெட்டியை வைத்தார் (யோசுவா 18:1).

நியாயாதிபதிகளின் காலங்களுடைய முடிவுவரையிலும், சாமுயேல் ஏலியோடு வாழ்ந்துகொண்டிருந்த போதும், பெட்டி அவ்விடத்தில்தான் காணப்பட்டது என்பது 1 சாமுயேல் 1:3-ஆம் வசனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெலிஸ்தர்களுக்கு எதிரான யுத்தத்தில், ஏலியின் குமாரர்கள், பெட்டியைத் தங்களோடு எடுத்துச்சென்று, தங்கள் ஜீவியங்கள் கறைகளுடையதாக இருந்தப்போதிலும், தெய்வீக ஏற்பாடுகளின் மீதான தங்களது விசுவாசத்தினை வெளிப்படுத்தினார்கள்; ஆனால் பெட்டியை இப்படித் தவறாய்ப் பயன்படுத்தினபடியால், அது பெலிஸ்தர்களிடம் பிடிபடும்படிக்குக் கர்த்தர் அனுமதித்தார். எனினும் பெலிஸ்தர்கள் அதைக் கைப்பற்றினபோதிலும், அதனோடுகூடச் சாபமும் வந்ததாகத் தெரிகின்றது. இவர்களுடைய தேவனாகிய தாகோனின் கோவிலில், தாகோன் சிலை, பெட்டிக்கு முன்பு விழுந்து கிடந்தது; மேலும் எந்தெந்தப் பட்டணங்களிளெல்லாம் பெட்டி வைக்கப்பட்டிருந்ததோ, அந்தப்பட்டணத்தின் ஜனங்கள் வாதையினால் வாதிக்கப்பட்டனர். பெட்டியை அப்புறப்படுத்த பெலிஸ்தர்கள் விரும்பி, அதை மாடுகள் பூட்டப்பட்ட வண்டியில் ஏற்றி, இஸ்ரயேலர்கள் இருந்த திசைக்கு நேராக அனுப்பி வைத்தனர். பெட்டி திரும்பி வந்தது முதற்கொண்டு, அது ஆசாரியனாகிய அபினதாப் மற்றும் இவரது குமாரர்களின் பராமரிப்புக்கீழ்க் காணப்பட்டது. இந்தக் குமாரர்களில் ஒருவர்தான் ஊசா ஆவார். பெட்டியானது, பாலை என்றும் அழைக்கப்பட்ட கீரியாத்யாரீம் மற்றும் கிபியா மலையில் காணப்பட்ட அபினதாபின் வீட்டில் எழுபது வருடங்களாகக் காணப்பட்டது.

யூதர்களுடைய எந்த ஓர் ஆன்மீக மறுமலர்ச்சி இயக்கமும், உடன்படிக்கைப் பெட்டியை மையமாகக் கொண்டுதான் செயல்பட வேண்டியது அவசியமாய் இருந்தது; ஏனெனில் பெட்டி கர்த்தருடைய பிரசன்னத்திற்கும், அவரது ஜனங்களென அவர்களுக்கான அவரது இரக்கத்திற்கும், கிருபைக்குமான அடையாளச் சின்னமாகக் காணப்பட்டது. ஆசரிப்புக்கூடாரத்தினுடைய மகா பரிசுத்த ஸ்தலத்தில் பெட்டி காணப்படுகையில், கர்த்தருடைய பிரசன்னத்தை அடையாளப்படுத்தும் ஷெக்கினா மகிமை என்று அழைக்கப்படும் பிரகாசமான ஒளி ஒன்று, கிருபாசனம் என்று அழைக்கப்படும் பொன்னினாலான அதன் மூடியிலுள்ள இரண்டு கேரூபீன்கள் மத்தியில் காணப்பட்டது என்பதை நாம் நினைவுகூருகின்றோம்; ஒரு வருடத்திற்குரிய ஜனங்களுடைய பாவங்களை மூடுவதற்கென்று, ஒவ்வொரு வருடமும் பாவநிவாரண இரத்தமானது அந்த மூடியில் தெளிக்கப்படுவதினால், அது கிருபாசனம் என்று அழைக்கப்பட்டது; மேலும் வருடந்தோறும் தெளிக்கப்படும் இந்த இரத்தமானது, உண்மையான பாவநிவாரணத்தை உண்டுபண்ணுகின்ற கிறிஸ்துவின் இரத்தத்திற்கு நிழலாக இருக்கின்றது. கிருபாசனமாகிய மூடியின்கீழ், பெட்டிக்குள் மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், ஆரோனுடைய துளிர்த்த கோலும், நியாயப்பிரமாணத்தின் இரண்டு கற்பலகைகளும் காணப்பட்டன; இவை சர்வவல்லமையுள்ளவர் தம் ஜனங்களுக்காகப் பண்ணியுள்ள மகிமையான ஏற்பாடுகளையும், வாக்குத்தத்தங்களையும் அடையாளப்படுத்துகின்றன. இவ்விதமாய் நிழல்படுத்தப்பட்டுள்ளவைகளின் நிஜங்களை ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் சுதந்தரித்துள்ளபடியால், தேவனுக்கு நன்றி. கிறிஸ்துவே, உடன்படிக்கைப் பெட்டியாகக் காணப்படுகின்றார். அவரில், நியாயப்பிரமாணம் அதன் முழு நிறைவேறுதலை அடைகின்றது. அவரில், ஆரோனின் கோலினால் அடையாளப்படுத்தப்படும் ஆசாரியத்துவம் காணப்படுகின்றது; இன்னுமாக அவரில்,ப ரலோகம ன்னாஅ ருளப்பட்டுள்ளது.இ வைகள்அ னைத்தும்,க ிருபாசனத்தின்வ ாயிலாக, நம்முடையதாக்கப்பட்டுள்ளது. நம்முடைய பாவங்களுக்கான கிருபாதார பலியாக, அதுவும் நம்முடைய பாவங்களுக்காக மாத்திரமல்லாமல், சர்வலோகத்தின் பாவங்களுக்காகவுமான கிருபாதார பலியாக,

நம்முடைய மீட்பரினால் செலுத்தப்பட்டுள்ள *பாவநிவாரண இரத்தத்தினுடைய புண்ணியத்தின் காரணமாக*, நாம் கிருபாசனத்தை அணுக முடிபவர்களாகவும், அந்தக் கிருபாசனத்தின் முன்பு பிரதான ஆசாரியனுடைய சரீரத்தின் அங்கத்தினர்களென ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாகவும் இருக்கின்றோம்.

தேவனுடைய பிரசன்னத்திற்கு அடையாளமான பெட்டியானது, தேசத்தின் தலைநகரத்தில் காணப்பட வேண்டும் என்றும், அந்நகரத்தை மகாராஜாவின் நகரமாக்க வேண்டும் என்றும் இராஜாவாகிய தாவீது உணர்ந்துகொண்டார். இப்படியாக இஸ்ரயேலரின் மனங்களை, அவர்களுடைய பூமிக்குரிய இராஜாவிடமும், அந்த இராஜாவினுடைய சட்டதிட்டங்களிடமும் திருப்புவது மாத்திரமல்லாமல், தான் பிரதிநிதியாகக் காணப்படும் பரலோக இராஜாவிடமும் திருப்பவேண்டுமென்றும் இராஜாவாகிய தாவீது உணர்ந்துகொண்டார். இதைக் குறிப்பிடத்தக்க நிகழ்வாக மாற்றுவதற்கும், ஒட்டுமொத்த ஜனங்களுடைய ஆன்மீக உணர்வுகளைத் தூண்டுவதற்கும் வேண்டி, ஜனங்கள் அனைவரையும் இக்காரியத்தில் ஓரளவுக்கு ஈடுபடவைக்க வேண்டுமென்று இராஜா உணர்ந்தார்; ஆகையால் அனைத்துத் திசையிலுமிருந்து, ஜனங்களில் பிரதானமான முப்பதாயிரம்பேரை - தேசத்தின் படைசார்ந்த பிரதிநிதிகளை மட்டுமல்லாமல், கோத்திரத் தலைவர்களையும் தாவீது கூடிவரப்பண்ணினார். ஆவிக்குரிய ஊழியங்களை நடத்துவதில் எந்த ஒரு பிரதான பங்கு வகிக்கும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அனைவருக்கும், இங்கு நல்லதொரு பாடம் காணப்படுகின்றது. ஒரு வழிநடத்துபவர், ஒரு பிரதிநிதி, கர்த்தருக்காகவும், சத்தியத்திற்காகவும் ஏதோ சில முக்கியமான பணிகளைச் செய்ய முற்படுவது என்பது போதுமானதாய் இராது. கர்த்தருடைய ஊழியம் தொடர்புடைய எந்த ஒரு முக்கியமான பணிகளிலும் நேரடியாக அல்லது பிரதிநிதியாகப் பங்கெடுப்பதற்கென்று கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் வரவேற்கப்படுவது என்பது எல்லா விதங்களிலும் ஞானமான காரியமாகவும், சிறப்பான காரியமாகவும் காணப்படும். சிறு எண்ணிக்கை கொண்டுள்ள சபையின் காரியங்களிலும்கூட, ஒரு நபரே அனைத்து சொற்பொழிவுகளைப் பண்ணுவதும், வழிநடத்துதல்கள் அனைத்தையும் பண்ணுவதும், ஊழியங்கள் அனைத்தையும் பண்ணுவதும், தீங்கையே உண்டுபண்ணுகின்றதாக இருக்கும். வேதவாக்கியங்களின் வழிகாட்டுதலின்படி ஒவ்வொருவரும் ஊழியத்தில் பங்கெடுக்க முயற்சிப்பதும், இன்னுமாக ஒருவரின் சுபாவ தாலந்துகளுக்கு ஏற்ப மற்றும் தாழ்மையோடும், உண்மையோடும், உதவும்தன்மையோடும் காணப்படுவதற்கு ஏற்ப இப்படி ஊழியத்தில் பங்கெடுக்க முயற்சி செய்யும்படிக்கு ஒவ்வொருவரும் ஊக்குவிக்கப்படுவதும் ஞானமான மற்றும் சிறப்பான காரியமாகக் காணப்படும்.

கிரீயாத்யாரீமிலிருந்து, எருசலேமை நோக்கி, பெட்டி கொண்டு செல்லப்பட்டபோது காணப்பட்ட பரிசுத்தமான சந்தோஷமும், களிப்பும் பெட்டிஇருந்த இரதம் குலுங்கி இடறினபோது, திடீரெனக் குறுக்கிடப்பட்டது; ஊசாவின் பொறுப்பில் அந்த இரதம் காணப்பட்டது. பெட்டி விழுமென அச்சம் ஏற்பட்டது. பெட்டியைப் பிடிப்பதற்கென்று ஊசா தன் கையை நீட்டினபோது, இவர் தன் தவறுக்காக அடிக்கப்பட்டு, செத்துப்போனார். சந்தோஷத்திற்குப்பதிலாக அச்சம் பரவியது. கர்த்தருக்குக் கனத்தைச் சாற்றும்படிக்குக் கூடிவந்திருந்த முப்பதாயிரம்பேரும், தாவீதும் திகிலடைந்தனர். பயம் அவர்கள் அனைவரையும் ஆட்கொண்டது; இச்சம்பவம், பெட்டியை எருசலேமுக்குக் கொண்டுவருவது தொடர்புடைய விஷயத்தில் தெய்வீக அதிருப்தியினை வெளிப்படுத்தும் அடையாளமாக இருக்கலாம் அல்லது பெட்டி தங்கள் மத்தியில் காணப்பட்டால் தனக்கும், நகரத்திற்கும் பேரிழப்பின் அனுபவங்கள் அதிகரிக்கலாமெனத் தாவீது உடனடியாக நிச்சயித்துக்கொண்டார். அனைவரும் அச்சத்தில் காணப்பட்டனர்; பரிசுத்தமான பெட்டியை

இப்பொழுது என்ன செய்வது என்பதே அப்போது கேள்வியாகக் காணப்பட்டது. லேவி கோத்திரத்திலுள்ள தைரியமுள்ள ஓபேத் ஏதோம் எனும் மனுஷன், யேகோவா தேவனின் பிரசன்னத்திற்குரிய அடையாளச் சின்னத்தினை தன் வீட்டிற்குள் ஏற்றுக்கொள்ள முன்வந்தார்; அநேகமாகப் பெட்டியானது இவரது வீட்டினுடைய முற்றத்தில் அல்லது பொருத்தமான ஏதோ ஓர் இடத்தில், கூடாரம் முதலானவைகளோடுகூட நிறுவப்பட்டு வைக்கப்பட்டிருந்திருக்க வேண்டும்.

கர்த்தர் ஊசாவை அடித்ததினிமித்தம், தாவீது விசனப்பட்டார் - தாவீதைக்குறித்து நாம் அறிந்திருக்கிறவைகளை வைத்துப்பார்க்கும்போது, அவர் கர்த்தர்மேல் விசனப்பட்டிருந்திருக்கமாட்டார் என்பதில் நமக்கு நிச்சயமே; ஏனெனில் தாவீது கர்த்தருக்காகக் கொண்டிருக்கும் பயபக்தியும், கர்த்தருடைய நீதியான நடக்கைகள்மீதுள்ள தாவீதின் நம்பிக்கையும், இவரது எழுத்துகளில் எங்கும் தெளிவாய் வெளிப்படுகின்றது. ஆகையால் பெட்டியை எருசலேமுக்குக் கொண்டுவருதல்பற்றின தனது முந்தின தீர்மானத்தைக்குறித்தே தாவீது விசனப்பட்டார் என்பதே அந்த வசனத்தினுடைய அர்த்தம் என்று நாம் புரிந்துகொள்ளலாம்; பெட்டியை இடம்பெயர்த்துக்கொண்டுச் செல்லும் பொறுப்பைப் பெற்றிருந்த ஆசாரியர்களும், தானும் சில விஷயங்களைக் கவனிக்கத் தவறியதன் காரணமாக தாவீது விசனமடைந்தார்; அதாவது கர்த்தருடைய பிரசன்னத்திற்குரிய இந்தப் புனிதமான அடையாளச் சின்னத்தை இடம்பெயர்க்கும்போது, அது எவ்விதத்தில் செய்யப்பட வேண்டும் என்பதுபற்றி நேரடியாகவும், தெளிவாகவும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளுக்குத் தாங்கள் கீழ்ப்படியாமல் போனதினிமித்தம், ஆன்மீக மறுமலர்ச்சியினைக் கொண்டுவருவதற்கும், கர்த்தரைக் கனப்படுத்துவதற்குமான தனது நல்நோக்கங்கள் தோல்வியைத் தழுவினதன் காரணமாகவே தாவீது விசனமடைந்தார். எண்ணாகமம் 4:15; 7:9-ஆம் வசனங்களைப் பார்க்கவும்; இங்குப் பெட்டியானது, இடம்பெயர்க்கப்படும்போது, பயன்படுத்துவதற்கென்று ஏற்பாடுபண்ணப்பட்டிருந்த சில வளையங்களில் தண்டு செலுத்தப்பட்டு, பெட்டி லேவியர்களின் தோள்களில் சுமந்துசெல்லப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவே தாவீதின் மனநிலையாகக் காணப்பட்டது என்பது, 9-ஆம் வசனத்தை வாசிக்கும்போது தெளிவாகுகின்றது: தாவீது அன்றைய தினம் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தருடைய பெட்டி என்னிடத்தில் வருவது எப்படி என்று சொன்னார் (2 சாமுயேல் 6:9). தாவீது மாத்திரமல்ல, இஸ்ரயேலின் அந்த முப்பதாயிரம் பிரதிநிதிகளும், தங்கள் வீடுகளுக்குக் கலைந்து சென்றபோது, அவர்கள் அடைந்த சோர்வையும்/ஏமாற்றத்தையும், துக்கத்தையும் நம்மால் கற்பனைபண்ணிப்பார்க்க முடிகின்றது; இவர்கள் தங்கள் நல் நோக்கங்களானது, கர்த்தரால் முழுமையாய் அங்கீகரிக்கப்படவில்லை என்பதினால் சோர்வடைந்துபோனார்கள்.

கர்த்தர் ஊசாவின்மேல் கோபம் மூண்டவராகி எனும் வார்த்தைகளானது, கர்த்தர் சார்பிலான மூர்க்கத்தனமான கோபத்தைச் சுட்டிக்காட்டுவதாகப் புரிந்துகொள்ளப்படக்கூடாது; எனினும் கர்த்தர் ஊசாவின் செய்கையில் அதிருப்தி அடைந்துள்ளார் என்பதையும், இவரது அலட்சியத்திற்கு இவரைத் தண்டித்தது சரியே என்று கர்த்தர் எண்ணினார் என்பதையும் மனிதன் புரிந்துகொள்ளவதற்கு ஏதுவான வார்த்தைகளில் இவ்வுண்மைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன என்பது உறுதியே. நீண்டகாலம் பெட்டி ஊசாவுக்கு அருகாமையில் காணப்பட்டபடியால், ஊசாவிற்குள் ஒரு பரிச்சயமான உணர்வு காணப்பட்டது; இன்னுமாக அது தேவனுக்கு அடையாளம் என்று அதற்கிருந்த மரியாதையும் இவரிடம் குறைந்துபோனது. போகும் பாதையில், சமஸ்த இஸ்ரயேலின் பிரதிநிதிகள் அனைவரின் முன்பாக, இவர் வெளிப்படையாக மீறின காரியம் என்பது, பெட்டி மற்றும் ஆசரிப்புக்கூடாரத்தின் பல்வேறு பரிசுத்த பணிமுட்டுகள்

தொடர்புடைய தெய்வீகக் கட்டளைகளையும், எச்சரிப்புகளையும் அவமதிப்பதாக இருந்தது. கர்த்தர் தம்முடைய ஜனங்களின் நலனுக்காகவே கோபங்கொண்டார்; இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, கூடிவந்திருந்த இஸ்ரயேலின் பிரதிநிதிகள் மூலம் இஸ்ரயேலர்கள் அனைவருக்கும், கர்த்தருக்காகவும், அவரது கட்டளைகளின் ஒவ்வொரு விவரங்களுக்காகவும் காண்பிக்கப்பட வேண்டிய பயபக்திக்குறித்த மாபெரும் பாடத்தினைக் கர்த்தர் கற்பித்துக்கொடுத்தார்.

கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பமாகக் காணப்படுகின்றது. பயபக்தியின் இந்தப் பிரதான பாடத்தைக் கற்றுக்கொள்ளாத ஒருவன், கர்த்தரைத் தொழுதுகொள்ளும் விஷயத்திலும், ஊழியஞ்செய்யும் விஷயத்திலும் சரியானதொரு துவக்கத்தினைப் பெற்றிராதவனாகவே காணப்படுவான். அவன் இந்த ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ளாததுவரையிலும், கர்த்தரைப் பிரியப்படுத்துகின்ற யாதொன்றையும் செய்ய முடியாதவனாய் இருப்பான் - கர்த்தருடைய ஊழியத்தில் உதவியாக இருப்பதற்குப்பதிலாக, இடறலின் கல்லாகவே காணப்படுவான். கர்த்தருக்கு அர்ப்பணம்பண்ணியுள்ள ஜனங்கள் - அதாவது பரிசுத்தமானவைகளைக் கையாளுவதற்குச் சிலாக்கியம் பெற்றிருப்பவர்கள் - இயேசுவின் இரத்தத்தின் வாயிலாக மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்குச் சிலாக்கியம் பெற்றிருப்பவர்கள் - ஜெபத்தில் பரலோக கிருபையின் சிங்காசனத்தை அணுகுபவர்கள், கர்த்தரை அணுகும்போதோ அல்லது அவருக்காக ஏதேனும் ஊழியங்களில் ஈடுபடும்போதோ, பயபக்தியோடு காணப்படுவதற்குரிய அவசியத்தினை எப்போதும் நினைவில்வைத்துக்கொள்ள வேண்டும். இத்தகையவர்கள் அனைவரும் இந்த ஒரு பாடத்திலிருந்து, எவ்வாறு அவர்கள் பரிசுத்த காரியங்களைக் கையாள வேண்டும் என்றும், எப்படி இதைத் தெய்வீக வழிகாட்டுதலின்படி செய்ய வேண்டும் என்றும், வேறு விதங்களில் செய்யக்கூடாது என்றும் கற்றுக்கொள்ள வேண்டும். தேவதூதர்கள்கூடச் சஞ்சரிக்க நடுங்கும் இடங்களுக்குப் பாய்ந்து செல்லும் இவ்வியல்பு, சிலரிடம் காணப்படுவதைக் கவிஞன் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய பயபக்தியற்ற தன்மை சிலசமயங்களில் மிகத் தெளிவாக ஜெபங்களில் வெளிப்படுகின்றது; ஜெபத்தில் தொழுதுகொள்ளுபவனாகவும், பெற்றுக்கொண்ட இரக்கங்களுக்காக நன்றியினால் பொங்கி வழிபவனாகவும் காணப்பட வேண்டியவன், சிலசமயங்களில் மகா இராஜாதி இராஜனுக்கு, அவரது வேலைகளை எப்படி நிர்வகிக்க வேண்டுமென்று, எல்லாக் காரியங்களிலும் கட்டளையிடுகிறவனாகச் செயல்படுகின்றான். இத்தகையவர்களைக் கர்த்தர் இக்காலங்களில் அடித்து, சங்கரித்து, இவர்களைப் பயபக்தியின்மைக்கு வெளிப்படையான உதாரணங்களாக எல்லார் முன்பும் கர்த்தர் காண்பிப்பதில்லை; எனினும் இவர்கள் ஏறெடுத்த இந்த விண்ணப்பங்களைக் கர்த்தர் கருத்தில் எடுத்துக்கொள்ளமாட்டார் என்று அப்போஸ்தலர் கூறியுள்ளதில், நமக்கும் நிச்சயமே (யாக்கோபு 1:7). இது விஷயத்தில் நமக்கான பாடம் என்னவெனில், பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலே முக்கியம் என்பதேயாகும். பெட்டி நான்கு லேவியர்களின் தோள்களில் சுமந்து செல்லப்படும் காரியம் என்பது, இரதத்தில் கொண்டுசெல்லப்படுவதுபோன்று கம்பீரமாக இருக்காது என்றபோதிலும், அப்படிச் செய்வது என்பது கர்த்தருக்கு மிகவும் பிரியமானதாகக் காணப்பட்டிருந்திருக்கும்; ஏனெனில் தோளில் சுமந்துசெல்வது என்பது, அவரது கட்டளையின்படி செய்வதாகக் காணப்படும். இந்தப் பாடத்தினை நாம் கவனமாய் எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய சித்தத்தைச் செய்ய மாத்திரம் நாம் வாஞ்சிக்காமல், அதை அவரது வழியில் செய்வதற்கும், இது விஷயத்தில் மிகுந்த கவனம் கொடுப்பதற்கும், இதற்காக அவரது வார்த்தைகளுக்குச் செவிகொடுப்பதற்கும் நாம் வாஞ்சிக்கத்தக்கதாகப் பார்த்துக்கொள்வோமாக;

தீர்க்கதரிசி தெரிவித்துள்ளதுபோன்று, அவரது வார்த்தைகளுக்கு நடுங்குகிறவர்கள் மத்தியில் ஒருவராக நாம் காணப்படுவோமாக; அதாவது ஒவ்வொரு காரியத்திலும் கர்த்தருடைய வார்த்தைகளை மிகக் கவனமாய்க் கவனிப்பதற்கும், அதை உன்னிப்பாய்ப் பின்பற்றுவதற்கும் நாடுபவர்களில் ஒருவராக நாம் காணப்படுவோமாக. என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (மல்கியா 3:17)

மரணம் என்பது, ஜீவன் இல்லாதுபோகும் நிலை என்றும், மேம்பட்ட ஜீவநிலைக்குள் பிரவேசிக்கும் வாசல் அல்ல என்றுமுள்ள வேதாகமப் போதனையை உணர்ந்துகொள்பவர்கள் - ஊசாவின் நடக்கையின் நிமித்தம், இவரைக் கர்த்தர் ஜனங்களுக்கு உதாரணமாகப் பயன்படுத்தியதிலுள்ள நியாயத்தைத் தெளிவாய்ப் புரிந்துகொள்வார்கள்; பயபக்தி தொடர்பாக, ஜனங்கள் அனைவருக்கும் இவரைப் பயன்படுத்தி கர்த்தர் கொடுத்த அறிவுரையையும் தெளிவாய்ப் புரிந்துகொள்வார்கள்; அதேசமயம் ஊசாவின் எதிர்கால நித்திய வாழ்க்கைக்கு எந்தப் பாதகமும் பண்ணப்படவில்லை என்பதையும் தெளிவாய்ப் புரிந்துகொள்வார்கள். மீட்கும் விலை கொடுக்கப்படும் காலங்களுக்கு முன்னதாகவும், நித்தியஜீவனுக்குரிய எந்த ஒரு வாசலும் திறக்கப்படுவதற்கு முன்னதாகவும் ஊசா வாழ்ந்தவராவார். நமது கர்த்தராம் இயேசு தம் ஜீவனை, மீட்கும்பொருளாக மனித குடும்பத்திற்குக் கொடுத்தார்; அந்த மனித குடும்பத்தில் ஊசா ஓர் அங்கத்தினன் ஆவார். ஆகையால் இறுதியில் மனுஷகுமாரனுடைய சத்தத்தைக்கேட்டு, மரண நித்திரையினின்று வெளிவரும் மனிதகுடும்பத்தில் ஊசா ஓர் அங்கத்தினனாகக் காணப்படுவார்; தேவன் நம்முடைய முழுச்சந்ததிக்கும் கிருபை பாராட்டியுள்ளார் என்பதற்கும், விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை மீட்டுள்ளார் என்பதற்குமுரிய சாட்சி ஏற்றகாலங்களில் விளங்கும் (1 தீமோத்தேயு 2:4-6). உயிர்த்தெழுதல் எனும் காரியத்தைப் புறக்கணிக்கின்றதும், உயிர்த்தெழுவதற்கென்று மரித்த நிலையில் யாருமில்லை, மாறாக மரித்தவர்கள் (முன்பில்லாதளவுக்கு) இப்பொழுது ஜீவனுடையவர்களாக இருக்கின்றனர் எனத் தெரிவிக்கின்றதுமான தவறுதலான கருத்துகளை நம்புகிறவர்கள், ஊசா உடனடியாக நித்திய சித்திரவதையை அனுபவிக்கும்படிக்குப் பிசாசின் கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டார் என்று எண்ணுகின்றனர். இத்தகையவர்களுக்கே இந்தச் சம்பவத்தின் பதிவானது குழப்பத்தைக் கொடுக்கின்றதாகவும், அநியாயமான கடுமையானதொரு நடவடிக்கையாகவும் தோன்றலாம். தேவனுடைய குணலட்சணம் மற்றும் திட்டத்தின்மீது இப்பொழுது தெளிவாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் வெளிச்சத்திற்காக தேவனுக்கு நன்றி!

பெட்டி ஓபேத் ஏதோமின் வீட்டில் மூன்று மாத காலங்கள் இருக்கையில், கர்த்தருடைய ஆசீர்வாதம் விசேஷமாய் அந்தக் குடும்பத்தின்மீது காணப்பட்டது; அதுவும் அயலார் புரிந்துகொள்ளும் அளவுக்கு ஆசீர்வாதம் அக்குடும்பத்தின்மீது காணப்பட்டது; இறுதியில் காரியம் இராஜாவின் கவனத்திற்கும் கொண்டுசெல்லப்பட்டது. ஓபேத் ஏதோமின் குணலட்சணத்தில் காணப்பட்ட ஏதோ சில காரியங்களும், கர்த்தருக்குப் பயபக்தியோடிருந்த அவரது குடும்பத்தின் நடக்கையும், கர்த்தரிலுள்ள இவரது விசுவாசமும், பெட்டி இவரிடத்தில் இருந்ததின் நிமித்தம், இவருக்குக் கடந்துவந்த ஆசீர்வாதங்களின் விஷயத்தில், ஏதோ ஒரு பங்கு வகிக்கின்றது என்று அனுமானிப்பது நியாயமற்றதல்ல என்று நாங்கள் எண்ணுகின்றோம்; ஏனெனில் எழுபது வருடங்களாகப் பெட்டி, அபினதாபின் வீட்டிலிருந்தபோது, அபினதாபின் வீட்டார்மீது விசேஷித்த ஆசீர்வாதங்கள் காணப்பட்டதாக நமக்கு எந்தப் பதிவுகளும் கொடுக்கப்படவில்லை. இதிலிருந்து ஆவிக்குரிய இஸ்ரயேலருக்குப் பொருந்தும் பாடம் ஒன்றினை நாம் எடுத்துக்கொள்ளலாம். மாம்சீக

இஸ்ரயேலருக்குப் பெட்டி கர்த்தரை அடையாளப்படுத்தினது போலவே, சில விதங்களில் நமக்கும் வேதம் கர்த்தருக்கு அடையாளமாகக் காணப்படுகின்றது. நம்முடைய கேள்விகளுக்கு விடையறிய நாம் வேதாகமத்திடமே செல்கின்றோம். நம்முடைய ஆத்துமாக்களுக்குச் சமாதானத்தைக்கூறும் கர்த்தருடைய செய்திகளும், பாவங்களுக்குரிய மன்னிப்பு முதலானவைகளைக் கூறும் கர்த்தருடைய செய்திகளும் வேதாகமத்திலிருந்து கடந்துவருவதை நாம் கேட்கின்றோம். கிறிஸ்தவ மண்டலத்திலுள்ள அநேக இல்லங்களில் எழுபது வருடங்களுக்குமேலாக, அந்த இல்லங்களுக்கு எந்த ஒரு விசேஷித்த ஆசீர்வாதங்களைக் கொண்டுவராத நிலையில், வேதாகமம் அவ்வில்லங்களில் காணப்பட்டு வருகின்றன; எனினும் சிலருக்கு, ஒரு சில மாதங்களிலேயே அது விலையேறப்பெற்ற கிருபைகளைக் கொண்டுவந்துள்ளது. இங்கு என்ன வித்தியாசம் காணப்படுகின்றது? இக்காரியம், இஸ்ரயேலன் ஒருவனுடைய உண்மைத்தன்மையை மிகவும் சார்ந்துள்ளது என்று நாங்கள் பதிலளிக்கின்றோம்; இன்னுமாக கர்த்தருக்காகவும், அவரது வார்த்தைகளுக்காகவும் அவன் கொண்டிருக்கும் பயபக்தியின் அளவையும், தன் ஜீவியத்தின் சகல காரியங்களிலும், தன் வீட்டின் சகல காரியங்களிலும் அந்த (அவருடைய) வார்த்தைகளில், ஆலோசனை தேடுவதில் அவன் கொண்டிருக்கும் ஜாக்கிரதையையும் மிகவும் சார்ந்துள்ளது என்றும் நாங்கள் பதிலளிக்கின்றோம். கர்த்தருடைய வார்த்தைகளாகிய ஆசீர்வாதங்களைப் பெற்றிருப்பவர்கள், அதிலும் விசேஷமாக ஆயிர வருட காலையினுடைய விடியலில், வெளிச்சத்தை வேதாகமத்தினுடைய பக்கங்களின்மீது பெற்றிருப்பவர்கள், ஒருவேளை இதனிடமிருந்து தங்கள் சொந்த இருதயத்திற்குள் எந்த மாபெரும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளவில்லையெனில், சமாதானம், சந்தோஷம், ஆறுதல், தைரியம், பெலன் போன்றவைகளைப் பெற்றுக்கொள்ளவில்லையெனில், இன்னுமாகத் தங்கள் வீட்டாரும் இவைகளைப் பெற்றுக்கொள்ளவில்லையெனில், இத்தகைய நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போனதற்கு, தாங்கள் எந்தளவிற்குப் பொறுப்பாளிகளாக இருக்கின்றனர் என்று தங்களிடமே கேட்டுக்கொள்வது நலம்.

ஓபேத் ஏதோமின் வீட்டார்மீது கர்த்தருடைய ஆசீர்வாதம் காணப்படுகின்றது என்று கேள்விப்பட்டபோது, இராஜாவாகிய தாவீது தைரியமடைந்தார்; இன்னுமாக ஊசா மற்றும் ஓபேத் ஏதோமின் வேறுபட்ட அனுபவங்களானது, யார் கர்த்தருடைய சித்தத்தை அறியவும், அதைச் செய்யவும் நாடுகின்றார்களோ, அவர்கள் கர்த்தருக்கு நெருக்கமாய்க் காணப்படுவதற்கேற்ப ஆசீர்வாதம் ஒன்றைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும், அஜாக்கிரதையுள்ளவர்களும், பயபக்தியற்றவர்களும் பயத்திலேயே காணப்பட வேண்டியிருக்கும் என்றுமுள்ள பாடங்களைக் கற்றுக்கொடுப்பதாகத் தாவீது உணர்ந்துகொண்டார். மீண்டுமாக இராஜா தேசத்தின் பிரதிநிதிகளை, அனைத்துத் திசைகளிலிருந்தும் கூடிவரப்பண்ணினார்; கோத்திரத்தின் பிரதான தலைவர்கள், படைகளிலுள்ள பிரதான பிரதிநிதிகள் முதலானவர்களைக் கூடிவரப்பண்ணினார்; அநேகமாக பெட்டியை எருசலேமிற்குக் கொண்டுவரும் இந்நாளானது, தாவீதின் முழு வாழ்க்கையிலேயே மிகவும் சந்தோஷகரமான மற்றும் மிகவும் குறிப்பிடத்தக்க நாளாகக் காணப்பட்டது. இதைக் குறித்த பதிவுகளை, 1 நாளாகமம் 15,16-ஆம் அதிகாரத்தில் பார்க்கவும். இந்த ஒரு நிகழ்வின்போது, தெய்வீக வழிகாட்டுதலின்படி செய்வதற்குக் கவனம்செலுத்தப்பட்டது; பெட்டி லேவியர்களின் தோளில் சுமந்துசெல்லப்பட்டது; அடிக்கடி நிறுத்தப்பட்டு, கர்த்தருக்குப் பலிகள் ஏறெடுக்கப்பட்டன.

ஒட்டுமொத்தமாக காரியங்களைப் பார்க்கும்போது, இக்காரியத்தைக் கர்த்தர் கையாண்ட காரியமானது, தாவீது மற்றும் இஸ்ரயேலர் அனைவருக்கும் ஒரு மாபெரும் பாடத்தைக் கற்றுக்கொடுத்தது;

மேலும் இது ஒட்டுமொத்த தேசத்திற்கும் மிகவும் அனுகூலமாகக் காணப்பட்டது. இப்படியாகவே தம்முடையவர்களாய் இருப்பவர்களுக்குக் கர்த்தர் அவ்வப்போது கொடுக்கும் நீதியின் சீர்த்திருத்தல்கள் அனைத்தின் விஷயத்திலும் காணப்படுகின்றது; இவைகளை அவர்கள் சரியாய் உள்வாங்கிக் கொள்வார்களானால், அது நீதியின் சமாதான கனிகளையும், பயபக்தியினையும், கீழ்ப்படிதலையும் கொண்டுவரும்.

R4258

## பெட்டியை எருசலேமுக்குக் கொண்டுவருதல்

### 2 சாமுயேல் 6:1-12

அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசியுங்கள்.
- சங்கீதம் 100:4

இஸ்ரயேலருடனான தேவனுடைய உடன்படிக்கைக்கு அடிப்படையாகக் காணப்படும் நியாயப்பிரமாண கற்பலகைகளையும், ஆரோனுடைய துளிர்த்த கோலையும், மன்னா வைக்கப்பட்டிருந்த பொற்பாத்திரத்தையும் பெற்றிருந்த உடன்படிக்கைப் பெட்டியானது, நிழலான இஸ்ரயேலின் பயபக்திக்குரிய அடையாளச் சின்னங்களின் பரிசுத்தமான பணிமுட்டுகளில் மிகவும் பரிசுத்தமான ஒன்றாகும். இதனை மூடியிருந்த பொன்னினாலான மூடியில், இரண்டு கேரூபீன்கள் காணப்பட்டன; இது கிருபாசனமாய் இருந்தது; இது தேவனும், ஆசாரியனும் சந்திக்கும் இடமாகும்; தேவனுக்கும் இஸ்ரயேல் ஜனங்களுக்கும் மத்தியஸ்தராக ஆசாரியன் செயல்படுகின்றார். ஆசரிப்புக்கூடாரத்தில் ஷெக்கினா மகிமை என்று அழைக்கப்படும் அற்புதகரமான ஒளி, இரண்டு கேருபீன்கள் மத்தியில், கிருபாசனத்தின்மீது காணப்படுவதின்மூலம் திவ்விய பிரசன்னம் வெளிப்பட்டது. நம்முடைய பாடத்தின் சம்பவம் நடைபெறுவதற்கு எழுபது ஆண்டுகளுக்கு முன்பு, பெட்டியானது அலட்சியப்படுத்தப்பட்டது; இன்னுமாகத் தேசத்தின் ஆன்மீகக் காரியங்களும்கூட மிகவும் அலட்சியப்படுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டது; எனினும் தனிமனிதர்கள் விஷயத்தில், அவர்களின் பக்தி முழுமையாய் அற்றுப்போகவில்லை; உதாரணத்திற்குத் தாவீதைப் பார்க்கும்போது, அவர் எப்போதும் கர்த்தரை சார்ந்திருப்பதையும், கர்த்தரிடம் வேண்டிக்கொண்டிருப்பதையும் நாம் கவனிக்கின்றோம்.

சாமுயேல் சிறுவனாகவும், ஏலி பிரதான ஆசாரியனாகவும் காணப்பட்டபோது, பெட்டி சீலோவிலுள்ள கர்த்தருடைய கூடாரத்தில் காணப்பட்டது என்பது நமக்கு ஞாபகம் இருக்கின்றது. ஏலி வயது சென்றவராகவும், சாமுயேல் வளர்ந்தவராகவும் காணப்படுகையில், பெலிஸ்தர்களுடனான யுத்தத்தில், இகழ்ச்சிக்குரியவர்களாவும், தன்னலம் நாடுபவர்களாகவும், பேராசைப் பிடித்தவர்களாகவும் காணப்பட்ட ஏலியின் குமாரர்கள், பெட்டியை மந்திரகவசம் அல்லது தாயத்துபோன்று யுத்தத்திற்கு எடுத்துச் சென்றார்கள்; கர்த்தர் பெட்டியைப் பாதுகாப்பார் என்றும், இப்படியாகப் பெட்டி இஸ்ரயேல் சேனைகளோடு இருந்தால், இது தங்களுக்கு வெற்றியைத் தரும் என்றும் இவர்கள் நம்பினார்கள். ஏலியினுடைய குமாரர்களின் அக்கிரமங்கள் அதன் முழு நிறைவை அடைந்தது; மேலும் இவர்கள் யுத்தத்தில் வீழ்ச்சியடைந்து சாகவேண்டும் என்றும், பெட்டி பெலிஸ்தர்களினால் கைப்பற்றப்பட வேண்டும் என்றும், பெருந்துன்பத்தின் செய்தியைக் கேட்ட மாத்திரத்தில் ஏலி, இருதய செயலிழப்பினால் மரித்துப்போக வேண்டும் என்றும், நியாயாதிபதி மற்றும் தீர்க்கத்தரிசி மற்றும் கர்த்தருடைய ஆசாரியன் எனும் ஸ்தானங்களைச் சாமுயேல் எடுக்க வேண்டும் என்றும் தேவன் சித்தம் கொண்டிருந்தார்.

பெட்டி பெலிஸ்தர்களோடு இருந்தபோது, அது அவர்களுக்கு எந்த ஆசீர்வாதத்தையும் கொண்டுவராமல், அதற்குப்பதிலாக நோய், பிரச்சனை முதலானவைகளை அல்லது சிலர் சொல்வது போன்று துரதிர்ஷ்டத்தையே கொண்டுவந்தது என்பதும் நினைவிற்கு வருகின்றது. இப்படியாகப் பெட்டி பெலிஸ்தரின் ஒரு பட்டணத்திலிருந்து, இன்னொரு பெலிஸ்திய பட்டணத்திற்கு இடமாற்றம் பண்ணப்பட்டுக் கொண்டேயிருந்தது; ஒவ்வொரு பட்டணத்தாரும், அதைத் தங்கள் பட்டணத்திலிருந்து வெளியேற்ற விருப்பமாயிருந்தார்கள்; இறுதியில் அதை ஒரு வண்டியில் ஏற்றி, அதை இஸ்ரயேல் தேசத்தை நோக்கி, கிழக்குப் பக்கமாக அனுப்பிவைத்தார்கள். பெட்டி ஆசாரியனாகிய அபினதாபினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இவரது வீட்டில் வைக்கப்பட்டிருந்தது. இங்குப் பெட்டியானது பல வருடங்களாக, இப்பாடத்தின் சம்பவம் நடைபெற்ற காலம்வரை, அதாவது தாவீது இஸ்ரயேலின் இராஜாவாகியிருந்த காலம்வரை காணப்பட்டது.

## ஆவியிலே அனலாயிருங்கள்

நாம் ஏற்கெனவே பார்த்திருக்கின்றதுபோல, இராஜாவாகிய தாவீது மிகவும் ஆழமான ஆன்மீக சுபாவத்தினை உடையவராய் இருந்தார்; இவரது சித்தம்/நோக்கம் சிறு வயது முதலே கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணம்பண்ணினதாகக் காணப்பட்டது. தேவன்தான் இஸ்ரயேலின் உண்மையான இராஜா என்றும், தான் தேவனுடைய பிரதிநிதி மாத்திரமே என்றும் உணர்ந்த தாவீது, தேவன் மோசே மூலம் ஏற்படுத்தியிருந்த ஆசரிப்புக்கூடாரத்தையும், அதன் வழிபாடுகளையும் மீண்டும் தொடங்கி வைப்பதன் வாயிலாக தெய்வீகச் சித்தத்தையும், அவரது ஏற்பாடுகளையும் நிறைவேற்ற நாடினார். இதற்காக அனுப்பிவைக்கப்பட்ட இராஜாவின் கட்டளை கடந்துசென்று, யேகோவா தேவனைப் பகிரங்கமாய் ஆராதனை செய்யும் காரியத்தை மீண்டும் தொடங்கி வைப்பதற்காக, தேசத்தினுடைய பல்வேறு பாகங்களிலிருந்து மதப்பற்றுள்ள ஜனங்களும், கோத்திர பிரபுக்களும், ஆசாரியர்களும், லேவியர்களும் ஒன்றுகூடிவர அழைப்பு விடுத்தது. முப்பதாயிரம் புருஷர்கள் ஒன்றுகூடி வந்துள்ளதை வைத்து, அந்த இராஜ கட்டளையின் தீவிரத்தை நம்மால் நிதானித்துக்கொள்ள முடிகின்றது. சிலர் இராஜாவின் நோக்கங்களைப்பற்றி எதிர்ப்பு தெரிவித்து, தனது ஆன்மீக இயல்புகள் மூலமாகவும், பூர்வ வழக்கங்களைப் புத்துயிர் பெறச்செய்வதன் மூலமாகவும் ஜனங்களைத் தன் பிணைப்பிற்குள்ளாக வைத்துக் கொள்வதற்கென்று, இவை இராஜாவின் அரசாட்சிக் கலையின்/யுக்தியின் ஒரு நடவடிக்கை மாத்திரமே என்று கூற முற்படுவார்களானால், அது எங்களுக்கு ஒரு பொருட்டல்ல. ஒருவேளை அது தாவீது சார்பிலுள்ள ஓர் அரசாட்சிக் கலையாக மாத்திரம் இருக்கும் என்றாலும், அது ஜனங்களின் விஷயத்திலும், தாவீதின் இராஜ்யத்தை ஒன்றுசேர்க்கும் மற்றும் ஸ்திரப்படுத்தும் விஷயத்திலும் ஒரு நல்ல அரசாட்சிக் கலையாக/யுக்தியாக, ஞானமுள்ள யுக்தியாக, உதவிகரமான யுக்தியாகவே காணப்பட்டது. ஒருவர் ஆன்மீக பற்றுள்ளவராய் இருக்க வேண்டுமெனில், அவர் ஜனங்களுக்கு நன்மைப்பயக்கும் இம்மாதிரியான காரியங்களையெல்லாம் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் காணப்படுகிறதில்லை; சிலர் நோக்கங்களை, எதிர்த்து பேசலாம். தீங்கு நினையாத அன்பை நாம் தாவீதின்மீது காண்பிக்க வேண்டும்; மேலும் மோசே மூலமாக வழங்கப்பட்ட தெய்வீகக் கட்டளைகளை நிறைவேற்றுவதற்காக அழைப்பு விடுக்கும் நல்நோக்கங்களைப் பெற்றிருந்ததற்காக இராஜா பாராட்டப்படவே வேண்டும்.

கர்த்தருடைய ஜனங்களின் மத்தியில், யார் ஜீவியத்தின் அனைத்துக் காரியங்களிலும் அவருடைய வழிநடத்துதலைத் தேடக் கற்றிருக்கின்றார்களோ, அவர்கள் தேவன் தம் ஜனமாகிய இஸ்ரயேலின் காரியங்களைத் தாவீதின் கரங்களில் விட்டுவிடவில்லை என்பதிலும், அந்தத் தெரிந்துகொள்ளப்பட்ட மற்றும்

உடன்படிக்கைபண்ணின ஜனங்களுடைய காரியங்கள் அனைத்திலும் கர்த்தர் தாமே இராஜாவும், தலைவராகவும்/இயக்குநராகவும் காணப்பட்டார் என்பதிலும் நம்பிக்கைக்கொள்வார்கள். ஆகையால் எங்களைப் பொறுத்தமட்டில், இந்த ஒருங்கழைப்பை/அழைப்பை விடுத்ததில் தாவீதிற்கு என்ன நோக்கம் இருந்தாலும், அது எங்களுக்கு ஒரு பொருட்டல்ல; ஏனெனில் தேவனே இவைகளுக்குப் பின்னாகக் காணப்பட்டார்; மேலும் தெய்வீக நோக்கங்களை நிறைவேற்றுவதில், தாவீதிற்குத் தெரிந்தோ தெரியாமலோ, அவர் திவ்விய பிரதிநிதியாகப் பயன்படுத்தப்பட்டார். இதுபோலவே ஆவிக்குரிய இஸ்ரயேலர் தொடர்புடைய எல்லா விஷயங்களிலும், கர்த்தர் விசேஷித்த அக்கறை கொண்டிருக்கின்றார் என்பதையும், ஆவிக்குரிய சீயோன் சம்பந்தப்பட்ட எந்தப் பெரிய அல்லது முக்கியமான காரியங்களும், அவருடைய மேற்பார்வை இல்லாமலோ, அவரது அனுமதி இல்லாமலோ நடைபெறுவதில்லை என்பதையும், நாம் நினைவில் வைத்துக்கொள்வது நமக்கு நிச்சயமாக நன்மையையே உண்டுபண்ணும். சபையின் நலன்கள் மீதான இப்படிப்பட்ட தெய்வீக மேற்பார்வையினை அடையாளம் கண்டுகொள்பவர்களால் மாத்திரமே விசுவாசத்திலும், நம்பிக்கையிலும் தங்கள் இருதயங்களில் இளைப்பாற முடியும் அல்லது தேவன் தம்முடைய திருவுள சித்தத்தின்படி எல்லாவற்றையும் செய்கின்றார் என்ற உறுதியில் இளைப்பாற முடியும்.

தேவனுடைய மேற்பார்வையானது, குறிப்பாக இஸ்ரயேலர்களோடு அவர்களுடைய அறுவடையின் காலத்தில், அந்த யுகத்தினுடைய முடிவின் காலத்தில், நமது கர்த்தருடைய முதலாம் வருகை தொடர்புடைய காரியங்களில் காணப்பட்டதைக் காண்பிக்கும் விசேஷித்த சான்றுகளை நாம் பார்க்கையில், நாம் விசேஷமாய்க் கவரப்படுகின்றோம்; காலங்கள் நிறைவேறும்போது கர்த்தரின் பிறப்பு சம்பவித்ததிலும், குறித்த காலத்தில் கர்த்தரின் மரணம் சம்பவித்ததிலும் தேவனுடைய மேற்பார்வை காணப்பட்டது; அவரது சீஷர்களின் எண்ணிக்கை விஷயத்திலும், ஒருவன் அவரைக் காட்டிக்கொடுப்பான் எனும் விஷயத்திலும், அவர் குற்றவாளியெனச் சிலுவையில் அறையப்படும் விஷயத்திலும், மேசியாவை நிராகரித்ததன் காரணமாக இஸ்ரயேல் நிராகரிக்கப்படும் விஷயத்திலும், பெந்தெகொஸ்தே நாளில் மகா பரிசுத்த ஸ்தலத்தின் அபிஷேகம் கடந்துவரும் விஷயத்திலும், கி.பி. 70-இல் தேசம் இறுதியாக கவிழ்க்கப்படும் விஷயத்திலும், தேவனுடைய மேற்பார்வை காணப்பட்டது. மாம்சீக இஸ்ரயேலர்கள் மீதான கர்த்தருடைய இத்தகைய குறிப்பிடத்தக்க அக்கறையினை நாம் கவனிக்கையில், ஆவிக்குரிய இஸ்ரயேலர்மீது, இந்த அறுவடை காலத்தில், அவரது அக்கறை/பராமரிப்பு காணப்படும் என்று நம்மால் விசுவாசம் வைக்க முடியுமல்லவா! யூத யுகத்திற்கும், சுவிசேஷயுகத்திற்கும் இடையில், அந்த யுகத்தினுடைய அறுவடைக்கும், இந்த யுகத்தினுடைய அறுவடைக்கும் இடையில் காணப்படும் ஒத்த தன்மையுள்ள இணைகள் குறித்த வேதவாக்கியங்களிலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடங்களானது, நிச்சயமாகவே இந்த யுகத்தினுடைய அறுவடையின் சிறு சிறு காரியங்களையும்கூடக் கவனித்துக்கொள்வதில் முன்புபோலவே அவர் அக்கறை கொண்டிருப்பார் என்ற நமது எதிர்பார்ப்பினை முழுமையாகத் திருப்திப்படுத்திவிடும்.

யார் ஒருவன் விசுவாசத்தின்மூலம் இந்த ஒரு நிலையை எட்டி, அதில் தன்னை தக்கவைத்துக் கொள்கின்றானோ, அவன் கர்த்தரில் நிச்சயமாகவே நம்பிக்கைக்கொண்டிருப்பான்; இந்த நம்பிக்கை அவனுக்கு மிகவும் உதவியாக இருக்கும். யூத அறுவடையினுடைய சோதனைகளும், பிரச்சனைகளும் அவைகள் அனுமதிக்கப்பட்டபோது, பெருந்துன்பங்களாகவே தோற்றமளித்தன; மேலும் அப்போதிருந்த தேவனுடைய வழிநடத்துதல்களை, நாம் பரிசுத்த ஆவியாலும், தீர்க்கத்தரிசன வார்த்தையாலும்

வழிநடத்தப்படும் ஞானப்பார்வையினால் மட்டுமே பகுத்தறிய/உணர்ந்துகொள்ள முடிபவர்களாக இருக்கின்றோம். இதுபோன்ற துன்பங்கள், துயரங்கள் விநோதமான சூழ்நிலைகள் முதலானவைகள், இந்த அறுவடையிலும் வருமென எதிர்பார்க்கப்படுகின்றது; மேலும் இவைகள் சம்பவிக்கும்போதும், இவைகளை அதிக விசுவாசம் கொண்டவர்களாகவும், தீர்க்கத்தரிசனங்களுக்கு மிகவும் பரிச்சயப்பட்டிருப்பவர்களாகவும் காணப்படுபவர்களைத் தவிர, மற்றபடி யாராலும் புரிந்துகொள்ள முடியாது; அதுவும் விசுவாசம்கொண்டிருப் பவர்களாகிய இவர்களும்கூடத் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடப்பதற்குக் கடமைப்பட்டவர்களாகவே காணப்படுவார்கள்; *பிற்பாடே* ஒவ்வொரு விஷயத்திலுமுள்ள தெய்வீக மேற்பார்வையானது பகுத்துப்பார்த்தறியப்பட முடியும். அதற்கிடையில் கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் கற்பிக்கப்படும் ஆவிக்குரிய இஸ்ரயேலன், நிழலான இஸ்ரயேலின் அறுவடை காலத்திலிருந்து, விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுக்கான பாடங்களைக் கற்றுக்கொண்டவனாக இருப்பதற்குக் கர்த்தர் சித்தம்கொண்டிருக்கின்றார்.

## பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதல் சிறந்தது

தேவனுடைய பெட்டியை, தேசத்தின் தலைநகரத்திற்குக்கொண்டுவரும் நிகழ்வானது, சந்தோஷம் நிறைந்த கொண்டாட்டத்தின் நாளாகவும், இஸ்ரயேல் தேசம் முழுவதும், ஒருமுனையினின்று மறுமுனைவரை நீண்டகாலம் நினைவுகூரப்பட்ட கொண்டாட்டமாகவும் காணப்பட்டது. தனது அறிவுரைகளை ஏற்றுக்கொண்ட ஜனங்கள் மத்தியில், ஏகசிந்தையாக ஆன்மீக உணர்வுகள் எங்கும் பரவிக்கிடந்ததில், இராஜாவாகிய தாவீது சந்தோஷப்பட்டார். சகலவித இசைக்கருவிகளை வாசிப்பவர்கள் ஊர்வலத்தில் காணப்பட்டு, இசைகளை இசைத்தார்கள். விசேஷமாக ஆயத்தம்பண்ணப்பட்ட மாட்டுவண்டி கொண்டுவரப்பட்டது; பெட்டி வண்டியில் வைக்கப்பட்டது; பிரதான ஆசாரியனின் இரண்டு குமாரர்கள் கூடச்சென்றார்கள்; ஒருவர் முன்சென்றார், இன்னொருவர் வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றார். இங்குக் காணப்பட்ட அனைவரின் நல்ல நோக்கங்கள், தவறு என்று நியாயந்தீர்க்கக்கூடாது; எனினும் கடுமையான ஒரு தவறு செய்யப்பட்டுள்ளது; பெட்டி சம்பந்தப்பட்ட தெய்வீகக் கட்டளைப் புறக்கணிக்கப்பட்டிருந்தது.

(1) இரதத்தில்/வண்டியில் பெட்டியை ஏற்றிச்செல்வது என்பது தாவீதின் பார்வையிலும், ஆசாரியர்களின் பார்வையிலும் எவ்வளவு கனமிக்கதாகத் தோன்றினாலும், பெட்டியை இரதத்தில் ஏற்றி, அதை இடம்பெயர்க்கும் இப்படிப்பட்ட எந்த ஓர் ஏற்பாட்டினையும் தேவன் கொடுக்கவில்லை.

(2) ஆசாரியர்கள் கர்த்தருக்கான ஊழியங்களில் எவ்வளவுதான் உயர்வான நிலையில் காணப்பட்டாலும், பெட்டியைச் சுமந்துசெல்வது என்பது ஆசாரியர்களுக்குரிய வேலையே இல்லை; லேவியர்களே பெட்டியை அதற்குரிய தண்டுகளைக்கொண்டு, தங்கள் தோள்களில் சுமந்து செல்வதற்கு நியமிக்கப்பட்டிருந்தனர். ***இந்தத் தெய்வீக ஏற்பாடுகள் நிராகரிக்கப்பட்டபோது, ஆசரிப்புக்கூடாரத்தின் ஆராதனைகள் தொடர்புடைய விஷயத்தில் சகலவிதமான ஒழுங்கின்மைகள் வருவதற்குரிய வாசல் திறக்கப்பட்டது; இந்த வாசல் திறக்கப்படக்கூடாது என்று கர்த்தர் சித்தம்கொண்டிருந்தார்.*** ஆசரிப்புக்கூடாரத்தின் ஆராதனைகள் மற்றும் பணிகள் தொடர்புடைய தெய்வீகப் பிரமாணத்தின் ஒவ்வொரு அம்சங்களையும் நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்துச் சீக்கிரம் மறந்துபோகாத பாடம் ஒன்றினை, இராஜாவும், ஆசாரியர்களும் சகல கோத்திரங்களின் பிரபுக்களும், மதப்பற்றுள்ள ஜனங்களும் பெற்றுக்கொள்வது ஏற்ற காரியமேயாகும். இந்த ஒரு நிகழ்வின்போது கர்த்தரால் கொடுக்கப்பட்ட பாடமானது, இராஜாவிற்கும், ஜனங்களுக்கும் மாத்திரம் நன்மை பயக்காமல், இந்தச் சுவிசேஷயுகத்திலுள்ள ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கும் பெருமளவில் நன்மைபயக்கின்றதாக இருக்கின்றது.

தம்மைக் கனம்பண்ண வாஞ்சித்தவர்கள் பிரமாணத்தினைப் புறக்கணித்ததின் நிமித்தம், கர்த்தருடைய நிராகரிப்பு வெளிப்படுவதற்குரிய நேரம் வந்தபோது, மாடு இடறலடைந்தது; பெட்டியைப் பிடிக்கத்தக்கதாக உடன் ஆசாரியனாகிய ஊசா தன் கையை நீட்டினார். உடனே இவர் கீழே விழுந்து செத்துப்போனதில், தேவனுடைய அதிருப்தி வெளிப்பட்டது. அந்நாளின் கொண்டாட்டம் சடுதியாய் நின்றுபோனது. இராஜா மற்றும் ஜனங்களுடைய சந்தோஷம் மறைந்துபோனது. கிலேசமும், பயமும் உண்டானது - ஏதோ ஒரு பிழையின் நிமித்தம் ஆசாரியர்களில் ஒருவனைக் கர்த்தர் இவ்விதமாய்ச் சங்கரித்திருப்பாரானால், மற்றவர்கள் விஷயத்தில் என்னென்ன ஆபத்து வருமோ என்று அஞ்சினார்கள்! பெட்டியை முன்னமே திட்டமிட்டிருந்தபடி தன்னோடும், எருசலேமிலுள்ள தன் வீட்டிற்கு அருகேயும் எடுத்துச்செல்ல வேண்டாமென்று இராஜாவாகிய தாவீது உடனடியாக முடிவிற்கு வந்தார். ஊர்வலம் நின்றது; பெட்டி ஓபேத் ஏதோமின் வீட்டில் கொண்டுவந்து வைக்கப்பட்டது.

## கர்த்தருக்குப் பயப்படுகிற பயமே, ஞானத்தின் ஆரம்பம்

மாம்சீக மற்றும் ஆவிக்குரிய இஸ்ரயேலர் ஒவ்வொருவருக்கும் அவசியமான முதல்கட்ட பாடங்களில் ஒன்று, பயபக்தி பற்றியதாகும். இப்பண்பு இல்லாமல், நிச்சயமாகவே நாம் தவறிழைக்க வாய்ப்பிருக்கின்றது. பரிச்சயம் என்பது அலட்சியம் வர உதவுகின்றது எனும் பழைய, உண்மையான பழமொழி ஒன்று காணப்படுகின்றது; இது பயபக்திக்குரிய காரியங்களுக்கும், தேவன் சம்பந்தமான காரியங்களுக்கும், பூமிக்குரிய காரியங்களுக்கும், மனுஷர் சம்பந்தமான காரியங்களுக்கும் பொருந்தும். சாலொமோனால் கட்டப்படும் நிழலான ஆலயத்தில் இராஜாவாகிய தாவீதால் மீண்டும் துவங்கப்படவிருந்த தேவ ஆராதனைக்கு, சரியான மரியாதையும், பயபக்தியும் அடிப்படையாகக் காணப்பட வேண்டும். கர்த்தர் அங்கீகரிக்கும் பலிகளைச் செலுத்துவதற்கு முன்பு, தேவையாகக் காணப்படும் கீழ்ப்படிதலானது, அடிப்படையாக இருக்க வேண்டிய காரியம் என்று அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டும்.

ஒரு மனுஷனைக் கொன்றுபோட்டு, இப்பாடம் கற்பிக்கப்பட்டிருக்கின்ற காரியமானது, கொடுமையானதாகத் தோன்றலாம்; இதற்குக் காரணம் நித்திய சித்திரவதைக்குறித்த நம்முடைய கற்பனையேயாகும்; இக்கற்பனையின் காரணமாக, பாவப்பட்ட ஊசா மனிதனாகச் செயல்படுவதிலிருந்தும், மனித இன்பங்களை அனுபவிப்பதிலிருந்தும் நிறுத்தப்பட்டது மாத்திரமல்லாமல், பாதாளத்தின் நரக ஜூவாலைக்குள்ளும், சித்திரவதைக்குள்ளும் சடுதியாய்த் தள்ளிவிடப்பட்டார் என்று எண்ணிக்கொள்ள வழிநடத்தப்படுகின்றோம். இப்பொழுதோ நாம் தேவனுடைய கிருபையினால், வேதவாக்கியங்களின் போதனைகள் இப்படியாகக் காணப்படவில்லை என்று காண்கின்றோம்; இது இச்சம்பவ பதிவினுடைய மனக்கலக்கமான அம்சங்களின் விஷயத்தில், நமக்குத் தெளிவைக்கொடுக்கின்றது. ஊசா வேறு ஏதாவது விதத்தில் தன் ஜீவனை இழந்திருப்பதைவிட, ஒரு வருடத்திற்கு முன்னதாகவே அல்லது சீக்கிரமாகவே தன் ஜீவனை இழந்துவிட்டார் என்று நாங்கள் புரிந்துகொள்கின்றோம்; இன்னுமாக இவர் வியாதியின் காரணமாக அல்லது விபத்தின் காரணமாக மரிக்கவில்லை, மாறாக கர்த்தருக்கு மகிமை உண்டாகுவதற்கும், ஜனங்களுக்கு நன்மை உண்டாகுவதற்கும் இவர் மரித்தார் என்று நாங்கள் புரிந்துகொள்கின்றோம். இவரும், மீதமுள்ள மனுகுலத்தார் யாவரையும்போன்று மரண ஆக்கினைத் தீர்ப்பின்கீழ்க் காணப்பட்டார் என்பதையும், எந்த ஒரு தருணத்திலும் இவரது ஜீவனை எடுப்பதற்குத் தேவன் முழு உரிமையினைக் கொண்டிருந்தார் என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும்; மேலும் ஊசா இழந்தது அனைத்தையும், தேவன் தம்முடைய

திட்டத்தின்படியும், தம் ஏற்றவேளையிலும் கொடுப்பார்; நியாயத்தீர்ப்பின் உயிர்த்தெழுதலில் இவர் விழிக்கும்போது, அதாவது இவர் உயிரோடிருந்த நாட்களைக்காட்டிலும் அனுகூலமான நிலைக்கு, கல்லறையினின்று வெளியே வரும்போது, அதாவது விருப்பமுள்ளவர்கள் அனைவருக்கும் திரும்பக்கொடுத்தலை அருளும் நிஜமான ஜூபிலியின் காலங்களுக்கு வரும்போது, இவர் இழந்தது அனைத்தும், இவருக்கு வழங்கப்படும்.

திவ்விய வார்த்தைகளின் மற்றும் தெய்வீகத் திட்டத்தின் பரிசுத்தமான காரியங்களையும், சத்தியத்தின் ஊழியங்களையும், கிறிஸ்துவின் சபைக்கடுத்த ஊழியங்களையும், ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் கையாளுகையில், இவர்கள் தங்கள் நோக்கங்கள் சரியாய் இருக்கின்றது என்று எண்ணிக்கொண்டு, தங்கள் விருப்பப்படி காரியங்களைச் செய்வதற்குக் உரிமையற்றவர்கள் எனும் இப்பாடத்தினைக்க ற்றுக்கொள்ளளே வண்டும்.ெ தய்வீகச்ச ித்தம்எ ன்னஎ ன்பதைஜ ாக்கிரதையாய்க் கவனிப்பதும், திவ்விய வார்த்தைகளினுடைய வழிகாட்டுதல்களின்படி அந்தந்தக் காரியங்களை நடைமுறைப்படுத்துவதும் இவர்களுடைய கடமையாகக் காணப்படுகின்றது. இன்னுமாக அனைத்து ஊழியங்களையும் ஒரு நபர் அல்லது இரண்டு நபர்கள் மட்டும் பண்ணுவது தேவனுடைய ஏற்பாடல்ல, மாறாக தேவனுக்கடுத்த ஊழியங்களில் அர்ப்பணிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் ஒரு பாகம் இருக்கின்றது என்பதையும், கர்த்தர் திட்டமிட்டுள்ளபடியே இம்மாதிரியான ஊழியங்களைப்புரிவதற்கு ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு அளிக்கப்படும் என்பதையும் கற்றுக்கொள்வதும்கூட நமக்கடுத்த காரியமாய்க் காணப்படுகின்றது. சிலர் ஆசாரிய ஊழியத்தைச் செய்திடலாம், ஆனால் இது மற்றவர்களுக்குக் கிடையாது; சிலர் லேவியர்களுக்குரிய ஊழியங்களைச் செய்யலாம்; மேலும் இவர்களுடைய வாய்ப்புகள் இவர்களிடமிருந்து எடுத்துக்கொள்ளப்படக்கூடாது. இன்னுமாகத் தேவன் தம் அலுவல்களைப் பார்த்துக்கொள்கின்றார் என்றும், நமக்கு அவருடைய காரியங்களில் அக்கறை இருக்கின்றதுபோல, நம்மைவிட அதிகமாக, அவருக்கு அவர் காரியங்கள்மீது அக்கறை காணப்படுகின்றது என்றும், அவைகளை நிர்வகிப்பதற்கு அவர் முழு ஆற்றல்மிக்கவராய் இருக்கின்றார் என்றுமுள்ள முக்கியமான பாடமும், ஆவிக்குரிய இஸ்ரயேலர்களால் கற்றுக்கொள்ளப்பட வேண்டும். கர்த்தருடைய ஜனங்களில் சிலர், தங்களுடையதல்லாத மாபெரும் பாரங்களைச் சுமந்துகொண்டிருக்கின்றனர். இந்தப் பாரங்கள், இவர்களுடையதாய்க் காணப்பட வேண்டிய இளைப்பாறுதலையும், சந்தோஷத்தையும் இவர்கள் அனுபவிப்பதற்குத் தடையாகக் காணப்படுகின்றது. வேறு சிலர் மிகவும் சுறுசுறுப்பாய், மிகவும் வைராக்கியமாய்க் காணப்படுகின்றனர்; மேலும் தாங்கள் வேலை செய்யவில்லையெனில், தேவனுடைய வேலைகள் நடைபெற்றிருக்காது என்பதுபோல் இவர்கள் கற்பனை பண்ணிக்கொள்கின்றனர். உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள் (நீதிமொழிகள் 3:6); அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார் எனும் முக்கியமான பாடத்தை நாம் கற்றுக்கொள்ளும்படிக்குக் கர்த்தர் விரும்புகின்றார் (சங்கீதம் 37:4). கர்த்தருடைய வேலையிலுள்ள ஒவ்வொரு காரியங்களிலும், கர்த்தரே முதன்மையானவர் என்று அடையாளம் கண்டுகொள்வதன் மூலமும், ஊழியம்புரிவதற்குரிய வாய்ப்புகள் ஒவ்வொன்றிலும், நாம் அவரால் கனப்படுத்தப்பட்டவர்களாக இருக்கின்றோம் என்பதை நாம் அடையாளம் கண்டுகொள்வதன் மூலமும்தான், நாம் நமக்கும், மற்றவர்களுக்கும் ஆசீர்வாதத்தைக் கொண்டுவர முடிபவர்களாகக் காணப்படுவோம்.

## அனுபவத்தின் வாயிலாக நன்மையடைதல்

முதலாவது திட்டமிட்டிருந்தபடி பெட்டியை எருசலேமுக்குக் கொண்டுவரும் தனது திட்டத்தைத் தாவீது கைவிட்ட காரியம், ஒருவேளை கர்த்தர் கொண்டாட்டத்தின் நாளைக் கெடுத்துப் போட்டதினிமித்தம், கர்த்தர்மேல் அவர் கொண்டிருந்த கோபம் என்றும், எரிச்சல் என்றும் கருதுவோமானால், நாம் தவறுசெய்கின்றவர்களாக இருப்போம். இப்படியாக இருக்க முடியாதளவுக்குத் தாவீதின் குணலட்சணம், மிகவும் பயபக்தியுடைய குணலட்சணமாகக் காணப்பட்டது. இவர் கோலியாத்தோடு யுத்தம்பண்ணின மனுஷன்தான்; எனினும் இவர் தேவனுக்கு எதிராக யுத்தம்பண்ணக்கூடிய ஒரு மனுஷனல்ல. இவரது ஜீவியத்தினுடைய ஒவ்வொரு காரியங்களிலும், பயபக்தியையும், தாழ்மையையும் நாம் காணலாம்; இன்னுமாக தேவனுடைய நீதி, வல்லமை மற்றும் அன்பையும், அதேசமயம் கர்த்தருக்கு முன்புள்ள தன் தாழ்மையான நிலையையும், இவர் அடையாளம் கண்டிருந்ததை, இவரது ஜீவியத்தின் எல்லாக் காரியங்களிலும் நாம் பார்க்கலாம். இதற்கிடையில் மகா கொண்டாட்டத்தின் நாளில் நடைபெற்ற கவலைக்கிடமான ஏமாற்றத்தைக்குறித்தும், தெய்வீக மேற்பார்வையினை அலட்சியம் பண்ணினதால் ஓர் ஆசாரியன் அடிக்கப்படும் அளவுக்கு, தேவனுடைய அதிருப்தி வெளிப்பட்டது என்பதுகுறித்தும், பெட்டி இப்பொழுது ஓபேத் ஏதோமின் வீட்டில் காணப்படுகின்றது என்பதுகுறித்தும் முழுத்தேசத்தாரும் கேள்விப்பட்டதன் வாயிலாக, கர்த்தர் முழுத்தேசத்திற்கும் மாபெரும் பாடம் ஒன்றினைக் கற்பித்துக்கொடுத்தார்.

இராஜாவாகிய தாவீது எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்தார்; விளைவுகளையும் கவனித்துக்கொண்டார்; திவ்விய ஆராதனைக்குரிய பிரதான அடையாளச்சின்னம், கர்த்தருடைய நிழலின்கீழ்க் காணப்பட வேண்டும் என்றும், கர்த்தருக்கும், ஷெக்கினா மகிமைக்கும் அருகாமையில் காணப்பட வேண்டும் என்றுமுள்ள ஆசையில், தாவீதின் இருதயம் மீண்டுமாக ஏங்கினது. பெட்டியைச் சுமப்பது எப்படி என்று தாவீது விசாரித்தார் என்பது நிச்சயமே; இன்னுமாகத் தவறு தன்னுடையதும், ஆசாரியர்களுடையதுமாக இருக்கின்றது என்றும், பெட்டியுடன் ஆசீர்வாதமே (பொதுவாக) கடந்து வருமே ஒழிய, சாபமல்ல என்றுமுள்ள முடிவிற்குள் தாவீது வந்தார். ஆகையால் மூன்று மாதங்கள் கடந்த பிற்பாடு, பெட்டியைத் தலைநகரத்திற்குக் கொண்டுவருவதற்குரிய ஏற்பாடுகளை மீண்டுமாகப் பண்ணினார். மீண்டும் கலந்துகொள்பவர்கள் வந்தார்கள், கீதவாத்தியங்கள் ஏற்பாடு பண்ணப்பட்டன; மீண்டும் எருசலேமை நோக்கின பயணத்தில், ஊர்வலம் பெட்டியோடு தொடர்ந்தது. ஓபேத் ஏதோமின் வீட்டிலிருந்து சந்தோஷத்தோடும், மகிழ்ச்சியோடும் தாவீது பெட்டியை, தாவீதின் நகரத்திற்குக் கொண்டுவந்தார் என்று நாம் வாசிக்கின்றோம்.

கொண்டாட்டத்துடன் சென்ற ஊர்வலம் பற்றின விவரங்களை 1 நாளாகமம் 15 மற்றும் 16-ஆம் அதிகாரத்தில் நாம் காணலாம். அந்நாள் நிச்சயமாகவே தாவீதுடைய வாழ்க்கையில் ஒரு மாபெரும் நாளாகக் காணப்பட்டிருந்திருக்கும். ஆனால் இம்முறை, கற்பிக்கப்பட்ட பாடங்களுக்கு இசைவாகவே, எந்த ஒரு புது காரியங்களும் செய்யப்படவில்லை; புறஜாதிகள்போன்று ஆசாரியர்கள் எந்த இரதங்களையும் ஓட்டிவரவில்லை; இதற்குப்பதிலாக தெய்வீக வழிகாட்டுதலின்படி, மிகவும் துல்லியமாக காரியங்கள் செய்யப்பட்டன. பெட்டி லேவியர்களின் தோள்களில் சுமக்கப்பட்டு வந்தது. பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலே சிறந்தது எனும் பாடம் கற்றுக்கொள்ளப்பட்டது. சந்தோஷமாய்க் காணப்பட்ட அந்த ஊர்வலத்திற்கு முன்பு தாவீது சென்றுகொண்டிருந்தார்; தாவீதும் சுரமண்டலத்தோடு பாடிக்கொண்டு வந்தார்; அவரோடுகூட பாடகர்களும், இசைக்கலைஞர்களும் வரிசை வரிசையாகக் காணப்பட்டு பாடிக்கொண்டு வந்தார்கள். 105,

96 மற்றும் 106-ஆம் சங்கீதங்களைப் பாருங்கள். ஊர்வலம் எருசலேமிற்குள் பிரவேசிக்கையில், 24-ஆம் சங்கீதம் பாடப்பட்டிருக்கும் என்று அனுமானிக்கப்படுகின்றது; எருசலேமில் பெட்டிக்காகக் கூடாரம் ஒன்று ஏற்கெனவே தயார் செய்துவைக்கப்பட்டிருந்தது. (வரலாற்று பதிவாளராகிய) ஜோசபஸ் அவர்கள், ஊர்வலத்தில் ஏழு பாடகர் குழுக்கள் காணப்பட்டனர் என்று தெரிவித்துள்ளார்.

## ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கான வேறு பாடங்கள்

நிஜமான தாவீதின் - அதாவது கிறிஸ்துவின் அங்கத்தினர்கள், ஜீவியத்தின் அனுபவங்கள் அனைத்திலிருந்தும் பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றனர்; திட்டமிடப்பட்டிருந்த கொண்டாட்டத்தின் நாள், தாவீதிற்குத் துக்கிப்பின் மற்றும் அச்சப்படுதலின் நாளாக மாறினதுபோல, ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்குக் காணப்படலாம். நம்முடைய தவறுகளின் விஷயங்களிலும், நாம் அவற்றைச் சரியாய்ப் புரிந்துகொள்ள வேண்டும், அவைகளுக்கான காரணங்கள் என்ன என்று நாம் சரியாய்ப் புரிந்து உணர்ந்துகொள்ள வேண்டும்; இப்படிச் செய்தால் அவைகள் இடறலின் கற்களாய் இருப்பதற்குப்பதிலாக, முன்னேற்றப்படிகளாகக் காணப்பட்டு, நாம் தேவனிடத்தில் நெருங்கிவர உதவும். கர்த்தருக்கு அருகாமையில் காணப்படுவதற்கு நாம் வாஞ்சிக்க வேண்டும் என்பதே இன்னொரு பாடமாகக் காணப்படுகின்றது.

தாவீதின் வீட்டினருகே பெட்டி கூடாரத்தில் காணப்பட்ட காரியம், அதன் மகிமையான தாபர ஸ்தலத்தைச் சுட்டிக்காட்டாமல், மாறாக அதன் தற்போதைய வாசஸ்தலத்தையே சுட்டிக்காட்டியது. மகிமையிலிருக்கும் சபையின் நிலையினை, சாலொமோனின் ஆலயம் அடையாளப்படுத்துகின்றது. அங்கு இருப்பதற்கும், எதிர்காலத்தில் அந்த மகிமையான அனைத்துக் காரியங்களுக்குள்ளாகப் பிரவேசிப்பதற்கும் நாம் ஏங்குகின்றோம்; எனினும் தாவீது ஆலயம் கட்டுவதற்கு அனுமதிக்கப்படாததுபோன்று, கர்த்தருடைய வேளை வருவதுவரையிலும் நாமும் எதிர்காலத்தின் மகிமையான காரியங்களுக்குள் பிரவேசிப்பது என்பது சாத்தியமில்லாத காரியமாகும். இப்படியாகப் பார்க்கும்போது, தாவீதின் வாழ்க்கை மகிமையிலிருக்கும் பிரியமானவருக்கு நிழலாய்க் காணப்படாமல், மாறாக சோதனை நிலையின் கீழுள்ள மாம்சத்திலுள்ள பிரியமானவருக்கே நிழலாகக் காணப்படுகின்றது. தாவீது ஆசரிப்புக்கூடாரத்திற்கு அருகாமையிலும், கர்த்தருக்கு நெருக்கமாயும் காணப்படுவதற்கு வாஞ்சித்ததுபோல, பிரியமானவரின் அங்கத்தினர்களாகிய நாமும், தேவனோடு நெருங்கி சஞ்சரிப்பதற்கும், கிறிஸ்து இயேசுவாகிய கிருபாசனம் எனும் அவரது ஏற்பாட்டிற்கு அருகாமையில் காணப்படுவதற்கும் ஏங்குகின்றவர்களாகக் காணப்பட வேண்டும். இது அவருடைய சரீரத்தின், சபையின் அங்கத்தினர்களோடு நெருக்கமாய்க் காணப்படுவதற்கும், அவர்களோடு ஐக்கியம் கொள்வதற்குமான வாஞ்சையினையும் பெற்றிருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; ஏனெனில் இந்நிலை ஆசரிப்புக்கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்தினால் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது; இதற்கும், திரைக்கப்பால் காணப்படும் மகிமையான காரியங்களுக்கும் இடையில் திரை மட்டுமே காணப்படுகின்றது. புதிய சுபாவத்தின் தன்மைகளுக்கு இசைவாக, கர்த்தருக்கும், அவரோடு ஐக்கியம்கொண்டிருப்பவர்களுக்கும் நெருக்கமாய்க் காணப்பட வேண்டுமென்று வாஞ்சிக்கும் யார் ஒருவரும், சகோதர சகோதரிகளுக்கான தங்கள் அன்பை வெளிப்படுத்துவதன் மூலமும், கர்த்தரிலும், அவரது வெளிச்சத்திலும், ஞானத்திலும், அன்பிலும் உள்ள தங்கள் நம்பிக்கை மற்றும் விசுவாசத்தினை வெளிப்படுத்துவதன் மூலமும், அவரது புண்ணியங்களை அறிவிக்கும் சிலாக்கியங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவார்களல்லவா!

## அவர் வாசல்களில் துதியோடு பிரவேசியுங்கள்

சில கோணங்களில் பார்க்கும்போது, தேவனுடைய நகரம் என்பது சபையாகக் காணப்படுகின்றது - பெயர்ச்சபை அமைப்பல்ல, மாறாக பரலோகத்தில் பேரெழுதப்பட்டவர்களாகிய உண்மை சபையாகக் காணப்படுகின்றது. நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகள், அர்ப்பணிப்பின் வாயிலாக மாத்திரமே இந்த நகரத்தில் பிரவேசிக்க முடியும் என்று அப்போஸ்தலன் கூறியுள்ளார். அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவப்பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை என்று அப்போஸ்தலன் புத்திமதி கூறியுள்ளார் (உரோமர் 12:1). சிலர் இந்தப் பலியின் வாசல் வழியாக துக்கத்தோடும், வருத்தத்தோடும் பிரவேசிப்பதாகத் தெரிகின்றது - அதாவது தாங்கள் மிக அதிகமாக பலிசெலுத்துவதாக சிலர் எண்ணி வருத்தப்படுகின்றதாகத் தெரிகின்றது. இவர்கள் பலிசெலுத்தப்பட்டவைகள் குறித்து மிதமிஞ்சி எண்ணிக்கொள்கின்றனர் அல்லது தாங்கள் பெற்றுக்கொண்டிருக்கின்ற காரியங்களைக்குறித்துக் குறைவாய் மதிப்பிடுகின்றனர். இத்தகையவர்கள் அர்ப்பணிப்பதற்கு முன்பாக, அமர்ந்திருந்து செல்லும் செலவைக் கணக்குப்பார்த்திருந்தால் நலமாயிருந்திருக்கும். இப்போது இருப்பவைகளையும், இனி வரவிருப்பவைகளையும், இன்னுமாக ஆசாரியர்களென நாம் எதைச் செய்ய ஒப்பந்தம் பண்ணியிருக்கின்றோம் என்பதையும் சரியான கண்ணோட்டத்தில் பார்த்து, பின்னர் சந்தோஷத்தோடு அதைச் செய்வதே சரியான காரியமாயிருக்கும். இப்படியாகவே, அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசியுங்கள் என்றுள்ள இந்தப் பாடம் கற்றுக்கொள்ளப்படுகின்றது (சங்கீதம் 100:4). தேவனுக்கு நன்றியறிதலோடு காணப்படும் பிள்ளையானவன், பல்வேறு பிரச்சனைகளுக்குள் விழும்போது, அனைத்தையும் சந்தோஷமாக எடுத்துக்கொள்வான், ஏனெனில் இவைகள், உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறது என்ற இவனது விசுவாசத்திற்கான சோதனையாகக் காணப்படும்; இந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது, மாறாக இராஜ்யத்தின் மகிமைகளுக்கான ஆயத்தங்களாகக் காணப்படும். (உரோமர் 5:3)

R5679

# தாவீதின் நகரம் – தேவனுடைய நகரம்

### 2 சாமுயேல் 6:1-19; சங்கீதம் 24

கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன். - சங்கீதம் 122:1

தாவீது சமஸ்த இஸ்ரயேலுக்கும் இராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்ட பிறகு, தெய்வீக வழிநடத்துதலின்படி, ஒரு புதிய தலைநகரைத் தேடினார். எபூசியர்கள், எருசலேம் பட்டணத்தை அசைக்கமுடியாத கோட்டையாக அநேக நூற்றாண்டுகளாகப் பெற்றிருந்தார்கள். அதற்கு எதிராக வரும் எந்த எதிரியிடமிருந்தும், அப்பட்டணத்தின் குருடர்களும், சப்பாணிகளும்கூடக் காப்பாற்றிவிடுவார்கள் என்று அவர்கள் கூறுகிற அளவுக்கு, அந்தப் பட்டணம் அனுகூலமான இடத்தில் அமைந்திருந்தது. ஆனால் காலம் வந்தபோது, அது இராஜாவாகிய தாவீதின் கைகளுக்கு வந்து, இஸ்ரயேலின் தலைநகரமாக ஆனது. புதிய இராஜா செய்த முதல் காரியங்களில் ஒன்று, தேசத்திற்கும், அரசவைக்கும் பெருமை தரக்கூடிய ஓர்

அரண்மனையை இவர் கட்டினதேயாகும். அரண்மனையைக் கட்ட தீருவின் இராஜாவாகிய ஈராமிடமிருந்து பொருட்கள் மாத்திரமல்ல, கைதேர்ந்த தொழிலாளிகளும் பெற்றுக்கொள்ளப்பட்டனர்.

அடுத்தப்படியாக, தாவீது இராஜாவின் ஆன்மீகத்தன்மை அவரது சங்கீதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல், இஸ்ரயேலின் அரசாங்கத்திற்கடுத்த காரியங்கள் மீதான கவனத்திற்குத் திரும்பினது. தேவனுடைய உடன்படிக்கையின் ஜனங்களிடையே விக்கிரக ஆராதனை அனுமதிக்கப்படாமல் இருப்பது மட்டும் போதாது. தேவனுடைய பிரசன்னத்திற்கான அடையாளச் சின்னங்கள் (பெட்டி) மறுபடியுமாக கனப்படுத்தப்பட வேண்டும். தாவீதுக்கு ஆசாரியர்கள் ஆதரவு கொடுத்ததால், சவுல் இராஜா அவர்களை அழித்துவிட்டார். இதினிமித்தம் நோபிலிருந்த ஆசரிப்புக்கூடாரம் கவனிப்பாரற்று இருந்தது. சவுல் இராஜா அதைக் கிபியோனுக்கு அனுப்பியிருந்தார். ஆனால் உடன்படிக்கைப் பெட்டி ஆசரிப்புக்கூடாரத்தில் இல்லை, நீண்ட நாட்களாக இப்படி இருந்தது.

ஏலியின் துன்மார்க்கமான குமாரர்கள் உடன்படிக்கைப் பெட்டியை பெலிஸ்தரோடு யுத்தஞ்செய்த யுத்தக்களத்திற்கு எடுத்துச்சென்றிருந்தார்கள் என்பதையும், யுத்தத்தில் அவர்கள் தோற்றுப்போனதால் அந்த உடன்படிக்கைப் பெட்டி பெலிஸ்தர்களால் எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதையும், இந்த உடன்படிக்கைப் பெட்டியின் பிரசன்னத்தினால் பெலிஸ்தரின் விக்கிரகமாகிய தாகோன் கீழேவிழுந்து உடைந்தது என்பதையும், பெட்டி எந்தெந்த பெலிஸ்திய பட்டணங்களிலெல்லாம் வைக்கப்பட்டிருந்ததோ, அங்கெல்லாம் கர்த்தரிடமிருந்து வந்த வாதைக் காணப்பட்டது என்பதையும், இந்த உடன்படிக்கைப் பெட்டியைப் பெலிஸ்தர்கள் கீரியாத்யாரீம் என்ற இடத்திற்கு அனுப்பும்வரை, அந்த வாதை தொடர்ந்தது என்பதையும் நாம் நினைவுக்குக் கொண்டுவருகின்றோம். அது எழுபது வருடம்வரை, அதாவது நாம் இப்பொழுது கவனித்துக்கொண்டிருக்கிற நிகழ்வுவரை அங்கேயிருந்தது. தாவீது இராஜா உடன்படிக்கைப் பெட்டியைப் புதிய கூடாரத்தில் அல்லது ஆசரிப்புக்கூடாரத்தில் கொண்டுவந்து வைக்கும்போது, ஒரு பெரிய விழாவை ஏற்பாடுசெய்தார். தேசத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் தகவல் அனுப்பினார். முப்பதினாயிரம் வீரர்களும், திரளான ஜனங்களும் அதிலே கலந்துகொண்டார்கள். இந்தக் காரியம் முற்காலத்தில் இருந்ததுபோல தேசத்திற்குத் தேவனுடைய ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும் என்று நம்பினார்கள்.

## பயபக்தியில் ஒரு மாபெரும் பாடம்

தாவீது இராஜா தேவனைக் கனப்படுத்துவதற்கு நோக்கம் கொண்டிருந்தார். எனினும் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை எப்படி எடுத்துச்செல்வது, யார் அதைத் தொடலாம் போன்ற காரியங்களில் தேவனுடைய பிரமாணத்தைக் கவனிக்காமல் விட்டிருந்தார். தேவனுடைய பிரமாணத்தில் ஜாக்கிரதையாக இருப்பதற்கும், சர்வ வல்லமையுள்ளவரிடத்தில் பயபக்தியாய் இருப்பதற்குமான ஒரு பெரிய பாடம் தெய்வீக வழிநடத்துதலினால் இவருக்குக் கொடுக்கப்பட்டது. உடன்படிக்கைப் பெட்டிக்குத் தாவீது இராஜா மரியாதை கொடுத்தாலும், போதுமான மரியாதையைக் கொடுக்கவில்லை. ஆசரிப்புக்கூடாரத்தின் பொருட்களில் இந்த உடன்படிக்கைப் பெட்டியே மிகவும் முக்கியமானது.

வெண்கலப் பலிபீடமும், தண்ணீர்த் தொட்டியும் பிராகாரத்தில் இருந்தன. சமுகத்து அப்பங்களுள்ள பொன்தகட்டால் மூடப்பட்ட மேஜையும், பொன் குத்துவிளக்கும் மற்றும் பொன்னாலான தூபபீடமும் பரிசுத்த ஸ்தலத்தில் இருந்தன. ஆனால் மகா பரிசுத்த ஸ்தலத்திலிருந்த ஒரே பொருள் உடன்படிக்கைப் பெட்டிதான். தோற்றத்தில் அது நான்கு அடி நீளமும், இரண்டு அடி அகலமும், இரண்டு அடி உயரமுள்ள ஒரு

பெட்டியைப்போல் இருந்தது. அதன் இரண்டு பக்கங்களிலும் இரண்டு தண்டு இருந்தது. அதைத் தோளில் வைத்துதான் லேவியர்கள் சுமக்க வேண்டும். அது பொற்தகட்டால் பொதிந்திருக்கப்பட்டிருந்தது. அந்தப் பெட்டியின் உள்ளே பத்து கட்டளைகள் அடங்கிய கற்பலகைகளும், வனாந்தரத்தில் பிரயாணம் செய்தபோது பாதுகாத்து வைத்த மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், அற்புதங்களை நடப்பித்த ஆரோனின் துளிர்த்த கோலும் இருந்தன. உடன்படிக்கைப் பெட்டியின் மேல்மூடி விசேஷஅம்சம் உடையதாக இருந்தது. அது தங்கத்தால் அடிக்கப்பட்டதாகவும், மேலே இரண்டு கேரூபீன்கள் அதன் முகங்கள் ஒன்றையொன்று பார்ப்பதுபோலவும், அதன் சிறகுகள் முன்பக்கம் விரிந்ததுபோலவும் இருந்தன.

சில காரியங்களை அடையாளப்படுத்தும்படி ஒரு குறிப்பிட்ட முறையில், ஆசாரியர்கள் அந்த உடன்படிக்கைப் பெட்டியை மூட வேண்டும் என்ற கட்டளையைத் தேவன் கொடுத்திருந்தார். பின்னரே, லேவியர்கள் அதைத் தங்கள் தோள்களில் சுமக்க வேண்டும். இதையெல்லாம் கவனியாதபடி தாவீது இராஜா, மற்ற விதங்களைவிட தேவனுடைய பெட்டியைக் கொண்டுவர இதுதான் மிகவும் உன்னதமான முறைமையாக இருக்கும் என்று நினைத்து, புதியதான ஒரு மாட்டு வண்டியைச் செய்தார். ஆனால் இது தேவனுடைய முறை அல்ல. தேவனுடைய குணலட்சணங்களையும், அவரது கிருபாசனத்தையும் அடையாளப்படுத்துகிற உடன்படிக்கைப் பெட்டிக்கும், அவருக்கும் காண்பிக்கப்பட வேண்டிய பயபக்தி பற்றிய ஒரு பாடம் கொடுக்கப்பட வேண்டியிருந்தது.

சரிவும் (வழுக்கலான), சாய்வுமான கற்பாறையுள்ள இடத்திற்கு மாடு வந்தபோது, வண்டி கொஞ்சம் அசைந்தது. அப்போது ஊசா தேவனுடைய பெட்டி சாயாதபடி தனது கையை நீட்டி அதைப் பிடித்தார். உடனே ஓர் இடி மின்னல் அவர்மேல் விழுந்து, அவர் மரித்துப்போனார். இந்தத் தேவ கோபத்தினால் தேவனுடைய பெட்டியைக் கொண்டுவருகிற வேலையை உடனே நிறுத்தினார்கள். வேறு நாசமோசம் ஏதும் வராதபடி, தனது இடத்திற்குத் தேவனுடைய பெட்டியைக் கொண்டுசெல்ல தாவீது இராஜா பயந்தார். அந்த ஊர்வலம் நிறுத்தப்பட்டது; தேவனுடைய பெட்டி ஓபேத் ஏதோம் என்ற லேவியன் வீட்டில் வைக்கப்பட்டது. ஒருவேளை அந்த ஓபேத் ஏதோம் ஓர் ஆசாரியனாக இருந்திருக்கக்கூடும்.

இப்படியாக அனைத்து ஜனங்களும் பயபக்தியின் பாடத்தைக் கற்றுக்கொண்டார்கள். அந்தப் பாடம் எக்காலத்திற்கும் அவசியமானதாய்க் காணப்படுவதுபோல, தற்காலத்திற்கும் மிகவும் அவசியமானதாகக் காணப்படுகின்றது. பயபக்தியின்மை என்பது, உலகத்தால் அடிக்கடி வெளிப்படுத்தப்படுகின்றது; ஆனால் இது நம்மை அவ்வளவுக்கு அதிர்ச்சிக்குள்ளாக்குகிறதில்லை. ஏனெனில், தங்களைக் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களெனவும், இராஜரிக ஆசாரியர்கள் எனவும் கூறிக்கொள்ளுகிறவர்கள், பயபக்தியற்று காணப்படும்போதே, நாம் மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாகுகின்றோம். இந்தப் பயபக்தியின்மை, சிலசமயங்களில் நடத்தையில் இருக்கலாம், சில சமயங்களில் பேச்சில் இருக்கலாம், சில சமயங்களில் மத காரியங்களைக்குறித்து அல்லது வேதவாக்கியங்களைக்குறித்துக் கேலியாகப் பேசும்போது இருக்கலாம். எந்த வகையில் இந்தப் பயபக்தியின்மை இருந்தாலும், இது அந்தத் தனிப்பட்ட நபருக்கும், அதேசமயம் மற்றவர்கள் விஷயத்தில் இவர் காட்டும் செல்வாக்கிலும், நிச்சயமாக தீமை விளைவிக்கிறதாகவே இருக்கும்.

ஊசா நித்திய வேதனைக்கு அனுப்பப்படவில்லை என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அவர் மரண நித்திரைக்குள் மாத்திரம் சென்றார். அவரது தவறு அந்தக் காலத்தில் ஒரு நல்ல பாடத்தைக் கற்றுக்கொடுத்தது. அது அவருக்கு எதிர்காலத்தில் தீமை பயக்காது. இந்தக் காலகட்டத்தில் இன்னொரு

பாடம் போதிக்கப்பட்டது; தேவனுடைய பெட்டி இருந்த ஓபேத் ஏதோமின் வீடு ஆசீர்வதிக்கப்பட்டது. அது எப்படிப்பட்ட ஆசீர்வாதமாகக் காணப்பட்டது என்பதுகுறித்து நமக்கு ஏதும் சொல்லப்படவில்லை; எனினும் அநேகரது கவனத்தை ஈர்க்கும் விதமான ஆசீர்வாதங்களாகக் காணப்பட்டது. இந்த அநேகரில் தாவீது இராஜாவும் ஒருவர் ஆவார். எருசலேம் தாவீதின் நகரமாக மட்டுமல்ல, தேவனுடைய நகரமாகவும் இருக்க வேண்டும் என்று தன் இருதயத்தில் காணப்பட்ட திட்டத்தினிடத்திற்குத் தாவீதின் இருதயம் மறுபடியுமாகத் திரும்பினது; இந்தப் பெட்டி இருப்பதாலும், இன்னுமாக உடன்படிக்கைப் பெட்டியின் இரண்டு கேருபீன்கள் மத்தியில் பிரகாசிக்கிற ஷெக்கீனா ஒளி காணப்படுவதினாலும் தேவனுடைய வாசஸ்தலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டது; இது, தேவனுடைய பிரசன்னம் அவரது ஜனங்களாகிய இஸ்ரயேலோடு இருப்பதைச் சுட்டிக்காட்டியது.

## தேவனுடைய சொந்தப் பரிசுத்த தேசம்

தாவீதும், இஸ்ரயேலர்களும் காணப்பட்ட நிலைமையில் நாம் காணப்படுகிறதில்லை. தேவனுடைய இராஜ்யம் என்று சொல்லக்கூடிய தேசம் ஏதும் இப்போது இல்லை. கிமு. 606-இல் சிதேக்கியாவிடமிருந்து கிரீடத்தைத் தேவன் எடுத்துப்போடும்போது, தீர்க்கத்தரிசி மூலமாக அவர் அறிவித்ததாவது: அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன் (எசேக்கியேல் 21:25-27). இராஜ்யத்தை மேசியாவிடம் கொடுப்பதற்கும், உம்முடைய இராஜ்யம் வருவதாக என்று ஜெபிக்கிற நமது ஜெபம் நிறைவேறுவதற்கும் காலம் சமீபமாயிருக்கின்றது என்று நாம் நம்புகின்றோம். பரிசுத்த பேதுரு சபையைப் பரிசுத்த ஜாதி, சொந்த ஜனம் என்று கூறுகின்றார். இதைத்தவிர இந்தக் காலகட்டத்தில் பூமியிலே தேவனுடைய இராஜ்யம் என்று ஏதுமில்லை. ஒரு குறிப்பிட்ட சபை பிரிவைப்பற்றி பரிசுத்த பேதுரு கூறவில்லை. பேப்டிஸ்ட் சபையையோ, மெத்தடிஸ்ட் சபையையோ, பிரிஸ்பிடேரியன் சபையையோ, லுத்ரன் சபையையோ, ஆங்கிலிக்கன் சபையையோ, உரோம சபையையோ குறிப்பிடவில்லை. கிறிஸ்துவின் உண்மையான சபை வரம்பற்ற சபையாகும். இதற்கே பொதுவானது என்ற அர்த்தம்கொண்ட கத்தோலிக் என்ற பெயர் சரியாகப் பொருந்துகின்றது. ஏனெனில் கத்தோலிக் என்ற வார்த்தை, பொதுவானது அல்லது உலகளாவியது என்று பொருள்படும்.

கிறிஸ்துவின் சபை உலகம் முழுவதும் உள்ள ஒரே சபையாகும்; அதன் அங்கத்தினர்கள், அர்ப்பணிப்பின் மூலமும், பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தலினால் வரும் திவ்விய அங்கீகரிப்பின் மூலமும் கிறிஸ்துவுடன் இணைந்துகொண்டவர்கள் ஆவார்கள். அங்கத்தினரில் சிலர் உரோம சபையில் காணப்படலாம். சிலர் ஆங்கிலிக்கன் சபையிலும், சிலர் மெத்தடிஸ்ட் சபையிலும், சிலர் பேப்டிஸ்ட் சபையிலும், சிலர் லுத்ரன் சபையிலும், இன்னும் சிலர் இவைகள் இல்லாமல் வேறு சபையிலும் இருந்திருக்கலாம். ஆனால் இந்த ஒரே பரிசுத்த ஜாதியையே தேவன் அங்கீகரிக்கின்றார்; உயிர்த்தெழுதலின் மாற்றமானது, கர்த்தருடைய ஜனங்களைத் திரைக்கு அப்பால் தம்முடன் மகிமைப்படுத்தும்வரை, இவர்கள் முழுமையாக ஒரு புதிய தேசமாக ஒழுங்கமைக்கப்பட மாட்டார்கள்; வேதத்தில் எழுதப்பட்டிருக்கின்றதுபோல அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போம், அவரது மகிமையில் பங்கு பெறுவோம்.

பெலிஸ்தர்களும், மோவாபியர்களும் கர்த்தரை ஏற்றுக்கொள்வார்கள் என்று இஸ்ரயேலர்கள் எதிர்பார்க்காதது போலவே, தேவனுடைய சத்தியத்தையும், அவரது பிரசன்னத்தையும் உலகத்தார் உணர்ந்துகொள்ள நாம் எதிர்பார்க்க முடியாது. தேவனுடைய உடன்படிக்கையின் ஜனங்கள் மட்டுமே அவரை உணர்ந்துகொள்வார்கள். அவர்கள் நடுவில் மட்டுமே அவர் இருக்கின்றார்.

இது ஒரு குடும்ப விவகாரம் என்று நாம் கூறமுடியாது. இன்னும் சொல்லப்போனால், வேதாகமம் காண்பிக்கின்றதுபோல, இது ஒரு தனிப்பட்ட நபரின் விவகாரம் ஆகும். இங்கொன்றும், அங்கொன்றுமாகக் கிறிஸ்துவின் சபை, உலகமெங்கும் சிதறியிருக்கின்றது. அர்ப்பணம் செய்தவர்கள் மட்டுமே சபைக்கு உரியவர்களாக இருக்கின்றார்கள் அல்லது அதன் சிலாக்கியங்களுக்கு உரியவர்களாக இருக்கின்றார்கள். உடன்படிக்கைப்பெ ட்டிசு ட்டிக்காட்டுகிறப ிதாம ற்றும்கு மாரனுடையஜ க்கியத்திற்குஉ ரியவர்களாக இருக்கின்றார்கள். இந்த விதியில் ஒரு விதிவிலக்கை மட்டும் நாம் கவனிக்க வேண்டும். பரிசுத்த பவுல் கூறினதுபோல, விசுவாசிகளின் குழந்தைகள், தங்கள் பெற்றோர்களுடன் தேவனுடைய சிலாக்கியங்கள் மற்றும் ஆசீர்வாதங்களில் பங்கு பெறுகின்றவர்களாகக் கருதப்படுகின்றார்கள். பிள்ளைகள், தாங்களாக தீர்மானிக்கிற அளவுக்கு மனது அபிவிருத்தியடைந்த நிலைக்கு வரும்வரை, அதாவது தேவனுடன் முழு அர்ப்பணத்திற்குள்ளாக வந்து, அவரால் பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தலில் ஏற்றுக்கொள்ளப்படும்வரை அல்லது வழிவிலகி உலகத்தாரில் ஒருவனாகும் வரை இப்படிக் கருதப்படுவார்கள்.

தேவனுடைய பெட்டியைக் கொண்டுவர தாவீது இராஜா முதல் முயற்சியில் தோல்வியடைந்து, பின்னர் மூன்று மாதத்திற்குப்பிறகு, அதை மறுபடியும் கொண்டுவரத் தயாரானார். இந்த முறை காரியங்களை ஜாக்கிரதையாகஆ ராய்ந்துஅ றிந்திருந்தார்.இ ந்தமு றைபு தும ாட்டுவ ண்டிஏ துமில்லை.ெ தய்வீக வழிநடத்துதலுக்கு ஏற்ப லேவியர்கள் உடன்படிக்கைப் பெட்டியைத் தங்கள் தோளில் சுமந்துகொண்டு வந்தார்கள். தேவனுடைய முறைமைகளில் மற்றும் ஊழியங்களில் நமது நூதன கண்டுபிடிப்புகளுக்கோ, நமது சாமர்த்தியத்திற்கோ இடமில்லை. வேதமாணவனாக இருந்து, வேத வாக்கியங்களை ஆராய்ந்து, தேவனுடைய சித்தம் இன்னதென்று அறிந்து அதைச் செய்ய வேண்டும். தாவீது இராஜா கற்றுக்கொண்ட இந்தப் பாடத்தை, தேவனுடைய ஜனங்கள் அனைவரும் மனதில் நன்றாகப் பதிய வைத்துக்கொள்ள வேண்டும்.

## கர்த்தருக்கு முன்பாக நடனமாடுதல்

தேவனுடையப் பெட்டி திரும்பிவருவதை, தேவனே தங்கள் தேசத்திற்குத் திரும்பிவருவதாக நினைத்து, இந்த மாபெரும் நிகழ்வாகிய ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான யுத்த வீரர்கள் பாதுகாப்பிற்காகவும், ஊர்வலத்துக்குக் கௌரவம் கொடுப்பதற்காகவும் வந்தார்கள்; வழியில் கிராமங்களில் இருந்த திரளான ஜனங்களும், எக்காளம் ஊதுகிறவர்களும், கீதவாத்தியங்கள் வாசிப்பவர்களும், இன்னும் ஆர்ப்பரிப்பவர்கள் அனைவரும் சந்தோஷத்துடன் வந்தார்கள். இந்த நிகழ்வுக்காக தாவீது இராஜா இயற்றிக் கொடுத்த சங்கீதத்தின் வெவ்வேறு பகுதிகளை ஒவ்வொன்றாக, லேவியர் பாடிக்கொண்டு வரக்கூடிய ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. இது நிகழ்வின் ஒரு பாகமாக ஏற்பாடுபண்ணப்பட்டிருந்தது. (சங்கீதம் 24)

தாவீது இராஜா மற்றவர்களோடு சேர்ந்துகொண்டு, கர்த்தருக்கு முன்பாக நடனம் பண்ணிக்கொண்டு வந்து தனது சந்தோஷத்தை வெளிப்படுத்தினார். இசைக்கு இசைவாகப் பாதங்களை அசைக்கும் வழக்கம் இன்றைக்கும் தூரத்தேச கிழக்கத்திய நாடுகளில் ஒரு வழக்கமாக இருக்கின்றது. இந்தியாவில் கிறிஸ்தவ ஊழியர்களின் கூட்டத்தில் இப்படிப்பட்ட ஒரு நடன நிகழ்ச்சி எவ்வளவு அழகாகவும், கண்ணியமாகவும் காணப்பட்டது என்று திரு Clark -என்பவர் நமக்குக் கூறுகின்றார்.

மகா பெரிய ஊர்வலம் எருசலேம் நகரத்தை நெருங்கும்போது, நகரத்தின் பெண்கள் சந்தோஷத்துடன் அதை வரவேற்றார்கள். அந்தக் கூட்டத்தின் தலைவியாக, தாவீதின் மனைவியும், சவுல் இராஜாவின் மகளுமான மீகாள் இருந்திருக்க வேண்டும். ஆனால் அவள் அப்படி இருந்திருக்கவில்லை. அவள் குற்றம் கண்டுபிடிக்கிற பெருமையான மனநிலையில் இருந்தாள். அவள் சவுல் இராஜாவின் மகள்

அல்லவா? அவளது கணவனாகிய தாவீது ஏழை ஆட்டிடையனாகவும், சில காலம் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டிருந்தவராகவும் இருந்தவர் அல்லவா? தாவீது வீட்டிற்கு வந்தபோது, தேவனுடைய பெட்டியைக் கொண்டுவந்தபோது, அவர் தனது சந்தோஷத்தை இப்படியெல்லாம் வெளிப்படுத்திக் காண்பித்தப் படியினால், அவள் தாவீதைக் குறைகூறினாள். அது அவமானமாக இருந்தது என்று கூறி அவரைக் கடிந்துகொண்டாள். அதற்கு தாவீது இராஜா, அவளுடைய தகப்பனிடமிருந்து இராஜ்யபாரத்தை எடுத்து தேவன் தனக்குக் கொடுத்ததை நினைவுபடுத்தி, தான் இப்படியாகத் தேவனுடைய கிருபையைப் பெற்றதாகவும், அதனால் அவர் மேல் பற்று வைத்திருந்ததாகவும் கூறினார். தற்பெருமை கொண்ட அந்த ஸ்திரீ தன் வாழ்நாள் முழுவதும் பிள்ளையில்லாதிருந்தாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதைத் தவிர்த்து அவளைப்பற்றின எந்தப் பதிவுகளும் இல்லை.

## சங்கீதம் தீர்க்கத்தரிசனமாக இருந்தது
## சங்கீதம் 24

உடன்படிக்கைப்பெட்டி, கிறிஸ்துவைக் குறிக்கின்றது. தேவனுடைய வல்லமை, ஞானம் எல்லாம் அவருக்குள் மறைந்திருக்கின்றது. மனிதர்களுக்கான தேவ ஆசீர்வாதங்கள் அவருக்குள் மையப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆகையால் தேவனுடைய பெட்டியை நகரத்திற்குள் கொண்டுவருவது, நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கு ஒப்பாக இருக்கின்றது. இப்படிப்பட்டவர்கள் பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையவைகள் என்பதையும், நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பிதாவினிடத்திலிருந்து குமாரன் மூலமாக இறங்கி வருகின்றது என்பதையும் உணருகின்றார்கள். உலகமும், அதில் வாசம் செய்கிற அனைவரும் இந்த ஆசீர்வாதங்களைப் பெறப்போகின்றவர்களாக இருப்பார்கள்.


தேவன் தமது புதிய முறைமைகளைத் திருப்தியற்ற சமுத்திரங்களின் நடுவே, அதாவது தேவனோடு ஒழுங்குக்கும், இசைவுக்கும் வராதிருக்கிற அமைதியற்ற ஜனங்களின் மத்தியிலே ஸ்தாபித்துக் கொண்டிருக்கின்றார். அவர் நம்மை அவரது பரிசுத்த பர்வதத்திற்கு, அவரது பரிசுத்த இராஜ்யத்திற்கு ஏறும்படியும், அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில், ஆவிக்குரிய தெய்வீகச் சுபாவத்தில் ஸ்தாபிக்கப்படுவதற்கும் அழைக்கின்றார். சில குறிப்பிட்ட நிபந்தனைகளில்லாமல் யாரும் இந்த வகுப்பினராக முடியாது என்று அவர் திட்டவட்டமாய்த் தெரிவித்துள்ளார்; அதாவது பரிசுத்தமான இருதயம், நேர்மையான இருதயம், சுத்தமான கைகள், தன்னால் முடிந்தவரை நீதியாக ஜீவித்தல் போன்றவைகள் அந்த நிபந்தனைகளாகும். அவர்கள் தேவனுக்கு வாக்குறுதி கொடுக்க எதிர்பார்க்கப்படுகின்றனர். இது தேவனுடனான அவர்களது உடன்படிக்கை என்று அழைக்கப்படுகின்றது.

இப்படி உடன்படிக்கைப் பண்ணினவர்களில் முதலாவது இயேசு ஆவார். சபை அங்கங்கள் யாவரும் அவரது பரிசுத்த இராஜ்யத்தில் அவரோடு இருக்க வேண்டுமென்றால், அவர்கள் அவரது அடிச்சுவட்டில் நடக்க வேண்டும். இவர்கள் சூதாக உடன்படிக்கை செய்யவோ, வஞ்சகத்திற்குத் தங்களது ஆத்துமாவை உட்படுத்தவோ கூடாது. தம்மோடு உடன்படிக்கை செய்யும்படிக்குத் தேவன் அவர்கள் அனைவரிடமும் எதிர்பார்க்கின்றார். இப்படிப்பட்டவர்கள் மட்டும்தான் கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள்; இப்படிப்பட்டவர்களுக்கு மட்டும்தான் கிறிஸ்துவின் நீதி சாற்றப்படும்.

முற்காலங்களில் அல்ல, தற்காலத்தில்தான் இப்பாடம் மனதில் அதிகமாய்ப் பதிய வைக்கப்படுவதின் அவசியம் காணப்படுகின்றது. தேவனுடன் பலியின் உடன்படிக்கையையும், உறுதிமொழியையும் செய்தவர்களில், எத்தனைப்பேர் இன்றைக்கும் தாங்கள் இதைக் கவனிக்காமலும், உறுதிமொழியைக் கடைபிடிக்காமலும் இருப்பதை ஒத்துக்கொள்கின்றார்கள்! எத்தனைப்பேர் வெளியரங்கமாக தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, ஆனால் அந்தரங்கத்தில் அதை மறுதலித்து, தங்களது விசுவாசக்

கொள்கைகளைப்பற்றி தாங்கள் தவறாகப் பேசுவதாக ஒத்துக்கொள்கின்றார்கள்! இப்படிப்பட்ட செயல்களெல்லாம் தேவனுடைய பார்வையில் நிச்சயமாகக் குற்றமாகக் காணப்படும். இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய இராஜ்யத்திற்குரியவர்களாகுவதற்கு எதிர்பார்ப்பு வைக்க முடியாது.

பிறகு சங்கீதத்தில் ஓர் அறிவிப்பு கொடுக்கப்படுகின்றது; அதாவது இஸ்ரயேலின் பிள்ளைகளே அவரைத் தேடுகின்றார்கள், இன்னுமாக மரணத்திலிருந்தும், பாவத்திலிருந்தும், பாவத்தின் வல்லமையிலிருந்தும் மீட்கக்கூடிய வல்லமையும், அதிகாரமுமுள்ள கர்த்தராகிய மகிமையின் இராஜா வரவேண்டும் என்று வேண்டுதல் செய்கின்றார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மகிமையான இராஜாவின் பிரவேசத்திற்காக நாம் இன்னும் காத்துக்கொண்டிருக்கின்றோம். உலகத்தைப் பொறுத்தவரை ஜுவாலித்து எரிகிற அக்கினியில் அவர் வெளிப்படுத்தப்படுவார் என்று அவர் தெரிவித்துள்ளார். யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலத்தில் அவர் வெளிப்படுத்தப்படுவார் (தானியேல் 12:1). இந்த நெருக்கடி, ஏற்கெனவே பரவி வரும் பயங்கரமான யுத்தத்தில் தொடங்கிவிட்டதாக அநேக வேதமாணவர்கள் காண்கின்றார்கள். மேலும் அவர்கள் அதன் பலனாகக் கொடிய அராஜகம் விரைவில் வரும் என்று எதிர்பார்க்கின்றார்கள். பிறகு மிகவும் மெல்லிய சத்தம் சீக்கிரத்தில் வரும்; அது இரட்சகரின் வல்லமையுள்ள அதிகாரம், தெய்வீக ஆதிக்கம் ஆகும்; அது ஆயிரம் வருடங்கள் கட்டப்படப் போகிற சாத்தானிடமிருந்தும், மரணம் மற்றும் பாவத்திலிருந்தும் இரட்சிக்கும்.



**ஜனங்கள் பாடினார்கள் - Lifeway collection**

R2010

# தாவீதிற்குத் தேவன் பண்ணின வாக்குத்தத்தங்கள்

## 2 சாமுயேல் 7:4-16

கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன், நான் ஒருபோதும் வெட்கம் அடையாதபடி செய்யும்.
- சங்கீதம் 71:1

தாவீதின் வாழ்க்கை நன்கு சென்றுக்கொண்டிருந்தது; இவரது இராஜ்யபாரம் செழிப்போடு காணப்பட்டது; தேசம் சமாதானத்தையும், இளைப்பாறுதலையும் அனுபவித்துக்கொண்டிருந்தது; ஜனங்கள் ஒன்று சேர்ந்திருந்தனர்; பெட்டி எருசலேமில் காணப்பட்டது; தேசத்தின் மத வைராக்கியமானது புத்துயிரடைந்திருந்தது. இந்த ஆசீர்வாதங்கள் அனைத்திற்காகவும் தாவீது நன்றியுடையவராய்க் காணப்பட்டார்; தனது நன்றியுணர்வினை வெளிப்படையாய் வெளிப்படுத்த விரும்பினவராக, இவரது எண்ணம் தேவனுடைய பெட்டியின்மீது கடந்துபோனது; தான் கேதுரு மரங்களினால் கட்டப்பட்ட வீட்டில் குடியிருக்கையில், தெய்வீகப் பிரசன்னத்திற்கு அடையாளச் சின்னமாகக் காணப்பட்ட பெட்டி, தற்காலிகமான கூடாரத்தில் அல்லது ஆசரிப்புக்கூடாரத்தில் காணப்படுகின்றதே என்று எண்ணினார்; ஆகையால் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, கர்த்தருடைய பிரசன்னத்திற்குரிய அடையாளச் சின்னம், நிலையான ஓரிடத்தில் காணப்படத்தக்கதாக, கர்த்தருக்காக ஆலயம் ஒன்றைக் கட்டவேண்டும் என்று எண்ணினார்.

இந்த எண்ணத்தை மனதில்கொண்டவராக, தாவீது நாத்தான் தீர்க்கத்தரிசியோடு ஆலோசனைபண்ணினார்; தீர்க்கத்தரிசியும் இந்த அவருடைய மேன்மையான நோக்கத்தை நடைமுறைபடுத்துவதற்குத் தாவீதை ஊக்கப்படுத்தினார். இரண்டு மனுஷர்களும் கர்த்தருக்கு உயர்ந்த கனத்தையும், மரியாதையையும் செலுத்த வேண்டும் என்று வாஞ்சித்தனர்; மேலும் இப்படிச் செய்வதற்குரிய வேளையும் வந்துவிட்டது என்று எண்ணினார்கள். எனினும் இவ்விஷயத்தில் இவர்கள் தவறாய்ச் சிந்தித்திருக்கின்றனர்; அன்று இரவு தேவன் நாத்தானிடம்: நீ போய் என் தாசனாகிய தாவீதை நோக்கி....... என்று கூறச் சொன்னார்.

நிலையான வாசஸ்தலத்தை கட்டுவதற்குரிய தம்முடைய வேளை இன்னும் வரவில்லை என்றும், இது சம்பந்தமாய்த் தாம் எந்தக் கட்டளையையும் கொடுக்கவில்லை என்றும், நீங்கள் எனக்குக் கேதுரு மரத்தால் செய்யப்பட்ட ஆலயத்தைக் கட்டாதிருக்கிறது என்ன? என்று தாம் எந்தக் கேள்வியினையும் கேட்கவில்லை என்றும் தேவன் தாவீதிற்குச் சுட்டிக்காட்டினார் (வசனம் - 7). சில காலங்களாக தேசம் சமாதானத்தையும், இளைப்பாறுதலையும் அனுபவித்துக்கொண்டிருக்கின்ற போதிலும், வெற்றியடைய வேண்டிய விஷயங்களும், ஸ்தாபிக்கப்பட வேண்டிய விஷயங்களும் அநேகம் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது; மேலும் இவைகள் ஆலயம் கட்டும் பணியினைக் குறுக்கிடுகிறதாகக் காணப்படும் என்று தாவீதிற்குச் சுட்டிக்காண்பித்தார்; இதுவுமல்லாமல் இஸ்ரயேல் ஜனங்கள் தேசத்தை முழுமையாகக் கைப்பற்றி, தங்கள் சத்துருக்களைக் கீழ்ப்படுத்துவதற்கு முன்புவரையிலும், அவர்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்தில் தாங்கள் உறுதியாய் ஸ்திரப்பட்டிருப்பதாகக் கருதவும் கூடாது; இதைச் செய்த பின்னரே, ஜனங்கள் தங்களை நிலைக்கொண்டிருப்பவர்களாகக் (settled) கருதிக்கொள்ள வேண்டும் என்றும், பின்னர்க் கர்த்தருக்காக நிரந்தரமான வாசஸ்தலத்தைக் கட்டவேண்டும் என்றும் தாவீதிற்குத் தேவன் சுட்டிக்காண்பித்தார்.



தாவீது போரடிக்கிற களத்தை விலைக்கு வாங்குதல் - William Hole.

இன்னுமாக இந்த ஆயத்தப்படுத்தும் வேலைக்கு, தாவீதின் ஆளுகையினுடைய முழுக்காலமும் எடுத்துக்கொள்ளும் என்பதும் சுட்டிக்காண்பிக்கப்பட்டது; எனினும் தாவீதின் நோக்கத்திற்குப் மதிப்பளிக்கப்படுகின்றது என்று தாவீதிற்கு உறுதிப்படுத்தப்பட்டது; இன்னுமாகத் தேவனுடைய வேளை இன்னும் வரவில்லை என்றபோதிலும், அது தாவீதின் காலங்களில் வருவதில்லை என்றபோதிலும், தாவீதின் குமாரனும், வாரிசுமானவர் ஆலயத்தைக் கட்டுவார் என்று தாவீதிற்கு உறுதிப்படுத்தப்பட்டது; குமாரன் சமாதானமான, செழிப்பான ஆளுகையைப் பெற்றிருப்பார் என்றும், ஆலயத்திற்குத் தேவையான பொருட்களைச் சேகரிப்பதன் மூலமும், ஆயத்தப்படுத்துவதன் மூலமும், சத்துருக்களைக் கீழ்ப்படுத்துவதன் மூலமும், இராஜ்யபாரத்தின் காரியங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலமும், தன் குமாரன் சமாதானமாய் ஆளுகைசெய்வதற்கு, தாவீது வழியை ஆயத்தம்பண்ணுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றார் என்றும் தாவீதிற்கு உறுதிப்படுத்தப்பட்டது. இந்த வேலைக்காகவே தாவீது நியமிக்கப்பட்டிருந்தார்; இவர் சமாதானத்தை விரும்புகிற மனுஷனாக இருந்தாலும், இவர் ஒரு யுத்த புருஷனாகக் காணப்பட்டார்.

தாவீதின் குமாரனும், இவரது சிங்காசனத்திற்கு வாரிசுமானவருடைய செழிப்பான ஆளுகைகுறித்த இந்த வாக்குத்தத்தத்தைப் பார்க்கும்போது, சாலொமோனில் நிறைவேறின காரியங்களைவிட அதிகமான காரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றது என்பது தெளிவாய்த் தெரிகின்றது. உண்மைதான் சாலொமோனின் ஆளுகை வரலாறு காணாதளவு செழிப்புடன் காணப்பட்டது; மேலும் இவர் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டினார்; எனினும் இவரது இராஜ்யபாரம் முடிவிற்கு வந்தது; மகிமை மறைந்துபோனது; ஆலயம் இல்லாமல் போனது; ஆனால் தாவீதிற்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தமோ, உன் வீடும், உன் இராஜ்யமும் என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்; உன் இராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும் என்று காணப்பட்டது. (2 சாமுயேல் 7:16)

அந்த வாக்குத்தத்தத்திற்கு அல்லது தீர்க்கத்தரிசனத்திற்கு இரண்டு பொருள் உள்ளது என்பதே உண்மை; பகுதி மாத்திரமே சாலொமோனுக்கும், இவரால் கட்டப்படப்போகும் ஆலயத்திற்கும் பொருந்தும்; பின்னர் அது தாவீதின் மாபெரும் குமாரனும், ஆண்டவருமான, நமது கர்த்தராம் இயேசு கிறிஸ்துவுக்குப் பொருந்தும்; இவரது இராஜ்யம் உண்மையில் நித்திய இராஜ்யமாகக் காணப்படும்; இவருடைய மகிமையான

ஆளுகைக்கு முடிவே இல்லை; இன்னுமாக மகிமையான ஆவிக்குரிய ஆலயமாகிய, சுவிசேஷயுக சபைக்கும் பொருந்தும்; இந்தச் சபையானவள், தனது தலையானவரோடுகூட உயர்த்தப்பட்டு, மகிமைப்படுத்தப் படுவாள்; இவர்களையே முழு உலகமும் ஆயிர வருட ஆளுகையின்போது தொழுதுகொள்ளும். தாவீதின் ஆளுகை, அதாவது யுத்த புருஷனாகிய இவர், இந்தச் சுவிசேஷயுகத்தினுடைய ஆயத்த வேலைகளுக்கு நிழலாகக் காணப்படுகின்றார் - அதாவது பாவத்தை எதிர்ப்பதின் காரணமாக தேவ ஜனங்களுக்குக் காணப்படும் போராட்டங்களுக்கும், ஆவிக்குரிய ஆலயத்தின் ஜீவனுள்ள கற்களை ஆயத்தம்பண்ணு வதற்கும் நிழலாகக் காணப்படுகின்றார்; ஆனால் சாலொமோனின் ஆளுகையானது, கிறிஸ்துவினுடைய மகிமையான ஆளுகையினையும், அந்த ஆளுகையில் காணப்படப்போகும் ஐசுவரியம், ஞானம், சமாதானம் மற்றும் செழிப்பினையும் அடையாளப்படுத்துகின்றது.

இராஜாவின் அரண்மனையைவிடவும், வேறெந்த ஒரு கட்டடத்தைவிடவும் பிரம்மாண்டமானதொரு ஆலயத்தினைக் கர்த்தருக்காகக் கட்டவேண்டும் என்று தாவீதின் நோக்கம் காணப்பட்டது; இந்த நோக்கத்தையே ஜனங்களும் பெற்றிருந்து, கர்த்தருக்கும், அவரது பிரசன்னத்தின் அடையாளச் சின்னத்திற்கும் உரிய தங்களது மேன்மையான பயபக்தியினை வெளிப்படுத்துவதற்கு விரும்பினார்கள்; இன்னுமாக இதற்குக் கர்த்தர் ஒப்புதல் கொடுத்தார், பிற்பாடு இந்த நோக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டது; ஆனால்க ர்த்தரின்இ ந்தஒ ப்புதலும்,த ாவீதும ற்றும்ஜ னங்களின்இ ந்தே நாக்கமும்,இ ன்றுச பை பிரமாண்டமான கட்டடங்களுடனும், ஜாமான்களுடனும், கட்டப்படுவது சரி என்ற கூற்றை நியாயப்படுத்தப்படுவதற்கு ஆதாரமாகச் சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது. ஆனால் இக்காரியங்களை இவ்விதமாக அப்போஸ்தலர்களும், ஆதி திருச்சபையில் இருந்தவர்களும் எடுத்துக்கொள்ளவில்லை; ஏனெனில் அவர்கள் வீடுகள்தோறும் சென்று கூடினவர்களாகவும், மேல்வீட்டறைகளில் கூடினவர்களாகவும், எவ்விதமான சபை கட்டடங்களைக் கட்டாதவர்களாகவும் காணப்பட்டனர்; எளிமையான இடவசதியைப் பெற்றுக்கொள்வதற்குப் பொருத்தமான சில இடங்களை மாத்திரம் தேடினவர்களாகக் காணப்பட்டனர். பல்வேறு வட்டாரங்களில் பிரம்மாண்டமான கட்டடங்களையும், அவைகளுக்கு ஊசிக்கோபுரங்களையும், இன்னுமாக அவைகளை மணிக்கூண்டுகளுடனும், பிரம்மாண்டமான இசைக்கருவிகளுடனும், மெத்தை இருக்கைகளுடனும், கண்ணாடி ஜன்னல்களுடனும், சிறந்த பேச்சாளர்களுடனும், பயிற்றுவிக்கப்பட்ட பாடகர் குழுவுடனும் ஏற்படுத்திக்கொடுப்பது சபையின் கடமையாக இருக்கின்றது என்று தெரிவிக்கும் ஒரு குறிப்பைக்கூடப் புனித வேதாகமத்தின் பதிவுகள் கொடுப்பதில்லை.

(இஸ்ரயேலின்) தேவாலயத்தின் அமைப்பும், அதன் பணிமுட்டுகளும்கூட, இன்றைய காலங்களில் காணப்படும் ஆலயத்தின் காரியங்கள் தொடர்புடைய விஷயத்தில் முன்மாதிரியாகக் காணப்படுகின்றது என்று நியாயப்படுத்திடவும் முடியாது. யூத யுகம், நிழலான யுகமாகக் காணப்பட்டது; அதன் ஆலயமும், அதன் சகல நியமனங்களும், வரவிருக்கும் மேலான ஆவிக்குரிய காரியங்களுக்கு நிழலாகக் காணப்பட்டது; நிழலான ஆலயத்தில் காணப்பட்ட நிழலான பெட்டி, அவரது எதிர்கால ஆவிக்குரிய இஸ்ரயேலின் மத்தியில் காணப்படப்போகும் திவ்விய பிரசன்னத்திற்கு அடையாளமாகக் காணப்பட்டது; நிஜம் வரும்போது நிழல் கடந்துபோய்விடுகின்றது.

இன்னுமாக இன்றைய காலங்களில் காணப்படும் சபை/கிறிஸ்தவ ஆலயங்கள் எந்தவிதத்திலாகிலும் தேவனுக்கு மகிமை செலுத்துவதைவிட, பெருமைக்காகவும், பகட்டிற்காகவும் கட்டப்பட்டிருக்கின்றது

என்பதும், ஐசுவரியவான்களையும், செல்வாக்குமிக்கவர்களையும் கவர்ந்து பிடிக்குள் வைத்துக் கொள்வதற்கும், ஏழைகளை நீக்குவதற்கும்தான் காணப்படுகின்றது என்பதும் வெளிப்படையாகவே தெரிகின்றது. பூமிக்குரிய மகிமைகுறித்த வீணான பாசாங்குகளினால், நாம் வஞ்சிக்கப்படாமல் இருப்போமாக; இவைகளை விட்டு நீங்கி, கர்த்தருடைய நாமத்தில் எங்கே இரண்டு அல்லது மூன்றுபேர் கூடுவார்களோ, அதுவே தேவனுடைய ஆலயமாக/வீடாக இருக்கின்றது என்பதையும், இங்கு அவரது மகிமை காணவும், உணரவும்படலாம் என்பதையும் நினைவில்கொள்வோமாக. (யோவான் 4:23-24; மத்தேயு 18:20)

R1364 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# கிருபையான அழைப்பு

அழைப்பிற்குச் செவிகொடுத்தவர்களுக்கு வரும் ஜீவன்பற்றின வாக்குத்தத்தத்தையும் தாண்டி, இன்னுமாக இந்த ஈவை விசுவாசத்தின் மூலம் பெற்றுக்கொள்வதினால் வரும் இப்போதுள்ள திருப்தியையும் தாண்டி, ஒரு விசேஷித்த வாக்குத்தத்தம் கொடுக்கப்படுகின்றது; அது: தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன் என்பதாகும் [தமது நேசகுமாரனுக்குச் சொந்தமான மற்றும் நிச்சயமான பரிசுத்த வாக்குத்தத்தங்களில், அவர்கள் பகிர்ந்து கொள்வார்கள் என்று அவர்களுடன் ஓர் உடன்படிக்கையினைத் தேவன் செய்வார் - அது வரவிருக்கும் உலகத்தின் இராஜ்யம், வல்லமை மற்றும் மகிமை பற்றியதாகும்] (ஏசாயா 55:3). தாவீது என்ற பெயருக்கான அர்த்தம் பிரியமானவன் ஆகும்; இது நமது கர்த்தரை, தேவனுடைய நேசகுமாரனைக் குறிக்கின்றது என்று அப்போஸ்தலன் சுட்டிக்காண்பிக்கின்றார் (அப்போஸ்தலர் 13:33-34). இவ்விடத்தில் இடம்பெறுவதுபோல, தாவீது எனும் பெயர், சிலசமயங்களில் தேவனுடைய நேசகுமாரனைச் சுட்டிக்காட்டுவதற்கு என்று தீர்க்கதரிசனத்தில் மாத்திரம் பயன்படுத்தப்படாமல், சங்கீதம் 22:1, 17-18-ஆம் வசனங்களில் காணப்படுவதுபோன்று, தாவீதுதாமே அடிக்கடி நமது கர்த்தருக்கு நிழலாகக் காண்பிக்கப்படுகின்றார். இதுவுமல்லாமல் நமது கர்த்தருக்கு உரியது என்றும், அவரோடுகூட பங்கடையும்படிக்கு சுவிசேஷயுகத்தில் நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்றும் இங்குக் குறிப்பிடப்பட்டிருக்கும் இந்த நிச்சயமான கிருபைகள் அல்லது பரிசுத்தமான வாக்குத்தத்தங்கள், தாவீது இராஜாவுக்குப் பண்ணப்பட்டது (2 சாமுயேல் 7:8-16); இந்த வாக்குத்தத்தத்தின் பொருள் கிறிஸ்துவைப்பற்றியதாக இருப்பினும், நிச்சயமாகவே இதற்குப் பகுதியளவில் சொல்லர்த்தமான நிறைவேறுதலும் காணப்பட்டிருக்கும்.

(கிறிஸ்துவுக்கு) தாவீதுக்கு அருளப்பட்ட இந்த நிச்சயமான கிருபைகள் அல்லது பரிசுத்தமான காரியங்கள் சங்கீதம் 89:20-37 வரையிலான வசனங்களில் தெளிவாய் முன்வைக்கப்பட்டுள்ளன:

(1) கர்த்தர், இவரை மகா இராஜாவாக அபிஷேகம்பண்ணுவார் என்றும், இவரது சிங்காசனத்தை என்றென்றும் - அதாவது சூரியனும், சந்திரனும் காணப்படுவதுவரையிலும் ஸ்திரப்படுத்துவார் என்றும் சொல்லப்பட்டுள்ளது; (2) இவரை எந்தச் சத்துருவும் ஒடுக்குவதில்லை, மாறாக அனைவரும் இவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டிருப்பார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது; (3) பூமியின் குடிகள் யாவரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்ற தேவனுடைய உடன்படிக்கையை இவர் நிலைநிறுத்துவார் அல்லது இவரது ஆளுகையில் நிறைவேற்றப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது; (4) (மீட்பின் காரணமாகவும், மறுஜென்மத்தின் காரணமாகவும் வரும்) இவரது பிள்ளைகள் நீதியில் சீர்ப்பொருத்தப்படுவதற்கும், ஸ்திரப்படுத்தப்படுவதற்கும் அவசியமான, சீர்த்திருத்தத்திற்கடுத்த பயிற்சிகள்/சிட்சைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்வார்கள்

என்று சொல்லப்பட்டுள்ளது; (5) யார் விருப்பமும், கீழ்ப்படிதலுமுள்ளவர்களாகக் காணப்பட்டு சீர்த்திருத்தத்திற்கடுத்த பயிற்சிகளினால்/சிட்சைகளினால் நன்மைகள் அடைகின்றார்களோ, அவர்கள் என்றென்றும் நிலைத்திருப்பார்கள் - இப்படியாக அவர் தம்முடைய ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாய் இருப்பார் என்று சொல்லப்பட்டுள்ளது.

R3258

# தாவீதின் உடன்படிக்கை

## 2 சாமுயேல் 7:4-16

உன் இராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும். - 2 சாமுயேல் 7:16

தாவீது, சமஸ்த இஸ்ரயேல்மீது தனது ஆளுகையை செய்துகொண்டிருந்த முதல் ஆறு வருடங்களில், அவர் இஸ்ரயேலின் சத்துருக்களை எதிர்ப்பதிலும், ஆரம்பத்தில் தேவன் உத்தரவிட்டிருந்தவைகளுக்கு இசைவாகவே தேசத்தின் எல்லைகளை விரிவுபடுத்துவதிலும் சுறுசுறுப்பாய் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். இக்காரியங்களையெல்லாம் ஓரளவுக்குச் செய்துமுடித்தவராகவும், எருசலேமில் தனக்கென்று அரண்மனை ஒன்றை கட்டினவராகவும் தாவீது காணப்படுகையில், இவரது சுபாவத்திலுள்ள பயபக்தியான உணர்வுகள், இஸ்ரயேலின் மகா இராஜாவாகிய யேகோவாவின் நிழலான வாசஸ்தலம், ஓர் ஆசரிப்புக்கூடாரமாக இருக்க, தான் அரண்மனையில் வாழ்வது முரண்பாடான காரியமாக இருக்கின்றதே என்று கவனித்தது. ஆசரிப்புக்கூடாரத்திற்குப்பதிலாக ஆலயம் ஒன்றைக் கட்டும் யோசனையை இவரது பயபக்தியின் உணர்வுகள் உடனடியாக முன்வைத்தன; இவரும் இதைத் தீர்க்கத்தரிசியாகிய நாத்தானோடு சரியாய் ஆலோசனைபண்ணினார்; தீர்க்கத்தரிசியும், இராஜா கர்த்தருக்குக் கொண்டிருக்கும் உண்மைக்கான இந்த வெளிப்பாட்டில் களிகூர்ந்தவராக, இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தார். எனினும் அன்றைய இரவு கர்த்தர் இராஜாவுக்குச் சொல்லும்படியான செய்தி ஒன்றினைத் தீர்க்கத்தரிசிக்குக் கொடுத்தார்; அந்தச் செய்தியில், தாவீதின் நோக்கங்களுக்கு மதிப்புக்கொடுக்கப்பட்டாலும், அவைகள் செய்யப்படுவதற்குக் கர்த்தர் மறுப்புத் தெரிவித்தார்; இன்னுமாக கர்த்தருடைய பிரசன்னம் ஒரு நிரந்தரமான கட்டடத்தில் இல்லாமல், ஒரு கூடாரத்தில் வெளிப்படுவதற்குரிய காரணம், கர்த்தர் இதைக்குறித்துச் சிந்தித்துப்பார்க்கவில்லை என்பதினால் அல்ல என்றும், தம்முடைய ஆணையின்பேரில் தமக்கு ஓர் ஆலயத்தைக் கட்டுவதற்குத் தம்முடைய பணிவிடைக்காரர்களில் உள்ள மற்றவர்கள் மகிழ்ச்சியாய் இருக்கமாட்டார்கள் என்பதினால் அல்ல என்றும், வேறு விதத்தில் தெய்வீகத் திட்டம் காணப்படுவதே காரணம் என்றும் அச்செய்தியில் விவரிக்கப்பட்டிருந்தது. விவரிக்கப்படாத ஏதோ சில காரணங்களுக்காக, கூடாரமே அப்போது விரும்பப்பட்டது. எனினும் சில காலங்களுக்குப் பின்னர், தமக்கு ஒரு நிரந்தரமான ஆலயத்தை ஏற்படுத்துவார் என்றும், அதைத் தாவீதின் வாரிசும், குமாரனுமானவர் கட்டுவார் என்றும் கர்த்தர் தாவீதிற்கு உறுதியளித்தார்.

இந்த ஒரு நிகழ்விலிருந்து, கர்த்தருடைய ஜனங்கள் விலையேறப்பெற்ற பாடம் ஒன்றைக் கற்றுக்கொள்ளலாம். நம்முடைய திட்டங்களும், முறைகளும் பயபக்தியானவைகளாகவும், தேவனுக்கு மகிமை கொண்டுவருபவைகளாகவும் இருக்கின்றபடியால், அவைகள் தெய்வீக அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நாமாகவே முடிவுசெய்துகொள்ளக்கூடாது. தாவீதிற்குக்

காணப்பட்டதுபோலவே, ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் விஷயத்திலும்கூட, என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப்பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது என்ற வார்த்தைகள் அடிக்கடி உண்மையாகவே காணப்படுகின்றது (ஏசாயா 55:8-9). தேவனுடைய இருதயத்திற்கேற்ற தாவீதின் பண்புகளை உடையவர்கள், தாவீது நாத்தானோடு ஆலோசனை பண்ணிக்கொண்டதுபோலவே, தாங்கள் யாருடைய பகுத்துணர்வு உதவிகரமாய்க் காணப்படும் என்று கருதுகின்றார்களோ, அவர்களோடு ஆலோசனை பண்ணிக்கொள்பவர்களாகக் காணப்படுவதோடு மாத்திரமல்லாமல், ஒருவேளை கர்த்தர் தங்கள் சிறந்த தீர்மானங்களை நிராகரித்து, தங்கள் திட்டங்களைத் தாங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு உதவியருளவில்லையெனில், இத்தருணத்தில் தாவீது செய்ததுபோலவே, நடந்துகொள்வார்கள்; இவர்கள் முறுமுறுப்பில்லாமல் கர்த்தருடைய திட்டங்களை எதிர்ப்பின்றி ஏற்றுக்கொண்டு, அதற்குத் தங்கள் ஒத்துழைப்பைக் கொடுத்துவிடுவார்கள்; இப்படியாகக் கர்த்தர் கனப்படுத்த விரும்பும் மற்றும் பிரியமானவன் என்று அழைக்க விரும்பும் வகுப்பாராக தாங்கள் காணப்படுகின்றனர் என்பதற்குக் கூடுதல் சான்று பகர்கின்றவர்களாகக் காணப்படுவார்கள். இத்தகையவர்களுக்குக் கர்த்தர் தாவீதுக்கு அருளினது போலவே, வேறு விசேஷித்த ஆசீர்வாதங்களையும், கிருபைகளையும் அருளுவார்.

இந்த ஒரு விஷயத்தில் தாவீதிடம் காணப்பட்ட ஆவி/சிந்தைக்கு இணையான - அதாவது கர்த்தரைக் கனப்படுத்த வேண்டும் என்றும், அவருக்காக ஒரு மாபெரும் வீட்டை அல்லது ஆலயத்தைக் கட்டவேண்டும் என்றுமுள்ள இவரது வாஞ்சைக்கு இணையான, இருதயத்தின் உணர்வுகள் ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவனிடமும் காணப்படுகின்றது. கற்களினால் கட்டப்படும் பிரம்மாண்டமான ஆலயங்களைக் கட்டுவதில் மட்டும் மகிழ்ச்சி கொள்பவர்களைக்குறித்து நாங்கள் இங்குக் குறிப்பிடாமல், மாறாக தற்காலத்தின் சபையை ஒழுங்குபண்ணுவதற்கும், அதன் மேன்மையிலும், கர்த்தருக்கான அதன் அமைப்பு, இயக்கம் மற்றும் ஊழியத்திலுள்ள அதன் முழுமையிலும் மேன்மைபாராட்டுவதற்கும் நோக்கம் கொண்டிருப்பவர்களையே நாங்கள் விசேஷமாய்க் குறிப்பிடுகின்றோம். சரியான இருதய நிலையில் காணப்படாதவர்கள், கண்மூடித்தனமாகச் செயல்படுபவர்கள், சுயசித்தம்கொண்டவர்கள், தங்கள் நல்நோக்கங்கள் கர்த்தருக்குப் பிரியமாய் இருக்குமென்று நம்பிக்கைகொண்டிருப்பவர்கள், பல்வேறு அமைப்புகளைக்/கட்டமைப்புகளைக் கட்ட முன்னேறியுள்ளனர்; மேலும் இவர்களில் ஒவ்வொருவனும், தன்னால் கட்டப்பட்டது கர்த்தருடைய ஆலயம் என்றும் கூறிக்கொள்கின்றான். இது விஷயமான தெய்வீக அறிவுரைகள் என்னவென்று இவர்கள் தேடாமலும், அவைகளைப் பெற்றுக்கொள்ளாமலும் காணப்பட்டு, தங்கள் சொந்தக் கோட்பாடுகளைப் பின்பற்றுகிறவர்களாகக் காணப்படுகின்றபடியால், இந்தக் கட்டமைப்புகளுக்கு இடையே பெருமளவில் வித்தியாசங்கள் காணப்படுகின்றன; இவைகள் ஒவ்வொன்றும், இவைகளைக் கட்டினவர்களுக்குச் சரியான மற்றும் ஏற்ற மற்றும் பொருத்தமான தேவாலயமாகத் தோன்றுகின்றது. இத்தகைய ஆலயங்கள் இன்று பல்லாயிரக்கணக்காகக் காணப்படுகின்றது; இவைகளில் மிகவும் பெரியவைகளாகவும், ஆதிக்கம்கொண்டவைகளாகவும், உரோம கத்தோலிக்க ஆலயங்களும், கிரேக்க கத்தோலிக்க ஆலயங்களும், சர்ச் ஆப் இங்கிலாந்து ஆலயங்களும், மெத்தடிஸ்ட் ஆலயங்களும், லுத்ரன் ஆலயங்களும், பிரஸ்பைட்டேரியன் ஆலயங்களும், பேப்டிஸ்ட் ஆலயங்களும், காங்கிரிகேஷன் ஆலயங்களும், இன்னும் பல ஆலயங்களும் காணப்படுகின்றன.

ஆனால் ஒரு சிறு வகுப்பார் தாவீதின் மாதிரியைப் பின்பற்றுகின்றனர்; தற்போதைய காலம், ஆலயம் கட்டுவதற்குரிய காலம் அல்ல என்றுள்ள கர்த்தருடைய அறிவுரையினை ஏற்றுக்கொள்கின்றனர்; இன்னுமாக தாம் விரும்பியிருந்தால் தம்முடைய ஆலயத்தைத் தாம் கட்டியிருப்பார் என்றும், ஒருவேளை ஆலயம் கட்டவேண்டுமென்று விரும்பியிருந்தால், அநேகர் தமக்கு ஊழியம் ஆற்ற விரும்பியிருப்பார்கள் என்றும், தற்காலத்தில் தம்முடைய பிரசன்னம் மிகவும் எளிமையான மற்றும் ஆரவாரமற்ற விதத்தில் உலகில் இருக்கவே தாம் விரும்புகின்றார் என்றுமுள்ள கர்த்தருடைய அறிவுரையினை ஏற்றுக்கொள்கின்றனர். கர்த்தருடைய ஏற்றவேளையிலும், விதத்திலும் வெற்றிகரமான ஓர் இராஜ்யத்தின்கீழ், நம்மால் ஒருவேளை தற்காலத்தில் கட்டமுடிகிறதைவிட அதிகம் மகிமையுள்ள ஆலயம் ஒன்று கட்டப்படும் என்றும், அது நிலையான ஓர் ஆலயமாக இருக்கும் என்றும், கர்த்தருடைய மகிமையினால் அது நிரம்பியிருக்கும் என்றுமுள்ள கர்த்தருடைய வாக்குறுதிகளை இத்தகையவர்கள் பெற்றுக்கொள்கின்றனர். தாவீதின் குணலட்சணத்தினை உடையவர்கள் - பிதாவின் *நேசகுமாரனுடைய* இயல்புகளை உடையவர்கள் - அவரது நேச, பிரியமான குமாரனுக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அங்கத்தினர்கள் - தெய்வீக நோக்கங்களைக் குறித்துக் கற்றுக்கொண்ட உடனே, இவர்கள் உடனடியாக தங்களைக் கீழ்ப்படுத்தி, ஒப்புக்கொடுத்து, தெய்வீகத் திட்டத்திற்கு ஒத்துழைத்திடுவார்கள். யுத்த புருஷனாகவும், நீதிக்காகப் போராடுகிறவராகவும், கடுமையாய்ச் சோதிக்கப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்டவராகவும் காணப்பட்ட தாவீது, தற்காலத்தின் போராட்ட நிலைமையில் காணப்படும் தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு அடையாளமாய்க் காணப்பட வேண்டும் என்பதே, நிழலில் இவருக்குக் காணப்பட்ட திட்டமாயிருந்தது; இவர்கள் உலகம், மாம்சம் மற்றும் பிசாசுடன் போராடி, கர்த்தரிலும், அவரது சத்துவத்தின் வல்லமையிலும் தங்கள் இருதயம் மற்றும் விசுவாசத்தில் பெலப்படுகின்றவர்களாகக் காணப்படுகின்றனர். அதே நிழலைப் பார்க்கும்போது, பொன், வெள்ளி மற்றும் விலையேறப்பெற்ற பொருட்களை எதிர்கால ஆலயத்திற்கென்று - அதாவது அதன் கட்டுமானத்திற்குரிய ஆயத்தத்திற்கென்று தயார்செய்வது, தற்காலத்தில் காணப்படும் பணியாக இருக்கின்றது. நிழலில் இவைகள் சொல்லர்த்தமான உலோகங்களாக இருந்தன, ஆனால் நிஜத்திலோ, அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுவதுபோன்று, கர்த்தருடைய பரிசுத்தவான்களே பொன்னாகவும், வெள்ளியாகவும் விலையேறப்பெற்ற கற்களாகவும் காணப்படுகின்றனர்; இவர்கள் வெகு சீக்கிரத்தில், ஆயிர வருட இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகையில், மகிமை, கனம் மற்றும் அழியாமையின் தளத்தில் முற்றும் முழுமையாக வடிவமைக்கப்படுவார்கள்; இன்னுமாகப் பிதாவுடைய ஜீவனாலும், மகிமையினாலும் நித்திய காலத்திற்குமாக நிரப்பப்படுவார்கள். எப்படித் தாவீதும், ஆலயத்திற்காக இவர் செய்யும் ஆயத்தபணிகளும், இந்தத் தற்காலத்திலுள்ள சபைக்கும், வரவிருக்கும் மகிமைகளின் விஷயத்தில் நம்மை நாமும், ஒருவர் இன்னொருவரையும் ஆயத்தம்பண்ணும் நம்முடைய பணிக்கும் அடையாளமாய்க் காணப்படுகின்றதோ, அதுபோலவே பின்வந்த சாலொமோனின் இராஜ்யமும், மகிமையடைந்த கிறிஸ்துவின் இராஜ்யத்தினை - உண்மையான இராஜ்யத்தினை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; இந்த உண்மையான இராஜ்யத்திற்கே, தற்போதுள்ள சபை கருவாகக் காணப்படுகின்றது; இன்னுமாகச் சாலொமோனுடைய ஆலயம் கட்டப்படும் காரியமானது, சபையின் உயிர்த்தெழுதலை அடையாளப்படுத்துகின்றது; இந்த உயிர்த்தெழுதலில் அங்கத்தினர்கள் யாவரும் மகிமையான முழுமையிலும்/பூரணத்திலும் ஆயிர வருட நாளினுடைய விடியலில் ஒன்றுசேர்ந்து வருவார்கள். சாயங்காலத்தில் (நமக்குள்ளும், புறம்பேயும் காணப்படும் சத்துருக்களுடனான நம்முடைய போராட்டங்களின் காரணமாகவும், நீதியின் நிமித்தமான பாடுகளின் காரணமாகவும்) அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும். நிறைவானது

வரும்போது குறைவானது ஒழிந்துபோம் (1 கொரிந்தியர் 13:10; சங்கீதம் 30:5). அதிகாலையிலே தேவன் அவளுக்குச் (சபைக்கு - கிறிஸ்துவின் மணவாட்டிக்கு) சகாயம் பண்ணுவார். (சங்கீதம் 46:5)

தாவீதின் வேண்டுகோளைக் கர்த்தர் மறுத்த இச்சம்பவத்தில், பின்னர் கர்த்தர் அவருக்கு மிகவும் கிருபையான ஊக்கமூட்டுதலைக் கொடுத்தார்; தாவீது முன்னோக்கி எடுத்துவைத்திருந்த ஒவ்வொரு அடியிலும், அவர் பரத்திலிருந்து வழிகாட்டப்பட்டிருக்கின்றார் என்றும், தாவீது கர்த்தரையே தன் வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் உண்மையாய் நோக்கிப்பார்த்திருந்த காரணத்தினாலேயே, அவர் இந்த ஒரு வளர்ச்சியடைந்த நிலையையும், கர்த்தரோடு ஓர் உறவையும், அவர் ஆளும் இராஜ்யபாரத்தையும் இப்பொழுது எட்டியிருக்கின்றார் என்றும் கர்த்தர் தாவீதிற்கு நினைப்பூட்டினார். இப்படியாகவே இன்று ஆவிக்குரிய இஸ்ரயேலரில், தாவீது வகுப்பாராய்க் காணப்படும் யாவரையும் கர்த்தர் ஊக்குவிக்கின்றார். கர்த்தரை நோக்கிப் பார்த்துக்கொண்டிருப்பவர்களும், அவரது வார்த்தைகளுக்குச் செவிசாய்ப்பவர் களுமான அனைவருக்கும், கர்த்தர் தமது வேலையை, தம்முடைய வழியில் செய்துகொண்டிருக்கின்றார் என்றும், நம்மால் திட்டமிட முடிகிற எந்த ஒரு வழியைவிடவும் அவருடைய வழி மிக மேன்மையான வழியாக இருக்கும் என்றும் நினைப்பூட்டப்படுகின்றது. மாம்சீக தளத்திலுள்ள நம்முடைய கீழான நிலைக்குறித்து நமக்குச் சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது; மேலும் நாம் இப்பொழுது காணப்படுகின்ற தேவனுடைய பிள்ளைகள் என்றுள்ள நிலையை, தேவனுடைய சுதந்தரர்கள் என்றுள்ள நிலையை, கர்த்தரோடுகூடப் பாடுபட்டோமானால், நமது கர்த்தராம் இயேசு கிறிஸ்துவோடு உடன்சுதந்தரர்கள் ஆகுவோம் என்றுள்ள நிலையை அடைவதற்குப் படிப்படியாக எவ்வாறு கர்த்தர் தம் கிருபையினால், நம்மை முன்னேற்றிக்கொண்டு வந்துள்ளார் என்பதும் நமக்குச் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. கடந்த கால அனுபவங்களிலிருந்துள்ள பாடங்களை உணர்ந்துகொள்வது நமக்கான காரியமாய்க் காணப்படுகின்றது; இன்னுமாகப் பயங்கரமான குழியிலும், உளையான சேற்றிலுமிருந்து நம்மைத் தூக்கியெடுத்து, நம் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, நம்முடைய நாவுகளில் புதிய பாடலை வைத்தவர், நம்மைத் தொடர்ந்து ஆசீர்வதிக்க வல்லவராய் இருக்கின்றார் என்று விசுவாசம் வைப்பதும் நமக்கான காரியமாய்க் காணப்படுகின்றது; தீர்க்கதரிசிகள், வேதவாக்கியங்கள் மூலமாய்க் கடந்துவரும் அவரது வார்த்தைகளுக்கு நாம் செவிகொடுப்பதற்கு ஏற்ப, நம்மைத் தொடர்ந்து ஆசீர்வதிக்க அவர் வல்லவராய் இருக்கின்றார் என்று விசுவாசம் வைப்பதும் நமக்கான காரியமாய்க் காணப்படுகின்றது.

பாடத்தில் அடுத்து வரும் வசனங்களானது, தாவீது மற்றும் அவரின் மாம்சீக சந்ததிமீதும், மாம்சீக இஸ்ரயேல்மீதும் வரும் மாம்சீக ஆசீர்வாதங்களையும், தாவீதின் நிஜமான குமாரனாகிய மகிமையடைந்த கிறிஸ்து மற்றும் அவரது ஆயிர வருட இராஜ்யத்தின்மூலம் தேவனுடன் உடன்படிக்கை உறவிற்கு வருபவர்கள் யாவரையும் சீர்தூக்கிவிடும் இன்னும் மேன்மையான ஆசீர்வாதங்களையும் கலந்து, ஒருங்கிணைத்துத் தெரிவிக்கின்றது. 10-ஆம் வசனம் சந்தேகத்திற்கிடமின்றி ஓரளவிற்கு மாம்சீக இஸ்ரயேலரின் விஷயத்தில் நிறைவேறியுள்ளது; பல வருடங்களாக மாம்சீக இஸ்ரயேலர்கள் தங்கள் சொந்தத் தேசத்தில், தங்கள் சொந்த உடன்படிக்கையின்கீழ் வாழ்ந்தார்கள் - இந்த அனுபவமானது, நியாயாதிபதிகளின் காலத்திற்கு முன்பிருந்த நிலைமையினின்று மிகவும் வேறுபட்ட அனுபவமாகக் காணப்பட்டது. ஆனாலும் இவர்கள் நிலைநாட்டப்பட வேண்டிய காலமும், இவர்கள் இனிமேலும் இடம் விட்டு இடம் அலையாமலும், இவர்கள் இனிமேலும் நியாயக்கேடுள்ளவர்களால் சிறுமைப்படுத்தப்படாமலும் இருக்கப்போகின்ற காலமும், எதிர்காலத்திலுள்ள பிரம்மாண்டமான திரும்பக்கொடுத்தலின் காலங்களுக்கே

பொருந்தக்கூடியதாய் இருக்கும்; அவர் வாக்களித்திருக்கிறபடியே அப்போது இவர்கள் சிதறியிருக்கின்ற தேசங்கள், ஜாதிகள் அனைத்திடமிருந்து இவர்களைக் கூட்டிச்சேர்ப்பார்; இன்னுமாக இவர்களை இவர்களது சொந்தத் தேசத்திற்குக் கொண்டுவருவார். இந்தத் தீர்க்கத்தரிசனம், தாவீதுக்கு நாத்தான்மூலம் பண்ணப்பட்ட தீர்க்கத்தரிசனத்திற்கு முற்றிலும் இசைவாகக் காணப்படுகின்றது. வேறொரு வேதவாக்கியம் தெரிவிப்பதுபோன்று, பிற்பாடு கர்த்தர் இஸ்ரயேலின் நியாயாதிபதிகளை முன்னிருந்ததுபோலவும், இஸ்ரயேலின் ஆலோசனைக்காரரை ஆதியிலிருந்ததுபோலவும் திரும்பக்கட்டளையிடுவார். அப்போது தாவீதின் வீட்டார், மாபெரும் தாவீதின் மேலான குமாரனாகிய மகிமையடைந்த கிறிஸ்துவில் உறுதியாய்த் திடப்படுத்தப்படுவார்கள். ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தில் காணப்படுகின்றதுபோலவே, இங்கும் மாம்சீக மற்றும் ஆவிக்குரிய சந்ததியினருக்கான வாக்குத்தத்தங்கள் ஏறத்தாழப் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது.ஆ பிரகாமின்ச ந்ததியிலும்,ப ூமிக்குரியஒ ருவ ித்தும்,ஆ விக்குரியஒ ருவ ித்தும் காணப்படுகின்றது; ஒரு சந்ததி கடற்கரை மணலத்தனையாகவும், இன்னொன்று வானத்து நட்சத்திரங்களைப்போலவும் காணப்படுகின்றது - மாம்சீக சந்ததியினர் மற்றும் ஆவிக்குரிய சந்ததியினர் காணப்படுகின்றனர்; மேலும் அப்போஸ்தலன் கூறுவதுபோன்று, ஆசீர்வாதம் என்பது நிச்சயமாக இருவருக்குமே உரியதாகும்; ஒவ்வொருவருக்கும் அவரவருக்கே உரிய பாகம் கடந்துவரும். (உரோமர் 4:16). உரோமர் 11:25-32-ஆம் வசனப்பகுதிகளை ஒப்பிட்டுப்பாருங்கள்.

தாவீதின் சிங்காசனம், சாலொமோன் துவங்கி சிதேக்கியாவரையிலும் நிலையாகக் காணப்பட்டது; மேலும் சிதேக்கியாவின் கரங்களிலிருந்து இராஜ்யத்தைக் கர்த்தர் பிடுங்கினபோது, அதை வேறொரு குடும்பத்திற்குக் கொடுக்கவில்லை, மாறாக இடைக்காலம் காணப்படப்போவதாக, அதாவது மற்றவருக்குக் கடந்துசெல்லாதபடிக்குத் தாவீதின் இராஜ்யத்துக்கு இடைநிறுத்தம் இருக்கப்போவதாக அறிவித்தார். சிதேக்கியா குறித்துச் சொல்லப்பட்ட தீர்க்கத்தரிசனம் பின்வருமாறு: அவபக்தியுள்ள துன்மார்க்க அதிபதியே, அக்கிரமத்துக்கு முடிவுவருங்காலத்தில் உன் நாள் வந்தது. பாகையைக் கழற்று, கிரீடத்தை எடுத்துப்போடு; அது இனி முன்போலிராது; தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனைத் தாழ்த்துவேன். அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன் உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும். அவருக்கே அதைக் கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் (எசேக்கியேல் 21:27). சிதேக்கியாவின் நாள் முதற்கொண்டு தற்போதுவரையிலும், எந்த இஸ்ரயேல் இராஜாவும் காணப்பட்டது இல்லை - இந்த இராஜ்யத்தின் கவிழ்க்கப்படுதல் மிகவும் முழுமையாய் நிறைவேற்றப்பட்டது. முதலாம் வருகையின்போதும், அதற்கு முன்பும், பின்பும் உள்ள காலப்பகுதியில் இஸ்ரயேல்மீது ஆளுகைசெய்த இராஜாக்கள், இஸ்ரயேல் இராஜாக்களல்ல, பிறப்பின்படி இஸ்ரயேலர்களல்ல, மாறாக இவர்கள் சிதேக்கியாவின் நாள் முதற்கொண்டு, தற்போதுவரையிலும் புனிதமான தேசத்தைத் தங்கள் பாதங்களில் மிதித்துப்போட்ட புறஜாதி அரசாங்கங்களினால் நியமிக்கப்பட்டவர்களே ஆவார்கள். எனினும் சர்வவல்லமையுள்ளவரின் வார்த்தைகளும், வாக்குகளும் உண்மையாய் இருக்கின்றபடியால், தாவீதுக்குப் பண்ணப்பட்ட இந்த வாக்குத்தத்தமானது, நிச்சயமாய் நிறைவேறும். மேலும் சுபாவத்தின்படி புறஜாதிகளாகவும், அதேசமயம் ஆபிரகாமின் மாபெரும் குமாரனும், தாவீதின் மாபெரும் குமாரனும், கர்த்தருமானவருடன் திருமணத்திற்கு நிச்சயிக்கப்பட்டவர்களாகவும் காணப்படும் நாம், கர்த்தர் கற்பித்துத் தந்ததுபோன்று உம்முடைய இராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோன்று, பூமியிலும் செய்யப்படுவதாக என்று கூறி, அந்த வாக்குத்தத்தத்தின்

நிறைவேறுதலுக்காய் இன்னமும் ஆவல்கொண்டவர்களாகவும், ஜெபம்பண்ணுகிறவர்களாகவும், காத்துக்கொண்டிருப்பவர்களாகவும் இருக்கின்றோம். பிதாவினால் நியமிக்கப்பட்டுள்ள காலங்களில், இந்த நிஜமான தாவீது, பிரியமானவர் இராஜ்யத்தின் ஆளுகையைக் கையில் எடுத்துக்கொள்கையில், இவர் மாம்சத்திலுள்ள சாலொமோனுக்கு நிஜமானவர் என்ற விதத்தில், கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார்; மேலும் இவரது சிங்காசனம் என்றென்றும் ஸ்திரப்பட்டிருக்கும், ஏனெனில் அது யேகோவாவின் இராஜ்யத்தினுடைய சிங்காசனமாகும். இந்த இராஜ்யமானது மத்தியஸ்த இராஜ்யமெனும் விதத்தில், ஆயிர வருட யுகத்தினுடைய முடிவில் முடிவு பெற்றாலும், இன்னும் மேன்மையானதொரு விதத்தில் அந்த இராஜ்யம் சதாகாலமும் தொடரும்; ஏனெனில் தாவீதின் குமாரனும், ஆண்டவருமானவர், பிதாவோடு பிதாவின் சிங்காசனத்தில் காணப்படுவார்; இவரது மணவாட்டியும், இவர் எங்கே இருக்கின்றாரோ, அங்கே இவரோடுகூட காணப்பட்டு, இவரது வாக்குத்தத்தத்தின்படி இவரது மகிமையிலும் பங்கடைவார்கள்.

இந்த வாக்குத்தத்தத்தினுடைய பெரும்பான்மையான காரியங்கள், சாலொமோனுக்குப் பொருந்துகின்றதாயிருக்கும். தாவீதின் இராஜ்யம் அல்லது கர்த்தருடைய இராஜ்யம், சாலொமோனின் கரங்களில் ஸ்திரப்படுத்தப்பட்டது. இவர் கர்த்தருடைய நாமத்தில், நிழலான வீடு அல்லது ஆலயம் ஒன்றைக் கட்டினார். தேவன் இவரை ஒரு புத்திரனைக் கையாளுவதுபோன்றே கையாண்டார்; இவரது அக்கிரமங்களுக்காக இவரைத் தண்டித்தார், எனினும் இவரிடத்தில் தொடர்ந்து தம் இரக்கத்தினைப் பாராட்டி வந்தார்; சவுலிடமிருந்து இராஜ அதிகாரத்தை எடுத்துக்கொண்டதுபோன்று, தேவன் தாவீதின் மாம்சீக சந்ததியிடமிருந்து அந்த அதிகாரம் எடுக்கப்பட அனுமதிக்கவில்லை.

14-ஆம் வசனமானது, வரவிருக்கும் இராஜ்யத்தில் தேவனுடைய குமாரர்களாகவும், உடன் சுதந்தரர்களாகவும் காணப்படும்படிக்கு ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்குச் சரியாய்ப் பொருந்தும். தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? சரீரத்தின் தலையானவரிடத்தில் பாவம் இல்லாதிருந்தும், அவர் ஆயத்தமாகுவதற்கென்றும், வரவிருக்கின்ற இராஜ்யத்திலுள்ள அவரது மாபெரும் ஸ்தானத்திற்கென்றும், அவருக்குச் சிட்சைகள் என்று அழைக்கப்படும் அனுபவங்கள் அவசியமாயிருந்தன. தீர்க்கத்தரிசி தெரிவித்துள்ளதுபோன்று, அவர் மனுபுத்திரருடைய தழும்புகளை/அடிகளைப் பெற்றுக்கொண்டார்; மேலும் அவரது சரீரத்தின் அங்கத்தினர்களாகிய நம்மை, ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்குத் தகுதியுள்ளவர்களாக்கும் நீதியின் படிப்பித்தல்கள் எதையும் பிதா அருளாமல் இருப்பதில்லை;அ தாவதுந ாம்ப ிதாவின்ச ித்தத்தைஅ றியவும்,ெ சய்யவும்ந ாடி,பு த்திரர்கள்எ ன்ற மனநிலையில் இந்தப் படிப்பித்தல்களை ஏற்றுக்கொண்டால், இத்தகைய நீதியின் படிப்பித்தல்களாகிய சிட்சைகள் எதையும் பிதா அருளாமல் இருப்பதில்லை. (கொலோசெயர் 1:12)

R2010

# தாவீதின் இரக்கம்

## 2 சாமுயேல் 9:1-13

சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள். - உரோமர் 12:10

இந்தப் பாடத்தினுடைய சம்பவத்தை நாம் பார்க்கையில், அப்போஸ்தலனாகிய யாக்கோபின் பின்வரும் வார்த்தைகள் நம் நினைவுக்கு வருகின்றது: என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கத்தரிசிகளைத் துன்பப்படுதலுக்கும், நீடியபொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக் கொள்ளுங்கள் (யாக்கோபு 5:10). விசுவாசம், தாழ்மை, சாந்தம், கீழ்ப்படிதல், பொறுமை, சகிப்புத்தன்மை, சகோதரசிநேகம் மற்றும் அன்பிற்கு இவர்கள் எப்படிப்பட்டதொரு திருஷ்டாந்தங்களாகக் காணப்படுகின்றனர்! தேவனுக்கும், அவரது நோக்கங்களுக்கும் மோசே கொண்டிருந்த அர்ப்பணிப்பும், கடுமையான சோதனைகள் இருந்த நீண்ட காலப்பகுதியில் இவர் காண்பித்த தளர்வற்ற வைராக்கியமும், அன்பின் ஊழியமும் நம் நினைவிற்கு வருகின்றது. ஆபிரகாம், யாக்கோபு, சாமுயேல், தாவீது ஆகியோரின், இன்னுமாகத் தங்கள் வாழ்க்கையினுடைய இறுதிகட்டம்வரை தணியாத உத்வேகத்துடன், விசுவாசத்தின் நல்லதொரு போராட்டத்தினைப் போராடிய மேன்மையான முற்பிதாக்களின் பட்டியலில் இடம்பெறுபவர்கள் அனைவரின் கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தினையும் நாம் கவனிக்கின்றோம். தேவனுக்கும், அவரது சத்தியத்திற்கும், நீதிக்கும் நேர்மையாயும், உண்மையாயும் காணப்பட்ட இந்தப் பாத்திரவான்களை நாம் கவனிக்கையில், இந்தக் கதாபாத்திரங்கள் நியாயப்பிரமாண யுகத்தினுடைய சந்திரவெளிச்சத்தின்கீழ் மட்டும் வளர்க்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதை நாம் நினைவுகூருகின்றோம்; இந்தக் கண்ணோட்டத்தில் காரியங்களைப் பார்க்கும்போது, அப்போஸ்தலனாகிய பேதுருவின் பின்வரும் வார்த்தைகளே நமக்கும் நினைவுக்கு வருகின்றது: இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால், நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும் (2 பேதுரு 3:11); அதாவது இந்தச் சுவிசேஷயுகத்தின் மிகத் திரளான கிருபைகளைப் பெற்றவர்களாகிய நாம் எப்படியாகக் காணப்பட வேண்டும்?

இப்பாடத்தில் நாம் கவனிக்கின்ற தாவீதின் இரக்கமானது, இவரது உயர் பண்பிற்குரிய மற்றுமொரு அறிகுறியாகக் காணப்படுகின்றது. தாவீது இப்பொழுது தன் இராஜ்யத்தில் நன்கு திடப்படுத்தப்பட்ட வராகவும், செழிப்புடனும் காணப்பட்டார். இந்நிலைக்கு இவர் வருவதற்கு, இவரது அபிஷேகிக்கப்படுதல் துவங்கி கடந்துவந்த பாதை, கடுமையான வழியாகவும், புயல்கள் நிறைந்த வழியாகவும் காணப்பட்டது. மேலும் இப்படிப்பட்ட கடுமையான சோதனைகள் காணப்பட்ட காலப்பகுதிகளில், இவருக்கும், சவுலின் குமாரனாகிய யோனத்தானுக்கும் இடையில் காணப்பட்ட ஒப்புயர்வற்ற நட்பானது, முழுவதுமாய் நிரூபிக்கப்பட்டது மற்றும் வலுவாய் இணைக்கப்பட்டது. தான் இஸ்ரயேலின் அரியணைக்கு வருவதைத் தடைபண்ணினதும், தாவீதிற்கு அதைக் கொடுத்ததுமான தேவனுடைய சித்தத்திற்கு யோனத்தான் தன்னைச் சந்தோஷமாய் ஒப்புக்கொடுத்திருந்தபோதிலும், பிற்பாடு தாவீது அவரது இராஜ்யத்தில் திடப்படுத்தப்பட்டுக் காணப்படுகையில், தாவீது எப்போதுமே தனக்கும், தன் சந்ததிக்கும் இரக்கம் காட்டவேண்டுமென்று யோனத்தான் விரும்பினார்; மேலும் இதற்கான உறுதியினையும் இவர் தாவீதிடமிருந்து பெற்றுக்கொண்டார். 1 சாமுயேல் 20:14-17 வரையிலான வசனங்களைப் பார்க்கவும்.

யோனத்தான் மரித்துப்போய் பல வருடங்கள் கழிந்த பிற்பாடு, தாவீதிற்கான செழிப்பின் காலங்கள் வந்தபோது, தான் யோனத்தானுக்குப் பண்ணின ஒப்பந்தத்தைத் தாவீது நினைவுகூர்ந்து, தான் தேவனுடைய இரக்கத்தைக் காண்பிக்கத்தக்கதாக, சவுல் வீட்டாரில் யாரேனும் உயிரோடு இருக்கின்றார்களா என்று விசாரிக்கத்துவங்கினார். தன் நண்பனாகிய யோனத்தானின் உயிரோடிருக்கிற ஒரே குமாரனைத் தாவீது கண்டுபிடித்து,ஒ ருவேளைடே யானத்தான்உ யிர்த ப்பியிருப்பாரானால்,அ வர்மேல்த ான்க ாண்பிக்கப் பிரியப்பட்டிருக்கும் பாசத்தையும், இரக்கத்தையும் யோனத்தானின் அந்தக் குமாரன்மீது தாவீது பொழிந்தார்.



**தாவீது, ஒரு சிறந்த இராஜா - Life way collection.**

தன் நண்பனுடைய அன்பினை நன்றியறிதலோடு நினைவுகூர்ந்தார்; மேலும் அந்த அன்பிற்குத் தன்னால் முடிந்தமட்டும் கைமாறு செய்ய அன்புடன் முயன்றார். நன்றியுணர்வோடு இருக்கும் குணத்தைவிட, உண்மையில் வேறெந்த ஒரு குணமும், நீதிமானை அலங்கரிக்க முடியாது. நன்றியுணர்வு இருப்பதினாலேயே, நாம் சிருஷ்டிகருக்கே உரிய பாசத்துடன்கூடிய அன்பினைத் தேவனிடம் வெளிப்படுத்துகின்றோம். நன்றியுணர்வே, நண்பர்கள் இருவருக்கிடையேயுள்ள உள்ளன்பினை ஊக்குவிக்கின்றது மற்றும் தித்திப்பாக்குகின்றது. நன்றியுணர்வு என்பது எப்போதும், அன்பின் ஊழியங்களுக்கும், விசேஷமாக சுயத்தைப் பலிசெலுத்திப்பண்ணும் ஊழியங்களுக்குமான கைமாறாக/பலனாகக் காணப்படுகின்றது; எனினும் எப்போதும் இப்படியாகப் பலனளிக்கப்படுகிறதில்லை. அந்தோ பரிதாபம்! உலகத்தின் ஆவியானது மிகவும் வேறுபட்டு காணப்படுவதினால், அன்பின் ஊழியங்களுக்கும், சுயத்தை பலிசெலுத்தும் ஊழியங்களுக்கும் அடிக்கடி புறக்கணித்தலும், நன்றிகெட்ட உதாசீனப்படுத்தலும் கைமாறாக அளிக்கப்படுகின்றது; மேலும் பெரும்பாலும் நிந்தித்தல் அல்லது துன்புறுத்தலே கைமாறாக வழங்கப்படுகின்றது. ஆகையால் தேவபக்தியாய் நடந்து, தேவபக்திக்கேற்ற கனிகளை/குணங்களை வளர்த்திக்கொள்பவர்கள், தங்கள் பலனை இங்கே பெற்றுக்கொள்ளாததினிமித்தமும்,

கடமைகளையாற்றும்போது தங்களுக்கு நிச்சயமாய்க் கடந்துவரும் எதிர்ப்புகளைச் சந்திப்பதினிமித்தமும் ஏமாற்றமடையக்கூடாது/நம்பிக்கைகுலைந்து போகக்கூடாது. நிந்தைகள் அல்லது நன்றியற்ற செயல்பாடுகள் தற்காலத்தில் கைமாறாக நமக்குக் கொடுக்கப்படும்போது, அவைகளைப் பொறுமையோடு கையாளுகின்றவர்களாகவும், மனோதிடத்துடன் சகிக்கின்றவர்களாகவும் காணப்படுவதன் மூலம் நீதிக்கும், சத்தியத்திற்குமான நம்முடைய அர்ப்பணிப்பை நிரூபிப்பதற்குரிய நமக்கான வாய்ப்புகளை முழுமையாய்த் தழுவிக்கொள்வோமாக; இன்னுமாக நீதி செய்தமைக்கு உரியதான பலன் கொடுக்கப்படுவதற்குரிய தேவனுடைய வேளைகளுக்கும், தேவனுடைய வழிகளுக்கும் காத்திருப்பதில் திருப்தியாய்க் காணப்படுவதன் மூலம் நீதிக்கும், சத்தியத்திற்குமான நம்முடைய அர்ப்பணிப்பை நிரூபிப்பதற்குரிய நமக்கான வாய்ப்புகளை நெஞ்சார தழுவிக்கொள்வோமாக. தங்கள் ஜீவனைத் தங்களுக்கு அருமையானதென்று எண்ணாமல், ஜெயங்கொள்ளும் இத்தகையவர்களே, தாவீதின் (பிரியமானவரின்) வகுப்பாரில் காணப்படுவார்கள்.

இப்பாடத்தினுடைய ஆதார வசனத்திற்கு விளக்கங்கள் கொடுக்கப்பட வேண்டிய அவசியமில்லை; நாம் அவ்வசனத்தினுடைய காரியங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகமதிகமாய்ப் பிரயாசப்பட வேண்டும் என்றும், ஒவ்வொரு வருடம் கடந்துபோகையில், தேவனுக்கு ஒத்திருக்கும் அம்சத்தில் முன்னேற்றம்கொண்டிருக்கின்றோமா எனக் கவனித்துக்கொள்ள வேண்டும் என்றுமே அறிவுரை காணப்படுகின்றது; இன்னுமாகக் "கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்" எனும் அவ்வசனத்தினுடைய இறுதி சொற்றொடரிலேயே, சகோதர சிநேகத்திற்கான உறுதியான நிரூபணம் காணப்படுகின்றது எனும் காரியத்தைக் கவனிக்கத் தவறாமல் இருப்போமாக; இன்னுமாக இதைப்போன்றதொரு ஆலோசனையானது, இதே அப்போஸ்தலனால் இன்னொரு இடத்திலும் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் நினைவில்கொள்வோமாக - "மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்" (பிலிப்பியர் 2:3). நாம் அன்புகூருகின்றோம் என்று கூறிக்கொண்டு மாத்திரம் இருந்து, சுயத்திற்கடுத்த காரியங்களையே தொடர்ந்து நாடுவோமானால், பின்னே அன்பு எங்குள்ளது? "என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்" (1 யோவான் 3:18).

R1907 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

## தாவீது மற்றும் யோனத்தான்

யோனத்தான் வீட்டார்மீது தனது இரக்கத்தை நீக்குவதில்லை என்று யோனத்தானுடன் பண்ணின உடன்படிக்கையினைத் தாவீது நினைவுகூர்ந்து காணப்பட்டதுபோலவே (2 சாமுயேல் 9:1-13), முதலாவது முற்பிதாக்களையும், பிற்பாடு முற்பிதாக்களின் அதிகாரத்திற்குக்கீழே காணப்படப்போகும் பூமியின் குடிகள் அனைவரையும் ஆசீர்வதிப்பதற்குரிய தங்களது உடன்படிக்கையினை, மகிமையடைந்த சபையும் நினைவுகூருவார்கள். சவுல் தாவீதை வேட்டையாட துரத்தினதுபோல, நம்மைத் தீவிரமாய் வேட்டையாட (கெர்ச்சிக்கிற சிங்கம்போல்) சாத்தான் முயற்சித்துக்கொண்டிருக்கையில், நமக்கு மிகவும் உதவிகரமாய் இருந்துள்ள முற்பிதாக்களின் வாழ்க்கையானது என்றென்றும் நினைவில் வைக்கப்படும், அதாவது நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசிகள் மூலமான முற்பிதாக்களின் அன்பின் ஊழியங்களும், இன்னுமாகத் தேவபக்தியுள்ள ஜீவியத்திற்கும், குணலட்சணத்திற்கும் அவர்கள் சிறந்த மாதிரிகளாகக் காணப்பட்ட காரியமும் என்றென்றும் நினைவில் வைக்கப்படும். (1 பேதுரு 5:8)

R2015

# தாவீதின் வெற்றிகள்

## 2 சாமுயேல் 10:8-19

கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? - சங்கீதம் 27:1

தாவீதினுடைய ஆளுகையின் காலங்களில் அநேக யுத்தங்கள் காணப்பட்டது என்பதும், இடையிடையேதான் சமாதானமான காலங்கள் காணப்பட்டது என்பதும் உண்மையாகக் காணப்பட்டபோதிலும், அந்த யுத்தங்கள் பெரியச் சண்டைகளுள்ள யுத்தங்களாகவோ அல்லது தேசங்களைக் கைப்பற்றுவதற்குரிய யுத்தங்களாகவோ இராமல், மாறாக பாதுகாப்பிற்காகப் புரியப்பட்ட யுத்தங்களாகவே எப்போதும் காணப்பட்டன. தாவீது சுற்றியுள்ள தேசங்களிடம் ஞானமாகவும், அன்பாகவும் காணப்பட்டபோதிலும், அவர்கள் இப்படியாக இஸ்ரயேலிடம் காணப்படவில்லை. அவர்கள் வல்லமையிலும், செழிப்பிலும், இஸ்ரயேல் அடைந்துகொண்டிருந்த வளர்ச்சியின் நிமித்தம் பொறாமை கொண்டவர்களாகக் காணப்பட்டு, பொறாமையின் நிமித்தம் தூண்டப்பட்டவர்களாகத் தாக்குதல்பண்ணினார்கள்; இந்தத் தாக்குதல்களைத் தாவீது, கர்த்தருடைய ஜனங்களின் உண்மையுள்ள மற்றும் தேசப்பற்றுள்ள ஊழியக்காரனாகத் தடுக்கவேண்டிய அவசியத்தில் காணப்பட்டார். கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களை அழித்துப்போட வேண்டும் அல்லது துரத்திவிட வேண்டும் என்பதே அந்த ஜாதிகளுடைய மனப்பான்மையாகக் காணப்பட்டது; ஆகையால் யுத்தத்தை மேற்கொள்வதே, தாவீதிற்கிருந்த ஒரே நீதியான வழிமுறையாக இருந்தது.

சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படு வார்கள் என்று எழுதப்பட்டிருக்கின்றபோதிலும் (மத்தேயு 5:9), என் கைகளைப் போருக்கும் என் விரல்களை யுத்தத்திற்கும் படிப்பிக்கிற என் கன்மலையாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்றும் எழுதப்பட்டிருக்கின்றது (சங்கீதம் 144:1). இவைகளிலிருந்து பெறப்படும் கருத்தென்னவெனில், இழிவான சமாதானம் எனும் ஒருவகை சமாதானம் காணப்படுகின்றது என்பதேயாகும்; இச்சமாதானம் நீதியின் கொள்கைகளையும், சத்தியத்தையும் உதாசீனப்படுத்துவதின் நிமித்தம் வரும் சமாதானமாகும்; அதாவது ஏதோ ஒன்றை விற்று வாங்கப்பட்ட சமாதானம் மற்றும் இழிவான விதத்தில் தக்கவைக்கப்படும் ஒரு சமாதானமாகும். ஆனால் இன்னொரு விஷயம் என்னவெனில், கர்த்தர் பலப்படுத்தும்போதும், இன்னுமாக நம் கைகளைப் போருக்கும், நம் விரல்களை யுத்தத்திற்கும் கர்த்தர் பயிற்றுவிக்கும்போதும், இன்னுமாக யுத்தம் கர்த்தருடைய யுத்தமாகக் காணப்படும்போதும், இன்னுமாக அவரது கனத்தைக் காத்துக்கொள்வதற்கும், அவரது நீதியின் கொள்கைகளை ஸ்திரப்படுத்துவதற்கும், அவரது நோக்கங்களையும், அவரது ஜனங்களையும் பாதுகாத்துக்கொள்வதற்கும் என்று யுத்தம் காணப்படும்போதும் தவிர, மற்றபடி உள்ள எந்த யுத்தமும் நீதியான யுத்தமாகக் காணப்பட முடியாது என்பதும் நினைவில்கொள்ளப்பட வேண்டும். இது நிழலான யூத யுகத்தின்போது, முறையாக மாம்சத்துக்கேற்ற போராயுதங்களினால் பண்ணப்பட்டன; ஆனால் தேவ ஆவியினுடைய யுகத்தின்போது, எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாய் இருக்கிறது என்று நமக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது (2 கொரிந்தியர் 10:4). எந்த மனுஷன் தனக்குக் கர்த்தருடைய பலமும், ஆற்றலும் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று உணர்ந்து,

கிறிஸ்தவனுக்கே உரிய துணிவுடன், சிலுவையின் நல்ல போர்ச்சேவகனென, எல்லாத் திசைகளிலும் பலமாய்ப் பதுங்கிக் காணப்படும் இருளின் ஆதிக்கங்களுக்கு எதிராக போர்புரிய செல்லுகின்றானோ, அவன் பாக்கியவானாவான். இவ்விதமாய் அவன், ஜெயங்கொள்ளும் சிலுவையின் போர்வீரர்களுக்கு வாக்களிக்கப்பட்டிருக்கும் பலனைப் பெற்றுக்கொள்வான் (வெளிப்படுத்தல் 2:7, 11, 17, 26, 28; 3:5, 12, 21); இன்னுமாகச் சமாதானம்பண்ணுகிறவர்களுக்கு உரியதான ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்வான்; ஏனெனில் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தினால் வென்று பெறப்படும் மகிமையான சமாதானமானது, பாக்கியமான ஒரு சமாதானமாகும்; இச்சமாதானமானது, அதன் ஆதாரங்களை நீதியின் நித்தியகொள்கைகளில் பெற்றிருக்கின்றது. எனினும் ஓ! கிறிஸ்தவனே, யுத்தம் கர்த்தருடைய யுத்தமாக இருக்கின்றது என்ற நிச்சயம் இல்லாத எந்த ஒரு யுத்தத்திற்கும் நீ செல்லாதபடிக்கு ஜாக்கிரதையாக இரு! தாவீதைப்போன்று, யுத்தத்திற்கு நான் போகலாமா? என்று கர்த்தரிடம் விசாரித்துக்கேளுங்கள் (1 சாமுயேல் 23:2, 4; 30:7-8; 2 சாமுயேல் 5:18, 19, 22, 23); பின்னர் யுத்தம் கர்த்தருடையதுதான் என்ற நிச்சயமான பதிலைப் பெறுவதற்குத் தாவீதைப்போன்று காத்திருங்கள்.

எதிர்க்கின்றவர்கள் அனைவருக்கும் எதிராக, சத்தியம் மற்றும் நீதியின் சார்பில், தங்கள் வார்த்தைகள் மூலமும், தங்கள் கிரியைகள் மூலமும், தங்கள் பொதுவான நடக்கைகள் மூலமும் போரில் கம்பீரமாய்ப் போர்புரிபவர்கள் அனைவருக்கும், இஸ்ரயேலின் சேனைகளிடம் யோவாப் கூறின பின்வரும் வார்த்தைகளை நாங்களும் கூறுகின்றோம்: தைரியமாயிரு, நம்முடைய ஜனத்திற்காகவும், நம்முடைய தேவனுடைய பட்டணங்களுக்காகவும் சவுரியத்தைக் காட்டுவோம்; கர்த்தர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக (2 சாமுயேல் 10:12); யுத்தம் கர்த்தருடையதாய் இருக்குமானால், நிச்சயமாக வெற்றி கிடைக்கும். கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு. (சங்கீதம் 37:7)

தாவீது மேற்கொண்ட யுத்தங்கள், இடங்களைக் கைப்பற்றுவதற்கோ அல்லது கொள்ளையிடு வதற்கோ பண்ணப்படாமல், மாறாக தேவனுடைய ஜனங்களைத் தற்காப்பதற்கென்று பண்ணப்பட்டவை களாகக் காணப்பட்டபோதிலும், அவர்களின் நிலப்பரப்பு பெரிதடைந்துகொண்டு வந்தது; ஆகையால் இப்பொழுதுதான் முதல்முறையாக, ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தமானது நிறைவேறினது; இவரது சந்ததியார், எகிப்தின் நதி துவங்கி, ஐபிராத்து நதி என்னும் நதிமட்டிலுமான இடங்களைச் சொந்தமாக்கிக்கொள்வார்கள்எ ன்பதேஅ ந்தவ ாக்குத்தத்தமாகும்( ஆதியாகமம் 15:18).இ வர்களது சத்துருக்களிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட கொள்ளைப்பொருள்களும் மிகவும் திரளாய்க் காணப்பட்டது. பொன்னினாலான போர்க்கவசங்களும், வெள்ளி, பொன் மற்றும் தாமிரப் பாத்திரங்களும் இருந்தன. இவைகள் கர்த்தருக்கெனச் சமர்ப்பிக்கப்பட்டது; இவைகள் சாலொமோனால் கட்டப்பட்ட ஆலயத்திற்கென்று ஒதுக்கிவைக்கப்பட்டது.

தாவீது தொடுத்த போர்களிலுள்ள நியாயங்களையும், இன்னுமாக அவர் எந்தப் பக்திவைராக்கி யத்தின் ஆவியில் அப்போர்களைத் தொடுத்தார் என்பதையும் நாம் பார்க்கின்ற அதேவேளையில், தேவனுக்கான அவரது பயபக்தியும், நீதி பற்றின அவரது உயர்ந்த உணர்வும், அவரது ஜீவியத்தின் சிறுசிறு காரியங்களிலும்கூடப் பொதுவாகவே மிகவும் குறிப்பிடத்தக்க விதத்தில் விளங்கினதைப் பார்க்கலாம். உதாரணத்திற்குப் பெலிஸ்தர்களாகிய சத்துருக்கள் அருகாமையில் முற்றிகையிட்டிருக்கும்போது, அதுல்லாம் கெபியில் மறைந்திருந்த தாவீதிற்கு மிகுந்த தண்ணீர் தாகம் ஏற்பட்டது; இவரது படைத்தலைவர்களில் மூன்றுபேர் தங்கள் ஜீவன்களைப் பணையம் வைத்து பெலிஸ்தருடைய பாளயம்

வழியாய்ச் சென்று, இராஜாவுக்குத் தண்ணீர் கொண்டுவந்தார்கள்; இராஜாவோ: நான் இதைச் செய்யாதபடிக்கு, என் தேவன் என்னைக் காத்துக்கொள்ளக்கடவர். தங்கள் பிராணனை எண்ணாமல்போய் அதைக் கொண்டுவந்த இந்த மனுஷரின் இரத்தத்தைக் குடிப்பேனோ என்று சொல்லி அதைக் குடிக்கமாட்டேன் என்று கூறி, தண்ணீரைக் குடிக்க மறுத்தார் (1 நாளாகமம் 11:19). இத்தகைய தண்ணீர் மிகவும் விலையேறப்பெற்றதாக இருந்தபடியால், அதைத் தேவனுக்குக் காணிக்கையாக, தரையிலே ஊற்றிப்போட்டார் (2 சாமுயேல் 23:13-17; 1 நாளாகமம் 11:15-19). பூமியின் இராஜாக்களில் வெகு சிலரே, தங்களுக்காகப் பண்ணப்படும் சக மனிதர்களுடைய தியாகங்களை மிகவும் விலையேறப்பெற்றதாக மதிப்பார்கள். பொதுவாக பூமியின் இராஜாக்கள் தங்களைச் சர்வத்துக்கும் (சர்வசிருஷ்டிகளுக்கும்) அதிகாரிகள்போன்று எண்ணி, தங்கள் சகமனிதர்களின் உரிமைகளும், சிலாக்கியங்களும் தியாகம்செய்யப்படுவதினால், தங்களுக்கு வரும் சொகுசுகள், தங்களுக்குரிய உரிமை சொத்துக்களாக இருக்கின்றது எனக் கூறிக்கொள்கின்றனர்; அதுவும் இந்தச் சகமனிதர்களை இந்த இராஜாக்கள் அற்பமான ஜீவிகள்போன்றும், தங்களைச் சேவிப்பதற்காக மாத்திரம் படைக்கப்பட்டவர்கள் என்பதுபோன்றும் கருதிக்கொள்கின்றனர். ஆனால் தாவீது இப்படியாகக் காணப்படவில்லை; இவரைப் பொறுத்தமட்டில் இவர் ஒவ்வொரு சகமனுஷனுக்கும் ஒரு சகோதரனாக மாத்திரம் இருந்தார்; மேலும் இவருடைய தெளிவான கணிப்பில் தேவன் மாத்திரமே மேன்மையான பக்திக்கும், கனத்திற்கும் பாத்திரமாய் இருந்தார்.


தாவீதின் நீதியான நடக்கைபற்றின இன்னுமொரு பதிவானது, 1 சாமுயேல் 30:21-25-வரையிலான வசனங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளது; யுத்தத்தின்போது, சரீர பெலவீனத்தின் (விடாய்த்துப்போனதின்) காரணமாக அல்லது பொருட்களைப் பாதுகாக்க அல்லது வீட்டைப் பாதுகாக்க என்று யுத்தத்தில் கலந்துகொள்ளாமல் காணப்பட்டவர்களும், யுத்தத்திற்குச் சென்றவர்களோடுகூடச் சரிசமமாகக் கொள்ளையுடமைகளைப் பங்கிட்டுக்கொள்ளும்படியாகத் தாவீது இஸ்ரயேலுக்குப் பிரமாணத்தினை ஏற்படுத்தினார். இதைக்குறித்த பதிவு மிகவும் தெளிவாகக் காணப்படுகின்றது. அதை நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்: விடாய்த்துப்போனதினாலே தாவீதுக்குப் பின்செல்லாமல், பேசோர் ஆற்றண்டையிலே தங்கியிருந்த இருநூறுபேரிடத்துக்குத் தாவீது வருகிறபோது, இவர்கள் தாவீதுக்கும், அவனோடிருந்த ஜனத்திற்கும் எதிர்கொண்டு வந்தார்கள்; தாவீது அந்த ஜனத்தினிடத்தில் சேர்ந்து, அவர்கள் சுகசெய்தியை விசாரித்தான். அப்பொழுது தாவீதோடே நடந்துவந்த மனுஷரில் பொல்லாதவர்களும் பேலியாளின் மக்களுமான எல்லாரும்: அவர்கள் எங்களோடே வராதபடியினால் நாங்கள் திருப்பிக்கொண்ட கொள்ளையுடைமைகளில் அவர்களுக்கு ஒன்றும் கொடுப்பதில்லை; அவர்களில் ஒவ்வொருவனும் தன்தன் மனைவியையும்த ன்தன்பி ிள்ளைகளையுமேஅ ழைத்துக்கொண்டுபே ாகட்டும்எ ன்றார்கள்.அ தற்குத் தாவீது: என் சகோதரரே, கர்த்தர் நமக்குத் தந்ததை நீங்கள் இப்படிச் செய்யவேண்டாம்; கர்த்தர் நம்மைக் காப்பாற்றி, நமக்கு விரோதமாய் வந்திருந்த அந்தத் தண்டை நம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார். இந்தக் காரியத்தில் உங்கள் சொற்கேட்க யார் சம்மதிப்பான்? யுத்தத்திற்குப் போனவர்களின் பங்கு எவ்வளவோ, அவ்வளவு ரஸ்துக்களண்டையில் இருந்தவர்களுக்கும் பங்குவீதம் கிடைக்கவேண்டும்; சரிபங்காகப் பங்கிடுவார்களாக என்றான். அப்படியே அந்நாள் முதற்கொண்டு நடந்து வருகிறது; அதை இஸ்ரயேலிலே இந்நாள்வரைக்கும் இருக்கும் கட்டளையும் பிரமாணமுமாக ஏற்படுத்தினான். (1 சாமுயேல் 30:21-25)

இஸ்ரயேலுக்கான இந்தப் பிரமாணம் என்பது, பல்வேறு தருணங்களுக்குப் பொருந்தக்கூடிய ஒரு கொள்கைபற்றின அறிக்கையாகக் காணப்பட்டது. உதாரணத்திற்கு வீட்டைக் கவனித்துக்கொள்கின்ற

மனைவியானவள், வீட்டைக் கவனிக்கும் பணியினின்று விடுவிக்கப்பட்டு, பணம் சம்பாதிக்க நேரத்தைப் பெற்றுள்ள கணவனோடுகூடச் சமமான பங்கினைப் பெற்றுக்கொள்ள வேண்டியவள் ஆவாள். நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளும் விஷயத்திலும், ஜீவியத்தின் பாரங்களைச் சுமக்கும் விஷயத்திலும், புருஷனும், மனைவியுமான ***இருவருமே*** சுதந்தரித்துக்கொள்கின்றவர்களாய்க் காணப்படுகின்றனர்.

இந்தப் பாடத்தினுடைய ஆதார வசனமானது, இப்பொழுது விசுவாசத்தின் நல்ல போராட்டத்தினைப் போராடிக்கொண்டிருக்கும் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் பெற்றிருக்க வேண்டிய சரியான மனநிலையினைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. சூழ்நிலைகள் அந்தகாரமாயும், ஆபத்து நிறைந்ததுமாயும் காணப்படலாம் - சத்துருக்கள் பெருகலாம் - மனக்கலக்கங்கள் அதிகரிக்கலாம்; எனினும் பயப்பட வேண்டாம் என்று வசனம் தெரிவிக்கின்றது - கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் அரணானவர் யாருக்கு அஞ்சுவேன்? நானோ, ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப்போயிருப்பேன். கர்த்தருக்குக் காத்திரு, திடமனதாயிரு, அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார், கர்த்தருக்கே காத்திரு என்று தாவீது கூறியுள்ளார். (சங்கீதம் 27:1-14)

(இக்கட்டுரையின் தொடர்ச்சி, பக்கம்:127)



**தாவீது தண்ணீரை ஊற்றிப் போடுகின்றார் - Caspar Luiken**

R2016

# தாவீது அறிக்கையிட்டு, மன்னிப்பை நாடுதல்

## சங்கீதம் 32:1-11

தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். - சங்கீதம் 51:10

இந்த ஒரு பாடத்திற்கு, தாவீது அறிக்கையிட்டு, மன்னிப்பை நாடினார் என்ற தலைப்பைப் பெரும் திருப்தியுடனே நாங்கள் எழுதுகின்றோம்; ஏனெனில் இம்மனுஷனிடத்தில் காணப்பட்ட நல்ல விஷயங்களானது மீண்டும் உறுதிப்படுத்தப்படவில்லையெனில், நாங்கள் மனந்திரும்பாததின் நிமித்தமான தாவீதின் வீழ்ச்சியும், அதனால் வந்த திகைப்பூட்டும் நஷ்டங்களும் என்ற தலைப்பையே கொடுத்திருக்க வேண்டியிருக்கும். யூத வரலாற்றிலுள்ள இந்தத் தலைசிறந்த பாத்திரத்தை இதுவரை நாம் பார்த்ததில், ஒரு நீதிமானாக, உத்தமனாக, தேவபக்தியுள்ள மனுஷனாக, இன்னுமாக நன்னெறியிலும், அறிவிலும், உயர் நிலையை அடைந்த ஒரு மனுஷனாக, தேவன் ஆசீர்வதிப்பதற்கென்றும், தேவனால் கனப்படுத்துவதற்கென்றும், தம்முடைய ஊழியத்திற்குத் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட பிரதிநிதியாகப் பயன்படுத்துவதற்கென்றும் தேவன் பிரியப்பட்ட ஒரு மனுஷனாக இவர் காணப்படுவதற்குக் காரணமான அந்த உயர்ப்பண்புகளை நாங்கள் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தோம்.

ஆனால் இவர் இந்த நிலைகளையெல்லாம் அடைந்திருந்தபோதிலும், ஞானமும், திறமையும், தெளிந்த புத்தியும் இவருக்கிருந்தபோதிலும், தாழ்மையும், தேவனுக்கேற்ற பயபக்தியும் இவருக்கிருந்தபோதிலும், இந்த மாமனிதனின், இந்த நல்ல மனிதனின் பாவப்பட்ட விழுந்துபோன மாம்சம்கூட, திரளான ஆஸ்தியின் சோதனைக்குள் அகப்பட்டுப்போனது. நல்ல ஒரு மனிதனாகவும், பல்வேறு விஷயங்களில் மிகவும் பலமான குணங்களை உடையவராகவும் காணப்பட்ட தாவீதின் வீழ்ச்சியினைக்குறித்துப் புரிந்துகொள்ளவே சிரமமாகக் காணப்படுகின்றது; ஆனால் எழுத்தாளர் ஒருவர் பின்வருமாறு மிகவும் சரியாகப் பகுத்துப்பார்த்திருக்கின்றார் என்று நாங்கள் எண்ணுகின்றோம்: சிலர் விஷயத்தில், அதிலும் விசேஷமாகப் பலமான பாத்திரங்களின் விஷயத்தில், பழைய மனுஷனும் புதிய மனுஷனுமாகிய இருவருமே இயல்புக்கும் அதிகமான உக்கிரம்கொண்டிருப்பார்கள்; பழைய மனுஷனுடைய கலகத்தனமான உணர்வுகளானது, இதைவிட உறுதியான வீரியத்துடன் காணப்படும் புதிய மனுஷனால் கட்டுப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும். ஆனால் எப்போதேனும் பழைய மனுஷனுக்கான புதிய மனிதனுடைய ***எதிர்ப்பானது*** தளர்த்தப்படும்போது அல்லது மட்டுப்படுத்தப்படும்போது, பின்னர் சீர்கேடுகள் திகிலூட்டும் அளவுக்கு வெடிக்கும்.

நிச்சயமாகவே, பெரும் பாவத்திற்குள்ளான தாவீதின் இந்த வீழ்ச்சி என்பது சடுதியாய் நடக்கவில்லை. இதற்கு நேராக வழிநடத்தின தவறான பல அடிகளைத் தாவீது அடியெடுத்து வைத்திருக்கின்றார்; இது படிப்படியாக நிகழ்ந்த காரியமானபடியால், தவறாய் அடியெடுத்து வைக்கப்பட்ட ஒவ்வொரு விஷயமும், மனசாட்சியினை அதிகமதிகமாய் மரத்துப்போகச்செய்து, கிட்டத்தட்ட அறியாமலேயேஉ ச்சக்கட்டமும்வ ந்துவிட்டபடியால்,ெ வட்கங்கெட்டஇ ந்தஇ ரண்டுப ாவங்களும்கூட மனசாட்சி உறுத்தப்படாமலேயே செய்யப்பட்டது; அந்தப் பாவம் அதன் கசப்பான பலனாகிய வருத்தத்தை ஓயாமல் கொடுத்துக்கொண்டிருந்தபோதிலும், அந்தப் பாவம் மூடிமறைக்கப்பட்டது (சங்கீதம் 32:3, 4);

அதற்காகத் தாவீது மனஸ்தாபமும் படவில்லை; இம்மனுஷனை, இவரது குற்றத்தினைக்குறித்த ஆழமான புரிந்துகொள்ளுதலுக்குள் கொண்டுவருவதற்கும், உடனடியாக இவர் மனம் வருந்தவும், பாவத்தை அறிக்கையிடவும், சீர்ப்பொருந்தவும் வேண்டிய அவசியத்தைப்பற்றின புரிந்துகொள்ளுதலுக்குள் இம்மனுஷனைக் கொண்டுவருவதற்கும் என்று நாத்தான் தீர்க்கத்தரிசி அனுப்பப்படுவதற்கு முன்புவரையிலும், தாவீது மனஸ்தாபப்படாமலே இருந்தார். வல்லமை, பிரபலம் மற்றும் பெரும் வெற்றிகளைப் பொதுவாய்ப் பின்தொடரும் ஆவியினால், தாவீது மிகவும் போதையூட்டப்பட்டிருந்தபடியால், அவர் படிப்படியாக ஒழுக்கத்தில் வீழ்ச்சியடைந்து கொண்டிருப்பதை அடையாளம் காணமுடியாதவராகக் காணப்பட்டார். அவர் இராஜாவாக இருந்தபடியால், அவரது வார்த்தைகள் ஜனங்கள் மத்தியில் முக்கியமானதாகக் கருதப்பட்டது; இஸ்ரயேலர்கள் அனைவரும் அவர் கட்டளையிடுவதைச் செய்யும்படிக்குக் காத்திருந்தார்கள்; தேசத்திலுள்ள முக்கியமான நபர்கள், அவருக்கு ஊழியக்காரர்களாய்க் காணப்பட்டனர்; அவர் மேற்கொண்ட யுத்தங்களிலும் வெற்றிகளே வந்தன; அவரது இராஜ்யம் விருத்தியடைந்தது; மிகவும் செழிப்போடு காணப்பட்டது; ஆனால் இந்த அனைத்து வெற்றிகளின் மத்தியிலும், மேன்மைகளின் மத்தியிலும், தந்திரமுள்ள, அபாயகரமுள்ள, இன்னுமாகக் கவனமாய்க் கவனிக்கப்படவும், உறுதியாய் எதிர்க்கப்படவும் வேண்டியுள்ள சோதனைகள் பதுங்கிக் காணப்பட்டன.

இராஜா தேசத்தினுடைய பிரதான நீதிபதியாகக் காணப்பட்டபடியால், இவருக்கு உண்மையாயிருந்து, இவரைச் சகோதரனைப்போன்று பாவித்து, இவரது பிழைகளையும், இவருக்கான ஆபத்துகளையும் சுட்டிக்காட்டும் அளவுக்குத் துணிந்தவர்களாக யாரும் காணப்படவில்லை. இவருடைய மேலான நலன்களைக் கருத்தில் கொண்டு, இவரை ஞானமாயும், அன்பாயும், மரியாதையாயும் கடிந்துகொள்ளாமல், இவருக்கான அந்த நன்மைகளைப் பொருட்படுத்தாமல், சுய ஆதாயம் தேடிக்கொள்வதும், இன்னுமாக அதிகாரம் படைத்தவர்களை ஆதரிப்பதும், நடிப்பதும்தான் எப்போதும்போல் இவரைச் சுற்றியிருந்த மனுஷர்களின் மனப்பான்மையாகக் காணப்பட்டது. தாவீதின் குணலட்சணங்களில் காணப்படும் நற்பண்புகளை நாங்கள் மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்டின அதேவேளையில், இவரது வீழ்ச்சிக்கு நேரான படிகளையும் நாங்கள் பகிரங்கமாய்ச் சுட்டிக்காட்ட வேண்டியவர்களாய் இருக்கின்றோம். மற்ற இராஜாக்கள் தங்களுக்குரியதென உரிமைப்பாராட்டிகொண்ட சிலாக்கியங்களை, தாவீதும் பார்க்கத்துவங்கி, அவைகள் தன்னுடைய சிலாக்கியங்களாகவும் இருக்கின்றதென உரிமைப்பாராட்டிக்கொண்டார் (லேவியராகமம் 18:1-4, 18 margin மொழியாக்கம்; உபாகமம் 17:14, 17-20-ஆம் வசனங்களைப் பார்க்கவும்); திவ்விய பிரமாணங்களுக்கு முரணாக, இவர் தனக்கு அதிகமான மனைவிகளை ஏற்படுத்திக்கொண்டார். அம்மோனியர்களுக்கு எதிரான யுத்தத்தில், இவர் வெற்றி பெற்றதோடு திருப்தியடையாமல், தன் சத்துருக்களை இழிவாக நடத்த விரும்பினவராக, தேவையற்ற கொடுமைகளை அவர்களுக்குச் செய்தார் (1 நாளாகமம் 20:1-3; 2 சாமுயேல் 11-ஆம் அதிகாரங்களை ஒப்பிட்டுப்பார்க்கவும்). பின்னர்த் தேவனுடைய பிரமாணத்திற்கு எதிராகவும், தன்னிடத்தில் காணப்பட்ட ஞானவான்களின் ஆலோசனைக்கு எதிராகவும், ஜனங்களுடைய ஆன்மீகக் காரியங்களுக்கு எதிராகவும் *தாவீது ஜனங்களைத் தொகையிட்ட காரியமானது,* இவரிடத்தில் காணப்பட்ட பயபக்தி குறைவு, இவரைத் திவ்விய தயவின்மீது சந்தேகங்கொள்ள வழிநடத்தியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது; இன்னுமாக இச்சந்தேகத்தின் காரணமாக இவர் தேவன்மீது தன் நம்பிக்கையை வைப்பதற்குப்பதிலாக, பாதுகாப்புபோன்ற காரியங்களுக்காக, தன் நம்பிக்கையினை ஜனங்களுடைய எண்ணிக்கையின்மீதும், ஆயுதங்களின்மீதும் வைக்க வழிநடத்தப்பட்டார் என்பதும் சுட்டிக்காட்டப் படுகின்றது (எரேமியா 17:5); இன்னுமாகத் தாவீது நீதியின் பாதையில் தொடர்ந்து நடந்திருந்தால்

மாத்திரமே, தேவனுடைய தயவும், உதவியும் அவருக்குக் காணப்பட்டிருக்கும் என்பதும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வெளிப்புறத்தில் செழிப்பான நிலைமை காணப்பட்டு, ஆனால் உள்ளான பயபக்தியானது நலிவடைந்துகொண்டு வருகின்ற இந்த ஒரு காலகட்டத்தில்தான், தாவீது சோதனைக்குட்பட்டு, தேவனுக்கும், மனுஷனுக்கும் எதிராகப் பயங்கரமான குற்றம் புரிந்தவரானார் (2 சாமுயேல் 11:1-27). அந்தோ பரிதாபம்! விழுந்துபோன மனித சுபாவமானது எத்துணை பெலவீனமானது! அச்சுபாவம் அது காணப்பட முடிகின்ற நல்ல நிலைமையிலும்கூட, அது எவ்வளவாய்ப் பாவஞ்செய்வதற்கு ஏதுவான ஒரு சுபாவமாகவே காணப்படுகின்றது! உண்மைதான், தேவனோடு நெருக்கமாயும், தொடர்ச்சியாயும் சஞ்சரித்தால் தவிர, மற்றபடி பாவத்தின் வல்லமையிடமிருந்து நமக்கு எந்த ஒரு பாதுகாப்புமில்லை; இன்னுமாக உலகத்தினுடைய ஆவியின் போதையூட்டும் செல்வாக்குகளைத் தொடர்ந்து தவிர்த்தும், எதிர்த்தும் காணப்பட வேண்டும் என்ற திட்டவட்டமான நோக்கத்தைக் கொண்டிருந்தால் தவிர, மற்றபடி பாவத்தின் வல்லமையிடமிருந்து நமக்கு எந்த ஒரு பாதுகாப்புமில்லை. உலகத்தின் ஆவியினுடைய பெருமை அல்லது வீண் புகழ்ச்சி அல்லது சுயத்தைத் திருப்திப்படுத்துவதற்குரிய ஆசை நம்மை இயக்கும்படி நாம் எந்த அளவுக்கு அனுமதிப்போமோ, அந்தளவுக்கு அதன் மதிமயக்கும் செல்வாக்குகளின்கீழ், நம்முடைய ஒழுக்க நெறி சார்ந்த புலனுணர்வுகளைக் கொண்டுவந்துவிடுகின்றவர்களாக இருப்போம். (பெருமளவில் சாத்தானின் ஆவியாகக் காணப்படும்) உலகத்தின் ஆவியினால் ஒருவர் போதையூட்டப்பட்டு காணப்படும்போது, இவர் கண்மூடித்தனமாக அநேக காரியங்களைச் செய்துவிடுவார்; ஆனால் ஒருவேளை தெளிந்த புத்தியோடு இருந்திருப்பாரானால், அந்தக் காரியங்களையெல்லாம் இவர் வெறுத்து ஒதுக்கியிருந்திருப்பார். இப்படியாகவே மாமனிதனாகவும், ஞானவானாகவும் காணப்பட்ட தாவீதின் விஷயத்திலும் சம்பவித்தது; இவர்மீது இந்தப் போதை மயக்கம் வருவதுவரையிலும், இவரும் ஒரு நல்ல மனிதனாகவும், தேவனுக்குப் பிரியமானவராகவும், தேவனால் மிகவும் கனப்படுத்தப்பட்டவராகவும் காணப்பட்டார்; எனினும் இவர்கூட விழுந்துபோனார்; இவர் தனது உயர்வான ஒழுக்க நிலையினின்று, பண்பினின்று விழுந்தபடியால், அது இவரது சரிவையும், வீழ்ச்சியையும் மிகவும் வருத்தத்திற்குரியதாக்குகின்றது.

அவன் தன் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, அவனுடைய இருதயம் அவன் சகோதரர்பேரில் மேட்டிமைகொள்ளாமலும், கற்பனையைவிட்டு வலதுபுறம் இடதுபுறம் சாயாமலும், இந்த நியாயப்பிரமாணத்தின் எல்லா வார்த்தைகளையும், இந்தக் கட்டளைகளையும் கைக்கொண்டு, இவைகளின்படி செய்வதற்காகத் தன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருக்கும்படி கற்றுக்கொள்ளும் பொருட்டு, அவன் லேவியராகிய ஆசாரியரிடத்திலிருக்கிற நியாயப்பிரமாண நூலைப்பார்த்து, தனக்காக ஒரு பிரதியை எழுதி, தன்னிடத்தில் வைத்துக்கொண்டு, தன் ஜீவனுள்ள நாளெல்லாம் அதை வாசிக்கக்கடவன்; இப்படிச் செய்வதினால், தானும் தன் குமாரரும் இஸ்ரயேலின் நடுவே தங்கள் இராஜ்யத்திலே நீடித்து வாழுவார்கள் எனும் கர்த்தருடைய கட்டளையினைத் தாவீது நினைவுகூர்ந்திருப்பாரானால், அது இவருக்கு நலமாயிருந்திருக்கும் (உபாகமம் 17:18-20). ஒருவேளை இம்மாதிரியான காரியங்களில், தாவீதைப்போன்ற ஒரு மனிதனே வீழ்ந்துபோய், சோதனையினுடைய வல்லமையினால் மேற்கொள்ளப்பட்டிருப்பாரானால், பின்னர் தேவனுடைய ஒவ்வொரு பிள்ளையும், தாவீதினுடைய இந்தப் புத்தியீனத்தால் வந்த பாடத்திற்குச் செவிகொடுத்து, நன்மை பெற்றுக்கொள்வானாக. ஒருவன் சாதாரணமானவனாகவோ அல்லது பெரியவனாகவோ இருப்பினும், அவன் தன்னை நீதியின் பாதையில் தக்கவைத்துக்கொள்ள

வேண்டுமெனில், தேவனுடைய வார்த்தையானது தினந்தோறும் துணையாகவும், உபாத்தியாகவும், வழிகாட்டியாகவும் காணப்பட வேண்டும். தேவனுடைய வார்த்தைகளை நாம் வாசித்தால் மாத்திரம் போதாது; வெறும் தகவலுக்காகவோ அல்லது வாதத்திற்காகவோ அதைக் கற்பதுகூடப் போதாது; அதன் கொள்கைகள் நம்மில் ஒன்றிணைக்கப்படுவதற்கும், நம்முடைய எண்ணங்களை வனைவதற்கும், நம்முடைய செய்கைகள் அனைத்திலும் வழிகாட்டுவதற்கும் என்று, அதை நாம் தியானிக்கவும், புசிக்கவும் வேண்டி அது நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்படித்தான் கர்த்தருடைய வார்த்தைகள், நம்மை ஊக்குவிக்கும் மற்றும் இயக்கும் வல்லமையாக நமக்குள் வாசமாயிருக்க வேண்டும்; ஒருவேளை நாம் தேவனுடைய வார்த்தைகள் மற்றும் ஜெபம் எனும் சிலாக்கியம் வாயிலாகத் தேவனோடு ஐக்கியம்கொண்டிருப்போமானால், நாம் பாவத்தினால் வஞ்சிக்கப்படாமலும், உலகத்தின் ஆவியினால் போதையூட்டப்படாமலும் இருப்போம்.

ஒரு மனுஷனுடைய ஜீவியத்தை *முழுமையாய்ப்* பார்க்க வேண்டுமே ஒழிய, அவர் ஜீவியத்தில் காணப்படும் தவறுகளை மட்டும் வைத்து அவரை நியாயந்தீர்க்கக்கூடாது என்று தாவீதிற்கு ஆதரவு தெரிவிக்கும் விதத்தில் சிலரால் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றது; இவர்களைப் பொருத்தமட்டில் ஒருவேளை இப்படியாகத் தாவீதின் ஜீவியம் பார்க்கப்பட்டால், நன்மைகளே மேலோங்கிக் காணப்படும்; இப்படியிருக்கும் பட்சத்தில் இவரது ஜீவியம் நீதியான ஒரு ஜீவியம் என்றெல்லாம் கருதப்படலாம் அல்லது வேறு மாதிரி காணப்படலாம் என்ற எண்ணம் காணப்படுகின்றது. இப்படியாகவே தாவீதின் குணலட்சணம் பார்க்கப்பட வேண்டும் என்ற கருத்துகள் முன்வைக்கப்படுகின்றது; இப்படியாகவே முற்காலங்களில், தங்களுடைய கருத்துகளுக்கு வேறுபடுபவர்களை எரித்து, சித்திரவதைச் செய்து, புனிதப்போர் மேற்கொண்டோரிலுள்ள அநேகரும் பார்க்கப்பட வேண்டும் என்ற கருத்துகள் முன்வைக்கப்படுகின்றது. இப்படிப் புனிதப்போர் தொடுத்தவர்களில் அநேகர், நல்லவர்கள் என்றும், தப்பெண்ணம் கொண்ட மனிதர்களாக மாத்திரம் காணப்பட்டனர் என்றும் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றது.

இந்த ஒரு விஷயத்தில், நாம் வேறுபடுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றோம்; காரணம் தீர்க்கதரிசியாகிய எசேக்கியேல் மூலம் தெளிவாய்த் தெரிவிக்கப்பட்டுள்ள தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து, மேற்கூறப்பட்டுள்ள கருத்து வேறுபடுகின்றது. நீதிமான் தன் நீதியை விட்டுவிலகி, அநீதி செய்து, துன்மார்க்கன் செய்கிற சகல அருவருப்புகளின்படியும் செய்வானேயாகில், அவன் பிழைப்பானோ? அவன் செய்த அவனுடைய எல்லா நீதிகளும் நினைக்கப்படுவதில்லை; அவன் செய்த தன் துரோகத்திலேயும் அவன் செய்த தன் பாவத்திலேயும் சாவான். துன்மார்க்கன் தான் செய்த எல்லாப் பாவங்களையும்விட்டுத் திரும்பி, என் கட்டளைகளையெல்லாம் கைக்கொண்டு, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் பிழைக்கவே பிழைப்பான், அவன் சாவதில்லை. அவன் செய்த எல்லா மீறுதல்களும் நினைக்கப்படுவதில்லை; அவன் தான் செய்த நீதியிலே பிழைப்பான். நீதிமான் தன் நீதியை விட்டு விலகி, அநீதி செய்து (மனந்திரும்பாமல்) அதிலே செத்தால், அவன் செய்த தன் அநீதியினிமித்தம் அவன் சாவான். அவன் எச்சரிப்படைந்து, தான் செய்த எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புகிறபடியினாலே அவன் பிழைக்கவே பிழைப்பான், அவன் சாவதில்லை (*எசேக்கியேல் 18:24, 21, 22, 26-28). 2 பேதுரு 2:20-22-வரையிலான வசனங்களையும் பார்க்கவும்.

** ஈடுபலியின் காரணமாக புது உடன்படிக்கையினால், ஆதாமின் மீறுதல் ஈடு செய்யப்பட்டு, பின்னர் விசுவாசிகளுக்கு எதிராக ஆதாமின் பாவங்கள் காணப்படாமல், அவர்களுடைய சொந்த தவறுகள் காணப்படும் ஒரு காலகட்டத்தைக்குறித்தே எசேக்கியேலின் 18-ஆம் அதிகாரம் விசேஷமாகத்*

*தெரிவிக்கின்றது. இதே கொள்கையானது சில விதங்களில், இந்தச் சுவிசேஷயுகத்தில் விசுவாசத்தின் மூலமாக நீதிமானாக்கப்பட்டவர்களுக்கும், நிழலான பலிகள் மூலம் நீதிமான்களாக்கப்பட்ட இஸ்ரயேலர்களுக்கும் பொருந்துகின்றதாகக் காணப்படுகின்றது.*

உலக ஆவியின் போதை மயக்கம் நிமித்தமாக வரும் குருட்டுத்தனமும், ஆவிக்குரிய மந்தமும், ஒருவேளை இந்நிலைமையில் காணப்படும்போது செய்யப்படும் பாவங்களுக்கான காரணம் என்று அனுமானிப்பது, மாபெரும் தவறாய் இருக்கும். இவ்விதமாய்த் தேவன் தாவீதின் விஷயத்தில் எண்ணிக்கொள்ளவில்லை. எந்த ஒரு பாவத்தினுடைய துவக்கமும், அதன் போதையூட்டும் செல்வாக்குகளுக்கு ***முதலாவது ஒப்புக்கொடுப்பதில்*** அடங்குகின்றது; ஆகையாலே பொல்லாங்காய்த் தோன்றும் யாவற்றையும் நாம் விட்டு விலகும்படிக்கு நாம் கவனமாய் எச்சரிக்கப்பட்டிருக்கின்றோம் (1 தெசலோனிக்கேயர் 5:22). மற்றப் பாவிகளின் விஷயத்தில் காணப்பட்டதுபோலவே, தாவீது செய்த பாவமும்கூடத் தீமையின் முதலாம் யோசனைக்குச் செவிக்கொடுத்ததிலேயே துவங்கினது; இதைச் செய்த பிற்பாடு, அடுத்தக் கட்ட படிகளானது ***சுலபமாக*** ஏறெடுக்கப்பட்டது. யாக்கோபு 1:14-15-ஆம் வசனங்களை ஒப்பிட்டுப்பார்க்கவும்.

பாவத்திற்காக மனம் வருந்துதல் மற்றும் பாவமன்னிப்பு எனும் காரியங்கள் காணப்படுவதற்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துவோமாக. தாவீது கொடிய பாவங்களைச் செய்திருந்தபோதிலும், இவர்மீது தேவன் மிகவும் கோபங்கொண்டிருந்தபோதிலும், தேவன் தம் கோபத்திலும் தம் இரக்கத்தினை நினைவுகூர்ந்து, இவரைக் கடிந்துகொள்ளும்படியாக நாத்தான் தீர்க்கத்தரிசியினை அனுப்பிவைத்தார். இத்தகைய ஒரு செய்தியுடன் இராஜாவை அணுகுவது என்பது, சந்தேகத்திற்கிடமின்றி கடினமானதொரு காரியமாகவே நாத்தானுக்கு இருந்திருக்கும்; எனினும் கர்த்தர் கட்டளையிட்டபோது, இவர் தயக்கம் காண்பிக்கவில்லை; நேரடியாகவும், அதேசமயம் மரியாதையோடு எளிமையாகவும் காரியத்தை நடப்பிப்பதைவிட, வேறொரு வழியை பயன்படுத்தி காரியத்தைச் செய்யலாம் என்றும் நாத்தான் முயற்சிக்கவில்லை. தாவீதின் தற்போதைய தீமையான நடத்தைகள் ஒரு பொருட்டானவைகள் அல்ல என்ற எண்ணத்தைத் தாவீதின் மனதில் கொண்டுவரத்தக்கதாக, தாவீது கடந்த காலத்தில் செய்த விசுவாசத்தின் நல்ல கிரியைகளையும், தாவீதின் துணிவையும், நீதியான மனப்பான்மையையும், தாழ்மையையும் பட்டியலிட்டுக் கூறுவதற்கு நாத்தான் முதலாவது முயற்சிக்கவில்லை; அதாவது தற்போது அவரால் செய்யப்பட்ட தீமைகள், அவரால் முன்பு செய்யப்பட்ட நன்மைகளினால் சமப்படுத்தப்பட்டது எனும் எண்ணங்களைத் தாவீதின் மனதில் உருவாக்க நாத்தான் முயற்சிக்கவில்லை; மாறாக தற்போது செய்யப்பட்ட பாவங்களுக்காய் மனந்திரும்பாததுவரை, தேவனைப் பொருத்தமட்டில், முந்தின நற்கிரியைகள் அனைத்தும் ஒன்றும் இல்லாததாகவே காணப்படும் என்பதை நாத்தான் நினைவுகூர்ந்தவராக, நேரடியாகவே காரியத்திற்கு வந்துவிட்டார்; திறம்பட நாத்தான் வழக்கை ஓர் உவமை மூலம் முன்வைத்தார்; தாவீதும் அதை உண்மையான வழக்கு என்பதுபோல் நம்பினவராக, குற்றம் புரிந்தவன்மேல் மரணதண்டனையினை வேகவேகமாய் வழங்கிவிட்டார். தான் செய்துவந்த அநீதியான காரியங்களைத் தீர்க்கத்தரிசி அறிவார் என்பதை அதுவரையிலும் கொஞ்சம்கூட யூகித்துப்பார்க்காமல், நீதிக்காக தான் எவ்வளவு வைராக்கியம் கொண்டிருக்கின்றார் என்பதை தேவமனுஷனுக்குக் காண்பிக்க வேண்டுமென்று தாவீது அநேகமாக விரும்பியிருந்திருக்க வேண்டும். தேவசித்தத்தைச் செய்வதேயல்லாமல், வேறொன்றையும் செய்ய மறுக்கும் துணிவுள்ள தீர்மானத்தோடு நாத்தான் தாவீதின் மனசாட்சிக்கு முன்பு பின்வருமாறு கூறி காரியங்களை

முன்வைத்தார்: அப்பொழுது நாத்தான் தாவீதை நோக்கி: நீயே அந்த மனுஷன்; இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் உன்னை இஸ்ரயேலின்மேல் இராஜாவாக அபிஷேகம் பண்ணி, உன்னைச் சவுலின் கைக்குத் தப்புவித்து, உன் ஆண்டவனுடைய வீட்டை உனக்குக் கொடுத்து, உன் ஆண்டவனுடைய ஸ்திரீகளையும் உன் மடியிலே தந்து, இஸ்ரயேல் வம்சத்தையும் யூதா வம்சத்தையும், உனக்குக் கையளித்தேன்; இது போதாதிருந்தால், இன்னும் உனக்கு வேண்டியதைத் தருவேன். கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பான இந்தக் காரியத்தைச் செய்து, அவருடைய வார்த்தையை நீ அசட்டைபண்ணினது என்ன? ஏத்தியனாகிய உரியாவை நீ பட்டயத்தால் மடிவித்து, அவன் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டு, அவனை அம்மோன் புத்திரரின் பட்டயத்தாலே கொன்றுபோட்டாய். இப்போதும் நீ என்னை அசட்டைபண்ணி, ஏத்தியனாகிய உரியாவின் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டபடியினால், பட்டயம் என்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும். கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், இதோ, நான் உன் வீட்டிலே ***பொல்லாப்பை**** உன் மேல் எழும்பப்பண்ணி, உன் கண்கள் பார்க்க, உன் ஸ்திரீகளை எடுத்து, உனக்கு அடுத்தவனுக்குக் கொடுப்பேன்; அவன் இந்தச் சூரியனுடைய வெளிச்சத்திலே உன் ஸ்திரீகளோடே சயனிப்பான். நீ ஒளிப்பிடத்தில் அதைச் செய்தாய்; நானோ இந்தக் காரியத்தை இஸ்ரயேலர் எல்லாருக்கு முன்பாகவும், சூரியனுக்கு முன்பாகவும் செய்விப்பேன் என்றார் என்று சொன்னான். (2 சாமுயேல் 12:7-12)

** இங்குப் பொல்லாப்பு எனும் வார்த்தை பாவம் என்ற விதத்தில் பயன்படுத்தப்படவில்லை; மாறாக அது பிரச்சனையை அல்லது துன்பத்தைக் குறிக்கின்றதாக இருக்கின்றது. இது ஒரு தேசமாக இஸ்ரயேலோடு பண்ணப்பட்ட தேவனுடைய உடன்படிக்கையின் ஓர் அம்சமாக இருக்கின்றது. இவர்கள் கீழ்ப்படிந்தார்களானால், பூமிக்குரிய அங்கீகரிப்பையும், பலனையும் பெற்றுக்கொள்வார்கள். இவர்களது கீழ்ப்படியாமைக்கும், பாவங்களுக்கும் பூமிக்குரிய தண்டனைகள் கொடுக்கப்படும். இம்மாதிரியான உடன்படிக்கையானது, வேறெந்த ஜாதிகளோடும் பண்ணப்படவில்லை. மார்ச் 1, '95-ஆம் வருடத்தினுடைய எங்களது கட்டுரையினைப் பார்க்கவும்.*

அது தாவீதிற்கு மிகவும் தர்மச்சங்கடமான தருணமாகக் காணப்பட்டது; அநேகமாக கொஞ்சம் நேரம் அங்கு அமைதி நிலவியிருக்கும். தாவீது என்ன செய்யப் போகின்றார்? தனது பழைய மற்றும் நம்பிக்கைக்குரிய நண்பனும், தேவனுடைய தாழ்மையான மனுஷனுமானவரால் அமைதலாயும், அன்பாயும் இப்படி முன்வைக்கப்பட்ட உண்மையினுடைய வல்லமையினைத் தாவீது பெருமையோடு எதிர்க்கப்போகின்றாரா? இதுவே அநேகமாக இதுவரையிலுமுள்ள இவரது வெற்றிகரமான வாழ்க்கையின் நிமித்தம் உண்டான பெருமையின் முதல் தாக்குதலாக இருந்திருக்க வேண்டும்; ஆனால் இவர் முன்னிலையில் தெளிவாய் முன்வைக்கப்பட்ட உண்மையும் இருக்கின்றது; இதை இவரால் எப்படி மறுக்க முடியும்? இவரது தவற்றிற்கு இவரால் எப்படிச் சாக்குப்போக்குகளைச் சொல்ல முடியும் அல்லது ஏதேனும் விதத்தில் எப்படி நியாயப்படுத்த முடியும்? இவருடைய மனதிலும் சாக்குப்போக்குகளோ, நியாயப்படுத்தும் காரணங்களோ காணப்படவில்லை என்பதில் நிச்சயமே. குற்றம்செய்தது முதற்கொண்டு ஏறக்குறைய அமைதியற்ற நிலைமையிலும், அவ்வப்போது உறுத்திக்கொண்டும் காணப்பட்ட மனசாட்சியானது, இப்பொழுது முழுமையாக விழித்துக்கொண்டது; ஒரு நெருக்கடியான நிலை வந்துவிட்டது. இராஜாவுக்கு முன்பு இரண்டு வழிகள் இருந்தன; ஒன்று மனம் வருந்தி, அறிக்கையிட்டு, சீர்பொருந்துதலாகும். இல்லையேல் தீர்க்கத்தரிசியைக் கோபத்தோடு கண்டிப்பதன் மூலமும், தன்னைக் கண்டனம்பண்ண

துணிந்ததற்காகத் தேவ மனுஷனைத் தண்டிப்பதற்கென்று இராஜா என்கிற தனது வல்லமையைப் பொல்லாப்பாய்த் தீங்கிற்குப் பயன்படுத்துவதன் மூலமும், சகல தேசங்களிலுமுள்ள இராஜாக்களுடைய வழக்கத்தின்படி, இராஜாக்களாகிய தாங்கள் விதிவிலக்கான மனிதர்களெனத் தாங்கள் விரும்பியதைச் செய்வது இராஜாக்களின் உரிமையாய் இருக்கின்றது என்று பெருமையாய் அறிக்கைபண்ணுவதன் மூலமும், அதிக ஆழமாய்ப் பாவத்திற்குள் கடந்துசெல்வது இன்னொரு வழியாய்க் காணப்பட்டது. இவ்விதமாக தேவனுடைய பிரமாணங்களுக்குப்பதிலாக இவ்வுலகத்தின் வழக்கங்களை, தனக்கான உரிமைகளின் தரநிலை என்று தாவீது உரிமை பாராட்டிக்கொள்ளலாம். எந்த இராஜாதான் தன் சொந்த ஆசைகளைவிட, தன் சக மனிதனுடைய உரிமைகளைப் பெரிதாகப் பார்ப்பான் என்று இராஜா சொல்லலாம்.

ஆனால் தாவீது இப்படியாகச் செய்யவில்லை என்பதற்காக நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இவர் தன் சிறந்த பண்புகளை ஒருவிசைக்கூட மேலோங்க அனுமதித்தார்; கதையைக் கேட்டபோது, தாவீது தன்னையும் அறியாமல், தன்னை மரணஆக்கினைக்குத் தீர்த்தப்போதிலும், இப்போது தாவீது நாத்தானை நோக்கி: நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன் என்றான். நாத்தான் தாவீதை நோக்கி: நீ சாகாதபடிக்கு, கர்த்தர் உன் பாவம் நீங்கச்செய்தார் என்றார். (2 சாமுயேல் 12:13)

தேவன் எவ்வளவு கிருபையுள்ளவராக இருக்கின்றார்! உண்மையான மனந்திரும்புதல் வெளிப்படும்போது, அவர் மன்னிப்பதற்கு எத்தனை ஆயத்தமாய்க் காணப்படுகின்றார்! எனினும் நாத்தான் தீர்க்கத்தரிசி: ஆனாலும் இந்தக் காரியத்தினாலே கர்த்தருடைய சத்துருக்கள் தூஷிக்க நீ காரணமாயிருந்தபடியினால், உனக்குப் பிறந்த பிள்ளை நிச்சயமாய் சாகும் என்று சொல்லி, நாத்தான் தன் வீட்டுக்குப் போய்விட்டார் (2 சாமுயேல் 12:14). தாவீது நொறுங்குண்டபோது, தனக்கு எதிராய் வந்த கண்டிப்புகளையும், தண்டனைகளையும் சாந்தத்தோடு ஏற்றுக்கொண்டார்; மேலும் தனது பாவம் மிகவும் கடுமையானதாகக் காணப்படுவதையும், ஜனங்கள் முன்னிலையிலான தனது நடக்கை, ஜனங்களுடைய ஒழுக்கம் மற்றும் ஆன்மீகம் சார்ந்த நலனுக்கடுத்த விஷயங்களில் மிகவும் தீங்கு விளைவித்துள்ளதையும் தாவீது உணர்ந்துகொண்டு தீர்மானம் எடுத்துக்கொண்டார்; மேலும் தனது பாவம் தீங்கை விளைவித்தபடியால், தனது ஆழ்ந்த மனவருத்தமும், மனந்திரும்புதலும் நன்மைபயக்கும் விதத்தில் காணப்படத்தக்கதாக ஒரு முன்மாதிரியாய் விளங்க வேண்டும் என்ற தனது தீர்மானத்தை நடைமுறைப்படுத்தினார்.

இது ஒரு சிறந்த தீர்மானமாகும்; தன் பாவத்தை இவர் தாழ்மையாக மற்றும் வெளிப்படையாக அறிக்கைபண்ணின காரியத்திலும், தான் செய்த தவறைக் கூடுமானமட்டும் சரிப்படுத்துவதற்கு இவர் ஏறெடுத்த முயற்சியிலும் இம்மனுஷனுடைய மேன்மை வெளிப்படுகின்றது; இன்னுமாகப் பாவத்திற்கு எதிரான தேவனுடைய கோபம் அனைவருக்கும் தெரியப்படுத்தப்பட்டு, இவ்விதமாய் இராஜாவும், ஜனங்களும் பாவத்திற்கு எதிராக எச்சரிக்கப்படத்தக்கதாக, தேவன் தாவீதின்மீது வருவதற்குப் பாத்திரமானது என்று தம்முடைய ஞானத்திலும், இரக்கத்திலும் கண்டு, அனுமதித்த தண்டனைகளுக்குத் தாவீது சாந்தமாய் ஒப்புக்கொடுத்ததில் வெளிப்படுவதைவிட, வேறெதிலும் இம்மனுஷனுடைய சான்றாண்மை/மேன்மை மிகத் தெளிவாய் வெளிப்படுவதில்லை. பலவானைப்பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன் (நீதிமொழிகள் 16:32). தன் இருதயத்தில் ஆழமாய் வேர்விட்டிருந்த பெருமை மற்றும் சுயநலத்தை ஜெயம்கொண்டதில், தாவீது தன்னை மாவீரன் என்று நிரூபித்துக்காட்டினார்; அதாவது அவரது

வாலிபப்பருவத்தின்போது அவர் காத் பட்டணத்தின் இராட்சதனோடு யுத்தம் பண்ணினபோது அல்லது பிற்பாடு வந்த யுத்தங்களின்போது வீரனாய்த் திகழ்ந்ததைவிட, இந்த ஒரு சம்பவத்தின்போதே தன்னை மாவீரனாக நிரூபித்துக்காட்டினார்.

தெய்வீக மன்னிப்பு என்பது, பாவத்தின் விளைவான தண்டனைகள் யாவற்றையும் தள்ளுபடி செய்யப்படுவதைக் குறிக்காது என்பது இந்த ஒரு சம்பவத்திலும், பல்லாயிரக்கணக்கான மற்ற சம்பவங்களிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தெய்வீகப் பிரமாணத்தின்படி தாவீதின் பாவத்திற்குரிய முழுத்தண்டனை மரணமாகும். மேலும் அந்தக் கடினமான பிரமாணத்தினால் வழங்கப்படும் இந்தத் (மரண) தீர்ப்பானது, இரண்டு குற்றச்சாட்டுகளின் நிமித்தமாய்ப் பார்க்கப்படும்போது நியாயமானதாகவே காணப்படும்( லேவியராகமம் 20:10; 25:17-ஆம்வ சனங்களைப்ப ார்க்கவும்); எனினும்த ாவீதும னம் வருந்தினதின் நிமித்தம், கர்த்தர் மரணதண்டனையை மன்னித்துவிட்டார் (2 சாமுயேல் 12:13); மேலும் குற்றஞ்செய்தவரை முழுமையாய்ச் சரிப்படுத்துவதற்குத் தேவையான ஒரு தண்டனையை மாத்திரம் அளித்தார்; இன்னுமாகத் தேவன் பாரபட்சம் பார்ப்பவரல்ல என்றும், இராஜாவும் சரி, ஜனங்களும் சரி திவ்விய பிரமாணத்திற்கு முன்பு சரிசமமாகவே நிற்க வேண்டும் என்றும் காண்பித்து, ஜனங்களை எச்சரிக்கவும், அவர்களுக்கு அறிவுறுத்தவும் தேவையான ஒரு தண்டனையை மாத்திரம் அளித்தார். மேலும், கொடுக்கப்பட்ட தண்டனைகள், பெருமளவில் செய்யப்பட்ட பாவங்களினுடைய ***விளைவுகளேயாகும்*** என்பதும்கூட நினைவில் கொள்ளப்படவேண்டும். தாவீதிற்குக் கடுமையான பிரச்சனைகள், பல மனைவிகள் காணப்பட்ட அவருடைய குடும்பத்திலிருந்து வந்தது; தாவீதிற்குப் பெரும்பாலும் பிரச்சனையைக் கொடுத்த அவரது குமாரர்கள், அவரது புறஜாதி மனைவிகளினுடைய பிள்ளைகள் ஆவார்கள்; பத்சேபாளின் பிள்ளையோ மரித்துப்போனது.

51-ஆம் சங்கீதத்தில் தாவீது தனது ***பாவத்தை வெளிப்படையாய் அறிக்கைபண்ணி,*** அதை ***மன்னித்ததிலுள்ள தேவனுடைய இரக்கத்தையும்*** குறித்துத் தெரிவித்துள்ளார். 32-ஆம் சங்கீதத்தில் எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான் என்றும், எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ, மாய்மாலமில்லாமலும், வஞ்சனையில்லாமலும் இருக்கின்றதோ, யாருடைய செய்கைகள் அனைத்தும் வெளிப்படையாகவும், ஒளிவுமறைவு இன்றியும், நீதியை நடப்பிக்கிறதாகவும் இருக்கின்றதோ, அவர்கள் பாக்கியவான்கள் என்றும் தாவீது பதிவுசெய்கின்றார் (சங்கீதம் 32:1,2). அவர் இங்கு தன் பாவத்தை அறிக்கைபண்ணுகின்றார்; மேலும், கர்த்தருடைய மன்னிப்பைக்குறித்தும் சான்றுபகருகின்றார் (வசனம் -5); மேலும், தங்கள் இருதயங்கள் கடினப்பட்டுப்போய், தீயநடக்கைகளுக்குள் கடந்துசெல்வதற்கு முன்பு, சகாயம் கிடைக்கும் காலங்களில் இந்தத் தெய்வீக மன்னிப்பிற்காகத் தேவனிடம் விண்ணப்பம் பண்ணும்படியாக, பாவிகள் அனைவருக்கும் புத்திமதி கூறுகின்றார். (வசனம் - 6)

தனது பாவத்தின் காரணமாகத் தன்மீது கடந்துவந்ததும், இன்னுமாகச் சாந்தத்தோடும், பொறுமையோடும் சகிக்கப்பட்டதுமான பிரச்சனைகளின் மத்தியிலும்கூட, நீர் எனக்கு மறைவிடமாயிருக்கிறீர்; என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக்காத்து, இரட்சணியப் பாடல்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளும்படி செய்வீர் என்று கூறி, தாவீது விசுவாசத்தின் மூலம் கர்த்தரில் களிகூரக் கற்றுக்கொண்டார் (சங்கீதம் 32:7); ஏனெனில் தம்முடைய மன்னிக்கும் அன்பு எனும் முத்திரையினால் முத்திரையிடப்பட்டும், தன்னை விசுவாசித்தும் காணப்படும் பரிசுத்தவான்களை, எந்த உபத்திரவங்களும் மூழ்கடிக்கக் கர்த்தர் விடார்.

தேவனை விசுவாசித்து, அவருக்குக் கீழ்ப்படியும் பிள்ளைகள் அனைவருக்குமான தேவனுடைய பதிலைத் தாவீது பின்வருமாறு தெரியப்படுத்துகின்றார்; ஏதோ தேவன் தன்னுடைய தாழ்மையான நம்பிக்கை மற்றும் விசுவாசத்திற்குப் பதிலளிப்பதுபோன்று அவ்வார்த்தைகளைத் தெரியப்படுத்துகின்றார்: நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன். வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச் சேராத (கட்டுப்பாட்டின்கீழ் ஒப்புக்கொடுக்காத) புத்தியில்லாக் குதிரையைப்போலவும் கோவேறு கழுதையைப்போலவும் இருக்கவேண்டாம். (சங்கீதம் 32:8-9)

(துன்மார்க்கன், துன்மார்க்கனாய் இருப்பது வரையிலும்) துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு (தாவீதுக்கு இந்த வேதனையான அனுபவங்கள் வந்தன - வசனம் 3-4); கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ (இதற்குப் பாவத்திலிருந்து விலகுவதும் அவசியம்) கிருபை சூழ்ந்துகொள்ளும். இரட்சிப்பின் சந்தோஷங்களுக்குள் மீண்டும் கொண்டுவரப்பட்ட இந்த மனந்திரும்பின மனுஷனின் நம்பிக்கையுள்ள விசுவாசமானது, நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்; செம்மையான இருதயமுள்ளவர்களே, நீங்கள் எல்லாரும் ஆனந்தமுழக்கமிடுங்கள் என்று கூறினது. (சங்கீதம் 32:11)

ஒருவேளை மனஸ்தாபப்பட்டும், நம்பிக்கைகொண்டும் காணப்படும் தமது ஊழியக்காரனை இவ்விதமாய் தமது இரட்சிப்பின் சந்தோஷத்திற்குள் தேவன் மறுபடியும் கொண்டுவந்து, தாம் நொறுக்கின எலும்புகளைக் களிக்கூரப் பண்ணியிருப்பாரானால் (சங்கீதம் 51:8), ஒருவேளை சுத்த இருதயத்தைத் தேவன் அவரில் சிருஷ்டித்து, நிலைவரமான ஆவியை உள்ளத்தில் புதுப்பிப்பாரானால் (சங்கீதம் 51:8, 10), பின்னர் யாரால் அவரது பிரியமானவன்மீது எந்த ஒரு குற்றத்தையாகிலும் சாட்டமுடியும்? தேவன் இலவசமாய் மன்னித்ததுபோலவே, அவருடைய ஜனங்கள் அனைவரும் காணப்பட வேண்டும்; ஆகையாலே முற்பிதாக்களில் ஒருவராக, தாவீதை நாம் பார்ப்பதில் களிகூருகின்றோம்; இவர் நமது அன்பிற்கும், நமது நம்பிக்கைக்கும் பாத்திரவானாகக் காணப்படுகின்றார்; இவரது குணலட்சணத்தை அழகுப்படுத்தின அநேக கனிகளைப் பார்த்து நாமும் வளர்த்துக்கொள்வதற்கு, இவர் சிறந்த மாதிரியாகவும் காணப்படுகின்றார். நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதுபோலவே, தன்மீது தானே வெற்றிகொண்ட விஷயத்தில், இராஜா மிகவும் பாத்திரமான மாதிரியாக விளங்கியதுபோன்று, வேறு எதிலும் காணப்பட்டதில்லை. விசேஷமாக இவரது உயர்ந்த ஸ்தானத்தையும், ஜனங்கள் முன்னிலையிலுள்ள இவரது முதன்மை ஸ்தானத்தையும் கருத்தில் எடுத்துக்கொண்டு பார்க்கையில், இவர் குற்றஞ்சாட்டப்பட்ட அவமானத்திற்குரிய குற்றங்களும், அதை இவர் ஒப்புக்கொண்டதும் இவருக்கு மிகுந்த அவமானமாய் இருந்திருக்கும்; இதன் காரணமாய் ஒட்டுமொத்த ஜனங்களின் மரியாதை மற்றும் நம்பிக்கையை இவர் இழந்திருப்பார்; அநேக வருடங்களாக இவரால் சந்தேகத்திற்கிடமின்றி மதிக்கப்பட்ட மரியாதையை இவர் இழந்திருப்பார்; இவரது புத்தி தெளிந்தபோது, இவரது இயல்புக்கேற்றபடி மிகுந்த அவமானத்தை உணர்ந்திருப்பார்; இவைகளையெல்லாம் நாம் கருத்தில் எடுத்துக்கொண்டு பார்க்கையில், தன்னைத் தாழ்த்தினதிலும், மனம்வருந்தியதிலும், தாவீது தன்மீது தான் அடைந்த வெற்றி என்பது சரித்திரத்தின் பக்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள மாபெரும் மற்றும் பிரம்மாண்டமான சாதனைகளில் ஒன்றாகும்; மேலும் எவ்வளவேனும் கர்த்தருடைய நீதியின் வழியினின்று விலகியுள்ளதாக உணர்ந்துகொள்ளும் தேவப்பிள்ளை ஒவ்வொருவருக்கும், இவரது நடக்கையானது பரிந்துரைக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

R5681

# நீயே, அந்த மனுஷன்!

## 2 சாமுயேல் 11:1 - 12:7

தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும். - சங்கீதம் 51:10

வேதாகமம் உலகத்திலுள்ள மற்றப் புத்தகங்களைப்போல அல்ல. இது எல்லாப் புத்தகங்களைக் காட்டிலும் மிக நேர்மையானதும், மிக வெளிப்படையானதும் ஆகும். தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற மனுஷன் என்று அங்கீகரிக்கப்பட்ட ஒருவர் பாவம் செய்தபோது, மிக அதிகமாகக் கண்டிக்கப்பட்டு, மிகக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார். உமக்குப் பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு என்கிற இந்த வேதவாக்கியத்தில் ஒரு பாடம் இருக்கின்றது (சங்கீதம் 130:4). தேவன் இரக்கமற்றவர் அல்ல எனும் உண்மையும், அவர் நம் பெலவீனமான மற்றும் அபூரணமான நிலைமையினை அலட்சியமாகக் கருதுகிறதில்லை எனும் உண்மையும், நமது மாம்சீக பெலவீனங்கள் கண்டிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டாலும், நமது மனதின் நோக்கத்தையே தேவன் மதிக்கின்றார் எனும் உண்மையும் நாம் அவரிடத்தில் அதிக பயபக்தியைக் கொண்டிருக்கச் செய்கின்றது. ஒருவேளை நாம் தேவனை இரக்கமற்றவர் என்று மாத்திரம் எண்ணிக்கொண்டிருந்திருப்போமானால், இப்படியாக பயபக்தியாய் இருந்திருக்க மாட்டோம்.

இந்தப் பாடத்தில் உயர்ந்த குணத்தை வெளிப்படுத்திய ஒருவர் (தாவீது), விபச்சாரம், கொலை போன்ற கண்டனத்திற்கேதுவான பெலவீனங்களை வெளிப்படுத்தியிருப்பதில் நாம் ஆச்சரியமடைகின்றோம். நாம் இளைஞனான தாவீதையும், தேவனுக்கான அவரது பயபக்தியையும், அவரது விசுவாசத்தையும், அவரது நேர்மையையும், அவரது சோதனைகளையும், கஷ்டங்களையும் நினைக்கின்றோம். இவ்வளவு சீக்கிரத்தில் அவர் எப்படி மாறினார் என்று நாம் மிகவும் ஆச்சரியப்படுகின்றோம். அதன் இரகசியத்தைக் கண்டுபிடிப்பது முடியாததல்ல. வறுமையில் முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு வாழ்க்கையை வாழ்வது என்பது, அரண்மனையின் செல்வங்களும், இன்பங்களும், பழக்கவழக்கங்களும் மற்றும் சுதந்தரங்களும் சூழ்ந்திருக்கும்போது வாழ்வதைக்காட்டிலும் எளிது. தேவனுடைய தயவையும், பிரசன்னத்தையும் அடையாளப்படுத்துகின்ற தேவனுடைய உடன்படிக்கைப்பெட்டி அவரது நகரத்தில் தற்போது இருக்கின்றது என்பதை இராஜா கொஞ்சம் மறந்துவிட்டார். கர்த்தருடைய கண்கள் ஒவ்வொரு இடத்திலுமுள்ள நன்மைகளையும், தீமைகளையும் பார்க்கின்றது என்ற உண்மையை அவர் நன்கு அறிந்தவர் ஆவார். எனினும், நீர் என்னைக் காண்கின்ற தேவன் என்கிற எண்ணம் ஆசரிப்புக்கூடாரத்தைப் பார்த்ததினால் அவரது உள்ளத்தில் மீண்டுமாக வந்திருக்க வேண்டும்.

எனினும், தாவீது இராஜா பாவம்செய்கிற நிலைமைக்கு அவரது இருதயமும், உள்ளமும் திடீரென்று வந்திருக்காது என்று நிச்சயிக்கின்றோம். இந்தக் காரியம் பல மாதங்களாக சிந்தையில் வந்து, படிப்படியாக அது உச்சத்தை அடைந்திருக்க வேண்டுமென்று பதிவுகள் நமக்குக் காண்பிக்கின்றது. அவரது நடத்தையைப்போலவே அவரது இருதயமும் தவறானது என்று யூகிப்பது சரியானதாக இருக்காது. பின்வரும் நடக்கைகளை வைத்துப்பார்க்கும்போது அவரது இருதயம் இன்னும் தேவனுக்கும் மற்றும் நீதியின் கொள்கைகளுக்கும் விசுவாசமாக இருந்தது என்றும், ஆனால் எப்படியோ அவரது இருதயம் விழித்திராமல் தூங்கிவிட்டது என்றும், அவரது மாம்சம் சுறுசுறுப்பாக இருந்தது என்றும் நாம் அனுமானிக்கலாம். நீதிக்குத் தூங்கினவராகவும், பாவத்திற்கு விழித்திருந்தவராகவும் இருந்தார். அவருக்கு முன்னதாக மற்ற இராஜாக்களின் அனுகூலமற்ற உதாரணங்களும், அவர்கள் அப்பியாசப்படுத்தின சுதந்தரங்களும்

இருந்தன. தேவனுடனான அவரது உறவு அவரைப் புத்திக்கூர்மையுள்ளவராக்கியது; ஆனால் சோதனைக்கு/சபலத்திற்கு இடங்கொடுத்ததில், இப்பொழுது அந்தப் புத்திக்கூர்மையான மனம் தீய வழியில் மிகவும் திறம்பட செயல்பட்டது.



**நாத்தான் தீர்க்கதரிசி தாவீதை நேருக்குநேர் எதிர்கொண்டார்**

## ஒரு தைரியமுள்ள ஊழியக்காரன்

தாவீது, முதலில் தனது அயலானின் மனைவியை இச்சித்தார். இந்தப் பாவ மனநிலையைக் கண்டிக்காமல், அயலானின் மனைவியைத் திருடும்வரை, அது தொடரும்படி அனுமதித்தார். அவளது கணவன் ஒரு விசுவாசமுள்ள இராணுவ வீரனாக இருந்தார். அவமானத்திலிருந்து இராஜாவைக் காப்பாற்ற அந்த வீரனின் மரணம் அவசியமாகக் காணப்பட்டது. ஒரு குறிப்பிட்ட பட்டணத்தின்மீது தாக்குதல் பண்ணும்போது, அந்த விசுவாசமுள்ள வீரனை முன்னால் நிற்கும்படிசெய்து, பின்னர் சேனையை பின்வாங்க உத்தரவிட்டு, அவனை எதிரிகள் கொல்ல விட்டு விடும்படி, தனது இராணுவ தளபதிக்குத் தாவீது சொல்லி அனுப்பியபோது, அவரது மனசாட்சி நிச்சயமாகத் தூங்கிவிட்டது.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. அங்கே பலியானது குற்றமற்ற கணவன் மட்டுமல்ல, இன்னும் அநேகர் இறந்தனர். நீதி நியாயங்கள்மேல் பற்றுதல் உள்ள தாவீது இராஜா, எப்படி இப்படிப்பட்ட ஒரு திட்டத்தைச் செய்தார் என்று அல்லது இந்தச் சூழ்நிலைகளின்கீழ் எப்படிச் சமாதானத்தைப் பெற்றிருக்க முடிந்தது என்று நம்மால் கற்பனைசெய்து பார்க்க முடியவில்லை. ஒன்பது மாதம் அல்லது அதற்குமேலான இந்தக் காலகட்டத்தில் அவரது அழகான சங்கீதங்கள் நிச்சயமாக எழுதப்பட்டிருக்க முடியாது. உரியா இறந்துவிட்டார்; திருடப்பட்ட அவரது மனைவி தாவீதின் மனைவியாக்கப்பட்டாள். பின்னர் அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது.

பிறகு தீர்க்கதரிசி நாத்தான், இராஜாவிடம் வந்தார். ஒரு கதை மூலமாக அவரது கண்டனத்தை ஞானமாகத் தெரிவித்தார். ஓர் ஏழையான மனிதன், ஒரு பெண் ஆட்டுக்குட்டியை வைத்திருந்தான். அவனது

பணக்கார அயலான், அந்த ஆட்டுக்குட்டியை ஏமாற்றி எடுத்துக்கொண்டான். இப்படியாக அந்தக் கதையைச் சொன்னார். தாவீது இராஜா நீதி உணர்வின் நிமித்தம் கோபமூண்டவராகி, இந்தக் காரியத்தைச் செய்தவன் மரணத்திற்குப்பாத்திரன், அந்த ஆட்டுக்குட்டிக்காக நாலத்தனையாகத் திரும்பக்கொடுக்க வேண்டும் என்றார். அப்பொழுது நாத்தான் இராஜாவை நோக்கி: "*நீயே அந்த மனுஷன்*!" என்று கூறி சரியானபடி பாடத்தைப் புகட்டினார். இதற்குத் தைரியம் தேவைப்பட்டது. யாராவது தேவனிடமிருந்து ஒரு செய்தியைப் பெற்றால், அதை ஞானத்துடனும், உண்மையுடனும் அறிவிக்க தைரியம் வேண்டும்.

உடனே தாவீது இராஜாவின் இருதயம் விழித்துக்கொண்டது. உடனே அவரது மனசாட்சி தட்டியெழுப்பப்பட்டது. அவர் தனது நடத்தையை, மற்ற இராஜாக்களின் செயல்பாட்டின்படியல்ல, மாறாக நீதி, சத்தியம், கருணை மற்றும் இரக்கம் தொடர்புடைய தெய்வீக நிலைப்பாட்டின்படி பார்த்தார். தான் ஒரு பாவி என்பதைக் கண்டார். உண்மையிலேயே நியாயப்பிரமாணத்தின்படி விபச்சாரம் மற்றும் கொலை குற்றத்திற்கு மரணமே தண்டனையாகும். இராஜா உடனே தனது பாவத்தை ஒப்புக்கொண்டார், ஜெபித்தார், உபவாசித்தார், வருந்தினார். தாவீது தனது பாவத்தை அறிக்கையிட்டு வருத்தப்பட்டதினால், தேவன் அவருக்கு மரணதண்டனை கொடுக்கமாட்டார் அல்லது அவரிடமிருந்து தம் கருணை அனைத்தையும் எடுத்துக்கொள்ள மாட்டார் என்று தெய்வீக வழிநடத்துதலின்படி தீர்க்கத்தரிசி அவருக்கு அறிவித்தார். எனினும் அவரது பாவத்தின் விளைவாக பிறந்த குழந்தை உயிரோடிராது என்றும், சில காலத்திற்குப்பிறகு அவரது மீறுதலுக்காக கடுமையான தண்டனையை அனுபவிப்பார் என்றும் அறிவித்தார்.

இங்கே நாம், தேவனுடைய ஜனங்களாக, அவருடன் உடன்படிக்கை உறவுக்குள் இருக்கின்றவர்களுக்கான தெய்வீக அரசாங்கத்தின் ஒரு கொள்கையை உணர்ந்துகொள்கின்றோம். பாவங்களைப் பொறுத்தவரை நீதி செயல்படுத்தப்படுகின்றது; எனினும் தனது பாவத்திற்காக வருந்துகிறவனுக்குத் தேவதயவு கொடுக்கப்படுகின்றது. அநேக கிறிஸ்தவர்கள் இதே அனுபவங்களைப் பெற்றிருக்கின்றார்கள். தேவன் அவர்களைத் தொடர்ந்து பாவிகளாக நடத்துகிறதில்லை; அவர்களது மனவருத்தத்தை ஏற்றுக்கொண்டு, அவர்களை மன்னிக்கின்றார்; அதேசமயம் ஒரு மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் என்கிற அவரது ஏற்பாட்டின்படியே செயல்படுகின்றார். இந்தத் தெய்வீக ஏற்பாட்டில், பாவத்தை ஊக்குவிக்கிற காரியம் ஏதுமில்லை; மாறாக அனைத்தும் நீதியை ஊக்குவிக்கின்றதாக இருக்கின்றது; ஒருவன் பாவத்திற்குள் விழுந்துவிட்டால், இதினிமித்தம் பாவி சில கடுமையான தண்டனையைத் தனது மரணம்வரை அனுபவிக்கக் கடமைப்பட்டிருந்தாலும், அந்தப் பாவி தெய்வீக மன்னிப்பை பெற்றுக்கொள்ளவும், அவனது வாழ்க்கையைச் சீர்த்திருத்தவும் இந்த ஏற்பாடு ஊக்குவிக்கின்றதாக இருக்கின்றது.

## மனந்திரும்புதலைப் பற்றின சங்கீதம்

51-ஆம் சங்கீதத்தினால் அநேக கிறிஸ்தவர்கள் மனந்திரும்ப உற்சாகப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். நிச்சயமாக யாரும் இதன் மூலம் பாவஞ்செய்யத் தூண்டப்படவில்லை. நாத்திகராகிய வால்டேர் என்பவர் இந்தச் சங்கீதத்தைக்குறித்துக் கேலிச்சித்திரம் எழுத முற்பட்டபோது, அதன் பயபக்தியான நயத்தினால் மிகவும் அச்சமடைந்து, முழுமையான மனவியாகுலத்துடன் தனது பேனாவை தூக்கி

எறிந்துவிட்டு, தனது இருக்கையில் சாய்ந்துவிட்டார் என்று சொல்லப்படுகின்றது. இப்படியாக ஒரு பரிசுத்தவான் விழுந்ததையும், எழும்பியதையும் நாம் காணும்போது, ***எப்படி நாம் பாவஞ்செய்ய முடியாதவர்கள் என்று எண்ண முடியும்*** என்று பிஷப் " ால் என்பவர் இதைக்குறித்துக் கூறியுள்ளார். தாவீது இராஜா உயர்ந்தவராக இருந்தபோதிலும், அவர் புதிய ஏற்பாட்டின் பரிசுத்தவான் அல்ல. அவர் இருதய அளவில் பரிசுத்தவானாக இருந்தாலும், அவர் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை; ஏனெனில் நாம் யோவான் 7:39-ஆம் வசனத்தில் வாசிப்பதுபோல, பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படாதிருந்தது.

பரிசுத்த ஆவி கொடுக்கப்படுதலும், அதனால் புதிய சுபாவத்திற்கு ஜெநிப்பிக்கப்படுதலும் பெந்தெகொஸ்தே நாளில் ஆரம்பித்து, இன்றும் தொடர்கின்றது. தாவீது இராஜா இப்படிப்பட்ட தவறுகளால் மேற்கொள்ளப்பட்டதைக் கண்டு நாம் ஆச்சரியப்படுவோமேயானால், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட தேவனுடைய பரிசுத்தவான் யாராவது சத்துருவின் இப்படிப்பட்ட ஒரு கண்ணியில் அகப்படும்போது நாம் எவ்வளவு ஆச்சரியப்படுவோம். ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் அதிகமான அனுகூலம் பெற்றவர்களாக இருக்கின்றார்கள். எப்படியெனில் அவர்கள், தெய்வீக வாக்குத்தத்தம், தெய்வீகத் திட்டம் மற்றும் தெய்வீகக் குணலட்சணத்தைப்பற்றிய அதிகமான அறிவினால், மகா வெளிச்சத்தைப் பெற்றது மாத்திரமல்ல, அவர்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாய் நடக்கும் மற்றும் திராணிக்குமேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் என்கிற வாக்குத்தத்தங்களோடுகூட, தங்களுக்கு உதவியாளராய் கர்த்தராகிய இயேசுவையும் பெற்றிருக்கின்றார்கள். (உரோமர் 8:28; 1 கொரிந்தியர் 10:13)

தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. இந்த உண்மையான வார்த்தைகள், இராஜாவின் மனக்கண்கள் மாதக்கணக்கில் மேகத்தினால் மூடப்பட்டிருந்தது என்பதை உறுதிப்படுத்துகின்றது. பூமிக்குரிய மேகமும், மாம்சீக பெலவீனமும் அவருக்கும், தேவனுக்கும் இடையே ஒரு திரையைப்போல எழும்பி, தேவனுடைய முகத்தின் வெளிச்சத்தை மூடியிருந்தது.

இந்தப் பாடம் தேவனோடு உடன்படிக்கையின் உறவுக்குள் வந்திருக்கும் அனைவருக்கும் பொருத்தமானது. தனக்கும், கர்த்தருக்கும் இடையே சிறிதளவான நிழல் வந்துள்ளதை உணரும் ஒரு கிறிஸ்தவனின் மனோபாவம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதைக் கவிஞன் பின்வருமாறு சித்தரித்துள்ளார் :

என் பிரியமான பிதாவே, என் ஆத்துமாவின் சூரியனே,
நீர் அருகே இல்லாத ஓர் இரவை நான் அறியேன்.
உமது ஊழியக்காரரின் கண்களிலிருந்து உம்மை மறைக்கும்
எந்தப் பூமிக்குரிய மேகமும் எழும்பாமலிருப்பதாக!

நாம் தேவனுடன் நெருக்கமாக இருக்க வேண்டும் என்பதே இதில் உள்ள முக்கியமான பாடமாகும். தேவனுடைய பிள்ளை தனது அலுவல்களில் தேவனுடைய மேற்பார்வைக்காகவும், சரியான பாதையில்

நடப்பதற்கான அவரது உதவிக்காகவும் காலையில் அவரிடத்தில் ஜெபிக்காமல் போகக்கூடாது. பரலோக வீட்டிற்கு அருகாமையில் செல்வதற்கான வழியில் எந்தளவுக்கு இன்று சென்றிருக்கின்றோம் என்பதை உணர்வதற்காக, அந்தந்த நாளின் செயல்களை நினைவுபடுத்திப் பார்க்காமல், தேவனுடைய பிள்ளை படுக்கைக்குச் செல்லக்கூடாது. ஒருவேளை வெட்கப்படக்கூடிய செயல் ஏதாவது செய்திருந்தால், எதிர்காலத்தில் சகாயம்பெற தேவையான உதவிக்காகக் கிருபாசனத்தண்டைக்கு உடனே அவன் செல்ல வேண்டும்.

இப்படியாகத் தேவனுடைய பிள்ளை, பிதாவாகிய தேவனோடும், இரட்சகரோடும் அனுதினமும் தொடர்பு வைத்துக்கொண்டு, அவர்களது அன்பில் நிலைத்திருக்கவும், இந்தப் பாடத்தில் நாம் பார்த்ததுபோன்று இப்படிப்பட்ட எந்தவித பெரும்பாவத்தில் விழுந்துவிடாதபடி பார்த்துக்கொள்ளவும் வேண்டும். தாவீது இராஜாகூடத் தேவனுக்கும், அவருக்கும் இடையே மாம்சீக பூமிக்குரிய மேகங்கள் படிப்படியாக எழும்ப அனுமதிக்காமல் இருந்திருப்பாரானால், அவர் இப்படிப்பட்ட பாவங்களில் விழுந்திருக்க மாட்டார் என்று நாம் நிச்சயிக்கின்றோம்.

என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் என் முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும். தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். உமது சமூகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும் உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும். உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும். அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்; பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்.

பழைய ஏற்பாட்டுகால விசுவாசிகளுக்குப் பரிசுத்த ஆவியானது, இன்று சபைக்குக் கொடுக்கப்படுவதுபோன்று கொடுக்கப்படவில்லை என்றாலும், அவர்களது காரியங்களில் அது தேவனுடைய அனுக்கிரகத்தின் வெளிப்பாடாக இருந்தது; இதைத்தான் இங்கே தாவீது இராஜா குறிப்பிடுகின்றார். மோசேயிலிருந்து யோவான் ஸ்நானன்வரை, மோசேயின் கீழாக பணிவிடை வீட்டாராய் இருந்தார்கள், ஆனால் சுவிசேஷயுகத்தில் பிரதான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் கீழாக, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட புத்திரர் வீட்டார் இருக்கின்றார்கள் என்பதை நாம் நினைவுகூர வேண்டியவர்களாயிருக் கின்றோம். (எபிரெயர் 3:5-6)

R3253

# இராஜாவாகிய தாவீதின் மனந்திரும்புதல்
## சங்கீதம் 51:1-17

தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும். - சங்கீதம் 51:10

ஐசுவரியம் இராஜாவாகிய தாவீதுக்குத் தனிப்பட்ட விதத்தில் நன்மைப் பயக்கவில்லை. கர்த்தருடைய ஆசீர்வாதத்தின்கீழ்ப் பெரும் வெற்றிகள் பெற்றதற்குப் பல வருடங்களுக்கும் பின்னர், இவரது இராஜ்யபாரம் வல்லமைபெற்றும், இவரது பெயர் கீர்த்திப்பெற்றும் காணப்பட்டபோது . . . இவர் யுத்தத்தில் தனிப்பட்ட விதத்தில் பங்கெடுப்பதற்குரிய அவசியங்கள் இல்லாத காலகட்டங்களின்போது . . . இவரது இருதயம் பூமிக்குரிய இன்பங்கள்மீது ஈர்க்கப்படத் துவங்கினது; இவரது இருதயம் கர்த்தருக்கும், நியாயப்பிரமாணத் திற்குமான வைராக்கியத்தில் முன்பைக்காட்டிலும் குறைவுபடத் தொடங்கினது; இராஜா மிகக் கடுமையான பாவங்களைச் செய்தார்; இப்பாவக் காரியங்களானது, இவரது ஆரம்பகால வாழ்க்கையில், இவர் தேவனுக்கேற்ற மனுஷனாகக் காணப்பட்டபோது, இவரிடத்தில் காணப்பட்ட உயர்ந்த ஒழுக்கப்பண்புகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மிகவும் இருளாகத் தென்படுகின்றது. இவரது பாவங்களைப் பற்றின பதிவுகள் . . . இவர் எப்படிப் பத்சேபாளால் கவரப்பட்டார் என்பது பற்றியும், எப்படி அவளோடு விபச்சாரம் பண்ணினார் என்பது பற்றியும், பிற்பாடு தன்னைக் காத்துக்கொள்வதற்காக, அவளது புருஷனாகிய உரியாவை, யுத்தத்தின் முன்பக்கத்தில் நிறுத்தும்படிக்கு எப்படி ஏற்பாடு பண்ணினார் என்பது பற்றியும், இப்படி உரியாவை நிறுத்தினால் மற்ற அநேக மனுஷர் மரித்துப்போவதோடுகூட, உரியாவும் சத்துருவினால் கொல்லப்படுவார் என்ற எண்ணத்தில் தாவீது எப்படி ஏற்பாடுபண்ணினார் என்பது பற்றியும் உள்ள பதிவுகள் . . . வேதவாக்கியங்களில் மிகவும் ஒளிவு மறைவு இன்றியும், இராஜாவின் தவறான செய்கைகளை நியாயப்படுத்துவதற்குரிய எவ்விதமான முயற்சிகள் இன்றியும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒரு சம்பவத்தை நியாயப்படுத்துவதற்குரிய எந்தச் சாக்குப்போக்குகளும் கொடுக்கப்படவில்லை. இந்தப் பயங்கரமான குற்றங்களுக்குரிய முழுப்பொறுப்புகளும் நேரடியாக இராஜாவின் தலையின்மீதே வைக்கப்பட்டது. தாவீதிற்கு ஆதரவாகக் காரணங்கள் ஏதேனும் சொல்லப்பட்டிருக்குமாயின், அது அப்பதிவை வாசிப்பவரால் சொல்லப்பட்ட காரணங்களாகவே இருந்தன (வேதம் காரணங்கள் ஏதும் சொல்லவில்லை). நாங்கள் இது விஷயத்தில் சில கருத்துகளை முன்வைக்கின்றோம், அவை பின்வருமாறு: அந்த நாட்களில் உலகத்தின் இராஜாக்கள் சர்வாதிகார அதிகாரத்தைச் செயல்படுத்தினவர்களாகக் காணப்பட்டனர்; இன்னுமாக இராஜா என்பவர் தவறே செய்யமாட்டார் என்றும், தேசத்தின் தலை மற்றும் அதிகாரி என அவர் வகிக்கும் உயர்ந்த ஸ்தானம் காரணமாக, அவர் செய்ய விரும்பும் எதுவும், அவருக்கு உகந்ததாகவே காணப்படும் என்றுமுள்ள எண்ணங்கள் ஜனங்கள் மத்தியில் நிலவியிருந்தது. ஆனால் இத்தகையதொரு கருத்தை எங்களால் ஒத்துக்கொள்ள முடியாது. எனினும் மிகவும் பரவலாய்க் காணப்பட்ட இந்தக் கருத்துகளானது, இராஜாவின் மனதிலும் ஏறக்குறைய இடம்பிடித்திருக்க வேண்டும் என்று நாம் நினைப்பது நியாயமேயாகும். சவுல் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவர் என்கிற காரணத்தினால், சவுலின் ஜீவனை மதித்தவராகிய தாவீது, தன் மீதான கர்த்தருடைய அபிஷேகத்தின் (சலுகை) காரணமாக, சில பொறுப்புகளிலிருந்து தான் ஓரளவுக்கு விடுவிக்கப்பட்டிருக்கின்றார் என்ற தவறான எண்ணங்களுக்குள் கொஞ்சம் கடந்துபோயிருக்கலாம்; அதாவது தன் மீதும், தன் தேசத்திலுள்ள மற்றவர்கள் மீதும் சில பொறுப்புகள் காணப்படுகையில், தான் மட்டும் தன்மீதுள்ள அந்தச் சில பொறுப்புகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தவறாய் எண்ணினார்.

இந்தக் குற்றங்களைச் செய்து இரண்டு வருடங்கள் ஆன பிற்பாடு, இராஜா தன் மனசாட்சியினை அடக்கிவைக்கவும், தான் செய்திருக்கும் இக்காரியங்களில் இராஜாவிற்கே உரிய சுதந்தரங்களை மாத்திரமே தான் பயன்படுத்தி இருக்கின்றார் என்று எண்ணிக்கொள்ளவும் முற்பட்டார். எனினும் இவரது மனசாட்சி இவரை வதைத்தது; இவர் தேவனுக்கு, தான் அந்நியமாகியிருப்பதை உணர்ந்தார்; தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் கண்டனத்தை (உள்ளத்தில்) உணர முடிந்தவராகக் காணப்பட்டார்; ஒருவேளை இவரிடம் வேறே குணங்கள் இருந்திருக்குமாயின், இவரால் இப்படி உணர்ந்திருக்க முடியாது. இவரைக் கடிந்துகொள்வதற்குத் தேவனும் அவசரம் காட்டவில்லை. இருதயத்தினுடைய வேதனையை, தாவீது முழுவதும் அனுபவிக்கும்படி தேவன் அனுமதித்துவிட்டார் - தாவீதிற்கும், கர்த்தருக்கும் இடையில் வந்த மேகத்தின் காரணமாக ஆத்துமா இருளடைந்திருப்பதையும், சந்தோஷம் இல்லாமல் இருப்பதையும் தாவீது அனுபவிக்கும்படி தேவன் விட்டுவிட்டார். தாவீது இரகசியமாக துக்கித்தும், ஆத்தும வருத்தம் கொண்டும் காணப்பட்ட பிற்பாடு, ஏற்ற வேளையில், தாவீதின் மனதிற்கு முன்பு முழுக்காரியத்தையும் தெளிவாய்க் கொண்டுவரத்தக்கதாக, நாத்தான் தீர்க்கத்தரிசி மூலம் கர்த்தர் கண்டனத்தின் செய்தியை அனுப்பிவைத்தார். நாத்தான் ஒரு கதையைக் கூறி, இராஜாவினுடைய அனுதாபங்களைத் தூண்டி, குற்றஞ்செய்த நபருக்கு எதிராக மிகக் கடுமையான நியாயத்தீர்ப்பை - அதாவது மரணதண்டனையை இராஜா அறிவிக்கப்பண்ணினார்; பின்னர்த் தீர்க்கத்தரிசி நீயே அந்த மனுஷன்!" என்ற வார்த்தைகளைக் கூறி, தாவீதுக்குத் தெரியப்படுத்தினார்.

தாவீது இராஜா, ஆவிக்குரிய புத்திரர் வீட்டாரைச் சார்ந்தவர் அல்ல என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்; இதன் காரணமாக ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களும், தேவனால் கற்பிக்கப்பட்டவர்களுமான புத்திரர் வீட்டாரிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனும் இவ்விஷயங்களில் தெளிவான கண்ணோட்டங்களைப் பெற்றிருப்பதுபோல, தாவீது இம்மாதிரியான காரியங்களில் தெளிவான கண்ணோட்டங்களைப் பெற்றிருக்கவில்லை. ஆகையால் இதேபோன்ற பாடங்களை நாமும் பெற்றுக்கொள்ளலாமென எதிர்பார்க்கக்கூடாது. மாறாக ஆவிக்குரிய வீட்டாராகிய நாம், தெய்வீகச் சித்தம் குறித்த தெளிவான புரிந்துகொள்ளுதலின்கீழ், புதிய ஏற்பாட்டில் விபச்சாரம் மற்றும் கொலை குறித்து முன்வைக்கப்பட்டுள்ள உயர்வான விளக்கங்களை நினைவுகூர வேண்டும்; விபச்சாரம்பண்ண விருப்பம் கொண்டிருந்தும், சூழ்நிலைகள் அல்லது பயங்கள் காரணமாகத் தன்னை அடக்கி மாத்திரம் வைத்துக்கொள்பவன், உண்மையில் அவனது இருதயத்தில் விபச்சாரக்காரனாய் இருக்கின்றான் (மத்தேயு 5:28); இன்னுமாகத் தன் சகோதரன்மீது கோபம் கொண்டிருப்பவன், தன் சகோதரனைப் பகைப்பவன் கொலைப்பாதகனாய் இருக்கின்றான் - காரணம் அடக்கிவைக்கப்படாத பட்சத்தில் கோபத்தின் ஆவியே, கொலைப்பாதகத்திற்கு வழிநடத்துகின்றதாக இருக்கும் (மத்தேயு 5:22); இன்னுமாக மற்றவரின் பொருளுக்காக ஆசைப்படுகிறவன், வாய்ப்பு கிடைக்காத காரணத்தினாலோ அல்லது பின்விளைவுகள் குறித்த அச்சத்தினாலோ அந்த ஆசைகளை அடக்கி வைத்திருப்பவனாக மாத்திரம் இருப்பவன், தன் இருதயத்தில் திருடனாய்க் காணப்படுகின்றான். ஒருவேளை தங்கள் இருதயங்களை ஆராய்கையில், புதுச்சிருஷ்டிகள் இந்தக் கொள்கைகளைப் பிரயோகிப்பார்களானால், பாவம் தொடர்புடைய விஷயத்தில் புத்திரர் வீட்டாரிலுள்ள சிலர் தங்களை, இராஜாவாகிய தாவீதோடு சமதளத்தில் இருப்பவர்களாக நிச்சயமாகவே காண வாய்ப்புண்டு; மேலும் இப்படியாகக் காரியங்களை இவர்கள் பார்க்கையில், இதற்கேற்ப தாவீதை நியாயந்தீர்க்கின்ற விஷயத்தில் இவர்கள் மிகுந்த இரக்கம் காட்டுகின்றவர்களாக இருப்பார்கள். மேலும் இவர்கள் தாவீதின் விஷயத்தில் கர்த்தருடைய இரக்கம்/மன்னிப்பு பாராட்டப்பட்டதுபோல,

தங்களுடைய குற்றங்களின் விஷயங்களிலும் கர்த்தருடைய இரக்கம்/மன்னிப்பு பாராட்டப்படுவதில் மிகுந்த ஆறுதல் அடைகின்றவர்களாகவும் காணப்படுவார்கள். உமக்குப் பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு/இரக்கம் உண்டு என்பதே தீர்க்கத்தரிசியின் வார்த்தைகளாகக் காணப்படுகின்றது (சங்கீதம் 130:4). ஒருவேளை தேவன் இரக்கத்தில் குறைவுபட்டவராக இருப்பாரெனில் நாமும் சரி, நம்முடைய சக சிருஷ்டிகளும் சரி, இம்மாதிரியான (குற்றம்புரிந்த) சூழ்நிலைகளில், நம்பிக்கை ஏதுமில்லாதவர்களாகக் காணப்பட்டுவிடுவோம். யார் இருதயத்தில் துக்கித்தும், இப்படித் துக்கிப்பதன் மூலம் தங்கள் பாவங்கள் துணிகரமானவைகளல்ல, மாறாக மரபுவழி வந்த பெலவீனத்தினால் செய்யப்பட்டது என்றும், மயக்கும் சோதனைகளினுடைய அழுத்தத்தின்கீழ்ச் செய்யப்பட்டது என்றும் சான்று பகருகின்றவர்களாக இருக்கின்றார்களோ, அவர்கள் யாவருக்கும் தேவனிடத்தில் மன்னிப்பு உண்டு என்பதை நாம் உணரும்போதே, நாம் நலமாகுவோம் என்ற நம்பிக்கையடைந்தவர்களாக மனந்திரும்புவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றோம்.

51-ஆம் சங்கீதமானது, சங்கீதக்காரன் தேவனிடம் தன் பாவங்களுக்கான தனது வருத்தத்தைத் தெரிவிக்கும் சங்கீதமாகப் பரவலாய் அடையாளம் காணப்பட்டுள்ளது; மேலும் இது இராகத் தலைவனிடத்தில் ஒப்படைக்கப்பட்ட காரியமானது, இந்தச் சங்கீதமும், மற்ற சங்கீதங்களும் ஆசரிப்புக்கூடார ஆராதனைகளின்போது பாடப்படுவதற்கு இராஜா நோக்கம் கொண்டிருந்தார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது; இதற்காக அவர் அநேக பாடகர்களையும் ஒழுங்குப்படுத்தியிருந்தார் என்று பார்க்கின்றோம். இப்படியாகப் பாவம் வெளிப்படையாகவும், படுமோசமாகவும் காணப்படுவதினால், இதற்கு இராஜா முயற்சித்த பரிகாரமும் மிகவும் வெளிப்படையாகச் செய்யப்பட்டது என்று நாம் புரிந்துகொள்கின்றோம். அநேகமாக தேசத்திலுள்ள அநேகர் இராஜாவினுடைய குற்றத்தை ஏறக்குறைய புரிந்திருந்தவர்களாய் இருந்தார்கள்; மேலும் இதன் தாக்கமும் மிகவும் ஊறுவிளைவிப்பதாய்க் காணப்பட்டிருந்திருக்கும்; இப்பொழுதோ தாவீது, தான் செய்தவைகளைப் பாவம் என்று அடையாளம் கண்டுகொண்டதை வெளிப்படையாக (சங்கீதப் பாடலில்) அறிக்கையிடும்போதும், தெய்வீக மன்னிப்பிற்கான ஜெபத்தை வெளிப்படையாக ஏறெடுக்கும்போதும், அவர் தனது மனசாட்சிக்கு விளைவித்த தீங்கையும், கர்த்தருக்கும் தனக்கும் இடையில் மேகம்போன்று காணப்பட்ட இந்தத் தீங்கையும், தன்னால் முடிந்தமட்டும் சரிப்படுத்தினதோடல்லாமல், விபச்சாரம் மற்றும் கொலை தொடர்புடைய விஷயத்தில் ஜனங்களுடைய மனசாட்சியின்மீது ஏற்பட்ட தீய தாக்கங்களையும் சரிப்படுத்த முயன்றவராகக் காணப்பட்டார்.

மறுபடியுமாக இங்கு ஏன் தாவீது, தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷனாக விவரிக்கப்பட்டுள்ளார் என்பதைக் காண்கின்றோம். இவரது பாவங்கள் தேவனுக்குப் பிரியமாய்க் காணப்படவில்லை - பிரியமற்றவையாகவே காணப்பட்டது; எனினும் பிற்பாடு இவர் தன் பாவங்கள், எப்பேர்பட்ட பாவங்கள் என்று உணர்ந்துகொண்டதும், அதற்காகக் கர்த்தரிடத்தில் இருதயப்பூர்வமாக மனம்வருந்துதலைக் காண்பித்ததும், சகல தீமையினின்றும் சுத்திகரிக்கப்படுவதற்கு இவர் வாஞ்சித்ததும், கர்த்தருக்குப்ப ிரியமானவைகளாகஇ ருந்தன.இ ங்குத்தே தவனைஅ ன்புகூருகிறவர்களுக்கு,எ ப்படிச் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும் என்பதற்குரிய உதாரணத்தைப் பெற்றிருக்கின்றோம். கர்த்தருக்கும், நீதியின் கொள்கைகளுக்குமான தாவீதின் இருதய நேர்மை காரணமாக, இந்தப் பயங்கரமான பாவங்கள்கூடத் தாவீதின் சொந்த இருதயத்திற்கு ஒரு மாபெரும் ஆசீர்வாதத்தினைக் கொண்டுவந்தது -

அவரைத் தாழ்த்தினது - அவரது பெலவீனம் மற்றும் சிறுமை குறித்து அவருக்குப் புரியவைத்தது; இன்னுமாக அவருக்குக் கர்த்தருடைய ஐக்கியமும், இரக்கமும் வேண்டுமானால், அவரது சொந்த விழுந்துபோன மாம்சத்தினுடைய சோதனைகளினின்று பாதுகாப்பு வேண்டுமானால், அவர் கர்த்தருக்கு நெருக்கமாய்க் காணப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் அவருக்குப் புரியவைத்தது. இப்படியாகவே புதுச்சிருஷ்டிகளின் விஷயத்திலும்கூடக் காணப்படுகின்றது. எத்தனை புதுச்சிருஷ்டிகள் தங்கள் இடறல்கள் சிலவற்றிலிருந்து நன்மைபயக்கும் பாடங்களையும், ஆசீர்வாதங்களையும் பெற்றிருக்கின்றனர்! இந்த இடறல்கள் நன்மையானவைகள் என்றோ, இவைகள் கர்த்தரிடமிருந்து வந்தவைகள் என்றோ படிப்பினை காணப்படாமல், மாறாக சரியான மனநிலையினைக் கொண்டிருப்பவர்களுக்கு நன்மைக்கேதுவாய் அமையத்தக்கதாக, அதாவது இவர்களை மனம் வருந்தவும், மனந்திருந்தவும் செய்யத்தக்கதாக, அந்தச் சூழ்நிலைகளை மாற்றிப்போட கர்த்தர் வல்லவராய் இருக்கின்றார் என்பதேயாகும்.

அச்சங்கீதத்தின் முதல் மூன்று வசனங்களில், தனது குறைவுகளுக்காக மன்னிப்பு கேட்பதற்குத் தாவீதுள ந்தமு யற்சியையும்ள டுக்காமல்,த னதுப ாவங்களைக்குறித்து,த ான்உ ணர்ந்துகொண்டிருப் பதையும், தனது விசுவாசத்தை கர்த்தரில் தான் வைப்பதாகவும் தாவீது தெரிவிக்கின்றார். கர்த்தர் என்ன சலுகைப் பாராட்ட சித்தமாய் இருக்கின்றாரோ, அதையே செய்யட்டும் என்று கர்த்தரில் விசுவாசம் வைத்தவராக, அவரது அன்புடன்கூடிய கருணைக்காக மாத்திரம் தாவீது வேண்டிக்கொண்டார்; முற்காலங்களிலுள்ள தேவனுடைய திரளான உருக்கமான இரக்கங்களை நினைவுகூர்ந்தவராக தாவீது, இந்தப் பயங்கரமான மீறுதல்களை ஏதாவது விதத்தில் தேவனால் நிவிர்த்திசெய்ய முடியும் மற்றும் அவைகளை மன்னிக்க முடியும் என்றுள்ள தனது விசுவாசம் மற்றும் நம்பிக்கைகுறித்துத் தெரியப்படுத்தினார். தேவன் எந்த விதத்தில் நீதியுள்ளவராகவும், பாவிகளை நீதிமானாக்குகிறவருமாய் இருக்கப்போகின்றார் என்று அதுவரையிலும் தெளிவாய் விளக்கியதில்லை. ஏற்றவேளையில் பாவிகள், ஆனால் மனம்வருந்துபவர்கள் சுத்திகரிக்கப்படுவதற்கு, தாம் ஒரு வழியை வைத்திருக்கின்றார் என்பதை பாவநிவாரண நாளின் பலிகளினுடைய நிழல்கள் வாயிலாக மங்கலாய் மாத்திரம் தெரிவித்திருந்தார். நியாயப்பிரமாணத்தின் நிழல்களிலும், மாதிரிகளிலும் தெரிவிக்கப்பட்டுள்ள இரக்கம் பற்றின கருத்தைத் தாவீது கிரகித்துக்கொண்டார்; மேலும் கர்த்தராம் இயேசு கிறிஸ்து மூலம் நமது பிதாவின் மன்னிப்பு நமக்குக் காண்பிக்கப்படும்போது, புத்திரர் வீட்டாராகிய நாம் தாவீதைவிட மிக அதிகமாகவே நமது பிதாவின் மன்னிப்பைக்குறித்துக் கிரகித்துக் கொள்பவர்களாகக் காணப்படுவோம்; நமது கர்த்தராம் இயேசு கிறிஸ்து தம்மை அனைவருக்குமான மீட்கும்பொருளாகக் கொடுத்திருக்கின்றார்; இதற்கான சாட்சி ஏற்றகாலத்தில் விளங்கும்; இவரது பலி பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது; இது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள காரியமானது, மரணத்திலிருந்துள்ள நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலினாலும், பெந்தெகொஸ்தேயின் போது பரிசுத்த ஆவி இறங்கினதினாலும் வெளிப்படுகின்றது. ஆகையால் அன்புடன்கூடிய கருணையைப் பெற்றுக்கொள்வதற்கும், உருக்கமான இரக்கங்கள் மற்றும் பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் தாவீதினால் கர்த்தரை விசுவாசிக்க முடிந்ததானால், புத்திரர் வீட்டாரின் அங்கத்தினர்களாலும் திவ்விய குணலட்சணத்தின்மீதும், பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுவதற்குரிய தெய்வீகத் திட்டத்தின்மீதும் முழுமையான விசுவாசத்தை வைக்க முடியும்.

***நான்காம் வசனத்தைப்*** பார்க்கும்போது, சக மனிதனுக்குச் செய்யப்பட்ட தவறுகளை இராஜா பொருட்படுத்தாதது போன்று தோன்றலாம்; ஆனால் நாம் பின்வரும் அர்த்தத்தில் புரிந்துகொள்ளலாம்: சக மனிதனுக்குத் தான்செய்த தவற்றை இராஜா அடையாளம் கண்டுகொண்டிருந்தபோதிலும், தேவனுக்கே பதில்சொல்ல தான் மிக அதிகமாகக் கடமைப்பட்டிருப்பதாக இராஜா அடையாளம் கண்டுகொண்டார்; தேவனுடைய பிரமாணங்களையே தான் மீறியுள்ளார் என்றும், கிறிஸ்துவுக்கு நிழலாயுள்ள தேவனுடைய இராஜ ஸ்தானத்தையே தான் கனவீனப்படுத்தியுள்ளார் என்றும் இராஜா அடையாளம் கண்டுகொண்டிருந்தார்; ஆகையால், சக மனிதனுக்கு எதிராக இவர் பாவம் செய்துள்ளதாக மனுஷர் பார்க்கையில், தான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்துள்ளதாக இவரது தெளிந்த மனசாட்சியில் இவர் உணர்த்தப்பட்டபோது, மனிதனுக்கு விரோதமாய்ச் செய்யப்பட்டவைகள் மங்கித் தெரியுமளவுக்குத் தேவனுக்கு விரோதமாகச் செய்யப்பட்டது மிகவும் பெரிதாகத் தோற்றமளித்தது. சர்வவல்லவருக்கு எதிராகச் செய்யப்பட்ட மகா பாவமானது, மனுஷனுக்குச் செய்யப்பட்ட தப்பிதங்களை மிஞ்சிவிட்டது. தேவனே மாபெரும் நியாயாதிபதி என்றும், அவரது நியாயத்தீர்ப்பு என்னவாக இருப்பினும், அது சரியானது என்பதை தான் முன்னதாகவே அறிந்திருக்கின்றார் என்றுமுள்ள உண்மைகளை அடையாளம் கண்டுகொண்டிருப்பதைத் தாவீது அறிவிக்கின்றார்.

***ஐந்தாம் வசனத்தில்,*** ஒரு மன்னிப்பு கோரும் கருத்தைக் கொண்டுவருகின்றார் . . . தான் பாவத்தில் பிறந்தவர், ஆகையால் பூரணமாய் இருத்தல் என்பது தன்னால் கூடாதகாரியம் என்று கர்த்தருக்கு நினைப்பூட்டுவது போன்று தெரிவிக்கின்றார். எனினும் இந்த ஒரு காரியத்தினை, தனது (பாவத்திற்குரிய) பொறுப்பை மறைப்பதற்குரிய திரையாக பயன்படுத்தவில்லை. இவர் சுபாவத்தின்படி பாவியாக இருப்பினும், சுயாதீனம் உடையவரானபடியினால், இவர் சோதனைக்கு இணங்கின விஷயத்தில், இவர் கண்டிப்பாய்ப் பொறுப்பாளியாகக் காணப்படுகின்றார்; எனினும் தனக்கு, கர்த்தர் கூடுமான தளர்வுகளைக் கொடுப்பார் என்று கர்த்தரில் விசுவாசமாயிருந்தார்.

தன் பாவங்களுக்காக கர்த்தரிடமிருந்து தாவீது தண்டனைகளை எதிர்பார்த்தார் என்றும், நியாயமற்றதும், நீதியின் வரம்புகளுக்குள் உட்படாததுமான எந்தத் தண்டனைகளையும் கர்த்தர் அனுமதிப்பதில்லை என்றுமுள்ள தன் நம்பிக்கையினை இங்கு வெளிப்படுத்துகின்றார் என்பது கவனிக்கப்படலாம். இந்தச் சங்கீதத்தில், இவர் தனக்கு உரிய தண்டனையைத் தள்ளுபடி செய்யும்படி இல்லாமல், மாறாக கர்த்தருடைய பார்வையில் தன் இருதயம் சுத்திகரிக்கப்படவும், தன்மீது மீண்டும் திவ்விய தயவு பாராட்டப்படவும் வேண்டி ஜெபம் ஏறெடுக்கின்றார். இராஜாவின்மீது கடுமையானதொரு தண்டனை கடந்துவரும்படிக்குக் கர்த்தர் செய்தார் என்றும், பாவியை மீண்டுமாக தம் தயவைப்பெறும் நிலைக்குத் திருப்பி, தமது இரட்சிப்பின் சந்தோஷங்களை மறுபடியுமாக அனுபவிக்கும்படிக்கு அருளுகின்றார் என்றும் நாம் பார்க்கின்றோம். இவர் நாட்களில் காணப்பட்ட மற்ற இராஜாக்களின் எண்ணங்களும், இதற்கு உடன்பட்டிருந்த ஜனங்களின் எண்ணங்களும் . . . இராஜா பெரியளவில் பாவம் செய்யவில்லை என்பதாகவும், இவர் உரியாவின் ஜீவனை நேரடியாகக் கொல்லவில்லை என்பதாகவும், போர்க்களத்தில் உரியாவின் மரணம் சம்பவித்தக் காரியத்தில், இராஜா மறைமுகமாக மாத்திரமே ஈடுபட்டிருந்தார் என்பதாகவும் காணப்பட்டது; ஆனால் தேவன் இதைக்காட்டிலும் ஆழமாகவே காரியங்களைப் பார்க்கின்றார் என்றும், உண்மையையே, அதாவது உள்ளான இருதயத்தின் நீதியையே வாஞ்சிக்கின்றார் என்றும் இராஜா உணர்ந்துகொண்டார். வெளிப்புறத்தில் செய்யப்பட்ட ஒரு குற்றமும், மனதிற்குள் அனுமதிக்கப்பட்ட ஒரு குற்றமும் தேவனுடைய பார்வையில் ஒன்றுபோல் வெறுக்கத்தக்கவையாகவே காணப்படுகின்றது; அனுபவம் இராஜாவிற்கு

ஞானத்தைப் போதித்துக்கொடுத்தது. இப்பொழுது முழுமையாய்ச் சுத்திகரிக்கப்பட விரும்பினவராக, நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன் என்று கவிதைப்பாணியில் கூறுகின்றார் (சங்கீதம் 51:7). ஈசோப்பு என்பது நியாயப்பிரமாணத்தின்கீழ் அசுசியானவைகள்மீது தெளிக்கப்படுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. இந்த அடையாளத்தினுடைய அர்த்தத்தை ஓரளவுக்குக் கிரகித்துக்கொண்ட தாவீது, தன் இருதயம் நிஜமாய்ச் சுத்திகரிக்கப்படும்படிக்கு வாஞ்சித்தார். பாவத்தைக் கையாளுவதில் கர்த்தர் காட்டும் முழுக்கவனத்தையும், மன்னிப்பில் விளங்கும் கர்த்தருடைய இரக்கத்தையும் குறித்த தாவீதின் புரிந்துகொள்ளுதலானது, தாவீதைக்காட்டிலும் அதிகம் தயவுபாராட்டப்பட்ட புத்திரர் வீட்டாரிலுள்ள சிலருக்கு நல்ல பாடங்களாக அமைகின்றது. புத்திரர் வீட்டாரிலுள்ள அநேகர், விசுவாசக்கண்கள் வாயிலாகப் பாவங்களுக்கான மகா நிவிர்த்தியானது நமது கர்த்தர் இயேசுவினால் செய்யப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிந்தபோதிலும், நாம் பிதாவின் பார்வையில் முற்றிலும் சுத்திகரிக்கப்பட்டவர்களாக அடையாளம் கண்டுகொள்ளப்படவும், பாவிகள் என்றில்லாமல், புத்திரர்கள் என்று பிதாவினால் கையாளப்படவும்தக்கதாக, நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவருடைய பலியின் புண்ணியம் மிகவும் போதுமானதாக இருக்கின்றது எனும் உண்மையினை இன்னமும் உணர்ந்துகொள்ள முடியாதவர்களாகவே காணப்படுகின்றனர்.

*எட்டாம் வசனத்தின்* வார்த்தைகளை வைத்துப்பார்க்கும்போது, இப்படி இராஜாவாகிய தாவீது மனம்வருந்துவதற்கு முன்புள்ள வருடத்தின்போது, இவர் மனம் மிகவும் துயர்மிகுந்த நிலையில் காணப்பட்டபடியால், பாடகர்களின் இராகங்களும், திறம்பட கீதவாத்தியங்களை வாசிப்பவர்களின் இசைகளும், இயற்கையிலுள்ள சந்தோஷகரமான அனைத்துச் சத்தங்களும் இவரது இருதயத்திற்குத் துன்பத்தையே கொடுத்தது என்று நாம் புரிந்துகொள்ளலாம் - இவரது இருதயம் தேவனுடைய பிரசன்னத்திலிருந்தும், ஐக்கியத்திலிருந்தும் ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தபடியினால், இவரது இருதயத்தை ஆறுதல்படுத்துவதற்கு, இந்த இசைகளில் எந்த மகிழ்ச்சியும் காணப்படவில்லை. இதுவே கர்த்தருடைய கிருபையின் வெளிச்சத்தினை அனுபவிக்கும் ஆத்துமா பற்றிக் கூறும் பின்வரும் பாடலின் கருத்தாகும்:

இனிமையான இயற்கையும், இனிமையான பறவைகளும்
இனிமையான பூக்களும், - ஆம்! இவை யாவும்,
எந்தனுக்கு முன்பில்லாத ஒரு புது இனிமை தருகின்றதே;
அவர் பிரசன்னமே, சோர்வனைத்தையும் சிதறப்பண்ணுகின்றதே;
எந்தனுள் அனைத்தையும் களிப்பாக்குகின்றதே.
நான் அவரில் மிகவும் மகிழ்ச்சியாய் இருக்கையில்,
கோடை 'மே' மாதத்தைப்போலவே குளிர்ந்த 'டிசம்பர்' மாதமும் இன்பமாய் இருக்கின்றதே.

கடந்த காலங்களில் தான் அனுபவித்த சந்தோஷத்திற்காகவும், மகிழ்ச்சிக்காகவும் இராஜாவாகிய தாவீது ஏங்கினார்; மேலும் எலும்புகள் நொறுக்கப்பட்ட ஒரு மனுஷனுக்குத் தன்னை ஒப்பிட்டுப்பேசுகின்றார். தான் மறுபடியும் கர்த்தருடைய கிருபையைப் பெற்றுக்கொள்ள முடிந்தால், தன்னுடைய சந்தோஷமும், ஆறுதலும் மீண்டும் தன்னிடம் கடந்துவரும் என்று தாவீது அறிந்திருந்தார்; பாவத்தைக் கர்த்தர் பொறுத்துக்கொள்ள மாட்டார் என்றும் தாவீது அறிந்திருந்தார்; ஆகையாலே இவரது ஜெபம்: என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களையெல்லாம்

(அநீதிகளையெல்லாம்) நீக்கியருளும். தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும். உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும் என்று காணப்பட்டது. (வசனம் 9-12)

இந்த வார்த்தைகளை வாசிக்கும் எந்த ஓர் உண்மையான கிறிஸ்தவனும், இதை வாசிக்கையில், ஆழமானஅ னுதாபத்தைஉ ணரவேெ சய்வான்;த ாவீதின்இ ருதயத்தைப்ப ாரப்படுத்தினஇ த்தகைய பயங்கரமான பாவங்களின் விஷயங்களில், கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புதுச்சிருஷ்டிகளாகிய நமக்கு எந்த அனுபவமும் இல்லை; எனினும், தேவனுடைய புத்திரர்களென நமக்கு வரும் பரிசுத்த ஆவியின் அறிவுரைகளின் கீழும், புதிய கட்டளையின் கீழும் பாவத்தைக்குறித்து ஒரு மேலான புரிந்துகொள்ளுதலையும், மேலான பொறுப்புகளையும் நாம் பெற்றிருப்பதினால், இதினிமித்தம் உலகத்தாரின் பார்வையில் ஒன்றுமில்லாததாகக் காணப்படும் மீறுதல்களை, அந்த மீறுதல்களுக்கே உரிய அழுத்தத்துடன் நாம் பார்க்க முடிபவர்களாகுகின்றோம்; அந்த மீறுதல்களை நாம் சற்றுமுன்பு குறிப்பிட்டிருந்தோம்; மற்றவர் பொருள்மீதான ஆசை, பகை, புறங்கூறுதல் ஆகியவை புதுச்சிருஷ்டிக்கே உரிய தெய்வீகப் பார்வையினுடைய மேலான கண்ணோட்டத்தின்படி, திருடாகவும், கொலைபாதகமாகவும் காணப்படுகின்றன.

*13-ஆம் வசனத்தில்* தீர்க்கத்தரிசி (தாவீது), தனக்குத் திவ்விய தயவின்மையினால் வந்த அமைதியின்மை பற்றின விவரத்தை, மற்றவர்களுக்கு அறிவுரையாகப் பயன்படுத்தும்படிக்குக் கர்த்தரிடம் தெரிவிக்கின்றார் - அதாவது பாதகருக்குக் கர்த்தருடைய வழிகளைத் தெரிவிக்கவும், பாவிகளை அவர்களது தீய வழியினின்று திருப்பவும் பயன்படுத்தும்படி கூறுகின்றார். இந்தக் கருத்து நமக்கு எவ்வளவு பொருத்தமானதாகக் காணப்படுகின்றது! கிறிஸ்துவினுடைய இரத்தத்தின்மீதான விசுவாசத்தின் மூலமாக, நம்முடைய பாவங்கள் பிதாவின் பார்வையினின்று ஒழிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் அனுபவித்து அறியாததுவரையிலும் . . . அவரது இரட்சிப்பின் மற்றும் மன்னிப்பின் சந்தோஷங்களை நாம் அனுபவித்திராததுவரையிலும் . . . நாம் மற்றவர்களுக்குச் சத்தியத்தின் ஊழியர்களாகச் செயல்பட முடியாது. ஆகையாலே, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் மாத்திரம், சுவிசேஷத்தைப் பிரசிங்கிக்கும்படி அபிஷேகிக்கப்பட்டிருக்கின்றனர் என்று நாம் பார்க்கின்றோம். மற்றவர்களை, அதாவது திவ்விய எதிர்பார்ப்புகளுக்கு ஒப்புக்கொடுக்க மறுப்பவர்களை நோக்கி தேவன்: நீ என் பிரமாணங்களை எடுத்துரைக்கவும், என் உடன்படிக்கையை உன் வாயினால் சொல்லவும், உனக்கு என்ன நியாயமுண்டு. சிட்சையை நீ பகைத்து, என் வார்த்தைகளை உனக்குப் பின்னாக எறிந்துபோடுகிறாய் என்று கூறுகின்றார். (சங்கீதம் 50: 16, 17)

இதே கருத்து, வேறுவிதத்தில் *14-ஆம் வசனத்தில்* மீண்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. தன் பாவத்தின் விஷயத்தில் தன் குற்றத்திலிருந்து கர்த்தர் தன்னை விடுவிப்பாரானால், தன் நாவு தனது நீதியை அல்ல, கர்த்தரின் நீதியை எடுத்துரைத்துப் பாடும் என்று தெரிவிக்கின்றார். இரத்தத்தினால் கழுவப்பட்டவர்கள் யாவரும்: கர்த்தராகிய சர்வவல்லமையுள்ள தேவனே, உமது வழிகளெல்லாம் உண்மையும், நீதியுமானவைகள் ஆகும். மனுஷர் மத்தியிலிருந்து எங்களை மீட்டுக்கொண்டீரே என்று பாடுவார்கள். நம் சொந்த நீதியைக் குறித்துப் பாடுவதற்கு நம்மில் யாருக்கும் உரிமையில்லை, ஏனெனில் அப்போஸ்தலன்

கூறுவதுபோன்று, நீதிமான் ஒருவனாகிலுமில்லை. ***சுத்திகரிக்கப்பட்டவர்களின் பணி***, தங்களுக்குப் பாராட்டப்பட்ட கர்த்தருடைய இரக்கத்தை ஏற்றுக்கொண்டு, பயன்படுத்துவதாகவும் . . . கர்த்தருடைய நீதியைப் புகழ்வதாகவும் . . . தங்கள் சொந்த அபாத்திர நிலைமையை ஒப்புக்கொள்வதாகவும் . . . நீதி மற்றும் மன்னிப்பின் இந்த ஊற்றைக் காணும்படிக்கு மற்றவர்களை அழைப்பதாகவும் காணப்படுகின்றது.

ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தருளும்; அப்பொழுது என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும் *(வசனம் 15)*. கர்த்தர் தம் இரக்கத்தினாலும் சத்தியத்தினாலும் முதலாவது ஒருவருடைய சொந்த உதடுகளைத் திறக்காததுவரையிலும், யாருமே கர்த்தருடைய புண்ணியங்களை (மற்றவர்களுக்கு) அறிவிப்பதற்கும், இருளிலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு (மற்றவர்களை) அழைப்பதற்கும் தங்களுடைய உதடுகள் திறக்கப்படுவதற்கு எதிர்பார்க்க முடியாது; காரணம், சொந்த உதடுகள் திறக்கப்படவில்லையெனில், பின்னர் எப்படி ஒருவர் சகல ஜனங்களுக்கும் மகா சந்தோஷத்தைக் கொண்டிருக்கும் நற்செய்தியினை (மற்றவர்களுக்கு) சொல்ல முடியுமென எதிர்பார்க்கக்கூடும்? எனும் கருத்தையே இவ்வசனத்தின் வார்த்தைகள் தெரிவிக்கின்றது; இன்னுமாகப் பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்றுக்கொண்டுள்ள யாவரும், தங்களுடைய அனைத்தையும் கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணம்பண்ணும் சிந்தையில் காணப்பட வேண்டும் என்றும் இவ்வசனம் தெரிவிக்கின்றது; இதைத்தொடர்ந்து உம்முடைய உதடுகளில் அருள் பொழிகின்றது - நமது தேவனுடைய அன்புடன்கூடிய இரக்கத்தைத் துதிக்கும் புதுப்பாட்டை நீர் என் வாயிலே கொடுத்தீர் (சங்கீதம் 40:3; 45:2) என்று எழுதப்பட்டிருக்கின்றபடியே, மற்றவர்கள் போதிக்கப்படுவதற்கும், மற்றவர்கள் ஆசீர்வதிக்கப்படுவதற்கும் என்று தேவனுடைய சத்தியம் மற்றும் கிருபையின் செய்தி இவர்களிடமிருந்து மற்றவர்களுக்குப் பொழியத்தக்கதாக, இவர்களுடைய உதடுகள் திறக்கப்படுவதற்கு இவர்கள் எதிர்பார்க்கலாம் என்றும் இவ்வசனம் தெரிவிக்கின்றது. இவ்வார்த்தைகள் விசேஷமாக நம் அருமை மீட்பருக்குப் பொருந்தக்கூடியவையாக இருப்பினும், இவை அவரது சரீரமாகிய சபையின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்கும்கூடப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. சரீரமென தங்களை அறிக்கைபண்ணியும், தங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளுக்கு ஏற்ப கர்த்தரை அறிக்கைபண்ணுவதற்குத் தங்கள் உதடுகளை ஒருபோதும் திறக்கப்பெறாதவர்கள், கர்த்தருடனான தங்கள் உறவில் இருக்கும் பிரச்சனை என்ன என்று ஆராய்ந்துபார்க்க வேண்டியவர்களாகக் காணப்படுவார்கள்.

*16 மற்றும் 17-ஆம் வசனங்களில்* இராஜா நிழலான பலிகள் சிலவற்றினுடைய அர்த்தங்களின் விஷயத்தில்ஆ ழ்ந்தஒ ருத கவலைப்பெ பற்றிருப்பதாகத்தெ ரியப்படுத்துகின்றார்- அ நேகமாகஅ வர் புரிந்துகொண்டதைவிட, அவர் தெய்வீக ஏவுதலின் காரணமாக, அவைகளை மிகவும் ஞானமாய் எழுதியிருக்கின்றார். ஆசரிப்புக்கூடாரத்தின் விசேஷித்த பலிகள் பற்றின நமது ஆராய்ச்சியில் நாம் ஏற்கெனவே பார்த்திருக்கின்றதுபோல, பாவநிவாரண நாளின் பலிகள் மாத்திரமே பாவநிவாரண பலிகளாகக் காணப்படுகின்றன; மேலும் வருடத்தில் மீதமுள்ள காலப்பகுதிகளில் ஏறெடுக்கப்படும் தகனபலிகளும், சமாதானபலிகளும், கர்த்தர் மற்றும் அவரது ஊழியங்களுக்குரிய அர்ப்பணிப்பை அடையாளப்படுத்து கின்றது. இந்த ஒரு கருத்தை தாவீது இராஜா எந்த அளவுக்குத் தீர்க்கதரிசனமாய்க் கிரகித்திருந்தாலும், இக்கருத்தை அவர் அறிவு சார்ந்த விதத்திலும் கிரகித்தவராக இருந்தார்; இன்னுமாக நிழல்களாக மாத்திரம் காணப்படும் தகனபலிகளைவிட, கர்த்தர் நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான இருதயத்தின் நிலையிலேயே பிரியப்படுகின்றார் என்று தான் உணர்ந்துகொண்டதாகத் தாவீது தெரிவிக்கின்றார். நாம்

கிறிஸ்துவுக்குள்ளாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாக இருப்பினும், முதலாவது நாம் நம்மையே, அதாவது நம்இ ருதயங்களையும்,ந ம்ச ரீத்தங்களையும்ஒ ப்புக்கொடுக்காததுவ ரையிலும், ந ாம்க ர்த்தருக்குக் கொடுக்கும் எதுவும் அவர் பார்வையில் ஒன்றும் இல்லாதவையாகவே காணப்படும் எனும் பாடத்தை நாமும் கற்றுக்கொள்கின்றோம்.

கர்த்தர் நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான இருதயத்தினை ஒருபோதும் புறக்கணிக்கமாட்டார், வெறுத்தொதுக்கமாட்டார் என்பதை நாம் எப்போதும் நினைவில் வைத்துக்கொள்வோமாக. ஆகையால் புதுச்சிருஷ்டிகளாகிய கர்த்தருடைய ஜனங்களில் யார் ஒருவரும், எந்த ஓர் இடர்பாட்டிற்குள்ளாக இடறியிருந்தாலும், ஒருவேளை அவர்கள் கர்த்தருடைய ஐக்கியத்திற்காகவும், மன்னிப்பிற்காகவும் ஏங்குபவர்களாக தங்களைக்குறித்து உணர்வார்களானால், இன்னுமாகத் தங்கள் இருதயங்கள் நொறுங்குண்டும் நருங்குண்டும் இருக்கின்றது என்று தங்களைக் குறித்து உணர்வார்களானால், அவர்கள் பரிதபிக்க வேண்டாம்; மாறாக கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் மீதான விசுவாசத்தின் மூலம், அதாவது இயேசுவின் மூலம் தேவனிடம் வருபவர்கள் யாவரையும், ஏற்றுக்கொள்வதற்கும், சகல பாவங்களினின்று இலவசமாய் நிவிர்த்திபண்ணுவதற்கும் என்று கிறிஸ்துவின் புண்ணியத்தின் வாயிலாக தேவன் ஏற்பாடு ஒன்றைப் பண்ணியிருக்கின்றார் என்பதை நினைவில்கொள்வார்களாக. மரணத்திற்கு ஏதுவான ஒரு பாவம், அதாவது இரண்டாம் மரணத்திற்கு ஏதுவான ஒரு பாவம் காணப்படுகின்றது - இதிலிருந்து எந்த மீட்பும், எந்த உயிர்த்தெழுதலும் இருப்பதில்லை; ***ஆனால் தங்களுடைய பாவங்களின் காரணமாக நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயங்களைப் பெற்றிருப்பவர்கள், தாங்கள் "மரணத்திற்கேதுவான பாவத்தைச் செய்யவில்லை" என்று அறிந்துகொள்ளலாம்***; இதை அவர்களது இருதயத்தின் நிலைமையே நிரூபிக்கின்றது; அப்போஸ்தலன் கூறியுள்ளதுபோன்று, மரணத்துக்கேதுவான பாவங்களைச் செய்தவர்களை - முழு வெளிச்சம் மற்றும் அறிவிற்கு விரோதமாய்த் துணிகரமாக பாவஞ்செய்தவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம் - மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம் (எபிரெயர் 6:6). ஆகையால் நம்முடைய தேவனுடைய கிருபையில் நாம் அனைவரும் களிகூருவோமாக; பாவத்தையும், அதன் ஆசைகளையும் விட்டுவிட்டு, தம்மிடத்தில் வரும் கடைக்கோடிகள் யாவரையும் தேவன் கிறிஸ்து மூலமாய், அதாவது தமக்கேற்ற வழியில் இரட்சிக்க வல்லவராய் இருக்கின்றார் என்பதினால் களிகூருவோமாக.

(சபையிலுள்ள) ஒருவன் (வேண்டுமென்றில்லாமல், பெலவீனம் மற்றும் சோதனை மூலமாக) பாவஞ்செய்வானானால் (பாவத்திற்குள் இடறுவானானால்) நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார் (1 யோவான் 2:1). இத்தகையவன் இரக்கத்தைப்பெறவும், ஏற்றசமயத்தில் (எதிர்காலத்தில்) சகாயம் செய்யும் கிருபையை அடையவும் வேண்டி விசுவாசத்தோடு பரலோகக் கிருபையின் சிங்காசனத்துக்கு வரக்கடவன் (எபிரேயர் 4:16). எனினும் தாவீதைப்போன்று ***இவர்களது ஜெபங்களும், நம்பிக்கைகளும், தெய்வீகத் தயவைத் திரும்பப் பெறவேண்டும் என்பதற்காகக் காணப்பட வேண்டுமே ஒழிய,*** இவர்களைத் ***திருத்துவதற்கு அவசியமாயிருக்கும் சிட்சைகளினின்று தப்புவதற்காகக் காணப்படக்கூடாது.***தே வன்த ாவீதைம ன்னித்தார்,எ னினும்அ வரைச்ச ரீட்சிக்கவும் செய்தார். (2 சாமுயேல் 12:11-14)

இந்த வேதனையான அனுபவத்திலிருந்து, இராஜாவாகிய தாவீது நிச்சயமாகவே இரக்கத்தின் விஷயத்தில் மாபெரும் பாடம் ஒன்றைக் கற்றிருந்திருக்க வேண்டும். இந்தக் காரியத்தைச் செய்த மனுஷன் மரணத்துக்குப் பாத்திரன் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன். அவன்

இரக்கமற்றவனாயிருந்து, இந்தக் காரியத்தைச் செய்தபடியினால், அந்த ஆட்டுக்குட்டிக்காக நாலத்தனையாய்த் திரும்பச் செலுத்தவேண்டும் என்று நாத்தான் கூறிய சம்பவத்திற்கு, தான் கொடுத்த பதிலை, தாவீது எத்தனைதரம் தன் மனதில் எண்ணிப்பார்த்திருந்திருப்பார் (2 சாமுயேல் 12:5, 6). அந்தோ! பரிதாபத்திற்குரிய தாவீது! தாவீதின் இந்த வார்த்தைகள், மற்ற மனுஷனின் விஷயத்தில் இவரது இருதயமும், மனமும் நீதிக்கும், இரக்கத்திற்கும் தூரமாய் இருக்கவில்லை என்பதைக் காண்பிக்கின்றது; ஆகையால் இவர் நீதியின் மற்றும் இரக்கத்தின் விஷயத்தில் இவ்வளவு கடுமையாய் மீறினதின் நிமித்தம், மிகுந்த குற்றமுள்ளவராகக் காணப்படுகின்றார். நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் தன்னைக் குற்றவாளியாக்காதவன் பாக்கியவான் (உரோமர் 14:22) - மற்றவர்களின் விஷயத்தில் தன் சொந்தத் தீர்ப்பினால் குற்றவாளியாகாதவன் பாக்கியவானாவான். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார் எனும் நமது அருமை மீட்பருடைய வார்த்தைகளை நாம் நினைவுகூரும்போதும், நமக்குத் தீங்குசெய்து, நம் ஐக்கியத்தை மீண்டும் வாஞ்சிப்பவர்களை நாம் இருதயத்தின் ஆழத்திலிருந்து மன்னிக்காததுவரையிலும், நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும்படிக்கு நாம் ஜெபம்பண்ண முடியாது என்பதை நினைவுகூரும்போதும், இது மற்றவர்களுடைய தப்பிதங்களின் விஷயங்களில் நம்மை எத்தனை இரக்கம் உள்ளவர்களாக இருக்கச் செய்திடும். (மத்தேயு 6:15)

R3260

# தேவனுடைய மன்னிக்கும் அன்பின் சந்தோஷங்கள்

## சங்கீதம் 32

எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான்.

உரியாவிற்கு விரோதமான தன் பாவங்களுக்கான தேவனுடைய மன்னிப்பைப்பற்றி தாவீது சந்தோஷத்தோடு அறிக்கையிடும் சங்கீதமே இச்சங்கீதம் என்று எளிதில் கண்டுபிடிக்கப்படலாம். முதல் வசனமே, முழுச்சங்கீதத்திற்குமான முக்கிய பாகமாகக் காணப்படுகின்றது. 3-5 வரையிலான வசனங்களில், தன் பாவங்கள் தனக்கும், தான் முன்பு அனுபவித்த தெய்வீகக் கிருபையின் பிரகாசத்திற்கும் இடையில் மேகம் போன்று காணப்பட்ட காலப்பகுதியில், தான் அனுபவித்த மனஅழுத்தத்தை இராஜா பதிவுசெய்துள்ளார். இவரது மனஅழுத்தம் இயல்பாகவே, இவரது சரீர ஆரோக்கியத்தையும் பாதித்தது . . . அதுவும் ஜீவியத்தின் கடமைகள் அனைத்தும் பாரமாய்த் தோன்றும் அளவுக்குப் பாதித்தது; நடைமுறையில் எல்லாச் சந்தோஷங்களும் ஒழிந்துபோய்விட்டது. இப்படிப் பார்க்கும்போது இராஜா மனக்கடினமுள்ள குற்றவாளியாக இருக்கவில்லை என்பதை நாம் உணருகின்றோம். சோதனையின்கீழ் இவர் நீதி மற்றும் நட்பின் எளிமையான பிரமாணங்களைக் கடினமாய் மீறியிருந்தபோதிலும், இவரது இருதயம் நீதிக்கு நேராகவும், கர்த்தருக்கு நேராகவும்தான் காணப்பட்டது; தொடர்ந்து இத்திசையிலேயே காணப்பட்டும் வந்தது. இவரது மனசாட்சி தவித்துக்கொண்டிருந்தது என்பதும், தெய்வீக நிராகரிப்பினுடைய பளுவின்கீழ் இவரது ஆன்மா அமைதியற்றுக் காணப்பட்டது என்பதுமான உண்மைகள், இவர் விஷயத்தில் நம்பிக்கையளிக்கும் அறிகுறிகளாகக் காணப்பட்டன.

தாவீது *துணிகரமான பாவியாக இல்லாதபடியால்* - இவர் தன் இருதயத்தில் பாவத்தை அங்கீகரிக்காமலும், அதில் களிகூராமலும் இருந்து, அதை வெறுத்தும், அதற்காகத் துக்கித்தும் காணப்பட்டபடியால் - இதினிமித்தம் இறுதியில் தாவீதால் இனிமேலும் சகிக்கமுடியாது எனும் கட்டம்

வருமளவுக்கு, பாடங்கள் இவருக்கு மிக மிகக் கடுமையாகிப்போகும் வண்ணமாக, கர்த்தர் இவர் காரியங்களை மிகவும் கிருபையாக வழிநடத்தினார். முழுமையாய் நொறுங்குண்ட நிலையினைத் தாவீது அடைந்தபோது, அந்த இருதயத்தைக் குத்தும்படிக்குக் கர்த்தர் தம்முடைய செய்தியை நாத்தான் தீர்க்கதரிசி மூலம் அனுப்பிவைத்தார்; இவரது கடினமான கடிந்துகொள்ளுதலும், கடுமையான தண்டனையும் இராஜாவின் கடுமையான மனஅழுத்தத்திற்கு முற்றுப்புள்ளிவைத்தது; மேலும் தேவனிடமும், ஜனங்கள் முன்னிலையிலும் தாவீது (தன் பாவங்களை) அறிக்கைபண்ணும் நிலைக்கு அவரைக் கொண்டுவந்தது; தெய்வீக மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்காகவும், தெய்வீகத் தயவை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காகவும் வேண்டி ஜெபம் ஏறெடுக்கும் நிலைக்குத் தாவீதைக் கொண்டுவந்தது; இந்தத் தெய்வீக மன்னிப்பும், தெய்வீகக் கிருபையும் இல்லை என்றால் தனது மனதின் வியாகுலம் தொடரும் என்று தாவீது உணர்ந்துகொண்டார்.

இராஜாவின் ஜெபங்கள் கேட்கப்பட்டன - தேவன் இவரிடத்தில் கிருபையாய் இருந்தார்; இவரது மீறுதல்கள் மன்னிக்கப்பட்டன; இவரது பாவங்கள் மூடப்பட்டன; இவரது அக்கிரமம் இனிமேலும் இவர்மேல் சாற்றப்படவில்லை; காரணம் இவரது இருதயம் மனம்வருந்தினது - இவரது இருதயத்தில் கபடு இல்லாதிருந்தது. இவரது மனந்திரும்புதல் உண்மையாகவும், முழுமையாகவும், சம்பூரணமாகவும் காணப்பட்டது. தான் தெய்வீகத் தயவிற்குள் மீண்டும் கொண்டுவரப்பட்டதுகுறித்துச் சங்கீதக்காரன் சந்தோஷத்தோடு பாடுகின்றார்; இன்னுமாகச் சந்தேகத்திற்கிடமின்றி இதுபோல பாவங்களுக்காக உண்மையாய் வருத்தப்படுகின்ற, உண்மையாய் மனந்திரும்புகின்ற, தங்கள் தப்பிதங்களை அறிக்கையிடுகின்ற, தங்கள் விசுவாசத்தைப் புதுப்பித்துக்கொள்கின்ற யாவருக்கும், திவ்விய வழிகாட்டுதலின்கீழ்த் தாவீதின் விஷயம், தேவன் என்ன செய்ய சித்தமாய் இருக்கின்றார் என்பதற்கு உதாரணமாய் அல்லது சான்றாய்க் காணப்படும்படிக்கும் பார்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. ***இராஜாவின் அனுபவங்களும்***, இவர் தேவனோடு ஒப்புரவாகியுள்ளதையும், திவ்விய தயவு இவருக்குப் பாராட்டப்பட்டுள்ளது என்பதையும் காட்டும் ***இந்தச் சங்கீதத்தின் படிப்பினைகளும்***, தாவீதின் சொந்த தேசத்தின் மத்தியில் காணப்பட்ட தேவ ஜனங்களை மாத்திரமல்லாமல், தேவ வசனத்தை அறிந்துள்ள ஒவ்வொரு ஜாதிகளிலும், கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வரும் தேவ ஜனங்களையும் ஊக்குவித்துள்ளது, அதாவது இவர்களில் மாம்சத்தினுடைய பெலவீனங்கள் காரணமாக விழுந்துபோய் இருப்பவர்களின் விசுவாசத்தை ஊக்குவித்துள்ளது; மேலும் இவர்களுக்குச் சமாதானத்தையும், அமைதியையும் கொண்டுவந்துள்ளது என்று சொல்வது சரியே; இப்படிப்பட்டவர்கள் சிலரின் பாவங்கள் தாவீதின் பாவத்தைப்போன்றே பயங்கரமானவைகளாகவும், சிலருடைய பாவங்கள் தாவீதின் பாவங்களைவிட அதிகமாகவும் காணப்படலாம்; இவர்களில் சிலருடைய பாவங்கள் மனுஷருடைய பார்வையில் பெரியவைகளாக இராமல் இருக்கலாம், ஆனாலும் அவைகள் தேவனுடைய பார்வையில் பெரியவைகளாக இருக்கின்றன, அதாவது பாவியையும், கர்த்தரையும் பிரிக்குமளவுக்குப் பெரியவைகளாக இருக்கின்றன.

இந்த நிழல், பாவி அந்நிய உலகத்திலிருந்து வந்து, தேவனுடைய குடும்பத்திற்குள் பிரவேசிக்க நாடுவது பற்றியதல்ல; மாறாக ஏற்கெனவே தெய்வீகத் தயவை அனுபவித்து, அதை இழந்துபோயுள்ள நபர் பற்றியதாகும்; அதாவது வெளிச்சத்திலிருந்து இருளுக்குள் போயுள்ள நபர் பற்றியதாகும். நாம் தேவனுடைய பிள்ளைகளான பிற்பாடும், நாம் மறுதலித்துப் போகிறவர்களாகுவதற்கு வாய்ப்பிருக்கின்றது என்று

வேதவாக்கியங்கள் நமக்குத் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றன. இப்படி மறுதலித்துப்போகும் இரண்டு வகுப்பார் காணப்படுவதாக வேதவாக்கியங்கள் நமக்குக் காட்டுகின்றன. ஒரு வகுப்பார் எபிரெயர் 6:4-7; 10:26-31-ஆம் வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளனர்; இவர்களுக்கு எந்த நம்பிக்கையும் இருப்பதில்லை, ஏனெனில் இவர்கள் இருதயத்தில் பாவத்தை விரும்புபவர்களாகக் காணப்படுகின்றனர்; அப்போஸ்தலன் விவரிப்பதுபோன்று இவர்கள் துணிகரமான பாவிகளாய்க் காணப்படுகின்றனர். சத்தியம் பற்றின தெளிவான அறிவிற்குள் வந்தப் பிற்பாடும், துணிகரமாயும், ஆசையாயும், வேண்டுமென்றும் பாவத்தில் களிகூருகிறவர்கள்மேல், தேவன் தம் இரக்கத்தைக் காட்டுவது சரியான காரியமாய் இராது. அப்போஸ்தலன் தெரிவித்துள்ளதுபோன்று, இவர்களுக்காகக் காத்திருக்கின்ற ஒரே காரியம் நியாயத்தீர்ப்பாகும்; இந்த நியாயத்தீர்ப்பானது இவர்களைத் தேவனுடைய சத்துருக்களென, நீதியின் சத்துருக்களெனப் பட்சித்துப்போடும். இந்த வகுப்பாரைக்குறித்து அப்போஸ்தலன், மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு, அதைக்குறித்து வேண்டுதல்செய்ய நான் சொல்லேன் என்று தெரிவித்துள்ளார். (1 யோவான் 5:16)

இரண்டாம் வகுப்பாரைக்குறித்து அப்போஸ்தலன் மரணத்திற்கு ஏதுவான பாவம் செய்யாதவர்கள் என்று குறிப்பிடுகின்றார் - இவ்வகை பாவத்திற்கு மனம்வருந்துதல் காணப்படும்; இது மன்னிக்கப்படும்; மீறுதலுக்குட்பட்டவன் விலையேறப்பெற்றப் பாடங்களுடன் இப்பாவத்திலிருந்து வெளியே வருவான்; இப்பாடங்கள் எதிர்கால போராட்டங்கள் மற்றும் வெற்றிகள் விஷயத்தில் உதவிகரமாய்க் காணப்படும் அறிவு எனும் ஆசீர்வாதத்தினையும், அனுபவங்களையும் இறுதியில் கொண்டுவரும். இந்த வகுப்பாரில்தான், தாவீதின் பாவம் அடங்குகின்றது; ***இவரது பாவம் துணிகரமானதல்ல***; இப்பாவங்கள் தாவீதின் அங்கீகரிப்பையும் பெற்றிருக்கவில்லை; என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார் என்று அப்போஸ்தலனால் கூறப்படும்போது, அவரால் சுட்டிக்காண்பிக்கப்படும் பாவ வகையினையே சார்ந்ததாய்த் தாவீதின் பாவம் இருந்தது (1 யோவான் 2:1). இதே பாவ வகையைக் குறித்தே அப்போஸ்தலன், நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார், அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை என்று கூறுகின்றார் (1 யோவான் 1:9; சங்கீதம் 37:24). துணிகரமாகவும், இருதயத்தின் சம்மதத்தோடும் செய்யப்படும் மீறுதலே, எல்லா விதத்திலும் ஒருவர் தெய்வீகத் தயவினின்று முழுமையாய் விழுந்துபோயுள்ளதைக் குறிப்பதாக இருக்கும்; ஆனால் விருப்பத்திற்கு மாறாகவும், மாம்ச பெலவீனம் மற்றும் சோதனை காரணமாகவும் பாவத்திற்குள் இடறிவிழுதல் என்பது, மீட்கப்படுவதற்குச் சகல வாய்ப்புகளுமுள்ள இடறல்களாகக் கருதப்பட வேண்டும்.

நடைமுறையில் பார்க்கும்போது, எல்லா மீறுதலும் துணிகரமானது என்று சிலர் வாதாடலாம்; காரணம் கர்த்தருடைய ஜனங்கள் சரீரத்தில் எவ்வளவுதான் பெலவீனமாக இருந்தாலும், அவர்கள் விரும்பினால் சரியானவற்றை செய்வதற்குரிய சித்தத்தின்/மனதின் வல்லமை, அவர்களிடம் இன்னமும் இருக்கின்றது என்று வாதிடலாம். இத்தகையவர்கள் தாங்கள் துணிகரமான பாவம்செய்ததாகச் சிலசமயம் தங்களைக் குற்றப்படுத்தும்படிக்குச் சாயும் பழக்கமுடையவர்களாக இருக்கின்றனர். இதினிமித்தம் தாங்கள் இரண்டாம் மரணத்திற்கு ஆளாகிவிட்டனர் என்றும் பயப்படுகின்றனர். ***கர்த்தரால் எவை துணிகரமான பாவமாகப் பார்க்கப்படவில்லை என்பதற்கு உதாரணமாக, தாவீதின் விஷயத்தை நாங்கள் சுட்டிக்காட்டுகின்றோம்.***

இராஜாவாகிய தாவீது தனது இந்த மீறுதலின் விஷயத்தில் பல நாட்களாக, பல வாரங்களாக, மாதங்களாக யோசித்து திட்டம்போட்டிருந்தார். இதில் ஓரளவுக்குத் துணிகரம் இருக்கின்றது என்பது மறுக்கப்பட முடியாதுதான்; ஆனால் இதில் வேறொரு காரியமும் ஓரளவுக்குக் காணப்பட்டிருக்கின்றது; அதாவது தகப்பனாகிய ஆதாமின் இனத்திலுள்ள ஓர் அங்கத்தினன் எனத் தாவீது சுதந்தரித்துக்கொண்டிருந்த மாம்ச பெலவீனங்களும் காணப்பட்டது. தாவீதினுடைய பாவத்தின் விஷயத்தில் எவ்வளவு துணிகரம் இருந்தது, எவ்வளவு பெலவீனம் இருந்தது என்பதைத் தேவனுடைய தீர்ப்பு மாத்திரமே தெளிவாய் வேறுபிரித்துக் காண்பிக்க முடியும். தாவீதின் பாவம் முற்றிலும் பெலவீனத்தினால் அல்லது அறியாமையினால் சம்பவித்தது அல்ல என்பது தெளிவாய்த் தெரிகின்றது; முற்றிலும் துணிகரமானதுமல்ல என்பதும் சமமாய்த் தெளிவாகத் தெரிகின்றது. ஆகையால் இது கலப்படமான பாவம் என்று நாம் சொல்லலாம். இது முழுவதும் துணிகரமில்லை என்பதற்குரிய நிரூபணமானது, தீர்க்கத்தரிசி மூலம் கர்த்தர் தாவீதைக் கடிந்துகொண்ட பிற்பாடு, இவரது மனசாட்சி பாவத்தை அடையாளம் கண்டுகொண்டதிலும், அப்பாவம் கர்த்தருக்கும் தனது ஆத்துமாவுக்கும் இடையில் உருவாக்கின தடுப்புச்சுவரைக்குறித்து இவர் உணர்ந்துகொண்டதிலும் வெளிப்படுகின்றது. ***ஒருவேளை பாவம் துணிகரமாய் இருந்திருக்குமானால், துக்கப்படுவதற்கும், நொறுங்கிப்போவதற்கும் பதிலாக இராஜா, பாவத்தின் பாதையில் தொடர்ந்து செல்லவேண்டும் என்று எண்ணியிருப்பார்***; ***இன்னுமாகத் திவ்விய மன்னிப்பிற்காகவும், ஒப்புரவாகுவதற்குமான எந்த ஏக்கமும் இல்லாமல் இருந்திருப்பார்.*** இவைகளுக்காக இவர் ஏக்கம்கொண்ட காரியமானது, இவர் வருந்தத்தக்க நிலையில் சரியான பாதையினின்று வழிமாறியிருப்பினும், இவரது இருதயமும், இவரது மனமும் இன்னமும் கர்த்தர் மற்றும் நீதியின் பக்கத்திலேயே காணப்படுகின்றது என்பதை நிரூபிக்கின்றதாய் இருக்கின்றது. இது பாவத்தில் விழுந்து, தேவமன்னிப்பிற்காகவும், ஒப்புரவாகுவதற்காகவும் ஏங்கும் அனைவருக்கும் பாடமாகவும், உதாரணமாகவும் காணப்படுவதாக. இத்தகையவர்கள் விசுவாசத்தின் மூலமாக கர்த்தருடைய இரக்கத்தை ஏற்றுக்கொண்டு, இதில் தாவீது இராஜாவைப்போன்று களிகூருவார்களாக; மனந்திரும்புதற்கேதுவாய் மறுபடியும் புதுப்பிக்கக்கூடாதபடி, மரணத்திற்கேதுவான பாவத்தைச் செய்திருப்பவர்கள், தங்கள் தீய நடக்கையினிமித்தம் உண்மையாய் இருதயம் நொறுங்கி மனம்வருந்தும் நிலைக்குக் கொண்டுவரப்படுவது என்பது கூடாதகாரியம் என்பதை இவர்கள் நினைவுகூருவார்களாக.

உண்மையான மனம் வருந்துதல் என்பது, முடிந்தமட்டும் செய்த தவற்றைச் சரிப்படுத்துவதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. தாவீதின் பாவம் வெளியரங்கமானதாகவும், ஜனங்கள் அறிந்ததாகவும் இருந்தபடியால், பாவத்தைப்போலவே (பாவத்திற்கான) மனம் வருந்துதலும் வெளிப்படையாகத் தெரியும்படிக்குச் செய்யப்படுவது சரியான காரியமேயாகும். தாவீது பாவத்தை அறிக்கைபண்ணும் விஷயமும், செய்த தவற்றைச் சரிப்படுத்துவதற்குரிய அவரது பிரயாசத்தின் விஷயமும் முழுநிறைவாய்ச் செயல்படவில்லையெனில், அவர் திவ்விய தயவிற்குள் மீண்டும் கொண்டுவரப்பட்டிருக்க மாட்டார் என்று நம்புவதற்கு எங்களிடம் காரணங்கள் இருக்கின்றன. தாவீதின் (பாவ) நடக்கை தேவனுடைய நாமத்தைத் தூஷிக்கும்படிக்குச் சிலரை நடத்தியுள்ளது. (2 சாமுயேல் 12: 14); ஆகையால் தாவீதின் மனந்திரும்புதல், இந்தத் தூஷணத்தைக் கூடுமானமட்டும் சரிப்படுத்துவது என்பது சரியான காரியமேயாகும். தாவீதின் மனந்திரும்புதல்பற்றின பதிவானது, அவரது குற்றம்பற்றின பதிவோடுகூடச் சரித்திரத்தில் இடம்பெறுகின்றது; அவரது குற்றம், தூஷிப்பதற்குரிய வாய்ப்பைக் கொடுத்ததுபோல, அவரது மனந்திரும்புதல் தாவீதைப்போன்று இருதயத்தில் கர்த்தருக்கு உண்மையாய் இருந்தவர்களும், ஆனால் தவறுகளில் விழுந்தவர்களுமான அநேகருக்கு நம்பிக்கையினையும், ஊக்கத்தினையும் கொடுத்துள்ளது.

*பாவம் மன்னிக்கப்படுவதற்கும், தண்டனைகள் தள்ளுபடிபண்ணப்படுவதற்கும்* இடையிலுள்ள வித்தியாசத்தினை நாம் தெளிவாய் வேறுபடுத்திப் பார்க்கவேண்டும். இந்தச் சம்பவத்தில் தாவீதின் பாவம் மன்னிக்கப்படுகின்றது, ஆனாலும் தீர்க்கத்தரிசியினால் முன்னுரைக்கப்பட்ட தண்டனை அவர்மீது ஏற்றவேளையில் வந்தது என்று பார்க்கின்றோம். ஆகையால் இங்குக் கொடுக்கப்பட்ட மன்னிப்பானது, மன்னிக்கப்பட்டவரை தண்டனைகள் அனைத்திலிருந்தும் விடுவிக்கும் சட்டப்படியான மன்னிப்பல்ல; மாறாக இராஜாவின் மீறுதல் காரணமாக வந்த விளைவுகளில் ஒன்றான *திவ்விய தயவற்ற நிலை* மாற்றப்படுவதை மாத்திரம், இங்குள்ள இந்த மன்னிப்பு அருளுகின்றது என்று பார்க்கின்றோம். தேவன் முன்னறிந்துள்ள மற்றும் விவரித்துள்ள தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்குரிய எண்ணங்களையும் இராஜா தன் மனதில் பெற்றிருக்கவில்லை என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். தனக்கும், கர்த்தருக்கும் இடையில் ஐக்கியம் சீராக்கப்படுவதிலேயே தாவீதின் சந்தோஷம் காணப்பட்டது; தேவனுடைய முகத்தின் பிரகாசத்தினையும், பரலோகத்தின் புன்னகையினையும், தேவனுடனான ஐக்கியத்தினையும் சிலகாலம் தன்னிடமிருந்து மறைத்த பாவ மேகம் நீக்கப்பட்டதிலேயே, தாவீதின் சந்தோஷம் காணப்பட்டது. இப்படியாகவே இன்று பாவத்திற்குள் துணிகரமாய் விழுந்து, அதற்காக மனம்வருந்தி, பிதாவோடும் குமாரனோடும் உள்ள ஐக்கியத்தினைப் புதுப்பிக்கச் சரியான முறைபடி நாடுபவர்கள் அனைவரின் விஷயத்திலும் காணப்படும். இவர்களின் வாஞ்சையானது, தண்டனையினின்று தப்பிக்க வேண்டுமென்று இராமல், மாறாக மீறுதலின் காரணமாகத் துண்டிக்கப்பட்ட ஆத்துமாவின் ஐக்கியத்தைப் புதுப்பிக்கவேண்டும் என்பதாக விசேஷமாய்க் காணப்படும். இந்தக் கருத்திற்கு இசைவாகவே, தற்காலத்திலுள்ள புதுச்சிருஷ்டிகள், பாவங்களுக்கான மன்னிப்பிலும், குமாரன் வாயிலாக பிதாவுடனான ஒப்புரவாகுதலிலும் களிகூருகின்றனர்; அதேவேளையில் நடைமுறை வாழ்க்கையில் உலகத்தாரைப்போன்று ஒரே மாதிரியான நிலைமைகளின்கீழ்த்தான் வாழ்கின்றனர்; அதாவது ஆதி பாவத்தின் காரணமாக விழுந்துபோன இனத்திற்குப் பொதுவாக வரும் நோவுகளுக்கு, வலிகளுக்கு, சோதனைகளுக்கு, பிரச்சனைகளுக்கு மற்றும் ஏமாற்றங்களுக்குப் புதுச்சிருஷ்டிகளும் ஆளாகுகின்றனர். தேவனுடனான நமது *புதிய உறவின் ஆசீர்வாதங்கள் என்பது*, தவிக்கும் சிருஷ்டிகளினுடைய *பாரங்கள் மற்றும் பிரச்சனைகளிலிருந்து நம்மை விடுவிப்பதில் இல்லை* என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்; மாறாக நாம் இனிமேலும் திவ்விய ஆக்கினைத்தீர்ப்பின்கீழ் இல்லை என்றும், இனிமேலும் நாம் மற்றவர்களைப்போன்று கோபாக்கினையின் பிள்ளைகளாக இல்லை என்றும், கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் மூலம் தேவனுடன் ஐக்கியம் மற்றும் உறவிற்குள்ளாகக் கொண்டுவரப்பட்டிருக்கின்றோம் என்றுமுள்ள *உணர்ந்துகொள்ளுதலே* அந்த ஆசீர்வாதமாகக் காணப்படுகின்றது. தவிக்கும் சர்வசிருஷ்டியையும் பாதித்துள்ள பாரங்களினின்று நாம் விடுவிக்கப்படுவதற்குரிய நம்முடைய நம்பிக்கையானது, நமது கர்த்தரின் இரண்டாம் வருகையின்போது வாக்களிக்கப்பட்டுள்ள இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களில் மையம்கொண்டுள்ளது. இந்த நம்பிக்கைகளினாலும், வாக்குத்தத்தங்களினாலும் ஊக்குவிக்கப்படுகின்ற நாம், மற்றவர்கள்போன்று துக்கிக்கிறதில்லை; மாறாக உபத்திரவங்களில் களிகூர நாம் உதவப்படுகின்றோம்; இன்னுமாக கர்த்தருடைய வேளைக்காகவும், கர்த்தருடைய வழிக்காகவும், அதாவது முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பொறுமையோடு காத்திருப்பதற்காகவும் நாம் உதவப்படுகின்றோம்.

இந்தக் கருத்தானது, அதாவது *தற்காலத்தில்*, நமது பாவங்கள் நமது கர்த்தருடைய புண்ணியத்தின் வாயிலாக தெய்வீகப் பார்வையினின்று மறைத்துமாத்திரமே வைக்கப்பட்டுள்ளது எனும் கருத்தானது, அதாவது அவைகள் மன்னிக்க மாத்திரமேபட்டுள்ளது அல்லது ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது, மறைக்கப்பட்டுள்ளது, அவைகள் உண்மையில் *நிவிர்த்திசெய்யப்படுவதில்லை* எனும் கருத்தானது

அப்போஸ்தலனாகிய பேதுருவினால் மிகவும் தெளிவாய்த் தெரிவிக்கப்பட்டுள்ளது (அப்போஸ்தலர் 3:19-21); இவர் பரிசுத்த ஆவியினுடைய ஏவுதலினால் பிரசங்கித்துக்கொண்டிருக்கையில், தான் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருப்பவர்களின் பாவங்கள் இளைப்பாறுதலின் காலங்களில் - திரும்பக்கொடுத்தலின் காலங்களில் - ஆயிர வருட யுகத்தில் - இராஜ்யத்தில் நிவிர்த்தி பண்ணப்படத்தக்கதாக, மனந்திரும்பி, குணப்படுங்கள் என்று கூறினார்.

அந்த மகிமையான ஆயிர வருட நாளின்போது, இப்பொழுது ஒப்புரவாகியுள்ள சபையானது, முதலாவது தேர்ச்சிப்பெறுபவர்களாய் இருப்பார்கள்; இவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறுவதற்குப் பாத்திரவான்களாய்க் கருதப்படுவார்கள்; அப்போது இவர்கள் பெற்றுக்கொள்ளும் சரீரங்களானது பூரணமானதாகவும், கறைதிரையற்றதாகவும் காணப்படும் - மனதிலும், சரீரத்திலும் பாவத்தினால் ஏறக்குறைய பாழ்படுத்தப்பட்ட நிலையில் தற்காலத்தில் காணப்படும் அழிவுக்குரிய சரீரங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகவும் காணப்படும். பூரணமான புதிய சரீரங்களை இவர்கள் பெற்றுக்கொள்வது என்பது, இந்த வகுப்பாருக்குப் பாவத்தின் காரணமாகக் காணப்பட்ட பிழைகளும், பாவத்தின் அச்சடையாளங்களுமாகிய அனைத்தும் கல்லறையில்வைத்து, மாம்சத்தில் ஒழிக்கப்படும் என்பதைக் குறிக்கின்றதாயிருக்கும்; இவர்களது ஆவிக்குரிய சரீரங்கள் பூரணமானவையாகக் காணப்படும். இந்த முதலாம் உயிர்த்தெழுதலின் வகுப்பார் குறித்து, மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்மசரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு என்று எழுதப்பட்டுள்ளது. (1 கொரிந்தியர் 15:42-44)

உலகம் ஒப்புரவாகுதலை அடையாததால், பாவங்களுக்குரிய மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளாததால், ஆயிர வருடத்தின் ***காலைப்பொழுதிலேயே*** பாவங்களுக்கான நிவிர்த்தியினை அடைவதில்லை. தற்காலத்தில் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகவும், சிறுமந்தையாகவும், கிறிஸ்துவின் சரீரமாகவும், சபையாகவும் காணப்படுகின்றவர்களைத் தவிர்த்துள்ள மனுக்குலத்தின் உலகத்திற்கு வருப்போகின்ற வேறுபட்ட மாபெரும் ஆசீர்வாதமானது, முழுமையான, இலவசமான மன்னிப்பு எனும் ஆசீர்வாதமாகும். அப்போது (சுவிசேஷயுகம்) மகா பாவநிவாரணநாள் நிறைவுபெற்றிருக்கும், இதன் விசேஷித்த பலிகளும் நிறைவுபெற்றிருக்கும், இதன் பாவநிவாரண இரத்தமானது பிதாவுக்கு முன்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும்; இது முழு உலகத்தின் சார்பாக ஏற்றுக்கொள்ளவும்பட்டிருக்கும். இப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதன் காரணமாக, தெய்வீக மன்னிப்பானது கிறிஸ்துவின் மூலம் முழு உலகத்திற்கும் கடந்துவரும் - ஆதாமில் உலகத்தின்மீது அறிவிக்கப்பட்டிருந்த ***தண்டனைத் தீர்ப்பானது*** தள்ளுபடிசெய்யப்படும்/மன்னிக்கப்படும். இது அப்போஸ்தலனால் குறிப்பாய்த் தெரிவிக்கப்பட்டுள்ளது: ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று (உரோமர் 5:18). ஆனால் தாவீதின் பாவங்களில் காணப்பட்ட ஓரளவு துணிகரத்தின் நிமித்தம், அவருக்கு உரியதாய்க் காணப்பட்ட அந்தத் தண்டனைகளிலிருந்துள்ள விடுதலையை, தாவீதிற்கான மன்னிப்பானது கொடுக்காததுபோல . . . இந்தச் சுவிசேஷயுகத்தில் சபைக்குக் கொடுக்கப்பட்ட மன்னிப்பும், மனுக்குலத்தின்மீது காணப்பட்ட தண்டனைகளிலிருந்துள்ள உடனடியான விடுதலையை அவர்களுக்குக் கொடுக்காததுபோல . . . ஆயிரம்

வருட நாளின் விடியலின்போதும், மேசியாவின் ஆளுகையினுடைய துவக்கத்தின்போதும், உலகத்தின் பாவங்களுக்காக வரும் மன்னிப்பும்கூடப் பாவத்தின் அச்சடையாளங்கள்/சுவடுகள் அனைத்தையும், மனுஷருடைய சொந்த தவறுகளின் காரணமாகவும்கூட மனுஷர்மீது வந்த ஊனங்கள், மரணநிலைகள் அனைத்தையும் நீக்கிப்போடுவதாக இராது. சபைக்கு இப்பொழுது பாவங்களுக்கான மன்னிப்பு என்பது, அந்தப் பாவங்களின் மூடப்படுதலைக் குறிக்கின்றதாயிருக்கின்றது, இதினிமித்தம் நாம் பாவிகளாய் இராததுபோன்று கையாளப்படுகின்றோம். இப்படியே அடுத்த யுகத்தில் உலகத்தின் விஷயமும் காணப்படும் - உலகத்தின் பாவங்கள் மன்னிக்கப்படுதல் என்பது, கிறிஸ்து முழு உலகத்தின் பாவங்களுக்குரிய மூடுதலாக, அவர்கள் சார்பில் தேவன் முன் நிற்பார் என்பதையும், உலகத்தின் சார்பாக கிறிஸ்துவினால் கட்டித்தீர்க்கப்படும் பலியின் காரணமாக, அவர்கள்மீது காணப்படும் நித்திய மரணதண்டனை நீக்கப்படும் என்பதையும் குறிக்கின்றதாயிருக்கும். கிறிஸ்து மற்றும் ஆயிர வருட இராஜ்யத்தின் வேலை, மனுக்குலத்தின் உலகத்தில் விருப்பம்காட்டும் யாவரையும் அவர்களது மனித சுபாவத்தின் முழுமையான பூரண நிலைக்கு உயர்த்துவதேயாகும்; இதனால் அந்த யுகத்தினுடைய முடிவில் அவர்கள் பூரணமும், முழுமையுமான மனித ஜீவிகளாக இருப்பார்கள். ஆகையால் ஆயிர வருட யுகத்தினுடைய வேலையானது, பாவங்களை நீக்கும் வேலையாக - சரீரத்திலும், மனதிலும் பாவத்தின் அடையாளங்களையும், சுவடுகளையும் நீக்கிப்போடும் வேலையாகக் காணப்படும். இப்படியாக மனுக்குலத்தின்மீது பாவம் கொண்டுவந்த பெலவீனங்களும், சீர்கேடுகளும் மேற்கொள்ளப்படும்; மேலும் இந்தக் காரணத்திற்காகவே அந்த யுகம் திரும்பக்கொடுத்தலின் காலங்கள் என்று அழைக்கப்படுகின்றது, அதாவது மாபெரும் மீட்பின் வாயிலான திவ்விய தயவினை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரும் படிப்படியாக ஆதியில் பெற்றிருந்த தேவசாயலுக்குத் திரும்பக் கொண்டுவரப்படும் காலங்கள் ஆகும்.

***6-ஆம் வசனத்தில்,*** இருதயத்தில் தேவபக்தியாயும், தேவனுடைய நீதியின் வழிகளை விரும்பியும் காணப்பட்டு, ஆனால் வழியில் இடறிப்போனவர்களாகிய மற்றவர்களுக்கு, தன்னுடைய சொந்த அனுபவங்களானது உதவியாய் இருக்குமென்று தாவீது இராஜா தெரிவிக்கின்றார். இத்தகையவர்கள் *விரைவாய்க்* கர்த்தரிடம் ஜெபம்பண்ணவும், அனுக்கிரகம் கிடைக்கும் காலத்தில் அவரைத் தேடும்படிக்கும் தாவீது அறிவுரைக் கூறுகின்றார். (மன்னிப்பு கேட்கப்படாமல்) ஒவ்வொரு நாளும் கடந்துபோகையில், அந்த ஒவ்வொரு நாளும் கர்த்தரிடமிருந்து தன்னை விலகிப்போகச் செய்துக்கொண்டிருந்தது என்று தாவீது புரிந்துகொண்டார். மீறுதலுக்குட்பட்ட பயபக்தியுள்ளவன், ஜலப்பிரவாகம் அணுகாமல் காக்கப்பட வேண்டுமானால், அவன் உடனடியாக பரலோக கிருபையின் சிங்காசனத்திற்குச் சென்று, அறிக்கையிட்டு, ஏற்றசமயத்தில், எதிர்காலத்தில் சகாயஞ்செய்யும் கிருபை மற்றும் இரக்கத்தைப் பெற்றுக்கொள்வானாக என்று தாவீதின் அறிவுரை காணப்படுகின்றது.

***7-ஆம் வசனத்தில்,*** இராஜா தன் சொந்த அனுபவங்களுக்குத் திரும்புகின்றார்; கர்த்தரிடத்தில் தான் எப்படிச் சமாதானத்தைக் கண்டடைந்தார் என்றும், தன்னால் இளைப்பாற முடிகிற ஒரு மறைவிடத்தை எப்படிக் கண்டடைந்தார் என்றும் கூறுகின்றார். அறிவிக்கப்பட்ட தண்டனைகளை எதிர்நோக்கியிருக்க வேண்டும் என்று தாவீது அறிந்திருந்தபோதிலும், இப்பொழுது அவருடைய இருதயம் கர்த்தருடன் ஐக்கியத்தில் காணப்படுகின்றபடியால், அந்தத் தண்டனைகள் தனக்கு வரும் காலங்களிலும், கர்த்தர் தன்னோடு காணப்படுவார் என்றும், (தண்டனையாகிய) அந்த இக்கட்டில் தன்னைக் கர்த்தர் பாதுகாப்பார்

என்றும், தான் உபத்திரவத்தில் காணப்படும்போதுகூட, தன்னுடைய இரட்சணியப் பாடல்களைப் பரலோக தூதர்கள் பாடுவதைத் தன்னால் கேட்க முடியும் என்றும் தாவீதினால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

அச்சங்கீதத்தின் இறுதி வசனங்களில், கர்த்தர் பேசுகின்றதாகக் காண்பிக்கப்பட்டுள்ளது; இங்குக் கர்த்தர் தாவீதிற்கும், தம்முடைய ஜனங்கள் அனைவருக்கும், அதாவது கர்த்தருக்கும், தங்களுடைய ஆத்துமாக்களுக்கும் இடையில் பூமிக்குரிய ஏதேனும் ஒரு மேகத்தினை வர அனுமதித்ததின் நிமித்தம் தாவீதைப்போன்று துயரமடைந்தும், கலக்கமடைந்தும் காணப்பட்டு, கர்த்தருடைய வழிகாட்டுதலுக்காக வாஞ்சிக்கின்றவர்களாகிய தம்முடைய ஜனங்கள் அனைவருக்கும் அறிவுரை வழங்குகின்றார்; இத்தகையவர்கள் அனைவருக்கும் கர்த்தர் ஆசிரியராக, போதகராக இங்குக் காணப்படுகின்றார்; கர்த்தர் இவர்கள் காரியங்களை ஆண்டு நடத்துவார்; நன்மைக்கேதுவாய் நடைபெறத்தக்கதாகக் கர்த்தர் அனைத்துக் காரியங்களையும் பார்த்துக்கொள்வார். இவர்களுடைய இடறல்கள்கூடப் பேரிழப்பாய்க் காணப்படாது, ஏனெனில் இவர்கள் கர்த்தருக்கும், நீதியின் கொள்கைகளுக்குமான அர்ப்பணிப்பின் ஆவியினை தக்கவைத்துக்கொள்வதினால், இவர்கள் தவறாய் எடுத்துவைக்கும் அடிகளும்கூட விலையேறப்பெற்ற பாடங்களாகும்படிக்குக் கர்த்தர் பார்த்துக்கொள்கின்றார்; இதனால் இவர்கள் இதுமுதற்கொண்டு இடறுவதற்கு இடமளிக்காதவர்களாகச் செயல்படுவார்கள்; மேலும் கர்த்தரை நோக்கிப்பார்க்கவும், தாங்கள் நடக்க வேண்டிய வழிகளில், அவரது கண்ணின் ஆலோசனையினால் வழிகாட்டப்படுவதற்கும் கற்றுக்கொள்வார்கள்.

யாருக்குக் கர்த்தர் போதிக்கின்றாரோ, யார் அவரது ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்கின் றனரோ, அவர்கள் பலவந்தம்பண்ணி திருப்பப்படுவதற்கும், வழிகாட்டப்படுவதற்குமுரிய அவசியத்தில் காணப்படும் குதிரையைப்போன்று அல்லது கோவேறு கழுதையைப்போன்று இருக்கமாட்டார்கள். இவர்கள் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளும்படியாகவும், சந்தோஷம் அடையும்படியாகவும் இவர்களைக் கர்த்தர் கையாளமுடிகிற அளவுக்கு, இவர்களுடைய இருதயங்கள் கர்த்தருடன் மிகவும் இணக்கமாய்க் காணப்படும். துன்மார்க்கனுக்கு வேதனைகளுண்டு, ஆனால் கர்த்தருடைய ஜனங்கள் இவர்கள் மத்தியில் காணப்படுபவர்களாகக் கருதப்படமாட்டார்கள்; ஏனெனில் கர்த்தருடைய இரக்கம் இவர்களோடு காணப்பட்டு, இவர்களது ஆத்துமாக்களை மீட்டுக்கொள்ளும். ஆகையால் இந்த வகுப்பார், கர்த்தருடைய இரக்கத்தின் மூலமாக, நீதிமான்களாகக் கருதப்படுகின்றனர் - இவர்கள் உண்மையாக நீதிமான்களல்ல, இவர்கள் கிறிஸ்துவுக்குள்ளான தெய்வீக ஏற்பாட்டின் மூலம் நீதிமான்களாகக் கருதப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் தங்கள் நிமித்தமாய் ஆனந்தமாய் இருக்க முடியாது என்றாலும், இவர்கள் கர்த்தருக்குள் ஆனந்தமாய்க் காணப்படுவார்கள். இவர்கள் பாவஞ்செய்ய வாய்ப்புடையவர்களாகவும், மாம்சத்தின்படி முழுவதும் பெலவீனமுள்ளவர்களாகவும் காணப்பட்டாலும், இவர்கள் செம்மையான இருதயமுள்ளவர்களானபடியால், நம்மை அன்புகூர்ந்து, நம்மைத் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வாங்கியவர் மூலம் இவர்கள் ஜெயங்கொள்பவர்களாகக் கொண்டுவரப்பட முடியும் - நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார் என்ற மகா திவ்விய ஏற்பாட்டினை இவர்கள் உணர்ந்துகொள்கையில், ஆனந்தமுழக்கமிடுவார்கள். (1 யோவான் 2:2)

R1397

# மனந்திருந்திய மனிதனின் ஜெபம்

**சங்கீதம் 51:1-13**

தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.

இந்தப் பாடம் தீர்க்கத்தரிசியாகிய தாவீதின் சரித்திரத்தில் இடம்பெறும் இருண்ட கறையின்மீது நமது கவனத்தைக் கொண்டுவருகின்றது, அதாவது உரியாவைக்கொன்ற சம்பவமும், அவரது மனைவியைப் பறித்துக்கொண்ட சம்பவமுமாகும். சந்தேகவாதிகள் இந்த மாபெரும் இரட்டை பாவத்தைச் சுட்டிக்காட்டி, இதைச் செய்தவர்தான் வேதாகமத்தின் மகா ஒழுக்க நெறிமுறையின்படி, தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷன் என்று அழைக்கப்படுகின்றார் என்று ஏளனம் செய்கின்றனர். ஆனால் உண்மை என்னவெனில், தாவீது மேய்ப்பனாக இருந்த இளமைப்பருவத்திலிருந்து, புருஷனுக்குரிய பருவத்திற்கு வரும்போதுதான், தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷனாகக் காணப்பட்டார். தாவீதின் மகா பாவம் தொடர்புடைய விஷயத்திலும்கூட, இவரிடத்தில் தேவனுக்கேற்ற இருதயத்திற்குரிய சிறந்த குணத்தை வெளிப்படுத்தும் ஏதோ சில விஷயங்களும் காணப்பட்டன; இதைக்குறித்து இந்தப் பாடம் நமக்கு முன்வைக்கின்றது. பாராட்டத்தகுந்த அம்சங்கள் பின்வருமாறு: (1) தன்னைச் சுற்றிலும் காணப்படும் இராஜாக்கள் அனைவரும் இப்படித்தான் செய்கின்றனர் என்றும், தன்னைவிட மோசமாகச் செய்கின்றனர் என்றும், இராஜா என்பவர் விரும்பியவற்றைச் செய்வதற்கு உரிமைப் பெற்றிருக்கின்றார் என ஜனங்களாலும்கூட ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றது என்றும் கூறி, தான் செய்ததைத் தாவீது நியாயப்படுத்த முயற்சிக்கவில்லை; (2) இவர் தவறை மறுதலிக்காமல் இருந்தது மாத்திரமல்லாமல், தன்னைத் தற்காத்துக்கொள்ள என்ன (காரணங்கள்) சொல்லலாம் என்று பார்ப்பதற்கும்கூட முயற்சிக்கவில்லை; இராஜா என்கிற தன் அதிகாரத்தை வைத்துக்கொண்டு, இவர் தனக்கான சோதனை அசாதாரணமாக இருந்தது என்றோ, மற்றவர்களைவிட அதிகமாக இருந்தது என்றோ முறையிடவுமில்லை; மாறாக இவரது இருதயம் எப்படி இருந்திருக்கும் என்று இவரது தீய நடக்கை சுட்டிக்காட்டுவதைவிட, உண்மையில் இவரது இருதயம் சிறப்பாகவே இருக்கின்றது என்று அனைவரையும் நம்பவைக்கும் விதத்தில், இவர் முழுமையாகவும், இருதயப்பூர்வமாகவும் பாவத்தை அறிக்கையிட்டு ஒப்புக்கொண்டார். தாவீதின் குற்றங்களை ஆதரிப்பதற்கு நமக்கு உரிமையில்லை, எனினும் இவரது பெலவீனங்களை ஓரளவுக்கு ஈடுசெய்யும் விதத்தில், இவரிடத்தில் காணப்பட்ட மற்றப் பண்புகளைக் கவனிக்கும் சிலாக்கியம் நம்முடையதாக இருக்கின்றது.

வேதாகமம், அதன் மாபெரும் கதாபாத்திரங்களின் பாவங்களைப்பற்றின பதிவுகளையும், கூடவே அவர்களின் விசுவாசம் மற்றும் ஊழியம்குறித்த பதிவுகளையும் இப்படி உண்மையாய்ப் பாதுகாத்துப் பதிவிடுவதில், அதன் உண்மைத்தன்மைக்குச் சான்றுபகர்கின்றது. மதத்திற்கு அஸ்திபாரமாய் விளங்கும் வேறு எந்தப் புத்தகங்களும் இப்படியாகக் காணப்படுகிறதில்லை. மற்றப் புத்தகங்கள் நல்லவைகளை மாத்திரம் கூறிவிட்டு, தீய விஷயங்களைத் தெரிவிக்காமல் விட்டுவிடுகின்றது; ஆனால் வேதாகமமோ, நமது கர்த்தர் இயேசுவைத் தவிர்த்து, அதன் அனைத்து மாபெரும் கதாபாத்திரங்களின் பெலவீனங்களைக் குறித்துத் தெரிவிக்கின்றது; பவுல் கொடுத்த துன்புறுத்தல்களையும், பேதுருவின் மறுதலிப்பையும், பேதுரு

(இயேசுவை) தூஷித்ததையும், தாவீதின் பாவங்களையும், ஆபிரகாமின் தவறுகளையும், இன்னும் பலரின் காரியங்களையும் தெரிவிக்கின்றது.

இதைக் கடுமையான குறை என்று உலக ஞானம் கருதும்; இப்படி உலக ஞானத்தினால் கடுமையான குறை என்று கருதப்பட்ட இக்காரியத்தைத் தேவன் சரியான காரியம் என்று கண்டுகொண்டார்; மனித பெலவீனம் மற்றும் பாவம் பற்றிய இந்தப் பதிவுகளினால், தேவனுடைய ஜனங்களில் அநேகர் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கின்றனர். இப்பதிவுகள், அனைவரும் பாவம் செய்திருக்கின்றனர் என்றும், நீதிமான் ஒருவனாகிலும் இல்லை என்றும் கூடுதலாய் உறுதிப்படுத்துகின்றது; இன்னுமாகக் கடந்த காலங்களின் காரியங்கள் மன்னிக்கப்படுவதற்கும், பாவம் மற்றும் அதன் பின்விளைவுகள் எனும் உளையான சேற்றிலிருந்து தூக்கிவிடப்படுவதற்கும், அனைவருக்கும் தேவனுடைய கிருபை தேவை என்றுமுள்ள தேவனுடைய சாட்சியங்களைக் கூடுதலாய் உறுதிப்படுத்துகின்றது. இப்படியாக மன்னிப்புப் பெற்றுக்கொள்ள தேவனிடத்தில் நம்பிக்கைக்கொள்வதற்கும், இன்னுமாகத் தம்முடைய கிருபையை தனக்கு அருளும் தேவன், தன்னைப்போல் வழிவிலகிச் சென்று, பின்னர் உண்மையாய் மனம்வருந்தி தேவனிடத்தில் திரும்பிவரும் மற்றவர்கள்மீதும் இரக்கங்கொண்டிருக்கின்றார் என்று உணர்ந்துகொள்வதற்கும், அநேக பாவிகள் கற்பிக்கப்பட்டுள்ளனர்.

*வசனங்கள் 1-3.* தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது.

இவ்விதமாகத் தாவீது இரக்கத்திற்காக மன்றாடினார்; இறுதியில் தேவ தயவு தனக்கு மீண்டும் கிடைத்துவிட்டது என்று தாவீது உணர்ந்திருந்தபோதிலும், காரியத்தினுடைய உண்மையான கோட்பாடுகள் பற்றி எதுவும் அறியாதவராக இருந்தார் - அதாவது தேவன் எப்படி நீதியுள்ளவராகவும், அதேசமயம் ஆக்கினைக்குரிய பாவங்களைச் செய்த பாவிகளை நீதிமானாக்குகிறவராகவும் இருக்கின்றார் என்பது பற்றி எதுவும் அறியாதவராக இருந்தார். ஆ, ஆம்! இந்தச் சுவிசேஷயுகத்தின் போதுள்ள தேவனுடைய புத்திரர்களின் நிலை இன்னும் அதிகம் ஆசீர்வதிக்கப்பட்ட நிலையாகக் காணப்படுகின்றது. பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதா, நாம் மன்னிக்கப்பட்டுள்ளது குறித்தும், நாம் அவரது தயவிற்குள் மீண்டும் வந்துள்ளதைக்குறித்தும் நமக்குத் *தெரிவித்துள்ளது* மாத்திரமல்லாமல், இவைகளையெல்லாம் அவர் நம்முடைய பாவங்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் அல்லது அவைகளை நீக்கிப்போடாமல் எப்படிச் செய்திருக்கின்றார் என்றும், இது விஷயத்தில் தம்முடைய நீதி பிரமாணங்களை மீறாமல் எப்படிச் செய்திருக்கின்றார் என்றும் நாம் காணத்தக்கதாக, அவர் நமக்கு *விவரங்களையும்* கொடுக்கின்றார். நமது கர்த்தராம் கிறிஸ்து தேவாட்டுக்குட்டியாக இருக்கின்றார் என்றும், நமக்குப் பதிலாகவும், பாவநிவிர்த்தியாகவும் சம்பவித்த இவரது மரணம், உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் என்றும் தேவன் நமக்குக் காண்பிக்கின்றார்; கிறிஸ்து வாயிலாக அளிக்கப்பட்ட கிருபையினை ஏற்றுக்கொள்பவர்கள் எவருக்கும், அவரது தழும்புகளினால் மன்னிப்பும், குணமாகுதலும் அருளப்படும் என்று தேவன் நமக்குக் காண்பிக்கின்றார். உண்மைதான், தாவீதின் பாவங்கள் நீக்கப்படவுமில்லை, மன்னிக்கப்படவுமில்லை; ஏனெனில் கர்த்தர் இவரை மீண்டுமாக திவ்விய தயவிற்குள்ளும், ஐக்கியத்திற்குள்ளும் கொண்டுவந்தாலும், தீர்க்கத்தரிசியாகிய நாத்தான் மூலம் முன்னுரைத்ததுபோலவே, இவரது பாவங்களுக்காக, இவரைக் கர்த்தர் கடுமையாய்த் தண்டித்தார் (2 சாமுயேல் 12:11-12); அப்சலோமின் கலகமானது, தண்டனை வழங்குவதற்குரிய வழியாகப் பயன்படுத்தப்பட்டது.

உண்மைதான், கொடுக்கப்பட்ட தண்டனை, பாவத்திற்கான முழுத்தண்டனையாகக் காணப்படவில்லை, ஏனெனில் அப்படித் தண்டனைக் கொடுக்கப்பட்டிருக்குமாயின், அது நித்திய மரணமாகக் காணப்பட்டிருந்திருக்கும். (நிழலான பலிகளை அடிப்படையாகக்கொண்டு நிறுவப்பட்ட நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ்க் காணப்பட்ட யூதர்கள் அனைவருக்கும் செய்யப்பட்டதுபோன்று) தேவன் தாவீதிற்கு இரக்கம் காட்டினார்; இவரது விழுந்துபோன நிலைமைக்குச் சலுகைக்காட்டினார்; ஆகையால் இவரை நித்திய மரணத்தினால் தண்டிக்காமல், இவரது பாவத்திற்கு அப்சலோமின் கலகம் தொடர்புடைய சம்பவத்தின் *உபத்திரவத்தினால்* தண்டித்தார்.

நிழலான நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ்த் தாவீதுக்கும், மற்றவர்களுக்கும் சம்பவித்ததுபோலவே, கிறிஸ்துவுக்குள்ளான புது உடன்படிக்கையின் கீழுள்ள தேவ பிள்ளைகளுக்கும் சம்பவிக்கும்.ந ம்முடையம ீட்கும்பொருள்வ ிலைக்கிரயமெனச்ச ம்பவித்தக ிறிஸ்துவின்ம ரணமானது, ஆதாமின் ஆதி பாவத்தினை இரத்து செய்கின்றது; இன்னுமாக நம்மையும் அறியாமல் மற்றும் நம்முடைய உண்மையான உணர்வுகளுக்கு மாறாக செய்யப்பட்ட நம்முடைய அந்தச் சில பாவங்களையும், குறைவுகளையும்கூட இரத்து செய்கின்றது. ஆனால் எந்தளவுக்கு ஒரு பாவம் துணிகரமானதாகவும், நம்மால் திட்டமிடப்பட்டதாகவும், நம்முடைய ஒப்புதலைப்பெற்றதாகவும் காணப்படுகின்றதோ, அதற்குத் தற்காலத்திலோ எதிர்காலத்திலோ தண்டனை காணப்படவே செய்யும். அபிஷேகிக்கப்பட்ட சரீரத்தின் அங்கத்தினர்களாய் இருப்பவர்கள் அனைவரின் விஷயத்திலும், அத்தகைய பாவங்களுக்குத் தற்காலத்திலேயே, தண்டனை வழங்கப்படும் என்று தேவன் தெரிவிக்கின்றார்; இதை அப்போஸ்தலன் வாயிலாகத் தெரிவிக்கின்றார்: சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து, நியாயத்தீர்ப்புக்கு (தற்காலத்தில்) முந்திக்கொள்ளும், சிலருடைய பாவங்கள் (அடுத்த வாழ்க்கையில்) அவர்களைப் பின்தொடரும் (1 தீமோத்தேயு 5:24); அறியாதவனாயிருந்து, அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ, சில அடிகள் அடிக்கப்படுவான். எவனிடத்தில் அதிகங்கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங்கேட்கப்படும்; மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள்; மகிமையடையும் சபையாகுவதற்குப் பாத்திரமானவர்கள் அனைவருடைய விஷயத்தில், நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே (பரீட்சையில்) அடுத்த யுகத்தில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே இப்பொழுது சிட்சிக்கப்படுகிறோம் என்று சொல்லப்படுகின்றது. (லூக்கா 12:48; 1 கொரிந்தியர் 11:32)

*வசனங்கள் 4 மற்றும் 5*-இல், தாவீது (பாவத்தைத்) தேவனிடம் அறிக்கையிடுகின்றார் - பாதிக்கப்பட்ட உரியா மரித்துப்போய்விட்டார். அந்த நாட்களில், தன் ஜனங்களுடைய சரீரங்களையும், ஜீவியங்களையும் தன் விருப்பப்படி பயன்படுத்துவது என்பது இராஜாவிற்குரிய சிலாக்கியமாகப் பார்க்கப்பட்டது; சந்தேகத்திற்கிடமின்றி இப்படிச் செய்வதை மற்ற இராஜாக்கள் வழக்கமாய்க் கொண்டிருந்திருக்க வேண்டும். ஆனால் தாவீது புத்தியை அடைந்தார்; இவர் நன்கு காரியங்களைப் புரிந்துகொண்டார்; இவரது குற்றங்கள் மற்றவர்களால் பெரிதாகப் பார்க்கப்படாது என்றாலும், தேவன் முன்னிலையிலுள்ள தனது குற்றத்தைக்குறித்துத் தாவீது உணர்ந்துகொண்டார் மற்றும் தேவனுடைய இரக்கத்தை நாடினார். கர்த்தருடைய சிட்சைகள் தன்மீது கடந்துவருகையில், தேவனுடைய நியாயத்தீர்ப்புகளும், இராஜாவுக்கு வந்துள்ள பிரச்சனைகளும் - நீதியான தண்டனைகளாக இருக்கின்றதே ஒழிய, இவை தேவன் பண்ணின வாக்குத்தத்தங்களைத் தேவன் மீறினதால் வந்த பிரச்சனைகள் அல்ல என்று மற்றவர்கள் அறியும்படிக்கு, தாவீது தன் பாவங்களை ஒப்புக்கொண்டு அறிக்கைப்பண்ணினார்.

*வசனங்கள் 5-12*. தன் பாவத்தையும், விழுகையின் காரணமான தன்னுடைய சீர்கேட்டினையும் 5-ஆம் வசனத்தில் அறிக்கைபண்ணின பிற்பாடு, 6-ஆம் வசனத்தில் தெய்வீகத் திட்டத்தைப்பற்றின தனது தெளிவான புரிந்துகொள்ளுதலைத் தெரிவிக்கின்றார். மாம்சத்தில் விழுந்துபோயும், பெலவீனமாயும்

இருக்கின்றபோதிலும், இதினிமித்தம் எதையும் பூரணமாய்ச் செய்ய முடியாது என்றபோதிலும், இருதயத்தில் சுத்தமாயிருக்கும்படி (நோக்கத்தில் அல்லது எண்ணத்தில் சுத்தமாயிருக்கும்படி) தேவன் எதிர்பார்க்கின்றார் மற்றும் கேட்கின்றார்; தான் இதைச் செய்யவில்லை என்று தாவீது உணர்ந்துகொண்டார். ஆகையாலே அடுத்த வசனங்களில், தாவீதின் ஜெபம், பாவத்தின் விஷயத்தில் கர்த்தர் தனக்குச் சலுகைக் காட்டும்படியாக ஜெபம்பண்ணாமல், மாறாக தன் இருதயம் சுத்திகரிக்கப்படும்படியாகவும், தேவனுடைய குணலட்சணம் மற்றும் திட்டத்திற்கு இசைவாக தன்னுடைய இருதயம் கொண்டுவரப்படும் படியாகவும் ஜெபம் ஏறெடுத்தார். அந்தோ பரிதாபம்! சுவிசேஷயுகத்தினுடைய இன்னும் தெளிவான வெளிச்சத்தின்கீழ் வாழ்பவர்களிலுள்ள சிலர், தாவீது மிகத் தெளிவாய் வெளிப்படுத்தும் காரியங்களைக் காணத் தவறுவது என்பது எத்துணை விநோதமாகக் காணப்படுகின்றது; சிலர் தேவனே சகல பாவம் மற்றும் குற்றம் மற்றும் பொல்லாப்பிற்குக் காரணர் என்றும், இவற்றைத் தூண்டுபவர் தேவனே என்றும் தேவன்மேல் குற்றஞ்சாட்டுகின்றனர். ஆனால் தாவீது சரியாகச் சொல்லியுள்ளார்; ஞானவான்கள்போன்று காண்பித்துக்கொள்ளும் இந்தச் சிலர், தங்களது வீணான (கற்பனைகளினாலே) சிந்தனைகளினாலே உணர்விழந்தும், இருளடைந்தும் காணப்படுகின்றனர்.

*வசனம் - 13*. இங்கு எத்தகையதொரு பிரம்மாண்டமான கொள்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த யுகத்திலும் சரி அல்லது வரவிருக்கின்ற யுகத்திலும் சரி பாதகருக்கு உபதேசிக்க ஆசிரியர்களாக கர்த்தரால் பயன்படுத்தப்படுபவர்கள் - தேவனுக்கு முழுமையாய் அர்ப்பணம்பண்ணினவர்களாக - இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாக - கழுவப்பட்டவர்களாகக் காணப்பட வேண்டும் என்பது மிகவும் சரியான காரியமேயாகும். மேலும் இந்நிலைக்கு வருவதற்குரிய ஒரே வழி - உலகத்தின் பாவங்களைச் சுமந்துதீர்க்கிற தேவாட்டுக்குட்டியின் புண்ணியங்களை விசுவாசித்து பற்றிக்கொள்வதன் மூலமும், அவரால் நம்முடைய பாவங்களை நீக்கப்பெறுவதன் மூலமும், ஆவியில் புதுப்பிக்கப்பட்டு, சத்தியத்தினால் பரிசுத்தமாக்கப் படுவதன் மூலமும் ஆகும்.

## சங்கீதம் 51 (ISV)

(பத்சேபாளிடத்தில் தாவீது பாவத்திற்குட்பட்ட பின்பு, நாத்தான் தீர்க்கத்தரிசி அவனிடத்தில் வந்து, அவன் பாவத்தை உணர்த்தினபோது பாடப்பட்ட தாவீதின் சங்கீதம்)

தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும்,
உமது மிகுந்த இரக்கங்களின்படி
என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும்.

என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி,
என் பாவமற என்னைச் சுத்திகரியும்.

என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்;
என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது.

தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து,
உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்;
நீர் பேசும்போது உம்முடைய நீதி விளங்கவும்,
நீர் நியாயந்தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன்.

இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்;
என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்.

இதோ, உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்;
அந்தக்கரணத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்.

நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்;
என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்.

நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும்,
அப்பொழுது நீர் நொறுக்கின எலும்புகள் களிகூரும்.

என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து,
என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும்.

தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்,
நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.

உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும்,
உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும்.

உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து,
உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்.

அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்;
பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்.

தேவனே, என்னை இரட்சிக்கும் தேவனே,
இரத்தப்பழிகளுக்கு என்னை நீங்கலாக்கிவிடும்;
அப்பொழுது என் நாவு உம்முடைய நீதியைக் கெம்பீரமாய்ப்பாடும்.

ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தருளும்;
அப்பொழுது என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்.

பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்;
தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல.

தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்;
தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.

சீயோனுக்கு உமது பிரியத்தின்படி நன்மைசெய்யும்;
எருசலேமின் மதில்களைக் கட்டுவீராக.

அப்பொழுது தகனபலியும் சர்வாங்க தகனபலியுமாகிய நீதியின் பலிகளில் பிரியப்படுவீர்;
அப்பொழுது உமது பீடத்தின்மேல் காளைகளைப் பலியிடுவார்கள்.

R2024

# அப்சலோமின் கலகம்
## 2 சாமுயேல் 15:1-12

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக. - யாத்திராகமம் 20:12

அப்சலோமின் கலகம்பற்றின இந்தப் பதிவில், சிந்திக்கிற மனங்களுக்கு அநேக முக்கியமான பாடங்கள் காணப்படுகின்றன. (1) முதலாவதாக, அப்சலோமிடத்தில் பெற்றோரை மதிக்காத பாவம் இருப்பதைக் காண்கின்றோம். பொதுவாகவே முதிர்ந்த வயதுடையவர்களின் அனுபவங்களுக்கும், ஞானத்துக்கும் செவிகொடுத்தல் என்பது இளமைப்பருவத்திற்குப் பாதுகாப்பாய்க் காணப்படும்; அதுவும் விசேஷமாக பெற்றோருடைய அனுபவமும், ஞானமும் (மிகப்) பாதுகாப்பாய்க் காணப்படும்; தங்கள் குமாரர்கள் மற்றும் குமாரத்திகளுடைய நன்மைக்காகவும், இன்னுமாக அனுபவம் காரணமாக அல்லது நேரடியாகப் பார்த்த அனுபவத்தின் காரணமாக தாங்கள் கற்றுக்கொண்டவைகள் மூலம் ஜீவியத்தில் வரும் தீய காரியங்களிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காகவும் வேண்டி, தங்கள் அனுபவங்களையும், ஞானத்தையும் பயன்படுத்துவதற்கு, பெற்றோரின் அன்பு எப்போதும் வாஞ்சிக்கிறதாகவே காணப்படும். அந்தோ பரிதாபம்! வாலிபர்கள் பெரும்பாலும் தேவனால் அருளப்பட்டுள்ள இந்தப் பாதுகாப்பினை அலட்சியம்பண்ணுகின்றனர்; கசப்பான அனுபவங்களின் மூலமாக தங்கள் புத்தியீனத்தைக்குறித்துக் கற்றுக்கொள்கின்றனர். வாலிபப்பருவத்தின் ஆசைகள் அவர்களுக்கு இயல்பாகவே எதிர்காலத்தை மினுமினுக்கிக் காட்டுகின்றது; தீயாய்த் துடிக்கும் துடிப்புடனும், கட்டுப்பாடுகளற்றும், துருதுருவெனவும், தன்னறிவுடனும் இப்பருவத்தின் ஆசைகள் புதுப்புதுத் திட்டங்களுக்குள் பாய்கின்றது; வெற்றி நிச்சயம் என நம்பும் அதன் கனவுகளுக்குள் பாய்கின்றது; ஆனால் போகப்போக ஜீவியத்தின் நிதரிசனமான உண்மைகள் முன், அதன் பிரகாசமான கனவுகள் மங்கிப்போய்விடுகின்றன.

இப்படியாகவே அப்சலோமின் விஷயத்திலும் காணப்பட்டது; இப்படியாகவே, உன் தகப்பனையும், தாயையும் கனம்பண்ணுவாயாக என்ற கர்த்தருடைய கட்டளையையும், பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள் என்று அப்போஸ்தலன் மூலம் சொல்லப்பட்ட வார்த்தைகளையும் அலட்சியம்பண்ணும், ஒவ்வொரு வாலிபனின் விஷயத்திலும் காணப்படும். முதிர்ந்த பருவத்திற்கு இல்லாமல், குழந்தைப் பருவத்திற்கே பொருந்தக்கூடிய, கீழ்ப்படிந்திருக்க வேண்டும் எனும் கடமையைத் தாண்டி, பெற்றோரைக் கனப்படுத்துவதற்குரிய கடமை காணப்படுகின்றது. பெற்றோரைக் கனப்படுத்தும் காரியமானது, தொட்டில் முதல் கல்லறைவரை தொடர்கின்றது; பெற்றோரின் மரித்த சடலங்களுக்குக் காண்பிக்கப்படும் இறுதி கனங்களையும் தாண்டி, அவர்கள் நம் நினைவுகளின் காப்பகங்களில் கனத்திற்குரிய ஸ்தானத்தில் காணப்பட வேண்டும். முதிர்ந்தவர்களுக்கு, அதிலும் விசேஷமாக வயது முதிர்ந்தவர்களுக்கு முன்னுரிமையையும், மதிப்பையும் கொடுப்பதைவிட, வேறு எதுவும் வாலிபப்பருவத்திற்கு அழகு சேர்ப்பதில்லை. நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து, முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம்பண்ணுவாயாக. (லேவியராகமம் 19:32)

(2) தன் தகப்பனுடைய தேவனை அவமதிக்கும் பாவத்தினையும் நாம் அப்சலோமில் காண்கின்றோம்; இது இவரது தகப்பன்மீது அன்பும், நம்பிக்கையும் இல்லாத காரணத்தினுடைய இயல்பான

விளைவுகளேயாகும். அரசாட்சி கர்த்தருடையது என்றும், தமக்குச் சித்தமானவனை அவர் சிங்காசனத்தில் அமர்த்துகின்றார் என்றுமுள்ள உண்மைகளை அப்சலோம் முற்றிலும் பொருட்படுத்தவில்லை; இதினிமித்தம் இவரது தந்தையாம் *தாவீதிற்கு எதிராக மாத்திரமல்லாமல்*, தாவீதை இராஜாவாக அபிஷேகித்தவரும், தாவீதின் சிங்காசனத்தை ஸ்திரப்படுத்துவதாகவும், இவரது வாரிசு சிங்காசனத்தில் தொடர்வார்கள் என்பதாகவும், இவரது சத்துருக்கள் யாவரையும் கீழ்ப்படுத்துவதாகவும் வாக்களித்தவருமான *தேவனுக்கு எதிராகவும்*, அப்சலோமின் வாலிபப்பருவத்திற்குரிய ஆசைகள் திட்டங்களைத் தீட்டியது. அப்சலோம் தன்னுடைய கலகத்தில், தன் தகப்பனாகிய தாவீதிற்கு மாத்திரமல்லாமல், சர்வ வல்லமையுள்ள யேகோவாவிற்கும் எதிராக சூழ்ச்சிசெய்து வெற்றியடைய விருதாவாக எண்ணங்கொண்டார். இது எத்துணை வீண்பெருமை! எத்துணை மதியீனம்! எத்துணை கண்மூடித்தனமான புத்தியீனம்! எனினும் எத்தனைபேர் இந்த மதியீனத்தைத் திரும்பத்திரும்பச் செய்திருக்கின்றனர்! மனுப்புத்திரரில் சிலர் சர்வவல்லவருக்கு எதிராக, தங்கள் மாம்ச கரத்தை உயர்த்தினபோது, அந்தக் கரம் எத்தனை அற்பமான தூசிபோன்று இருந்தது என்பதைக் கண்டிருக்கின்றனர்.

(3) அரசியல் சூழ்ச்சி, எப்படி ஜனங்களுடைய இருதயங்களைக் கொள்ளைகொண்டது என்பதையும், கட்டுப்பாடு பலத்து, ஜனங்கள் அப்சலோமினிடத்தில் திரளாய் வந்து கூடினார்கள் எனும் அளவுக்கு அப்சலோமைத் தற்காலிகமாக எப்படிச் செழித்தோங்கப் பண்ணிற்று என்பதையும் நாம் காண்கின்றோம் (2 சாமுயேல் 15:12). ஆனால் சதித்திட்டத்தில் இந்த வாலிபன் அடியெடுத்து வைத்த ஒவ்வொரு வெற்றியின் படியும், இவர் இறுதியில் எந்த உயரத்திலிருந்து கீழே விழவேண்டுமோ, அந்த உயரத்திற்கு இவரை நெருங்கிப்போக மாத்திரம் செய்தது. இப்படியாகவே ஒவ்வொரு தீமையான காரியங்களிலும் அடையப்படும் தற்காலிகமான வெற்றிகளின் விஷயத்திலும் காணப்படும்; எந்த அளவுக்கு உச்சம் அடையப்படுகின்றதோ, அது இறுதி நாசத்தின் வீரியத்தை அதிகப்படுத்துகின்றதாக இருக்கும். இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கப்படும்போது, வழிதவறி நடக்கிறவனுக்கு, உண்மையான நண்பனாய் இருப்பவன் (அவனை நேசிப்பதால், அவனுடைய நலனுக்காக அவனை) உறுதியாயும், ஞானமாயும், திட்டமிட்டு எதிர்ப்புத் தெரிவிக்கின்றவனாகவும் காணப்பட வேண்டும்; முகஸ்துதியோ அல்லது அரசியல் தந்திரங்களோ உண்மையான நண்பன் விஷயத்தில் வேலைசெய்யாது. இம்மாதிரியான நட்புகளானது, இருதயத்தை அறிகிறவனாலே தவிர, மற்றபடி அபூர்வமாகவே உணர்ந்துகொள்ளப்படுகின்றது; ஒருவேளை (நட்பு) உணரப்படுமானால், இது சில சமயங்களில் பாவியை அவன் வழியிலுள்ள பிழைகளினின்று திருப்பி, ஆத்துமாவை மரணத்திலிருந்து இரட்சிக்கின்றது. இம்மாதிரியான ஊழியங்களை **ஆற்றவேண்டுமானால்,** அதுவும் விசேஷமாக நித்திய ஜீவனுக்கான பரீட்சையிலும், நமது பரம அழைப்பிற்குரிய பந்தயப்பொருளுக்கான ஓட்டப்பந்தயத்திலும், இப்பொழுது கிறிஸ்துவின் சரீரத்தினுடைய வருங்கால உடன் அங்கத்தினர்களென ஓடிக்கொண்டிருப்பவர்கள் வழிவிலகிப்போய், தேவனுடைய கிருபையில் தவறிப்போகாதபடிக்கு, இவர்கள் விஷயத்தில் ஒருவன் ஏதேனும் *பிரயாசங்கள் ஏறெடுக்க வேண்டுமானால்*, அவனுக்கு மகா தெளிந்தபுத்தியும், பொறுமையும், விசுவாசமும், நம்பிக்கையும், அன்பும் எவ்வளவு அவசியமாகக் காணப்படும்!

(4) நாம் தீமையின் படிப்படியான முன்னேற்றத்தினைக் கவனிக்கின்றோம் - அதாவது தகப்பனுக்கு நன்றியில்லாமலும், தகப்பனைக் கனப்படுத்தாமலும் இருக்கும் பாவம் எப்படி, (பதவி ஆசை) பேராசைகொள்வதற்கும், தேவனை எதிர்க்கும் நிலைக்கும் முன்னேறினது என்று கவனிக்கின்றோம்;

இன்னுமாக இது எவ்வாறு மனசாட்சியற்ற அரசியல் சதியாலோசனைபண்ணவும், போலியாய்ப் புகழ்ச்சிபண்ணவும், பொய்ப்பேசவும் வழிநடத்தினது என்றும், இறுதியில் இராஜாவுக்கும், தேவனுக்கும் துரோகம் புரியும் துணிகரமான, பொல்லாத திட்டத்தைத் தீட்ட வழிநடத்தினது என்றும் கவனிக்கின்றோம். இவைகள் எல்லாவற்றிலும் அப்சலோம், விழுகைக்கு முன்னதான அந்த அகந்தையின் ஆவியினை அபிவிருத்திப்பண்ணிக்கொண்டிருந்தார்.

அப்சலோமின் வாழ்க்கையினையும், அதில் வாலிபர்களுக்குக் காணப்படும் படிப்பினைகளையும் நாம் கவனிக்கையில், பெற்றோர்கள் செவிசாய்ப்பதற்கு நலமான, ஒரு ஞானமான குறிப்புக்கூடக் காணப்படுகின்றது. தாவீது தன் பிள்ளைகள் விஷயத்தில் காண்பித்த முன்மாதிரி, பிழையற்ற ஒன்றல்ல; இவரது வாலிபப்பருவத்தின்போதும், பிந்தைய காலங்களிலும் இவர் செய்த பாவங்கள் மிகவும் விரும்பத்தகாத பலன் ஒன்றைக் கொண்டுவந்தது. தாவீது தனக்கு அதிகமான மனைவிகளைக் கொண்டதில் மாத்திரம் தேவனுடைய பிரமாணத்தை மீறினவராகக் காணப்படாமல் (உபாகமம் 17:14-17), இவர் சில புறஜாதி ஸ்திரீகளை மனைவியாக்கிக்கொண்டதிலும் கூடுதலாய் மீறுதலுக்குட்பட்டார்; அப்சலோமின் தாயார், சீரியாவின் கேசூர் தேசத்து இராஜாவாகிய தல்மாய் எனும் புறஜாதி இராஜாவின் மகளாவார்; அநேக மனைவிகளைக்கொண்ட தாவீதிற்குப் பிறந்த பிள்ளைகள், தங்கள் தகப்பனுக்குத் தூரமாக, தங்கள் பல தாய்மார்களுடன் வாழ்ந்தபடியால், தகப்பனுடைய வளர்ப்பும்/செல்வாக்கும், பராமரிப்பும் இல்லாத நிலையில் வளர்ந்தார்கள்; இதன் காரணமாக அப்சலோம் ஒரு புறஜாதி தாயினுடைய செல்வாக்கில் வளர்க்கப்பட்டவராகவும், உண்மையான தேவனுக்குக் காண்பிக்க வேண்டிய பயபக்தி அல்லது மரியாதையினைக் காண்பிக்க கற்றுக்கொடுக்கப்படாதவராகவுமே வளர்க்கப்பட்டார் என்று பார்க்கின்றோம்.

அப்சலோம் தன் சகோதரனாகிய அம்னோனை எந்தப் பாவத்திற்காகக் கொன்றுபோட்டாரோ, அந்தப் பாவம் தண்டிக்கப்பட வேண்டிய பாவமேயாகும்; எனினும் தாவீது உரியாவின் மனைவியோடு பாவம் செய்திருந்தபடியால், அவரால் எப்படித் தண்டனை வழங்க முடியும்? சந்தேகத்திற்கிடமின்றி, அம்னோனின் இந்தக் குற்றம் தாவீதிற்குத் துக்கத்தையும், கண்ணீர்களையும், கடந்த காலத்தின் கசப்பான நினைவுகளையும் கொண்டுவந்திருக்க வேண்டும்; இவைகளெல்லாம் தனக்கான தண்டனையின் ஒரு பாகமெனத் தாவீது அடையாளம் கண்டுகொண்டார்; எனினும் (கடந்த காலத்தில் நடந்த) தன்னுடைய சொந்த மதியீனத்தை இவர் நினைவுகூர்ந்தபோது, இவரால் குற்றவாளியினைத் தண்டிக்க முடியவில்லை.

அம்னோனைக் கொன்றுபோட்டதில், அப்சலோமின் கோபத்தோடுகூடச் சுயநலமான இலட்சியங்கள் அல்லது தனிப்பட்ட பகைகள் . . . இதுபோன்ற என்ன நோக்கங்கள் கலந்து காணப்பட்டாலும், அப்சலோம் தன் சகோதரிக்கு எதிராகச் செய்யப்பட்ட குற்றத்திற்கு, அதற்குப் பிரமாணத்தில் பரிந்துரைக்கப்பட்டிருந்த மரணதண்டனையைக் கொடுத்து, நீதியான பழிவாங்குதலையே செய்தவராகக் காணப்பட்டார். தன் பிள்ளைகள் அனைவரையும் அன்புகூர்ந்தவராகக் காணப்பட்ட தாவீதிற்கு இது கடுமையான அடியாகக் காணப்பட்டது; தாவீதின் கோபத்திற்கு அஞ்சினவராக அப்சலோம் தன் தாத்தாவிடம் ஓடி தஞ்சம் புகுந்தார்; அங்கு இவர் மூன்று வருடங்களாக, தகப்பனால் அழைத்தனுப்பப்படாமலும், அந்தப் புறஜாதி தேசத்தினுடைய செல்வாக்கின்கீழும் காணப்பட்டார்; அங்கு இவர் சாதகமற்ற சூழ்நிலைகளின்கீழ்க் கட்டுப்பாடற்றவராகவே காணப்பட்டார்; மேலும் தனக்குச் சூழ்நிலைகள் அனுகூலமாய் மாறியுள்ளது என்று சொல்வதற்குரிய எந்த அறிகுறிகள் இல்லாமலும், தனது சகோதரிக்காக தான் பழிவாங்கினபோது, நியாயப்பிரமாணம் விதித்திருந்த தண்டனைத் தீர்ப்பையே தான் நிறைவேற்றியிருக்கின்றபடியால், தனக்கு அநியாயம் நிகழ்ந்துள்ளதாக

வருத்தப்பட்டுக்கொண்டும் அப்சலோம் அங்குக் காணப்பட்டார் (உபாகமம் 27:22; லேவியராகமம் 20:17); இன்னுமாக இவர் தன் துர்ப்பாக்கியங்களைக்குறித்து ஆழ்ந்து யோசித்தவராகவும், தன் தகப்பனுடைய தப்பிதங்கள் மற்றும் பெலவீனங்கள் அனைத்தையும் மிகைப்படுத்திப் பார்த்தவராகவும் காணப்பட்டபடியால், கலகத்தின் ஆவி இவருக்குள் பலப்பட்டதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை; அதுவும் தன் மீதான தகப்பனுடைய அக்கறை எதையும் தகப்பன் வெளிப்படுத்தாமல் இருக்கையில், தன் தகப்பனுடைய இருதயத்தின் பாசங்களை இவரால் எப்படி அறிந்துகொள்ள முடியும்? மூன்று வருடங்களுக்குப் பின்னர், இவர் நாட்டிற்குத் திரும்ப அனுமதிக்கப்பட்டபோதும், தனது தகப்பனுடைய முகத்தைப் பார்க்கவோ அல்லது இரண்டு வருடங்களுக்கும் அதிகமாகத் தன் தகப்பன் தன்னைத் தொடர்ந்து அன்புகூர்ந்துகொண்டிருந்தார் என்பதை அறிந்துகொள்ளவோ இவர் அனுமதிக்கப்படவில்லை.

தன் தகப்பன் தன்னை அன்புகூருகிறதில்லை என்றும், தன் நலனுக்கடுத்தவைகள்மீது அக்கறைக்கொண்டிருக்கவில்லை என்றுமுள்ள அப்சலோமின் எண்ணங்களை, இந்த ஐந்து வருடங்களின் அனுபவங்களானது அப்சலோமின் மனதில் உறுதிப்படுத்தினது என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை; இந்த எண்ணங்கள் இவர் இருதயத்தில் ஓடிக்கொண்டிருக்க, தாவீதின் இராஜ அதிகாரத்தை எதிர்க்க ஆயத்தமானார்; மேலும் தனது வாலிபப்பருவத்திற்கே உரிய வேகத்தில், தனது இளமைக்குரிய அகங்காரத்தில், தன்னில் இப்பொழுது மேலோங்கிக் காணப்படும் பேராசையில், இவர் கண்மூடித்தனமாக திவ்விய அதிகாரத்தைப் புறக்கணித்தார்.

தன் குமாரன் விஷயத்திலுள்ள தாவீதின் இந்த நடக்கையானது, தாவீதின் சார்பிலுள்ள மிகப்பெரிய தவறாய்க் காணப்படுகின்றது; இதை அவர் உணர்ந்துகொண்டபோது, இதைச் சரிசெய்ய முடியாதளவுக்குக் காலம் சென்றுவிட்டது. இக்காரியமானது இவரது துக்கத்தை மிகவும் அதிகமாக்கியது என்பது இவர் கசந்து அழுது புலம்பின பின்வரும் வார்த்தைகளில் வெளிப்படுகின்றது: என் மகனாகிய அப்சலோமே, என் மகனே, என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப் பதிலாகச் செத்தேனானால் நலமாயிருக்கும்; அப்சலோமே, என் மகனே, என் மகனே, என்று சொல்லி அழுதான் (2 சாமுயேல் 18:33). ஐந்து வருடக்காலங்களாகத் தனது உருக்கமான உணர்வுகளை/பாசத்தைத் தனது சுபாவத்தினுடைய கடினமான பாகங்கள் மறைக்கத்தக்கதாக, தாவீது அனுமதித்துவிட்டார்; இது மாத்திரமல்லாமல், இந்தக் காலப்பகுதிகளெல்லாம் தன் குமாரன்மீது தேவபக்திக்கு ஏதுவான செல்வாக்கை செலுத்துவதற்குரிய தனது வாய்ப்புகளைப் புறக்கணித்தவராகவும் தாவீது காணப்பட்டார்; அதுவும் அச்செல்வாக்கு தன் குமாரனுக்கு மிகவும் தேவைப்பட்ட காலங்களில், அதைச் செலுத்தும் வாய்ப்பைத் தாவீது புறக்கணித்து, அப்சலோம் புறஜாதி தேசத்தின் செல்வாக்குகளினால் சூழப்படும்படிக்கு விட்டுவிட்டார். தாவீதின் இந்த உள்கோபத்தின் நிமித்தம், தனக்கு அருமையாயிருந்த குமாரனை இவர் இழக்க நேர்ந்தார்; மேலும் இவரது குமாரனுடைய மேலான நன்மைகளின் அடிப்படையில் பார்க்கும்போது, தாவீது இப்படி நடந்துகொண்டது நிச்சயமாகவே பரிதாபத்திற்குரிய விஷயமாகும். எனினும் தாவீதின் இதே தவறானது, எத்தனைதரம் தகப்பன்மார்களினால் திரும்பத்திரும்பச் செய்யப்படுகின்றது! அநேகர் வாலிபப்பருவத்திற்கே உரிய சோதனைகளையும், பரீட்சைகளையும், அனுபவமின்மைகளையும் மறந்துபோனவர்களாகக் காணப்பட்டு, தங்கள் வாலிபப்பிள்ளைகளுடைய மேலான நலனுக்காக அன்போடும், பரிவோடும்/அன்பாதரவோடும், பொறுமையோடும், அக்கறையோடும் காணப்படத் தவறிவிடுகின்றனர். அன்பு, பெருந்தன்மை மற்றும் சுயநலமற்ற அக்கறை ஆகியவற்றால் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள்மீது வைக்கும் அன்பானது, பிள்ளை

ஆண்மகனாக வளர்ந்த பிறகு, நீண்ட காலத்திற்குப் பின்னும் அவனைத் தொடரும். பெற்றோர் அதிகாரம் செலுத்தும் வயது தாண்டி, நீண்ட காலத்திற்குப் பின்னும், பெற்றோரின் ஆலோசனை மிகவும் சக்திவாய்ந்ததாக இருக்கும்.

இளம் பறவைகள் (இளைஞர்கள்) வீடாகிய கூட்டை விட்டுப்போய்த், தங்கள் சொந்தச் சிறகுகளைப் பயன்படுத்தவும், தங்கள் வாய்ப்புகளைப் பயன்படுத்தவும் முயற்சிக்கையில் காணப்படும் ஆபத்துக்களைவிட, ஜீவியத்தில் வேறெந்த ஒரு காலகட்டங்களிலும் ஆபத்துக்கள் அதிகமாய் இருப்பதில்லை. மேலும் இவர்கள் தகப்பனுடைய மற்றும் தாயுடைய ஆசீர்வாதத்துடன் கடந்து செல்வார்களானால் . . . ஒருவேளை அன்பற்ற, கொடுமையான உலகத்திடமிருந்துவரும் ஒவ்வொரு இன்னல்களிலும், ஏமாற்றங்களிலும் குடும்பத்தின் அனுதாபங்களும், ஜெபங்களும், அன்புடன்கூடிய ஊக்குவித்தல்களும் இருக்குமானால் . . . ஒருவேளை திடீர் ஆபத்துகளில், தகப்பனுடைய வீடு புகலிடமாக உணரப்படுமானால் . . . ஒருவேளை வெளி உலக அனுபவங்களின் கடுமையான அடிகளை ஈடுசெய்யும் அன்புடன்கூடிய அமைதியினை, இல்லத்தில் உணர்வார்களானால் . . . நன்மைக்கேதுவான எத்தகையதொரு செல்வாக்கு/ஆற்றல் இங்குக் காணப்படும். தனது பிள்ளைகளை ஆசீர்வதிப்பதற்குரிய தன் ஸ்தானத்திற்கடுத்த சிலாக்கியங்களைக் கைவிடும் அளவுக்குக் கௌரவம் பார்க்கும் ஒரு மனுஷன் அல்லது உணர்ச்சிகளைக் கொஞ்சமும் வெளிப்படுத்தாமல் இருக்கும் ஒரு மனுஷன், நிச்சயமாகவே ஞானமுள்ள தகப்பனல்ல.

ஒருவேளை அன்பும், அன்பாதரவும், அன்புடன்கூடிய ஆலோசனையும், பரிவும் பாராட்டப் பட்டிருந்தால், தன் குமாரன் இரட்சிக்கப்பட்டிருப்பானே என்று தாவீது, தன் குமாரன் விஷயத்தில் கசந்து அழுத நிலைமை தங்களுக்கும் வராதபடிக்கு, பெற்றோர்கள் இந்தப் பாடத்திற்கு நன்கு செவிகொடுப்பார்களாக; அன்பு (உள்ளுக்குள்) காணப்படுவது மாத்திரமல்லாமல், அன்பு வெளியரங்கமாய் வெளிப்படுத்தவும்பட வேண்டும் என்பதை ஜீவியத்தின் அனைத்துக் கட்டங்களிலும் நாம் பார்த்துக்கொள்வோமாக.

7-ஆம் வசனத்தில் இடம்பெறும் நாற்பது எனும் வார்த்தை நான்கு என்பதாகக் காணப்பட வேண்டும். இது பார்த்து எழுதியவரின் பிழை என்று நம்பப்படுகின்றது.

R3261

## அப்சலோமின் வெட்கக்கேடான துரோகம்
### 2 சாமுயேல் 15:1-12

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக. - யாத்திராகமம் 20:12

தாவீது இராஜாவினுடைய வாழ்க்கையின் இறுதி காலங்களில் தொடர்ந்து மிகச் சோதனையான அனுபவங்கள் காணப்பட்டன; எனினும் இவைகள் கர்த்தருடைய அருள்மிகு பராமரிப்பின் காரணமாக, இவரது இருதயமும், குணலட்சணமும் முதிர்ச்சியடைவதற்கு வழிநடத்தினது; மேலும் இவரது இந்த முதிர்ச்சியானது, இவரது கடைசி காலங்களில் இவரால் எழுதப்பட்ட சங்கீதங்களில் வெளிப்படுகின்றது. இந்தப் பயங்கரமான அனுபவங்கள், இவர் பாவம் செய்த நாள் முதற்கொண்டு துவங்கின; இன்னுமாக இவைகள் அந்தப் பாவத்திற்கான தண்டனையாக விளங்கும்படிக்கு ஓரளவுக்குப் பயன்படுத்தவும் பட்டுள்ளன. அப்சலோமுடைய கலகத்தின் சம்பவத்தைப் பார்க்கையில், இதற்கான சந்தர்ப்ப சூழல்கள்

தாவீதின் அந்தப் பாவங்கள் சம்பவிப்பதற்கு முன்பே துவங்கியுள்ளதற்கான சுவடுகளை நாம் கவனிக்கின்றபோதிலும், அப்சலோமின் வஞ்சகமான திட்டங்கள் வெற்றி பெறுவதைத் தடுப்பதன் மூலம் இராஜாவைப் பாதுகாப்பது என்பது முழுவதும் கர்த்தருடைய வல்லமைக்கு முடிந்திருக்கக்கூடிய ஒரு காரியமேயாகும் என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். தாவீதின் பாவங்கள் சம்பவிப்பதற்கு முன்புள்ள அந்தச் செல்வாக்கின் சுவடுகள் என்று நாம் சொல்பவைகள் மத்தியில், யூத பெண்மணியாக இல்லாமல், அந்நிய ஸ்திரீயாகவும், புறஜாதி இராஜாவுக்கு மகளாகவும் காணப்பட்ட அப்சலோமின் தாயாரை தாவீது மணந்த காரியமும் உள்ளடங்குகின்றது. தம்முடைய ஜனங்கள் அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளோடே பிணைக்கப்படக்கூடாது என்று கர்த்தருடைய ஆலோசனைக் காணப்படுகின்றது; மேலும் இந்த ஆலோசனை ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு இன்னமும் பொருந்துகின்றதுபோல, நிழலான இஸ்ரயேலர்களுக்கும்கூடப் பொருந்துகின்றது. இந்த விஷயத்திலுள்ள திவ்விய ஞானத்தை அலட்சியம்பண்ணுவது என்பது நிச்சயமாகவே ஏதோ ஒரு காலகட்டத்தில், ஏதோ சில விதங்களில் அனுகூலமற்ற பலன்களைக் கொணரும். இப்படியாக அவிசுவாசிகளோடு பண்ணப்படும் திருமணத்தில் பிறக்கும் பிள்ளைகள் நிச்சயமாகவே, அவிசுவாசியான அந்தப் பெற்றோரின் குணங்கள் மற்றும் பண்புகளில் சிலவற்றைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்; இவைகள் காலப்போக்கில் வெளியரங்கமாகும். இதற்கான உதாரணத்தை நாம் அப்சலோமின் சம்பவத்தில் காண்கின்றோம். எதையும் செய்வதற்குத் தயக்கம் காண்பிக்காத இலட்சியத்துடன், இவரது செருக்கும், அடங்காத்தன்மையும், இணங்காத்தன்மையும் கைக்கோர்த்து சென்றன. இந்த இவரது இலட்சியமானது, இவருக்கும் சிங்காசனத்திற்கும் இடையில் நின்ற ஒன்றுவிட்ட உடன்பிறந்த சகோதரனைக் கொன்றுபோட்டது; பின்னர் ஒரு காலத்தில் தன் தகப்பனுடைய சிங்காசனத்தைப் பறிக்கவும், தன் தகப்பனைக் கொன்றுபோடவும், அந்த இலட்சியம் இவரை வழிநடத்தினது என்று பார்க்கின்றோம்.

தகப்பனைக் கனப்படுத்தாத விஷயத்திற்கும், வாலிபப்பருவத்தில் அறுப்புண்டுபோனதற்கும், அப்சலோம் சிறந்த உதாரணமாய் விளங்குகின்றார். ஒரு மகனாக இவர் செய்யக்கூடாத முறைதவறின நடக்கைப்பற்றின சம்பவம் இப்பாடத்தில் கூறப்பட்டுள்ளது. கோபத்தில், இவர் தன் ஒன்றுவிட்ட உடன்பிறந்த சகோதரனைக் கொன்றுபோட்டதின் நிமித்தம், இவர் தன் தகப்பனுடைய எல்லைகளை விட்டு ஓடிப்போய், (தன் தாத்தாவாகிய) இராஜாவின் நாட்டில் மூன்று வருடங்கள் புகலிடம் அடைந்தார். அரசாங்க அதிகாரிகளின் சூழ்ச்சிகளினாலும், இன்னுமாக இவர்மேல் தொடர்ந்து இவரது தகப்பனுக்கு அன்பு காணப்பட்டபடியாலும், இவர் தன் சொந்த நாட்டிற்குத் திரும்புவதற்கும், இறுதியாக ஒரு பட்டத்து இளவரசனுக்குரிய சிலாக்கியங்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்வதற்கும் அனுமதிக்கப்பட்டார். இந்த ஒரு காலகட்டத்தில்தான், நம்முடைய பாடம் துவங்குகின்றது. சௌந்தரியத்திற்குப் பெயர் பெற்றவராகக் காணப்பட்ட இந்த இளைஞன், தன் தாத்தாவின் அரசவையில் காணப்பட்ட ஒரு வழக்கத்தை அறிமுகப்படுத்தினார்; இப்பழக்கம் இன்னமும் எகிப்தில் நிலவிவருகின்றது; அதாவது இது இளவரசன் விசேஷித்த இரதத்தையும், ஐம்பது பயிற்சிப்பெற்ற புருஷர்கள் உள்ள மெய்க்காவலர்களையும் பெற்றிருக்கும் பழக்கமாகும். தாவீது இராஜா தன் குமாரன் மீது மிகவும் அன்புகொண்டிருந்தபடியால், இவ்விஷயங்களில் தன் குமாரனுடைய இஷ்டப்படி அவர் காணப்படுவதற்கு விட்டுவிட்டார் என்பதாகத் தெரிகின்றது. தங்கள் இளவரசனுடைய ஆடம்பரத்தின் இந்தக் காட்சிகளில் ஜனங்களும் மயங்கிக் கிடந்தனர். இன்னொரு பக்கத்தில் வயதாகிப் போய்க்கொண்டிருந்த இராஜாவினிடத்தில் பல வருடங்களாக அதிகமான, அதேசமயம் தெளிவான மாற்றங்கள் காணப்பட்டு வந்தன; முன்பெல்லாம் இருந்ததுபோல இராஜா ஜனங்கள் மத்தியில் வருகிறதில்லை.

தனது பகட்டான நடத்தையில் ஜனங்கள் கவரப்பட்டுள்ளனர் என்பதை வீண்பெருமை கொண்டிருந்த இந்த இளவரசன் கண்டுகொண்டான்; இராஜ்யபாரம் பண்ணுவதற்குரிய வாரிசாக, தன் இளைய சகோதரனாகிய சாலொமோனைத் தாவீது தெரிவுசெய்து வைத்திருக்கின்றார் என்பதையும் அப்சலோம் அநேகமாகக் கேள்விப்பட்டிருக்க வேண்டும்; மேலும் தனது தகப்பனுடைய இராஜ கனங்களை அடைய வேண்டும் என்ற தனது விருப்பத்தினை வெளிப்படுத்த வேண்டும் என்று முடிவெடுத்தார். இவரது திட்டம்

தந்திரமானதாகக் காணப்பட்டது; ஜனங்களுடைய இருதயங்களைத் தன் தகப்பனிடமிருந்து, தன் பக்கமாகத் திருப்பிக் கொள்ளையிடவேண்டும் என்று முடிவெடுத்தார். மகனுக்குரிய பாசம் எதுவும் இவரிடம் இல்லை; இவரது நடவடிக்கையில் சுயநலமான இலட்சியம் மட்டுமே வெளிப்பட்டது. தன்னுடைய குற்றத்திற்கான தண்டனையிலிருந்து தன்னைப் பாதுகாத்த தனது தகப்பனுடைய பாசத்தை/செல்லத்தைப் பயன்படுத்தி, தன் தகப்பனுடைய செல்வாக்கை வலுவற்றதாக்கத் திட்டமிட்டார். ஒருவேளை தீமைக்குத் தீமை செய்வதே தவறாக இருக்குமானால், நன்மைக்குத் தீமைசெய்வது என்பது, அதுவும் தகப்பனுக்கு அல்லது நண்பனுக்கு அல்லது வேறு யாருக்கேனும் இப்படிச் செய்வது என்பது கேடுகெட்ட குற்றமாகவே நிச்சயமாகக் காணப்படும்.

அந்த நாட்களில் இராஜா, உச்சநீதிமன்றம் போன்று செயல்பட்டார்; ஆகையால் வழக்கமான நீதிபதிகள் முன்னிலையில் திருப்திகரமான தீர்ப்பைப் பெறாத வழக்குகள், இராஜாவினிடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. ஜனங்கள் பலத்தபோது, இந்த மேல்முறையீடு வழக்குகளும் அதிகமதிகமாகப் பெருகியது. சந்தேகத்திற்கிடமின்றி இராஜா வயதாகிக்கொண்டிருந்ததினாலும், சங்கீதங்களை எழுதுதல் போன்ற ஆன்மீகக் காரியங்களில் மிகுந்த கவனம் செலுத்திக்கொண்டிருந்ததினாலும், இவைகள் இவரது அரசவை பணிகளைக் கொஞ்சம் குறுக்கிட்டது. அப்சலோம் இவைகளையெல்லாம் கவனித்து வைத்து, இவைகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார். யாருக்கெல்லாம் மேல்முறையீடு வழக்குகள் இருந்ததோ, மேலும் யாருடைய வழக்குகளெல்லாம் தாமதிக்கப்பட்டதோ, அந்த நபர்களை அப்சலோம் போய்ச்சந்தித்து, அவர்களுக்கு அனுதாபத்தைத் தெரிவித்தார்; இன்னுமாக ஒருவேளை தான் அவர்கள் வழக்கிற்கு நீதிபதியாகக் காணப்பட்டிருந்தால், நியாயம் உடனடியாகக் கிடைத்திருந்திருக்கும் என்று கூறினார்; இப்படியாகத் தான் கூறுவதைக் கேட்டுக்கொண்டிருப்பவர்களின் வழக்குகளில், தான் நியாயம் இருப்பதைப் பார்ப்பதாகவும், ஒருவேளை தன்னுடைய தீர்ப்பின் நிமித்தம் திருப்தியடைவார்கள் என்பதாகவும் மறைமுகமாகத் தெரிவித்தார். தேசத்தின் ஜனங்களிடமிருந்து வணக்கத்தை ஓர் இளவரசன் பெற்றுக்கொள்வது என்பது அந்நாட்களின் ஒழுங்காகக் காணப்பட்டது; தன்னிடம் இல்லாத அன்பையும், தாழ்மையினையும் கொண்டிருப்பதாக இவர் பாசாங்கு செய்தவராக, இந்த ஜனங்களை இவர் தன் கையை நீட்டி, தழுவி முத்தஞ்செய்தார். இராஜ வம்சத்தினரின் முத்தம் கிடைப்பது என்பது பெருமையடித்துக் கொள்ளக்கூடிய ஒரு காரியமேயாகும். ஓர் இளவரசனின் உறவையும், பாசத்தையும் பெற்றிருப்பது என்பது அநேகருடைய நிதானத்தை தடுமாறப்பண்ணி, இவருக்குக் கீழ்ப்படியும் சேவகராகும்படிக்கு அவர்களைப் பிணைத்தது.

இந்த நடத்தையானது, மகன் செய்யக்கூடாத காரியமாகவும், தன் தகப்பனைக் கனவீனப்படுத்தும் காரியமாகவும் மாத்திரம் காணப்படாமல், எந்த ஓர் இராஜாவுக்கும் துரோகமாகவும், எந்த ஓர் உபகாரியையும் இழிவுபடுத்துவதாகவும் காணப்பட்டது. இங்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் "stole" எனும் வார்த்தையானது (கவர்ந்து/கொள்ளை) மிகவும் பலமான வார்த்தையே ஆகும். இவர் ஜனங்களுடைய இருதயங்களைக் கொள்ளைக்கொண்ட காரியமானது, சின்ன திருட்டல்ல, மாறாக ஒருவேளை பணத்தை அல்லது வணிக சரக்குகளை இவர் கொள்ளையடித்திருந்தால், இவர் அடித்திருக்கும் கொள்ளையைவிட மிகப்பெரிய திருட்டாகக் காணப்பட்டது. இங்குக் காணப்படும் ஒழுக்கநெறி சார்ந்த கருத்தொன்று, நம்முடைய நாட்களிலுள்ள அநேகரால் மங்கலாகவே கிரகிக்கப்பட்டுள்ளது. அநேகர் மற்றவர்களுடைய அன்பைத் திருட விருப்பமாயிருக்கின்றனர் என்றும், தங்களுடைய ஆதாயத்திற்காக மற்றவர்களைத் திரித்துக்கூறி தவறாக முத்திரைக் குத்திவிடுகின்றனர் என்றும் நாம் நம்பும் கட்டாயத்திற்குள்ளாக்கப்படும் நிலைமை காணப்படுகின்றது என்பதை நினைத்து வருந்துகின்றோம். இம்மாதிரியான மாம்சத்தின் இயல்புகளுக்கு எதிராக, புதுச்சிருஷ்டியாகிய கர்த்தருடைய ஜனங்கள் தொடர்ந்து விழிப்புடன் காணப்பட வேண்டும்; ஏனெனில் புதிய மனதினால் எளிதில் கண்டுபிடிக்க முடியாதளவுக்கு, மாம்சம் அதன் உண்மையான குணத்தை மறைத்துப்போடும். பொன்னான பிரமாணமானது பரிசுத்தவான்களினால், அன்றாட ஜீவியத்தின்

காரியங்கள் அனைத்திலும் செயல்முறைப்படுத்தப்பட வேண்டும். இது ஒரு பாதுகாப்பான பிரமாணமாகும்; மேலும் இதை இலவசமாய்ப் பயன்படுத்துகின்றவர்களும், இதற்குக் கீழ்ப்படிகின்றவர்களும் ஆவியின் கனிகளில் நிச்சயமாகவே வளருவார்கள்; இந்த ஆவியின் கனிகள் அனைத்தும், ஒரே மாபெரும் அன்பின் ஆவியிலிருந்து வரும் கிளைகளாகக் காணப்படுகின்றன.

தன் தகப்பனுக்கு விரோதமான இந்தச் சதித்திட்டமானது, அப்சலோம் நாடு கடத்தப்பட்ட நிலையினின்று திரும்பின உடனே அல்லது இவர் தன் தகப்பனுடைய ஐக்கியத்திற்குள்ளும், இளவரசன் ஸ்தானத்திற்கும் முழுமையாய் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடனே துவங்கினதாகக் கருதப்படலாம். இரண்டாவதாகச் சொல்லப்பட்ட சம்பவத்தின்போது துவங்கியிருக்கும் என்றால், இது நான்கு வருடங்களாக நடைபெற்றுக்கொண்டு வந்திருக்கின்றது; ஒருவேளை முதலாவதாகச் சொல்லப்பட்ட சம்பவத்தின்போது துவங்கியிருக்கும் என்றால், ஆறு வருடங்களாக இந்தத் திட்டம் நடைபெற்றுக் கொண்டுவந்திருக்கின்றது என்று சொல்லலாம். மேலும் இக்காரியங்களை நடைமுறைப்படுத்துவதற்குச் சூழ்நிலைகள் ஏற்றதாகக் காணப்படுகின்றது என்று இவர் கண்டபோது, இராஜாவுக்கு அல்லது மற்றவர்களுக்குச் சந்தேகம் வராதபடிக்கு, தான் பல வருடங்களுக்கு முன்பு செய்த பொருத்தனையின்படி, கர்த்தருக்கு மாபெரும் பலி ஒன்றைச் செலுத்தத்தக்கதாக, எபிரோன் போவதற்காக இராஜாவிடம் அனுமதி கேட்டுக்கொண்டார்; மேலும் தன்னோடுகூடச் சேனையிலுள்ள பிரதான மனுஷர்களையும், பட்டணத்திலுள்ள பிரதான மனுஷர்களையும் கூட்டிச் செல்லும் அளவுக்கு, அந்தத் தருணத்தை, மிகவும் முக்கியமான தருணமாகக் காண்பித்துக்கொண்டார்; இதினிமித்தம் பிரதானமான மனுஷர்களை இப்படி அழைத்துச்செல்வது என்பது வழக்கத்திற்கு மாறான ஒன்றாகக் கருதப்படாமல், இராஜாவுக்குக் குமாரன் மூலம் செலுத்தப்படும் கனமாகப் பார்க்கப்பட்டது.

இதற்கிடையில் வேவுகாரர்கள் பன்னிரண்டு கோத்திரங்களுக்குள்ளும் அனுப்பிவைக்கப் பட்டனர்; மேலும் பல்வேறு இடங்களில் எக்காளம் ஊதுபவர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர்; ஆகையால் ஏற்றவேளை வருகையில், அப்சலோம் தன்னை எபிரோனில் வைத்து இராஜா என்று பிரகடனப்படுத்தும்போது, எக்காள சத்தம் கேட்க, பன்னிரண்டு கோத்திரப்பகுதிகள் முழுவதிலும் நிறுத்தப்பட்டிருக்கும் எக்காளம் ஊதுபவர்களும், உடனே ஒன்று சேர எக்காளம் ஊத வேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தது; பின்னர் அப்சலோமுக்காக இரகசியமாக நிறுத்தப்பட்டிருந்த வேவுகாரர்களும், எக்காளம் ஊதுபவர்களும், அப்சலோம் இப்பொழுது இராஜாவாகியிருக்கின்றார் என்று ஜனங்களுக்கு விளக்க வேண்டியவர்களாய் இருந்தார்கள். அப்சலோம் போலியான சாந்தத்துடன் காணப்பட்டதின் நிமித்தம், இவரில் கவரப்பட்டுக்கொண்டிருந்த ஜனங்கள், இப்படியாகக் காரியங்களைப் பார்க்கையில், புரட்சி முழுமையடைந்துவிட்டது என்றும், இராஜாவாகிய தாவீது நிச்சயமாகவே முற்றிலும் முறியடிக்கப்பட்டுவிட்டார் என்றும், புதிய இராஜாவிற்குத் தங்கள் உண்மையினை உடனடியாக வெளிப்படுத்துவதன் மூலமே, தங்களுக்குத் தனிப்பட்ட ஆதாயங்கள் கிடைக்கும் என்றும் எண்ணினார்கள். காரியம் வெற்றிகரமாய் நடைபெற்றது; இதன் விளைவாக முழுத்தேசமும் ஒரே நாளில் அப்சலோமிடத்திற்குத் திரும்பியது.

எருசலேமிலிருந்து எபிரோனுக்குச் சென்றவர்களில் சிலர், தாங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனர் என்பதை முற்றிலும் அறியாதவர்களாகக் காணப்பட்டனர்; எனினும் அப்சலோம் தொடர்புடைய விஷயத்தில் செல்வாக்குமிக்க இவர்களின் பெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ள காரியம், பொது ஜனங்கள் விஷயத்தில் அதன் தாக்கத்தை ஏற்படுத்தியது; இன்னுமாக இவர்கள் அப்சலோமோடு இருக்கின்றபடியாலும், அவருடைய நண்பர்களென அவரது தயவைப் பெற்றவர்களாக இருக்கின்றபடியாலும், இவர்களது எதிர்காலம் அப்சலோமின் இரக்கத்தில் காணப்பட்டபடியாலும்,

அப்சலோமின் காரியங்களுடன் தங்களை இணைத்துக்கொண்டால், எல்லாவற்றையும் ஆதாயப்படுத்திக்கொள்ளலாம், ஒருவேளை மறுப்பு தெரிவித்தால், எல்லாவற்றையும் இழக்க நேரிடலாம் எனும் நிலைமையில் காணப்பட்டனர்.

சதித்திட்டமானது எதிர்பார்த்ததைவிட மிகுந்த வெற்றியினை அடைந்தது. உண்மையில் முழுத்தேசமும் அப்சலோமுக்குத் தங்கள் விசுவாசத்தினைக் காண்பித்தனர்; மிகவும் வெளிப்படையாகவும், பகிரங்கமாகவும் இவர்கள் இப்படிச் செய்ததால், அப்சலோம் தோற்கடிக்கப்பட்டு, மரித்துப்போனபோது, அனைத்துக் கோத்திரங்களுக்குரிய அரசாங்க தலைமையகத்திற்கு இராஜாவாகிய தாவீது திரும்பும்படிக்கு வெளிப்படையாக வேண்டுகோள் விடுக்க வேண்டியிருந்தது. தேசத்தின் செழிப்பிற்குப் பெரும் பங்காற்றிய இவ்வளவு முக்கியமான இராஜாவின் விலையேறப்பெற்ற சேவைகளை, ஒரு தேசம் இவ்வளவு சீக்கிரம் மறந்துபோனதைக்குறித்து நாம் ஒருவேளை ஆச்சரியப்படுவோமானால், இராஜாவின் பாவ அறிக்கையினை இன்று தேவனுடைய பரிசுத்தவான்கள் நோக்கிப்பார்ப்பதுபோன்று, அன்றுள்ள பொதுஜனங்கள் பார்க்கவில்லை என்பதை நினைவில்கொள்வோமாக. சந்தேகத்திற்கிடமின்றி சிலர் அவரைக் கொஞ்சம் புரிந்துகொண்டவர் களாகக் காணப்பட்டனர்; எனினும் இவர் வெள்ளை இறகுகளைக் காண்பித்ததின் நிமித்தமாக, அநேகர் இவரை அசட்டைபண்ணினார்கள்; இன்னுமாக இவரை அநேகர் கிழம் மாய்மாலக்காரனாக கருதிட எண்ணங்கொண்டார்கள். அந்தப் பதினொரு வருடங்கள் இவர் தன்னைத் தனிமைப்படுத்தி ஒதுங்கிக்கொண்டிருந்ததும், ஆலயம் கட்டுவதற்காக இவர் பொருட்களைச் சேகரித்துக் கொண்டிருந்ததும், அநேகமாக இதற்கு இவர் ஜனங்கள்மீது வரி விதித்திருந்ததும் - இவைகள் அனைத்தும் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கப்பட்டிருக்கலாம்; இவை மக்கள் வெறுக்கும் நபராக இவரை ஆக்கியிருக்கலாம். கர்த்தருடைய ஜனங்களின் நடத்தைகளும், வார்த்தைகளும், நோக்கங்களும் மிகச் சிறப்பானவைகளாக இருக்கின்றபோதிலும், இவர்கள் உலகத்தாரால் தவறாய்ப் புரிந்துகொள்ளப்படுவது என்பது இவர்கள் அனைவருக்குமான பாக்கியமாகக் காணப்படுகின்றது. அப்படியானால் நாம் எப்படிப்பட்ட நடக்கையுள்ளவர்களாய் இருக்க வேண்டும்! மேலும் பொல்லாங்காய்த் தோன்றும் எல்லாவற்றையும் விட்டு விலக வேண்டும்!

இங்கும்கூடத் தம் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் வண்ணமாக, தேவன் எப்படி உலகத்தின் காரியங்களை, யாருடைய சுயாதீனத்தையும் குறுக்கிடாமல், நிர்வகிக்க முடிகின்றவராய் இருக்கின்றார் என்பதற்குரிய உதாரணத்தைப் பெற்றிருக்கின்றோம். ஒருவேளை தாவீது (முன்பு) பாவஞ்செய்யாமல் காணப்பட்டாலும், அதற்குத் தண்டனைகள் தெரிவிக்கப்படாமல் இருந்திருந்தாலும், அப்சலோம் இதே பொல்லாங்கான திட்டத்தை இராஜ்யபாரத்தின் விஷயத்தில் தீட்டியிருந்திருப்பார் - தன் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இதே பிரயாசங்களை ஏறெடுக்கவும் செய்திருப்பார்; ஆனாலும் இக்காரியம் இப்படியொரு உச்சகட்ட வெற்றினை அடைய, கர்த்தர் அனுமதித்திருந்திருக்கமாட்டார். இதற்கான உதாரணத்தினை, அப்சலோமின் இளைய சகோதரன் அரியணையைக் கைப்பற்றுவதற்கு முயற்சி எடுத்த அடுத்த சம்பவத்தில் காணலாம். இவரும் அப்சலோமைப்போன்று அநேக முயற்சிகளில் முன்னேறினார்; இவருக்கும் மிகவும் சாதகமான சூழ்நிலைகள் காணப்பட்டன; இவருடைய காலகட்டத்தில் இராஜாவாகிய தாவீது வயது சென்றவராகப் பெலவீனத்தோடு காணப்பட்டார்; இராஜாவினால் தனிப்பட்ட விதத்தில் இராஜ்யபாரத்தினுடைய நலனுக்கடுத்த காரியங்களில் பங்கெடுக்கவும் முடியவில்லை அல்லது போர்க்களத்திற்கும் செல்லமுடியவில்லை. எனினும் ஏற்றவேளையில் கர்த்தர் காரியத்தைத் தாவீதின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்; இதன் காரணமாக கலகம் சம்பவிப்பதற்கு முன்னதாக, அது முளையிலேயே கிள்ளிவிடப்பட்டது; அதோனியாவிற்குப் பதிலாக சாலொமோன் இராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டார்.

இப்படியாகவே கர்த்தருடைய ஜனங்களின் விஷயத்தில் இன்று காணப்படுகின்றது. சத்தியத்தின் நலனுக்கடுத்தக் காரியங்களை அச்சுறுத்தும் சதித்திட்டங்கள் எழும்பலாம்; ஆனால் கர்த்தர் தலைவராக இருக்கின்றார்; மேலும் ஞானமாயிருக்கும் என்று தம்முடைய கணிப்பு கருதுபவைகளுக்கு அப்பால் செல்வதற்கு, அவர் இந்தத் திட்டங்களை அனுமதிப்பதில்லை; அதாவது கர்த்தருக்கு மகிமையினை உண்டுபண்ணும் அளவிலும், தம் திட்டத்தை நிறைவேற்றும் அளவிலும், தம்முடைய ஜனங்களுக்கு அறிவுரையாகவும், பயிற்சியாகவும் காணப்படத்தக்கதாகவும், தம் நோக்கங்களுக்கு இருதயத்தில் சத்துருக்களாக இருப்பவர்களைப் புடைத்தெடுக்கத்தக்கதாகவும் மட்டுமே இந்தச் சதித்திட்டங்கள் முன்னேற அனுமதிப்பார். இதிலுள்ள நமக்கான பொதுப்படையான பாடம், நாம் மகா இராஜாதி இராஜாவிலும், கர்த்தாதி கர்த்தரிலும் நம்பிக்கைக்கொண்டிருத்தல் பற்றியதாகும்; இன்னுமாக அவருக்கு முழுக்கீழ்ப்படிதல் காண்பித்தல் மற்றும் அவரது அரசாட்சியின் கொள்கைகளுக்கு உண்மையாய் இருத்தல் பற்றிய பாடங்களைப் பெற்றுக்கொள்கின்றோம்; தேவனுடைய உண்மையான இஸ்ரயேலர் அனைவரையும், பொதுவான மனுக்குலத்தையும் நாம் கையாளுகையில், அன்பின் பிரமாணம் கைக்கொள்ளப்பட வேண்டும் என்ற பாடத்தையும் பெற்றுக்கொள்கின்றோம். நமக்குப் பாதகமாய்த் தோன்றுபவைகளை, நம்முடைய நித்திய நன்மைக்கேதுவானவைகளாக மாற்றுவதற்கும், தம் ஜனங்களுக்கும் மற்றும் தம் நோக்கங்களுக்கும் பாதகம்செய்ய முயற்சிப்பவர்களுக்கு, அவைகளைப் பேரழிவிற்கேதுவானவைகளாக மாற்றுவதற்கும் கர்த்தர் விருப்பமும், வல்லமையுமுள்ளவராக இருக்கின்றார்.

ஆதார வசனத்திற்குரிய உதாரணம் நம்முடைய இந்தப் பாடத்தில் நன்கு விளங்குகின்றது. அவமதிக்கின்ற, நன்றியற்ற, கீழ்ப்படியாத குமாரனாகிய அப்சலோம் - சுயநலமானவராக, பேராசைக்காரனாகக் காணப்பட்ட அப்சலோம், வாலிபப்பருவத்திலேயே பழிப்புக்கிடமான முடிவை அடைந்தார்; இது இவர் போன்றவர்களுக்குப் பாடத்தைப் புகட்டுகின்றது. இன்னொரு பக்கத்தில் சாலொமோனாகிய சமாதானமுள்ள குமாரன், நல்ல மற்றும் ஞானமுள்ள குமாரன் இராஜ்யபாரத்தை அடைந்தார்; இன்னுமாக இதைத் தன் தகப்பனுடைய ஆசீர்வாதம் மற்றும் திவ்விய தயவோடுகூட அடைந்தார்.

R4275

## பெருமை, நன்றியின்மை, மாய்மாலம், கலகம்

### 2 சாமுயேல் 15:1-12

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக. - யாத்திராகமம் 20:12

இழிவானவர்களின் ஜீவியத்திலிருந்தும், உயர்பண்புடையவர்களின் ஜீவியத்திலிருந்தும் படிப்பினைகள் பெற்றுக்கொள்ளப்படலாம். கவிஞன் கூறுவதுபோன்று:-

மாமனிதர்களின் வாழ்வு எங்களுக்கு நினைவூட்டுவதெல்லாம்,
நாமும் நம் வாழ்வுதனை உன்னதமானதொன்றாய் ஆக்கிடலாம் என்றே;
நாமும் வாழ்க்கை ஓட்டம்தனை நிறைவுசெய்கையில்,
விட்டுச்சென்றிடலாமே நம் அடிச்சுவடுகளை, காலம் எனும் மணல் மீதினிலே!

இப்படியாகக் காரியம் காணப்படுவதினால், பொல்லாங்கு செய்பவர்கள் ஜீவியத்தின் பாதையில் எடுத்து வைக்கும் அடிச்சுவடுகளிலும் நமக்குப் படிப்பினைகள் காணப்படுகின்றது என்பது

நிச்சயமே; இவை, எந்தப் பாதைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதையும், எவைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதையும், எந்த ஆசைகள் அடக்கப்பட வேண்டும் என்பதையும் நமக்குச் சுட்டிக்காண்பிக்கின்றது. திவ்விய வார்த்தைகளினுடைய இப்படிப்பட்ட அறிவுரைகளை நாம் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு முன்பாக, உயர் பிரமாணங்கள் மூலமாகவும், ஆலோசனைகள் மூலமாகவும், நீதிக்கும், சத்தியத்திற்கும் வீரமுள்ள பக்தியை வெளிப்படுத்தினவர்களின் உதாரணங்கள் மூலமாகவும் மாத்திரமல்லாமல், தீய நடக்கையுள்ளவர்களின் உதாரணங்கள் மூலமாகவும்கூட முன்வைக்கின்றோம். நம்முடைய இந்தப் பாடம் தீயோரிடமிருந்து வரும் படிப்பினை வகையாகக் காணப்படுகின்றது. இராஜாவாகிய தாவீதின் குமாரனாகிய அப்சலோம், இந்தப் பாடத்தின் காலகட்டத்தில் அநேகமாக முப்பது வயதை உடையவராகக் காணப்பட்டிருக்க வேண்டும். இவரது தந்தை கர்த்தரால் அபிஷேகிக்கப்பட்ட இராஜாவாகவும், இவரது தாயார் ஓர் அண்டை நாட்டு இராஜாவின் மகளாகவும் காணப்பட்டனர்; அப்சலோம் இளவரசனுக்கே உரிய பண்புகளையும், பழக்கங்களையும் சுதந்தரித்திருந்தபடியாலும், மிகவும் சௌந்தரியமாகக் காணப்பட்டபடியாலும், இவர் இஸ்ரயேலின் பெருமைக்கான மையமானார். இஸ்ரயேலர் அனைவருக்குள்ளும் அப்சலோமைப்போல் சவுந்தரியமுள்ளவனும் மெச்சிக்கொள்ளப்பட்டவனும் இல்லை; உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அவனில் ஒரு பழுதும் இல்லாதிருந்தது (2 சாமுயேல் 14:25). இவரது தலைமயிர் இன்றும் ஒரு பழமொழியாகக் காணப்படுகின்றது.

இயற்கையாகவே அதிகம் அனுகூலம் பெற்றவர்கள், இன்னுமாக தோற்றத்தில் அல்லது மனதின் இயல்புகளில் அருமையான நிலையினை அருளப்பெற்றவர்கள், குறைவான தாலந்தும், குறைவான அழகையும் பெற்றிருப்பவர்களைக்காட்டிலும் மிகுந்த சோதனைக்குள்ளாகுவார்கள். இந்தப் பெலவீனத்தின் நிமித்தமாக, இவர்கள் பெருமையும், அகம்பாவமும் கொள்வதற்கு ஏதுவாயிருக்கின்றனர்; மேலும் இவைகளுக்குப் பேராசையும் உதவிகரம் நீட்டுகின்றது. அப்சலோமையும், அவரது அழகையும், இராஜ்யபாரத்தில் காணப்பட்ட அவரது உயர் ஸ்தானத்தையும் குறித்துச் சிந்தித்துப்பார்க்கையில், நாம் லூசிப்பரைக்குறித்தும், அவரைக்குறித்து வேதவாக்கியங் களில் தெரிவிக்கப்பட்டுள்ள மகிமையான விவரங்களைக்குறித்தும், அதாவது அவரது உயர் ஸ்தானம், கனம், அவரது பெருமை, பேராசை/இலட்சியம் மற்றும் இவைகள் வழிநடத்தின வீழ்ச்சிக்குறித்தும் நினைப்பூட்டப்படுகின்றோம். இந்த இரண்டு கதாபாத்திரங்களும், இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்படும்போது, இன்றுள்ள ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய நாம் பிரபுக்களாகவும், மகா இராஜாவாகிய நமது பிதாவினால் மிகுந்த தயைபாராட்டப்பட்டவர்களாகவும், நமது நீதிமானாக்கப்படுதலின் வாயிலாக நமக்குக் கடந்துவரும் அழகு மற்றும் பூரணத்தினால் பெரிதாய் ஆசீர்வதிக்கப்பெற்றவர்களாகவும், மகிமை, கனம் மற்றும் அழியாமையில் நமக்கு முன்வைக்கப்பட்டுள்ள மகிமையான நம்பிக்கையினால் மிகுதியாய்க் கனப்படுத்தப்பட்டவர்களாகவும் காணப்படுகின்றோம் என்பதை உணர்ந்துகொள்ளும் அனைவரின் இருதயங்களிலும், இந்த உணர்ந்துகொள்ளுதல் ஒருவகை பயத்தைக் கொண்டுவர வேண்டும்.

அப்சலோம் மற்றும் லூசிபரின் விஷயத்தில் காணப்பட்டதுபோலவே, ஒருவேளை இந்த ஆசீர்வாதங்களும், இரக்கங்களும், தயவுகளும் நம்மிடத்தில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தி, நம்மை இறுதியில் அழிவிற்குக்கொண்டு செல்லுமானால், நாம் என்ன செய்வது? இந்த எண்ணமே

நம்மை அச்சுறுத்துகின்றபடியால், அப்போஸ்தலனின் பின்வரும் வார்த்தைகள் நமக்கு நினைப்பூட்டப்படுகின்றது. உண்மையின்மையின் காரணமாக, நேர்மையின்மையின் காரணமாக, விசுவாசமின்மையின் காரணமாக, தாழ்மையின்மையின் காரணமாக, (நமது மீட்பரோடு உடன்சுதந்தரர்களாகுவதற்குரிய) அவரது இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்கு உண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம். (எபிரெயர் 4:1)

## சகோதரர்களைக் கொலைசெய்பவன்

தாவீதின் மூத்தகுமாரன் அம்னோன் என்பதும், இவர் தனக்கு ஒன்றுவிட்ட உடன்பிறந்த சகோதரியும், அப்சலோமின் உடன்பிறந்த சகோதரியுமாகிய தாமாரைத் தீட்டுப்படுத்தினார் என்பதும் நமக்குத் தெரியும். இராஜாவாகிய தாவீதோ இக்காரியத்தில் மிகவும் வருத்தத்திற்குள்ளானார்; மேலும் இந்தக் குற்றத்திற்கு எந்த வகை தண்டனை சரியாகக் காணப்படும் என்பது தொடர்புடைய விஷயத்தில் இராஜா தடுமாறிக் காணப்பட்டபடியால், தண்டனை எதுவும் அளிக்கப்படாமலேயே இரண்டு வருடங்கள் கடந்துபோய்விட்டதாகத் தெரிகின்றது. பின்னர் அப்சலோம், தானாகவே தன் சகோதரிக்காகப் பழிவாங்கும் செயலைச் செய்ய முற்பட்டார். இவர் ஒரு விருந்தை ஆயத்தப்படுத்தி, இராஜாவின் அநேக மனைவிகளுக்குப் பிறந்த அவரது பிள்ளைகள் அனைவரையும் அழைத்துக்கொண்டார். விருந்து உச்ச நிலையில் காணப்படுகையில், குடும்பத்தினரிடம் நடந்துகொள்ள வேண்டிய முறைகளுக்கும், காட்டப்பட வேண்டிய குடும்பப்பாசங்களுக்கும் முரணாக, அப்சலோம் தன் சகோதரனைக் கொன்றுபோட்டார்; பின்னர் தன் தகப்பனாகிய இராஜாவின்கீழ் வழங்கப்படுவதும் மற்றும் இவரில் மையங்கொண்டுள்ளதுமான நீதிக்கு அஞ்சினவராகத் தப்பி ஓடினார். இந்த அனுபவத்தில் நமக்கு என்ன பாடம் காணப்படுகின்றது? நாம் எதைப் பின்பற்ற வேண்டும்? எதைத் தவிர்க்க வேண்டும்? ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய நாம் அனைவரும், நீதிபதியாகிய மகா இராஜாவின் பிரபுக்களாகவும், குமாரர்களாகவும் காணப்படுகின்றோம். நீதி வழங்குவதற்குரிய அதிகாரமும், பொறுப்பும் நம்முடைய இலட்சியமாகக் காணப்படாமல், இவைகள் பிதாவின் காரியமாக இருக்கின்றது என்பதே நமக்கான பாடமாய்க் காணப்படுகின்றது.

வேதவாக்கியங்கள் தெரிவிப்பதுபோன்று, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் (உரோமர் 12:19). (நமக்குச் சரியென்று படுகிற காலம்வரை நாம் காத்திருந்து) நாம் பொறுக்கும்வரைப் பொறுத்துக்கொண்டு, திவ்விய தண்டனை அருளப்படாமல் இருப்பதைக் காண்கையில், இனிமேலும் பொறுத்துக்கொள்ள முடியாது என்று எண்ணி, காரியங்களை நம் சொந்தக் கரங்களில் எடுத்துக்கொண்டு, ஒருவரையொருவர் கொலை செய்யக்கூடாது. நமது மாபெரும் போதகரின் கட்டளை பின்வருமாறு காணப்படுகின்றது: நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன் (யோவான் 13:34). நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் ஆண்டவரின் வார்த்தைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரனை நோக்கி: சகோதரனே, நான் உன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல்வதெப்படி? மாயக்காரனே, முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு, பின்பு

உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துபோட வகைபார்ப்பாய் (லூக்கா 6:42). ஒருவன் நின்றாலும், விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே அவன் உத்தரவாதி. (உரோமர் 14:4).

இந்த ஒப்புமையானது, கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் சொல்லர்த்தமான கொலைகள் நடக்கும் என்பதைச் சுட்டிக்காட்டுவதில்லை. இப்படி இல்லாததற்காக, தேவனுக்கு நன்றி! இப்படிக் கொலை செய்வதை நடைமுறைப்படுத்தாதபடிக்கு, உலகம் இன்று மிகவும் நாகரிகமடைந்துக் காணப்படுகின்றது; எனினும் எங்கு அப்சலோமின் ஆவி காணப்படுகின்றதோ, அங்குப் பகைமை, கோபம், பொறாமை, கசப்பு மற்றும் சண்டையின் ஆவியும் காணப்படும். கொலைசெய்வதற்கு ஒரு நவீன முறைமை காணப்படுகின்றது, அது தூஷணமான வார்த்தைகளைப் பயன்படுத்துவதன் மூலமும், மறைமுகமாகக் குற்றஞ்சாட்டுவதன் மூலமும், அசட்டைபண்ணுவதன் மூலமும் கொலை செய்வதாகும். மேலும் இந்த நாகரிகமான கொலையானது, இராஜரிக குடும்பத்தில், அதாவது பரலோக சகோதரத்துவத்தில் சேரப்போகின்ற அங்கத்தினர்கள் மத்தியில் அடிக்கடி செய்யப்படுகின்றது. இது எத்தனை பயங்கரம் என்று நாம் சொல்கின்றோமா? இத்தகைய இரத்தப்பழி, இத்தகைய மாம்சம் மற்றும் பிசாசுகளின் கிரியைகள் நம்மிடத்தில் காணப்படாதபடிக்கு எச்சரிக்கையாக இருப்போமாக; இல்லையேல் நாம் ஒருபோதும் இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.

## நன்றிகெட்ட குமாரன் - துரோகி

சீரியாவிலுள்ள கேசூரின் இராஜாவாகிய தல்மாய் எனும் தனது தாத்தாவின் அரசவையில், அப்சலோம் மூன்று வருடங்களாகக் காணப்பட்டார். தன் மூத்த சகோதரனைக் கொன்றுபோட்டதின் நிமித்தம், அப்சலோம் இஸ்ரயேலுடைய சிங்காசனத்தின் அடுத்த வாரிசு எனும் நிலைக்குத் தன்னை முன் வரப்பண்ணினார்; அப்சலோம் நீதிக்காகவும், கொள்கைக்காகவும் வேண்டி கொலை செய்ததுபோன்று காண்பித்துக்கொண்டாலும், (அரியணைக்கு நெருங்க வேண்டும் என்ற) மேற்கூறப்பட்ட காரணமே, இவர் குற்றம் புரிவதற்குப் பின்னாக இருந்த நோக்கமாக இருந்திருக்க வேண்டும். அந்தோ! மனித இருதயமானது எத்தனை திருக்குள்ளதாகக் காணப்படுகின்றது! எத்தனை தரம் நம் இருதயங்கள் இரட்டை நோக்கங்களுடன் செயல்படுவதை நாம் கண்டிருக்கின்றோம்! அதேசமயம் தேவனுடைய பிள்ளைகளெனப் பிதாவின் வார்த்தைகளை முழுமையாய்ப் பின்பற்றுபவர்களாகவும், விளைவுகள் அனைத்தையும் அவரிடத்திலேயே விட்டுவிடுகின்றவர் களாகவும் காணப்படுகின்றவர்களின் அனுகூலங்களையும் நாம் கண்டிருக்கின்றோம். இப்படியாக இத்தகையவர்கள் தேவனுடைய வல்லமையிலும், தேவனுடைய நீதியிலும் தங்கள் விசுவாசத்தினை வைப்பதாகக் காண்பிக்கின்றனர்; இப்படியாக இவர்கள் அப்போஸ்தலன் சுட்டிக்காண்பிப்பதுபோன்று பரத்திலிருந்து வரும் ஞானத்தினுடைய பரிசுத்த ஆவியின் பங்காளிகளெனத் தாங்கள் ஆகியுள்ளதை வெளிப்படுத்துகின்றனர்; இந்தப் பரத்திலிருந்து வரும் ஞானம் முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும், சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும் காணப்படுகின்றது; இது கர்த்தருடைய காரியங்களை, அவர் கரத்திலேயே விட்டுவிட்டு, அவர் பார்த்துக்கொள்வார் என்று முழுமையாய் விசுவாசிக்கும் ஞானத்தின் ஆவியாகக் காணப்படுகின்றது. இதுவே உண்மையில் தெளிந்த புத்தியுள்ள மனதின் ஆவியாகும். இராஜரிக ஆவிக்குரிய குடும்பத்திலுள்ள அருமையான சகோதர சகோதரிகளே, இந்த ஒரு கொள்கையினை நம்முடைய நடவடிக்கைகள் அனைத்திலும் செயல்படுத்துவோமாக; இவ்விதமாய் அதிகப்படியான ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வோமாக.

தான் நாடுகடத்தப்பட்ட இளவரசனாகக் காணப்படுகின்றபடியால், தன் தகப்பன் இறந்தால் தவிர, மற்றபடி இஸ்ரயேலின் இராஜாவாக தான் ஏற்றுக்கொள்ளப்படுவதற்குரிய வாய்ப்புகள் தனக்கு அதிகம் இல்லை என்பதை அப்சலோம் உணர்ந்துகொண்டார். ஆகையால் தன் வழக்கு மிகவும் சாதகமான சூழ்நிலைகள் நிலவும்போது, தன் தகப்பனுடைய கவனத்துக்குக் கொண்டு வரப்படத்தக்கதாக, சூழ்ச்சிக்கரமான திட்டம் ஒன்றைப் போட்டார்; இறுதியில் சொந்தத் தேசத்திற்குத் திரும்புவதற்குரிய ஓர் அழைப்பு அல்லது மன்னிப்பு அல்லது இடைக்கால அனுமதி இவருக்கு வழங்கப்பட்டது. இவரை அன்புகூர்ந்தபோதிலும், இவரது தந்தை தனது அதிருப்தியைத் தொடர்ந்து காண்பித்தவராக, தாறுமாறாய் நடக்கும் தன் குமாரனாகிய இவரைத் தனிப்பட்ட விதத்தில் சந்திப்பதற்கும், உறவாடுவதற்கும் அழைத்தனுப்புவதற்கு இரண்டு வருடங்களாக மறுத்துக்கொண்டிருந்தார். இதற்கிடையில் பேராசைக்கொண்ட இந்தக் கொலைகாரன், தன் காரியங்களைச் சாமர்த்தியமாய் நடைமுறைப்படுத்திக்கொண்டிருந்தார்; இவர் இஸ்ரயேலுடைய புருஷர்களின் இருதயங்களைக் கொள்ளை/கவர்ந்து கொண்டதாக வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன. இவர் தன் தகப்பனாகிய இராஜாவுக்கு எதிராக வெளிப்படையாய்த் துஷ்டத்தனமான திட்டத்தைத் திட்டமிடவில்லை; அவரைப்பற்றி இழிவாயும் பேசவில்லை அல்லது எவ்விதமான எதிர்ப்பையும் வெளிப்படுத்தவில்லை; இப்படி நடந்துகொள்ளாத அளவுக்கு இவர் பூமிக்குரிய ஞானத்தில் மிகுந்த புரிதல் உள்ளவராகவும், மிகவும் கைத்தேர்ந்தவராகவும், மிகவும் புத்திசாலித்தனமாகவும் காணப்பட்டார். அளவுக்கடந்த தாழ்மை கொண்டிருப்பதுபோலவும், நீதிக்காக மிகுந்த வைராக்கியம் கொண்டிருப்பதுபோலவும் இவர் நடிப்பதன் மூலமும், தனது தோற்றத்திற்கு மிகுந்த கவனம் கொடுப்பதன் மூலமும், செல்வாக்குமிக்க ஸ்தானங்களில் காணப்படுபவர்களுக்குக் கவனம் கொடுப்பதன் மூலமும், இவர் ஜனங்களின் இருதயங்களை இராஜாவிடமிருந்து, தன் பக்கமாகக் கவர்ந்துகொண்டார். இவர் இளவரசனுக்கே உரிய வழக்கத்திற்கு மாறாக காலமே எழுந்து, இராஜாவின் வாசலண்டைக்குச் சென்றார்; அங்குச் சிலர் நீதியாயும், சிலர் அநீதியாயும் தங்களுக்கு ஆதரவாக ஒப்பந்தங்களும், தீர்ப்புகளும் கிடைக்குமென்று எதிர்பார்த்து இராஜாவுக்காகக் காத்திருந்தார்கள். சௌந்தரியமுள்ளவராகவும், பகட்டாக உடையணிந்தவராகவும் வந்து நின்ற அப்சலோமை இவர்கள் கண்டபோது, கிழக்கத்திய வழக்கத்தின்படி தரையில் விழுந்து வணக்கம் செலுத்தியபோது, இவர்களை எழுப்பி, இவர்களை அப்சலோம் முத்தமிட்டார்; இன்னுமாக இவர்கள் இப்படித் தன்னை வணங்க வேண்டாம் என்று பாசாங்கான தன்னடக்கத்திலும், அன்பிலும் கூறிக்கொள்வார்; இன்னுமாக தன் ஜனங்களைச் சேவிப்பது என்பது ஓர் இராஜாவின் கடமை என்றும், ஜனங்களுக்கு நியாயம் வழங்குவதும், அவர்கள் வேண்டிக்கொள்வதற்கும் அதிகமானதைச் செய்வதும், தன்னுடைய அதிகாரத்தின்கீழ் இல்லாதபடியினால், இதற்காக தான் வருந்தி மிகவும் துக்கம்கொள்கின்றார் என்றும் கூறினார்.

இப்படியாக இரண்டு வருடக்காலங்களாக மாய்மாலக்காரனும், முகஸ்துதிபண்ணுகிற வனுமான அப்சலோம், கர்த்தரால் அபிஷேகிக்கப்பட்டவராகிய தன் தகப்பன் தாவீதிற்கு உரியதான தேசத்தின் அன்பினையும், உண்மையினையும் தன்னிடமாக இழுத்துக்கொண்டான். (இதில் இவன் பெரும் வெற்றியும் கண்டான்). உண்மையில் இந்த வாலிபன் தன் சொந்தப் புரிந்துகொள்ளுதலின்மீது சாய்ந்தவனாகவும், தேவனாகிய கர்த்தரே அந்தத் தேசத்தின் இராஜா என்பதையும், சிங்காசனத்தில் யார் தம்முடைய பிரதிநிதியாக இருக்க வேண்டும் மற்றும் இருக்கக்கூடாது என்பதை

நிர்ணயிப்பதற்குரிய அதிகாரத்தையும் அவர் மாத்திரமே பெற்றிருக்கின்றார் என்பதையும் இந்த வாலிபன் ஒருவேளை அறிந்திருப்பானாகில், இதை மறந்துபோனவனாக இங்குக் காணப்படுகின்றான்.

## அப்சலோமின் வெளியரங்கமான கலகம்

வசனம் நாற்பது வருஷம் சென்ற பின்பு என்று தெரிவிக்கின்றது; ஆனால் இது copyist/ பிரதி எழுதுபவரின் பிழை என்றும், இது நான்கு வருஷம் சென்ற பின்பு என்பதாகக் காணப்பட வேண்டும் என்றும் வேதமாணாக்கர்கள் ஒத்துக்கொள்கின்றனர்; சில பூர்வகால பிரதிகளில் நான்கு வருஷம் என்றே காணப்படுகின்றது; ஜோசபஸ் அவர்களும் இதை ஒப்புக்கொள்கின்றார். தனது போலித்தனமான தாழ்மையும், தனது சௌந்தர்யமுள்ள தோற்றமும், கனிவான நடத்தையும், ஜனங்கள் மற்றும் நீதிக்காக தான் பெற்றிருப்பதாகக் காண்பித்துக்கொண்ட அன்பும், ஜனங்களுடைய மனங்களில் வெற்றிகரமாக இடம்பிடித்துள்ளதைக்குறித்த நிச்சயத்தை அடைந்த பிற்பாடு, அப்சலோம் தனது அடுத்தக்கட்ட நடவடிக்கைக்கு ஆயத்தமானார்; அதாவது திவ்விய ஏற்பாட்டின்படி நியமிக்கப்பட்டவரும், தேசத்தின் இராஜாவுமான தனது தந்தைக்கு எதிராக வெளிப்படையாகக் கலகம்பண்ணுவதற்கு ஆயத்தமானார். திவ்விய வல்லமைக்கு எதிராகப் போராடுகையில், தன் நிலை என்னவாக இருக்கும் என்று இவர் நிச்சயமாகவே உணர்ந்துகொள்ளவில்லை. தனது மாய்மாலத்தினைத் தொடர்ந்தவராக, எருசலேம் தலைநகரமாக்கப்படுவதற்கு முன்புள்ள காலங்களில் தலைநகரமாகக் காணப்பட்டதும், அண்டை நகரமாகக் காணப்பட்டதுமான எபிரோன் பட்டணத்திற்குச் செல்லும் சிலாக்கியத்தினை அருளும்படியாக, தன் தகப்பனிடத்தில் வேண்டிக்கொண்டார்.

ஒரு பொருத்தனையை நிறைவேற்றும்படிக்கு, பலிசெலுத்த விரும்புவதாகத் தெரிவித்தார். இவரது இருதயம் கர்த்தருக்கு வெகுதொலைவில் இருந்தபோதிலும், இவர் மிகவும் தாழ்மையாகவும், மிகவும் தேவபக்தியாகவும் இருப்பதுபோன்று காண்பித்துக்கொண்டார். முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா? (மத்தேயு 7:16). இராஜா வேண்டுகோளுக்கு அனுமதியளித்தார்; எவ்வித சந்தேகமும் தோன்றாதளவுக்கு, எருசலேமிலிருந்து சில பிரதான ஜனங்களையும், குறிப்பிட்ட எண்ணிக்கையிலுள்ள சில ஜனங்களையும் தன்னோடுகூடக் கூட்டிச் செல்வதற்குரிய அனுமதியும், அந்த விண்ணப்பத்தில் இணைத்துக்கேட்கப்பட்டிருந்தது. இந்த வாலிபன் எத்தகையதொரு உலக ஞானத்தைக் கொண்டிருந்திருக்கின்றான்! இவரது போலி தாழ்மை, எத்தனை அவமானத்திற்குரியதாய் இருக்கின்றது! தன் தகப்பனுக்கு இவர் நன்றியற்று இருப்பதும், கொள்கை மற்றும் நீதிக்கடுத்த அனைத்து அம்சங்களிலும் இவர் குறைவுப்பட்டு இருப்பதும் எவ்வளவு வெளிப்படையாகத் தெரிகின்றது! அன்புக்குரிய நண்பர்களே, இம்மாதிரியான விஷயங்களுக்கு அருகாமையிலுள்ள ஏதேனும் காரியம் நம்மில் எவ்வளவேனும் காணப்படுவதையோ அல்லது எவ்வளவேனும் இதற்கொத்த ஏதேனும் விஷயங்கள் நம்முடைய நடக்கையில் காணப்படுவதையோ நாம் காண்போமானால், இது நம்மை அச்சத்திற்குள்ளாக்க வேண்டும்; இவைகள் நிமித்தம் நாம் அதட்டுதலுக்குள்ளாக வேண்டும்; மூட்டப்பட்ட இத்தகைய தீயானது அவித்துப்போடப்பட வேண்டும்.

இந்தச் சதித்திட்டத்திற்குள், தாவீது இராஜாவினால் மிகவும் மதிக்கப்படும் ஆலோசகராகிய அகித்தோபேலும் இழுக்கப்பட்டிருந்தார்; இவர் இம்மாதிரியான ஒரு தருணத்தில் இளவரசனின் நண்பர்களில் ஒருவராக இளவரசனோடு காணப்படுவது என்பது, அப்சலோமின் ஸ்தானத்திற்கும், இவரது

இலட்சியம் நிறைவேறுவதற்கும் மிகுந்த பலமாகக் காணப்பட்டது. வருடக்கணக்காக வஞ்சிக்கப்பட்டிருந்த ஜனங்களில் அநேகர், இந்தச் சதிக்குள் இழுக்கப்பட்டிருந்தனர். இதுவுமல்லாமல் அப்சலோம் பல்வேறு கோத்திரங்கள் எங்கும் மற்றும் தேசத்தின் பல்வேறு பகுதிகளிலும், கவனமாய் மனுஷர்களை நியமித்து வைத்திருந்தார்; இவர்கள் இவரது திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருந்தனர்; அத்திட்டத்திற்கு இவர்கள் முழுமையாய் ஆதரவளித்தவர்களாகவும் காணப்பட்டனர்; இன்னுமாக அப்சலோமுக்கு ஆதரவாக சில விஷயங்களை உருவாக்கிப் பரப்புவதும், இராஜாவுக்கு எதிராக மறைமுகமாக காரியங்களைத் தெரிவிப்பதும், ஒருவேளை அப்சலோம் இராஜாவானால், நல்ல காரியங்கள் நிகழும் எனும் நம்பிக்கைகளை விதைப்பதும் இம்மனுஷர்களுக்குக் கொடுக்கப்பட்ட பணிகளாக இருந்தன; இன்னுமாக மிகவும் தகுதியான இராஜாவை, ஜனங்கள் இப்பொழுது அப்சலோமில் பெற்றுவிட்டனர் என்று இம்மனுஷர்கள் கோத்திரங்களுக்கு வாழ்த்துதல் சொல்லவும், இன்னுமாக எக்காளம் ஊதப்படும்போது, அது அப்சலோம் இராஜா ஸ்தானத்தை அடைய ஆசைப்படுகின்றார் என்று குறிக்காமல், அவர் ஏற்கெனவே இராஜா ஆகிவிட்டார் என்பதைக் குறிக்கின்றது என்று விவரிக்கவும் வேண்டி இம்மனுஷர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

அந்தோ! அப்சலோமைப்போன்ற அநேக நயவஞ்சகமான கதாபாத்திரங்களைச் சரித்திரமானது தெரிவிக்கின்றது. அருமையான நண்பர்களே, நாம் கிறிஸ்துவுக்குள் புதுச்சிருஷ்டிகளாகியுள்ளபோதிலும், நாம் மாம்சத்தின்படி நம்முடையதாகக் காணப்படும் இழிவான, நயவஞ்சகமான பண்புகளுடன் தொடர்ந்து போராட வேண்டும் என்பதை நினைவில்கொள்வோமாக! ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு என்பதையும் நினைவில்கொள்வோமாக (எபேசியர் 6:12); இன்னுமாக, ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் எனும் அப்போஸ்தலனின் வார்த்தைகளையும் நினைவில்கொள்வோமாக. (1 பேதுரு 5:6)

எந்தன் ஆத்துமாவே விழிப்பாய் இரு!
பத்தாயிரம் சத்துருக்கள் சூழ்ந்துள்ளனரே;
பாவத்தின் சேனைகள் உந்தனைப் பரிசினின்று இழுக்க,
உந்தனை நெருங்கிக் கொண்டிருக்கின்றதுவே.

ஓ! விழித்திரு! போராடு! ஜெபி!
யுத்தத்தைக் கைவிடாதே;
ஒவ்வொரு நாளும் புதுபலத்துடன் போராடு,
திவ்விய உதவிதனை நாடு.

இடுக்கமான வழிக்குள் பிரவேசிக்க இருப்பவர்களுக்கு அல்லது அதில் பிரவேசித்திருப்பவர்களுக்கு, இன்னுமாக அதில் ஏற்கெனவே கொஞ்சம் காலமாகக் காணப்படுகின்றவர்களுக்கு, முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள் என்ற ஆலோசனை கடந்துவருகின்றது (எபிரெயர் 12:13). நாம் அனைவரும் மாம்சத்தின்படி முடமானவர்களாகக் காணப்படுகின்றோம்; சிலர் அதிகமாகவும் சிலர் குறைவாகவும் முடமாகிக் காணப்படுகின்றோம்; எனினும்

நாம் அனைவருமே பரம பாதையைக் கவனிக்க வேண்டியவர்களாகவும், இன்னுமாக மனுக்குலத்திற்கும், விசுவாசத்திற்கும் பெருமையும், பேராசையும் மாபெரும் சத்துருக்களாய் இருக்கின்றன என்று கண்டு கவனமாய் நடக்கிறவர்களாகவும் காணப்படுவது அவசியம். இங்கு "Pilgrim's Progress" எனும் புத்தகத்தில் இடம்பெறும் கதைகளில் ஒன்றினைக்குறித்து நாம் நினைப்பூட்டப்படுகின்றோம்; அது பின்வருமாறு: கிறிஸ்தவனும், விசுவாசியும், இராட்சதனாகிய மனக்கசப்பு எனும் சிறைசாலையிலிருந்துத் தப்பி, பரலோக நகரத்திற்குக் கொண்டுசெல்லும் பெரும்பாதைக்குத் திரும்புகையில், தங்களை வழிவிலகிப்போகச் செய்த அந்தக் கிளைவழியாகிய புல்வெளி வாசலில் ஒரு பலகையை நாட்டி வைத்தார்கள்; அந்தப் பலகையில் பின்வரும் வார்த்தைகளை எழுதினார்கள்: அதோ அந்த இடமே சந்தேகம் எனும் அரண்மனைக்குச் செல்லும் வழியாகும்; அந்த அரண்மனை, இராட்சதனாகிய மனக்கசப்பு எனும் அதிகாரியினுடைய கட்டுப்பாட்டின்கீழ்க் காணப்படுகின்றது. இந்த அதிகாரி பரலோக நகரத்தின் இராஜாவை வெறுக்கின்றார்; மேலும் அவருடைய பரிசுத்த யாத்திரிகர்களை அழிக்கவே, இந்த அதிகாரி நாடுகின்றார் என்பதேயாகும்.

இடுக்கமான வழியிலிருந்தும், தேவனில் முழுமையாய் நம்பிக்கை வைக்கும் நிலையிலிருந்தும், தேவனுடைய வல்லமை மற்றும் அவரது ஞானம் மற்றும் அவரது சத்தியத்தின்மீது சாய்வதிலிருந்தும் நம்மை வெளியே இழுப்பதற்கு, அநேக நூற்றாண்டுகள் காலமாக நாடிக்கொண்டிருக்கும் இராட்சதன், சாத்தானே ஆவார்; மேற்கூறப்பட்ட வழிகள் மூலமாக மாத்திரமே நாம் இராஜ்யத்தின் சுதந்தரர்களாகிட முடியும்.

## நம்முடைய ஆதார வசனம்

பூமிக்குரிய பெற்றோர்களைக் கனம்பண்ணுவது தகுதியான காரியம் என்பதை நாம் முழுமையாய் ***ஒப்புக்கொண்டும்,*** இதற்குக் கீழ்ப்படிபவர்களை ஆசீர்வதிப்பார் என்ற கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை நாம் ***மதித்தும்*** காணப்படுகையில், மகா நித்திய இராஜா, அதாவது சிருஷ்டிகர் நம்மைத் தம்முடைய குடும்பத்திற்குள் தத்தெடுத்திருக்கின்றார் என்பதையும், நாம் அவரை அப்பா பிதாவே என்று அழைக்கத்தக்கதாக நமக்குப் புத்திரசுவிகாரத்தின் ஆவியினைக் கொடுத்திருக்கின்றார் என்பதையும் மனதில் வைத்துக்கொள்வோமாக. நாம் திவ்விய சுபாவத்தில் பங்காளிகளாகத்தக்கதாகவும், நமது பரலோக சகோதரனாகிய இயேசுவில், அவரது ஆயிர வருட இராஜ்யத்தில் பங்காளிகளாகத்தக்கதாகவும், நமக்கு மகாமேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களை கொடுத்திருக்கின்றார். அவரை நாம் எவ்வளவாகக் கனம்பண்ணிட வேண்டும்! பரலோகத்திலிருக்கும் நம்முடைய பிதாவைக் கனப்படுத்துவது, எவ்வளவாய் நம்முடைய ஜீவியத்தின் பிரதான பிரயாசமாகக் காணப்பட வேண்டும்! நாம் எவ்வளவாய் அவருடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுத்து, அவைகளை நம் முன் நிறுத்திக்கொள்ள வேண்டும்! என்னை அன்புகூருவீர்களானால், என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். கற்பனையின் பொருள் - சுத்தமான இருதயத்திலிருந்து ஊக்கமாய் அன்புகூருவதாக இருக்கின்றது என்பதை நாம் எவ்வளவாய் உணர்ந்துகொள்ள வேண்டும்! நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவர் சித்தத்தை நாம் செய்ய விரும்புவோமானால், அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல என்பதை நாம் எவ்வளவாய் உணர்ந்துகொள்ள வேண்டும்; (1 யோவான் 5:3). இப்படிப்பட்ட குணங்களை உடையவர்களே குமாரர்களாகக் காணப்பட்டு, மீட்பருடைய சாயலாகக் காணப்பட்டு, தேவனுடைய சுதந்தரர்களாகவும், நமது கர்த்தராம் இயேசு கிறிஸ்துவுடன், அவரது இராஜ்யத்தில் உடன் சுதந்தரர்களாகவும் காணப்படுவார்கள். இம்மாதிரியான குணலட்சணத்தினுடைய வளர்ச்சியினை அடைபவர்களுக்கு மாத்திரமே நல்லது/well done எனும் ஆசீர்வாதம் கூறப்படும் என்பதை நினைவில்கொண்டவர்களாக, நாம் தவறு செய்யாதிருப்போமாக.

R5700

# நன்றியற்ற கலகவாதியான அப்சலோம்

**2 சாமுயேல் 18:1-15**

பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். - எபேசியர் 6:1

நன்றியற்ற பிள்ளையைப் பெற்றிருப்பது என்பது, பாம்பின் பல்லினும் எத்துணை கூர்மையானது!"

இன்றைய நமது பாடமானது, அப்சலோமின் மரணத்தினைப் பற்றினதாகும். இக்காரியமானது விளக்கம் தர வேண்டிய நிலை இல்லாதளவுக்கு விளக்கமாய்த் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இளம் இளவரசனின் ஜீவியத்தைத் திரும்பிப்பார்ப்பதும், இவருடைய தோல்விகள் சிலவற்றைக் கவனிப்பதும் நமக்குப் பிரயோஜனமாயிருக்கும். முதலாவது விஷயம் என்னவெனில் . . . இவர் நற்பிறப்புடையவரல்ல. இவரது தாயும், இராஜாவாகிய தாவீதின் மனைவியுமானவள், அருகாமையிலுள்ள ஒரு புறஜாதி இராஜாவின் மகளாவாள். அப்சலோமின் தாய் அழகானவராக இருந்திருக்கக்கூடும்; ஏனெனில் அப்சலோம் அழகான ஆண்மகனாக, அழகான வாலிபனாக, பண்புடனும், மரியாதையுடனும் நடந்துகொள்பவனாக, பிரபலமானவனாக வேதவாக்கியங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றார். இராஜகுடும்பத்தின் அங்கத்தினனாய் இருந்ததும், வியர்வை சிந்தி உழைக்க வேண்டிய அவசியம் இல்லாமல் இருந்ததும், இவருக்குப் பாதகமாகவே இருந்தது.

தன் சகோதரிக்காய்ப் பழிவாங்கும்படிக்குத் தனது ஒன்றுவிட்ட சகோதரனாகிய அம்னோனைக் கொன்றுபோடுவதன்மூலம், அப்சலோம் முதலாவதாக நமது கவனத்திற்குப் பிரத்தியட்சமாய்க் கொண்டுவரப்படுகின்றார். இதினிமித்தம் தன் தாத்தாவினுடைய பாதுகாப்பின்கீழ்த் தஞ்சம்புக ஓடுகின்றார். இப்படியாக இவரது தகப்பனுடனும், உண்மையான மதத்துடனும் இருக்கையில் உண்டாகும் நல்தாக்கங்களிலிருந்து இவர் இன்னும் விலகினவரானார். இப்படிப் பல வருடங்களாக இவர் காணாமல் போயிருக்க, இவர்மீது தொடர்ந்து அன்புகொண்டிருந்து, இவருக்காய்த் துக்கித்துக்கொண்டிருந்த இவரது தகப்பனார், அப்சலோமை எருசலேமுக்குத் திரும்பிவரச் சொல்ல ஏவப்பட்டார் - ஆனாலும் தன் குமாரன் தன் முன்னிலையில் வருவதற்கு இரண்டு வருடங்கள் தாவீது மறுத்தார். இதன் தாக்கங்கள் அனைத்துமே இந்த இளைஞனுக்குப் பாதகமாகவே இருந்தது; எனினும் இந்தக் காரணங்கள் எதுவும், இவர் தன் தகப்பனாகிய, இஸ்ரயேலின் இராஜாவுக்குப் பண்ணின துரோகத்திற்கான பழியினை இவர் மேலிருந்து விலக்குவதற்குரிய காரணங்களாகாது.

## அப்சலோமின் சதித்திட்டம்

சாதாரணமான பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இஸ்ரயேல் தேசம் எங்கும் நியாயாதிபதிகள் காணப்பட்டனர்; ஆனால் இவர்களால் அளிக்கப்படும் தீர்ப்பில் அதிருப்தி ஏற்படுகையில், உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு பண்ணப்படுவதுபோல, இராஜாவினிடத்தில் மேல்முறையீடு செய்யப்படுகின்றது. ஆலயம் கட்டுவதற்குத் தேவையான பொருட்களை ஆயத்தம்பண்ணுவதில் இராஜாவாகிய தாவீது மிகவும் விறுவிறுப்பாய் ஈடுபட்டிருந்தார்; இந்த ஆலயமானது இவரது மரணம்வரையிலும் கட்டப்படவில்லை. இதினிமித்தம் மேலான நியாயாதிபதியென ஜனங்களுக்கு ஆற்றிடும் தன் பணியினைத் தாவீது இராஜா சிலவிதங்களில் செய்ய முடியாதவராயிருந்திருக்கலாம் . . . ஆகையால்

ஒவ்வொரு உச்சநீதிமன்றங்களில் நடைபெறுவது போன்று ஜனங்களுடைய வழக்குகள் சிலவற்றின் விசாரணைத ாமதப்படுத்தப்பட்டது- இ துமு டிவுகளுக்காய்ப்பெ பாறுமையற்றுக்க ாணப்படுவோருக்குச் சோர்வை உண்டாக்கிற்று.

நீதி வழங்கும் விஷயத்தில், இராஜாவாகிய தாவீதின் சார்பில் ஏதேனும் குறைவு இருந்ததாவென நம்மால் உறுதியாய்க் கூறமுடியவில்லை. இவரது தந்திரமுள்ள மகனாகிய அப்சலோம் தன்னையே மிகவும் பிரபலமாக்கிக்கொண்டான் என்று மாத்திரமே அறிவோம். அப்சலோம் ஜனங்களிடத்தில் மிகவும் தயவு பாராட்டினவனாகவும், ஜனங்களுடன் நன்கு பழகினவனாகவும், அவர்களுடைய புகார்களைக் கேட்பதற்கு எப்போதுமே ஆயத்தமாயிருப்பவனாகவும் இருந்தான்; மேலும் ஜனங்களுடைய விசாரணை விஷயத்தில் ஏற்படும் தாமதத்திற்காய் மனவருத்தத்தினைத் தெரிவித்து, நான் இராஜாவாக இருந்திருப்பேனாகில், சூழ்நிலைமைகள் வேறுமாதிரி இருந்திருக்கும்! என்று கூறி தந்திரமாய்ப் பதிலளித்தான். இப்படியாக வஞ்சனையினாலும், சூழ்ச்சியினாலும் பொய்யுரைத்து, தந்தையிடமிருந்து ஜனங்களுடைய இருதயங்களைத் தன்பால் கவர்ந்துகொண்டான் என்று நாம் வாசிக்கின்றோம். இப்படியான ஒரு மனுஷனை இராஜாவாகப் பெற்றிருந்தால், எவ்வளவு நலமாயிருக்குமென ஜனங்களும் உண்மையில் சிந்திக்கத் துவங்கினார்கள். தேவன்தான் இஸ்ரயேலின் இராஜா என்றும், வேதாகமம் சொல்வது போன்று இராஜாவாகிய தாவீது கர்த்தருடைய சிங்காசனத்தில் உட்கார்ந்து மாத்திரம் இருந்தார் என்றும் உள்ள உண்மையினை ஜனங்கள் முழுதும் பார்க்கத் தவறினதாகத் தெரிகின்றது (1 நாளாகமம் 29:23).

அப்சலோம் கண்கவரும் அழகான இராஜகுமாரனாக, அலையலையான நீண்ட மயிரை உடையவனாய் இருந்தார். இவர் தன் இரதத்தில் செல்வார்; இவருக்கு முன்னே வேகமாய் ஓடும் ஐம்பது வீரர்கள் செல்வதுண்டு. சிந்திக்காத ஜனங்கள் இவைகளினால் கவரப்பட்டார்கள்; ஆனாலும் இந்த மினுக்கின் மயக்க நோயினால் ஒரு ஞானவான் கூடத் தாக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அப்சலோம் தன் தகப்பனுடைய மத உணர்வுகளை அறிந்திருந்தார் மற்றும் அவ்வுணர்வுகளை அப்சலோம் பெற்றிருக்கவில்லை. தந்தைக்குப்பின் தான் இராஜாவாகக் காணப்படுவது, தகப்பனுடைய விருப்பமாயிராது என்றும், தாவீது இராஜா வயதாகிக்கொண்டிருப்பதால், புதிய இராஜா ஏற்படுத்தப்படுவதற்குரிய தருணம் வெகு தொலைவில் இல்லை என்றும் அப்சலோம் உணர்ந்தார். பேராசைகொள்ளுதல் மற்றும் தேவனுக்குத் துரோகம் செய்தல் எனும் சாத்தானின் வழியினை அப்சலோம் பின்பற்றினவராகி, தன் தகப்பனுக்குத் துரோகம் புரிந்தார். இவர் ஒரு படையைத் திரட்டி, தன்னை இராஜாவென அறிவித்தார்; மேலும் இராஜாவாகிய தாவீதும், அவரது சேனையும், அவருக்கு உண்மையாய் இருந்தவர்களும் தங்கள் ஜீவனைத் தப்பிக்க ஓடும் கட்டாயம் ஏற்படுமளவுக்கு, அப்சலோம் தன்னால் கவரப்பட்ட அநேகம் ஜனங்களுடைய ஆதரவுடன், காரியங்களை மிக வேகமாகவும், மிக நேர்த்தியாகவும் செய்துமுடித்தார். அப்சலோமின் பெரிய சேனைக்கும், இராஜாவாகிய தாவீதின் சிறிய சேனைக்கும், ஆனால் நன்கு பயிற்சியளிக்கப்பட்ட போர்வீரர்களைப் பெற்றிருந்த சேனைக்கும் இடையில் யுத்தம் நடந்தது. தாவீது இராஜாவிற்கே வெற்றிக் கிடைத்தது. தன் குமாரனாகிய இளைஞன் அப்சலோமினைக் கொன்று போடக்கூடாது என்று தாவீது தன் போர்வீரர்களிடம் கேட்டுக்கொண்டபோதிலும், அப்சலோம் கொல்லப்பட்டார்.

இங்குத் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷனுக்கும், இன்னுமாக தன் தகப்பனைக் கொல்வதற்கு நாடினவனும், கலகக்காரனும், சதித்திட்டம் போட்டவனும், சூழ்ச்சிக்காரனும், பேராசைக்கொண்டவனும், பகட்டானவனும், ஆடம்பரமானவனும், ஜனங்களால் விரும்பப்பட்டவனுமான மனுஷனுக்கும் இடையில் எத்தகையதொரு வித்தியாசம் காணப்படுகின்றது! தேவனுடைய மனுஷன், தான் அறிக்கைப்பண்ணி, மனந்திரும்பிக் காணப்பட்ட அந்தப் பெலவீனங்களுக்கு அப்பாற்பட்டு, தேவனிடத்தில்

உண்மையுள்ள இருதயத்தினைப் பெற்றிருந்தார்; என் மகனாகிய அப்சலோமே, என் மகனே, என் மகனாகிய அப்சலோமே நான் உனக்குப் பதிலாகச் செத்தேனானால் நலமாயிருக்கும் எனும் புலம்பலின் வார்த்தைகளில் தன் குமாரனுக்காய் அவர் பெற்றிருந்த அனுதாப அன்பும் வெளிப்படுகின்றது.

## ஒரு மிக முக்கியமான கொள்கை

மனித சித்தம் என்பது அருமையானதாகும்; ஆகையாலேயே ஒவ்வொருவனும் தன்தன் எதிர்க்காலத்திற்குப் பொறுப்பாளியாகுகின்றான். ஆகையால் தன் முயற்சியினாலுயர்ந்த மனிதன் எனும் கூற்றுக் கிட்டத்தட்ட உண்மையே.

எனினும் இது - ஓரளவுக்குத் திறமையுள்ள பிள்ளைகளை, இன்னுமாக வெளிப்புற அழகுடன் மாத்திரமல்லாமல், தேவனுக்கும், நீதியின் கொள்கைகளுக்கும் நேர்மையுள்ள, நீதியுள்ள, மனசாட்சியுள்ள நல்ல பிள்ளைகளை உலகில் கொண்டுவரத்தக்கதாகப் பார்த்துக்கொள்ள வேண்டிய பெற்றோரின் கடமையினின்று, பெற்றோரை விலக்கிடாது. மேலும் இது - வாழ்க்கைக்குறித்த சரியான புரிந்துகொள்ளுதலையும், முறையான அறிவுரைகளையும் பிள்ளைகளுக்குக் கொடுத்திடும் பெற்றோரின் கடமையினின்று, பெற்றோரை விலக்கிடாது; ஏனெனில், பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான் என்று வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றது (நீதிமொழிகள் 22:6).

பல நூற்றாண்டு காலங்களாகப் பிரசங்கிக்கப்பட்ட, போதிக்கப்பட்ட பின்னரும்கூட, வெகு சில பெற்றோர்களே உலகத்தில் தங்களால் கொண்டுவரப்படுகின்ற பிள்ளைகள் விஷயத்திலுள்ள தங்கள் கடமைகளைக்குறித்து உணர்ந்திருக்கின்றார்கள் என்பதைக் காண்பது உண்மையில் பரிதாபத்திற்குரியதாக இருக்கின்றது. வெகு சில தகப்பன்மார்களே, தங்கள் மனைவிகள் மற்றும் தங்கள் குழந்தைகளுக்கான பாதுகாவலர்களாக, பராமரிப்பவர்களாகத் தாங்கள் இருப்பதை உணர்ந்திருக்கின்றனர்; மேலும் வெகு சில தகப்பன்மார்களே, குடும்பத்தின் தாயானவளாய் இருக்கும்படிக்கு, உயர்குணம் உள்ள மற்றும் மனசாட்சிக்குக்கட்டுபட்டு நடக்கும் மனைவியைத் தெரிந்துகொள்வது மாத்திரம் தங்களது கடமையாகவும், சிலாக்கியமாகவும் இராமல், இன்னுமாக தங்கள் குழந்தைகள் உயர்பண்புகளினால் பதியப்பெற்றவர்களாகவும், பாவத்தினால் குறைவாய்ப் பதியப்பெற்றவர்களாகவும் பிறக்கத்தக்கதாக கர்ப்பக்காலத்தில் ***தாயானவளை நல்ல/அனுகூலமான சூழ்நிலைகளின்கீழ் வைத்துக்கொள்வதும்***, அவளது மனமும், இருதயமும் தூய்மையாகவும், அன்பானதாகவும், பெருந்தன்மையுடையதாகவும், தேவனுக்கும், நீதியின் கொள்கைகளுக்கும் உண்மையாகவும் காணப்பட ***அவளுக்கு உதவுவதும்,*** தங்கள் கடமையாக இருக்கின்றது என்று உணர்ந்திருக்கின்றனர். ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள் என்று வேதவாக்கியங்கள் சரியாகவே சொல்லியிருக்கின்றன (ஓசியா 4:6).

இனமேம்பாடு கோட்பாடானது எத்திசையிலும் நம் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பது உண்மையே; ஆனால் எதற்காக? ஆரோக்கியம் மற்றும் ஏற்ற வாழ்க்கைத் துணையைத் தெரிவுசெய்தல் எனும் விதத்தில் இக்கோட்பாட்டின் அறிவுரைகளானது முக்கியமானதாய் இருப்பினும், நம்மால் பார்க்கப்பட்டுவரும் கொள்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், அதாவது கர்ப்பக்காலங்களில் தாயானவளின் மனமானது, அவளது குழந்தையினுடைய குணங்களை நல்லதாகவோ, கெட்டதாகவோ பதியப்பண்ணுகின்றது எனும் கொள்கையுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில், இனமேம்பாடு கொள்கையானது முக்கியமற்றதாகுகின்றது. தாயானவளால் பூரணமான குழந்தையைப் பெற்றெடுக்க முடியாதுதான்; எனினும் அவள் தன் சொந்த குறிக்கோள்களை உயர்வானதாகவும், உண்மையானதாகவும், அசைவுறாததாகவும், தூய்மையானவைகள், சிறந்தவைகள் மற்றும் நன்மையானவைகள்மீது

பதியப்பெற்றதாகவும் கொண்டிருப்பாளானால், சந்தேகத்திற்கிடமின்றி, அவளது குழந்தையானது, சரீர ரீதியிலும், அறிவு ரீதியிலும், நல்லொழுக்க ரீதியிலும்கூட வெகு அனுகூலமடையும். போட்டோ டிராமா ஆப் கிரியேஷனில் (Photo-Drama of Creation) நாம் ஏற்கெனவே சுட்டிக்காண்பித்துள்ளது போன்று, பூரண தாயாகிய ஏவாளினால் தன் குமாரனாகிய காயீனிடத்தில் பொறாமை, சந்தோஷமின்மை எனும் பண்புகளைப் பதியவைக்க முடியும் மற்றும் பதியவைத்தாள் மற்றும் இதன் காரணமாகவே காயீன் தன் சகோதரனைக் கொன்றுபோட்டார்.

## சங்கீதம் 3 (ISV)

(தாவீது தன் குமாரன் அப்சலோமுக்குத் தப்பி ஓடிப்போகையில் பாடின சங்கீதம்.)

கர்த்தாவே, என் சத்துருக்கள் எவ்வளவாய்ப் பெருகியிருக்கிறார்கள்!
எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் அநேகர்!

தேவனிடத்தில் அவனுக்கு இரட்சிப்பு இல்லையென்று,
என் ஆத்துமாவைக்குறித்துச் சொல்லுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள்.

ஆனாலும் கர்த்தாவே, நீர் என் கேடகமும்,
என் மகிமையும், என் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறீர்.

நான் கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிட்டேன்;
அவர் தமது பரிசுத்த பர்வதத்திலிருந்து எனக்குச் செவிகொடுத்தார்.

நான் படுத்து நித்திரை செய்தேன்;
விழித்துக்கொண்டேன்; கர்த்தர் என்னைத் தாங்குகிறார்.

எனக்கு விரோதமாகச் சுற்றிலும் படையெடுத்து வருகிற
பதினாயிரம்பேருக்கும் நான் பயப்படேன்.

கர்த்தாவே, எழுந்தருளும்;
என் தேவனே, என்னை இரட்சியும்.

நீர் என் பகைஞர் எல்லாரையும் தாடையிலே அடித்து,
துன்மார்க்கருடைய பற்களைத் தகர்த்துப் போட்டீர்.

இரட்சிப்பு கர்த்தருடையது;
தேவரீருடைய ஆசீர்வாதம் உம்முடைய ஜனத்தின்மேல் இருப்பதாக.

R2025

# அப்சலோமின் வீழ்ச்சியும், மரணமும்

## 2 சாமுயேல் 18:9-17, 32, 33

கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார்; துன்மார்க்கரின் வழியோ அழியும்.
- சங்கீதம் 1:6

தந்திரமாய்த் திட்டமிடப்பட்டிருந்ததும், திறம்பட நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததுமான அப்சலோமின் சதித்திட்டமானது, இறுதியில் தாவீதை எருசலேமிலிருந்து வெளியேற்றி, அங்கு அப்சலோமைத் தங்கப்பண்ணிற்று. ஆனாலும் உரிமையுள்ள இராஜாவாகிய தாவீது உயிரோடு இருக்கும்வரை, சதித்திட்டம் போட்டவர்களின் வெற்றி முழுமையானதாக இருக்கவில்லை. ஆகையால் அப்சலோமும், அவரது ஆலோசகர்களும் இராஜாவைக் கொன்றுபோடுவதற்குத் திட்டம் தீட்டினவர்களாகக் காணப்பட்டனர்.

ஆனால் கர்த்தரோ, ஊசாய் எனும் நண்பனை தாவீதிற்காக எழுப்பினார்; இவரை அப்சலோமின் ஆலோசகர்கள் மத்தியில் கொண்டுபோனார்; இப்படியாக இவரது ஆலோசனையின் மூலமாக, அந்த மதியீனமான மற்றும் பொல்லாத சதித்திட்டம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது. பெருமைகொண்டவராகவும், தன் தகப்பனைக் கொன்றுபோட வேண்டும் என்ற பொல்லாத இருதயத்தினைக் கொண்டவராகவும் காணப்பட்ட அப்சலோம், தன்னை ஒரு பெரும் படையின் தலைவனாக்கிக்கொண்டு, யுத்தம்பண்ணும்படிக்குப் புறப்பட்டுபோனார். இந்தப் பொல்லாத தன்மையோடு, இவரது தகப்பனுடைய அன்பை ஒப்பிட்டுப்பார்க்கும்போது, தாவீது இம்மாதிரியான கடும் சோதனைகளின்கீழ், அப்சலோமை சந்திக்கச் சென்ற தன் மனுஷர்களிடம், பிள்ளையாண்டானாகிய அப்சலோமை என்னிமித்தம் மெதுவாய் நடப்பியுங்கள் என்று கூறுவதைப் பார்க்கின்றோம்.

தேவன் சடுதியாய் இந்தப் பொல்லாத வாலிபனின் தீய திட்டங்களை ஒன்றுமில்லாமலாக்கிப் போட்டார்; தன் வெற்றியின் நிமித்தம் பெருமிதத்தோடும், வெற்றியை எதிர்பார்த்து பெருமையோடும் கழுதையின்மீது ஏறி வந்துகொண்டிருந்த அப்சலோமின் தலை, பெரியதொரு கர்வாலி மரத்தில் மாட்டிக்கொண்டது; இவர் ஏறிவந்த கோவேறு கழுதை அப்பாலே போயிற்று; இவர் உதவியற்றவராக தொங்கிக்கொண்டிருந்தார்; தாவீதின் நண்பர்கள் இவர் கதையினை முடித்தனர். யோவாப் வெற்றியின் எக்காளத்தை ஊதினார்; சதித்திட்டம் ஒன்றுமில்லாமலாக்கப்பட்டது; இராஜ உரிமையினைப் பறிக்க முயன்றவர் மரித்துப்போனார்; இவர் கற்குவியலின்கீழ்ப் புதைக்கப்பட்டார்; இவரோடுகூட காணப்பட்டவர்கள் வெட்கத்தினால் தங்கள் முகத்தை மறைத்துக்கொண்டனர்; கர்த்தரால் அபிஷேகிக்கப்பட்டவராகிய தாவீது இராஜா, சமாதானத்தோடே எருசலேமுக்குத் திரும்பினார்.

இந்தச் சந்தர்ப்பங்களிலிருந்து கடந்துவரும் பாடங்களில், தீமை செய்கிறவர்களின் வெற்றி எத்தனை சொற்ப காலமே நீடிக்கின்றது என்பதைக் கவனிப்போமாக. அவர்கள் கண்கள் கொழுப்பினால் எடுப்பாய்ப் பார்க்கிறது; அவர்கள் இருதயம் விரும்புவதிலும் அதிகமாய்

நடந்தேறுகிறது (சங்கீதம் 73:7); இப்போதும் அகங்காரிகளைப் பாக்கியவான்கள் என்கிறோம்; தீமை செய்கிறவர்கள் திடப்படுகிறார்கள்; அவர்கள் தேவனைப் பரீட்சைபார்த்தாலும் விடுவிக்கப்படுகிறார்களே என்று சொல்லுகிறீர்கள் (மல்கியா 3:15); எனினும் சீக்கிரத்தில் இவர்கள் யாவரும் நீதிமான்களுடைய பாதங்களின்கீழ்த் துரும்பாக்கப்படுவார்கள் (மல்கியா 4:1); ஒடுக்கப்படுதலினால் பாரப்படுபவர்களுக்கு நீண்டகாலம் எடுத்துக்கொள்ளப்படுவதுபோன்று உண்மையில் தோன்றலாம்; ஆனால் இது தேவனுடைய பார்வையில் நீண்டகாலமாகக் காணப்படுவதில்லை. அவரது நோக்கங்களின் ஞானம் அனுமதிப்பதற்கேற்ப, அவர் சீக்கிரமாய் நியாயத்திற்கு ஜெயம் கிடைக்கப்பண்ணுவார். ஒருவேளை நீதி/நியாயம் தாமதமாகுகின்றது என்றால், இது விரைவான ஏற்பாட்டினால் வரும் நன்மையைவிட ஏதோ சில பெரிய நன்மைகள் உருவாகுவதற்காக மாத்திரமேயாகும். இந்த நம்பிக்கையில் . . . சகல காரியங்களும், இன்னுமாகத் தாமதம்போன்று தோன்றும் தாமதங்களும்கூட, அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்ற நிச்சயத்துடன், கிறிஸ்தவன் இளைப்பாறுவானாக (உரோமர் 8:28); ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள். நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது. (எபிரெயர் 10:35, 36)

R3267

## என் மகனாகிய அப்சலோமே, என் மகனே!

### 2 சாமுயேல் 18:24-33

மூடபுத்திரன் தன் பிதாவுக்குச் சலிப்பும், தன்னைப் பெற்றவர்களுக்குக் கசப்புமானவன்.
- நீதிமொழிகள் 17:25

இராஜாவாகிய தாவீது தனது குமாரனுடைய கலகத்தைக்குறித்து அறிந்தபோது, அந்தக் கலகம் எவ்வளவு பெரிதாக இருந்தது என்று உணர்ந்தபோது, இன்னுமாக தன் குமாரனுடைய நயவஞ்சகத்தினால் எப்படி ஜனங்களுடைய இருதயமானது தன்னிடமிருந்து தன் குமாரனால் கொள்ளையிடப்பட்டுள்ளது என்று உணர்ந்தபோது, ஒரு மகனாக செய்யக்கூடாதவைகளை அப்சலோம் செய்தபோது, இவரின் இந்த நடக்கையினால் இராஜாவாகிய தாவீது முற்றிலும் அதிர்ச்சிக்குள்ளானார்; இதை அவர் எதிர்பார்க்கவும் இல்லை. தப்பி ஓடுவதைவிட வேறு எந்த வழியும் தனக்கில்லை என்று தாவீது உடனடியாக உணர்ந்துகொண்டார். அக்காலங்கள் சமாதானத்தின் காலங்களாக இருந்தபடியால், தலைநகரத்தில் அவரிடம் திரளான போர்ச்சேவகர் காணப்படவில்லை, மாறாக மெய்க்காப்பாளர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் மாத்திரமே காணப்பட்டனர். இவர்களோடும், அரசவையில் இவருக்கு உண்மையாய்க் காணப்பட்ட பணியாளர்களோடும், இவர் யோர்தானுக்கு அப்பால் தப்பி ஓடினார்; அங்குப் படைகளைத் திரட்டுவதற்கு இவருக்கு நேரமும், வாய்ப்பும் கிடைத்தது; மக்னாயீம் எனும் சிறு, ஆனால் அரணிப்பான பட்டணத்தில், தாவீது பாதுகாப்பாய் உணர்ந்தார். இதற்கிடையில் அப்சலோம் தன் தகப்பனுக்கும், அவர் வீட்டாருக்கும் அவமானமான காரியங்களைச் செய்தார்; இப்படியாக இந்தக் கலகத்தில் எந்தச் சமரசத்திற்கும் இடமில்லை என்பதை ஜனங்களுக்குக் காண்பித்தார். கலகம்புரியும் இந்த இளவரசனில் நம்பிக்கை வைத்தவர்களாகவும், இவருடைய ஆதரவின்கீழ் இராஜ்யபாரத்தின் அடுத்த அதிகாரிகளெனத்

திரளான கனங்களையும், செல்வாக்கையும், அதிகாரங்களையும் பெற்றுக்கொள்ளலாம் என்று எதிர்பார்ப்பு கொண்டவர்களாகவும் காணப்பட்ட அநேகர் அடங்கிய சேனையோடுகூட அப்சலோம், இராஜாவாகிய தாவீதை வேகமாய்த் தேடிச் சென்றார். இவரது அவமானத்திற்குரிய நடக்கையின் உச்சக்கட்டமாக, தன் தகப்பனைக் கொல்லவேண்டும் என்றிருந்தார். இதற்காகவே இவர் பெரிய சேனையோடு சென்றார் என்று பார்க்கின்றோம்.

இவர்கள் இருவரின் சேனையை ஒப்பிட்டுப்பார்க்கும்போது, இராஜாவாகிய தாவீதின் சேனை சிறியதாக இருப்பினும், தாவீதின் சேனைக்கே அநேகமாக, அநேக விதத்தில் அனுகூலமிருந்தது; எப்படியெனில், இராஜாவின் மெய்க்காப்பாளர்களில் அநேகர் அக்காலத்தின் முறைமைகளுக்கடுத் தவைகளில், விசேஷித்த திறமையுடைய புருஷர்களாகவும், யுத்த புருஷர்களெனப் பெரிய அனுபவங்களைப் பெற்றவர்களாகவும் காணப்பட்டனர். இராஜா, சேனையோடு போக வேண்டாம் என்று வேண்டிக் கொள்ளப்பட்டார்; தாவீது சேனையை, தனது திறமைமிக்க மூன்று நண்பர்களின்கீழ் மூன்று பாகங்களாகப் பிரித்துக்கொண்டார். இவர்கள் அப்சலோமின் சேனையை எதிர்கொண்டு, அப்சலோமின் சேனையைப் பல்வேறு திசைகளிலிருந்து தாக்கினார்கள்; யுத்தத்தில் அப்சலோமின் படையில் இருபதாயிரம்பேர் மரித்துப்போனார்கள்; மீதமானவர்களும், அப்சலோமும் தேடிச் செல்லப்பட்டனர்; அப்சலோமின் தலை ஒரு மரத்தின் கிளைகளில் மாட்டிக்கொண்டது; இவர் ஏறிவந்த கழுதையும் இவரை விட்டுவிட்டு ஓடிப்போயிற்று; இவர் உதவுவாரற்று தொங்கிக்கொண்டிருந்தார்; இவர் இராஜாவாகிய தாவீதின் படைத்தளபதிகளில் பிரதானமானவரான யோவாபினால் கொல்லப்பட்டார்.

இங்கு நமது இன்றைய பாடம் துவங்குகின்றது. மக்னாயீமின் ஒலிமுகவாசலுக்கு அருகாமையில், தாவீது இராஜா யுத்தத்தின் செய்திக்காகக் காத்துக்கொண்டிருந்தார்; காவல் கோபுரத்திலிருந்த ஜாமக்காரனோ, தூதுவர்கள் ஒன்றன்பின் ஒருவராக ஓடிவருவதை அறிவித்தான். முதலாவது வந்தவரை, தனது நண்பனாகிய ஆசாரியனின் குமாரன் என்று தாவீது அடையாளம் கண்டுகொள்கின்றார்; மேலும் அக்காலங்களில் நிலவின வழக்கத்தின்படி, இது நல்ல செய்தியாக இருக்குமென எண்ணினார்; ஏனெனில் வந்தவர்களில் ஒருவன் நல்ல மனுஷனாக இருந்தான். இந்த வழக்கம் இன்னமும் கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் காணப்பட வேண்டும்; அதாவது ஒரு நல்ல மனுஷன் எப்போதுமே நல்ல செய்தியைக் கொண்டுவர நாடுவான். கர்த்தருக்கு உண்மையாய் இருப்பவருடைய வாயின் வார்த்தைகளும், இருதயத்தின் தியானமும் நல்லவையாக இருக்க வேண்டும் - நல்லவையாக மாத்திரமே இருக்க வேண்டும் மற்றும் எப்போதும் நல்லவையாகவே இருக்க வேண்டும். ஆகையாலே தேவன் உலக ஞானிகளையோ, உலகத்தின் வல்லவர்களையோ இல்லாமல், மாறாக அவருக்கு இருதயத்தில் உண்மையாய் இருப்பவர்களையே தம்முடைய வாய்க்கருவியாகக் காணப்படும்படிக்குத் தெரிவு செய்கின்றார்; இன்னுமாக மகா துன்பத்தின் கெட்ட செய்திகளானது, கர்த்தரிடமிருந்து வருகிறதில்லை என்பதையும், இம்மாதிரியான செய்தியைச் சுமந்துவருபவர்கள் கர்த்தருடைய செய்தியைச் சுமந்து வருகிறதில்லை என்பதையும் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்; இன்னுமாக ஒருவேளை ஒருவர் கர்த்தர்பால் சரியான இருதய நிலைமையினைக் கொண்டிருக்கின்றார் என்றால், அன்பின் சரியான ஆவியினைக் கொண்டிருக்கின்றார் என்றால், இவர் தெய்வீகக் குணலட்சணத்தை எவ்விதத்திலாகிலும் களங்கப்படுத்தும் தீய/கெட்ட செய்தியைச் சுமந்துவருவதற்குரிய மனநிலையினை உடையவராய் இருக்கமாட்டார். சீர்கெட்டவர்களுக்கு எதிராகக்கூட இந்தக் களங்கங்கள் சுமத்தப்பட்டால், அவர்கள்கூட இக்களங்கங்களை வெறுப்பார்கள்.

முதலாவது ஓடி வந்தவன், இராஜாவினுடைய படையின் வெற்றிகுறித்துப் பொதுவான விதத்தில் தெரியப்படுத்தினான். இராஜா போர்வீரர்களை அனுப்பிவைக்கும்போது, அவர்கள் எந்த ஒரு சூழ்நிலையிலும் அப்சலோமைக் கொல்லக்கூடாது என்று கூறியிருந்ததற்கு இசைவாக இப்பொழுது, பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா என்று முதலாவதாக விசாரித்தார். ஒரு மகனாகச் செய்யக்கூடாதவைகளை அப்சலோம் செய்ததைக் கண்டு நாம் அதிர்ச்சியடைகின்ற அதேவேளையில், தவறிழைத்த தன் குமாரன்மீது, தன் அரியணையை மாத்திரமல்லாமல் தன் ஜீவனையும் பறிக்க நாடின தன் குமாரன்மீது தாவீதிற்கு இருந்த தகப்பனுக்குரிய அன்பினால் நாம் ஆழமாகக் கவரப்படுகின்றோம். இந்த இரண்டு பாத்திரங்களுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்ன? இவர்களில் யார் மிகவும் சிறந்தவராகவும், மிகவும் கனத்திற்குரியவராகவும், மிகவும் பாராட்டப்படுவதற்கு ஏதுவானவராகவும் காணப்படுகின்றார்? இக்காரியத்தை எக்கோணத்திலிருந்துப் பார்த்தாலும், ஒரே ஒரு பதில் மாத்திரமே காணப்பட முடியும்; இப்பதிவை இவரது சத்துருக்கள் வாசித்தால்கூட, இவரது ஆத்துமாவின் மேன்மையினைப் பாராட்டாமல் இருக்க முடியாது. தாவீது தன் அரியணையைவிட, ஆம்! தன் சொந்த ஜீவனைவிட அப்சலோமிற்காகவே மிகவும் கவலைகொண்டார். இந்த இரு பாத்திரங்களுக்கு இடையிலுள்ள வித்தியாசம் ஒரே ஒரு விஷயத்தில் மாத்திரம் காணப்படுகின்றது என்று சொல்லப்படலாம்; அதென்னவெனில் தாவீது தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷனாவார்; இவர் சோதனையான அனுபவங்களுக்குள் கடந்துசென்றவராகவும், அனுகூலமான பாடங்களைக் கற்றுக்கொண்டவராகவும் காணப்படுகின்றார்; இவரில் அன்பின் ஆவியானது நன்கு வளர்ந்திருந்தது. இன்னொரு பக்கத்தில், தன் விருப்பங்களை அடையத்தக்கதாக எதையும் செய்வதற்கு இறங்கக்கூடிய சுயநலத்திற்கும், பேராசைக்குமான உதாரணமாக அப்சலோம் காணப்படுகின்றார். கிறிஸ்துவைத் தலையாகப் பெற்றிருக்கும் புத்திரர் வீட்டாரில் தாவீது ஓர் அங்கத்தினனாக இல்லையென்றபோதிலும், இவர் மோசேயைத் தலையாகப் பெற்றிருக்கும் பணிவிடை வீட்டாரின் சிறந்த அங்கத்தினர்களில் ஒருவராவார். (எபிரெயர் 3:5-6)

அகிமாசின் பதில் உண்மையில்லை என்றும், இராஜாவின் உணர்வுகளைப் புண்படுத்தாதபடிக்கு, உண்மைகளை மிருதுவாய்க் கூறவேண்டும் என்ற நோக்கத்தில் கூறப்பட்ட பதில் என்றும் சிலர் கருதுகின்றனர்; ஆனால் நாங்கள் இதை ஒத்துக்கொள்கிறதில்லை. பதிவை வைத்துப்பார்க்கும்போது, இந்த வாலிபன் உண்மையையே தெரிவித்திருக்கின்றான்; இதுபோலவே அனைவரும், கூடுமானால் மனுக்குலம் அனைவரும் முக்கியமான கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், தெரிந்தவைகள் எனும் வார்த்தை சுட்டிக்காட்டுவதுபோன்று, தெரிந்தவைகளுக்குள் தங்கள் பதில்களை வரையறுத்துக்கொள்வது மிகவும் நலமாயிருக்கும் என்று நாங்கள் எண்ணுகின்றோம். தான் ஒரு சந்தடியைக் கண்டதாகவும், யுத்தம் முடிவுபெற்றுள்ளதை அறிந்துகொண்டதாகவும், வெற்றி இராஜாவின் பக்கத்திற்கே வந்துள்ளது என்று அறிந்துகொண்டதாகவும், இதுதவிர வேறு எதுவும் தனக்குத் தெரியாது என்பதாகவும் பதில் காணப்பட்டது. உண்மைதான், இவர் இராஜாவின் குமாரன்குறித்து ஏதோ சிலவற்றை யோவாப்கூற கேட்டார், எனினும் அது பிறர் சொல்லக் கேட்ட சங்கதியே ஆகும்; அது திட்டவட்டமான அறிந்துகொள்ளுதல்/தகவல் அல்ல; அப்சலோம் பற்றி கேள்வி கேட்கப்பட்டபோது, இதற்கான பதிலை அறியேன் என்று வாலிபன் கூறினபோது, இராஜாவுக்கு வாலிபன் சரியாகவே பதிலளித்திருக்கின்றான். உண்மை தகவலுக்கும், நம்பிக்கைக்கும், பிறர்சொல்ல கேட்ட சங்கதிக்கும், இன்னும் இதுபோன்றவைகளுக்கும் இடையில் விவேகமாய்ப் பகுத்துப்பார்ப்பதற்கு, மற்ற ஜனங்களைவிட கர்த்தருடைய ஜனங்கள் நுணுக்கமாய்க் காணப்பட வேண்டும்.

இரண்டாவதாக ஓடிவந்த கூஷி அல்லது கூஷியன், அதாவது நீக்ரோ/negro, யுத்தத்தில் ஈடுபட்டிருந்த இராஜாவின் வீட்டாரில் ஒருவராக அநேகமாகக் காணப்பட்டிருக்க வேண்டும். இவர் உடனடியாக முழுக்காரியத்தையும் தெரிவித்துவிட்டார்; இப்படியாக அப்சலோமின் மரணத்தைக்குறித்துக் கேட்டபோதே, இராஜா மிகுந்த துக்கத்திற்குள்ளானார்; சரித்திரத்தின் பக்கங்களிலேயே மிகவும் பரிதாபகரமான வார்த்தைகளாகக் காணப்படுபவைகளில் அடங்கும் வார்த்தைகளை உச்சரித்தார். அப்பொழுது இராஜா மிகவும் கலங்கி, கெவுனிவாசலின் மேல்வீட்டிற்குள் ஏறிப்போய் அழுதான்; அவன் ஏறிப்போகையில்: என் மகனாகிய அப்சலோமே, என் மகனே, என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப் பதிலாகச் செத்தேனானால் நலமாயிருக்கும்; அப்சலோமே, என் மகனே, என் மகனே, என்று சொல்லி அழுதான். (2 சாமுயேல் 18:33)

தன் மகனுக்காக இராஜா கொண்டிருந்த அன்பானது, சரியான நேரத்தில் எடுக்க வேண்டிய மிக ஏற்ற நடைமுறை பிரயாசங்களை எடுத்துக்கொள்ளாமல் இருந்தது என்பது வருந்தத்தக்க காரியமாகும். இவர் ஞானமுள்ள தகப்பனாய் இருப்பதைவிட, செல்லங்கொடுக்கும் தகப்பனாய் இருந்துவிட்டார். இந்த இளைஞனின் இயல்பான திறமைகளின் மினுக்கும், பகட்டும் ஜனங்களை மாத்திரம் வசீகரிக்காமல், அவரது தகப்பனையும் வசீகரித்துள்ளது என்பது உறுதியே . . . இதனால் அவன் விரும்பின அனைத்தையும் பெற்றுக்கொண்டவனாய் இருந்தான்; மேலும் கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என்றும், ஞானம் சுட்டிக்காண்பித்திடும் இப்பாதையில் மாத்திரமே உண்மையான ஐசுவரியமும், உண்மையான சந்தோஷமும் கண்டடையப்படமுடியும் என்றும், தான் கற்றுக்கொண்ட விலையேறப்பெற்ற படிப்பினைகளை இராஜா தன் குமாரனுடைய விஷயத்தில் செயல்படுத்தத் தவறிவிட்டார். தன் குமாரனுக்காய் இவர் பெற்றிருந்த ஞானமற்ற அன்பானது, தன் குமாரன் தான்தோன்றித்தனமாக/கட்டுப்பாடற்று வாழட்டும் என்றும், அதிகம் கட்டுப்படுத்தப்பட வேண்டாம் என்றும் எண்ணங்கொள்ள இராஜாவை வழிநடத்திற்று; மேலும் இப்பொழுது இவர் பின்விளைவைக் கண்டபோது இவருடைய இருதயம் துக்கத்தினால் துடிதுடித்தது. இப்படியாகவே அநேகம் தகப்பன்மார்களும், அநேகம் தாய்மார்களும் காணப்படுகின்றனர் - இவர்கள் கர்த்தருக்குரியவர்களாக உண்மையில் இருப்பினும், வேதனையான அனுபவங்கள் வாயிலாகக் கர்த்தர் தங்களுக்குக் கற்பித்துத்தந்த படிப்பினைகளைத் தங்கள் பிள்ளைகள் விஷயத்தில் செயல்படுத்தத் தவறிப்போகின்றவர்களாக இருக்கின்றனர். இத்தகைய அன்பின் ஞானமின்மைகுறித்து விமர்சனம் தெரிவிப்பதற்கும், இதில் கிறிஸ்தவ பெற்றோர்களுக்குக் காணப்படும் படிப்பினைகளை நாம் சுட்டிக்காட்டுவதற்கும் அவசியமில்லை; அதுவே சுட்டிக்காண்பிக்கின்றது; மேலும் இதனை நமது பாடத்தினுடைய ஆதார வசனத்தின் வார்த்தைகளாகிய, மூடபுத்திரன் தன் பிதாவுக்குச் சலிப்பும், தன்னைப் பெற்றவர்களுக்குக் கசப்புமானவன் என்று கூறுகையில் ஞானமுள்ள குமாரனாகிய சாலொமோன் கனிவாக வெளிப்படுத்தியுள்ளார்; மேலும் பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான் எனும் வார்த்தைகளையும் கவனியுங்கள். நடைமுறை சார்ந்த கண்ணோட்டத்தின்படி பார்க்கையில், மேலோட்டமாய்க் கவனிக்கிறவனுக்கு இக்காரியமானது எப்படித்தான் காட்சியளித்திட்டாலும், பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் என்று சாலொமோன் புரிந்து உணர்ந்து பேசின வார்த்தைகளிலேயே ஞானத்தின் இரகசியம் காணப்படுகின்றது (நீதிமொழிகள் 22:6). தங்கள் பிள்ளைகளைச் சரியான வழியில் அல்லது தவறான வழியில் நடப்பிப்பவர்கள், எதிர்க்காலத்திற்கான சந்தோஷங்களை அல்லது வருத்தங்களைத்

தங்களுக்காக வித்திட்டுக்கொள்கின்றனர் எனும் உண்மையானது பெற்றோர்களினால் முழுமையாகப் புரிந்துகொள்ளப்படாததாகத் தெரிகின்றது.

தன்கு மாரன்கு றித்துப் பிள்ளையாண்டான்சு கமாய்இ ருக்கிறானா? எ னும்இ ராஜாவாகிய தாவீதின் கேள்வியானது, தங்கள் குமாரர்கள் மற்றும் தங்கள் குமாரத்திகள் தொடர்புடைய விஷயத்தில் ஒவ்வொரு தகப்பனுடைய, ஒவ்வொரு தாயினுடைய கேள்வியாக இருந்திட வேண்டும்; ஆனாலும் தாவீது செய்ததுபோன்று செய்யாமல் இருப்பார்களாக - அதாவது பாவமானது முளைவிட்டுப் பூப்பூத்துத் தீமையின் கனிகளைக் கொணர்வதுவரையிலும் காத்துக்கொண்டு இருக்காமல் இருப்பார்களாக. தங்கள் பிள்ளைகள் விஷயத்திலிருக்கும் தங்கள் கடமைகளை உணர்ந்தவர்களாக, குழந்தைப்பருவம் முதற்கொண்டே இதை நிறைவேற்றத் துவங்குவார்களாக. தங்கள் பிள்ளைகள் விஷயத்தில் கிறிஸ்தவ பெற்றோர்கள் பெற்றிருக்கும் கடமையானது, கர்த்தருக்கு அவர்கள் பெற்றிருக்கும் தங்கள் கடமைக்கு அடுத்தப்படியானதாகும்; பரிசுத்தவான்களுடைய பூமிக்குரிய கடமைகள் அனைத்தின் மத்தியிலும், பெற்றோருக்குரிய கடமையானது முதலாவதாக இருக்கும்படிக்குக் கர்த்தர் சுட்டிக்காண்பித்துள்ளார் என்பது உண்மையே.

R4277

# துரோகம் புரிந்தவரிடத்தில் அன்பு பாராட்டப்பட்டது

## 2 சாமுயேல் 18:24-33

மூடபுத்திரன் தன் பிதாவுக்குச் சலிப்பும், தன்னைப் பெற்றவர்களுக்குக் கசப்புமானவன்.
- நீதிமொழிகள் 17:25

அப்சலோமுடைய வஞ்சகத்தைக் கொஞ்சமும் எதிர்பார்க்காத தாவீது இராஜா, அப்சலோம் இஸ்ரயேலின் இராஜாவாகியுள்ளார் என்றும், எபிரோன் இவரது தலைநகரம் என்றும் அறிவிக்கப்பட்டபோது மிகவும் அதிர்ச்சியடைந்துபோனார். சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாக இருக்கும் என்று அப்போஸ்தலன் எழுதியுள்ளார்; தாவீதின் இருதயம் அவரது குமாரனுடைய விஷயத்தில் வஞ்சகம் இல்லாமல் இருந்தபடியால், இப்பொழுது யுத்தம் வெளிப்படையாகப் பண்ணப்படுவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்தே, தனக்கு எதிராக சூழ்ச்சிகரமான விதத்திலும், அந்தரங்கத்திலும் இப்படிப்பட்ட இரண்டகமும், துரோகமும் நடைபெற்று வந்துள்ளது என்று தாவீது கற்பனைபண்ணிக்கூடப் பார்க்கவில்லை.

தன் தகப்பனைச் சிறைப்பிடிப்பதற்கும், அவர் இராஜ்யத்தைக் கவிழ்ப்பதற்குமான நோக்கத்தில், அப்சலோம் எருசலேமை நோக்கி இருபது மைல் தூரம் படையெடுத்து வந்துக்கொண்டிருக்கின்றார் என்று கேள்விப்பட்டபோது, தாவீது இராஜா உடனடியாக பாதுகாப்பான இடத்தைத் தேடிப்போனார்; இவரோடுகூட அறுநூறு புருஷர்களாகிய மெய்க்காப்பாளர்களும், இவரை ஆதரித்த கொஞ்சம் ஜனங்களும் போனார்கள்; இவர்கள் இவரோடுகூட இவருக்கு வரும் நல்லது கெட்டதை அனுபவிக்கப் போனார்கள். சந்தேகத்திற்கிடமின்றி பாதுகாப்பான இடத்தைத்தேடி ஒளிந்துகொள்வதற்கு அநேக காரணங்கள் இருந்திருக்கும்: (1) இவர், விசேஷமாக தன் தலைநகரத்தில் உள்நாட்டுப்போரின் பயங்கரங்களைத் தவிர்க்க விரும்பினார். (2) தன்னை எதிர்ப்பவன், அதாவது தனது சத்துரு, தன் சொந்தக் குமாரனாகக் காணப்படுவதினால், இவர் துக்கத்தில் மூழ்கிப்போனார். (3) அப்சலோம் ஜனங்களுடைய இருதயங்களைக் கொள்ளையடித்துள்ளார் என்பதற்கும், முன்பு தனக்கு நண்பர்களாய் இருந்தவர்கள் தனது சத்துருக்களாகியுள்ளனர் என்பதற்கும், இவர்கள் தன் சிறுமையைக் கண்டு பரியாசம்பண்ணி, அப்சலோமின்

வருகைக்கும், அவர் அரசாட்சி ஸ்தாபிக்கப்படுவதற்கும் மிகுந்த சந்தோஷத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர் என்பதற்கும் சான்றுகள் திரளாய் இருந்தன. துன்மார்க்கனின் நினைவுகளெல்லாம் தேவன் இல்லையென்பதே என்று ஆவியில் ஏவப்பட்டவராக தாவீது கூறியுள்ளார் (சங்கீதம் 10:4). ஆகையால் இந்த விஷயத்தில் கர்த்தருடைய சித்தம் என்னவாக இருக்கும் என்று சிந்திக்க இஸ்ரயேல் ஜனங்கள் தவறிவிட்டனர் என்பது உறுதியே; இதுவே இவர்களின் மகா தவறாய்க் காணப்பட்டது.

அந்நாள் தாவீது இராஜாவின் வாழ்நாளிலேயே இருளான நாளாக இருந்திருக்கும். தன் மெய்க்காப்பாளர்களோடுகூடத் தாவீது தன் சொந்தக் குடும்பத்திடமிருந்தும், தான் ஸ்தாபித்த தனது இராஜ்யபாரத்தினுடைய தலை நகரத்திடமிருந்தும், திவ்விய அபிஷேகித்தலுக்கு இசைவாக, தன் ஜீவியத்தையே எந்த ஜனங்களுடைய நலன்களுக்காகக் கொடுத்தாரோ, அந்த ஜனங்களிடமிருந்தும் தப்பி ஓடினார்; இந்த மெய்க்காப்பாளர்களில், அநேகம் அந்நியர்களும், இவர்களோடு ஒப்பிடுகையில் குறைவான எண்ணிக்கையில் சொந்த நாட்டவர்களும் காணப்பட்டனர். பெலிஸ்தரின் கரங்களிலிருந்து தங்களை இரட்சித்தவர் எனச் சில வருடங்களுக்கு முன்னதாக, சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று தன்னைப் புகழ்ந்து பாடின ஜனங்களிடமிருந்து, தாவீது தப்பி ஓடினார். பாவப்பட்ட முதியவர்! தெருக்களில் காணப்பட்ட கும்பல் அவரைச் சபித்து, அவர்மேல் கல்லெறிந்து, மண்ணைத் தூற்றினார்கள். இப்படித் துன்புறுத்தியவர்களில் ஒருவன் சவுலின் வீட்டாராய்க் காணப்பட்டான்; இவனுக்குத் தாவீது மிகுந்த இரக்கம் பாராட்டியிருந்தார்; இவனைக் கொல்லாமல், இவனை ஆதரித்து, இவனுடைய தேவைகள் சந்திக்கப்படுவதற்கு ஏற்பாடும்பண்ணியிருந்தார். இங்கு நிச்சயமாகவே தாவீதின் விசுவாசத்திற்கும், பொறுமைக்கும், அன்பிற்குமான பரீட்சை காணப்பட்டது. இவரது ஆரம்பகால வாழ்க்கையில் என்ன பண்ணியிருந்திருப்பார் என்பதை எங்களால் சொல்ல முடியவில்லை. எனினும் இவரது முழுச்சரித்திரமும் இவரை, மிகவும் சமசீரான மனதைக்கொண்ட மனிதனாகக் காட்டுகின்றது; எனினும் இவர் தெளிந்த புத்தியுள்ள மனதையும், கர்த்தருக்கு அர்ப்பணிக்கும் ஆவியினையும், விசுவாசம் மற்றும் நம்பிக்கை மற்றும் அன்புடன்கூடிய பக்தியின் ஆவியினையும் பெற்றிருந்த காரியமே, இவருக்குப் பிரதான பாதுகாப்பாய்க் காணப்பட்டது. துன்புறுத்தும் கும்பலை அச்சுறுத்தவோ, தூஷணத்திற்குப் பதிலாக தூஷிக்கவோ அல்லது வேறு ஏதேனும் விதங்களில் தன்னைத் தற்காத்துக்கொள்ளவோ முயற்சியாமல், தன்னைத் தூஷிக்கிறவர்களுக்கு, பழித்தூற்றுபவர்களுக்கு, தன்மேல் கல்லெறிபவர்களுக்கு எதிராக எந்தவித தீங்கும் செய்யாதபடி பார்த்துக்கொள்ள தாவீது இராஜா கட்டளையிட்டார். பிதா எனக்கு ஊற்றின பாத்திரத்தில், நான் பானம்பண்ணாதிருப்பேனோ என்பவை நமது ஆண்டவர் தாம் மரிக்கப்போவதற்குச் சில மணி நேரங்களுக்கு முன்பாகச் சொன்ன வார்த்தைகளாகும் (யோவான் 18:11); மேலும் ஆண்டவருடைய ஆவிக்கான உதாரணத்தை, இவருக்குச் சில விதங்களில் நிழலாகக் காணப்படும் இராஜாவாகிய தாவீதினிடத்தில் காண்கின்றோம்.

நான்காம் சங்கீதமும், மூன்றாம் சங்கீதத்தில் சில பாகங்களும், தன் தலைநகரத்தைவிட்டு, தாவீது தப்பி ஓடின தனது அனுபவங்களின் கண்ணோட்டத்திலிருந்து எழுதப்பட்டவைகள் என்ற அனுமானம் காணப்படுகின்றது. புலத்தலைவர்/Dean ஸ்டான்லி அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்: நான்காம் சங்கீதத்தில், அந்த நாளில் முதலாவது படுத்துத் தூங்கினது பற்றி நினைவுகூரப்பட்டுள்ளது என்று உத்தேசிக்கப்படுகின்றது; மூன்றாம் சங்கீதத்தில், அந்த இருபத்து நான்கு மணி நேரங்கள் கொண்ட நாள் நிறைவுபெற்றபோது, தாவீது நன்றி ஏறெடுத்தது தெரிவிக்கப்பட்டுள்ளது. இராஜா யோர்தானுக்குக்

கிழக்கிலுள்ள அரணிப்பான பட்டணமாகிய மக்னாயீமுக்குப் போகவேண்டும் என்றிருந்தார்; ஆனால் அந்தச் சிறு சேனையோ இரவிற்காக, மேற்கு பக்கத்தில் பாளயம் இறங்கினார்கள்.

## இரக்கமற்ற அப்சலோம்

எபிரோனிலிருந்து இருநூறு மனுஷருடன் அப்சலோமின் சேனை புறப்பட்டது; இவரது கலகத்திற்கு ஆதரவளித்த மக்கள் எண்ணிக்கை வேகமாய்ப் பெருகிக்கொண்டிருந்தது. மனுக்குலத்தின் பெலவீனம் எத்தனைப் பரிதாபத்திற்குரியதாகக் காணப்படுகின்றது. இந்தக் காட்சி, நமது கர்த்தருடைய அனுபவத்தை நமக்கு நினைப்பூட்டுகின்றது; நமது கர்த்தர் எருசலேமுக்குக் கழுதையின்மீது வந்தபோது, திரளான மக்கள் கூட்டம், தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா கூறினார்கள்; ஆனால் ஐந்து நாட்களுக்குப் பின்னரோ, இவரை அகற்றும், சிலுவையில் அறையும், எங்களுக்காகப் பரபாசை விடுதலைப்பண்ணும் என்று உரக்கக் கத்தினார்கள். இரண்டு சம்பவங்களிலுமே, இப்படி நடந்துகொண்டவர்கள், யூதர்கள் ஆவார்கள்; எனினும் நம்முடைய மனித இனத்திலுள்ள மற்றவர்களைவிட, இவர்கள் மட்டுமே இப்படி அதிகமாய் மாறும் இயல்பு கொண்டவர்கள் ஆவார்கள் என்று எண்ணுவதற்கு எந்தக் காரணமும் இல்லை.

அப்சலோம் வெற்றிகரமாய் எருசலேமிற்குள் நுழைந்துவிட்டார்; இவர் அநேகமாக வெற்றியின் மயக்கத்தில் இருந்திருக்க வேண்டும். இவர் செய்த விஷயங்கள் குறித்த பதிவுகள், அதாவது தன் தகப்பனைக் கனவீனப்படுத்துவதற்கும், அவரைக்குறித்து ஜனங்களுக்குக் கசப்பான தப்பெண்ணங்களை உண்டுபண்ணுவதற்கும் வேண்டி, இவர் பல்வேறு வழிகளில் பிரயாசம் எடுத்ததுகுறித்த பதிவுகள், அநேக (எதிர்கால) வாய்ப்புகளைப் பெற்றிருந்த இந்த வாலிபனில் வெளிப்பட்ட தற்பெருமையான, துரோகத்தனமான, இழிவான குணங்களுக்கு இசைவாகவே காணப்படுகின்றது. உயர்தளத்தில் இராஜாவின் புத்திரர்களாகக் காணப்படுகின்ற நாம், நம்முடைய இருதயங்களை ஊக்கமாய் ஆராய்ந்துப் பார்க்கின்றவர்களாகவும், நம்முடைய ஒவ்வொரு எண்ணத்தையும், வார்த்தையையும், கிரியையையும் கவனமாய்ச் சோதித்தறிகிறவர்களாகவும் காணப்பட வேண்டும்; நாம் கர்த்தருக்கும், மகா இராஜாவாகிய நம்முடைய தந்தைக்கும் முற்றிலும் உண்மையுள்ளவர்களாய் இருக்கின்றோமா என்று உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்; நாம் சுயத்திற்காக நாடுகின்றவர்களாக இல்லாமல், வெளித்தோற்றத்தில் மாத்திரம் தாழ்மையாய் இருப்பது போன்று காண்பித்துக்கொள்கின்றவர்களாக இல்லாமல், மாறாக இருதயத்தில் தாழ்மையுள்ளவர்களாகவும், பிதாவின் சித்தத்தைச் செய்வதற்கு முழு வாஞ்சையில் காணப்படுபவர் களாகவும் இருக்கின்றோமா என்று உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்; இன்னுமாக அவரது சித்தம் பாரமானவையல்ல என்றும், என் தேவனே, இதோ உம் சித்தம் செய்ய வருகின்றேன் என்றும் உண்மையாய்ச் சொல்ல முடிபவர்களாக இருக்கின்றோமா என உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். (சங்கீதம் 40:8)

## நீதிமானுக்கு வெற்றி

மூன்று மாதக்காலங்களாக, கலகம் அதிகரித்துக்கொண்டு வந்ததாகத் தெரிகின்றது. மற்றவர்கள் வாயிலாக அப்சலோம் மிகவும் கவனமாய் விதைத்த தூஷணம் மற்றும் உண்மையின்மை எனும் விதைகள், அநேகருடைய இருதயங்களில் ஆழமாய் வேர்விட்டது; இவர்கள் கர்த்தருக்கும், அவரால் அபிஷேகிக்கப்பட்டவருக்கும் எதிராக, கலகவாதிகளென அப்சலோமோடுகூட, அவரது நோக்கங்களை ஆதரிக்கும்படி தங்களை இணைத்துக்கொண்டனர். பல்வேறு திசைகளிலிருந்தும் வந்து

இணைந்துகொள்பவர்களினால், அப்சலோமின் சேனை வேகமாய்ப் பெருகிக்கொண்டே வந்தது; ஆனால் சொற்பமானவர்களே தாவீது இராஜாவுடன்போய் இணைந்துகொண்டார்கள். அப்சலோமின் சேனையினுடைய எண்ணிக்கை தெரிவிக்கப்படவில்லை; எனினும் இருபதாயிரத்திற்கும் அதிகமானபேர் வெட்டப்பட்டார்கள் என்றும், பெருந்திரளானவர்கள் தோற்கடிக்கப்பட்டு, எப்பிராயீம் காட்டிற்குள் ஓடிப்போனார்கள் என்றுமுள்ள பதிவிலிருந்து நம்மால் அப்சலோமின் சேனையினுடைய எண்ணிக்கைக்குறித்து உத்தேசிக்க முடிகின்றது. விசுவாசம் மற்றும் அன்பிற்குச் சோதனையான அந்த மூன்று மாதக்காலங்களில் தாவீதின் உணர்வுகள் எப்படியாக இருந்திருக்கும் என்பதை நம்மால் உத்தேசிக்க மாத்திரமே முடிகின்றது; ஆனாலும் இது விஷயங்களில் இவர் ஒரு வெற்றியாளனாய் இருந்திருப்பார் என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன. இவரது பொறுமை நிச்சயமாகவே வெளிப்பட்டிருந்திருக்க வேண்டும். தேவன் தம்முடைய உருக்கமான இரக்கங்களைத் தன்னைவிட்டு நீக்குவதில்லை என்றும், எல்லாத் தீங்குகளின்றும் தன்னை இரட்சிப்பார் என்றுமுள்ள திவ்விய வாக்குத்தத்தங்களை இவரது விசுவாசம் இறுகப் பற்றிக்கொண்டிருந்திருக்க வேண்டும். இவரது அன்பைப் பொருத்தமட்டில், தனது பொல்லாத, துரோகியான குமாரனுக்கான இவரது அன்புகூட நிச்சயமாகவே மிகவும் பெரிதாகக் காணப்பட்டது.

தாக்குதல் அப்சலோமினாலும், அவரது சேனையினாலும் வழிநடத்தப்பட்டது; தாவீதின் சேனைகளோ, அவரது திறமிக்க மூன்று தளபதிகளின்கீழ், மூன்று சிறு கூட்டத்தினராகப் பிரிக்கப்பட்டனர். இவர்கள் திட்டமிட்டே, யுத்தத்தைக் காட்டுப்பகுதிக்குள்ளாக நடத்தினார்கள்; இங்கு இந்தச் சிறு சேனைக்கு, எதிர் சேனையினைக்காட்டிலும் அனுகூலங்கள் இருந்தன. யுத்தத்தின் விளைவாக, அப்சலோமின் சேனைகள் முழுமையாக முறியடிக்கப்பட்டனர் மற்றும் கொல்லப்பட்டனர். காட்டிற்குள் தனது கழுதையின் மீது வந்துகொண்டிருந்தபோது, அப்சலோமின் தலை மரத்தின் கிளைகளுக்குள் சிக்கினது; கழுதை இவரைவிட்டு ஓடிப்போயிற்று; இவரது சேனை சிதறடிக்கப்பட்டபோது, இவர் மரத்தில் தொங்கிக்கொண்டிருந்தார். தாவீது இராஜாவின் போர்வீரர்களில் ஒருவன் இவரைக் கண்டான்; எனினும் வீரர்கள் யுத்தத்திற்குப் புறப்படுவதற்கு முன்னதாக, அவர்கள் அப்சலோமுக்கு எந்தத் தீங்கையும் உண்டுபண்ணக்கூடாது என்று இராஜா கண்டிப்புடன் கட்டளையிட்டிருந்தபடியால், அப்சலோமைக் கண்ட போர்வீரன், இவரைக் கொல்லவில்லை. ஆனால் அந்த வீரன் காரியத்தை இராஜாவின் பிரதான தளபதியாகிய யோவாபிற்கு அறிவித்தபோது, இவர் தயங்காமல், துரோகியைக் கொன்றுபோட்டார்; மேலும் இவரது கட்டளையின்பேரில் அப்சலோம் பெரிய கற்குவியலின்கீழ்ப் புதைத்துப்போடப்பட்டார்.

## பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?

தாவீது இராஜா தன் சேனையோடுகூடப் போருக்குச் செல்வதற்கு விரும்பினார்; எனினும் ஞானமுள்ள (வேறே) ஆலோசனையே மேலோங்கினது; காரணம் இவர் வயது சென்றவராக (சுமார் அறுபத்திரண்டு வயதை அடைந்தவராகக்) காணப்பட்டார்; இன்னுமாக இவரது துக்கத்தின் காரணமாகவும், தன் சத்துரு மீதுள்ள இவரது அன்பின் காரணமாகவும், இவர் யுத்தத்தை நடத்துவதற்கு மற்றவர்கள் அளவுக்கு மிகத் திறமிக்கவராக இருக்கமாட்டார். தனது படைத்தளபதிகள் மற்றும் ஆலோசகரின் அறிவுரைக்கு இணங்கினவராக, இராஜா மக்னாயீமிலேயே தங்கியிருந்து, தூதுவர்கள் வாயிலாக யுத்தத்தின் செய்திகளை அறிய ஒலிமுக வாசலில் காத்துக்கொண்டிருந்தார். இப்படி பார்த்துக்கொண்டிருந்தபோது, ஒருவன் ஓடிவருவதைப்பார்த்து, அவன் ஓடும் விதத்தை வைத்து அவன் யார் என்று அடையாளம்

கண்டுகொண்டு, அகிமாஸ் வருவதாக ஜாமக்காரன் அறிவித்தான். அப்பொழுது இராஜா: அவன் நல்ல மனுஷன்; அவன் நல்ல செய்தி சொல்ல வருகிறான் என்று உடனடியாகக் கூறினார் (வசனம் - 27); இவ்வார்த்தைகளில் எத்தகைய ஒரு பாடம் காணப்படுகின்றது! நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான் என்று நமது கர்த்தர் கூறினது போன்றதாகும் (மத்தேயு 12:35). இன்னொரு பக்கத்தில் கசப்பான இருதயத்திலிருந்து, கசப்பான வார்த்தைகளும், தீமை பேச்சுகளும், பாதகமான அம்புகளும் வரும் என்று பார்க்கின்றோம். நம்மைக்குறித்து நம்முடைய நண்பர்களும், நமக்குத் தெரிந்தவர்களும், இவன் நல்ல மனுஷன்; இவனது வார்த்தைகளில் ஆறுதலளிக்கும் ஏதோ ஒன்று காணப்படும். இவன் ஒருபோதும் சண்டை மூட்டுபவனாக இருந்ததில்லை; இவன் இருதயத்தைக் காயப்படுத்தமாட்டான்; இவன் யாருடைய நம்பிக்கைக்கும் துரோகம் செய்யமாட்டான் என்று கூறுமளவுக்கு நம்முடைய ஜீவியங்கள் காணப்பட வேண்டும்.

தூதுவன் ஓடிவந்து, இராஜாவுக்கு முன் முகங்குப்புற விழுந்து, இராஜாவை வணங்கி, சமாதானம் என்று கூறினான். இது உண்மையில் இராஜாவுக்கு நல்ல செய்தியாகக் காணப்பட்டது; எனினும் பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாய் இருக்கின்றானா? என்று இவர் கேட்ட முதல் கேள்வியிலிருந்து, தன்னைக் கனவீனப்படுத்தின, தனக்குத் துரோகம்புரிந்த, விரோதம் கொண்டு தன்னைப் பகைத்த குமாரனுக்காக இவர் கொண்டிருந்த அன்பை நாம் கவனிக்கின்றோம். இவரது பெலவீனம் என்று சொல்லும் அளவுக்கு, இவர் தன் குமாரன்மீது அன்பு கொண்டிருந்தார் என்று சிலர் எண்ணலாம்; இதைக் குறித்து நாங்கள் வாதாட வரவில்லை; எனினும் இவர் ஏதோ ஒரு பக்கத்தில் தவறுகிறவராகக் காணப்படுவாரானால், இவர் தன் சத்துருமீது அன்பு காண்பிக்காமல் காணப்படுவதற்குப்பதிலாக, தன் சத்துருமீது அதிக அன்பு காண்பிப்பவராகக் காணப்படுவது கர்த்தருக்கு மிகப் பிரியமான காரியமாகக் காணப்படும் என்றே நாங்கள் எண்ணுகின்றோம். இவரது இந்த அன்பின் வெளிப்படுத்துதலானது, எல்லா அன்பிலும் மேலான திவ்விய அன்பினை இராஜா ஓரளவுக்குத் திவ்விய பயிற்றுவித்தலின்கீழ்க் கற்றுக்கொண்டிருந்திருக்கின்றார் என்பதற்குச் சான்று பகருகின்றது. கலகம்புரிந்த நிலையில் காணப்பட்ட அப்சலோமின்மீது, இராஜாவாகிய தாவீது அன்பும், அனுதாபமும் கொண்டவராகக் காணப்படுவாரானால், அப்சலோம் இசைவான நிலையில் காணப்பட்டிருந்திருக்கும்போது, தாவீது இவரை எவ்வளவு கருத்தாய் அன்புகூர்ந்திருப்பார்; நாம் பாவிகளாய் இருந்தபோதே, தேவன் நம்மை அன்புகூர்ந்து, நமக்காக மரிக்கும்படி தம் குமாரனைக் கொடுத்திருப்பாரானால், இப்பொழுது அந்நியர்களாகவும், புறம்பானவர்களாகவும் காணப்படாமல், விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வாங்கப்பட்டவர்களாகவும், அர்ப்பணிப்பின் மூலம் அவரது பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களாகவும், இன்னுமாகப் பரிசுத்தமாக்கப்பட்டவர் களாகவும் காணப்படும் நம்மை, தேவன் இப்பொழுது எவ்வளவு அதிகமாக அன்புகூருவார்! (உரோமர் 5:8). மகா பூமிக்குரிய அன்பின் உதாரணத்தினை இந்நிழலில் பார்ப்பதினால், நாம் நன்மையடைகின்றோம்; ஏனெனில் பிதாதாமே உங்களைச் சிநேகிக்கின்றார் எனும் வார்த்தைகள் மூலம் ஆண்டவர் வலியுறுத்தும் மாபெரும் பாடத்தினை, இந்நிழல் நமக்கு நன்மைபயக்கும் விதத்தில் சித்தரித்துக் காட்டுகின்றது.

தன் குமாரனுக்காகத் தாவீதுகொண்டிருக்கும் அன்பினை நாம் பார்க்கும்போது, அப்சலோம் தப்பியோடின அந்நிய தேசத்திலிருந்து திரும்பிவருவதற்கு அனுமதிக்கப்பட்ட பின்னர், இரண்டுவருட காலங்களாக தாவீது தன் இருதயத்தினுடைய அன்பின் உணர்வுகளைத் தன் மகனாகிய அப்சலோமிடத்தில்


சரியாக வெளிப்படுத்தவில்லை என்று நாம் அனுமானித்துக்கொள்ளலாம். அந்த இரண்டுவருட காலங்களில் அப்சலோமைச் சந்திக்க இராஜா மறுப்புத் தெரிவித்திருந்தார்; இப்படியாக எதிர்ப்பும், பகைமையும் அப்சலோமில் வளரத்தக்கதான சூழ்நிலை உண்டாகுவதற்கு ஏதுவாக்கிவிட்டார். இதை நாம் குறிப்பிடுவதற்கான காரணம், இதில் அநேக பெற்றோர்களுக்கு ஒரு படிப்பினை இருக்கின்றது என்று நாங்கள் நம்புவதினாலேயே ஆகும். ஏதோ சில காரணங்களுக்காகப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இயல்புக்கும் அதிகமாகக் கடினமாய் நடத்திவிடும் தன்மையுடையவர்களாய் இருக்கின்றனர் என்றும், இப்படியாகத் தங்கள் இருதயத்தினுடைய உண்மையான பாசம்குறித்த விஷயத்தில் தங்கள் பிள்ளைகளுக்குத் தவறான அபிப்பிராயம் கொடுக்கின்றனர் என்றும் எங்களுக்கு அடிக்கடி தோன்றுகின்றது. பிள்ளைகளைக் கையாளும் விஷயத்தில் எவ்வளவுதான் கடினம் அல்லது கடுமை அவசியமாய் இருப்பினும், எவ்வளவுதான் சிட்சைகள் அவசியமாய் இருப்பினும், அனைத்துமே பிள்ளைகளுக்குப் பெற்றோருடைய அன்பைக்குறித்த முழு உறுதியினைக் கொடுக்கும் விதத்தில் காணப்படவேண்டும்; மேலும் கொடுக்கப்படும் தண்டனைகளானது, கடமையின் கண்ணோட்டத்திலும், பிள்ளைகளினுடைய நலனுக்கான கண்ணோட்டத்திலும் கொடுக்கப்பட்டுள்ளது எனும் விதத்தில் இருக்கவேண்டும். நீதி அருமையானதே, ஞானம் விலையேறப்பெற்றதே, தண்டனைகள் அவசியமானதே, ஆனால் எல்லாவற்றையும்விட அன்பே பிரதானமானதாய் காணப்படவேண்டும். ஆகையால் இந்தத் திவ்விய தரநிலைக்கு இசைவாக நம்மை - நமது கிரியைகளை, நமது வார்த்தைகளை, நமது ஒவ்வொரு சிந்தனைகளை நிதானித்துக்கொள்வோமாக. தூய்மையான அன்பினால் முழுமையாய் நிர்வகிக்கப்படாத எந்தக் கிரியைகளும், வார்த்தைகளும் அல்லது சிந்தனைகளும் நமக்கும் சரி, நாம் யார் விஷயத்தில் செயல்படுத்துகிறோமோ அவர்களுக்கும் சரி பாதகமானதாகவே இருக்கும்.

## என் மகனாகிய அப்சலோமே, என் மகனே!

நல்ல தூதுவன், இராஜாவுக்குத் தன்னால் முடிந்தமட்டும் கனிவோடு செய்தியை அறிவித்தான். சத்துருவின் சேனை எங்கே வந்தார்கள் என்பதையும், அப்சலோமை எங்கே சந்தித்தார்கள் என்பதையும் இத்தூதுவன் அறிந்திருந்தான்; எனினும் தனக்குத் தெரிந்த அனைத்தையும் சொல்லி, விவரங்களை யூகிக்க, தன் யூகங்களைப் பயன்படுத்துவதற்குப்பதிலாக, இவனது நல்லிருதயம், வெற்றி கிடைத்துள்ளது என்றும், பெரும் சந்தடி ஏற்பட்டதுபோன்று தெரிகின்றது என்றும், தனக்கு எல்லா விவரங்களும் தெரியாது என்றும் தெரிவிக்க மாத்திரம் வழிநடத்தினது. பின்னர்த் தொடர்ந்து ஓடி வந்த கூஷி, அப்சலோமின் மரணத்தைப்பற்றி அறிவித்தான். இராஜாவாகிய தாவீதின் இருதயம் மகா துக்கத்தில் நிலைகுலைந்தது. இப்படி நடந்துவிடுமோ என்றுதான் இவர் அஞ்சியிருந்தார். அப்பொழுது இராஜா மிகவும் கலங்கி, கெவுனிவாசலின் மேல்வீட்டிற்குள் ஏறிப்போய் அழுதான்; அவன் ஏறிப்போகையில்: என் மகனாகிய அப்சலோமே, என் மகனே, என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப்பதிலாகச் செத்தேனானால் நலமாய் இருக்கும்; அப்சலோமே, என் மகனே, என் மகனே, என்று சொல்லி அழுதான் (2 சாமுயேல் 18:33). இந்த வார்த்தைகளைக்குறித்து எழுதுகையில் எழுத்தாளர் ஒருவர்: பழைய ஏற்பாடு எங்கும், இந்த வார்த்தைகளைவிட மிகவும் பரிதாபகரமான வார்த்தைகள் வேறு எதுவும் காணப்பட்டதில்லை. இப்பதிவின் எளிமை, கவரும் வண்ணமாயுள்ளது; இதை வாசிக்கையில், கலகத்தனமான எருசலேம் பட்டணத்தைப் பார்த்தபோது, அந்நகரம் அதன்மீது கொண்டு வரும் அழிவை எண்ணி, அதற்காக கண்ணீர்விட்டவர் (இயேசு) குறித்து நாம் கண்டிப்பாக நினைப்பூட்டப்படுகின்றோம். (லூக்கா 19:41)

நான் உனக்குப் பதிலாகச் செத்தேனானால் நலமாயிருக்கும் என்ற வார்த்தைகளுக்கு, வேதவாக்கியங்களில் இரண்டு இணையான சம்பவங்கள் காணப்படுகின்றன. நியாயப்பிரமாண

உடன்படிக்கையின்கீழ் இஸ்ரயேலின் மத்தியஸ்தராகக் காணப்பட்ட மோசே, இதே மாதிரியான வார்த்தைகளை, ஜனங்கள் திவ்விய அதிருப்திக்கு ஆளாகி, இவர்களின் பாவங்களின் நிமித்தமாக, இவர்களைக் கொன்றுபோட கர்த்தர் நோக்கம் கொண்டிருந்தபோது கூறினார் (யாத்திராகமம் 32:32). இதேபோன்ற வார்த்தைகளைப் பரிசுத்த பவுல் அடிகளார் பின்வருமாறு கூறுகையில் பயன்படுத்தினார்: மாம்சத்தின்படி என் இனத்தாராகிய என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவைவிட்டுச் சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே (உரோமர் 9:3); அதாவது எனது இனத்தார், அவர்கள் தொலைத்த சுவிசேஷயுக சிலாக்கியங்களாகிய மகா ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமானால், நான் கிறிஸ்துவின் மகிமையான சபையிலுள்ள அங்கத்துவத்திலிருந்து விலகுவதும், பூமிக்குரிய திரும்பப்பெறுதலை அடையும் வகுப்பாரில் என் பங்கைப்பெற செல்வதுமாகிய தியாகத்தினைச் செய்ய விரும்புவேன் என்ற விதத்தில் கூறினார்.



*தாவீது, அப்சலோமுடைய மரணத்தின் நிமித்தம் துக்கித்தல்* - **Gustave Dore'**

நாம் கவிஞனான Longfellow அவர்களின் வார்த்தைகளை இங்கு நினைவுகூருகின்றோம்:

ஓ, அப்சலோமே, என் மகனே!”
இந்த மனித துயரத்தின் அலறலுக்கு,
கடந்தகாலம் என்ற எதுவும் இல்லையே.
துயர் எனும் வாசல்முன் எங்கள் இருதயம் எனும் அறையில்
காலம் அடையாளம் கண்டுகொள்ளப்பட முடியாதே.
துயர் நிறைந்த எங்கள் இருதயம்,
கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், எதிக்காலத்தையும் அறியாதே.

மரணம் எல்லோருக்கும் வரும் துக்கமாக இருப்பினும்,
இதற்கு ஆறுதல் கிடையாதே;
பிள்ளைகளின் மரணம் என்பது
எங்களுக்குத்தான் கசப்பான இழப்பு;
எங்களுடைய சிலுவைதான் அதிகப் பாரமுள்ளது.
என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப் பதிலாக
செத்தேனானால் நலமாயிருக்குமே!" என்றே
எப்பொழுதும் எங்கள் கதறல் காணப்படுமே!

அப்சலோமின் தற்பெருமை மற்றும் துரோகத்தனமான கலகத்தின் தாறுமாறான நடக்கையிலும், அந்த நாசகரமான கலகத்தினுடைய முடிவிலும், நாம் விரும்பத்தகாத தீமையான, தேவபக்தியற்ற வாழ்க்கைகுறித்த பாடத்தைப் பெற்றுக்கொள்கின்றோம் என்றால், தாவீதின் வாழ்க்கையில் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் மற்றும் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளருதல் பற்றின படிப்பினைகளைப் பெற்றுக்கொள்கின்றோம். முந்தின பாடங்களில், தாவீது மிகவும் பயங்கரமான குற்றத்தைப்புரிந்து, மூன்று திவ்விய கட்டளைகளை, போக்குச்சொல்ல இடமில்லாத விதத்திலும், வேண்டுமென்றும் மீறியிருந்தார் என்ற உண்மையினைக் கவனித்திருக்கின்றோம்; இவர் தன் அயலானுடைய மனைவியை இச்சித்துள்ளார்; அவளோடு விபச்சாரம் செய்துள்ளார். மறைமுகமாக அந்தப் பாதிக்கப்பட்ட கணவனைக் கொன்றும்போட்டுள்ளார். இந்தப் பாவங்களை வேதவாக்கியங்களானது மிகவும் திட்டவட்டமாய்க் கண்டிக்கின்றது; மேலும் இதுவரை நாம் பார்த்த இந்தக் கடுமையான அனுபவங்கள், அவர்மீது நீதியின் தண்டனையாகவே கடந்துவந்துள்ளது என்றும் வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன. எனினும் தாவீது தன் பாவங்களை ஒப்புக்கொண்டதும், அதற்காக அவர் மனம்வருந்தினதும், அவர் தன் இருதயத்தில் ஒரு கொலைகாரனாகவும், ஒரு விபச்சாரக்காரனாகவும் இல்லை என்பதற்குச் சான்று பகர்கின்றது. அவரது தவறான செய்கைகளைக் கர்த்தர் ஏற்க மறுத்தவராகவும், இதினிமித்தம் அவரைப் பாடுபட அனுமதித்தவராகவும் இருந்தபோதிலும், இருதயத்தைப் பார்க்கின்றவரான கர்த்தர், அவரை இறுதியில் அங்கீகரித்தார்.

இந்த இரண்டு மனுஷர்களில், யார் ஒருவரையும் நாம் பின்பற்றாமலிருந்து, அதே சமயம் இவர்கள் ஜீவியங்களிலிருந்து ஒரு மாபெரும் பாடத்தினையும், நன்மைபயக்கும் ஒரு பாடத்தினையும் அடையலாம். குடிப்பழக்கம் இருக்கக்கூடாது என்று போதிப்பவன், நான் ஒரு காலத்தில் குடிகாரனாய் இருந்தேன் என்று சொல்லும் அளவுக்குள்ள அனுபவத்தைக் கண்டிப்பாய்ப் பெற்றிருக்க வேண்டும் என்ற எந்த அவசியமும் காணப்படுகிறதில்லை; அதேபோல் தாவீதின் அனுபவங்கள் நமக்குக் கற்றுத்தரும் பாடங்களிலிருந்து நாம் நன்மை அடைவதற்கு வேண்டி, தாவீதைப்போன்று, அவர் செய்த பாவங்களை நாமும் செய்யவேண்டும் என்ற அவசியம் இருப்பதில்லை.

யேகோவா தேவனுடைய கிருபையின் வழிநடத்துதல்களை அடையாளங்காண கற்றுக்கொண்டிருக்கும் மனுஷன் பாக்கியவானாய் இருக்கின்றான்.

R1690 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## இராஜாவைத் திரும்ப அழைத்துவர நீங்கள் பிந்தினவர்களாயிருப்பானேன்?

### 2 சாமுயேல் 19

தாவீது இராஜா சாதோக் அபியத்தார் என்னும் ஆசாரியர்களிடத்துக்கு ஆள் அனுப்பி, நீங்கள் யூதாவின் மூப்பரோடே பேசி: இராஜாவைத் தம்முடைய வீட்டுக்குத் திரும்ப அழைத்துவர நீங்கள் மற்றவர்களுக்குப் பிந்திப்போவானேன்? நீங்கள் என் சகோதரர், நீங்கள் என் எலும்பும் என் மாம்சமுமானவர்கள்; இராஜாவைத் திரும்ப அழைத்துவர நீங்கள் பிந்தினவர்களாயிருப்பானேன் என்று சொல்லுங்கள்.
- 2 சாமுயேல் 19:9-12

இங்குப் பதிவுசெய்யப்பட்டுள்ள சரித்திரத்திற்கு ஒத்த காரியங்களை இன்றுள்ள உலகத்தில் நாம் காண்கின்றோம். அப்சலோமுடைய கலகத்தின் காரணமாகவும், ஜனங்களுடைய பலதரப்பட்ட மனநிலையின் காரணமாகவும், கொஞ்சக்காலம் அதிகாரப்பூர்வமான தலைவர் அல்லது இராஜா இல்லாததன் காரணமாகவும் இஸ்ரயேலின் சாம்ராஜ்யமானது ஒருவிதமான குழப்பத்திலும், ஒழுங்கீனத்திலும் விடப்பட்டிருந்தது.

அப்சலோம் மிகத் தந்திரமாக ஜனங்களுடைய இருதயங்களைத் தன் தகப்பனாகிய தாவீதிடமிருந்து தூரப்படுத்திவிட்டார்; இறுதியில் கலகம் உண்டானது. தாவீது பின்விளைவுகளை எண்ணி அஞ்சினவராக நகரத்தையும் நாட்டையும் விட்டு, யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள இடத்திற்கு ஓடிப்போனார்; இவரோடுகூடச் சில உண்மையும் உத்தமுமான ஜனங்கள் போனார்கள். ஒரு பெரும் யுத்தம் நடைபெற்று உடனடியாக கலகம் அமர்த்தப்பட்டது; கலகத்தை மூட்டினவனாகிய அப்சலோம் மரித்துப்போனான்.

பிற்பாடு தாவீது இராஜா இராஜ்யபாரத்தை எடுத்துக்கொள்ள முயற்சிக்கவில்லை; தான் திரும்பி வருவதற்குரிய இஸ்ரயேலரின் வாஞ்சை வெளிப்படுவதுவரையிலும் காத்திருந்தார்.

இதற்கிடையில் பதிவு பின்வருமாறு தெரிவிக்கின்றது: இஸ்ரயேலுடைய சகல கோத்திரங்களிலுமுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் வாக்குவாதம் உண்டாகி, அவர்கள் இராஜா நம்முடைய சத்துருக்களின் கைக்கு நம்மை நீங்கலாக்கிவிட்டார், அவர்தானே பெலிஸ்தரின் கைக்கு நம்மைத் தப்புவித்தார்; இப்போதோ அப்சலோமுக்குத் தப்ப, தேசத்தைவிட்டு ஓடிப்போனார். நமக்கு இராஜாவாக அபிஷேகம்பண்ணிவைத்த அப்சலோம் யுத்தத்திலே செத்தான்; இப்போதும் இராஜாவைத் திரும்ப அழைத்துவராமல் நீங்கள் சும்மாயிருப்பானேன் என்று சொல்லிக்கொண்டார்கள். (2 சாமுயேல் 19:9, 10)

இப்படியாகவே இன்று உலகத்திலும் காணப்படுகின்றது. பூமியின்மீது உரிமையுள்ள இராஜா, சிங்காசனத்தில் இல்லை; சிங்காசனத்தின்மீதான அவரது உரிமையினை உலகம் அடையாளம் கண்டுகொள்ளவுமில்லை; அவர் திரும்பிவருவதற்காக உலகம் வாஞ்சிக்கவுமில்லை. மனுஷர்கள் அரசாங்கத்தின் விஷயத்தில் தங்கள் சொந்தத் திட்டங்களிலும், வழிமுறைகளிலும் கவனம் செலுத்திக்கொண்டிருக்கின்றனர். இவர்கள் தங்கள் சொந்தத் தெரிந்துகொள்ளுதலின்படியாக பல்வேறு இராஜாக்களை அபிஷேகித்துள்ளனர்; உண்மையைச் சொல்லப்போனால், இவர்கள் தன்னாட்சிக்கடுத்த எல்லாக் கட்ட சோதனைகளையும் முயற்சித்துப் பார்த்திருக்கின்றனர்; ஆனால் இது ஒன்றன்பின் ஒன்றாக தோற்றேபோயுள்ளன. இப்பொழுது ஆறாயிரம் வருடக்கணக்கான மனித சோதனைக்குப்பின்பு, முழு உலகமும் கலகம் வெடிக்கக்கூடிய விளிம்பில் காணப்படுகின்றது; இந்தக் கலகத்தின் பலன் ஒழுங்கின்மையே தவிர, மற்றபடி எதுவுமில்லை.

## இராஜா அதிகாரத்திலும், மகா மகிமையிலும் திரும்பும்போது மாத்திரமே சௌக்கியம் வரும்

நாம் இராஜாவுக்காகக் காத்திருக்கும்போது, அவர் பெத்லகேமில் செல்லக் குழந்தையாகப் பிறந்து வருவார் என்று நாம் காத்திருக்கிறதில்லை; இன்னுமாக, தம்மை அனைவருக்குமான மீட்கும்பொருளாகக் கொடுத்தம னிதனாகியக ிறிஸ்துஇ யேசுவாக வ ருவார்எ ன்றுந ாம்க ாத்திருக்கிறதில்லை; மாறாக மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டவரும், மரணத்திலிருந்து ஓர் ஆவிக்குரிய ஜீவியென உயிர்த்தெழுப்பப்பட்டவரும், மனிதனாக அவர் காணப்பட்ட நிலைக்கு மேலாகவும், மனிதனாகுவதற்கென்று தம்மைத் தாழ்த்திக்கொள்வதற்கு முன்பு அவர் காணப்பட்ட ஆவியின் ஜீவி நிலைக்கு மேலாகவும், திவ்விய சுபாவத்திற்கு உயர்த்தப்பட்டவரும், மனித சுபாவத்திற்கும், தூதர் சுபாவத்திற்கும், வேறு எந்தச் சுபாவத்திற்கும் மேலாக உயர்த்தப்பட்டவருமானவருக்கே நாம் காத்திருக்கின்றோம். இதுவே நாம் காத்திருக்கும் இராஜாவின் சுபாவமும், மகிமையுமாகும்; மேலும் இவரது பிரசன்னமும், இராஜ்யமும் பூமியை ஒழுங்கின்மையினின்று வெளிக்கொண்டுவர முடியும் மற்றும் கொண்டும் வருவார்; இன்னுமாக தாம் மனிதனாக ஒருதரம், அதேசமயம் என்றென்றுமாக மனிதனுக்கான மீட்கும்பொருள் விலையாகக் காணப்பட்டபோது, தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் சம்பாதித்த ஆசீர்வாதங்களை உலகத்திற்கு வழங்குவார்.

## இராஜாவைத் திரும்பக்கொண்டுவருவதற்கு ஆதரவாய்ப் பேசுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்

ஆ! ஆம்! இதுவே சுயநலம் எனும் நோயைக் குணமாக்குவதற்குப் போதுமான ஒரே நிவாரணியாகவும், சமுதாயம், அரசியல் மற்றும் பொருளாதாரம் எனும் உலகத்தினின்று சுயநலத்தை அடியோடு அழிப்பதற்கு ஏதுவானதாகவும் காணப்படுகின்றது.

## ஆனாலும் அவர் வரும் நாளை சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்?

இராஜாவின் வருகை என்பது, ஒரு தனிப்பட்ட, அதே சமயம் தேசிய மற்றும் சபையின் சோதனையாக, நியாயத்தீர்ப்பாக மற்றும் சிகிச்சையாக/நடவடிக்கையாகக் காணப்படும். ஆனாலும் அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப்போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப்போலவும் இருப்பார் (மல்கியா 3:2). இராஜாவின் வருகை என்பது, எந்த ஒரு பூமிக்குரிய சீர்த்திருத்தவாதியினாலும் ஒருபோதும் முயற்சிக்கப்படாத அளவுக்குக் குற்றங்கள்புரிவதைக் குறுக்கிடுகின்றதாகக் காணப்படும். எந்தவிதமான தீமையினைச் செய்வதற்கோ அல்லது தீயவழியில் காணப்படுவதற்கோ எந்த உரிமையும் அப்போது இராது. சரியானதைச் செய்வதற்கு மாத்திரமே சுதந்தரம் காணப்படும்.

ஆ! ஆம்! இராஜா திரும்பிவருவதைக்குறித்து வெகுசிலரே எதிர்பார்க்கின்றவர்களாகவும், பேசுகின்றவர்களாகவும் இருப்பதுகுறித்து ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை! சிலருக்கு இராஜா திரும்பிவருவது என்பது, சக மனிதர்கள் அனுபவிப்பதைக்காட்டிலும், தற்கால அனுகூலங்களை இவர்கள் அனுபவிப்பதைக் குறைத்துப்போடும் காரியமாய்த் தோன்றும். வேறு சிலருக்கு இராஜாவின் திரும்பிவருதல் என்பது, சகமனிதர்களைவிட தாங்கள் அனுகூலமான காரியங்களில் அல்லது முதன்மையான நிலைகளில் அல்லது கனங்களில் உயரும்படிக்கு எதிர்பார்த்த உயர்வுகளுக்குத் தடைவிதிப்பதுபோன்று தோன்றும். இன்னும் வேறு சிலருக்கு, இராஜாவின் திரும்பிவருதல் என்பது, இப்பொழுது அவர்கள் ஈடுபட்டிருக்கும் மற்றும் அனுபவிக்கும் பாவங்களுக்குத் தடைவிதிப்பதுபோன்று தோன்றும்.

எனினும், உம்முடைய இராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோன்று, பூமியிலும் செய்யப்படுவதாக என்று ஜெபிக்கும்படிக்குச் சபைக்கு இராஜா கற்றுக்கொடுத்திருந்த இராஜ்யமும், இராஜாவும் வந்துகொண்டிருக்கின்றனர். உண்மையைச் சொல்லப்போனால், அவர் இங்குதான் இருக்கின்றார்; சபையிலும், நாடுகளிலும் இப்பொழுது காணப்படும் பிரச்சனைகள், அந்த இராஜா மற்றும் இராஜ்யத்திடமிருந்து வெளிப்படும் செல்வாக்குகளின் விளைவுகளேயாகும். மனுஷர் இதை அறியவில்லை என்றாலும், இந்தத் தேவ இராஜ்யத்தின் அடிகளே, பூமியின் இராஜ்யங்கள் அனைத்தும் அழிக்கப்படுவதற்குரிய ஆயத்தங்களை இப்பொழுது பண்ணிக்கொண்டிருக்கின்றது; இவ்விதமாக மனுஷரின் இருதயங்களானது, உண்மையான இராஜாவிற்காகவும், அவரது நீதியான ஆளுகைக்காகவும் ஆயத்தப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதையே கர்த்தர் தீர்க்கதரிசி மூலம் முன்னுரைத்துள்ளார். (தானியேல் 2:34,35)

எனினும், மகிமையின் இராஜா அவர் வருவதற்காகவும், அவர் ஆளுகையை எடுத்துக் கொள்வதற்காகவும் ஜெபம்பண்ணப்படும்படியாகக் காத்திருக்கின்றார். அவர் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினர்கள் மற்றும் தரப்பினர்கள், ஒருவர் இன்னொருவரை வெட்டுவதற்கும், அறுவை சிகிச்சை பண்ணுவதற்கும், பாகங்களை வெட்டி எரிவதற்கும், ஒருவர் இன்னொருவரை ஆயத்தப்படுத்துவதற்கும், அனுமதித்துவிடுவார். ஆனால் இவைகள் அனைத்தும் இராஜாவினுடைய பார்வையின்கீழ் நடக்கும்; அவரது வல்லமைக்கு உட்பட்டேயிருக்கும். பின்னர் அனைவரும் இப்படி வியாதிப்பட்டிருக்கையில், நல்ல மருத்துவராக அவர் உட்பிரவேசித்து, கீலேயாத்தின் தைலத்தை கொடுப்பார்; பின்னர் அவரும், அவருடைய இராஜ்யமும், பரவலாக சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டது என்று வாழ்த்தப்படும் (ஆகாய் 2:7). இதில் முதலாவது யூதர்கள் இடம்பெறுவார்கள். ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள் (சகரியா 12:10); தம் பிரசன்னத்தையும், இராஜ்யத்தையும் இவர் வெளிப்படுத்தும்போது, இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம்; இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம்; இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும் (ஏசாயா 25:9); திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் (இராஜ்யம்) பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார்; நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். (ஏசாயா 2:3)

நிச்சயமாகவே மனுஷருடைய தப்பிதங்கள் மற்றும் துன்பங்களுக்கு இராஜாவும், அவரது இராஜ்யமும்தான் ஒரே தீர்வு என்றும், சிறந்த தீர்வு என்றும் அறிந்துகொள்பவர்கள், இதைத் தவிக்கும் சிருஷ்டிக்குச் சுட்டிக்காண்பிக்க வேண்டும்; மாறாக எந்த மெய்யான நன்மையினையும் கொணராத தங்கள் சொந்த மருந்துகளைச் சுட்டிக்காண்பிக்கக்கூடாது. இராஜா திரும்பிவந்திருக்கின்றார் என்று ஜனங்களுக்குத் தெரிவியுங்கள். அவர்தான் மாபெரும் தீர்க்கதரிசி என்றும், மாபெரும் ஆசாரியன் என்றும், மகா இராஜா என்றும் தெரிவியுங்கள்; (தலையாகிய கிறிஸ்து மற்றும் சரீரமாகிய அவரது சரீரம்) அவர் தீர்க்கதரிசியென முழுப்பூமியையும் கர்த்தரைப்பற்றின அறிவினால் நிரப்புவார்; அவர் ஆசாரியனென, இந்த அறிவின்கீழ்ப் பாவத்திலிருந்து நீதியினிடத்திற்குத் திரும்பும் யாவரையும் மன்னிக்கவும், இவர்களுக்கு உதவவும் ஆயத்தமாய்க் காணப்படுவார். அவரது மரணமே அனைவருக்குமான மீட்கும்பொருள் விலை என்றும், இராஜா திரும்பிவரும்போது, சாத்தான் கட்டப்படுவார் என்றும், புதிய உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளின்கீழ், தேவனுடைய புத்திரர்களாகுவதற்குரிய சுதந்தரத்தை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரையும், சாத்தானின் சிறையினின்று விடுவிப்பார் என்றும் தெரிவியுங்கள். (அப்போஸ்தலர் 3:22-23; கலாத்தியர் 3:29; 1 கொரிந்தியர் 6:2)

---

R2031

# தாவீது தேவனுக்கு நன்றியுள்ளவராய் இருந்தார்
## 2 சாமுயேல் 22:40-51

கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகருமானவர். - 2 சாமுயேல் 22:2

சாமுயேல் தீர்க்கத்தரிசி மூலம் அபிஷேகம்பண்ணப்பட்டது முதற்கொண்டும், இதற்கு முன்பும் தனக்குத் தேவன் செய்துள்ள நன்மைகளுக்காகவும், அன்புடன்கூடிய ஏற்பாடுகளுக்காகவும், தேவனுக்கு நன்றியும், துதியும் தாவீது ஏறெடுக்கும் அவரது பாடல்களில் ஒன்றாக இந்த முழு அதிகாரமும் காணப்படுகின்றது. இது இவரது இன்னொரு சங்கீதத்தின் வார்த்தைகளை நமக்கு நினைப்பூட்டுகின்றது; நீதிமான்களே, கர்த்தருக்குள் களிகூருங்கள்; துதி செய்வது செம்மையானவர்களுக்குத் தகும் (சங்கீதம் 33:1). உண்மைதான் தாவீது மற்றும் தீர்க்கத்தரிசிகள் மற்றும் அப்போஸ்தலர்கள் ஆகியோரின் எழுத்துகள், தேவனுக்குத் துதியையும், நன்றியையும் ஊக்கமாய்ச் சாற்றும் வார்த்தைகளினால் நிறைந்துள்ளது. இவர்கள் அன்போடும், நன்றியோடும் அவரது இரக்கங்கள் அனைத்தையும் மீண்டுமாக எண்ணிப்பார்த்து, கர்த்தரைத் துதிப்பதோடு மாத்திரமல்லாமல், மனுபுத்திரர் யாவரும், சுவாசமுள்ள யாவும், உயிரற்ற இயற்கையும்கூடத் தேவனுடைய பரிசுத்த நாமத்தைப் புகழவும், அவருடைய நாமத்தை மேம்படுத்திக் கூறவும், பரிசுத்த ஊக்கத்துடனும், நாவன்மையான பேச்சாற்றலுடனும் அழைப்புவிடுக்கின்றனர். ஆராதிப்பவர்களும் அவரைத் துதிக்க வருகையில், அவர்கள் மனித கண்டுபிடிப்புகளாகிய அனைத்துக் கீதவாத்தியங்களுடன் வரும்படியாகக் கட்டளையிடப்பட்டுள்ளனர்; நன்றியுடன்கூடிய பயபக்தியுடன், அவருடைய மகிமை பொருந்திய நாமத்துக்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக; பூமி முழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருப்பதாக. ஆமென், ஆமென் என்று சொல்லப்பட்டுள்ளது. சங்கீதம் 72:19; சங்கீதம் 33:2, 3; 50:1-6; 72:19; யாத்திராகமம் 15:1-21 வரையிலான வசனங்களையும் பார்க்கவும்.

இப்படியாக வேதவாக்கியங்கள் மூலம் ஒட்டுமொத்த மனுக்குலமும் துதிப்பதற்கும், ஆராதிப்பதற்கும் ஸ்தோத்திரிப்பதற்கும் அழைக்கப்பட்டுள்ளனர் என்று நாம் பார்த்த பிற்பாடு, துதியின் ஆவிக்கும், கிறிஸ்தவ குணலட்சணத்துக்கும் அல்லது தேவபக்தியுள்ள குணலட்சணத்துக்கும் இடையிலுள்ள தொடர்பைப் பார்க்க வழிநடத்தப்படுகின்றோம். துதிசெய்வது செம்மையானவர்களுக்குத் தகும் என்று தாவீது கூறியுள்ளார். ஆனால் ஏன் இப்படிக் கூறியுள்ளார்? ஏனெனில், தேவனுடைய சாயலைப் பெற்றிருக்கும் ஆத்துமாவில், தேவனால் நடப்பட்ட உணர்வுகளில் ஒன்று அன்புடன்கூடிய நன்றியுணர்வாகும்; இன்னுமாக இது வளர்த்தி, விருத்தி செய்யப்பட வேண்டிய ஒன்றாகவும் உள்ளது. அறிவுள்ள ஜீவியினிடத்திலுள்ள இந்த அம்சமே, திவ்விய நன்மைகளுக்கும், கருணைக்கும் மறுமொழி கொடுக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது; மனுஷனிடத்திலுள்ள இந்தக் குணத்தின் அம்சமே, தேவனுடன் உறவினையும், ஐக்கியத்தினையும் கொண்டிருப்பதைச் சாத்தியமானதாக்குகின்றது. ஒருவேளை தேவன் செய்துள்ள நன்மைகள், நம்மில் நன்றியுணர்வின் புலன்களை விழித்தெழுப்பப் பண்ணவில்லையெனில் . . . ஒருவேளை இவ்வுணர்வுகள் விஷயத்தில் நாம் முற்றிலும் மரித்தவர்களாய்க் காணப்படுகின்றோமெனில், நமக்கு நன்மைசெய்வதிலும் தேவன் பிரியம்கொள்ளமாட்டார்; அப்படியானால் அவர் நம்மேல் அன்புவைப்பதற்கு, நம்மில் எதுவும் இராது; இன்னுமாக அவரது நன்மைகளும், கிருபைகளும், எதுவுமே நம்மில் அன்பைத் தட்டியெழுப்பாது. ஆனால் நாம் தேவனுடைய சந்தோஷத்திற்காக சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றபடியால் (வெளிப்படுத்தல் 4:11), தேவன்

தம் அறிவுள்ள சிருஷ்டிக்கு (நன்றியுணர்வு என்ற) இந்தக் குணத்தின் அம்சத்தினை அருளியுள்ளார்; இந்த அம்சமானது அவரது நன்மைகளுக்கு மறுமொழி கொடுக்கின்றபடியால், இது அவரோடு ஜீவனுள்ள மற்றும் மகிழ்ச்சியான ஐக்கியத்தினை உருவாக்குகின்றது; இப்படியான ஐக்கியம் என்பது மனித வாழ்க்கையின் பிரதான இலக்காகக் காணப்படுகின்றது; இதுவே சிருஷ்டியின் விஷயத்திலும், சிருஷ்டிகரின் விஷயத்திலும் பிரதான விருப்பமாகக் காணப்படுகின்றது. (சங்கீதம் 16:11; நீதிமொழிகள் 11:20; 15:8)

களிகூருதலும், துதியின் ஆவியும், திவ்விய ஒழுங்கில் பிரிக்க முடியாதளவுக்கு ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்துக் காணப்படுகின்றது; ஆகையாலே இவைகளை இணைத்து தாவீது, நீதிமான்களே, கர்த்தருக்குள் களிகூருங்கள்; துதிசெய்வது செம்மையானவர்களுக்குத் தகும் என்று கூறியள்ளார் (சங்கீதம் 33:1); இப்படியாக இரண்டையும் கிட்டத்தட்ட ஒரே பொருளுடையவைகளாக ஆக்குகின்றார். இந்தக் கொள்கையினை விவரிக்க, நாய் மற்றும் பன்றியின் உதாரணத்தினை எடுத்துக்கொள்ளலாம். இவைகள் இரண்டுமே தேவனுடைய மனதின் சாயலில் சிருஷ்டிக்கப்படாததினால், இவைகள் இரண்டினாலும் திவ்விய நன்மைகளை உணர்ந்துகொள்ள முடியாது; ஆகையால் இவைகளால் தேவனைப் பற்றி அறிந்துகொள்ளவோ அல்லது சிந்திக்கவோ முற்றிலும் முடியாது. இந்த நாய் மற்றும் பன்றியினால் எந்தவிதத்திலாகிலும் அறிய முடிகின்ற ஓர் உயர்ந்த ஜீவியாக மனிதன் இருக்கின்றான்; இதற்கு முதல் காரணம், இவைகளுக்கு மனிதனைக் கண்களினால் பார்க்க முடிகின்றது மற்றும் தொட்டுணர முடிகின்றது; இரண்டாவது காரணம், இவைகளின் சில புலன்கள் மிகவும் தாழ்ந்த மட்டத்தின் புலன்களாகவும், மிகவும் குறுகிய வட்டத்தில் செயல்படுத்தப்படுபவைகளாகவும் இருந்தாலும், இந்தப் புலன்கள் மனிதனிடம் காணப்படும் சில புலன்களுக்கு ஒத்திருக்கின்றது. நாயானது அதனிடத்தில் கொஞ்சம் நன்றியுணர்வினைப் பெற்றிருக்கின்றது; நாய்க்கு உணவுகொடுத்து, அதைக் கொஞ்சிப்பாருங்கள், அது நன்றியினையும், பாசத்தையும் வெளிப்படுத்தும் அறிகுறிகளைக் காண்பிக்கும்; இன்னுமாக அதன் நன்றியுணர்வை உங்களுக்கு வெளிப்படுத்த விரும்பும். நாய் அதன் வாலை ஆட்டும்; உங்கள் முகத்தைப் பாசத்தோடு பார்க்கும்; உங்கள் கைகளை நக்கிக்கொடுக்கும்; அதன் தலையை வைத்து உங்களிடத்தில் கொஞ்சும்; உங்களுக்காக என்ன செய்யலாம் என்று பார்த்துக்கொண்டிருக்கும். ஆனால் பன்றியோ நன்றியுணர்வை இப்படி வெளிப்படுத்திக்காட்டாது; தனக்குக் கிடைக்கும் உணவையெல்லாம் எடுத்துக்கொள்ளும்; நன்றியை வெளிப்படுத்தும் ஒரு பார்வையைக்கூடக் கொடுக்காது; அதன் கண்கள் எப்போதும் கீழேயே பார்த்துக்கொண்டிருக்கும்; அதன் மூக்கு தரையில் உணவிற்காகத் தொடர்ந்து தேடிக்கொண்டிருக்கும்; உறுமல் சத்தமாகிய ஒரே ஒரு சத்தத்தை மாத்திரம் அது கொடுக்கும். ஆகையால் ஒரு பன்றியினால் மனுஷனில் எந்தச் சந்தோஷத்தையும் அடையமுடியாது; அதேபோல் மனுஷனாலும் பன்றியில் எந்தச் சந்தோஷத்தையும் அடைய முடியாது. மனிதனுக்கும், பன்றிக்கும் இடையில் எவ்விதமான ஐக்கியத்தின் பந்தமும் இருக்காது; பன்றி வெட்டப்படுவதற்கும், சந்தையில் விற்கப்படுவதற்குப் பொருத்தமான அளவில் வளருவது வரையிலும்தான், மனுஷன் அதை உயிரோடு விட்டுவைத்திருப்பான். ஆனால் நாய்க்கும் அதன் எஜமானுக்கும் இடையில் கவனிக்கும்போது, வலுவான நட்பு காணப்படும்; மேலும் இது விருத்திப்பண்ணப்படும்போது, அது இருவருக்குமே மகிழ்ச்சியைக் கொண்டுவரும்; சந்தையில் அந்த நாயின் விலை என்னவாகக் காணப்பட்டாலும் இதைப் பொருட்படுத்தாமல், இருவரும் வாழ்நாள் முழுவதும் நண்பர்களாகக் காணப்படுவார்கள்.

ஆகையால் துதித்தலின் ஆவியினையும், ஸ்தோத்திரபலியின் ஆவியினையும், தேவனுடைய நன்மைகள் அனைத்திற்கும் அன்போடு நன்றி ஏறெடுக்கும் தன்மையினையும் வளர்த்து

விருத்தியாக்குவதிலேயே, சந்தோஷமான ஜீவியத்தைப் பெற்றிருப்பதற்குரிய கிறிஸ்தவனின் இரகசியம் காணப்படுகின்றது என்பது தெளிவாய்த் தெரிகின்றது. மேலும் இத்தகைய ஆவியை வளர்த்த வேண்டுமானால், நாம் எப்போதும் அவரது இரக்கம் மற்றும் கிருபையின் செய்கைகளை நினைவுகூர்ந்து கொண்டிருக்க வேண்டும்; இன்னுமாக அவரது நன்மைகள் யாவையும் நாம் எப்படி நினைவுகூர்ந்து கொண்டிருக்கின்றோம் என்று நம்முடைய ஜெபத்தில், நாம் அவரிடம் அடிக்கடி கூறவேண்டும்; இன்னுமாக ஒவ்வொரு முறையும் அவரது அன்பையும், பராமரிப்பையும் அடையாளம் காணும்போது, அது எவ்வாறு விசுவாசத்தினைஆ ழமாய்ே வர்விடச்ெ சய்கின்றதுஎ ன்றும்,அ வர்கூ டவேஇ ருப்பதையும்,அ வரது தயவையும் இன்னும் அதிகம் முழுமையாய் உணர்ந்துகொள்ளச் செய்கின்றது என்றும் நம்முடைய ஜெபத்தில் நாம் அவரிடம் அடிக்கடி கூறவேண்டும்; இன்னுமாக இத்தகைய அனுபவங்கள் வாயிலாக எப்படி நமது அன்பும், சந்தோஷமும் அதிகமதிகமாய்ப் பெருகுகின்றது என்றும் நம்முடைய ஜெபத்தில் நாம் அவரிடம் தெரிவிக்கவேண்டும். அவர் நம்மை முதலாவது அன்புகூர்ந்தபடியால், நாம் அவரை அன்புகூருகின்றோம்; மேலும் அவரது அன்பிற்கான ஏதோ சில புது அடையாளங்களை நாம் பார்க்கும் ஒவ்வொரு முறையும், ஒருவேளை நாம் உண்மையில் நன்றியுணர்வுள்ள இருதயங்களைப் பெற்றிருப்போமானால், நமது அன்பு அதிகமதிகமாய் வெளிக்கொணரப்படும்; மேலும் நாம் தேவனில் களிகூர உதவப்படுவோம்; அவருடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தம் காணப்படுகின்றது. இதற்காகவே கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாய் இருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள் என்று கூறி, தேவனுடைய தயவுகளுக்கான பெரிதான விண்ணப்பங்களுடன், நாம் ஜெபத்தில் அடிக்கடி தேவனிடம் வரும்படியாக, நமது கர்த்தர் ஊக்குவிக்கின்றார். (யோவான் 16:24)

தங்களுக்குக் கர்த்தர் செய்துள்ளவைகளை நினைத்துப்பார்ப்பதன் மூலமும், திரும்பத்திரும்ப எண்ணிப்பார்ப்பதன் மூலமும், இஸ்ரயேலர்களில் இந்தத் துதித்தலின் ஆவி விதைத்து, வளர்க்கப்பட்டுள்ளது என்று நாம் கவனிக்கின்றோம். நான் உன்னை நினையாமலும், எருசலேமை என் முக்கியமான மகிழ்ச்சியிலும் அதிகமாக எண்ணாமல்போனால், என் நாவு என் மேல் வாயோடு ஒட்டிக்கொள்வதாக என்று தாவீது கூறுகின்றார் (சங்கீதம் 137: 6). (யாத்திராகமம் 15:1-21; உபாகமம் 7:17-18; 8:2; 15:15; 32:7; 1 நாளாகமம் 16:12; சங்கீதம் 20:7; 63:5-7; 143:5-6; 77:10-12-ஆம் வசனங்களையும் பார்க்கவும்).

இப்படியே கிறிஸ்தவனும், கர்த்தருடைய கிரியைகளையும், அதிலும் விசேஷமாகக் கர்த்தருடைய வழிநடத்துதல் பற்றின தனிப்பட்ட அனுபவங்களையும், ஆபத்துக்கள் மற்றும் கண்ணிகள் மற்றும் எதிராளியானவனின் தந்திரங்களில் பாதுகாப்பும், விடுதலையும் கொடுக்கப்பட்டதையும் தொடர்ந்து மனதில் நினைவுபடுத்திப்பார்க்க வேண்டும். இவைகளை நமது மனதில் நிறுத்திக்கொண்டு, இவைகளைத் தியானித்துக் காணப்படுவோமானால், தேவன் மற்றும் அவரது நன்மைகள் பற்றின நம்முடைய உணர்ந்துகொள்ளுதலானது வளரும்; அன்பு மற்றும் துதித்தலின் ஆவி இருதயத்தில் ஆக்கிரமித்துக் காணப்படும்; இப்படியாக நாம் எப்போதும் கர்த்தரில் களிகூரவும், எல்லாவற்றிலும் நன்றி ஏறெடுக்கவும் உதவப்படுவோம். இப்படியாக ஆத்துமா தேவனுக்காகப் பசிதாகம் கொள்கின்றது; இன்னுமாகத் தேவன் மாத்திரமே நமது இருதயத்தின் திருப்தியாய் இருக்கின்றார் என்று உணரச்செய்து, அதிகமதிகமாய் அவரது பரிபூரணத்தை வாஞ்சிக்க செய்யும். ஆகையாலே சங்கீதக்காரன் நம்முடைய ஜெபங்கள், மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது என்பதாகக் காணப்படும்படிக்கு அறிவுரை வழங்குகின்றார். (சங்கீதம் 42:1)

பிரதிபலனாக அன்புடன்கூடிய இரக்கத்தினையும், தயாளகுணத்தினையும் உண்டுபண்ணுகின்ற நன்றியறிதல் மற்றும் துதித்தல் பற்றிய இதே கொள்கையானது, மனித நட்பையும், ஐக்கியத்தினையும் வெற்றிகரமானதாகவும், சந்தோஷகரமானதாகவும் ஆக்குகின்றது. நாம் ஒருவரோடு ஒருவர் சம்பாஷிக்கையில், நாம் காண்பிக்கும் அன்பானது, எவ்விதமான நன்றியுணர்வினையும் தட்டியெழுப்ப வில்லையெனில், எவ்விதமான அங்கீகரிப்பையும் பெற்றுக்கொள்ளவில்லையெனில், ஆனால் அன்பை மட்டும் நாம் தொடர்ந்து காட்டிக்கொண்டிருக்கும்படி எதிர்பார்க்கப்படுகின்றதானால், ஐக்கியம் என்ற ஒன்று ஏற்படுவதில்லை. உண்மைதான், இப்படியாக நடந்துகொள்பவர்களிடம் கிறிஸ்தவர்களென நாம் அன்பையும், தயாளத்தையும் குறைக்கமாட்டோம்; ஏனெனில் நாம் நம்முடைய பரம பிதாவைப்போன்று, நன்றியற்றவர்கள் மீதும், நன்றியுள்ளவர்கள் மீதும் அன்புபாராட்ட வேண்டும் (மத்தேயு 5:44-48); எனினும் இந்த அன்பானது ஒருவரிடத்தில் நன்றியறிதலை/உணர்ந்துகொள்ளுதலை மற்றும் அன்பைத் தட்டியெழுப்பவில்லையெனில், ***ஐக்கியம்*** ஏற்படுவது என்பது சாத்தியமற்ற காரியமாக இருக்கும்.

தாவீது தனது சத்துருக்கள்மீது அடைந்த வெற்றிகளுக்காக ஸ்தோத்தரிக்கையில், அந்தச் சத்துருக்கள் கர்த்தர் மற்றும் அவரது ஜனங்களின் சத்துருக்களாக இருக்கின்றனர் என்றும், இவர்களை ஜெயிப்பதற்குத்த ாவீதுே தவனால்க ட்டளையிடப்பட்டுள்ளார்எ ன்றும்ந ாம்க வனிக்கின்றோம்.இ ந்த யுத்தங்களை, இவர் தேவன் அருளின பெலத்தில் மேற்கொண்டபடியால், இந்த வெற்றிகள், தனது இரட்சிப்பின் கன்மலையான தேவனுக்கே உரியவைகள் என்று சரியாய்க் காரணம் காட்டுகின்றார். இந்த வார்த்தைகள்,எ திர்காலத்தின்க ண்ணோட்டத்தில்ப ார்க்கப்படும்போது,இ வைகள்க ிறிஸ்துவினுடைய வெற்றிகள் குறித்த தீர்க்கத்தரிசனங்களாகவும் இருக்கின்றன; கிறிஸ்துவுக்குத் தாவீது நிழலாகக் காணப்படுகின்றார்; மேலும் கிறிஸ்துவுக்கு யேகோவா தேவன், அவரது சத்துருக்கள் அனைவரின்மீதும் - அதாவது தேவனுடைய சத்துருக்கள் அனைவரின்மீதும், சத்தியம் மற்றும் நீதியின் சத்துருக்கள் அனைவரின்மீதும் முற்றும் முழுமையான பிரம்மாண்டமான வெற்றியினை அருளுவார். இவ்வசனப்பகுதியில் இடம்பெறும் ஸ்தோத்திரம் செலுத்துதல்களானது, கிறிஸ்துவினுடைய வெற்றிகளுக்கு உரியது எனும் விரிவான கோணத்தில் பார்க்கப்படும்போது, இது இவரது மகிமையான வெற்றிகுறித்த தீர்க்கத்தரிசனத்தையும், யேகோவா தேவனைத் துதிக்கும் விஷயத்தையும் தெளிவாய் விவரிக்கின்றது என்று புரிந்துகொள்ளப்படலாம் (1 கொரிந்தியர் 15:27-28). 2 சாமுயேல் 22:44 முதல் 46-வரையிலான வசனங்களில் இடம்பெறும் எதிர்காலத்தின் பரந்து விரிந்த ஆட்சி பற்றின தீர்க்கத்தரிசனமானது, கிறிஸ்துவினுடைய பரந்து விரிந்த ஆட்சிக்கே முழுமையாய்ப் பொருந்துகின்றதாகக் கருதப்படலாம்.

ஆதார வசனமானது, கர்த்தருடைய ஜனங்கள் அனைவருக்கும் பொருந்தக்கூடிய பாக்கியமான வாக்குறுதியாகக் காணப்படுகின்றது; மேலும் இது, கர்த்தரில் களிகூரும் யாவருக்கும், அவரது நன்மைகளைக்குறித்துத் தியானிக்கிறவர்கள் யாவருக்கும், அவரது பரிசுத்த நாமத்திற்கே உரிய துதியை அவருக்குச் செலுத்துபவர்கள் யாவருக்கும் அநேக விதங்களில் உறுதிப்படுத்தவும்பட்டுள்ளது. கர்த்தர், (என் நம்பிக்கைகளை என்னால் பாதுகாப்பாய்க் கட்டியெழுப்ப முடிகிற) என் கன்மலையும், (நான் பாதுகாப்பாய்ம றையமு டிகிற)எ ன்ே காட்டையும், ( ஒவ்வொருப ிரச்சனையின்ே வளையிலும்)எ ன் இரட்சகருமாய் இருக்கின்றார்.

---

R5105 & QB281

# சகல பாவங்களுக்குமான மன்னிப்பு

## 2 சாமுயேல் 24

கேள்வி - நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் (1 யோவான் 1:9). இங்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் எல்லா என்ற வார்த்தையின் ஆழம் என்ன?

பதில் - ஆதலால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: எந்தப் பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை. எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை (மத்தேயு 12:31-32). இங்குக் குறிப்பிடப்படும் பரிசுத்த ஆவி என்ற வார்த்தை, தேவ நோக்கம் பற்றின வெளிச்சத்தை, அறிவைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. யார் ஒருவன் இயேசுவுக்கு எதிராக துணிகரமாகவும், வேண்டுமென்றும் பாவம்செய்கின்றானோ, அவன் பரிசுத்த ஆவிக்கு விரோதமான தூஷணத்தைப் பண்ணினவனாகக் குற்றமுள்ளவனாய் இருப்பான். ஆனால் ஒருவேளை ஏதோ ஒரு விதத்தில் ஒருவன் வஞ்சிக்கப்பட்டவனாக, இயேசுவின் நாமத்தைத் தூஷிப்பானானால், இந்தப் பாவம், பரிசுத்த ஆவிக்கு விரோதமான தூஷணமாக காணப்படுவதில்லை மற்றும் இது மன்னிக்கப்படும். சபையின் விஷயத்தில், இந்த மன்னிக்கப்பட முடிகிற பாவங்கள், நமக்காகப் பரலோக வாசஸ்தலத்தில் பிரத்தியட்சமாகியுள்ள பரிந்துபேசுபவர் மூலம் மன்னிக்கப்படும்; மேலும் நாம் முழு ஒளி மற்றும் அறிவிற்கு எதிராகப் பாவஞ்செய்யாதது வரையிலும், அவர் நம்மை பிதாவின் தயவிற்குள் மீண்டுமாகக் கொண்டுவர முடியும். இப்படி முழு ஒளிக்கும், அறிவிற்கும் எதிராக பாவஞ்செய்வது என்பது, நம்மைப் பிதாவினுடைய கைகளினின்று வெளியே எடுத்துக்கொள்வதாக இருக்கும்.

ஆனால் பகுதி துணிகரமுள்ள பாவம் என்ற ஒன்று காணப்படுகின்றது - அதாவது அறியாமையும் அல்லது பெலவீனமும், கொஞ்சம் துணிகரமும் சேர்ந்து காணப்படும் பாவமாகும். இது எப்படிச் சாத்தியம் என்ற கேள்விக்கு எங்களது பதில் என்னவெனில், ஒழுக்கப் பிறழ்வு/குறைபாடு மன்னிக்கப்படுவதற்கும், பாவம் மன்னிக்கப்படுவதற்கும் இடையில் ஒரு வித்தியாசம் காணப்படுகின்றது என்பதேயாகும். உதாரணத்துக்கு ஒரு குழந்தை சில எல்லை மீறலைச் செய்திருக்கின்றது; பெற்றோர்: நீ செய்த காரியத்திற்காக உன்னை நான் தண்டிக்கப்போகின்றேன் என்று கூறுகின்றார் என்று வைத்துக்கொள் ளுங்கள். தண்டனையில் இரண்டு பாகங்கள் காணப்படும்; ஒன்று உடல் சார் தண்டனை, மற்றொன்று பெற்றோரின் கோபமாகும்.

சில பிள்ளைகளுடைய விஷயத்தில், தண்டனையின் இரண்டாம் பாகத்தினை, அதாவது பிள்ளைக்கும், பெற்றோருக்கும் இடையில் காணப்படும் மேகத்தினை, பிள்ளையினால் தாங்கிக்கொள்ள முடியாது. அப்போது பெற்றோர்: நீ மனம் வருந்துகின்றாய் என்றும், இதை மறுபடியும் ஒருபோதும் செய்ய மாட்டாய் என்றும் நீ கூறுகின்றபடியால், உன்னை நான் மன்னிக்கின்றேன். எனினும் கீழ்ப்படியாமைக்குத் தண்டனை ஒன்று உண்டு என்று கூறியிருந்தேன். என்னுடைய கணிப்பின்படி சிறந்தது என்று தோன்றுகிற

பிரகாரம் கூடுமானமட்டும் அந்தத் தண்டனையை இலகுவாக்கிடுவேன்; எனினும் உனக்குத் தண்டனை உண்டு என்று கூறுகின்றார். இப்படிச் செய்வது என்பது ஒரு பூமிக்குரிய பெற்றோருக்கு ஏற்றக் காரியமாக இருக்குமானால், இதையே பரமபிதாவும் செய்வார்.

தீர்க்கத்தரிசியாகிய தாவீதின் விஷயத்தில், இவர் மிகக்கடுமையான மற்றும் பொறுத்துக்கொள்ள முடியாத இரண்டு பாவங்களைச் செய்தார் - ஒன்று உரியாவிற்கும், உரியாவின் மனைவிக்கும் சம்பந்தப்பட்டு செய்யப்பட்டது; இன்னொன்று உரியாவின் மரணம் சம்பந்தமாகச் செய்யப்பட்டது. ஆனால் தாவீது எத்தகைய விடாமுயற்சியுடன் கர்த்தரிடம் மன்றாடினார் என்பதை நாம் நினைவுகூருகின்றோம்; இவரை மன்னிப்பதாகக் கர்த்தர் கூறியிருந்தபோதிலும், ஒரு தண்டனை வழங்கப்பட வேண்டியிருந்தது. தாவீதின் பிள்ளை மரித்துப்போனது. (2 சாமுயேல் 12:15-22)

மறுபடியுமாக சாத்தான், தாவீது கர்த்தருடைய கட்டளைக்கு முரணாக இஸ்ரயேலை இலக்கம் பார்க்க ஏவினான்; தேவன் அதிருப்தியடைந்தார்; இஸ்ரயேலை வாதித்தார். மறுபடியுமாக தாவீது மனம் வருந்தி, மன்னிப்பிற்காக ஊக்கமாய் ஜெபம்பண்ணினார்; கர்த்தர் இவருக்கு மூன்று காரியங்களை முன்வைத்தார்; இதில் ஒன்றை, தன் பாவங்களுக்கான தண்டனையாக இவர் தெரிவு செய்யவேண்டும். நீ தாவீதினிடத்தில் போய்: மூன்று காரியங்களை உனக்கு முன்பாக வைக்கிறேன்; அவைகளில் ஒரு காரியத்தைத் தெரிந்துகொள்; அதை நான் உனக்குச் செய்வேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார். அப்படியே காத் தாவீதினிடத்தில் வந்து, அவனை நோக்கி: மூன்று வருஷத்துப் பஞ்சமோ? அல்லது உன் பகைஞரின் பட்டயம் உன்னைப் பின்தொடர நீ உன் சத்துருக்களுக்கு முன்பாக முறிந்தோடிப்போகச் செய்யும் மூன்று மாதச் சங்காரமோ? அல்லது மூன்று நாள் கர்த்தருடைய தூதன் இஸ்ரயேலுடைய எல்லையெங்கும் சங்காரம் உண்டாகும்படி தேசத்தில் நிற்கும் கர்த்தருடைய பட்டயமாகிய கொள்ளை நோயோ? இவைகளில் ஒன்றைத் தெரிந்துகொள் என்று கர்த்தர் உரைக்கிறார். இப்போதும் என்னை அனுப்பினவருக்கு நான் என்ன மறுஉத்தரவு கொண்டுபோக வேண்டும் என்பதை யோசித்துப்பாரும் என்றான். அப்பொழுது தாவீது காத்தை நோக்கி: கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன்; இப்போது நான் கர்த்தருடைய கையிலே விழுவேனாக; அவருடைய இரக்கங்கள் மகா பெரியது; மனுஷர் கையிலே விழாதிருப்பேனாக என்றான். ஆகையால் கர்த்தர் இஸ்ரயேலிலே கொள்ளை நோயை வரப்பண்ணினார்; அதினால் இஸ்ரயேலில் எழுபதினாயிரம்பேர் மடிந்தார்கள் (1 நாளாகமம் 21:10-14). தன் சொந்த பெலவீனத்தை உணர்ந்தவராக, தாவீது தாழ்மையோடு, ஒரு தண்டனையைத் தெரிவுசெய்துகொண்டார். மூன்று நாள் கொள்ளைநோயானது இஸ்ரயேல்மீது அனுப்பிவைக்கப்பட்டது; எழுபதினாயிரம் புருஷர்கள் சங்காரமானார்கள்; ஆனால் இதற்கிடையில் தண்டனை தாவீதை எட்டுவதற்கு முன்னதாக, தன் பாவங்களுக்கான கர்த்தருடைய மன்னிப்பை தாவீது பெற்றுக்கொண்டார்.

இப்படியே கர்த்தருடைய ஜனங்களுடைய பாவங்களின் விஷயத்திலும் காணப்படுகின்றது. கொஞ்சம் அறியாமை காணப்படுமானால், பின்னர் தண்டனை துணிகரத்தின் அளவிற்கு ஏற்ப வழங்கப்படும். சோதனைகள் நமக்கும், மனுக்குலம் யாவருக்கும் வருகின்றது. கிறிஸ்து மனிதனுடைய பாவங்களுக்காக மரித்தார்; இந்தப் பாவத்திலிருந்து கிறிஸ்து ஒட்டுமொத்த மனித குடும்பத்தையும் விடுவிக்கின்றார் - சபையை இப்பொழுது விடுவிக்கின்றார்; உலகம் அவர்களது பரீட்சையின் காலங்களில் விடுவிக்கப்படுவார்கள்.

QB832

# பாவம்: தாவீது ஜனங்களைத் தொகையிட்டார்

## 2 சாமுயேல் 24

கேள்வி - தாவீது ஜனங்களைத் தொகையிட்டது, ஏன் பாவமாகக் காணப்பட்டது? (2 சாமுயேல் 24-ஆம் அதிகாரம் மற்றும் 1 நாளாகமம் 21-ஆம் அதிகாரம்)

பதில் - இஸ்ரயேலர் தொகையிடப்படக் கர்த்தர் விரும்பவில்லை என்ற எதுவும் வேதவாக்கிய பதிவில் காணப்படுகிறதில்லை; எனினும் இந்த அதிகாரங்களை வாசிக்கையில், அதுவும் குறிப்பாக 21:1 முதல் 8 வரையிலான வசனங்களை வாசிக்கையில், இப்படியாகவே காரியங்கள் இருக்கின்றது எனவும், அவர் இப்படியாகக் கட்டளையிட்டிருக்கின்றார் எனவும் நாம் நம்புகின்றோம். இந்த அதிகாரத்தினுடைய 3-ஆம் வசனத்தில், தாவீதின் பிரதான அதிகாரியாகிய யோவாப், இராஜாவின் இந்தச் செய்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, இஸ்ரயேலின்மேல் குற்றமுண்டாக, இது நடக்க வேண்டியது என்று கூறியுள்ளார். தாவீது கர்த்தருடைய சிங்காசனத்தில் கர்த்தருடைய பிரதிநிதியென அமர்ந்த பின்னர் (1 நாளாகமம் 29:23), இவர் கட்டளையிடப்படாமல் செயல்பட்டு, உரிய அதிகாரம் இல்லாமல் ஜனங்களைத் தொகையிட்டார் என்றும், இதினிமித்தம் இக்காரியத்தில் துணிகரம் கொண்டார் என்றும், இன்னுமாக இஸ்ரயேலின் உண்மையான இராஜாவாகிய தேவனுடைய தெய்வீகச் சித்தம் என்ன என்று இவர் முதலாவது உறுதிப்படுத்தாததற்குக் கடிந்துகொள்ளுதலாய்க் காணப்படும்படிக்கு, இவருக்குத் தண்டனை வழங்கப்படுவது சரி என்றும் நாம் எண்ணுகின்றோம். இங்குத் தேவனுடைய ஜனங்கள் என்று தங்களை அறிக்கைபண்ணிக்கொள்கின்ற யாவருக்கும், ஒரு விலையேறப்பெற்ற பாடம் காணப்படுகின்றது; அதாவது ஜீவியத்தின் காரியங்களில் முதலாவது கர்த்தருடைய அறிவுரையையும், வழிகாட்டுதலையும் நாடவேண்டும் என்பதும், தங்கள் சொந்தப் புரிந்துகொள்ளுதல் மற்றும் மாம்சீக விருப்பங்கள் மீது சாயக்கூடாது என்பதும் அந்தப் பாடமாகக் காணப்படுகின்றது. அனைவரின் பகுத்தறியும் திறன்களும் ஏறக்குறைய சமச்சீரற்றுக் காணப்படுகின்றது; யார் ஒருவருக்கும் பூரண சமச்சீருடன் உள்ள மனம் இருப்பதில்லை; ஆகையால் கர்த்தருடைய அறிவுரைகளைப் பின்பற்றுவது மெய்ஞானமாய்க் காணப்படும்.



**தாவீது ஜெபம் பண்ணுகின்றார்**
**- Pieter de Grebber**

R2030

# தேவனுடைய வீட்டிற்கான தாவீதின் அன்பு

## 1 நாளாகமம் 22:6-16

(1 இராஜாக்கள் 1; சங்கீதம் 84 ஒப்பிட்டுப்பார்க்கவும்)

உம்முடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் எப்பொழுதும் உம்மைத் துதித்துக்கொண்டிருப்பார்கள். - சங்கீதம் 84:4

நம்முடைய கடந்த பாடத்தில் நாம் பார்த்த ஆர்வத்தைத் தூண்டும் சம்பவங்களுக்குப் பிற்பாடு, தாவீது ஜனங்களால் திரும்பவும் அழைக்கப்பட்டு, எருசலேமுக்குத் திரும்பினார்; அப்சலோமினால் தேசம் கடந்துசென்ற குழப்பமான நிலையினின்று, இவர் ஓர் ஒழுங்கைக் கொண்டுவந்தார். இராஜா திரும்பி வந்த காலங்களில், வேறு ஒரு கலகக்காரன் எழும்பி, கொஞ்சம் வெற்றியடைந்தவனாக, இராஜாவை இடைமறித்து, அரியணையைத் தனதாக்கிக்கொள்ள நாடினான்; ஆனால் இவன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது; தாவீது மீண்டுமாக தன் இராஜ்யத்தில் ஸ்தாபிக்கப்பட்டார்; பல வருடங்களாகச் சமாதானமும், முன்னேற்றமும் தொடர்ந்தது. (2 சாமுயேல் 20:21)

ஆனால் இராஜாவுக்குப் பிரச்சனைகள் ஓயவில்லை; இவரது சொந்த வீட்டிலிருந்து மறுபடியுமாக உட்கலகங்கள் வந்தன; அப்சலோமிடத்தில் பெற்றதுபோன்ற அனுபவங்களானது, இவரது இன்னொரு குமாரனுடைய கலகத்தில் தொடர்ந்ததாகத் தெரிகின்றது; அப்சலோமின் இளைய சகோதரனாகிய அதோனியா, திட்டங்களைத் தீட்டியவராகவும், சிங்காசனத்தைக் கைப்பற்றி, இப்படியாகத் தன்னை தாவீதின் வாரிசாக ஸ்திரப்படுத்துவதற்குச் சாமர்த்தியமாய் ஆயத்தங்களைப் பண்ணினவராகவும் காணப்பட்டார் (1 இராஜாக்கள் 1:1-53). அரியணையைப் பறிப்பதற்கும், தன்னைத்தான் இராஜாவாக நியமித்துக்கொள்வதற்குமான இந்த முயற்சியின் நிமித்தம், கர்த்தருடைய இராஜ்யத்தின் சிங்காசனத்தில் அமருவதற்கெனத் தாவீதின் குமாரர்கள் மத்தியிலுள்ள தேவனுடைய தெரிந்துகொள்ளுதலாக, தேவன் சுட்டிக்காட்டியிருந்த சாலொமோன் உடனடியாக அபிஷேகிக்கப்பட்டு, இராஜா என்று அறிவிக்கப்பட்டார் (1 நாளாகமம் 22:9-10; 28:5-7). இப்படியாகத் தன் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே, சாலொமோன் இஸ்ரயேலின் இராஜாவாக அங்கீகரிக்கப்பட்டார். (1 இராஜாக்கள் 1:34, 39, 40; 1 நாளாகமம் 29:22-25)

தாவீது இப்பொழுது, கிட்டத்தட்ட தன் பூலோக கடமைகள் அனைத்தையும் நிறைவேற்றி விட்டார். நாட்டின் எல்லை பரப்பு சிறியதாக இருந்ததைத் தாவீது கண்டார்; இப்பொழுதோ அது விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. இராஜ்யம் ஒழுங்கற்று இருப்பதைக் கண்டார், இப்போதோ அதை முழுவதுமாக ஒழுங்குப்படுத்திவிட்டார். தேவபக்தி குறைந்திருந்ததைக் கண்டார், இப்போதோ ஆன்மீக பக்தியையும், பக்திவைராக்கியத்தையும் பெருமளவில் மறுமலர்ச்சிக்குள் கொண்டுபோனதில் வெற்றி கண்டுகொண்டார். எல்லாத் திசைகளிலும் பலத்த சத்துருக்கள் தேசத்தை அழிப்பதாக அச்சுறுத்துவதைக் கண்டார், ஆனால் இப்போதோ சத்துருக்கள் யாவரையும் மடங்கடித்துவிட்டார்; தேசத்தைச் சமாதானமான சூழ்நிலைக்குள் வழிநடத்திவிட்டார்; எந்தக் காலகட்டத்திற்கும் இணையாக இல்லாதளவுக்குத் தேசத்தைச் செழிப்பிற்குள் கொண்டுவந்திருந்தார். இது மாத்திரமல்லாமல், தனது குமாரனும், வாரிசுமானவர் கட்டவேண்டும் என்று தேவன் வாக்களித்திருந்த ஆலயத்திற்கடுத்த கட்டுமானப்பணிகளுக்கும், ஆராதனைக்

காரியங்களுக்குமான ஆயத்தங்களைச் செய்ததின் நிமித்தமாக, தேசத்தினுடைய ஆன்மீக ஆரோக்கியமும், தேவ ஆராதனையும் மிக நிரந்தரமாய் காணப்படுவதற்குரிய அஸ்திபாரத்தினையும் இவர் போட்டார்; மேலும் (ஆலயத்தைக்கட்டும்) மாபெரும் வேலையில் சாலொமோனுக்கு ஒருமனமாய் ஜனங்கள் சேவிக்கத்தக்கதாக, இவர் ஒட்டுமொத்த ஜனங்களிடம் ஆன்மீக வைராக்கியத்தினையும், உற்சாகத்தினையும் தூண்டிவிட்டார். இவரது வாழ்க்கையில் அநேக சம்பவங்கள் நடைபெற்றுள்ளது; பிரச்சனைகள் நிறைந்த ஒன்றாகவும் இவரது வாழ்க்கை காணப்பட்டது; பெரும் தவறுகளையும் செய்தார்; எனினும் குழப்பத்தினின்று ஒழுங்கைக் கொண்டுவருவதிலும், நிரந்தரமான சமாதானத்தையும், செழிப்பையும் கொண்டுவருவதிலும், இவர் பெரிய சாதனை செய்திருக்கின்றார். சாலொமோனின் ஆளுகையினுடைய மகிமை என்பது, தாவீதின் உழைப்புகள் மற்றும் பாடுகளின் பயன்களாகக் காணப்பட்டது. தாவீது ஆலயம் கட்ட அனுமதிக்கப்படவில்லை, காரணம் இவர் யுத்தபுருஷனாய் இருந்தார்; இது தாவீது அந்த யுத்தங்களில் ஈடுபட்டிருந்ததற்கான நிந்தித்தல்கள் ஆகாது; ஏனெனில் இந்த யுத்தங்களையெல்லாம், இவர் கர்த்தருடைய நாமத்திலும், அவருடைய ஜனங்களுக்காகவுமே செய்திருக்கின்றாரே ஒழிய, உலகப்போர்வீரனின் பரிசுத்தமற்ற இலட்சியங்களுக் காகவும், கொள்ளைக்காகவும், கீர்த்திக்காகவும் அல்ல.

யூதர்களின் ஆலயத்தைக் கட்டுதல் என்பது, ஏதோ ஒரு புறஜாதி அல்லது கிறிஸ்தவ ஆலயத்தின் கட்டடங்களைக் கட்டுவதுபோன்றது என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கும் சிலருக்கு, அளவு மீறின ஆரவாரம் ஆலயம் தொடர்புடைய விஷயத்தில் காட்டப்படுவதுபோன்று தோன்றலாம். ஆலயம் கட்டப்படுவதற்கு முன்னதாக முழுத்தேசமும் சமாதானமான சூழலில் காணப்படுவது அவசியம் என்ற எண்ணம் எவ்வளவு விநோதமாக இருக்கின்றது என்று இவர்கள் கூறுகின்றனர்! யுத்தங்களைச் சிலர் நடத்திக்கொண்டிருக்கும்போது, மற்றவர்கள் கட்டுமான வேலையைச் செய்யக்கூடாதா என்றும், ஏன் இராஜாவிற்கு இந்த வேலை கொடுக்கப்பட்டிருந்தது என்றும் இவர்கள் கேள்விகள் கேட்கின்றனர். இராஜாவின்மேல் பாரம் ஏற்றாமல், இவ்வேலையை மேற்பார்வையிடுவதற்குப் பொருத்தமான சிற்பிகளும், கலைஞர்களுமான அநேகர் இஸ்ரயேலில் காணப்பட்டார்களல்லவா என்றும் கேட்கின்றனர்.

யூதரின் ஆலயத்தைக் கட்டுதல் என்பது, வெறும் கட்டுமானப் பணிகளையோ, அநேகம் கற்கள், சுண்ணாம்பு, மரம் முதலானவைகளைச் சேர்த்து குவித்துவைப்பதையோ குறிக்காது என்பதை நாம் மறவாமல் இருப்போமாக; மாறாக அதைத் தாவீதின் கண்ணோட்டத்திலிருந்து பார்ப்போமாக; இவ்வேலையில் சாலொமோனோடு, ஊக்கமாய் ஒத்துழைப்பதற்குத் தாவீது இஸ்ரயேலின் சபையாரைக் கட்டளையிடும் போது, இவர் சபையார் எல்லாரையும் நோக்கி: தேவன் தெரிந்துகொண்ட என் குமாரனாகிய சாலொமோன் இன்னும்வ ாலிபனும்இ ளைஞனுமாயிருக்கிறான்; செய்யவே வண்டியவே வலையோெ பரியது; அதுஒ ரு மனுஷனுக்கு அல்ல, தேவனாகிய கர்த்தருக்குக் கட்டும் அரமனை என்று கூறினார் (1 நாளாகமம் 29:1). மேலும் இந்தப் புனிதமான கட்டிடம் மனித வடிவமைப்பின் படியானதுமல்ல; அதற்கான திட்டங்களும், விவரங்களும், கர்த்தருடைய ஆவியினால் தாவீதுக்குக் கொடுக்கப்பட்டது: இந்த மாதிரியின்படி சகல வேலைகளும் எனக்குத் தெரியப்படுத்த, இவையெல்லாம் கர்த்தருடைய கரத்தினால் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்று தாவீது கூறியுள்ளார். (1 நாளாகமம் 28:19)

தாவீது தன் குமாரனாகிய சாலொமோனை நோக்கி: நீ பலம்கொண்டு தைரியமாயிருந்து, இதை நடப்பி, நீ பயப்படாமலும் கலங்காமலும் இரு; தேவனாகிய கர்த்தர் என்னும் என் தேவன் உன்னோடே இருப்பார்; கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கடுத்த சகல கிரியைகளையும் நீ முடித்துத் தீருமட்டும்,

அவர் உன்னைவிட்டு விலகவுமாட்டார், உன்னைக் கைவிடவுமாட்டார். இதோ, தேவனுடைய ஆலயத்து வேலைக்கெல்லாம் ஆசாரியர் லேவியருடைய வகுப்புகள் இருக்கிறது; அந்த எல்லாக் கிரியைக்கும் சகலவித வேலையிலும் நிபுணரான மனப்பூர்வமுள்ள சகல மனுஷரும், உன் சொற்படியெல்லாம் கேட்கும் பிரபுக்களும், சகல ஜனங்களும் உன்னிடத்தில் இருக்கிறார்கள் என்றான். (1 நாளாகமம் 28:12-13, 19-21)

ஆகையால் ஒட்டுமொத்த ஜனங்களுடைய பயபக்தியும், பக்திவைராக்கியமும், ஆலயத்தின் ஒவ்வொரு கட்டுமானத்திலும் காணப்பட வேண்டும்; ஆலயமானது இத்தகைய அர்ப்பணிப்பிற்கும், பக்திவைராக்கியத்திற்குமான நினைவுச்சின்னமாகத் திகழ வேண்டும்; இன்னுமாக இது வரவிருக்கும் சந்ததியினருக்குச் சாட்சியாக விளங்கி, அவர்களிலும் அர்ப்பணிப்பையும், தேவபக்தியினையும் தட்டியெழுப்பி, அவர்களிலும் இதைத் தக்கவைக்கின்றதாகக் காணப்படும். இப்படியாகப் பார்க்கப்படும்போது, அது உண்மையில் பெரிய வேலையே ஆகும்; ஜனங்கள் *அனைவருமே* அந்த வேலையில், அக்கறைகொண்டவர்களாகவும், அதில் பங்கெடுப்பவர்களாகவும் காணப்பட வேண்டும் என்பதால், இவ்வேலை சமாதானமான காலங்களில் மாத்திரம் செய்யப்படுவது அவசியமாய் இருந்தது; சமாதானமான காலங்களில் மாத்திரமே, ஜனங்களுடைய கவனம் யுத்தங்களிலும், குழப்பங்களிலும், ஆபத்துக்களிலும் அமிழ்ந்துக் காணப்படாது; இன்னுமாக மற்ற எந்த ஒரு நபரைக்காட்டிலும், கர்த்தரால் அபிஷேகிக்கப்பட்ட இராஜா, இந்த முக்கியமான பணியினைப் பொறுப்பேற்கப் பெற்றிருப்பது தகுதியான காரியமாய் இருக்கும் என்பது தெரிகின்றது; ஏனெனில் இது ஒரு தேசிய பணியாகும்; இராஜா என்பவர் தேசத்தின் பிரதிநிதியாகவும், தலையாகவும் காணப்படுகின்றார்.

இந்தக் கண்ணோட்டத்தின்படியும், நிழலாய்க் காணப்படுவதற்காக இது தேவனால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என்ற கண்ணோட்டத்தின்படியும் பார்க்கையில், இதன் அழகும், இதன் செலவுகளும், இதன் அனைத்து அலங்காரங்களும், தேவனுக்கு அர்ப்பணித்துள்ள ஜனங்களின் அன்புள்ள இருதயங்கள் மற்றும் உற்சாகமான கரங்களின் பிரயாசங்களையும், அக்கறையையும், பலிகளையும் அடையாளம் காட்டுகின்றதாகக் காணப்பட வேண்டும். ஆகையாலே தாவீது: என் குமாரனாகிய சாலொமோன் வாலிபனும் இளைஞனுமாயிருக்கிறான்; கர்த்தருக்குக் கட்டப்படும் ஆலயம் சகல தேசங்களிலும் கீர்த்தியும் மகிமையும் உடையதாய் விளங்கும்படி மகா பெரியதாயிருக்க வேண்டும்; ஆகையால் அதற்காக வேண்டியவைகளை இப்பொழுதே சேகரம்பண்ணவேண்டும் என்று சொல்லி, தாவீது தன் மரணத்திற்கு முன்னே திரளாய்ச் சவதரித்து வைத்தான் என்று கூறியுள்ளார். (1 நாளாகமம் 22:5)

ஆலயம் கட்டப்படுதல் தொடர்பாக, தனது குமாரன் சாலொமோன் விஷயத்தில் தாவீது கொண்டிருந்த பொறுப்பைக் கவனிக்கையில், நீண்டகால அனுபவங்களையும், பயிற்சிகளையும் பெற்றுக்கொண்டதின் நிமித்தம், குணலட்சணத்தில் கனிந்திருந்த மற்றும் வளமடைந்திருந்த ஒரு மனிதனின் தோற்றத்தை நாம் தாவீதில் கவனிக்கின்றோம். மற்ற எல்லா இலட்சியங்களைவிட, தேவனுக்காக இவர் கொண்டிருந்த இவரது வைராக்கியமே மேலோங்கினது; சாலொமோன் தேவனுக்கு உண்மையும், உத்தமமுமாகக் காணப்பட வேண்டும் என்றும், இவர் தேவனுக்கான ஊழியங்களில் வைராக்கியமாய்க் காணப்பட வேண்டும் என்றும், இப்படியாக இவர் திவ்விய தயவில் தொடர்ந்து நீடிக்கவும் வேண்டும் என்றும் தாவீதின் பிரதான வாஞ்சை காணப்பட்டது. பின்னர் தனக்கு முன்பாகக் காணப்படும் இந்த மாபெரும் வேலையில், சாலொமோன் பலங்கொண்டும், தைரியத்துடனும் இருக்கும்படிக்குத் தாவீது இவரை ஊக்குவிக்கின்றார்; இன்னுமாக இஸ்ரயேல் தொடர்பாக மோசே மூலமாய்க் கர்த்தர் வழங்கின கற்பனைகளுக்கும், ஞானங்களுக்கும் இவர் ஒருவேளை தொடர்ந்து செவிசாய்த்து, இவைகளைக் கடைப்பிடிப்பாரானால், இவர் திரளான ஐசுவரியத்தையும், திவ்விய தயவையும் பெற்றுக்கொள்வாரென, இவருக்குத் தாவீது உறுதியளித்தார்.

சாலொமோனுக்குக் கொடுக்கப்பட்ட இந்த ஆலோசனையானது, கர்த்தருக்கான ஊழியங்களில் ஈடுபடும் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் பொருந்தக்கூடியதாகும் - நீ பலங்கொண்டு தைரியமாயிரு. உண்மையாய் ஊழியஞ்செய்வதற்கும், விசுவாசத்தின் நல்லதொரு போராட்டத்தைப் போராடுவதற்கும் பலங்கொண்டிருப்பதும், தைரியமாய் இருப்பதும், அதாவது இரண்டுமே அவசியமாகக் காணப்படுகின்றது; மேலும் இரண்டுமே, கிறிஸ்தவன் உட்படுத்தப்படும் பல்வேறு சோதனைகளின்கீழ், பொறுமையோடுகூடிய சகிப்புத்தன்மையின் மூலமும், தேவனிடத்திலுள்ள விசுவாசத்தின் மூலமும் வளர்க்கப்படுகின்றது. அப்போஸ்தலனாகிய பவுல் சபைக்கு: கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்; விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள் என்று கூறின வார்த்தைகள், தாவீது சாலொமோனுக்குக் கூறின வார்த்தைகளுக்கு இசைவாகக் காணப்படுகின்றது. (எபேசியர் 6:10; 1 கொரிந்தியர் 16:13)

1 நாளாகமம் 29:10-19-வரையிலான வசனங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள தாவீது ஏறெடுத்த ஜெபம் மற்றும் ஸ்தோத்திரபலியில், தேவனுடைய ஆலயத்திற்கென்று பொருட்களைச் சேகரித்து வைக்கும் சிலாக்கியம் தனக்குக் கொடுக்கப்பட்டதற்காக, தேவனுக்குத் துதியைச் சாற்றுகின்றார்; இன்னுமாகத் தேவனுக்குச்செ ாந்தமானவைகளையே,ந ாம்அ வருக்குந ம்முடையஅ ன்பளிப்புகள்எ ன்றுத ிருப்பிச் செலுத்துகின்றோம் என்று தாழ்மையாய் ஒப்புக்கொள்கின்றார்; இன்னுமாக ஜனங்களுடைய உற்சாக பலிகளிலுள்ள தனது சந்தோஷத்தைத் தெரியப்படுத்துகின்றார்; இன்னுமாக ஜனங்களுடைய இருதயங்கள் எப்போதும் சாலொமோனை ஆதரிப்பதாக என்று ஜெபம்பண்ணினார்; இன்னுமாகச் சாலொமோனுக்குத் தேவன் உத்தம இருதயத்தையும், இரக்கமுள்ள பண்பையும், பயபக்தியையும், சாந்தத்தையும், பரிசுத்த உத்வேகத்தையும் கொடுத்தருளும்படிக்குத் தாவீது ஜெபம்பண்ணினார். நீங்கள் மீண்டும் மீண்டுமாக புது பெலனடையத்தக்கதாகவும், போதிக்கப்படத்தக்கதாகவும், அந்த வசனங்களுள்ள அதிகாரத்தை வாசித்து, மனதைத் தொடும் வார்த்தைகளுக்கு அடிக்கோடிட்டுக்கொள்ளுங்கள். அனைவரும் கர்த்தரை உற்சாகமாய் ஸ்தோத்திரிக்கத்தக்கதாக எப்படி ஜனங்களைத் தாவீது நடத்தினார் (வசனம்-20) என்பதையும், எப்படி இந்தப் பரவசமானது, கர்த்தருடைய இராஜ்யபாரத்தின் சிங்காசனத்தில், சாலொமோன் அமரத்தக்கதாக அவரை இரண்டாம் விசை அபிஷேகித்தது என்பதையும் (வசனம் 22-23) கவனியுங்கள். இரண்டாம் விசை அபிஷேகிக்கப்பட்ட காரியமானது, மிகவும் அமைதியான விதத்தில் செய்யப்பட்ட முதலாம் அபிஷேகித்தலுக்கான, ஒட்டுமொத்த தேசத்தாருடைய பிரம்மாண்டமான ஆமெனாக காணப்பட்டது! (1 இராஜாக்கள் 1:38-40)

நம்முடைய ஆதார வசனம் இடம்பெறும் 84-ஆம் சங்கீதமானது, கர்த்தருடைய ஊழியத்திற்கான தாவீதின் அர்ப்பணிப்பு மற்றும் பக்திவைராக்கியத்தின் மற்றுமொரு வெளிப்பாடாகக் காணப்படுகின்றது. யூத யுகத்தின் பரிசுத்தவான்கள் மத்தியில் நிழலான ஆலயமானது, இத்தகைய ஊக்கத்தினை மூட்டிவிடுமானால், நிஜமான ஆலயத்தினை, ஜீவனுள்ள தேவனுடைய சபையை, நாம் எத்தனை தீவிரமான வைராக்கியத்துடனும், பற்றுடனும் பார்க்க வேண்டும்; இந்த நிஜமான ஆலயத்தின் ஜீவனுள்ள கற்கள், கிறிஸ்து இயேசுவை மூலைக்கல்லாகவும், தலைக்கல்லாகவும், பெற்றிருக்கின்றதும், தேவன் வாசம்செய்ய விரும்புகின்றதுமான பரிசுத்த ஆலயமாக உருவாகுவதுவரையிலும், அந்த ஜீவனுள்ள கற்களை வெட்டி, மெருகூட்டி, சேர்த்துப் பொருத்தும் தேவனின் புண்ணியங்களை சதாகாலங்களும் அறிவிப்பார்கள். (எபேசியர் 2:19-22)

R5701

# இஸ்ரயேலின் இராஜாவாகிய சாலொமோன்
## 1 இராஜாக்கள் 1:1-2:12

நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும், உற்சாக மனதோடும் சேவி.
- 1 நாளாகமம் 28:9

தாவீது இராஜாவுக்கு எழுபது வயதானது. அவரது மூத்த மகன் அப்சலோம் கலகம்பண்ணி கொஞ்ச நாட்களுக்கு முன்னர்தான் இறந்துபோயிருந்தார். தாவீதுக்கு அடுத்த மூத்த மகன் அதோனியா என்பவர், அப்சலோம் இறந்துபோனதால் சிங்காசனத்திற்கு அடுத்த வாரிசானார். அவருக்கு வயது முப்பதிலிருந்து நாற்பதுக்குள் இருக்கும். நீண்டகாலமாக தாவீதின் இராணுவத்திற்குத் தளபதியாயிருந்த யோவாபும் வயது சென்றவரானார். அநேகமாக இவரும் ஓய்வுபெற்றவராய்க் காணப்பட்டார்; இதற்குக் காரணம் இவர் வயது சென்றவராக இருந்தார் என்பது மாத்திரமல்ல, அப்சலோமைக் கொல்ல வேண்டாம் என்று சொன்ன தாவீதின் கட்டளையை இவர் அசட்டைப்பண்ணியதால், தாவீது இராஜாவின் உணர்வுகளை மிகவும் காயப்படுத்தியிருந்தார்.

நீண்டகாலம் படைத்தலைவனாயிருந்த யோவாபின் நட்பும், பிரபலமான ஆசாரியர்களில் ஒருவனது நட்பும் அதோனியாவுக்குக் கிடைத்திருந்ததால், தன்னை இராஜாவாகப் பிரகடனப்படுத்துவதற்கு இதுதான் சரியான நேரம் என்று அதோனியா நினைத்தார். இவர் ஒரு விருந்தை ஏற்பாடு செய்து, அதில் தாவீது இராஜாவுக்குப் பிரியமாயிருந்த சாலொமோனைத் தவிர மற்ற அனைத்து இராஜகுமாரர்களையும் அழைத்திருந்தார். விருந்து எருசலேமுக்கு அருகாமையிலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த விருந்தின் மத்தியில், அங்கிருந்தவர்களில் ஒருவன் அதோனியாவை இராஜாவாக வாழ்த்த வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து மற்றவர்கள் அனைவரும் இதே உணர்வுகளை வெளிப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. இப்படியாக இந்த இயக்கம்/செயல் வெளித்தோற்றத்தில் ஒரு கலகமற்ற, அதேசமயம் ஜனங்களின் ஆதரவைப்பெற்ற இயக்கமாக தோற்றமளிக்கும். திட்டமிட்டபடி அது நிறைவேறினது.

எனினும் இந்தக் காரியம் தேவனருளால், தாவீது இராஜாவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அவர் உடனடியாக புதிய தளபதி பெனாயா, தீர்க்கத்தரிசி நாத்தான் மற்றும் ஆசாரியனாகிய சாதோக் ஆகியோரிடம் பேசி சாலொமோனை, இராஜாவின் வெள்ளைக் கோவேறு கழுதையின்மேல் ஏற்றி, இப்படியாக தாவீதுக்குப்பின் இவர்தான் இராஜா என்று தாவீது இராஜாவினால் ஒப்புதலளிக்கப்பட்டிருப்பதை வெளிப்படுத்தும்வ ிதமாகஏ ற்பாடுெ சய்தார்.ப ிறகுக ர்த்தரின்ந ாமத்தில்ச ாலொமோன்அ பிஷேகம் பண்ணப்பட்டார். உடனே இராணுவ மரியாதை அவருக்கு அளிக்கப்பட்டது. எருசலேமின் ஜனங்கள் அனைவரும் இராஜாவாகிய சாலொமோன் வாழ்க என்று வாழ்த்தினார்கள். பிறகு தாவீது இராஜாவின் கட்டளைப்படி சாலொமோன், சிங்காசனத்திற்கு அழைத்துவரப்பட்டு பகிரங்கமாக முடிசூட்டப்பட்டார்.

அதோனியாவின் திட்டங்கள் நன்கு நடைபெற்றுக்கொண்டிருப்பதுபோன்று காணப்படுகையில், ஜனங்களுடைய ஆரவாரத்தையும், எக்காளம் முதலானவைகள் ஊதப்படுகிறதையும் அதோனியாவும், ஜனங்களும் கேட்டபோது அதிர்ச்சிக்குள்ளானார்கள்; பிறகு சாலொமோன் முடிசூட்டப்பட்டு இராஜாவாக்கப்பட்டார் என்பதை அறிந்துகொண்டார்கள். அதோனியா தன் உயிருக்குப் பயந்து

ஓடிப்போனார். அவரைச் சார்ந்தவர்களும் போய்விட்டார்கள். பிற்பாடு சாலொமோன் தனது சகோதரன் அதோனியாவுக்குச் சமாதானத்தை உறுதிப்படுத்தி சொல்லியனுப்பினார்.

இப்படியாக தாவீது இராஜாவின் பொது வாழ்க்கை ஒளி மங்கி அல்ல, உச்சக்கட்டத்தில் நன்கு வயதுசென்ற பிறகு முடிவுக்கு வந்தது. அதுவும் தன்னால் தெரிந்துகொள்ளப்பட்ட மகனை சிங்காசனத்தில் நிலைத்திருக்கப் பண்ணி, தன் வாழ்க்கையை நிறைவு செய்தார். கவிஞனின் பின்வரும் வார்த்தைகள் அவருக்கு நன்கு பொருத்தமாக இருக்கின்றது:

காலையில் உதிக்கும் நட்சத்திரம் மறைவதுபோல, அவர் மறைகிறார்;
அவர் மேற்கின் இருளுக்குள் மறையாமலும்,
வானத்தின் புயல்களினால் மறைக்கப்படாமலும்,
வானத்தின் ஒளிக்குள்ளாக மறைந்துபோனாரே.

## சாலொமோன், சமாதானத்தின் குமாரன்

சாலொமோனின் பெயர் ஞானத்தைக் குறிப்பதாக இருந்தாலும், ஆரம்பத்தில் அது சமாதானத்தை அர்த்தப்படுத்துவதாக இருந்தது; அப்பெயர் நிச்சயமாக போர் என்பதே இல்லாத, அவரது அதிசயத்தக்க வாழ்க்கைப்பற்றின தீர்க்கத்தரிசனமாக இருந்தது.

பத்சேபாள், தாவீதுக்குச் சட்டப்படி மனைவியானதற்குப் பிறகு பிறந்த மகனாக சாலொமோன் காணப்பட்டார். தாவீதுக்குப் பிறகு இராஜாவாக வேண்டியவர் சாலொமோன் என்று தேவன் தாவீதுக்கு வெளிப்படுத்தியிருந்தார்; எப்படியென்று இது விளக்கப்படவில்லை. தாவீதும் பத்சேபாளிடம் வாக்குக்கொடுத்திருந்தார். தாவீது அநேக போர்களை நடத்தி அதை முடிக்கும் தருவாயிலும், தனது வாழ்க்கையில் இரண்டு பாவங்களைச் செய்து அதற்காக வருத்தப்படுகின்ற காலத்திலும், சாலொமோன் பிறந்தார். இந்த அனுபவங்கள் தாவீதை ஆச்சரியத்தக்க விதமாக தன்னடக்கமுடையவராக மாற்றியது, இவரை சீர்த்திருத்தியது என்று நாங்கள் நம்புகின்றோம். இந்தப் பிரச்சனையான சந்தர்ப்பத்தில் தேவனிடத்திலுள்ள இவரது விசுவாசமும், பாவமன்னிப்பிற்காக இவர் ஏறெடுத்த ஊக்கமான ஜெபமும், தேவனிடமிருந்து சமாதானம் வருவதை இவர் உணர்ந்துகொண்டதும், இவரை வெளியரங்கமான ஒரு புது மனிதனாக்கியிருந்தது. இதற்கு முன்னால்கூட இவர் தேவனுக்கு விசுவாசமுள்ளவராக இருந்தார்; ஆனால் இப்போது இன்னும் பக்தியுள்ளவராக ஆனார். தெய்வீக மன்னிப்புக்கு அடையாளமாகவும், இவர் வாஞ்சித்த காரியமாகவும் காணப்பட்ட *சமாதானத்திற்கும்,* சாலொமோன் இராஜாவின் கனிவான மற்றும் சிந்தனைமிக்க குணங்களுக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கின்றது; இதுமாத்திரமல்லாமல் சாலொமோனுடைய பெயருக்கும்கூட ஏதோ சம்பந்தம் இருக்கின்றது. அவரது பெற்றோர்கள் தேவனிடம் பெற்ற சமாதானத்தை, அவரது பிறப்பு குறிப்பிடும்படியாகக்கூட அவருக்கு இந்தப் பெயரைக் கொடுத்திருக்கலாம்.

சரித்திரங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள அவரது மற்றச் சகோதரரின் குணலட்சணத்தைக்காட்டிலும், சாலொமோனுடைய குணலட்சணம் எல்லாக் கட்டங்களிலும் வித்தியாசமுள்ளதாக இருந்ததாக நாம் காண்கின்றோம். மற்றவர்களைக்காட்டிலும், அவரது தந்தை தாவீதின் மத விருப்பங்களில், சாலொமோன் ஈடுபாடு கொண்டிருந்தார். இப்படியாக அவர் அதிக தயவு பெற்றவராகவும், அதிக ஈவுகளைப் பெற்றுக்கொண்டவராகவும் இருந்தார். நாம் இயற்கையாகச் சுதந்தரித்துக்கொண்ட குணலட்சணங்கள் மற்றும் மனச்சார்புகள் நிமித்தம் நாமும், மற்றவர்களும் எந்த அளவுக்கு ஊனமடைந்திருக்கின்றோம் அல்லது ஆசீர்வதிக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை நாம் மதிப்பீடு செய்ய இதுவே தக்கத்தருணம்.

இன்னுமொரு அனுகூலமான காரியம் சாலொமோனுக்கு இருந்தது; அதாவது அவரது தாய் புறஜாதி ஸ்திரீயல்ல, இஸ்ரயேல் வம்சத்தைச் சேர்ந்தவள் ஆவாள்; ஆகையால் தாவீதின் மற்ற மனைவிகளைக் காட்டிலும் இவள் தெய்வீக ஏற்பாடுகள், பிரமாணங்களுடன் இசைவாகக் காணப்பட்டாள்.

இன்னுமாகப் பதிவை வைத்துப்பார்க்கும்போது, அரியணைக்குத் தனக்குப்பின் யார் வாரிசாக இருக்க வேண்டும் என்பதைத் தனது மனதில் தாவீது சிந்தித்து வைத்திருந்ததாகத் தெரிகின்றது. மற்றப் பிள்ளைகள் விஷயத்தில் தனது கடமையை முழுமையாகச் செய்யவில்லை என்றும், அரசவையின் பாதகமான செல்வாக்குகளின்கீழ்ப் பிள்ளைகள் வளரும்படிக்கு விட்டுவிட்டார் என்றும் தாவீது அந்தச் சமயத்தில் உணர்ந்து, சாலொமோன் விஷயத்தில் அதைச் சரிசெய்து, சிறிய வயதிலேயே சாலொமோனை தாயின் பராமரிப்பில் விட்டு, இவரை தீர்க்கத்தரிசியாகிய நாத்தானின் சீஷனாக, மாணவனாக இருக்கச் செய்தார். இந்த மிகச்சிறந்த ஆரம்பம், சாலொமோனின் எதிர்கால வாழ்க்கைக்கு மிகவும் பிரயோஜனமாக இருந்திருக்கும். இதை நாம் அடுத்த பாடத்தில் ஆராய்வோம்.

R4286

## சமாதானத்தின் இராஜா அபிஷேகிக்கப்பட்டார்
### 1 இராஜாக்கள் 1:32-40, 50-53

நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி.
- 1 நாளாகமம் 28:9

சாலொமோன் என்ற பெயரின் அர்த்தம் சமாதானமாகும். சாலொமோனின் ஆசிரியராக இருந்த நாத்தான் தீர்க்கத்தரிசி, இவரை யேகோவாவிற்குப் பிரியமானவன் என்று அர்த்தங்கொள்ளும் யெதிதியா என்னும் பெயரில் அழைத்தார். இவருக்குள் காணப்பட்ட சில இயற்கையான பண்புகள், விசேஷித்த தெய்வீக ஆசீர்வாதத்தின் மூலம், இவருக்கு ஞானி என்ற பட்டத்தைக் கொடுத்தது.

ஓர் எழுத்தாளர் பின்வருமாறு எழுதுகின்றார்: சாலொமோன் தனது பெற்றோரிடமிருந்து குறிப்பிடத்தக்க விதத்தில் பல காரியங்களைச் சுதந்தரித்துக்கொண்டவராகக் காணப்படுகின்றார். இவருடைய தகப்பனாகிய தாவீது முதிர்ச்சியடைந்தவராகக் காணப்பட்டார். இவரது தாயார், தேவனுடைய வாக்கைப்போல இருந்த ஆலோசனையைக் கொடுக்கும் அகித்தோபேலின் பேத்தி ஆவார். சாலொமோன் தனது தாயிடமிருந்து விவேகத்தையும், துல்லியமாக நியாயந்தீர்க்கும் தன்மையையும், நீதியின் விஷயங்களில் நுண்ணறிவையும், சிற்றின்ப பலவீனங்களையும் சுதந்தரித்துக்கொண்டார். மேலும் தனது தகப்பனிடமிருந்து ஆழ்ந்து சிந்திக்கிற தன்மையையும், இலக்கியத்தின்மீதான இரசனையையும், ஆளுகைசெய்யும் ஆற்றலையும், மதத்தின் மீதான ஈடுபாட்டையும் சுதந்தரித்துக் கொண்டார். சாலொமோனின் அங்கவடிவமும், அழகும், தாவீதின் மற்ற குழந்தைகளுக்கு இருப்பதைப்போன்றே அழகாகக் காணப்பட்டிருக்க வேண்டும். உன்னதப்பாட்டின்படி, சாலொமோன் அழகுள்ளவராகவும், அடர்த்தியான முடி கொண்டவராகவும், காகத்தைப் போன்ற கருமையான முடி கொண்டவராகவும் இருந்துள்ளார் என்பது தெரிகின்றது.

சாலொமோன் ஆளுகைக்கு வந்தபோது, 20-வயது உடையவராகக் காணப்பட்டார். அவரது தகப்பனாகிய தாவீது இராஜா 70-வயது அடைந்தவராகவும், உடல் பெலவீனம் அடைந்தவராகவும்

இருந்தபடியால், தாவீதின் ஆளுகை ஸ்தானத்தை எடுக்க ஒருவர் விரைவில் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்ற நிலை எல்லோருக்கும் தெரிந்திருந்தது. தாவீதின் மூத்த குமாரனாகிய அம்னோன், அவருக்கு இளையவரான அப்சலோமால் கொல்லப்பட்டார். அப்சலோமும் பின்னாளில் தனது கலகத்தில் கொல்லப்பட்டார். அப்சலோமுக்கு அடுத்த குமாரனாக, வரிசையில் இருப்பவர் அதோனியா ஆவார். இவர் தனது தந்தையாகிய தாவீது இராஜா, தனக்குப்பின் சாலொமோனே அரியணையில் வரவேண்டும் என்று யோசித்துவைத்திருந்ததை அறிந்திருந்தபடியால், இதைத் தடுக்கும் விதமாக, தனது தந்தை வேலைகளைக் கவனிப்பதற்கு மிகவும் வயது சென்றவராக இப்பொழுது காணப்படுகின்றார் என்ற காரணத்தைப் பயன்படுத்தி, அரசாட்சியைக் கைப்பற்ற முயற்சித்தார்.

அதோனியா தனது திட்டத்தைச் செயல்படுத்த சமயம் வந்துவிட்டது என்று கருதி, தனது ஆதரவாளர்களையும், சாலொமோன் தவிர இராஜாவுடைய மற்ற அனைத்து புத்திரர்களையும், இராஜாவின் தோட்டத்தில் அழைத்து, பெரிய விருந்தை ஏற்பாடுபண்ணினார். விருந்தின் நடுவில், இராஜாவாகிய அதோனியா என்றென்றும் வாழ்க!" என்ற சத்தம் கேட்டது. இராஜாவாகிய தாவீதின் திறமிக்க தளபதி யோவாப் மற்றும் பிரதான ஆசாரியனாகிய அபியத்தாரும், அதோனியாவிற்கு உடந்தையாக இருந்தனர். இரண்டாம் முறையாக தாவீதின் குடும்பத்தில் சதித்திட்டம் நடந்தது.

## கர்த்தருடைய இராஜ்யம்

இவர்கள் தங்கள் யோசனைகளில் தேவனை நினைக்கவில்லை என்று தீர்க்கத்தரிசி எழுதியுள்ளார். அப்சலோமின் சதித்திட்டத்திலும் இப்படியாகத்தான் இருந்தது. பின்னர் அதோனியாவின் திட்டத்திலும் இப்படியாகத்தான் இருந்தது. இவர்கள் இஸ்ரயேலின் இராஜ்யம் கர்த்தரால் விசேஷமாக நிறுவப்பட்டது என்றும், இஸ்ரயேலின் இராஜ்யம் மற்ற இராஜ்யங்களிடமிருந்து வேறுபட்டது என்றும், அது வேதவாக்கியங்கள் தெரிவிப்பதுபோல தேவனுடைய இராஜ்யமாக இருந்தது என்றும் நினைவுகூரவில்லை. ஆகவேதான் சாலொமோன், தனது தகப்பனாகிய தாவீதின் அறையில் இருந்த, கர்த்தருடைய சிங்காசனத்தின் மேல் அமர்ந்தார் என்று வாசிக்கின்றோம். சதித்திட்டம் போட்டவர்கள் தாங்கள் தெய்வீக ஏற்பாடுகளைக் குறுக்கிடுகின்றோம் என்று உணர்ந்திருந்தார்களானால், அவர்களில் எவரும் இவ்விதமான முயற்சிகளில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள். இன்றைய காலகட்டத்தில் வாழும் தேவனுடைய ஜனங்கள், தங்களுடைய ஜீவியத்தின் அனைத்து விஷயங்களிலும் கர்த்தருடைய சித்தத்தை உணர்ந்துகொள்வதில் விழிப்பாய் இருக்க வேண்டும். ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் அனைத்து விஷயங்களிலும், அவர்களின் நலன் கருதி, கர்த்தருடைய ஞானம் மற்றும் வல்லமை மிகுதியான அளவில் செயல்படுவதினால், மனித சதித்திட்டங்களும், எதிர்ப்புகளும், அவைகளைத் தீட்டினவர்களுக்கே பாதிப்பைக் கொண்டுவரும் என்பதை நாம் நிச்சயமாய் அறிந்துகொள்ள வேண்டும். இப்படியாக எதிர்ப்பவர்கள், அதிக கிரியைகள் செய்யவும், வெளிதோற்றத்திற்காகிலும் அதிக வெற்றிக்கொள்ளவும் கர்த்தர் அனுமதித்தாலும், உதாரணத்திற்குக் கர்த்தருக்கு எதிரான யூதாஸ், சதுசேயர் மற்றும் பிரதான ஆசாரியர்களின் சதித்திட்டத்தைத் தேவன் அனுமதித்தாலும் அல்லது தாவீது இராஜாவுக்கு எதிரான அப்சலோம் மற்றும் அவனுடைய கூட்டாளிகளின் சதித்திட்டத்தைத் தேவன் அனுமதித்தாலும், விசுவாசம் உள்ள யாவருக்கும் கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தமாவது, அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்பதாகும் (உரோமர் 8:28). என் பிதா உமக்கு அதிகாரம் கொடுக்காதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது என்று இயேசு,

பிலாத்துவிடம் கூறின விஷயம், அனைத்து கர்த்தருடைய ஜனங்களுக்கும் பொருந்தக்கூடியதாக எப்போதும் இருக்கின்றது. பிதா தமது மகிமையான திட்டத்தைக் குறுக்கிடும் எந்த விஷயத்தையும் அனுமதிக்கமாட்டார். இதை அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும் என்ற வார்த்தைகள் மூலம் நமக்கு அவர் உறுதியளிக்கின்றார். (ஏசாயா 55:11)

## தெரிந்துகொள்ளப்பட்ட, அபிஷேகிக்கப்பட்ட, அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட சாலொமோன் இராஜா

ஏற்றவேளையில், தெய்வீகச் சித்தம் நிறைவேறும்படி, அதோனியாவின் சதித்திட்டத்தின்மீது, தெய்வீக வழிநடத்துதலினால் தாவீது இராஜாவின் கவனம் திரும்பினது. தாவீது எவ்வாறு இன்னொரு ஆசாரியனையும், நாத்தான் தீர்க்கத்தரிசியையும், பெனாயாவாகிய வேறொரு தளபதியையும் அழைப்பித்து, அவர்களைத் தனது குமாரனாகிய சாலொமோனோடு, பட்டணத்தின் வாயிலுக்கு வெளியே உள்ள பள்ளத்தாக்கிற்கு, அதாவது இயேசு கழுதையின் மேல் பவனி வந்த இடத்திற்கு அருகாமையில் உள்ள இடத்திற்குப் போகச்சொன்னார் என்பதை நம்முடைய பாடம் நமக்குக் கூறுகின்றது. தாவீது இராஜா தனது சொந்தக் கோவேறு கழுதையின் மேல், சாலொமோனை ஏற்றிக்கொண்டு போகும்படிக்குக் கட்டளையிட்ட விஷயம், சாலொமோன், தாவீதினால் இராஜாவாக நியமிக்கப்பட்டதை அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. இந்த விசேஷமான தூதுவர்களோடு, இராஜாவின் விசேஷமான காவலாட்களாகிய கிரேத்தியரும், பிலேத்தியரும்கூடச் சென்றனர். சாலொமோன் அபிஷேகிக்கப்பட்டார்; சாலொமோனை இராஜாவாக அறிவிக்கும் விதமாக எக்காளங்கள் ஊதப்பட்டன, அவரை இராஜாவாக அங்கீகரிக்கும் விதத்தில் ஜனங்கள் ஏகமாய்ச் சத்தமிட்டு, சந்தோஷப்பட்டார்கள். இவ்விதமாக சாலொமோன் அரண்மனைக்குக் கொண்டுவரப்பட்டு, தனது தகப்பனாகிய தாவீதுடன் சுமார் ஆறு மாதங்கள் சேர்ந்து ஆளுகைசெய்தார், பிற்பாடு தாவீது மரணமடைந்தார்.

## சாலொமோனின் ஞானம் மற்றும் தன்னடக்கம்

இராஜாவாகிய சாலொமோன்மேல் வைக்கப்பட்டிருந்த பாரமான பொறுப்புகளைச் செய்வதற்கு அவர் மிகவும் இளைஞனாக இருந்தார். அவர் வெளிக்காட்டின தன்னடக்கமானது, அவர் சமசீரான மனநிலையில் இருக்கின்றார் என்பதை மாத்திரம் காட்டாமல், அவர் நன்கு பயிற்சி அளிக்கப்பட்டிருக்கின்றார் என்பதையும் காட்டுகின்றது. சாலொமோனுடைய பிறப்பின்போது, அவருடைய தகப்பனுக்கு 53-வயதாய் இருந்தது. இந்த வயதில் அநேகமாக, தாவீது தனது குடும்ப அங்கங்களை அவர்களின் இஷ்டப்படி விட்டுவிட்டதினால் வந்த அனுபவங்களிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டிருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. தாவீது தனது பிள்ளைகளைப் போதுமான கண்டிப்புடன் வளர்க்கவில்லை. பிள்ளைகளைக் கர்த்தருக்குள் எச்சரித்து வளர்க்கும் பயிற்சியின் அவசியத்தைத் தாவீது போதுமானஅளவு உணர்ந்துகொள்ளவில்லை. நாட்டின் முக்கியமான விஷயங்கள் தாவீதின் கவனத்தை, அவைகளின் பக்கமாகத் திருப்பினபடியால், இராஜாவைப்போன்று அதிகம் பயபக்தி இல்லாதவர்களின் கவனிப்பில், பராமரிப்பில் பிள்ளைகளை விட்டுவிட வேண்டியதாய் இருந்தது. தனது வாலிபப்பிராயத்தில் தாவீது பக்தியுடன் காணப்பட்டபடியால், தனது பிள்ளைகளும் தன்னைப்போன்ற இருதயமும், மனமும் உடையவர்களாக இருப்பார்கள் என்று எண்ணிவிட்டார். மேலும் ஆஸ்தியும், பூமிக்குரிய கனங்களும் ஒழுக்கக்கேட்டை உண்டாக்கும் என்றும்,

அவைகள் தேவபக்திக்கு வழிநடத்தாமல், பெருமை, உலகப்பிரகாரமான மோகம் மற்றும் தேவபக்தியற்ற தன்மைகளை விருத்திசெய்யும் என்றும் தாவீது போதுமான அளவு உணர்ந்துகொள்ளவில்லை. தாவீதுக்குக் கர்த்தர்மேல் இருந்த பக்திவைராக்கியம் அதிகரித்தப்படியாலும், தனது மற்றப் பிள்ளைகளைப் பயிற்றுவிப்பதில் தான் பண்ணின தவறுகளை அவர் உணர்ந்துகொண்டபடியாலும், தனக்குப்பின் சிங்காசனத்தில் உட்காரும் தனது குமாரன் கர்த்தரை கனப்படுத்தி, மதத்தின் விஷயங்களின்மேல் ஈடுபாடு காட்டவேண்டும் என்று விருப்பம் கொண்டபடியாலும், சாலொமோனாகிய தனது மகனை, நாத்தான் தீர்க்கத்தரிசியின் விசேஷமான பராமரிப்பின்கீழ் இராஜா வைத்தார்; அதாவது, மகனாகிய சாலொமோன், கர்த்தர் மற்றும் அவரது இராஜ்யத்தைச் சேவிக்கவும், தாவீது விரும்பியும் அனுமதிக்கப்படாத ஆலயத்தைக் கட்டவும் ஆயத்தப்படுத்தப்படுவதற்கு, சாலொமோனை நாத்தான் தீர்க்கத்தரிசியின் பராமரிப்பின்கீழ்த் தாவீது வைத்தார். ஆலயத்தின் வேலையைக்குறித்தும், அது தாவீதின் குமாரனினால் கட்டப்படும் என்ற தேவனுடைய வாக்குத்தத்தம்குறித்தும், சாலொமோன் கர்த்தராலும், இராஜாவினாலும் தெரிந்து கொள்ளப்பட்டவர் என்பதுகுறித்தும் நாத்தான் தீர்க்கத்தரிசி அறிந்திருந்தார். இளவரசனான சாலொமோன் செய்து முடிக்க வேண்டிய கடமைகளுக்கு, அவரைப் பயிற்றுவிப்பதில் தீர்க்கத்தரிசி எவ்வளவு நேர்மையுடன் காணப்பட்டிருந்திருப்பார் என்பதை நாம் கற்பனைசெய்து புரிந்துகொள்ளலாம்.

அதோனியாவைக்குறித்து வாசிக்கையில், அவனுடைய தகப்பன்: நீ இப்படி செய்வானேன் என்று அவனை ஒருக்காலும் கடிந்து கொள்ளவில்லை என்று பார்க்கின்றோம். (1 இராஜாக்கள் 1:6) அதோனியா செல்லம் கொடுத்து கெடுக்கப்பட்ட பிள்ளையாக இருந்தார்; மேலும் தனது தகப்பன், தன்னை நாத்தான் தீர்க்கத்தரிசிபோன்ற மிகுந்த மத ஈடுபாடுள்ள ஆசிரியரின் பாதுகாப்பின்கீழ் விடாததின் நிமித்தம் மகிழ்ச்சியடைந்திருப்பார். சில இன்பங்களை அனுபவிக்க முடியாதபடிக்கு சாலொமோன் விசேஷமாக தடைசெய்யப்பட்டுள்ளார் என்று அதோனியா சிந்தித்திருப்பதில் ஐயமில்லை. சாலொமோனுக்கு அதிக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது என்றும் அதோனியா சிந்தித்திருப்பார். ஆனால் சாலொமோனோ, இம்மாதிரியான அனுபவங்களுக்காக மிகவும் சந்தோஷம் அடைந்திருப்பார். இளந்தண்டுகள் வளைக்கப்பட வேண்டுமெனில், அவைகள் ஆரம்பத்திலேயே கையாளப்பட வேண்டும். இப்பாடத்தை அனைத்து பெற்றோர்களுக்கும், guardian/காவலாளர்களுக்கும் முன்வைக்கின்றோம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள்மீது கவனத்தையும், அன்பான மதக்கட்டுப்பாட்டையும் செலுத்த வேண்டும். ஜீவியத்தின் ஆரம்பக்காலங்களை கவனம் செலுத்தாமல், பயிற்சியளிக்காமல் வீணடித்துவிட்டு, பின்னர் நற்பலன்களை எதிர்பார்ப்பது தவறாகும்.

## நாம் அரியணைக்காக பயிற்றுவிக்கப்படுகின்றோம்

நமது பிதா, மாபெரும் இராஜா ஆவார். அவர் கிறிஸ்து தமது சிங்காசனத்தில் உட்காருவார் என்று வாக்களித்துள்ளார். மேலும் அபிஷேகிக்கப்பட்ட மேசியாவாகிய கிறிஸ்துவின் அங்கங்களாகும்படிக்கு நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம். நாமும் இந்த முக்கியமான ஸ்தானத்திற்கு வர பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்று கூறும்போது ஆச்சரியப்படுகின்றோமா? இந்த உன்னதமான ஸ்தானத்திற்கு அழைக்கப்படா தவர்களிடம் எதிர்பார்க்கப்படுபவைகளைக்காட்டிலும், அழைக்கப்பட்டுள்ளவர்களாகிய நம்மிடம் அதிகம் எதிர்பார்க்கப்படுவதினால் வியப்படையலாமா? நம்மீது அதிக கட்டுப்பாடுகளும், பயிற்சிகளும் விதிக்கப்படு வதினால் வியப்படையலாமா? ஆகையால் யாரெல்லாம் அவருக்கு இசைவாக இருக்கின்றார்களோ, அவர்கள் இராஜ்யத்தின் கனத்தைப் பெறுவதற்குப் பாடங்களைக் கற்றுக்கொள்வதற்கும், ஆயத்தங்கள்

செய்வதற்கும் ஆவலாய் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் தாங்கள் நிழலான அப்சலோம் மற்றும் அதோனியாவின் விருந்துகளிலிருந்தும், தோழமைகளிலிருந்தும் தவிர்க்கப்பட்டதைக்குறித்து வியப்படைய வேண்டாம். தலை முதல் சரீரத்தின் கடைசி அங்கம் வரைக்கும் தீமையாய்ப் பேசப்படுவார்கள், அவமதிக்கப்படுவார்கள்; ஆனால் தெய்வீகத் தயவு இவர்களுக்கு இருக்குமாயின், இவர்கள் அபிஷேகிக்கப்படுவதோடு, சிங்காசனத்திற்கும் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். அன்பான சகோதர சகோதரிகளே உங்கள் விடுதலையின் வேளை சமீபமாய் இருப்பதை உணர்ந்து பொறுமையாய் இருங்கள். ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். (1 பேதுரு 5:6)

## நமது ஆதார வசனம்

நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும், உற்சாக மனதோடும் சேவி. வெளிப்புறமான ஊழியங்கள் தேவனுக்குப் போதுமானவைகள் அல்ல. ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்பவர்களையே கர்த்தர் தேடுகின்றார். சாலொமோன் தனது உயர்ந்த பணியின் விஷயத்தில் பெற்றிருந்த சிறந்த தொடக்கமும், அதன் பின் அவருக்கு வந்த தேவ தயவும், அநேக வருடங்களுடைய கற்றுக்கொள்ளுதலுக்குப் பிறகே வந்தது. தீர்க்கதரிசியின் வழிநடத்துதலினாலும், தனது தகப்பனின் ஆலோசனைகளினாலும் சாலொமோனினால் எருசலேமில் ஸ்தாபிக்கப்படப்போகிற மாபெரும் ஆலயத்தைக் குறித்த தனது தகப்பனுடைய திட்டத்தின் ஆவியுடன் ஒன்றிணைய முடிந்தது. இவ்வாலயத்தைக் கட்டுவதன் மூலம் மதமும், அதாவது உண்மையான மதமும், தேவனுடைய ஆராதனையும், இஸ்ரயேலர்கள் முன் முக்கியமான ஸ்தானத்தில் கொண்டு நிறுத்தப்படும். தேவனையும், அவருக்குரிய ஆராதனையையும், மற்ற எல்லா விஷயங்களைவிட தங்கள் முன்பாக இஸ்ரயேலர்கள் வைக்கும்போது, முழு இஸ்ரயேல் தேசமும் விசேஷமாக ஆசீர்வதிக்கப்படும் என்பதை உணர்ந்துகொண்ட தனது தகப்பனிடத்தில் இருந்த அதே ஆவியை, சாலொமோனும் பெற்றுக்கொண்டார். ஆலயத்தைக் கட்டுவதற்கும், அதன் சேவைகளுக்கென்று சமர்ப்பிப்பதற்கும் தனது தகப்பனால் சேர்த்துவைக்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் ஆஸ்திகள் குறித்துச் சாலொமோனுக்கு அறிவிக்கப்பட்டது. இவைகளில், சாலொமோன் தனது அறிவையும், தனது நோக்கங்களையும் செயல்முறைப்படுத்துவதற்குரிய அதிகமான வாய்ப்புகளைப் பெற்றுக்கொண்டார்; மேலும் இது அவரைக் கர்த்தரிடம் அதிகமாய்க் கிட்டிச்சேர செய்து, தனது தகப்பனுக்குப்பின் எவ்வளவு சிறப்பாக கர்த்தருக்கும், இஸ்ரயேல் ஜனங்களுக்கும் ஊழியஞ்செய்ய வேண்டும் என்பதையும் கற்றுக்கொடுத்தது.

ஆகவே நாம் அன்பான பிள்ளைகளாக, முழுமையான இருதயங்களோடும், வாஞ்சையான மனங்களோடும் தேவனை நாடித் தேடுவோமாகில், எதிர்காலத்தைக்குறித்த தமது மாபெரும் திட்டங்களையும், நோக்கங்களையும் நமக்கு வெளிப்படுத்துவார் என்று நாம் பார்க்கின்றோம். ஆலயம் கட்டப்படுவதற்குரிய தமது நோக்கத்தை நமக்கு அறிவித்துள்ளார்; அது எப்படி, எப்பொழுது கட்டப்படும் என்றும், பூமியின் குடிகளை ஆசீர்வதிப்பதே அதன் நோக்கம் என்றும் நமக்கு அறிவித்துள்ளார். நம்முடைய பாதையின் ஒவ்வொரு அடியிலும், தேவனுடைய யுகங்களைக்குறித்த மாபெரும் திட்டத்திற்கு நாம் இசைவாய் அதிகமதிகமாய்க் காணப்படும்போது, நாம் அந்த ஆலயம் மற்றும் இராஜ்யத்தில் பங்கடையத்தக்கதாக அதிகமதிகமாய் வளர்ந்து, ஆயத்தமாகுவதற்கு உதவப்படுவோம்.

## சாலொமோனின் ஞானமான தன்னடக்கம்

சாலொமோன், தனது சகோதரனாகிய அதோனியாவிடம் பெருந்தன்மையுடன் நடந்துகொள்ளும் சம்பவத்தோடு நம்முடைய பாடம் முடிவடைகின்றது. அந்தக் காலங்களில் உள்ள இராஜ்யங்களில் ஓர் இராஜா பதவி ஏற்கும்போது, தனக்கெதிராகச் செயல்பட இருப்பவர்களை மரணத்திற்குள்ளாக்குவது வழக்கமாய் இருந்தது. அதோனியா, தனது ஜீவன் ஆபத்தில் உள்ளது என்று எண்ணி, தான் சாலொமோனுக்கு எதிராக செயல்பட்டதினிமித்தம் இப்பொழுது தனக்கு இராஜா தீங்கு செய்ய மாட்டார் என்ற உறுதி தனக்குக் கிடைக்கும்வரையிலும், பாதுகாப்புக்காக ஆசரிப்புக்கூடாரத்தின் பிரகாரத்தில் உள்ள பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக்கொண்டு நின்றார். அதோனியாவுக்குச் சாலொமோன் கொடுத்த விடையும், அவர் நடந்துகொண்ட விதமும், ஞானமாகவும், அன்பு நிறைந்ததாகவும் இருந்தது. அப்பொழுது சாலொமோன்: அவன் யோக்கியன் என்று விளங்க நடந்துகொண்டால் அவன் தலைமயிரில் ஒன்றும் தரையிலே விழப்போகிறதில்லை; அவனிடத்தில் பொல்லாப்பு காணப்படுமேயாகில், அவன் சாகவேண்டும் என்றான். அவனைப் பலிபீடத்திலிருந்து கொண்டுவர, இராஜாவாகிய சாலொமோன் ஆட்களை அனுப்பினான்; அவன் வந்து, இராஜாவாகிய சாலொமோனை வணங்கினான்; சாலொமோன் அவனைப் பார்த்து: உன் வீட்டிற்குப்போ என்றான் (1 இராஜாக்கள் 1:52, 53); அதாவது அதோனியா முன்பு செய்தவைகளுக்கு எவ்விதமான தண்டனையும் கொடுக்கப்படவில்லை, ஆனால் அவனது எதிர்க்காலம் அவனது நன்னடத்தையைப் பொறுத்தே காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. தயவு காண்பிப்பது அருமையான விஷயமாகும், மேலும் அது பரலோக இராஜ்யத்திற்குரிய பிள்ளைகளிடத்தில் இன்றியமையாததாய்க் காணப்பட வேண்டிய பண்பாகும். உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மைசெய்யுங்கள், கைம்மாறுகருதாமல் கடன் கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே. (லூக்கா 6:35).

இறுதியில் அனைத்துத் துன்மார்க்கரும் அழிக்கப்படுவார்கள் என்பதே தேவனுடைய நோக்கமாக இருக்கின்றது. மனுக்குலத்தின் குடும்பத்தை அறியாமையும், பெலவீனங்களுமே பிடித்து வைத்திருப்பதினால், தற்காலத்தில் தேவன் தமது சத்துருக்கள்மீதும், நீதியின் சத்துருக்கள்மீதும் அன்பையும், இரக்கத்தையும் காட்டுகின்றார். ஏனெனில் அவர்கள் ஒருவேளை முழுவெளிச்சம் மற்றும் ஆற்றலின்கீழ் இருந்திருந்தால், அவர்கள்மீது எப்படிப் பொறுப்புக் காணப்பட்டிருக்குமோ, அப்படிப்போல இப்பொழுது அறியாமையின்கீழ் இருக்கையில் அவர்கள் பொறுப்பாளிகளாக இருப்பதில்லை. இந்தத் தேவனுடைய வார்த்தைகளில் இருக்கும் பரந்த கண்ணோட்டம் நமக்குக் கிடைக்குமாயின், நம்முடைய சத்துருக்களும் நம்மைப்போன்று பெலவீனங்கள், குறைவுகள் மற்றும் அறியாமையினால் ஆட்கொள்ளப்பட்டுள்ளனர் என்று உணர்ந்து, எல்லார்மீதும், நம்முடைய சத்துருக்கள்மீதும் அன்பு செலுத்த முடியும். இந்தப் பெலவீனங்களைத் தேவன் நமது மீட்பரின் புண்ணியத்தினால் மறைத்து, இறுதியில் நீக்கிப்போட ஏற்பாடு செய்துள்ளார். தேவன் மனுஷர்கள் சுதந்தரித்துக்கொண்ட குறைவுகளைத் தயவோடு பார்க்கிறதுபோல, அவருடைய ஆவியை உடையவர்களும், அவருடைய வார்த்தையினால் வழிநடத்தப்படுகிறவர்களுமாகிய நாம் அனைவரும்கூடத் தயவோடு நோக்குவோமாக.

R2045

# அபிஷேகிக்கப்பட்ட இராஜாவாகிய சாலொமோன்

## 1 இராஜாக்கள் 1:28-39

இஸ்ரயேலின் சிங்காசனத்தில், தாவீதின் குமாரர்களில் வாரிசாக இருக்கும்படிக்கு, சாலொமோன் கர்த்தருடைய தெரிந்துகொள்ளுதலாய் இருப்பார் எனும் காரியமானது 1 நாளாகமம் 22:8-9-ஆம் வசனங்களில் தெளிவாகுகின்றது. ஆனாலும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி: நீ திரளான இரத்தத்தைச் சிந்தி, பெரிய யுத்தங்களைப்பண்ணினாய்; நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டாம்; எனக்கு முன்பாக மிகுதியான இரத்தத்தைத் தரையிலே சிந்தப்பண்ணினாய். இதோ, உனக்குப் பிறக்கப்போகிற குமாரன் அமைதியுள்ள புருஷனாயிருப்பான்; சுற்றிலுமிருக்கும் அவன் சத்துருக்களையெல்லாம் விலக்கி அவனை அமர்ந்திருக்கச் செய்வேன்; ஆகையால் அவன் பெயர் சாலொமோன் என்னப்படும்; அவன் நாட்களில் இஸ்ரயேலின்மேல் சமாதானத்தையும் அமரிக்கையையும் அருளுவேன். (2 சாமுயேல் 12:24-25; 1 நாளாகமம் 17:11-15; 2 சாமுயேல் 7:12-17). மேலும் சாலொமோன் கர்த்தருடைய தெரிந்துகொள்ளுதலாய் இருக்கின்றார் என்ற கண்ணோட்டத்தில்தான், தாவீது சாலொமோனின் தாயாராகிய பத்சேபாளிடம், அவளது குமாரன் நிச்சயமாக இராஜ்யபாரத்தைச் சுதந்தரித்துக்கொள்வான் என்று நிச்சயமளித்தார். (1 இராஜாக்கள் 1:13, 30)

சாலொமோன், பத்சேபாளுக்கும் தாவீதுக்கும் பிறந்த இரண்டாவது குமாரன் ஆவார். இவரது பெயரின் அர்த்தம் சமாதானமாகும்; இப்படியாக இவர் தொடர்புடைய விஷயத்திலுள்ள தேவனுடைய வாக்குத்தத்தத்தின் நினைவுகூருதலாகத் திகழ்ந்தார். இவரது இன்னொரு பெயராகிய யெதிதியா/Jedediah (யேகோவாவிற்குப் பிரியமானவன்) என்னும் பெயர், தாவீது மன்னிக்கப்பட்டதற்கும், திவ்விய தயவிற்குத் திரும்பினதற்கும் அடையாளமாக நாத்தான் தீர்க்கத்தரிசியினால் கொடுக்கப்பட்டது (2 சாமுயேல் 12:25); இக்குழந்தை அறிவிற்குள்ளாக வருவதற்கு முன்னதாகவே அல்லது தனது நன்மைக்கேதுவாக அது நன்மை அல்லது தீமையைத் தெரிவுசெய்வதற்கு முன்னதாகவே, இப்பெயர் கொடுக்கப்பட்டு, இவ்விதமாய் விசேஷித்த அன்பு வெளிப்படுத்தப்பட்ட காரியமானது, இவரது தகப்பனாகிய தாவீதிற்காகவே ஆகும்; தாவீதைத் தேவன் அன்புகூர்ந்து, தெரிவுசெய்துள்ளார்; மேலும் இந்தத் தாவீதின் சந்ததியில்தான் நீண்டகாலமாய் வாக்களிக்கப்பட்டிருந்த மேசியா - தேவனுடைய நிஜமான இராஜ்யத்தின் இராஜா வருவார். ஆகையால் (சமாதானம்) சாலொமோன், (கர்த்தருடைய பிரியமானவன்) யெதிதியா என்னும் பெயர்கள், தாவீது இன்னமும் பிரியத்திற்குரியவராகவே இருக்கின்றார் என்றும், இவர் முழுமையாகத் தெய்வீகத் தயவைத் திரும்பப்பெற்றுக்கொண்டார் என்றும், இவருக்கும், இவரது சந்ததிக்கும் தேவனால் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்கள் இன்னமும் உண்மையாகவே தொடரும் என்றும் சுட்டிக்காட்டுவதாகக் காணப் படுகின்றன.

சாலொமோன் சிறுவயதிலேயே, சுமார் 19 அல்லது 20 வயதிலேயே அரியணைக்கு வந்தார். இந்த ஒரு காலகட்டத்தின்போது, இவரது தனிப்பட்ட தகுதிகள் என்னவாக இருந்தது என்பதுகுறித்த விஷயத்தில், 1இராஜாக்கள்3:3-ஆம் வசனத்தின் காரியங்களை மாத்திரமே நாம் அறிவோம். சாலொமோன் கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, தன் தகப்பனாகிய தாவீதின் கட்டளைகளில் நடந்தார்; அவர் மேடைகளிலே (கர்த்தருக்கு) பலியிட்டு தூபங்காட்டி வந்தார் (1 இராஜாக்கள் 3:3). இது மோசேயின் பிரமாணத்தினால் தடைசெய்யப்பட்டிருந்தபோதிலும், ஆலயம் கட்டப்படுவதுவரையிலும், இது தேவனால் ஏற்றுக்கொள்ளப் பட்டது. (1 சாமுயேல் 9:12; 1 இராஜாக்கள் 3:2-ஆம் வசனங்களைப் பார்க்கவும்).

சீக்கிரத்தில் ஸ்தானம், அதிகாரம், ஐசுவரியம் மற்றும் பொதுவான செழுமையின் மதிமயக்கும் செல்வாக்குகளானது, வாக்குத்தத்தத்தினால் அனல்மூட்டப்பட்ட எதிர்காலத்தைப் பெற்றிருந்த, தயவு பாராட்டப்பெற்றிருந்த இந்த வாலிபனுடைய குணலட்சணங்களில், அதன் தாக்கங்களைக் காண்பித்தது. இவரது குணலட்சணமானது, அனுபவம் எனும் பள்ளிக்கூடத்தில் ஒருபோதும் வளர்க்கப்படவில்லை;

ஏனெனில் இவர் தன் வாலிபப்பிராயம் முதற்கொண்டு சொகுசில் வளர்க்கப்பட்டவர் ஆவார்; இவரது கொள்கைகள் சோதிக்கவும்படவில்லை. இவரது கொள்கைகள் மாறா தன்மையுடையவைகளாகவும், உறுதியானவைகளாகவும் இருந்ததில்லை. தேவனுடைய ஜனங்களுக்காகவும், தனது தந்தையாகிய தாவீதிற்காகவும் பாராட்டப்பட்ட தேவனுடைய நன்மைகளை, தான் கண்டும், கேட்டும் இருப்பதினாலும், தேவன் தன்னை அன்புகூர்ந்து தன்னை இராஜாவாகத் தெரிந்துகொண்டிருந்ததினாலும், சாலொமோன் தேவனை அன்புகூர்ந்தார்; எனினும் இவரது இருதயம் தேவனிடத்தில் நங்கூரமிடப்பட்டிருக்கவில்லை. தேவன் நீதி மற்றும் சத்தியத்தின் உறைவிடமாகவும், இவைகளின் மகிமையான திருஷ்டாந்தமாகவும் காணப்படும் காரணத்தினால், அவருக்குள் வாசமாயிருக்கும் நன்மைகளின்நிமித்தம் அவரை அன்புகூருவதற்குச் சாலொமோன் கற்றிருக்கவில்லை; நீதியை அன்புகூருகின்றவன், இன்னுமாகத் தேவன் நீதியுள்ளவராய் இருக்கின்றபடியால், அவரை அன்புகூருகின்றவன் மட்டுமே, தேவனில் உண்மையாய் நங்கூரமிடப்பட்டவனாகவும், இதன் காரணமாக உறுதியான குணலட்சணம் எதையேனும் பெற்றிருப்பவனாகவும் காணப்படுவான். இப்படியான விதத்தில் சாலொமோன் தேவனிடத்தில் அன்புகொண்டிருக்கவில்லை எனும் கவலைக்கிடமான காரியமும், இதன் விளைவாக இவர் குணலட்சணத்தின் உறுதியில் குறைவுபட்டிருந்ததும், அடுத்தடுத்து இவரது வாழ்க்கையில் சீக்கிரமாய் வெளிப்பட ஆரம்பித்தது.

தேவன் முடிவை அறிந்தவராகவும், துவக்கம் முதல் இவரது வாழ்க்கையில் வரும் காரியங்கள் அனைத்தையும் அறிந்தவராகவும் இருந்தபோதிலும், இவரது ஒழுக்க சீரழிவையும், தேசத்தின்மீதான அதன் கேடான தாக்கத்தையும் தேவன் முன்னமே கண்டறிந்தபோதிலும், தம்முடைய ஞானமுள்ள நோக்கங்களுக்காக, சாலொமோன் இஸ்ரயேலின் இராஜாவாக இருக்கும்படிக்கு இவரைத் தேவன் தெரிந்துகொண்டார். எனினும் இவர் தனிப்பட்ட விதத்தில் சீரழிந்துபோனதும், இவர் தேசத்தைப் பாவத்திற்கு வழிநடத்தியிருந்ததும் ஒருபக்கமிருக்க, இன்னொரு பக்கத்தில் இவரைத் தெரிந்துகொண்டதிலுள்ள தெய்வீக நோக்கமானது, போற்றத்தக்க விதத்தில் நிறைவேறினது என்று பார்க்கின்றோம். இந்தப் பாடத்தை நாம் பார்க்கும்போது, அந்த நோக்கமும், அதன் நிறைவேறுதலும் மிகத் தெளிவாய்ப் புரிந்துகொள்ளப்படும். எனினும் பெருமளவில் பூமிக்குரிய வளத்தைக்கொடுக்கும் ஆளுகையைச் செலுத்தும் ஓர் இராஜாவை இஸ்ரயேலுக்கு எப்போதும் கொடுப்பதாகத் தேவன் தெரிவிக்கவில்லை என்பதைக் கவனிப்போமாக. எனினும் ஜனங்கள் ஓர் இராஜா வேண்டும் என்று கேட்டபோது, அவர்களுடைய வாஞ்சையின்படி அருளினார்; எனினும் ஜனங்களுடைய உரிமைகள் மற்றும் சுயாதீனங்கள் மீதான இராஜ அதிகாரத்தின் உரிமை மீறல்கள் குறித்துத் தேவன் உண்மையாய் முன்னெச்சரித்திருந்தார். (1 சாமுயேல் 8:9-18-ஆம் வசனங்களை வாசிக்கவும்). இவைகள் அனைத்தையும் அந்த ஜனங்கள் பின்வந்த வருடங்களில் அனுபவித்தார்கள்.

இது, அரசாங்கம் பற்றிய தேவனுடைய எண்ணமாக இருக்கவில்லை, எனினும் மனுஷன் யார் என்று அவர் அறிந்திருந்தபடியால், மனுஷனுடைய அபூரணமான மற்றும் சுயநலமான இருதயம் அதிகாரத்திற்கு உயர்த்தப்படும்போது, அது என்ன செய்யும் என்று தாம் முன்னறிந்தவைகளை அவர் முன்னறிவிக்க மட்டுமே செய்தார்; இப்படியாகவேஇ ஸ்ரயேலின்வ ிஷயத்தில்க ாணப்பட்டது; இப்படியாகவேமு ழுஉ லகத்தின் விஷயத்திலும் காணப்படும்; சுயநலம் அதிகாரத்திற்கு உயரும்போது, அது தன்னை உயர்த்துவதற்காக அந்த அதிகாரத்தைப் பெருமளவில் பயன்படுத்திக்கொள்ளும்.

ஆனால் இதற்கு எதிர்மாறாகவே, இஸ்ரயேல் இராஜாக்களுக்கான கர்த்தருடைய அறிவுரைகள் காணப்பட்டன: இராஜா கர்த்தருடைய நியாயப்பிரமாணங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் அதன் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். அவன் தன் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, அவனுடைய இருதயம் அவன் சகோதரர்பேரில் மேட்டிமைக்கொள்ளாமலும், கற்பனையைவிட்டு வலதுபுறம் இடதுபுறம் சாயாமலும், இந்த நியாயப்பிரமாணத்தின் எல்லா வார்த்தைகளையும், இந்தக் கட்டளைகளையும் கைக்கொண்டு, இவைகளின்படி செய்வதற்காகத் தன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருக்கும்படி

கற்றுக்கொள்ளும் பொருட்டு, அவன் லேவியராகிய ஆசாரியரிடத்தில் இருக்கிற நியாயப்பிரமாண நூலைப்பார்த்து, தனக்காக ஒரு பிரதியை எழுதி, தன்னிடத்தில் வைத்துக்கொண்டு, தன் ஜீவனுள்ள நாளெல்லாம் அதை வாசிக்கக்கடவன். இப்படிச் செய்வதினால், தானும் தன் குமாரரும் இஸ்ரயேலின் நடுவே தங்கள் இராஜ்யத்திலே நீடித்து வாழுவார்கள். (உபாகமம் 17:18-20). ஆனால் இப்படி யாரும் செய்யவில்லை, அதாவது இஸ்ரயேலின் இராஜாவோ அல்லது வேறு எந்த ஒரு தேசத்தின் இராஜாவோ, எவ்வளவுதான் ஞானியாக அல்லது நல்லவராகக் காணப்பட்டபோதிலும், இப்படியாகச் செய்யவில்லை. அனைவருமே ஏறக்குறைய அதிகாரத்தின் பெருமையினால் உப்பிக்கொண்டார்கள்; இவர்களது இருதயங்கள், தங்கள் சகோதரர்களைக்காட்டிலும் பெருமைப்பாராட்டிக்கொண்டது. கர்த்தருக்குப் பிரியமான தாவீதுகூட, இதன் நாசகரமான செல்வாக்குகளினால் தாக்கப்பட்டு, அதனால் போதையூட்டப்பட்டு, கடும் பாவத்திற்குள் விழுந்துபோனார். எந்த ஒரு ஸ்தானத்தில் இருந்தாலும், நமது பெலவீனமான மனிதத்தன்மைக்கு அதிகாரத்தின் விஷயத்தில்வரும் சோதனைகள் என்பது, எப்போதும் பெருமை, ஆசை, சுயநலம் ஆகியவற்றைத் திருப்திப்படுத்துவதற்குரிய சோதனையாகவே காணப்படுகின்றது. வலது அல்லது இடது புறம் சாயாமல், திவ்விய பிரமாணத்தின் கோரிக்கைகளை முழுமையாய் நிறைவேற்றப்போகின்ற ஒரே இராஜா, யேகோவாவின் அபிஷேகிக்கப்பட்ட குமாரனாகிய, நமது ஆசீர்வதிக்கப்பட்ட கர்த்தர் இயேசு ஆவார்; இவர் தம் ஜனங்களை மிகவும் அன்புகூர்ந்தபடியால், அவர்களுக்காக ஜீவனையும் கொடுத்துவிட்டார். இவரைத் தேவன் மிகவும் உயர்வாக உயர்த்தியிருந்தபோதிலும், எல்லா நாமத்துக்கும் மேலான ஒரு நாமத்தை இவருக்குக் கொடுத்திருந்தபோதிலும், இயேசு என்ற இவரது நாமத்துக்கும், பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளும் தங்கள் முட்டுகளை முடக்கும் நிலைக்கு இவர் உயர்த்தப்பட்டபோதிலும், இவரது இருதயம் பெருமையினால் உப்பிக்கொள்ளவில்லை. (பிலிப்பியர் 2:9-11)

இவரிடத்தில் சுயத்தைப் பெருக்கிக்கொள்வதற்குரிய எந்தத் திட்டங்களும் இருக்கவில்லை; தம்முடைய ஜனங்களுக்கு அன்புடனும், விருப்பத்துடனும் ஊழியம்புரிய வேண்டும் என்றும், தம்முடைய ஜனங்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்றுமுள்ள இலட்சியம் தவிர்த்து, இவருக்கு வேறு இலட்சியங்கள் காணப்பட்டதில்லை; மேலும் இதை வார்த்தைகளோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கான தம்முடைய மாபெரும் பலியில் நடைமுறைப்படுத்தியும் காட்டி முழுக்கச் சான்றுபகர்ந்தார். அவர் ஐசுவரியமுள்ளவராய் இருந்தும், தம் ஜனங்களுக்காக தரித்திரர் ஆனார்; அவர் நித்தியஜீவனை உடையவராய் இருந்தும், அவர்களின் நிமித்தமாக, தம் ஜீவனை அவர்களுக்கான மீட்கும்பொருளாக இலவசமாய்க் கொடுத்துவிட்டார். அவரைக்குறித்து, இதோ ஓர் இராஜா நீதியாக அரசாளுவார் என்று எழுதப்பட்டுள்ளது; அவர் சமாதானப் பிரபு என்று அழைக்கப்படுகின்றார். அவரது நீதியுள்ள ஆளுகை பூமியில் ஸ்தாபிக்கப்படுவதுவரையிலும், சர்வ சிருஷ்டியும் தவித்து, பிரசவ வேதனைப்படும்; கிறிஸ்து மூலமாய்க் கொடுப்பதற்குத் தேவன் திட்டமிட்டுள்ள அந்தச் சமாதானம் மற்றும் செழிப்பாகிய ஆசீர்வாதங்களை இஸ்ரயேலும் சரி, உலகமும் சரி, அவரது ஆளுகை ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்புவரை அனுபவிப்பதில்லை. இதற்குச் சாலொமோனின் ஆளுகை நிழலாக மாத்திரம் காணப்பட்டது; நாம் பார்த்திருக்கிறபடி, சாலொமோனுடைய ஆளுகையின்போதான நிழலான சமாதானமும், செழிப்பும், மிகவும் வெறுமையானதாகவும், திருப்திகரமற்றதாகவும் காணப்பட்டது; எனினும் (சாலொமோன் எனும்) இந்தப் பிரகாசமான bubble/நீர்க்குமிழி, மகிமையான நிஜத்திற்கு நிழலாகக் காணப்பட்டது; மேலும் கிறிஸ்துவில் வெளிப்படவிருக்கும் மகிமைக்கு நிழலாய் இருக்கும் வேலையை நிறைவேற்றின பிற்பாடு, இந்த நீர்க்குமிழி உடைந்துபோனது; மீண்டுமாக ஒடுக்குகிறவனுடைய காலின்கீழ்த் தவிக்கும் சிருஷ்டிகள், தொடர்ந்து தவித்துக்கொண்டிருக்கின்றன; இராஜ்யத்திற்கு உரிமைக்காரனானவர் வந்து அதிகாரத்தை எடுத்துக்கொள்வதுவரையிலும், இந்தத் தவிப்பு தொடரும்.

என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன் பிதாவின் தேவனை அறிந்து,

அவரை உத்தம இருதயத்தோடும், உற்சாக மனதோடும் சேவி;

கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து,

நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்;
நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்;
நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்.

தாவீது தன் குமாரனாகிய சாலொமோனை நோக்கி:
நீ பலங்கொண்டு தைரியமாயிருந்து, இதை நடப்பி ;
நீ பயப்படாமலும், கலங்காமலும் இரு;
தேவனாகிய கர்த்தர் என்னும் என் தேவன் உன்னோடே இருப்பார்;
கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கடுத்த
சகல கிரியைகளையும் நீ முடித்துத் தீருமட்டும்,
அவர் உன்னைவிட்டு விலகவுமாட்டார், உன்னைக் கைவிடவுமாட்டார்.

*1 நாளாகமம் 28:9, 20* (ISV)



**சாலொமோன் இராஜாவாக அபிஷேகிக்கப்படுகின்றார்**
**- Julius Schnorr von Carolsfeld.**

தொகுதி v, பக்கம்: 155-164

# தாவீதின் குமாரனும், தாவீதின் ஆண்டவருமானவர்

## 1 இராஜாக்கள் 2

முதன்முதலாக அவர் யாருடைய குமாரன் என்ற இந்த வினா, அவர் இந்த உலகத்தில் வருவதற்கு முன்பிருந்த நிலையைக் குறிக்காது என்று உணரவேண்டும். மனுக்குலத்திலே அவர் யாருடைய வழித்தோன்றலில் தோன்றினார் என்பதே அந்த வினா. அவர் தாய் மரியாளிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட தம் சரீரத்தின் மூலம் மனிதனாகி மனுக்குலத்தோடு தொடர்புடையவரானார். லூக்கா எழுதினபடி தாவீதின் வம்சத்தில் வந்த நாத்தான் வ ழியாக மரியாள் தோன்றினாள் (லூக்கா 3:31). (இங்கே யோசேப்பு ஏலியின் குமாரன் என்று குறிப்பிடப்பட்டுள்ளார். திருமணத்தின் மூலம் மரியாளின் தந்தை ஏலிக்கு சட்டப்படி யோசேப்பு மகனாகிறார். அதாவது மருமகனாகிறார். ஆனால் பிறப்பின்படி அவர் யாக்கோபின் குமாரன் (மத்தேயு 1:16). யோசேப்பின் வம்சாவழியும்கூட மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் சொல்லப்பட்டபடி, தாவீதின் குமாரனாகிய சாலொமோனின் வழியில் வந்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மரியாள் மூலமாகப் பிறந்த இயேசுவை யோசேப்பு சுவீகாரப் புத்திரராகத் தெரிந்துகொண்டதால், இயேசுவுக்கு யோசேப்பின் வம்சாவழி அட்டவணையை ஒப்புநோக்குவதும் முறையே. நாம் ஏற்கெனவே கண்டபடி மரியாள் மட்டுமே இயேசுவின் பிறப்பில் சம்பந்தப்பட்டிருப்பதாலும், மரியாள் இன்னொரு வழியில் தாவீதின் வம்சத்தில் வந்ததாலும் யோசேப்பின் வம்சாவழி அட்டவணையைப் பார்க்கத் தேவையில்லை.

மரியாளுக்கு - யோசேப்புடன் ஏற்பட்ட உறவினால்தான் இயேசுவுக்கு இஸ்ரயேலின் சிங்காசனத்தின்மேல் உரிமை உண்டு என்று சிலர் குறிப்பிடுகிறது சரியல்ல என்று உணர வேண்டும். மாறாக யோசேப்பின் குமாரனாக இயேசு கருதப்பட்டால் தாவீதின் சிங்காசனத்திற்கு வாரிசுரிமையைப் பெறமுடியாது. ஏனெனில் தாவீதுக்குப்பின் வந்தவர்களில், சாலொமோனின் வழியில் வந்தவர்கள்தான் ஆட்சி உரிமையைப் பெற்றனர். நாத்தான் வழியில் வந்தவர்கள் அல்ல. இருப்பினும் அநேக வேதாகம, குறிப்புகளின்படி தாவீதின் சிங்காசனத்திற்குச் சாலொமோன் வழியில் தோன்றவேண்டும் என்ற நியதி இருக்கவேண்டியதில்லை. இதை நாம் சட்டப்பூர்வமான வம்சாவழியை அட்டவணைப்படுத்தும்போது, அது சிலர் முன்பதாகவே கற்பனையாகக் கட்டிவிட்ட கதையை சரி என்று ஒப்புக்கொள்ளும்படியாகிவிடும். ஆதலால் அதன்படி யோசேப்புக்கும் மரியாளுக்கும் பிறந்த குமாரன் என்பதாகிவிடும். எனவே இந்த வம்சாவழி அட்டவணையைக் கருத்துடன் ஆராய்வது அவசியம்.

இஸ்ரயேலின் மாபெரும் சிங்காசனத்திற்கு வாரிசாக வரப்போகிறவரும், இந்த உலகையே ஆசீர்வதித்து ஆட்சிசெய்ய சிங்காசனத்தில் அமரப்போகிறவரும் தாவீதின் வழித்தோன்றலாகத்தான் இருக்கவேண்டும் என்பது எந்த ஐயப்பாட்டிற்கும் இடமில்லாமல், தெய்வீக முன்குறிப்பின்படி தீர்மானிக்கப்பட்ட கருத்து என்பதை முதலில் அறிய வேண்டும். இரண்டாவதாக குறிப்பிட்ட சில நிபந்தனைகளின்படி ஆளுகின்ற குடும்பமாகிய சாலொமோனின் வழியில் இயேசு தோன்ற வேண்டும் எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால் அவர் சாலொமோனின் வம்சத்தில் தோன்றியாக வேண்டும். அந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படாவிட்டால் அவர் வேறு வம்சாவழியில் வந்திருக்க வேண்டும். எவ்வாறாயினும் அவர் தாவீதின் வம்சத்திலே வந்தாக வேண்டும், அவர் தாவீதின் குமாரனாகவும், தாவீதின் ஆண்டவராகவும் இருந்தாக வேண்டும். வேதாகம வசனங்களைக் காண்போம்:

உன் கர்ப்பத்தின் கனியை உன் சிங்காசனத்தின்மேல் வைப்பேன் என்றும், உன் குமாரர் என் உடன்படிக்கையையும், நான் போதிக்கும் என் சாட்சிகளையும் காத்து நடந்தால், அவர்கள் குமாரரும் என்றென்றைக்கும் உன் சிங்காசனத்தில் வீற்றிருப்பார்கள் என்றும், கர்த்தர் தாவீதுக்கு உண்மையாய் ஆணையிட்டார்; அவர் தவறமாட்டார். (சங்கீதம் 132:11, 12)

கர்த்தர் எனக்கு அநேகக் குமாரரைத் தந்தருளினார்; ஆனாலும் இஸ்ரயேலை ஆளும் கர்த்தருடைய இராஜ்யபாரத்தின் சிங்காசனத்தின்மேல் உட்காருகிறதற்கு, அவர் என்னுடைய எல்லாக் குமாரரிலும் என் குமாரனாகிய சாலொமோனைத் தெரிந்துகொண்டு, அவர் என்னை நோக்கி: உன் குமாரனாகிய சாலொமோனே என் ஆலயத்தையும், என் பிரகாரங்களையும் கட்டக்கடவன்; இந்நாளில் நடக்கிறபடியே, அவன் என் கற்பனைகளின்படியும், என் நியாயங்களின்படியும் செய்ய உறுதியாய் இருப்பானானால், அவன் இராஜ்யபாரத்தை என்றென்றைக்கும் திடப்படுத்துவேன் என்றார். (1 நாளாகமம் 28:5-7)

உன் பிள்ளைகள் தங்கள் முழு இருதயத்தோடும், தங்கள் முழு ஆத்துமாவோடும், எனக்கு முன்பாக உண்மையாய் நடக்கும்படிக்குத் தங்கள் வழியைக் காத்துக்கொண்டால், இஸ்ரயேலின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கத்தக்க புருஷன் உனக்கு இல்லாமற்போவதில்லை. (1 இராஜாக்கள் 2:3)

தேவனுடைய கட்டளையின்படி கீழ்ப்படிந்திருந்தால் மட்டுமே சாலொமோனுடைய வழியில் வருகிறவர்களின் சந்ததியில் மேசியாவின் இராஜ்யத்தையும், வரப்போகிற யுகாயுகத்தையும் ஆளப்போகிற வாரிசு உண்டாகும் என்பதே வாக்குத்தத்தம். இந்த வசனத்தைத் தீர்க்கமாக ஆராய்ந்தால், அதன்படி, இஸ்ரயேலர்கள் தேவ கட்டளைக்குக் கீழ்ப்படியாமற்போனால், சாலொமோனுக்குப் பின்வரும் சந்ததியார் தேவ இராஜ்யத்தில் ஆளும் தகுதியில் இருக்கமாட்டார்கள் என்று உறுதியாகக் கூறப்படுகிறது. சாலொமோனும்அ வனுக்குப்ப ின்வரும்ச ந்ததியாரும்,த ங்கள்மு ழுஇ ருதயத்தோடும்,த ங்கள்மு ழு ஆத்துமாவோடும், எனக்கு (தேவனுக்கு) முன்பாக உண்மையாய் நடக்கும்படிக்குத் தங்கள் வழியைக் காத்துக்கொண்டார்களா என்ற வினா எழுகிறது. அப்படி அவர்கள் கீழ்ப்படியாவிடில் சாலொமோன் வழியில் வந்த மேசியாவின் வம்சாவழிக்கு அவர்கள் புறம்பாக்கப்படுவார்கள்.

இந்த வினாவிற்கு விடை காண வேதத்தை நன்கு பரிசீலிக்க வேண்டும். சாலொமோனுக்குப் பின்வந்த சந்ததியார் தேவனுக்குக் கீழ்ப்படியாமற்போனார்களென்று வேதத்தின்மூலம் காண்கிறோம். தெய்வீகக் கட்டளைக்குக் கீழ்ப்படியாமற்போய்ச் சாலொமோன் வம்சாவழியினர் அதற்கு அருகதையற்றுப் போனதினால், மேசியா வருவதற்கு, தாவீதின் மற்ற பிள்ளைகளின் வம்சத்தில்தான் அதற்குரிய வாரிசு உருவாக வேண்டியிருந்தது. இங்குக் கர்த்தரின் வார்த்தையைக் கேட்போமாக:

என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும், உற்சாக மனதோடும் சேவி; கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார், நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார். (1 நாளாகமம் 28:9)

அவர் கற்பித்ததைக் கைக்கொள்ளாமற் போனதினால் கர்த்தர் அவன்மேல் கோபமானார். ஆகையால் கர்த்தர் சாலொமோனை நோக்கி, நான் உனக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையையும், என் கட்டளைகளையும் நீ கைக்கொள்ளாமற்போய் இந்தக் காரியத்தைச் செய்தபடியினால், இராஜ்யபாரத்தை உன்னிடத்திலிருந்து பிடுங்கி, அதை உன் ஊழியக்காரனுக்குக் கொடுப்பேன். ஆகிலும் உன் தகப்பனாகிய

தாவீதினிமித்தம், நான் அதை உன் நாட்களிலே செய்வதில்லை; உன் குமாரனுடைய கையினின்று அதைப் பிடுங்குவேன். ஆனாலும் இராஜ்யம் முழுவதையும் நான் பிடுங்காமல், என் தாசனாகிய தாவீதினிமித்தமும், நான் தெரிந்துகொண்ட எருசலேமினித்தமும், ஒரு கோத்திரத்தை நான் உன் குமாரனுக்குக் கொடுப்பேன் என்றார். (1 இராஜாக்கள் 11:9-13)

இதன்படி, சாலொமோனின் மரணத்திற்குப்பிறகு, இஸ்ரயேலின் பத்துக் கோத்திரங்கள் பிரிந்துபோய், சாலொமோனின் குமாரனும், சாலொமோனின் வாரிசாக ஆட்சிபுரிந்த ரெகோபெயாமுக்கு விசுவாசமாய்க் கீழ்ப்படிந்திருக்க மாட்டோமென்று பிரிந்து சென்றார்கள் என்று வரலாறு வேதாகமத்தில் பதிவுசெய்யப் பட்டுள்ளது. ஆனாலும் நாம் யூதா கோத்திரத்தைக்குறித்தும், அவர்களுக்குத் துணையாயிருந்த பென்யமின் கோத்திரத்தைக்குறித்தும் கர்த்தருடைய வார்த்தையைக் கவனிப்போமாக. சாலொமோன் கோத்திரத்திற்கு விசுவாசமாயிருந்த பென்யமின் கோத்திரம், இஸ்ரயேல் இராஜ்யத்துடன் சேராமல், மேசியாவின் இராஜ்யத்திற்கு நிழலான சாலொமோன் இராஜ்யத்துடன் சேர்ந்துகொண்டது. சாலொமோனுக்குப் பிற்பாடு அவனுடைய வம்சாவழியில் வந்த கடைசி மூன்று இராஜாக்கள் யோயாக்கீம், அவரது குமாரன் யோயாக்கீன், யோயாக்கீமின் சகோதரனாகிய சிதேக்கியா ஆகியோரே. இந்த மூவர்களுக்கெதிரான தேவனுடைய சாட்சியைக் கவனித்துக் கேட்போம். (யோயாக்கீனுக்கு கோனியா, எகொனியா என்ற பெயரும் உண்டு) இவர்களுடைய சந்ததியார் எவரும் இராஜ்யபாரம் பண்ணப்போவதில்லை என்பதை எரேமியா மூலம் அறிகிறோம்.

யூதாவின் இராஜாவாகிய யோயாக்கீமின் குமாரன் கோனியா, என் வலது கையின் முத்திரை மோதிரமாயிருந்தாலும், அதிலிருந்து உன்னைக் கழற்றி எறிந்து போடுவேன்... கோனியா என்கிற இந்த மனுஷன் அவமதிக்கப்பட்ட உடைந்த சிலையோ? ஒருவரும் விரும்பாத பாத்திரமோ? அவனும் அவன் சந்ததியும் தள்ளுண்டதும், தாங்கள் அறியாத தேசத்திலே துரத்திவிடப்பட்டதும் ஏது? தேசமே! தேசமே! தேசமே! கர்த்தருடைய வார்த்தையைக் கேள். இந்தப் புருஷன் சந்தானமற்றவன், தன் நாட்களில் வாழ்வடையாதவன் என்று இவனைக் குறித்து எழுதுங்கள்; அவன் வித்தில் ஒருவனாகிலும் வாழ்வடைந்து, தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து, யூதாவில் அரசாளப் போகிறதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார். (எரேமியா 22:24-30)

யூதாவின் இராஜாவாகிய யோயாக்கீமைக் குறித்து: தாவீதின் சிங்காசனத்தின்மேல் உட்காரும்படி அவன் வம்சத்தில் ஒருவனும் இரான்... (எரேமியா 36:30)

சிதேக்கியாவைக் குறித்து நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்:

இஸ்ரயேலை ஆளுகிற அவபக்தியுள்ள துன்மார்க்க அதிபதியே, அக்கிரமத்துக்கு முடிவு வருங்காலத்தில் உன்நாள் வந்தது. பாகையைக் கழற்று, கிரீடத்தை எடுத்துப்போடு, அது இனி முன்போலிராது; தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனைத் தாழ்த்துவேன். அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். (எசேக்கியேல் 21:25-27)

இங்கே சாலொமோனுடைய வம்சாவழிகள் முற்றிலுமாக ஆட்சிப் பொறுப்பிலிருந்து அகற்றப்பட்டதைப் பிரகடனப்படுத்துகிறது. உயர்த்தப்பட்ட சந்ததியைத் தாழ்த்தி, தாழ்த்தப்பட்டிருந்த

சந்ததியை உயர்த்த வேண்டும் என்கிற தேவசித்தப்படி, மறைபொருளாகவும், ஆட்சிப்பட்டம் பெறுவதற்கு எந்தவித முயற்சியும் எடுத்துக்கொள்ளாதிருந்த நாத்தானின் வம்சம் உயர்த்தப்பட்டது. மாம்சத்தின்படி வரவேண்டியவராகிய மேசியா, மரியாளின் வயிற்றிலிருந்து பிறக்க, தாவீதின் பிள்ளைகளில் நாத்தானை தேவன் தெரிந்துகொண்டு ஏற்றவேளையில் உயர்த்தினார்.

சாலொமோனின் வாரிசுகள், தேவனுடைய கட்டளைகள், பிரமாணங்களின்படி நடவாததால், சாலொமோனின் வம்சாவழியில் மேசியா வருவார் என்று யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. எல்லா உரிமையும் இருந்தும், தங்கள் தீய நடவடிக்கைகளால் அந்தத் தேவ தயவை இழந்துபோனார்கள். அதற்கு இதைவிட வேறு என்ன சாட்சி வேண்டும்? இதன்படி அவர் யோசேப்பின் வம்சத்தில் வரவேண்டும், வந்து உரிமையையும் அதிகாரத்தையும் சுதந்தரித்துக்கொள்ள வேண்டும் என்பது முற்றிலும் தவறானதாகும். ஏனெனில் இந்த யோசேப்பின் வம்சத்திலே வருகிற எவரும் எப்போதும் சிங்காசனத்தில் உட்கார முடியாது என்பது மேற்சொன்ன காரணங்களால் நிரூபிக்கப்பட்டது. சாலொமோனின் கிளையிலிருந்து இராஜ்யபாரத்தை நீக்கிவிட்டு தாவீதின் வேறொரு கிளைக்குக் கொடுப்பார் என்பதற்கு வேறொரு ஆதாரம் வேதத்தில் முன்கூறப்பட்டுள்ளது. அது பின்வருமாறு: இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன்; அவர் இராஜாவாயிருந்து, ஞானமாய் இராஜரீகம்பண்ணி, பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார். அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும், இஸ்ரயேல் சுகமாய் வாசம்பண்ணும்; அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர் என்பதே. (எரேமியா 23:5, 6)

இயேசுவின் தாயாகிய மரியாள், இந்தச் சரியான கருத்தை பரிசுத்த ஆவியின் ஏவுதலால் புரிந்துகொண்டு, தீர்க்கதரிசனமாக, நன்றி நவிலும் ஸ்தோத்திர கீதமாகப் பாடியதை, லூக்கா 1:46-55-இல் காணலாம். தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ்செய்தார்; இருதய சிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார். பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார். பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி, ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார். தேவனால் ஒரு காலத்தில் தயவு பெற்றிருந்த சாலொமோனின் குடும்பத்தின் ஐசுவரிய நிலையையும், அப்பொழுது அறியப்படாமலிருந்த நாத்தானின் தாழ்ந்த நிலையையும் ஒப்பிட்டு மரியாள் பாடினதை இங்கே நாம் சிந்திக்கப் பொருத்தமாயுள்ளது. அவ்விதமாக சாலொமோனின் வம்சாவழியாகிய சிதேக்கியாவின் காலத்திலே பாகையும், கிரீடமும் அகற்றப்பட்டது. இவ்விதமான தாவீதின் வேரிலே நீதியின் கிளையாகிய உரிமைக்காரரிடம் அவைகள் கொடுக்கப்பட வேண்டியிருந்தது.

இவ்விதமாக எப்படிக் கர்த்தர், தாவீதின் வம்சத்தில் வந்த நீதியின் கிளையாகிறார் என்பதை விளக்கமாகப் பார்த்தோம். எந்தச் சந்ததியின் வழியாக மேசியா வந்தார் என்றும் பார்த்தோம். அதற்குச் சம்பந்தப்பட்ட முழு வேதாகம விளக்கங்களையும் கண்டோம். இப்பொழுது நாம் எப்படி அவர் தாவீதுக்கு ஆண்டவராகிறார் என்பதைக் காண்போம். அவர் தாவீதுக்கு எப்படிக் குமாரனாகவும், ஆண்டவராகவும் இருக்கிறார்?

இயேசு கிறிஸ்து மாம்சத்தில் இப்பூமிக்கு வந்து நமது மத்தியில் வாசம் செய்வதற்கு முன்பாக ஆவிக்குரிய நிலையில் இருந்தார். அப்போது அவர் தாவீதின் கிளையாகவோ, குமாரனாகவோ இருக்கவில்லை. ஒப்புரவாகுதலின் ஊழியத்தைச்செய்து முடித்த பிற்பாடு, தாவீதுக்கு மாத்திரம் அல்ல, எல்லாருக்கும் கர்த்தரானார் (அப்போஸ்தலர் 10:36). கிறிஸ்துவும் மரித்தோர்மேலும் ஜீவனுள்ளோர் மேலும் ஆண்டவராயிருக்கும் பொருட்டு, மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார். (உரோமர் 14:9)

லோகோஸ் ஒரு கர்த்தரென்றும், ஒரு தேவன் என்றும், வல்லமையுள்ள ஒருவர் என்றும், அதிகாரத்தில் மேலான ஒருவர் என்றும் சரியாக அழைக்கப்படுவது மெய்யே. முதலாம் வருகையில் மனிதனாக வந்திருந்தபோது, அவர் செய்த வல்லமையான அநேக கிரியைகளைக் கண்ட அப்போஸ்தலர்கள், அவருடைய மரணத்துக்கு முன்பாகவே அவரைக் கர்த்தர், ஆண்டவர் என்று அழைத்தனர். நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான் (யோவான் 13:13) என்று நாம் படிக்கிறோம். இயேசு கிறிஸ்துவை தேவன், பரிசுத்தப்படுத்தி, உலகிற்கு விசேஷித்த உடன்படிக்கையின் தூதராக அனுப்பினார். அவரைத் தேவன் எல்லா வகையிலும் மகிமைப்படுத்தி, இவர் என் நேச குமாரன், இவரில் நான் பிரியமாயிருக்கிறேன் என்று சாட்சியம் பகர்ந்தார். அவருடைய மகிமையைக் கண்ட அனைவரும், பிதாவாகிய தேவனின் ஒரே பேறானவரின் மகிமைக்கேற்றதாக இருப்பதையும், கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்திருப்பதையும் கண்டார்கள். அவர்கள் பிதாவின் பிரதிநிதியாக அவரைக் கனப்படுத்த வேண்டும், அவரது வார்த்தையைக் கேட்டுக் கீழ்ப்படிய வேண்டும், அவரை ஆராதிக்க வேண்டும், வழிபாடு பண்ணவேண்டும். மேலே குறிப்பிட்ட வசனத்தில் அப்போஸ்தலர் சொல்லுகிறபடி, நமது ஆண்டவராகிய இயேசு, மரித்து உயிர்த்தெழுந்ததினிமித்தம் கர்த்தராக அல்லது ஒரு ஆண்டவராக ஆனதில் ஒரு விசேஷித்த வேறுபட்ட கருத்து இருந்தது.

இயேசு கிறிஸ்து ஒப்புரவாக்குதலின் மத்தியஸ்தர் பணியை நிறைவேற்றி முடித்து உயிர்த் தெழுந்ததால் எல்லாருக்கும் அவர் - மரித்தோருக்கும் உயிருள்ளோருக்கும் - கர்த்தர் என்ற விசேஷித்த கருத்தை அறிகிறோம். இந்த மாபெரும் நோக்கத்திற்காகவே அவர் மனிதனானார். ஆதி தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையினால் பாவத்திற்குக் கீழாக விற்கப்பட்ட மனுக்குலம் பாவ இராஜ்யத்திற்கும் மரணதண்டனைக்கும் கீழாக, சீரழிந்த நிலையில், அனுகூலமற்ற நிலையில் இருந்தது. எல்லாத் தீமைகளிலிருந்தும் விடுதலைபெற தெய்வீகச் சட்டப்படி, ஆதாமுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும். மனுக்குலம் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். கிறிஸ்து அதை வாங்குபவரானார், அதன் சொந்தக்காரரானார், எல்லாருக்கும் ஆண்டவரானார். பரலோகத்திலிருந்து தமது மகிமையான இருப்பிடத்தை விட்டுவிட்டு இந்த நோக்கத்திற்காகவே பூமிக்கு வந்து மனிதரானார். இயேசு கிறிஸ்து தம்மையே ஈடுபலிக்கிரயமாகக் கொடுத்து, ஆதாம் மூலமாக மரணத்தீர்ப்பிடப்பட்ட முழு மனுக்குலத்தையும் மீட்டுக்கொண்டார் என வேதாகமம் விவரிக்கிறது. இவ்வாறு விலையேறப்பெற்ற இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை (ஜீவனை) விலைக்கிரயம் கொடுத்து முழு மனுக்குலமும் வாங்கப்பட்டது.

விலைக்கிரயம் கொடுத்து மனுக்குலத்தை மீட்ட காரணத்தினாலேயே மனுக்குலத்திற்கு இயேசு ஆண்டவரும் கர்த்தரும் ஆனார். இவ்வுலகை தமக்கு அடிமைப்படுத்துவதற்காக தம் இரத்தத்தை விலைக்கிரயமாக இயேசு கொடுக்கவில்லை. பாவம், சாபம், மரணம் ஆகியவற்றிலிருந்து முழு விடுதலையை மனித இனம் பெறவேண்டியே இதைச் செய்தார். தேவனுடைய கிருபையின் வரங்களை ஏற்றுக்கொள்ளுகிற யாவருக்கும் பாவம், சாபம் மற்றும் மரணத்திலிருந்து விடுதலையளிக்கிறார். ஏதேனில் இழந்துபோன புத்திர சுயாதீனத்தையும், உரிமைகளையும், கல்வாரியில் செலுத்தப்பட்ட விலைக்கிரயத்தினால் வாங்கினார். இதை மனுமக்களுக்குக் கொடுப்பதே மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதின் நோக்கமாகும். மனுக்குலம் இழந்த உரிமைகளையெல்லாம் மீட்டுத்தர தம்மையே ஈடாகத் தந்ததினால் கிறிஸ்து மனுக்குலத்தைக் கிரயத்திற்கு கொண்டவரும், எஜமானரும், எல்லாருக்கும் கர்த்தருமானார். இப்படியாக தமது மரணத்தினால் இயேசு கிறிஸ்து தாவீதுக்குக் குமாரன் மட்டுமல்ல, ஆண்டவருமானார். எப்படியெனில் தாவீது ஒரு மனுபுத்திரன். இயேசு கிறிஸ்து மனுக்குலத்திற்கெல்லாம் கர்த்தராகிவிட்டதால், மனுப்புத்திரராகிய தாவீதுக்கு இயேசு கிறிஸ்து ஆண்டவராகிறார்.

---

# தாவீது மற்றும் கோலியாத்

-Martin Mitchell

*கவசமோ, பட்டயமோ இல்லாமல், கர்த்தருடைய பெலத்தில்,*
*தேவன் மற்றும் சவுலின் ஆசீர்வாதத்துடன்*
*தடியும், கவணையும், ஆற்றிலிருந்து ஐந்து கூழாங்கல்லையும்*
*தன் கைகளில் எடுத்துக்கொண்டவராக,*

*வாலிபனான தாவீது, அறைகூவல் விடுவிக்கப்பட்ட*
*நாற்பத்தியோராம் நாளில் அங்குச் சென்றாரே;*
*கோலியாத் இவரைக்கண்டு, கவணைக் கவனியாமல்,*
*தடியை மாத்திரம் கண்டவராக*

*"ஓ, சிவந்த மேனியுள்ளவனே!*
*தடியோடு யுத்தத்திற்கு வருவதற்கு,*
*நான் விரட்ட நாயோ?" என்றாரே.*

*தாவீதோ: "நீ உந்தன் பட்டயத்தோடும்,*
*உந்தன் ஈட்டியோடும், உந்தன் கவசத்தோடும் வந்திருக்கின்றாய்,*
*நானோ இவைகள் மீது நம்பிக்கை வைக்கவில்லையே;*
*நீ அறைகூவல் விடுபவரின், எங்கள் சேனைகளின் தேவனின்,*
*சர்வவல்ல யேகோவாவின் நாமத்திலே வருகின்றேன்" என்றாரே.*

*கோலியாத் எழுந்து, சீற்றத்தோடு வந்தாரே,*
*தாவீதும் ஓடி, தன் கவணில் கூழாங்கல்லை வைத்து எறிந்தாரே;*
*கொல்வதற்குப் பாய்ந்த அந்தக் கல், அதன் இலக்கைத் தொட்டதே,*
*கோலியாத்தின் நெற்றியில் பட்டதே!*
*என்னே ஒரு மகிழ்ச்சி!*

கோலியாத்தின் சொந்தப் பட்டயத்தை, தாவீது உருவியே,
அந்தப் பெலிஸ்தனின் தலையை வெட்டிப்போட்டாரே.
தங்கள் வீரன் விழவே, பெலிஸ்தரின் சேனை
"இலையுதிர் காலத்தின் காற்றில்" இலைகள் உதிர்ந்து,
சிதறுவதுபோன்று சிதறினரே.
கர்த்தரிலுள்ள விசுவாசம் மற்றும் தன் கவண்கல்லினாலே,
தாவீது இஸ்ரயேலுக்கு வெற்றி கொணர்ந்தாரே.

நம் சத்துருவாகிய கோலியாத், பிசாசு என்று நாம் அறிவோமே;
இவன் தேவனுக்கு அறைகூவலிட்டு, முதல் பொய்யைக் கூறினானே.
தந்திரமாய் நம் ஜீவியத்தில் விளையாடுவானே.
மெய் "இடுக்கமான வழியினின்று" நம்மை வழிவிலகச் செய்யவே,
இவன் ஒளியின் தூதனுடைய வேஷம் தரிப்பானே.
"வசனம் இப்படி எழுதப்பட்டிருக்கின்றதே" எனும் கூழாங்கல்லினால்,
இவன் செயலற்றவனாக்கப்படலாமே, இவனை நாம் ஜெயங்கொள்ளலாமே.




**தாவீது கோலியாத்தைக் கொன்றுபோடுதல்**
**- Review and Herald Publishing.**

**ஆமென்!!**


# பின்னிணைப்பு


சவுலின் சாம்ராஜ்யம்
c. 1020-1000 B. C.
Copyright by C. S. HAMMOND & CO., N.Y.
Scale of Miles
Perennial Rivers
Seasonal Rivers & Streams
Capitals
Israelite Forces
Enemies of the Israelites
Kingdom of Saul at its greatest extent
The Great Sea
(Mediterranean Sea)
The Philistines invaded Israel through the Plain of Jezreel. The Israelites were defeated and Saul slain at Mt. Gilboa.
Saul defeated the Ammonites besieging Jabesh-gilead. For his triumph Saul was proclaimed King of all Israel.
Home of Samuel. Saul anointed here.
Jonathan's exploits at Michmash routed the Philistines.
Encounter of David and Goliath.
David, driven into exile by Saul, finally took refuge among the Philistines and settled in Ziklag.
Saul secured the southern border of Judah by defeating the Amalekites.
Phoenicians
MOUNT LEBANON
ZOBAH
MT. HERMON
SYRIAN STATES
Aramaeans
MAACHAH
GESHUR
Bashan
TOB
Havoth-jair
GILEAD
AMMON
MOAB
EDOM
JUDAH
Amalekites
Canaanites
Plain of Sharon
Plain of Jezreel
PHILISTIA
Cherethites
Kenites
Wilderness of Judah
Salt Sea (Dead Sea)
River Jordan
Sidon
Zarephath
Tyre
Kanah
Damascus
Ijon
Abel-beth-maachah
Dan
Kedesh
Hazor
Achzib
Accho
Cabul
Aphek
Chinnereth
Sea of Chinnereth
Karnaim
Ashtaroth
Rimmon
Hammath
Shimron
En-dor
Shunem
Jezreel
Dor
Megiddo
Taanach
Ibleam
Dothan
Beth-shan
Jabesh-gilead
Mahanaim
Edrei
Camon
Ramoth-gilead
Bezek
Thebez
Shechem
Succoth
Penuel
Jabbok R.
Aphek
Shiloh
Adamah
Joppa
Ramathaim
Lod
Ophrah
Bethel
Michmash
Rabbath-ammon
Beth-horon
Gezer
Jabneel
Ekron
Mizpeh
Geba
Gibeon
Ramah
Gilgal
Kirjath-jearim
Gibeah
Nob
Jerusalem (Jebusite city)
Heshbon
Mt. Nebo
Ashdod
Timnah
Beth-shemesh
Bethlehem
Medeba
Ashkelon
Azekah
Socoh
Adullam
Keilah
Tekoa
Gath
Lachish
Eglon
Hebron
Gaza
Ziph
En-gedi
Dibon
Aroer
Carmel
Maon
Gerar
Ziklag
Jattir
Raphia
Ar
Beer-sheba
Hormah
Aroer
Kir-moab (Kir-hareseth)
Besor


தாவீது மற்றும் சாலொமோனின் சாம்ராஜ்யம்
c. 1000 - 925 B. C.
Copyright by C. S. HAMMOND & CO., N. Y.
Scale of Miles
Perennial Rivers
Seasonal Rivers & Streams
Capitals
David's realm as King of Judah
David's realm as King of Israel
Territory conquered by David
Boundary of the Empire of David & Solomon
Solomon may have exercised economic control in this area. The Bible states that his dominions reached from Tiphsah, west of the Euphrates, to Gaza.
Hiram of Tyre furnished Solomon with materials and artisans to build the Temple and Palace at Jerusalem. As payment, Hiram received 20 cities in the vicinity of Cabul.
The Aramaean kingdoms conquered by David were placed under military rule. During Solomon's reign Rezon revolted and secured independence for Damascus.
Solomon maintained huge stables at Megiddo.
David captured the Jebusite city of Jerusalem and made it his capital.
The Philistines were defeated by David and driven back to the coastal area. Solomon later received Gezer from the King of Egypt.
David defeated the Ammonites at Rabbath-ammon and had himself proclaimed King of Ammon.
Moab was ruled as a vassal state by David and Solomon.
Edom was ruled by a military governor until the revolt of Hadad at the close of Solomon's reign.
Here Solomon built a fleet of ships for the Red Sea trade and a large smelter for refining the ores of the Arabah.
The Great Sea (Mediterranean Sea)
CHITTIM (CYPRUS)
Hittites
HAMATH
PHOENICIA
ZOBAH
DAMASCUS
ISRAEL
JUDAH
PHILISTIA
AMMON
MOAB
EDOM
GILEAD
BASHAN
TOB
GESHUR
MAACHAH
Amalekites
SYRIA (Aramaeans)
DESERT

பெஞ்சமின் கோத்திரத்தானாகிய

# சவுலின் வீட்டார்





* சவுலின் தவறுகளுக்கான சரிகட்டுதலாக, இவர்கள் கிபியோனியர்களிடம் ஒப்புக்கொடுக்கப்பட்டு கொல்லப்பட்டார்கள் (2 சாமுயேல் 21)

சவுலின் சந்தானம் மற்றும் பிள்ளைகள்: 1 நாளா. 9:39-40
சவுலின் மனைவிகள், பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகள்: 1 சாமுயேல் 14:50-51; 31:2
2 சாமுயேல் 6:23; 21:8

யூதா கோத்திரத்தானாகிய


# தாவீதின் வீட்டார்




தாவீதின் உடன்பிறந்தவர்கள்:
1 நாளா. 2:11-17

தாவீதின் மனைவிகள் மற்றும் பிள்ளைகள்:
2 சாமுயேல் 3:2-5 மற்றும்
1 நாளா. 3:1-9; 14:4-7

# ஆசாரியத்துவத்தின் வம்ச வரலாறு




[1]யாத். 6:16-20
[2]1 நாளா. 6:1-8
[3]1 நாளா. 24:1-6
[4]1 சாமு. 1:3
[5]1 சாமு. 4:17
[6]1 சாமு. 4:19-21
[7]1 சாமு. 14:3
[8]1 சாமு. 22:11-23
[9]1 சாமு. 22:20-23; 23:6
1 இரா. 2:26, 27*
[10]2 சாமு. 15:27, 36;
2 சாமு. 17:17, 20
1 இரா. 1:42 - 45

* தாவீது மரணப்படுக்கையில் இருக்கையில், சாலொமோனின் சகோதரன் அதோனியா, இராஜாவாகும்படிக்கு, இவருக்கு அபியத்தார் ஆதரவளித்தபோது, அபியத்தார் நீக்கம்செய்யப்பட்டார். சாலொமோனுக்குச் சாதோக் ஆதரவளித்தார். அபியத்தார் நீக்கம்செய்யப்பட்டபோது ஆசாரியத்துவம், எலெயாசாரின் வீட்டாருக்கு (சாதோக்கிற்கு) வந்தது.

## தாவீது பற்றின சொற்கள்

"தாவீது" என்ற பெயர் வேதவாக்கியங்களில் 1000-முறைக்கு அதிகமாக இடம்பெறுகின்றது; 1080 முறை பழைய ஏற்பாட்டிலும், 59 முறை புதிய ஏற்பாட்டிலும் இடம்பெறுகின்றது.

## தாவீது பற்றின சொற்றொடர்கள்

தாவீதின் நகரம்

தாவீதின் குமாரனும், தாவீதின் ஆண்டவருமானவர்

தாவீது வீட்டார்

தாவீதில்

தாவீதின் திறவுகோல்

தாவீதின் சிங்காசனம் அல்லது இராஜ்யபாரம்

தாவீதின் வேரும், சந்ததியும்

தாவீதின் சந்ததி

தாசனாகிய தாவீது

தாவீதின் குமாரன்

தாவீதின் நட்சத்திரம்* (இது வேதவாக்கியங்களில் காணப்படுகிறதில்லை)

தாவீதுக்கு அருளின நிச்சயமான இரக்கங்கள்

தாவீதின் கூடாரம்

## தாவீது பற்றின தேவசெய்திகள்
*(Bible Resources App/*செயலியில் இவற்றைக் காணலாம்*)*

A= மேலோட்டப்பார்வை
B= ஆரம்பகால வாழ்க்கை (வாலிப பருவம், மேய்ப்பன், கோலியாத்)
C=இளமைப்பருவம் (யோனத்தான், நாடோடி நிலை)
D=இராஜ ஸ்தானம் (பத்சேபாள்)
E=இறுதி காலங்கள்

| | Title | Speaker |
|---|---|---|
| A | **A Glimpse of David** | D. Destro |
| A | **A Man After God's Own Heart** | T. Marten |
| A | **A Man After God's Own Heart** (1976) | B. Kirkham |
| A | **A Man After God's Own Heart** (1997) | W. Cramer |
| A | **David, A Man After God's Own Heart** (2015) | N. Austin |
| A | **David, A Man After God's Own Heart** (2013) | R. Cunningham |
| A | **David, A Type of Christ** | F. Shallieu |
| A | **David, Man after Jehovah's Own Heart** (2017) | J. Parkinson |
| A | **David, the Beloved of God** (1967) | R. Alexander |
| A | **David, Type of the Church** | L. Jacobs |
| A | **David's Courage and Service** (2013) | E. Bushlus |
| A | **David's Attitude** (1997) | W. Blicharz |
| A | **The Golden Ode of David** (2015) | E. Bushlus |
| A | **The Key of David** | Todd Alexander |
| A | **The Sure Mercies of David** | 17 speakers |
| A | **Three Kings: King David** | J. Leslie |
| B | **A Little David** (2007) | J. Black |
| B | **Shepherd Boy** (1999 Symposium) | T. Armstrong |
| B | **The Valley of Elah** | Andy Oystryk |
| B | **Lessons from the Life of David** | T. Ruggirello |
| B | **Of Stones and Giants** (2013) | R. Cunningham |
| C | **Vigorous Youth** (1999 Symposium) | D. Monette |
| C | **A Brother is Born for Adversity** (2015) | J. Baker |
| C | **A Friend Loves At All Times** (2014) | J. Baker |
| C | **David and Jonathan** | W. Schroeder |
| C | **David and Jonathan** | H. Wildblood |
| C | **Jonathan and David** | R. Gaunt |
| C | **Relationship Between David/Jonathan** (2002) | T. Ruggirello |
| C | **Three Covenants of Friendship** | T. Ruggirello |
| C | **David as a Fugitive and His Mighty Men** (2010) | R. Cunningham |

| | Title | Speaker |
|---|---|---|
| C | **Lessons From David's Life** (2004) | D. Hrechuk |
| C | **Abigail** (2010) | L. Griehs |
| C | **David and Abigail** (1995) | G. Eldridge |
| C | **Cave of Adullam** (1989) | L. Greihs |
| D | **The Three Anointings of David** (2007) | G. Tabac |
| D | **The Anointings of David** | R. Shallieu |
| D | **The Valleys of the Shadow of Death** | C. Hagensick |
| D | **The Throne of David** (1973) | R. Pollack |
| D | **Trials of Middle Years** (1999 Symposium) | F. Boychuk |
| D | **Young King** (1999 Symposium) | D. Hrechuk |
| D | **Bringing up the Ark** (2014 & 2017) | O.B. Elbert |
| D | **Journey of the Ark of the Covenant** (2017) | M. Ensley |
| D | **Travels with the Ark of the Covenant** (2007) | D. Stein |
| D | **The Ark of the Covenant** | A. Frey |
| D | **The Ark of the Covenant** (1972) | L. Post |
| D | **Bringing Home the Ark** | J. Bednarz |
| D | **Covenants Not Often Discussed** (2006) | D. Rice |
| D | **Mephibosheth** (2000) | D. Rice |
| D | **Nine Men in the life of Bathsheba** | C. Hagensick |
| D | **Question Meeting - Psalm 51** | Greihs, Rawson Montague, Gray |
| D | **Blessed is the Man to Whom the Lord Imputeth Not Iniquity** | K. Rawson |
| D | **Five Friends of David** | D. Bruce |
| D | **The Battle Against Bitterness** | R. Suraci |
| D | **A Look at Shimei** | H. Montague |
| D | **O Absalom** | R. Alexander |
| E | **Closing Days** (1999 Symposium) | W. Cramer |
| E | **David's Sin of Numbering the People** | R. Luke |
| E | **David and Solomon** (2011) | M. Ensley |
| F | **Son of David** (2009) | B. Gorecki |
| F | **The Last Psalm of David** (2009) | B. Hislop |

## கூடுதல் தகவல்கள்

A=மேலோட்டப்பார்வை
B=ஆரம்பகால வாழ்க்கை (வாலிப பருவம், மேய்ப்பன், கோலியாத்)
C=இளமைப்பருவம் (யோனத்தான், நாடோடி நிலை)
D=இராஜ ஸ்தானம் (பத்சேபாள்)
E=இறுதி காலங்கள்

## ஹெரால்டு இதழ் கட்டுரைகள்

| | Title | Author | Link |
|---|---|---|---|
| A | Saul | Daniel Kaleta | http://www.heraldmag.org/2010/10nd_5.htm |
| A | The Sins of King Saul | Wade Austin | http://www.heraldmag.org/2010/10ja_5.htm |
| A | King Saul's Woes | David Christiansen | http://www.heraldmag.org/2007/07ja_7.htm |
| A | David | Robert Brand | http://www.heraldmag.org/2010/10nd_6.htm |
| A | David | Wade Austin | http://www.heraldmag.org/2007/07ma_9.htm |
| A | A Genuine Christian Life | | https://herald-magazine.com/2014/11/16/a-genuine- christian-life/ |
| B | David and Goliath | | http://www.heraldmag.org/2003/03jf_2.htm |
| B | Five Smooth Stones | Jerry Leslie | http://www.beautiesofthetruth.org/Archive/Library/Doctrine/Mags/Bot/90s/BOTNOV95.PDF |
| C | David at Gath | | http://www.heraldmag.org/2007/07ja_4.htm |
| C | Saul, Jonathan & David | Donald Holliday | http://www.heraldmag.org/2003/03jf_4.htm |
| D | Nine Men in the Life of Bathsheba | Carl Hagensick | http://www.heraldmag.org/literature/bio_1.htm |
| D | Nathan the Prophet | Michael Nekora | http://www.heraldmag.org/2003/03jf_8.htm |
| D | David's Sorrowing Heart | David Stein | http://www.heraldmag.org/2003/03so_5.htm |
| D | David's Prayer for Forgiveness | Carl Hagensick | http://www.beautiesofthetruth.org/Archive/Library/Doctrine/Mags/Bot/90s/BOTMAY03.PDF |
| D | A Man After God | | https://herald-magazine.com/2014/11/16/a-genuine-christian-life/ |
| D | The Valley of the Shadow of Death | Carl Hagensick | http://www.heraldmag.org/literature/chliv_32.htm |
| D | The Revolt of Absalom | David Rice | http://www.heraldmag.org/2003/03jf_7.htm |
| D | The Judgment of Shimei | | http://www.heraldmag.org/literature/bio_10.htm |
| E | Numbering Israel | John Trzyna | http://www.beautiesofthetruth.org/Archive/Library/Doctrine/Mags/Bot/90s/BOTMAY03.PDF |
| | Star of David & Star of Bethlehem | Carl Hagensick | http://www.heraldmag.org/2003/03jf_3.htm |
| | Solomon's Early Years | Michael Nekora | https://herald-magazine.com/2010-issues/2010-mayjune-table-of-contents/solomons-early-years/ |

***Books:***

***Discourses of Robert S. Seklemian***: https://chicagobible.org/images/stories/pdf/SEKLEM.PDF

*Page*

3 **After God's Own Heart** (Goliath)
463 **Thou Art the Man** (Bathsheba)
419 **The Shepherd Psalm** (Psalm 23)
411 **The Secret Place of the Most High** (Psalm 91)

***King David of Israel*** by Albert O. Hudson: http://www.biblestudentarchives.com/documents/KINGDAVID.pdf

***David: Shepherd, Psalmist, King*** by F. B. Meyer (E-Sword)

## இலவச தமிழாக்க வெளியீடுகள்

| ஏழாம் தூதனின் கட்டுரைகள் |
|---|
| மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் |
| கிறிஸ்துவின் வாழ்க்கை |
| யோசேப்பு ...நம்முடைய முன்மாதிரி |
| நினைவுகூருதலின் தியானங்கள் |
| புதுச்சிருஷ்டியில் ஒழுங்குமுறைகள் |
| இயேசுவின் மனுஷீக ஜீவ-உரிமைகள் |
| பொன்னான பிரமாணம் |
| புதுச்சிருஷ்டியின் இலக்கு |
| புதுச்சிருஷ்டியின் குடும்பமும், கடமைகளும் |
| போக்காட்டினால் சுமக்கப்படும் பாவங்கள் |
| முற்பிதாக்கள் |
| தாவீதின் வாழ்க்கை |

| மறுரூபமாக்கும் சத்தியங்கள் |
|---|
| கிறிஸ்தவ திருமணம் |
| முறுமுறுப்பு |
| பாதங்கழுவுதல் |
| பெருமை |
| மன அழுத்தம் |
| குற்றங்கண்டுபிடித்தல் |
| ஜெபம் |

**பிரதிகள் தேவைப்படுவோர்**
**தொடர்புக்கு:**
**8428737474; 9442221874**

**கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்;**
நான் தாழ்ச்சியடையேன்.
அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து,
அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில்
என்னைக் கொண்டுபோய் விடுகிறார்.
அவர் என் ஆத்துமாவைத் தேற்றி,
தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை
நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.
நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும்
பொல்லாப்புக்குப் பயப்படேன்;
தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்;
உமது கோலும் உமது தடியும்
என்னைத் தேற்றும்.
என் சத்துருக்களுக்கு முன்பாக
நீர் எனக்கு ஒரு பந்தியை
ஆயத்தப்படுத்தி,
என் தலையை எண்ணெயால்
அபிஷேகம்பண்ணுகிறீர்;
என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.
**என் ஜீவனுள்ள நாளெல்லாம்**
**நன்மையும் கிருபையும்**
**என்னைத் தொடரும்;**
**நான் கர்த்தருடைய**
**வீட்டிலே நீடித்த நாட்களாய்**
**நிலைத்திருப்பேன்.**

